ஷ

சிவமயம்.

ஓம் பரப் பிரஹ்மணே நம:

சுமத்திரிக த்ரைத சைவ கண்டநம்.

(ஆட்டுக்கோல் - கட்டாரி - புச்சம்.)

ஸ்ரீ வீர சைவ ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ ஸ்வாமிகள் மாணக்கர் உபய

பாஷா சிவாகமத்துப் பிரவர்த்தகாசாரியர் பர சமய

பஞ்சாக்ஷரர் - (பர சமய கோளரியார்) மண்டலேசுவரர்.

ஸ்ரீ ரூப் பூஷண மடாதிபதி,

ஸ்ரீ காசிகாநந்த ஸ்ரீநாசார்ய ஸ்வாமிகள்.

விலை ரூபா ஒன்று.

சிவமயம்.

ஸ்ரீசங்காசாரிய குருப்யோ நமஃ.

வேதபாஹ்ய பாசுபத தாந்திரிக

துவித சைவ தூர்வாதியாகிய

கசடர்க்குடி

ஸ்ரீமத் ராம. சொ. சொக்கலிங்கச் செட்டியாரின்

தூவதிணை நாவுக்கோர்

சூட்டுக்கோல்.

முதற் பாகம்.

இது

கோவிலூர் மடாலயம்

ஸ்ரீ வீரசேகரஞானதேசிக சுவாமிகளின்

பாதசேகரரும்

உபய பாஷா வேதாந்தப் பிரவர்த்தகாசாரியரும்

ஆகிய

ஸ்ரீ காசிகாநந்த சுவாமிகளவர்களால்

தீட்டப்பெற்று

சென்னை, கோமளேசுவரன்பேட்டை

சுத்தானந்த அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

1918.

ஸ்ரீ

ஸ்ரீமத் சிவஞான முனிவர்

அருளிச்செய்த

சிவஞான போதமாபாடியம்

மூலமும்

ஸ்ரீமத் திருவாவடுதுறை ஆதீனத்துத்

தவத்திரு சுப்பிரமணிய தேசிகர்

அவர்களது ஆணைவழி

ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர்

அச்சியற்றுவித்தது.



திருவாவடுதுறை ஆதீனத்துப் பிரதிஷ்டாசாரியரான

ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் அவர்களால்

திருவாவடுதுறை

ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் அச்சியந்திரசாலையில்

அச்சிடுவிக்கப்பட்டது.

க

கணபதிதுணை.

சற்குருப்யோ நமஃ

முகவுரை.

வாயுறை வாழ்த்து.

"யாகாவா ராயினு நாகாக்க காவாக்காற்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு."

மதியிற் சிறந்த முதியோர்களே!

தென்பாண்டி நாட்டிலே, காரைக்குடியிலே, தனவணிகர் குலத்திலே உற்பவித்துப் பூர்வபுண்ணிய விசேடத்தாலே கல்வியறிவு சிறிதுபெற்றும், அதுகொண்டு யாக்கை நிலையாமை, செல்வநிலையாமை, இளமைநிலையாமை முதலியவற்றைத் தன்னநுபவத்திற் கண்ணுரக்கண்டு, அன்பு, அருள், அடக்கம், வாய்மை, பொறையுடைமை, இன்சொல் முதலிய உத்தம குணங்களைக் கைக்கொண்டு, இக்கணமிருந்த இம்மெய்யென்ற பொய்க்கூட்டைத் தெக்கணத்திருந்து நீக்கணத்தான் வந்து போக்கெனக் கொண்டுபோவதற்கு முன்னமே, தமது உபாசனை குருமூர்த்தி கூறியவுண்மைநிலையிலே யுறைத்துநின்று, முக்கரண சுத்தியுடன் செக்கர்மேனியெம் நக்கரை முக்கணைய சுவாமி, முழுவன்புடன் முறைதவறாது வழிபட்டு, இஷ்டசித்திகளைப்பெற்று, இடையறாவின்புற்று, எல்லோருக்கும் உபகாரியாய் வாழுக்குருதாமல், சுற்றமளர்ந்து சகாயன்றிச் சேர்ந்த நடையினராய்ப் பற்பலன்று பண்டம் பழிக்கப்படுமளவும் "மனவிமக்கள் நித்தியம், மாடமாளிகை நித்தியம், கணவுலகம் நித்தியம், மற்றுங்காணப்படும் பிரபஞ்ச மெல்லாஞ் சத்தியம், இவற்றுடன் கூடியநுபவிக்கும் போகமும் நித்தியம்" என்று மற்கடப்பிடிபோல், இறுகப்பிடித்துறைத்து நின்று இறுமாப்புற்றுத் தமது மதத்திற்கு முக்கிய குருமார்களாய்ச் சிரசாவகிக்குந் தீக்ஷிதர்களையும், மற்றைய மதத்நிற்குரிய சிகரிகளையும், புறக்கணித்திகழ்ந்து, ஒரு நெறியிலேயு முறைத்து நில்லாமல் இடையூசலாடிக்

சமயவழக்கு, சாத்திரவழக்கு, சாதிவழக்கு, பாஷைவழக்கு முதலிய இழுக்குநெறிகளிற் றமது முழுமனத்தையு மழுக்கி, அவமே காலங்கழித்து, வயோதிகப்பருவமுற்று விளங்கும் பூரீ ராம. சொ. சொக்கலிங்கச் செட்டியாரென்பார், எண்ணிலாக் கற்பனைகணிரம்பிய சிற்சில புராணங்களையும், ''உண்மை நாயன்மார் மகிமை'', ''சிவசுந்தரசாயாரூப சிவமகிமா சங்கிரகம்'' முதலிய சிற்சில சிறு நூல்களையும், தாமிற்றைநாள்வரையிற் கற்ற கல்வியின் பயனுகவியற்றி யச்சிட்டு வெளியிடுவாராயினர்.

அவற்றுள், ''உண்மைநாயன்மார் மகிமை'' என்ற சிறுநூலை உதாரணமாக வெடுத்துக்கொள்வாம். நாயன்மார்களது மகிமையை யாவரறிவார்? '' அடியார் பெருமையும் அருமையு நாளும் அறியம்பலவாணர்'' என்றமுதியோர் மொழிப்படி, அகண்டைகரசமாய் விளங்கும் பரமசிவமே யறியவல்லவராவர். அவ்வாறிருக்க, தாம்முற்றுமுணர்ந்த முனிவர் போற் கருதித் தலைமுடிசூடிக்கொண்ட பெயருக்கியையாமல் வரைந்தது,''மற்றொன்றுவிரித்தல்'' என்னுங் குற்றத்திற்கிலக்காய், வேதாந்தநூடணம், விஷ்ணுநூடணம், முதலிய பரநூடணங்களையே பூடணமாகப் பூண்டு, ''பெற்றம்புலியின்தோல் போர்த்துமேய்ந்தற்று'' என்ற பொய்யாமொழிக்கிணங்க விளங்குகின்றதால், அறிஞர்கள் பலராலும் அருவருத்தொதுக்குற்றுத் தூரும்பெனத் தூற்றப்படத்தக்கதாயிற்று.

என்னை? தமது மதாசாரியராகிய நால்வர், பற்பலவற்புதங்கொண்டு, மதசித்தாந்தம் பண்ணியகாலத்திலே, ''சமணரை வாதிட்டு வென்றார். பௌத்தரை வாதிட்டு வென்றார்'' என இவ்வகை காணப்படுகின்றனவே யன்றி, எங்கேனும் '' வேதாந்திகளை வாதிட்டு வென்றார்'' என்று பெரியபுராண முதலிய தமக்குரிய புராணங்களிற் காணப்படுகின்றனவா? இல்லையே! இல்லையே!!

அஃதவ்வாறாக, '' சிற்றுணர்ந்தோரென்றுஞ் சிலரிலப்பேர, முற்றுணர்ந்தோரொன்று மொழியாரே'' என்ற நீதிமொழிக்கிணங்கத் தமது சமயாசாரியர்களாகிய நால்வர்களைப் பார்க்கிலும், தாம் நுண்ணிய மதிப்புண்ணியர்போலவலமா யெண்ணி,

'' ஓ! விஷ்ணு மதத்தர்களே! உங்கள் மதத்திற்குரிய கடவுளாகிய விஷ்ணுமூர்த்தி, நம்போன்ற சிவர்களில் ஒருவர்;

ஆகையால் பசுவாகிய அவ்விஷ்ணுவைப் பூஜிப்பதை யறவே யொழித்து, நெற்றியிலுள்ள திருநாமத்தை யழித்துவிட்டு, விபூதி ருத்திராக்ஷ மணிந்துகொண்டு எமது சிவபெருமானை வழிபாடு செய்யுங்கள். திருமாலுக்கடிமை செய், தெய்வமிகழேல்" என்ற ஔவைப்பிராட்டியாரின் அருள்வாக்கின் உண்மைக் கருத்துவேறு. அதனை யென்னுபதேசத்தாற் கேட்டுய்யுங்கள்.

ஓ! வேதவழியொழுகும் வேதியர்களே! உங்களுக்குரிய ஆரிய வேதத்தின் உண்மை யருத்தம் உங்களுக்குச் செவ்வனே விளங்கவில்லை. ஆரியமொழி வாசனையுமற்ற யானே, வேதாகமவிடைத புராண விதிகாச முதலிய யாவற்றினும் பொதிந்துள்ள வுண்மைக் கருத்துக்களை யெல்லா முணர்ந்தவனேன்; ஆகையால் என்னுபதேசங்கேட்டு, அவ்வழியிலுறைத்து நில்லுங்கள்.

ஓ! வேதாந்திகளே! உங்கள் ஆசாரியராகிய சங்காசாரியர், எங்களாசாரியராகிய நீலகண்ட சிவாசாரியரிடத்தில் சிவாகம வழித்தாய சிவதீக்ஷை பெற்றவர். அதனால், அவர் சைவசித்தாந்தியே. அவர் செய்துள்ள நூல்களிலும், அவற்றின் வழித்தாய வாசிட்டம், கைவல்ய நவநீதம், பகவற்கீதை, பிரமகீதை முதலிய யாவற்றிலும், சைவ நலங்களே பொதிந்துள்ளன. ஆகையால் அவைகள் யாவுஞ் சைவசித்தாந்த நூற்களே! அவற்றி னுண்மை யறியாது விளங்கிய அளவிறந்த உங்களது குருமார்கள் யாவரும் பொய்க்குருமார்களே; யாரெனுமவனே மெய்க்குரு; என் சொற்களைக் கடைப்பிடித்தொழுகுங்கள். சனகாஜா சைவசித்தாந்தி. தத்துவாயர் சைவசித்தாந்தி. சிவப்பிரகாசர் சைவசித்தாந்தி. சிதம்பர சுவாமிகள் சைவசித்தாந்தி. அர்ச்சுனர் சைவசித்தாந்தி. அக்கண்ணப்பராணும் சைவசித்தாந்தி. யாவருஞ் சைவசித்தாந்திகளே. பெண்டு மெய். பிள்ளை மெய். நாடுமெய். நகரம் மெய். இவற்றை யிறுகப்பிடித்து, இந்தப்பாழுஞ் சுழசார சாகரத்துள் ஆழ்ந்தழுன்று என்போல் அவதியடையாமல், துறவாச்சிரமத்தை யடைந்து நீங்கள் துன்புறுவானேன்? அந்தோ! நீங்கள் இதுகாறும் பிரபஞ்சம் பொய்யெனக்கருதிப் பெருமோசமடைந்தவர்களன்றே? இனியேனும் என் மெய்யுபதேச மொழிவழி நில்லுங்கள்.

" ஓகைமட வாரல்கு லேபாம பதமவர்க ளுநந்தியே வைகுந்த
மே,லோங்குழுலே யேகயிலே யவர்குழுத வாயினித ழூறலே யமிர்த
மவர்தம், பாகனைய மொழியேநல் வேதவாக் கியமவர்கள் பார்வை
யே கருணை நோக்கம், பாங்கினவ ரோடுவினை யாடவரு சுகமேத
பாமசுக மாகுமிந்த, யூகமறியாமலே தேகமிக வாடினீர்கள் "

அந்தோ! பாவம்!! கானற்சலம்போலவும், கயிற்றரவு
போலவும், கந்தருவநகரம்போலவும், கட்டையிற் கள்வண்போல
வும், ககனரவிந்தம் போலவும், கனவுலகம்போலவும் விளங்கும்
இப்பிரபஞ்சம் எக்காலத்தினுமழியாத நித்தியப்பொருளென
இறுகப்பற்றிக் கொண்டுய்யுங்கள். சகத்மித்தையெனக்கூறும்
வேதமுடிவான உபநிடதங்களின் கருத்துவேறு. அவற்றினுண்
மை யெல்லாம் என் வாய்மொழிகொண்டுணருங்கள். உங்கள்
குருமார்கள் அவைகளுக்கெல்லாந்தப்பருத்தம் பண்ணிப் பொய்ப்
பொருள் கொண்டார்கள்.

ஓ! கோவிலூரில் வசிக்குஞ் சாதுக்களே! " நார்த்தெடுத்
தீர்க்கிலென் நன்றுய்ந்தடக்கிலென், பார்த்துழிப் பெய்யிலென்
பல்லோர் பழிக்கிலென்..... " என்று எங்கள் சமயாசாரியரால்
தோல்வியுற்ற சமணசாரியர்கள் கூறிய நெறியைக்கைக்கொண்டு,

" எண்ணிலா ஞானி யுடலெரி தாவிடில்
அண்ணாறன் கோயில் அழலிட்ட தாங்கொக்கும்
மண்ணின் மழைவிழா வையகம் பஞ்சமாம்
எண்ணரு மன்னர் இழப்பர் அரசே."

" அந்தமில் ஞானி யருளை யடைந்தக்கால்
அந்த வுடல்தான் குகைசெய் திருத்திடில்
சுந்தர மன்னருந் தொல்புவி புள்ளோரும்
அந்தமில் இன்ப வ நுள்பெறு வாரே."

என்று எமது திருமந்திரமுதலிய பலகலைகள் கூறும் பற்
பல பிரபல பிரமாணங்களை யெல்லாம் அப்பிரமாணங்களாகப் புற
க்கணித்திழித்தொதுக்கி, உங்கள் குருமார்களது சமாதிகளை
யெல்லாம் இடித்துத் தகர்த்து விளைநிலமாக்குங்கள். திருமந்தி
ரம் முதலிய நூல்களின் உண்மைக்கருத்து வேறு. அது எனக்
குத்தான் விளங்கும். இன்னும் உங்களாண்டவராகிய ஸ்ரீ முத்தி
ராமலிங்க ஞானதேசிகர் சைவசித்தாந்தியே. அவருக்குப் பின்
வந்த ஸ்ரீ துறவு சுவாமிகள் முதலியயாவருஞ் சைவசித்தாந்திகளே.

ஸ்ரீ ஆண்டவர், யான் மேலே சைவசித்தாந்த நூல்களைனச் சுட்டிக்காட்டிய வாசிட்டம் மகவல்ய கீதாதி நூல்களைப் போதித்து வந்தாமோ ஐயம், அவர் போதனையின் உண்மைக்கருத்து வேறு. அந்த அந்தாங்கமெல்லாம்,

"குருட்டினை நீக்குங் குருவினைக் கொள்ளார்
குருட்டினை நீக்காக் குருவினைக் கொள்வர்
குருடுங் குருடுங் குருட்டாட்ட மாடிக்
குருடுங் குருடுங் குழிவிழு மாறே"

என்ற திருமந்திரத்திற்கிணங்க, இளமையிலேயே குருட்டுக்குருவையடைந்து, குருட்டுக்கல்விகற்று, குருட்டறிவுபெற்று, ஈழப்படுகுழியிலிறங்கி, ஈழக்குருக்கள் செய்த தீக்கைபெற்றுப், பரதாடணைமந்திரம் இடையறாது ஜெபிக்கக்கற்று விளங்கும் யாளைருவனே யறியவல்லவனுவேன். அவற்றைக்கேட்டு என் வழி யொழுகியேமாப்புறுங்கள்.

ஓ! வேத சிவாகமவழியொழுகும் "தில்லைவாழந்தணர்தமடியார்க்குமடியேன்" என்று திருவாரூர்த் தியாகேசப்பெருமான் திருவாக்காற் புகழ்ந்துரைக்கப்பட்ட, பலவித மகிமைவாய்ந்த சிதம்பரத் தீக்ஷிதர்களே! உங்களுக்குச் சிவபூஜாவழி செவ்வனே தெரியவில்லை. ஆகமவழிக்குமாறாய் நடக்கிறீர்கள். யானை அவ்வாகமங்களி னுண்மையை விளக்க உலகத்தில் அவதரித்திருக்கின்றேன். என் னுரைகேட்டு சீவராசிவரும் குருட்டுக்கல்விகற்று, குருட்டறிவுபெற்று, ஈழத்தடிப்பைக்கொண்டு, குழிவழியறியாது யான்விழுந் தொடுநரயக்குழியிலே ஒன்றுகூடியென்மேல் விழுங்கள்."

என்றித்தகைய மாறுபட்ட மயக்குரைகளைப் போதிக்கவும், எழுதவும், அச்சியற்றவும், வெளிப்படுத்தவுந் தலைப்பட்டுச் சர்வஜன விரோதியாய் விளங்குபவராயினர்.

இதனைக் கண்ணுற்று, பிள்ளைகள் செய்யும் பிழைகளை யுணர்ந்து, அவர்களைச் சாமபேத தான தண்ட மாகிய சதுர்விதோபாயத்தாற் றண்டித்து, அறிவு கொளுத்தி நல்வழி நிறுத்துதல் பெற்றோர்களின் கட்டமையா மாறுபோல, இளமைப்பருவத்திலேயே சற்குருவையடைந்து, வித்தையை விதிப்படி பயின்று, பூரண தேர்ச்சியடைந்து துறவாச்சிரமத்தை யுற்றவரும், வடமொழி

தென்மொழியாகிய இருமொழிக் கடலையும் நிலைகண்டுணர்ந்த மகா விற்பனரும், நியாயச்சந்திரரும், வேதாந்தபாஸ்கரரும், ஆத்மபுராணம், பகவற்கீதை, நியாயமுக்தாவலி, கண்டன காத்தியம், ஸ்ரீ ஞான மஹா வாசிட்டம் 32000, முதலிய பற்பல பிரபல கிரந்தங்களின் மொழிபெயர்ப்பாசிரியரும், காசிமுதல் தூத்துக்குடிவரையிற் பலவாண்டுகளாய்த் "தித் திக்குங்கனிரசமோ? செழும்பாகோ? கற்கண்டோ? தேனோ? பாலோ?, புத்திக்குட் புகுந்தினிக்கும் புத்தமிர்தோ?" எனக் கேட்டோர் புகழ்ந்து கொண்டாடிப் பரவசமாமாறு, சர்வசாஸ் திர சாராம்சமாயும், யுக்திக்கும் அநுபவத்திற்கும் ஒத்ததாயும் முன்னோர் கொள்கைக்கு முரணுததாயுமுள்ள, பிரசங்காமிர்த தாரை பொழியும் மாரியும் ஸ்ரீ கோவிலூர் ஆதீனத்து வீரசேகர ஞானதேசிகர் பாதசேகரரும், ஆகிய ஸ்ரீ சுப்பய்ய சுவாமிகளவர்கள், "அந்தோ! செட்டியார் வீணைப்த் துறை யல்லாத் துறைசென்று, பலஜன விரோதமாகிய தூடணபூடணம் பூண்டு, துன்பம் பயக்கும் பாவப்படுகுழியில் வீழவாளாகின்ற ரே! என்னே! பாவம்!! வயோதிகராயிற்றே! "வறியார்க் கொன்றீவதேயீகை" என்ற தேவர் வாக்குப்படி இவர்க்கு உப காரஞ்செய்தலே உபகார மெனப்படும். இவரது தூடணை மொழி மந்திர செபத்தை யெதனைற் றடுப்பாம். அதனை யறிந்து செய்வேமாயின், அறிவு விளக்கம் பெற்று அக்குழியில் வீழா மற் றப்பித்துக் கொள்வார். இதற்கு யாது பரிகாரம்?" என்று இரக்கமுற்று, "இவற்றிற் கெல்லாங் காரணமான இவரது பேழ்த்தவாயைத் திறவா வண்ணம், பிரபல சுருதிப் பிரமாணங்க ளாகிய ஓர் ஒப்பற்ற பூட்டினைக்கொண்டு பூட்டிஞல், இவ்வித பழிவழிகளிற் சென்று, பாவப் படுகுழிகளில் வீழ ஆளாகாமல் ஒருவழியுய்வர்." என இவ்வாறு ஆலோசித்துச், "சங்கரத்வே ஷியார் வாய்ப்பூட்டு" என்ற பெயரையுடைய ஒரு பெரிய கெட்டியான பூட்டைக்கொண்டு இவரது வாயைப்பூட்டி இனி "வேதத்தை யிகழாதீர், வேதியர்நிந்தை செய்யாதீர், வெற்றுரை யடுக்காதீர், வீண்வழக்குத் தொடுக்காதீர், சாதியை யிகழாதீர், சமயநிந்தை செய்யாதீர், சாதுக்களைப்பழியாதீர், சாத்திர வழக்கு மொழியாதீர், தெய்வநிந்தை பேசாதீர், தீக்ஷிதர்களை யேசாதீர், ஸ்ரீ சங்கராசாரியர் முதலிய புண்ணிய மூர்த்திகளைத் தூஷியாதீர்,

" இல்லார்க்கொன்றீயு முடைமையு மிவ்வுலகி
னில்லாமை யுள்ளு நெறிப்பாடு மெவ்வுயிர்க்குந்
துன்புறுவ செய்யாத தூய்மையு மிம்மூன்று
நன்றறியு மாந்தர்க் குள "

என்ற வான்சிறார் வாக்கைக் கடைப்பிடித்து "இனி வேதிய நிந்தை, விஷ்ணுநிந்தை, சாதிநிந்தை, சமயநிந்தை, சங்கராசாரிய நிந்தை முதலியன செய்யாதீர். வேயோதிகப்பருவத்தில் என் தூடனைச்செட்டியார்" என்னும் பெயரைச் சூட்டிக்கொள்ளுகி றீர்? நிந்தையா மந்திர செபஞ் செய்வதைச் சிந்தையிலறவே ஒழித்துவிடும் எனப் பலவாறிதமாயுபதேசித்து அடக்கி வைத் தார்கள்.

" செய்யாமற் செய்த வுதவிக்கு வையகமும்
வானகமு மாற்ற லரிது. "
" காலத்தி னாற்செய்த நன்றி யொருவற்கு
ஞாலத்தின் மாணப் பெரிது " என்ற தேவர் மொழியைச் சிரமேற்கொண்டு, அப்புண்ணிய சீலரின் நன்றிமறவாற் காத்து நன்னெறி யுரைமல், " சென்மக்குணத்தைச்.....செக்கிலரைத்தா லும் போகா " என்று முதுமொழிக்கிணங்க, சிறந்தநூற் பிர மாணமாகிய திறவுகோலைக்கொண்டு, வாய்ப்பூட்டைத்திறக்க வறி யாமல், பூட்டிய பூட்டானது பூட்டியவாறே யிருக்க, மீண்டுந் தூஷணமந்திரத்தைச் சூசகமாக காவான் முணுமுணுத்துக் கொண்டு, சென்ற வைந்தாண்டுகளாக விருந்தசோடனைபோமல் வெளிப்பட்டுக் காதில் கலமெடுத்து " பார்க்கவ புராணத்தி லுள்ள தூர்வையாசகப்படலம் " என்ற பெயரையுடைய, பலவித நிந்தைகளுடம் மயக்குரைகளுடம் நிறைந்த ஆபாசக் குளறுபடை யப்பிரமாணச் சுவடியை வெளியிடுவாராயினர்.

அதனையுணர்ந்து ஸ்ரீ கோவிலூர் மடாலயம் வீர. காசிகா நந்த சுவாமிகள் " அந்தோ! பாவம்! வேயோதிகக்காலத்திலே, இவ்வணிக மணிக்கு மதவாத பித்தந் தலைக்கேறி யையமேலிட் டுச் சமயவலிப்பும் சாஸ்திர வலிப்புமன்றோ அதிகரித்துவிட்டன. இதற்கென் செய்வது! தளர்ந்த பருவத்தாயிற்றே " என்று மிக்க பரிதாபங் கொண்டிரங்கி, " உலகத்திலே குமாரகண்ட வலி ப்பு, காக்காய் வலிப்பு முதலிய வலிப்பு நோகளுக்குச் சூட்டுக்

கோவிட்டுத் தீய்த்த மாத்திரத்திலே, யங்நோய்கள் நீங்கப்பெற் றுச் சுகமுறுகிறார்களன்றே, அவ்வாறே யிவரது சமயமதவாத சாத்திரவலிப்புக்கோர் சூட்டுக்கோலிடுவேமாயின் அவை நீங்கப் பெற்றின்புறுவார்" எனக்கருதிச் சுருதியாகிய பணையிலே, யுத்தி யாகிய இடுக்கியாலிடுக்கி, அநுபவமாகிய சுத்தியாற் கத்தியரூப மாகப், பிரமாணச்சுவாலை வீசும் இந்நூலாகிய சூட்டுக்கோலினைத் தமது மெய்ஞ்ஞானச் சுடரிலேகாய்ச்சி, மிகக்கூர்மையாக நீட்டித் தீட்டி இவரது தியநாவைத் தீய்த்துவிட்டாராகலின், மேற்கூறிய பலவிததூடணை வலிப்புரோகங்கள் புண்பட்டொழிந்து இன்புறு வாரெனக் கருதுகின்றேம்.

வலிப்புரோகங்களுக்குச் சூட்டுக்கோலிட்டுத்தீய்த்தல், நோ யாளரிடத்துச் சாதகர்கொண்டுள்ள பச்சாத்தாபமாமாறு, நமது சுவாமிகள் இச்சூட்டுக்கோலினை யிவரது நாவிற்கிட்டதும், இவர் மீதுகொண்டுள்ள பெருங்கருணையே யாமென்பது உலகம் ஒப்பத் தக்கதேயாம்.

" தினமே செலச்செல வாழ்நாளு நீங்கச் செகத்திருள்சோப்
பனமே பெனவெளி கண்டே யிருக்கவும் பாசபந்த
இனமே துணையென் றிருந்தேதா நமன்வரி னென்செய்குவோம் ?
மனமேநம் மோலவுண் டோசுத்த மூடரில் வையகத்தே "

என்ற ஸ்ரீ தாயுமானவர் வாக்கை மறவாமற் சிந்தித்துக்கொண்டு, இனியேனும் நமது செட்டியாரவர்கள் தூடணை மந்திரஞ்செபிப் பதை யொழித்துச், சிவமந்திரமாகிய ஸ்ரீ பஞ்சாக்ஷரத்திருமந் திர செபஞ்செய்துய்வாராகவென, எமது பரமகுருசாரியராகிய ஸ்ரீ முக்திராமலிங்க ஞானதேசிக சுவாமிகளின் திருவடிக்கமலங் களே முக்காரண சுத்தியுடன் சிந்தித்து வாழ்த்தி வந்திக்கின்றோம்.

சுபம்.

உலகத்தோ டொட்ட வொழுகல் பலகற்றும்
கல்லா றறிவிலா தார்.

இங்ஙனம்,

ஸ்ரீ ஆண்டவரடியார்க்கடியார்,

கோவிலூர்

சிவமயம்.

ஓம் தத்சத் பரப்பிரஹ்மணே நமः.

ஸ்ரீ சங்கராசாரிய குருப்யோ நமः.

வேதபாஹ்ய பாசுபத தாந்திரிக
துவிதசைவ துர்வாதியாகிய

காரைக்குடி

ராம. சொ. சொக்கலிங்கச் செட்டியாரின்

தாஷிண நாவுக்கோர்

சூட்டுக்கோல்.

முதற்பாகம்.

உடன்முத லனைத்து முண்மையன் றென்று
திடம்பெற வுரைத்த செய்யவீ ரேசன்
மடன்மலர்ப் பாதம் மகிழ்வுடன் பணிந்தே
இடர்கெடச் சூட்டுக் கோலினை யிசைப்பாம்.

அறிவிற் சிறந்த அன்பர்களே !

காரைமா நகரின்கண் வசிக்கும் ராம. சொ. சொக்கலிங்கச் செட்டியா ரென்பார், "உண்மை நாயன்மார் மகிமை", "காஞ்சிவாசியாரின் மாயாவாதக்கோண் மறுப்பு", "சிவசுந்தரசாயாரூப சிவமகிமா சங்கிரகம்", "பார்க்கவ புராணத்தி லுள்ள தூர்வையாசகப்படலம்" என் பனவாதி சிறு சுவடிகளைப் பொறித்துக் கல்லாதாரை எமாற்றும் பொருட்டு வெளியிட்டிருக்கின்றனர். அந் நூல்களின் உட்கருத்தோ வேதாந்தி களை நிந்தனை செய்வதேயாம். அவற்றுள் 'உண்மை நாயன்மார் மகிமை' என்னுஞ் சிறுசுவடிக்கு வேதாந்த பாஸ்கரரும், நியாய சந்திரரும், காசி முதல் தூத்துக்குடிவரை உபந்நியாச மாரிபொழிந்து உலகப்பிரசித்தி பெற்றவருமாகிய கோவிலூர் மடாலயம் ஸ்ரீ சுப்பய்ய சுவாமிக ளவர்களால் ஐந்தாண்டிற்கு முன் "சங்கரத்வேஷியாரின் வாய்ப்பூட்டின் இரண்டாம்பாகம்" எனப் பெயரீந்து தக்க பிரமாணங்களைக்கொண்டு மறுப்பெழுதப்பட்டுப் புத்தக ரூபமாக நிலவுறுகின்றது. அதற்கு மறுப்பெழுத ஆற்றலற்று, பிங்கள வரு புரட்டாசியில், கோயிலூர் மடாலயத்

தையும், அதனைச் சார்ந்த மகான்களையும், மற்றைய வேதாந்திகளையும், வேதாந்த சாஸ்திரங்களையும், நிந்திக்கும் வியாஜ வாயிலாய்த் தம்மிடத் துள்ள வஞ்சகத் தன்மையினை வெளிப்படுத்தற்கு " பார்க்கவ புராணமா கிய விநாயக புராணத்திலுள்ள தார்வையாசகப் படலம் " எனப் பெய ரிட்டு சில ஆபாசச் சுவடியொன்றை யெழுதிக் **கல்வியில்லாது** நாமாபி மானமாத்திரமாயுள்ள சைவசித்தாந்திகளையொற்றும்பொருட்டு வெளி யிட்டிருக்கின்றனர். அவற்றிலுள்ள விஷயங்கள் கற்றோர் பார்த்து நகைத் தற்குரியனவாயும், முற்கூற்றுக்குப் பிற்கூற்று விரோதமாயு மிருப்பினும் அற்பப் படிப்புடையோரும், கேள்வி மாத்திரமுடையாரும் அதனைக்கண்டு மயங்குவாராகலின், அவர்களது ஐயத்தினை யொழிப்பான் இக்கண்டனம் எழுதத்துணிந்தனம்.

இந்நூலுக்குப் பெயரிட்டமைக்குக் காரணம், நம் செட்டியார் ஈழ தேசஞ்சென்று, ஈழத்துக் குருவையடைந்து, ஈழத்து மாணாக்கரோடு சேர்ந்து, இழுக்குடைக் கல்வி கற்றவராகலின் " நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகு மாந்தர்க், கினத்தியல்ப தாகுமறிவு " என்ற பொய்யாமொழிப் புலவர் வாக்கின்படி சங்க மாத்திரத்தில் வந்துறும் தோஷம் இவரைவிட் டெங்ஙன நீங்குமோ? ஈழதேசத்தவர்கள் அத்தனைக் குற்றமுடையோரா வெனின், அவர்கட்கு நாடோறும் குலமாறுதல், மதமாறுதலே இயற்கை குணமாகும். பகலில் கிறிஸ்துவரா யிருப்பார்கள். இரவில் இந்துவாய் விடு வார்கள். இது குலமாறுதலாகும். பகலில் கிறிஸ்துவைத் தொழுவார்கள், இரவில் சிவன் கோவிலுக்குச் சென்று சிவனைத் தொழுவார்கள். இது மத மாறுதலாகும். இதில் ஐயுறவுண்டேல் யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலரென்பார் எழுதிய " யாழ்ப்பாணத்துக் காலநிலை " என்ற புத்தகத் தால் உணர்க. இப்புத்தகத்தினை விவகார வழக்குப்பற்றி அச்சுவாகனை மியற்றவியலாதென்று " சுவாமிநாத பண்டிதர் என்பார் " தாம் எழுதிய புத்தகத்திலும் எழுதியிருக்கின்றார். ஆகலின், அவ்வீழ தேசத்தார்க்குரிய நிந்தைக்குணம் இவரையுஞ் சார்ந்து ஈழத்தடிப்பேறி யிருப்பதனால், இந் நியாவுக்கு வந்த காலமுதல் இதுகாறும் வேதாந்தத்தினைப் பலவாறு தூஷித்து எழுதுகின்றமையின், இப்பத்திர ரூபமாகிய சூட்டுக்கோல் வாயிலால் அவர் நாவின் சுரப்பைத் தீய்த்துவிடின், அந்த நாவெழாது **பெட்டிப் பாம்புபோல்** அடங்கி வேதவழியிருப்பரெனக்கருதி யிந்நூலுக் குச் " சொக்கலிங்கச் செட்டியாரின் துஷ்ண நாவுக்கோர் சூட்டுக்கோல் " எனப் பெயரிட்டாம் என்க.

" தார்வையாசகப்படலத்தின் முதற்பாகத்தில் நானே பிரமமென்க் கொண்ட மார்க்கம் வேதசிவாகமாதி சகல சாஸ்திர விரோதமான சர்வா பாச மார்க்கமேயாம் " என்று வரைந்தார்—அன்பர்களே ! அறிவிலிகளை நிறைந்திருக்குஞ் சபையின்கண், அக்ரதாம்பூலம் யாருக்குக் கொடுக்கலா மென்று யோசிக்கில், நஞ்செட்டியாரே இரண்டு கரங்களையும் நீட்டி.

முன்னரைதைப் பெற்றுக்கொள்பவராவரென்பதற் கையமின்றும். என்னை விந்தைபாருங்கள். 'நான் பிரமம்' என்னும் மார்க்கம் வேத சம்மதமன்று, அதிலும் சிவாகமசம்மதமன்று, பின்னும் சர்வசாஸ்திரத்திற்கும் விரோத மாம் எனவும் வரைந்தார். ஒழுக்குடையா ரினரருவிக் கற்றிருப்பின் இங்ஙனம் வரைவரா? நான் பிரமம் என்னும் மார்க்கம் வேதத்தி லுளதா? அல்லது நம் மன்பர் கொண்டிருக்கும் வேத பாஹ்யமான ஆகமத்திலுளதா? வேதத்திலுளதேல் வேத சம்மத மல்லாத ஆபாச மார்க்கமென்று "எண்ணித் துணிவது கருமந் துணிந்தபின், எண்ணுவ மென்ப திழுக்கு" என்னும் பொய்யா மொழியை யுணராது மனம்போன வாறு வரைவரா? வேதபாஹ்யமான ஆகம சம்மதமுமாமல் நம் மன்பர் "உபயத: பாஸா ரச்சு" என்னும் நியாயத்தால் அட்டவது யாங்ஙனம்? இன்னும் ஓரிடத்தில் "சில உபநிடதங்கள் வேதாந்தமே வாதத்தைக் கூறு கின்றன" என்று பின் வரைந்து, தாமே வேதாந்தம் வேத சம்மத மென வொப்புக்கொண்டு ஆரம்பத்தில் வேத சம்மத மன்றென்று நிந்தித்து மீளாநரகிற் காளாகின்றனர்.

திருமந்திரம் ஆறந்தம் 2395.

"சிவனைப் பரமனுட் சிவனுட் காட்டும்
அவமற்ற வேதாந்த சித்தாந்த மாகு
னவமுற்ற வத்தையின் ஞானஞ் சிவமாங்
தவமிக் குணர்ந்தவர் தத்துவத் தாரே"

என்னுஞ் செய்யுளில் திருமூலநாயனார் அவமற்ற வேதாந்தமென்று புகழ்ந்து கூறியிருப்பவும், ஆபாசமார்க்கமென்று நிந்திக்க அறியாமையினை யறிவுடையோ ரறிவாராக!

"சில உபநிடதங்களைத் தமது கருத்துக்கிணங்கத் திரித்துப் பொருள்கொண்டு" என்றார். உபநிடதங்களை வேதாந்திகள் திரித் தார்கள் என்று உளறுவது இவர் மதத்தினர்க்குச் சகஜமாய் விட்டது. உபநிடதங்களைத் திரித்தார்களென்று இவர் சொற் பனங் கண்டனரா? அல்லது மகேஸ்வரரூபிய பரமேஸ்வரன் பிரத்தி யக்ஷமாகி யுரைத்தனரா? சொற்பனங் கண்டேன், யங்கள் மதத்தில் சொற்பனஞ்சத்தியமானதால் இவர்கள் திருத்திய தும், உண்மையென்பதேல், நன்றுநன்று! சொற்பனஞ் சத்திய மென்று அங்கீகரித்து நம் கண்பார் சாக்கிரத்தில் வேதாந்திகள் உபநிடதங்களைத் திரித்து விட்டார்க ளென்று, திடமாக நிஜபஞ் செய்துகொண்டிருப்பர். அதன் வாஸனையின் மிகுதிப்பாட்டால் சொற்பனத்திலும் அவ்வாறே தோற்றி யிருக்கலாம். இவ்வாறுய சொற்பனம் உண்மை யென்பதினால், அமது புத்திரனுக்கு விவாகம் நடப்பதாகச் சாக்கிரத்தில் திடமாகச் செய்து செய்து வருவாராயின், வாசனையின் மிகுதிப்பாட்டால் சொற்பனத்தில் விவாகம் நடந்ததாகத் தோற்றிவிடும். தோற்றலே, சொற்பனம் நம்

அன்பருக்குச் சத்தியமாதலால், அதுகொண்டு மகனுக்கு மணவினை முடித்து, பௌத்திர சம்பத்துக்கள் உண்டாய்விடும் எனக் கருதி விவாகத்தின் பொருட்டு சாக்கிரத்தில் இனி முயற்சி செய்யாதிருப்ப தென நாம் உறுதியாக நம்புகின்றோம்.

"விபூதி ருத்திராக்ஷாதிகளும் தமது கருத்தின்படி பொய்யென்றே தெரிந்துவிட்டால் தம்மைப் பிறர் வந்து அடிக்கமாட்டார்களென்றோ? அவற்றை மேற்கொண்டு வஞ்சவேடங் காட்டி, கடவுளுண்டு, நாம் அடிமை, பாவம் நீக்கிப் புண்ணியஞ் செய்துய்யவேண்டும் என்னும் உலகர் வழக்கம் நோக்கி, அவ்வழி மேற்கொண்ட அவ்வளவே யன்றி" என்றார்.

கையில் கலம்பிடித் தெழுதுங்கால் அற்ப அறிவொளிச்சுடர் கொஞ்சியாவது எழுதவேண்டாமா? "விபூதி ருத்திராக்ஷ முதலியன வெல்லாம், பிறரை யேமாற்றும் பொருட்டு" என்றார். சிவ வேடந்தரித்துக்கொண்டு சிவ சொரூபியாய் விளங்கும் மகான்களை வாய்கொண்ட மட்டும் நிந்திப்பர் இவரா? யாமா? நம் மன்பர் சிவன் கோவிலின் மேற்புறத்துள்ள அறுபத்து மூவர் மடத்தில் வாசஞ் செய்தும், அதிசமீபமாயுள்ள சிவாலயத்திற்கு நாடோறும் தரிசிக்கச் செல்லாதிருக்குங் கொடுந்தொழில் பிறரை யேமாற்றும் பொருட்டென்றே யுணரலாம். அஃதின்றி நாடோறும் நியமந் தவறாது சிவச்சின்னங்களைத் தரித்துக்கொண்டு சிவாலய தரிசனம் செய்துவரும் எம்மவர்கள் கொண்டிருக்கும் வேஷம் பிறரை யேமாற்றும் பொருட்டென வாய் கூசாது வழங்கலொல்லுமா? இன்னும் நம்மன்பரைச் சார்ந்த சைவ சித்தாந்திகளிற் பலர் சிவாலய தரிசன நிமித்தம் வருஷத்திற் கொரு முறை செல்பவரும், ஆயுள்வரை ஒருமுறை செல்பவரும், அயனத்திற் கொருமுறை செல்பவரும், மாத மொருமுறை செல்பவரும், வாரத்திற் கொருமுறை செல்பவருமாய், மடாதிபதிகளும் கிரகஸ்தர்களும் உள்ளார் என்பது காசிமுதல் கன்னியாகுமரி பரியந்தம் பறையறைவித்தாற்போல் பலருமறியப் பிரஸித்தமாயிருக்க, "முழுப்பூசுணிக்காயைச் சோற்றி லமுக்கியது" போன்று அதனை மறைத்து, எம்மவரை வேஷதாரிகள், வஞ்சகர்கள், பொய்யர்கள் என்று கூறுவது எந்த எரிவாய் நரகிற் புகுதற்கோ யாம் அறிகிலோம்.

அன்பர்களே! கவனிப்பீர்களாக. விநாயக புராணத்திலுள்ள தூர்வையாசகப் படலத்தினை "எல்லாரும் எளிதினுணரும்படி வசனரூபமாக எழுதி வெளியிட நேர்ந்தது" என்றார். முன்னரே வசனமாகச் செய்திருக்க இப்பொழுது தாம் வசனமாக இயற்றியதாகப் பொய் மொழி புகன்றார். அவர் என்செய்வார் பாவம்? அவரது முன்னோர்கள் சென்ற பொல்லாவழியேனும் செல்லவேண்டியவராகலின், இவ்வாறு செய்தார். இவர் முன்னோர்களுள், கந்தியாரும், வெள்ளியம்பலத்தம்பிரான் என்பவரும், தாங்களுந் நால்வர்களோடு சமத்

துவமடைய வேண்டுமெனக் கருதி, தேவாரங்களை மனம்போனவாறு திரித்தும், புன்மொழிப்புதுப்பாக்களைப் புகுத்தியும், பெரிய புராணம், திருவிளையாடல் முதலிய நூல்களுள் இழிமொழிப்பாக்களை யிணைத்தும், இருக்கின்றார்கள் என்பது இவர் இனத்தவர்களுள் தொன்றுதொட்டு வழங்கி வருவதும், அடங்கன்முறை முகவுரை முதலியவற்றுள் அச்சிட்டிருப்பதுமே போதிய சான்றாகும். பின்னுஞ் சிலர் பாரதம், இராமாயணம், பிரபுலிங்கலீலை, திருமந்திரம் முதலிய நூல்களிலுள்ள பாக்களைக் கோறல் செய்தும், அதிகமாகப் புணர்த்தியும், நடுவுநிலைமையிலுள்ளோர் தீண்டாவண்ணம் அச்சுவாகனமேற்றியும், முன்னிலைமையாயநன்னிலைமையை யுணராவண்ணம் பல விடையூறுகள் செய்தனர் என்பது பண்டிதரும் கலாசாலை மாணவர்களும் உணர்ந்த விஷயமே யாம். அதுபோன்றே யிவரினத்தவர்களுள் சிலர் சர்வ மேம்பாடுடைய ஆரிய பாஷையிலுள்ள புராணேதிகாசங்களில் தங்கொள்கைக்கு மாறுபாடா விருக்கும் சுலோகங்களைத் திரித்தும், அவ்வாறு திரிக்க ஆற்றலற்ற சுலோகங்களை விடுத்தும், சுருங்கியவற்றை விரித்தும், விரிந்தவற்றைச் சுருக்கியும், அவ்வவர் கருத்திற்கியைய மொழிபெயர்த்தனர். அவற்றுள் இவ்விநாயக புராணமும் ஒன்றும் ; ஆகலின் அஃதப்பிரமாணமாம். நிற்க,

" அன்பு, நூலாராய்ச்சி, கொடை, மிக்க போர்வல்லபம், ஒழுக்கம், இல்லறவின்பம் முதலிய பலவற்றாலும் மேம்பாடுடைய சனகராஜா அரசாக்ஷி செய்துவருங்கால்," என்று வரைந்து, பின்பு "நாரதமுனிவரைக் கண்டு வணங்காது கெர்வித்திருந்தார்" என்று வரைந்தனர். நண்பர்களே ! இவரது புத்தி கௌஸல்யத்தினை நீங்களே யுணர்வீர்களாக. மூன்னர் அன்புடையவர், நூலாராய்ச்சி யுடையவர், கொடையுடையவர், மிக்க போர்வல்லபமுடையவர், ஒழுக்கமுடையவர், இல்லறவின்ப முடையவர் முதலிய பலவற்றாலு மேன்மையுடையவர் என்று அளவிறந்த குணநலமுடைத்தாந்தன்மையினை அறிவித்தனர். பின்னர் அதற்கு எதிர்மறையான குணங்களை யுடைத்தாந் தன்மையாய இறுமாப்பை யறிவித்தனர். நற்குணமுடையோரிடத்தில் அதற்கெதிர்மறைக் குணங்களுளவாமோ ? ஒன்று பொய்யாய் ஒழியினல்லது பரஸ்பரம் விரோதமுடைய இரு குருமங்கள் ஒரு நிலைக்களத் துளவாகாவாதலின், நம்மன்பர் கூறிய நற்குணங்கள் அறவே சனகரிடத்தில்லா திருந்திருக்க வேண்டும். நற்குணங்களில்லா தொழியவே, சனற்குமாரரிடத்துப் பிரமோபதேசம்பெற்று பிரமஞானியாய நாரதமுனிவர் அநதிகாரியாய அவரிடத்து வர ஆவலியக்மின்றும். எதிர்மறையாய இறுமாப்புளதேல், அக்காலும் அநதிகாரியாய அவரிடத்து ஸ்ரீ நாரதமுனிவர் வரவுரித் தன்றும். ஆகவே, இருவழியாலும் இவர் பொறித்த குளறுபடையாய கற்பனைக்கதை ஆற்றிற்கரைத்த புளியோடொப்பாயவாறு காண்க. இன்னும் நம் மன்பர் " ஷணைப்பன் வீட்டுக்கோழி தானே விலங்கின் மாட்டிக் கொள்வதுபோன்று " யோசனை

யின்றிக் கலமிருக்கிறதென்று கண்டவாறு வெள்ளைக் கடிதத்தைக் கறுப்புக் கடிதமாக்கி நாம அபிமான மாத்திரமுள்ள சைவசித்தாந்தப் பிரபுக்களிடத்தில் ஆசைவார்த்தை பல சொல்லிப் பொருளைவாங்கி, அச்சுவாகனை மேற்றி வெட்கமின்றி வெளியிடுகின்றனர். நம் நூலை விவேகிகள் பார்க்கின் ஆசங்கிப்பர்களென்னும் அறிவிருக்குமாயின், இங்ஙனம் முன்பின் மூரணுறவரைவரா. தாம் நீணாளாக உபாசித்துவந்த பரமேசுரனுடைய திருவருளாலன்றே இங்ஙனம் முன்பின் மூரணுற வரைந்தார். பரமேசுரனுடைய திருவருளின் அணுக்கிரகத்தைக் கடக்க யாவர்தாம் வல்லர்? பரமேசுரன் நிர்ப்பகூடிவாதியாதலின், இவரது அந்தக்கரணத்தில் சாகூடி மாத்திரமாயிருந்து, இவரது பாவனையின் பிரகாரம் விளக்கி வைத்தனர். "யாவன் யாதொன்றினை நினைந்தான், அந்த வளவே யந்தப்பாவனையாலதனையடையுமால்" "எண்ணிய வெண்ணியாங் கடைவர்" என்பனவாதிவாக்கியங்களின்படி. இவரது கொள்கையினையே யிவரது உபாசனை மூர்த்தி விளக்கியதாம் என்க.

இன்னும், மூதற் பக்கத்தின் ஆரம்பத்தில் "ஏகாண்ம வாதிகளால் ஞானசனகரென்று துதிக்கப்பட்ட மிதுலாபுரி யரசரானவர்" என்று வரைந்திருக்கின்றீர். பின் கணேசரால் சைவதீக்ஷையுபெற்று சிவஞானியாயினரென்று வரைந்திருக்கின்றனர்.

அன்பர்களே ! இவரது மதிபோனவாறென்னே ! முன்னர் ஏகாண்மவாதிகளாகிய வேதாந்திகளாற் புகழப்பட்டவர் என வேறு பிரித்தனர். பின்னர்த் தம்மினத்தவரென்று, மயல்கொண்டு மயங்கினர். இவரினத்தவராயின் எம்மவர் புகழ்வானேன் ? எமது வேத முடிவாகிய பாரமார்த்திக அத்வைத சித்தாந்தத்தைக் கொண்டவராயிருப்பின் இவர் மதத்தில் தீக்ஷை பெறுவானேன் ? பெரீதாழியவே, இவரினத்தவராற் புகழப்படாது, எம்மவராலும் எம்மவர் கைக்கொண்ட சிரோபூஷணமான வேதமுடிவாகிய பிருகதாரண்ய முதலிய உபநிஷத்துக்களாலும் புகழப்பட்டவர், மிதுலாபுரிக்குரிய ஞான சனகரென்பதை, நம்மன்பர் மனச்சான்றுக்கு மாறுபாடின்றி வரைந்தமை சான்றாகும்.

அன்றி, ஜனகர் என்பது சோழதேசத்தை யாசாருமன்னர்கட்கு சோழன், சோழன், என்று நாமம் வழங்கல்போன்று, மிதுலையாளரையர் குலத்துவந்தார்க்கு ஜனகன், ஜனகன் என வழங்கல் வழக்கமாம். இதனை ஸ்ரீ வசிஷ்ட பகவான் ஸ்ரீராமபிரானுக்கு வாசிட்டத்தில் மிதுலையாண்டிருந்த ஜனகரது உபாக்யானத்தை யுபதேசித்துள்ளார். அக்காலத்திலேயே ஜானகியின் பிதாவாகிய வேறு ஜனகர் ஸ்ரீ தாசரதிக்கு மாமனராக இருந்ததையும் யூகித்தறிவாராக.

ஏகாண்மவாதிகளாற் புகழப்பட்ட ஞான சனகரென்றமையின், அநேகாண்மவாதிகளாய அவைதிக சைவசித்தாந்திகளாற் புகழப்பட்ட

அஞ்ஞானியாய சனகர் ஒருவர் உளரென்று அருத்தாபத்திப் பிரமாணத் திறற் சித்தமாகின்றது. அந்த சனகர் இருபத்தெட்டாகமங்களுள் புக ழப்பட்டிருக்க வேண்டும். இன்னும் தென்றேயத்தில் அப்பிரஸித்த மிதுலாபுரியென் றேரூரிருக்கவேண்டும். அவ்வூரில், வெறுஞ் சைவப் பண்டார குருக்களாகவாவது, அல்லது நம்மன்பரைச் சார்ந்த பின்னே வேறு பற்பல சாதிகளிலாவது சனகரென்னும் பெயருடன் ஒருவரிருக்க வேண்டும். அவ்வாறு ஆகம முதலியவற்றாலும், தேச சரித்திரத்தாலும் உணரப்படாமையின், வேதாந்திகளாற் புகழப்பட்ட சனகர் சைவதீக்ஷை பெற்றரென்னும் தெற்றுரை வெற்றுரையாயவாறு காண்க ! இன்னும், இவர் மதத்தில் சேர்ந்து சைவதீக்ஷைபெற்றது நம்மன்பர் மனச்சாக்ஷிக்கு உண்மையா யிருப்பின், அறுபத்துமூன்று நாயன்மார்களைச் சிவாலயங்க ளில் வைத்துப் பூஜிக்க வேண்டுமென்று பிரயத்தனஞ் செய்வதுபோன்று சைவ சித்தாந்த சனகரையும், சிவாலயங்களில் மூர்த்தியாகப் பிரதிஷ்டை செய்து, பூஜை முதலியன செய்துவர வேண்டுமென்று, பகீரதப் பிரயத் தனஞ் செய்திருப்பாரன்றே ? அங்ஙனம் இவர் செய்யாமையினனே, சகல லோக ஹிதமாயுள்ள வேதத்தின் முடிவாய உபநிஷத்களில் பிரதி பாதிக்கப்படும் தத்துவமசி மஹாவாக்கியப் பொருளினை யுணர்ந்த, ராமே ஸ்வர முதல் ஹிமாசல பரியந்தம் பிரஸித்தமாயுள்ள பரம அத்வைத சித் தாந்தியென் றுணர்தற் கையமின்றும். நம்மன்பரது சுபாவம் " நரி திராக்ஷைப்பழம் புளிப்பென்று " கூறியதுபோன்று, தம் மனத்தில் தோற்றியவர்களை யெல்லாம், அவைதீக சைவசித்தாந்திகளென்று, பிர மாணமின்றி சுவகபோல கற்பனையாக எழுதி வெளியிடுவதேயாகும். எதிரிகள், வாதஞ் செய்யாதிருப்பின், தாம் எழுதியதனைப் பதிவாக்கா கப் பாவித்துப் பாமரரிடத்துப் புகழ்ந்து பரமானந்தமடைந்திருப்பர். வேதாந்திகளாய எதிரிகள் அங்குசம் விடுப்பின், மறுமொழிகூறாது மௌனஞ் சாதிப்பர். இன்னும், நாரதரையும் தம்மனம்போனவாறு சைவ சித்தாந்தியென்று எழுதிக்கொண்டனர். நாரதமுனிவர் அறுபத்து நான்கு கலைஞானமுடையவரா யிருந்தும், துக்கம் நீங்கப் பெறுதவராய், சனற்குமார முனிவரை யடைந்து, பூமாவித்தையினைப் பெற்று துக்கத் தை நீக்கினரென்று, உபநிடதங்களில் பிரசித்தமாயுளது ; அதற்கு மூர ணுறத்தெரிந்து பொய்புகன்றமையின், மீளா நரகத்திற் காளாகின்றனர். ஆஹா ! இவர் மதிமாணயிற்றே ? பிரமாணமின்றி வெற்றுரை தொடுப் பாரா ? தொடார் தொடார். யாம் பிரமாணங் கேட்பின், " பச்சாம்பேட் டைச் சத்தியோஜாத சிவாசார்யரென்ற இரத்தின குருக்கள் " கோறல் செய்தசிட்ட, ஆகமப் புத்தகங்களில், அவராற் புகுத்தப்பட்ட வியா கரண விருத்தமான பிழைச் சுலோகங்கள் இருப்பின் அவற்றைப்பெரும் பிரமாணமாகப் பறையறைவித்தாற்போன் றறிவிப்பர். அவ்வாறாய சுலோகங்களும் ஆகமங்களிலின்றென்றே துணிவாகக் கூறலாம்.

இன்னும் பத்தாவது பக்கத்தின்கண், "வேத வேதாந்த சிவாகம சித்தாந்தாதி சகல சாஸ்திரங்களாலும், அநாதி நித்தியப் பொருள்க ளென்று கூறப்படுவன, பதி பசு பாசமென்கின்ற மூன்றுமாகும்" என்று "கட்டிப்பேச ஆளில்லாவிட்டால் தம்பி சண்டப்பிரசண்டன்" என்னும் உலக வழக்கம் உறழவரைந்தனர். மோக்ஷத்தினை யடைதற்குரிய நான்கு சாதனங்களுள், நித்தியா நித்தியவஸ்து விவேகம் என்பதன்பொருளை, யுணர்ந்திருப்பாராயின் பாசம் நித்தியமெனக் கூறார். இனியாயினும்,

"மெய்ம்மை யாம்பொருள் விவேகமும் வேறுபா டாய
பொய்ம்மை யாம்பொருள் விவேகமும் புந்தியுட் டோன்ற
விம்மை யாசையு மறுமையி லாசையு மிகந்து
செம்மை யாகிய கருத்தராய்ப் பரகதி தேர்வார்."

"புத்த ராதியோர் புறவுரை நெறிகளும் பொய்யா
நித்த வேதநூ றழுவிய வகவுரை நெறியுஞ்
சித்த மாசறுத் தானருட் டெளிவியா வதனுண்
மித்தை யாணவத் தொடக்கறு தில்லையாம் வீடும்."

"வேத வாகமச் சென்னியில் விளைபொரு ளபேதம்
பேதமாகிய பிணக்கறுத் திருட் பிணி யவிழ்த்து
நாத னெகிய தன்னையு மென்னையு நல்கும்
போத னெகிய குருபரன் வருவதைப் பொழுதால்".

என்னும் திருவிளையாடற் புராணத்திலுள்ள செய்யுட்களில் கூறி யுள்ள அநித்தியப் பொருளொன்று இருந்தேயல்லவா அதன் விவேகஞ் செய்யவேண்டும்? அநித்தியப் பொருளொன்றின்றி யெதன் விவேகஞ் செய்வது? நம் நண்பர் கொள்கைப்படி அநித்தியப் பொருளொன்றில்லா திருக்கப் பரமேசுரனல் உபதேசம்பெற்ற ஸ்ரீ மணிவாசகப் பெருந்தகை வேறுபாடாய எப்பொய்ம்மை யாம் பொருளை விவேகஞ் செய்தனர்? மெய்ம்மைப்பொருளைப் பொய்ம்மையாக விவேகஞ் செய்தனரெனின், அக்கூற்றுப் பொய்ம்மையாய் முடியும். பொய்ம்மைப் பொருளென்ற லொன்றிருந்தே யதனை மணிவாசகப் பெருந்தகை விவேகஞ் செய்தன ரென்றுணர்ந்து, காடோறும் காலையிலெழுந்து சிவஸ்மரணை செய்யும்படி சாஸ்திரங்கள் விதிக்க, அதனை யுணராது மாறாய், கோவிலார் மடத்தினை யும், அதிலிருந்த பெரியாரையும், வேதத்தினையும், பிராமணர்களையும், வேதாந்திகளையும், நித்திப்பதே பிராதகால ஸ்மரணமும், காலக்கடனு மாய் இதுவரை யநுஷ்டித்து வந்த வழக்கத்தினை யறவே யொழித்து, அம்மகான்களை நிந்தித்த பாபங்க ணீங்குவதற்காக அவர்கள் திருவடிகளை நாத்தழும்பேற வாழ்த்தி இனியேனும் நன்மை கடைபிடிப்பாரென இவ் வயோதிகர்மீதுள்ள கருணையினல் உபதேசிக்கின்றோம். கேட்கிறது மூங்க. இன்றி "சொர்க்கத்திற்போம்போதும் கட்கத்தில் ராட்டணம்"

என்ற மொழிப்படி தென்றையுந் செல்லும் போதும் அங்குங்கொண்டு செல்லிலுஞ்செல்க.

இன்னும் 12-ம் பக்கத்திலே, "சிவனுக்குரிய பிரமத்தன்மையைச் சிவனுக்குச் சொல்வது திருட்டாம்" என்றார். நம்மைத் திருடன் என்று கூறி "அவன் கிடக்கிறான் கட்குடியன், எனக்கிரண்டுமொன்றை கள் ளுற்று" என்னும் மொழிப்படி இவர் கப்புவதியாங்ஙனம்? இவர் சிவனுக்குரிய குணங்கள் யாவும் சிவனுக்குரியனவென்று கூறுபவரா? இலரா? கூறுனென்பதேல்

திருவாசகம்.

"இயக்கி மாறறு பத்து நால்வரை யெண்கு ணஞ்செய்த சதனே"
"தந்தனன் றன்னைக் கொண்டதென் றன்னைச் சங்கரா வார்கொலோ சதுரர்"

"இத்தமல மறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட அத்தன்"

"பேசினேலோர் பேதமின்மை"

"நாமொழிந்து சிவமானவாபாடி"

"வான்கெட்டு மாருத மாய்ந்தழனீர் மண்கெடினும்
தான்கெட்ட லின்றிச் சலிப்பறியாத் தன்மையனுக்
கூன்கெட் டுயிர்கெட் டுணர்வுகெட் டுன்னுள்ளமும் போய்
நான்கெட்ட வாபாடித் தெள்ளேணங் கொட்டாமோ"

"பேதமில்லதோர் கற்பனித்த பெருந்துறைப்பெரு வெள்ளமே"

"சிந்தைதனைத் தெளிவித்துச் சிவமாக்கி"

"பேதங் கெடுத்தருள்செய் பெருமை யறியவல்லார் எம்பெருமானுமாரே"

"கூறும் நாவே முதலாகக் கூறுங் கரண மெல்லாநீ
தேறும் வகைநீ திகைப்புநீ தீமை நன்மை முழுதுநீ."
திருவினையாடற் புராணம் நாயக்க மன்னர்கொடுத்த படலம்.
"சித்தமாசுகழீஇச் சிவமாகிய"

திருமந்திரம்.

"சிவன்றன் பலபல சீவனுமாகி" "சீவன் பரசிவமேம்" "சிந்தைய தென்னைச் சிவனென வேறில்லை" "உணர்வுமவனே யுயிருமவனே"

"சிவ னென்னைச் சிவனென்ன வேறிலை
சிவ னுர்சிவ னுரை யறிகிலர்
சிவ னுர்சிவ னுரை யறிந்தபின்
சிவ னுர்சிவ னுயிட் டிருப்பரே".

யின்றிக் கலமிருக்கிறதென்று கண்டவாறு வெள்ளைக் கடிதத்தைக் கறுப்புக் கடிதமாக்கி நாம அபிமான மாத்திரமுள்ள சைவசித்தாந்தப் பிரபுக்களிடத்தில் ஆசைவார்த்தை பல சொல்லிப் பொருளைவாங்கி, அச்சுவாகனமேற்றி வெட்கமின்றி வெளியிடுகின்றனர். நம் நூலே விவேகிகள் பார்க்கின் ஆசங்கிப்பர்களென்னும் அறிவிருக்குமாயின், இங்ஙனம் முன்பின் முரணுறவரைவரா. தாம் நிஜமாக உபாசித்துவந்த பரமேசுரனுடைய திருவருளாலன்றே இங்ஙனம் முன்பின் முரணுற வரைந்தார். பரமேசுரனுடைய திருவருளின் அனுக்கிரகத்தைக் கடக்க யாவர்தாம் வல்லர்? பரமேசுரன் நிர்ப்பகூடவாதியாதலின், இவரது அந்தக்கரணத்தில் சாகூடி மாத்திரமாயிருந்து, இவரது பாவனையின் பிரகாரம் விளக்கி வைத்தனர். "யாவன் யாதொன்றினை நினைந்தான், அந்த வளவே யந்தப்பாவனையாலதனையடையுமால்" "எண்ணிய வெண்ணியாங் கடைவர்" என்பனவாதி வாக்கியங்களின்படி. இவரது கொள்கையினையே யிவரது உபாசனை மூர்த்தி விளக்கியதாம் என்க.

இன்னும், மூதற் பக்கத்தின் ஆரம்பத்தில் "எகான்ம வாதிகளால் ஞானசனகரென்று துதிக்கப்பட்ட மிதுலாபுரி யரசரானவர்" என்று வரைந்திருக்கின்றார். பின் கணேசரால் சைவதீக்ஷையுபெற்று சிவஞானியாயினரென்று வரைந்திருக்கின்றனர்.

அன்பர்களே ! இவரது மதிபோனவாறென்னே ! முன்னர் எகான்ம வாதிகளாகிய வேதாந்திகளாற் புகழப்பட்டவர் என வேறு பிரித்தனர். பின்னர்த் தம்மினத்தவரென்று, மயல்கொண்டு மயங்கினர். இவரினத்தவராயின் எம்மவர் புகழ்வானேன் ? எமது வேத முடிவாகிய பாரமார்த்திக அத்வைத சித்தாந்தத்தைக் கொண்டவராயிருப்பின் இவர் மதத்தில் தீக்ஷை பெறுவானேன் ? பெரு தாழியவே, இவரினத்தவராற் புகழப்படாது, எம்மவராலும் எம்மவர் கைக்கொண்ட சிரோபூஷணமான வேதமுடிவாகிய பிருகதாரண்ய முதலிய உபநிஷத்துக்களாலும் புகழப்பட்டவர், மிதுலாபுரிக்குரிய ஞான சனகரென்பதை, நம்மன்பர் மனச்சான்றுக்கு மாறுபாடின்றி வரைந்ததே சான்றாகும்.

அன்றி, ஜனகர் என்பது சோழதேசத்தை யாசாருந மன்னர்கட்கு சோழன், சோழன், என்று நாமம் வழங்கல்போன்று, மிதுலையாளரையர் குலத்து வந்தார்க்கு ஜனகன், ஜனகன் என வழங்கல் வழக்கமாம். இதனை ஸ்ரீ வசிஷ்ட பகவான் ஸ்ரீராமபிரானுக்கு வாசிட்டத்தில் மிதுலையாண்டிருந்த ஜனகரது உபாக்யானத்தை யுபதேசித்துள்ளார். அக்காலத்திலேயே ஜானகியின் பிதாவாகிய வேறு ஜனகர் ஸ்ரீ தாசரதிக்கு மாமனராக இருந்ததையும் யூகித்தறிவாராக.

எகான்மவாதிகளாற் புகழப்பட்ட ஞான சனகரென்றமையின், அநேகான்மவாதிகளாய அவைதிக சைவசித்தாந்திகளாற் புகழப்பட்ட

அஞ்ஞானியாய சனகர் ஒருவர் உளரென்று அருத்தாபத்திப் பிரமாணத் திறற் சித்தமாகின்றது. அந்த சனகர் இருபத்தெட்டாகமங்களுள் புக ழப்பட்டிருக்க வேண்டும். இன்னும் தென்றேயத்தில் அப்பிரஸித்த மிதுலாபுரியென் றேரூரிருக்கவேண்டும். அவ்வூரில், வெறுஞ் சைவப் பண்டார குருக்களாகவாவது, அல்லது நம்மன்பரைச் சார்ந்த பின்னே வேறு பற்பல சாதிகளிலாவது சனகரென்னும் பெயருடன் ஒருவரிருக்க வேண்டும். அவ்வாறு ஆகம முதலியவற்றாலும், தேச சரித்திரத்தாலும் உணரப்படாமையின், வேதாந்திகளாற் புகழப்பட்ட சனகர் சைவதீக்ஷை பெற்றரென்னும் தெற்றுரை வெற்றுரையாயவாறு காண்க ! இன்னும், இவர் மதத்தில் சேர்ந்து சைவதீக்ஷைபெற்றது நம்மன்பர் மனச்சாக்ஷிக்கு உண்மையா யிருப்பின், அறுபத்துமூன்று நாயன்மார்களைச் சிவாலயங்க ளில் வைத்துப் பூஜிக்க வேண்டுமென்று பிரயத்தனஞ் செய்வதுபோன்று சைவ சித்தாந்த சனகரையும், சிவாலயங்களில் மூர்த்தியாகப் பிரதிஷ்டை செய்து, பூஜை முதலியன செய்துவர வேண்டுமென்று, பகீரதப் பிரயத் தனஞ் செய்திருப்பாரன்றே ? அங்ஙனம் இவர் செய்யாமையினனே, சகல லோக வந்தமாயுள்ள வேதத்தின் முடிவாய உபநிஷத்களில் பிரதி பாதிக்கப்படும் தத்துவமசி மஹாவாக்கியப் பொருளினை யுணர்ந்த, ராமே ஸ்வர முதல் வடிமாசல பரியந்தம் பிரஸித்தமாயுள்ள பரம அத்வைத சித் தாந்தியென் றுணர்தற் கையமின்றும். நம்மன்பரது சுபாவம் " நரி திராக்ஷைப்பழம் புளிப்பென்று " கூறியதுபோன்று, தம் மனத்தில் தோற்றியவர்களை யெல்லாம், அவைதீக சைவசித்தாந்திகளென்று, பிர மாணமின்றி சுவகபோல கற்பனையாக எழுதி வெளியிடுவதேயாகும். எதிரிகள், வாதஞ் செய்யாதிருப்பின், தாம் எழுதியதனைப் பதிவாக்கா கப் பாவித்துப் பாமராரிடத்துப் புகழ்ந்து பரமானந்தமடைந்திருப்பர். வேதாந்திகளாய எதிரிகள் அங்குசம் விடுப்பின், மறுமொழிகூறுது மௌனஞ் சாதிப்பர். இன்னும், நாரதரையும் தம்மனம்போனவாறு சைவ சித்தாந்தியென்று எழுதிக்கொண்டனர். நாரதமுனிவர் அறுபத்து நான்கு கலைஞானமுடையவரா யிருந்தும், துக்கம் நீங்கப் பெறுதவராய், சனற்குமார முனிவரை யடைந்து, பூமாவித்தையினைப் பெற்று துக்கத் தை நீக்கினரென்று, உபநிடதங்களில் பிரசித்தமாயுளது ; அதற்கு மூல ஞானத்தெரிந்து பொய்புகன்றமையின், மீளா நரகத்திற் காளாகின்றனர். ஆஹா ! இவர் மதிமாண்பையிற்றே ? பிரமாணமின்றி வெற்றுரை தொடுப் பாரா ? தொடார் தொடார். யாம் பிரமாணங் கேட்பின், " பச்சாம்பேட் டைச் சத்தியோஜாத சிவாசார்யரென்ற இரத்தின குருக்கள் " கோறல் செய்தசித்திட்ட, ஆகமப் புத்தகங்களில், அவராற் புகுத்தப்பட்ட வியா கரண விருத்தமான பிழைச் சுலோகங்கள் இருப்பின் அவற்றைப்பெரும் பிரமாணமாகப் பறையறைவித்தாற்போன் றறிவிப்பர். அவ்வாறுய சுலோகங்களும் ஆகமங்களிலின்றென்றே துணிவாகக் கூறலாம்.

"தொம்பதந் தற்பதந் தோன்று மசிபத
நம்பிய சீவன் பரசிவ னுய்னிற்கு
மம்பத மேலைச் சொரூபமா வாக்கியஞ்
செம்பொரு ளாண்டருள் சீர்ந்திதானே". 2441

கடுஞ்சுத்த சைவம்.

"நானென்றுந் தானென்று நாடிநான் சாரவே
தானென்று நானென் றிரண்டிலாத் தற்பதந்
தானென்று நானென்ற தத்துவ நல்கலாற்
றானென்று மானென்றுஞ் சாற்றகில் லேனே". 4

சம்பிரதாயம்.

"நானென நீயென வேறில்லை 11

"அவனு மவனு மவனை யறியார்
அவனை யறியி லறிவானு மில்லை
அவனு மவனு மவனை யறியில்
அவனு மவனு மவனிவ னுமே" 12

உடலிற் பஞ்சபேதம்.

"தானவ னுகிய தற்பரம்" 13

பராவத்தை.

"இவனும் அவன் வடிவாமே" 9

நின்மலாவத்தை.

"தானே சிவமான தன்மை தலைப்பட" 11

"தன்னை யறிவ தறிவா மஃதன்றிப்
பின்னை யறிவது பேயறி வாமே". 15

"தானவ னுகுஞ் சமாதிகை கூடினால்" 16

"தானவ னுகிய ஞானத் தலைவனை" 21

முப்பதம்.

தொம்பதந் தற்பதந் தோன்று மசிபதம்
நம்பிய சீவன் பரன்சிவ னுய்னிற்கும். 5

முச்சூனியம் தோந்தத்தசி.

"சீவன் பரன்சிவ னுமே" 6

தத்துவமசி வாக்கியம்.

"ஆகிய அச்சோயந் தேவதத் தன்னிடத்
தாகிய விட்டு விடாத விலக்கணைத்
தாருப சாந்தமே தொந்தத் தசியென்ப" 3

" தொம்பதந் தற்பதஞ் சொல்லு மசிபத
நம்பிய முத்துரி யத்துமே லுடனே
யும்பத மும்பத மாகு முயிர்பரன்
செம்பொரு ளான சிவமென லாமே " 4

மகாவாக்கியம்.

" நீயது வாவை யெனநின்ற பேருரை
யாயது நானேனை னென்னைச் சமைந்தறச்
சேய சிவமாக்குஞ் சீர்ந்தி பேரருள்
ஆயது வாயனந் தானந்தி யாமே " 10

ஞானதரு தரிசனம்.

" திரிமலந் தீர்ந்து சிவனவ னுமே " 4

ஞாலேதயம்.

" நானென்றுந் தானென்று நாடினே னுடலு
நானென்றுந் தானென்ற நிரண்டில்லை " 8

அணைந்தோர்தன்மை.

" சித்தஞ் சிவமாய் மலமூன்றுஞ் செற்றவர்
சுத்தஞ் சிவமாவர் தோயார் மலபந்தம் " 13

கேவல சகல சுத்தம்.

" தன்னை யறியா துடலை முன் னுனென்னுன்
தன்னை முன் கண்டான் றுரியன் றனைக் கண்டான்
துன்னு துரியமு மீசனே டொன்றுக்கால்
பின்னையும் வந்து பிறந்திடுந் தானே " 38

சன்மார்க்கம்.

" தெளிவறி யாதார் சிவனை யறியார்
தெளிவறி யாதார் சிவனு மாகார்
தெளிவறி யாதார் சிவமாக மாட்டார்
தெளிவறி யாதார் தீரார் பிறப்பே " 1480

தவதூடணம்.

" ஓதலும்வேண்டா முயிர்க்குயி ருள்ளுற்றுற்
காதலும் வேண்டாமெய்க் காய மிடங்கண்டாற்
சாதலும் வேண்டாஞ் சமாதிகை கூடிளுற்
போதலும் வேண்டாம் புலன்வழி போகார்க்கே". 1633

" கத்தவும் வேண்டாங் கருத்தறிந் தாறிளுற்
சுத்தமும் வேண்டாஞ் சமாதிகை கூடிளுற்
சுத்தமும் வேண்டாந் தொடக்கற்று நிற்றலாற்
சித்தமும் வேண்டாஞ் செயலற் றிருக்கிலே". 1634

"சித்தஞ் சிவமாகச் செய்தவம் வேண்டாவாற்
சித்தஞ் சிவாங்தஞ் சேர்ந்தோ நுறவுண்டாற்
சித்தஞ் சிவமாக வேசித்தி முத்தியாஞ்
சித்தஞ் சிவமாதல் செய்தவப் பேறே". 1644

அறிவுதயம்.

"அறிவு வடிவென் றறியாத வென்னை
அறிவு வடிவென் றருள்செய்தா னந்தி
யறிவு வடிவென் றருளா லறிந்தே
யறிவு வடிவென் றறிந்திருந் தேனே". 2357

"அறிவுக் கழிவில்லை யாக்கமு மில்லை
யறிவுக் கறிவல்ல தாதார மில்லை
யறிவே யறிவை யறிகின்ற தென்றிட்
டுறைகின் றனமறை மீறுக டாமே". 2358

"என்னை யறிந்திலே னித்தனை காலமும்
மென்னை யறிந்தபி னேது மறிந்திலே
னென்னை யறிந்திட் டிருத்தலுங் கைவிடா
தென்னையிட் டென்னை யுசாவுகின் றானே". 2368

மகா வாக்கியம்.

"துவந்தத் தசியே தொந்தத் தசியும்
அலைமன்று வந்து வயத்தேத மான
தவமுறு தத்துவ மசிவே தாந்த
சிவமா மதுஞ்சித் தாந்தவே தாந்தமே". 2571

விசுவக்கிராசம்.

"இரும்பிடை நீரென வென்னையுள் வாங்கிப்
பரம்பர மான பரமது விட்டே
யுரம்பெற முப்பா ழொளியை விழுங்கி
யிருந்தவென் னந்தி யிதயத்து ளானே". 2592

வாயிமை.

"எல்லா மறியு மறிவு தனைவிட்டு
எல்லா மறிந்து மிலாபமங் கில்லை
யெல்லா மறிந்த வறிவினை நானென்னி
லெல்லா மறிந்த விறையென லாமே". 2596

ஞானசேயல்.

"முன்னை வினைவரின் முன்னுண்டே நீங்குவர்
பின்னை வினைக்கணேர் பேர்ந்தறப் பார்ப்பர்க
டன்னை யறிந்திடுந் தத்துவ ஞானிகள்
தன்மையி லம்புல னுடலி னுலே". 2610

"தனியே யறிந்திடுந் தத்துவ ஞானிகண்
முன்னை வினையின் முடிச்சை யவிழ்ப்பார்கள்
பின்னை வினையைப் பிடித்துப் பிசைவர்கள்
சென்னியில் வைத்த சிவனரு ளாலே". 2611

"மன வாக்குக் காயத்தால் வல்வினைமூளு
மனவாக்கு நேர்நிற்கில் வல்வினை மன்னு
மனவாக்குக் கெட்டவர் வாதனை தன்னுள்
ளனைமாற்றி யாற்றத் தகுஞானி தானே". 2612

வரைவுமாட்சி.

"மனமாயை மாயையிம் மாயை மயக்க
மனமாயை தான்மாயு மற்றென்றுமில்லை
யினமாய்வ தில்லை யிதற்றவும் வேண்டாந்
தனையாய்ந் திருப்பது தத்துவந்தானே". 2956

ஆகம வாக்கியம்.

பாசபத்தநேதஜ்வா பாசமுத்தநே சதாசிவ.
சிவஜ்ஜீவோ ஜீவோசிவ சற்ஜீவோ கேவலசிவா.
ஜீவோசிவோ சிவோஜீவ சற்ஜீவோ கேவலசிவா.
நிஷ்டே பூர்வம் ஆத்மா எகமேவா.
சரீர பின்னம் பரமாத்ம னேகம்.
சர்வசாக்ஷி சிவோகம்.
பிரத்யே காத்ம சிவோகம்.

நிருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம்.

" சித்திக்கே யுய்த்திட்டித் திகழ்ந்த மெய்ப்பரம்பொருள்
சேர்வார் தாமே தானுகச் செயுமவ னுறையுமிடம் "

" குற்றமீ குணங்கள்நீ கூடலால வாயிலாய் "

நிருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்.

" பிறருருவுங் கம்முருவுந் தாமேயாகி "

" இருநிலனுய்த் தீயாகி நீருமாகி யியமானனுய். "

சுந்தரமூர்த்தி சுவாமிகள் தேவாரம்.

" வானு யுயிராணு யுடலாணு யுலகாணுய் "

என்பனவாதிப் பிரமாணங்கள் சிவனுக்குரிய எண்குண முதலி யன மோசஷ காலத்தில் ஜீவனுக்கு வந்து பொருந்துகின்றனவென்றும், ஜீவத்வம் நீங்கினவிடத்தென்றும் வெள்ளிடை மலைபோல் விளக்கியிருப்

பவும், சர்வோத் கிருஷ்ட பிராமண குலத்திலவதரித்து 104 கிரந்தங்களின் கருத்தாவாய் விளங்கிய ஸ்ரீமந் அப்பய்ய தீக்ஷிதயோகீந்திரரவர்களும் தாம் இயற்றிய "சித்தாந்த லேசசங்கிரகம்" என்னுங் கிரந்தத்தில் ஸுக்ஷேப சமாதான வாயிலாய், ஜீவத்வ நீங்கி சிவத்துவம் வந்து பொருந்துகின்றதென்று ஸ்பஷ்டமாக (10) பக்கம் வரைந்திருக்கவும் அதற்கு மாறுய், மோக்ஷகாலத்தில் ஜீவத்துவம் நீங்கா, சிவனுக்குரிய எண்குணங்கள் ஜீவனைவந்தடையா என்று கொள்வ்ரேல், முற்கூறிய பிரமாணங்களோடு விரோதித்து, அம்முதியோர் வாக்கினைப் பரமப்பிரமாணமாகக் கொள்ளாததாலுளதாம் பாவத்திற்காளாகி, ரௌரவநரகத்தை யடைவதன்றி யிவ்வுலகத்தினும் பரலோகத்தினும், வேறு எப்பிரயோசனத்தை யடைவர்? யாம் மாத்திரங்கூறுவதன்று; எம்முன்னோர் கொள்கையும் இங்ஙனமே யாமாலோ வென்பரேல், நன்று நவின்றீர். நும்முன்னோர் யாவர்? ரௌரவாகமத்திலுள்ள பாசவிமோசனப் படலத்தின், பன்னிரண்டு சுலோகங்களுக்குத் தமிழிற் பேருரை யெழுதிய சிவஞான சுவாமியென்பரேல், ஆவரும் இவர் போன்றே, திருவாசகத்திற்கூறிய எண்குணங்களும், அப்பய்ய தீக்ஷிதயோகீந்திரரவர்களால், சிவனுக்கு வந்து பொருந்துகின்றதென்று காட்டியிருப்பதனைக் கற்றறியுந் திறனின்றித் தமது பேருரையின்கண் மாறுய், மனம் போனவாறு, விரிவாகப்பொறித்து, உண்மைப் பொருள்விளங்கா திடர்ப்பட்டவராகலின், அவரைப்பெரியாரோடொருங்குவைத்தெண்ணுது வேறுயொதுக்குக. எவர் பொதுப் பிரமாணமாயுள்ள தேவாரம் திருவாசகம் திருமந்திரம் முதலிய சாஸ்திரங்கட்கு மாறுபட்ட கொள்கையுடையரோ, அவர்கள் எவ்விதமஹிமையுடையோராயினும், பெரியாரன்றென வொதுக்குவது சர்வேஸ்வர சம்மதமாம்.

சிவனுக்குரிய எண்குணங்கள் சிவனுக்கு மரியனவென்று, கூறுகின்றீரென்பரேல், இவரும் எம்மீது புகன்ற திருட்டுக்குற்றத்திற்கு உடன்பட்டவராகாது, எஞ்சியிருப்ப தெவ்வாறும்?

நம்மன்பர், சிலந்திவருடச்சுகம்போல முன்பின் உணர்ச்சியின்றி அவசரப்புத்தியால் வேதாந்திகளைத் திருடரென் றெழுதினர். இப்பொழுது வேதாந்திகளாய யாம், அத்திருட்டுத் தொழிலை அவர் மதத்தினர்க்கும் அவருக்குமே பரம்பரைப் பட்டமாகக்கொடுத்து விட்டமையின், சந்தோஷத்தோடு பெற்று, சூரியர் சந்திரர்களுள்ளவரையும் இப்பட்டத்தோடு மகிழ்ந்திருப்பாராக.

13-வது பக்கத்தின்கண் "அகம்பிரமவாதிகள்—இச்சனகர் நாம் பிரமமென்னு மார்க்கம் சிவத்துரோகமே தந்தது என்று பயந்து நீங்கி வாங்கித்துத்தள்ளிய அகம்பிரம மார்க்கத்தையே உண்மையெனச் சிரமேற்கொண் டொழுகுவதென்னையோ?" என்றுரைத்தனர்.

அன்பர்களே ! இதுகாறும் வரைந்த பிரமாணயுக்தி நியாயங்களால், பிரமைவாகம் என்னும், சுருதி சிகாமாய, அத்வைதக்கொள்கையினையுடையவர் சனகரென்று ஸ்தாபித்தமையின், இவர் கூற்றுக் கூற்றுச் இணையாயவாறு காண்க.

அத்வைத மதத்தினைச் சிவத்துரோகமான மார்க்கமென்று கருதி, வாந்திக்குத்தள்ளினர் சனகர் என்று, கலிகாலத்திலவதரித்த மகாத்மியத்திலுற் கட்டிவிட்டனர்.

வேதத்திற்கூறிய மார்க்கம் வாந்திக்குத்தள்ளிய மார்க்கமாமேல், வேதத்திற்குப் பாஷியமாமென்று, இவரினத்தவர் தம்பட்டமடிக்கும், ஆகமத்திற் கூறுது கூறிய இவரது மார்க்கம், காகவிஷ்டைக்குச் சமானமாமேயென்று கூறுவதன்றி வேறு உவமனின்றும். வேதம் மூலமென்றும், ஆகமம் அதன் உரையென்றும், இவரினத்தாரும் இவரும் கூறுவதனை யாராய்ச்சிசெய்யாது, மூலமாய வேதத்திற்கூறிய அத்வைத மார்க்கத்தினை வாந்திக்குத்தள்ளியதென்று, பூர்வசென்மத்தில் ஈழதேசத்திற் செனித்துச்செய்த பாவவிசேஷத்தால், வாயில் வந்தவாறு தூஷித்து அதோகதியடைய நினைக்கின்றனர். இன்னும் வேதத்திற் கூறியமார்க்கம் வாந்திக்குத்தள்ளிய மார்க்கமாகவே, அம்மார்க்கத்தினையுடைய வேதமும் வாந்திக்குத்தள்ளியதாகும். ஆகவே அவற்றின் பாஷியமாகிய இவரினத்தார் கூறும் ஆகமமும் காகவிஷ்டைக்குச் சமானமேயாம்.

நிந்திக்கப்புகுந்தவர் பின்னர் இடையூறு வருமென்று கருதாது, தம் ஆகமத்திற்காதாரமாயுள்ள வேதத்தினை ஆஸ்திகர்கள் மனத்திலுங்கருதாத் தூஷணை செய்தனர். ஆதாரமின்றி ஆதேயமிராதாகலின், ஆதாரம் தோழுறில் ஆதேயமும் அத்தோழுக்குட்படாது எஞ்சியிருத்தல் எவ்வாற்றலும் இயல்புடைத்தன்றாமென்று, நம்மன்பர் மூடத்தன்மையால், பொறித்துத் தமதாகமத்திற்குக் காகவிஷ்டைக்குச் சமானமாத்தன்மையாய பட்டத்தினை யெம்மிடத்திருந்து மிக ஆதாவோடு பெற்றனர். இதுதான் இவர் வேதபாஹ்யமாகிய ஆகமத்திற்கு வருந்திச் சம்பாதித்துக்கொடுத்த கௌரவமாகும். இவ்வாறாய ஆக்ஷேபமும், இவர் வாய்மொழிகொண்டே, இயற்றியதன்றி, யெமது கருத்தன்றும். எமக்கோ, பராசரன் பகர்ந்த பலவாகமங்களும், தேவாரம் திருவாசகம் திருமந்திர முதலிய மனிமைவாய்ந்த பொதுநூல்களும், சிறோ பூஷணமாக வுடன்பாடேயாம். நம்மன்பரோ, " திருப்பதி கோவிதன் சுவிவாம் பண்ணினானதுபோன்று " என்னும் உலகவழக்கப்படி, பூலோகத்திலுள்ள சகலசாஸ்திரங்களும், தமக்கு உடன்பாடென்று சொல்லிக்கொண்டு முன்பின் சம்பந்தங்களுணராது, ஏவ்வொரு வாக்கியங்களை யெடுத்துப் பிரமாணமாகக் காண்பிப்பர். என் செய்வார் பாவம்! வேதாந்தநூற்களுள் யாண்டாவது முகங்கொடுத்தால் இவர்க்கோடிதான் கிடைக்கிறது ? சுவிவடிவமாய காலடி கிடைத்தால் இவர்க்கிடையூழ்ய விடமன்றே ? அந்நூல்க

ளுள், வேறுவாக்கியங்களையெடுத்து, இவர் கோட்பாட்டுக்கு மாறுபாடென்று பிறரறிவிக்கின், அவ்வாக்கியம் எமக்குடன்பாடன்றென்றுவது, அல்லது பிறமதத்தினர் திரித்துவிட்டனவென்றுவது, வடதேயத்தாரிய சமாஜிகள்போன்று வெற்றுரைகூறி, விளைந்தோடட யத்தளிப்பர். வடதேயத்து ஆரியசமாஜிகளை இவரினும் மிக நல்லவரென்றே கொள்ளறகும். எதனாலென்றால் "அவர்கள் மூலமாய வேதத்தினை அப்பிரமாணமாகக் கொள்வதில்லை. வேதத்திலுள்ள மந்திரபாகம் பிரமாணம். பிராமணபாகம் பிரமாணமன்று. ஸ்மிருதிகள் தங்கொள்கைக்குரியன பிரமாணங்கள், மற்றைய அப்பிரமாணம். புராணம், போப்புக்கள் புகிப்பான் புகன்ற பொய்க்கதையாகும்" என்பர். மற்றையவற்றையெல்லாம் ஸ்பரிசிக்க யோக்கியமற்ற அப்பிரமாணமாகக் கொள்ளினும், தமக்குப் பாம ஆதாரமாயுள்ள வேதத்தின் மந்திரபாகத்தினை, பரமேஸ்வரன் பிரத்தியக்ஷமாயெழுந்தருளி வந்ததுபோன்று கொள்ளுவர்.

வேதபாஹ்ய பாசுபத தாந்திரிக துவித சைவ துர்வாதியாகிய நம் நண்பரோ, "வட்டிக்காசைப்பட்டு முதலிழந்தான் கதை"போன்று, தமது ஆகமத்திற்கு முக்கிய மூலமாயுள்ள வேதத்தினைப் பிரமாணமாகக்கொள்ளாது முதலிழந்தவன் போலாயினர். அவ்வேதத்தின் வழிநூலாய ஸ்மிருதிபுராணம் இதிகாசம் ஆகமங்களை நிராதாரமாய்ப் பரமப்பிரமாணமாகக்கொண்டு, வட்டிக்காசைப்பட்டவன் போன்றுமாயினர். இம்மட்டோ நம்மன்பர் கலம் வைக்குமிடமெல்லாங் கலாம். விளையும்படியான கருத்துடனே வைப்பர். இஃதிவரதியற்கைக்குணமேயாகும். அதை நிவிர்த்திக்க பரமேஸ்வரன் மான் மழு நீலகண்ட திரிநேத்திர சதுர்ப்புஜனாய் எழுந்தருளி வந்து இதமொழிகளாலுபதேசிக்கினும் முடியாதாயின், மற்று யாவரே மையல்கொண்டவைய புத்தியினை நிவிர்த்திக்கவல்லார். "இடம்பட மெய்ஞ்ஞானங் கற்பினுமென்றும், அடங்காதார் சென்று மடங்கார்" என்னும் நாலடிக்கு இவரே யிலக்காயினர். நிற்க,

நாம் எழுதும் இடங்களோறும், எவ்வகைச் செய்யுளுக்கும் 'சுருதி சுருதி' என்று முடங்கொதித்து, 'வாகீசசுருதி' 'மணிவாசகசுருதி' 'ஞானசம்பந்தசுருதி' 'சுந்தரசுருதி' 'பட்டணத்தார்சுருதி' 'உமாபதிசுருதி' 'திருவிளையாடற்சுருதி' 'பெரியபுராணச்சுருதி' சிவஞானசித்திச்சுருதி' 'திருமந்திரச்சுருதி' 'திருவாசகசுருதி' 'தேவாரச்சுருதி' 'கந்தப்புராணச்சுருதி' 'பொய்யாமொழிச்சுருதி' என்பனவாகப் பலவாறுவெழுதுகின்றனர். சுருதியென்னுஞ் சொற்குப் பொருளுணர்ந்திருப்பாராயின் "எல்லுசெட்டிலக்க எகலக்க" என்று யாவற்றையும் வியாவகாரிகத்தில், அபேதப்பதித்திச் சுருதியென்னும் மகுடத்தால் வழங்கார். தம்மை மூத்ததசையின் கண்ணும் வேறுயிருப்பவரெனப் பாரமார்த்திக பேதத்தினைக் கொள்ளும் இவருக்கு வியவகார காலத்திற்புல திறப்பட்ட நூல்கட்கு, ஒரு திறத்தனவாகச் சுருதியென்னும் பொருடோன்றியது. இவரது தபோவிசேடமேயாம். சுருதி என்னுஞ்

சொற்குப்பொருள், கேட்டற் பம்பணையாக வருதல் என்பதாம். அத்தன்மையது ஒருவராலு மியற்றப்படாதது மெழுதப்படாததுமாய வேதமொன்றற்கே யுரியதாம். அவ்வாறின்றிக் கலியுகமுண்டானதன்பின் பிறந்தவர்களால் செய்யப்பட்ட நூற்கட்குக் கேட்டற் பம்பணையானே வருதலென்று சொல்லுதல் ஒருவாற்றாலும் ஒவ்வாதாம். ஒருவராலியற்றப்பட்ட ஆதியுடைய நூலுக்கு முன்னின்மையாய பிராகபாவம் உளதாகலின் பரம்பணை யென்னும் அநாதித்தன்மை பொருந்தாதாம். பின்னும் முற்கூறினவெல்லாம் சுருதிகளாமேல், ஸ்மிருதி, புராணம், இதிகாசம், ஆகமம், அங்கம், எனப் பலபேதமாகக் கூறுஞ்சொற்களுக்கு இலக்கியப் பொருள்களின்றி யொழிதல் வேண்டும். ஒழியவே, உலகத்தில் சப்தப் பிரபஞ்சத்தாலளவாம் பேதம் ஒழிந்து, எங்ஙனும் அபேதமொன்றே, சேது முதல் ஹிமாசல பரியந்தம் நிலத்து நிலவுறுமென வுணர்வாராக. வேதாந்திகளாய யாமோ, வியவகாரத்திற் பேதமும், பாரமார்த்திகத்தில் அபேதமுங் கூறுகின்றேம். வீணைச்சிரமங்கொண்ட நம் நண்பரோ வியவகாரத்தில் பேதமும், மோகூத்தரையிற் பேதமுங் கூறுகின்றனர். இவரது புத்தி, இவர் முன்னோரின் புத்தியினுங் கூரியதேயாம்.

இதிகாசமு மேற்குறித்தவற்றினையே சுருதி யென வரைந்துவந்தனர். இனி "ஆபஸ்தம்ப காவலர் சுருதி" "அம்பலவாண காவலர் சுருதி" "தில்லை நாத காவலர் சுருதி" "சிதம்பரநாதையர் சுருதி" "சுவாமிநாத பண்டிதர் சுருதி" "இராமநாதச் செட்டியார் சுருதி" "அழகப்பச்செட்டியார் சுருதி" "பரிதிமால் கலைஞன் சுருதி" "பண்டாரச் சுருதி" என்பனவாக எழுதினும் எழுதுவர். சில நூற்களில் தாமியற்றிய நூலைப் பிரமாணமாகக்கொடுக்க நேர்ந்துழி "சொக்கலிங்கச் செட்டியார் சுருதி" "சொக்கலிங்கச் சுருதி" "காளைக்குடி - ராம, சொ, சுருதி" என்றும், ஒருகால் தமது புத்திரன் ஜீவித்திருந்து, அறிவுடையோனாய், சிலவாக்கியங்களெழுதின் அதனை யிவர் பிரமாணமாக எடுத்தாளவாய்ப்புழி, "இராமநாதச் சுருதி" "வாசீச சுருதி" "திருநாவுக்கரசு சுருதி" என்றும் நூல்களிலெழுதினும் எழுதுவர். இவர் மதத்தில் சுருதிபடும் பாட்டை அறிதருணர்வாராக. அவரென் செய்வார் பாவம்! சங்கதோஷத்தான் மனத்திற்றோற்றியதை விரைவிலெழுதுகின்றார். எழுதியவற்றை அச்சிடப்பொருளை விரைவில் யாசிக்கின்றார். யாசித்தபொருளை அச்சாபீஸ் குருவுக்குத் தக்கணையாக வைத்து அச்சியற்றித் தரும்படிப் பிரார்த்தித்துக்கேட்டுக்கொள்ளுகின்றார். அதனினும் புத்தகத்திற்கு மேலே பெயர் கொடுக்கின், அச்சுவாகனைக்குரு அச்சிடாரென்னும் பயத்தினால், வேறு பெயர் கொடுத்து வெளியிடுகின்றனர். வெளியிட்டபின் எதிரிகள் பார்த்து தக்க நியாயப் பிரமாணங்களோடு, கண்டனமெழுதி விடுப்பின், அதனைக் கண்ணுற்று, போலீஸ்காரிடத் தகப்பட்ட திருடன்போன்று விழிக்கின்றார். சும்மாவிருப்பின் இத்தனை யிடர் வராதன்றே! கலகம்

விஸாக்காது சும்மாவிருப்பின் உண்டவுணவு பரிணமி யாதெனக் கருதி யிவ்வாறு செய்துவருகின்றனர்போலும், விரிப்பிற்பெருகும், அமைக.

கொற்றவன்குடி உமாபதி சிவாசாரிய ரென்பவருக்குச் சிட்டுக்கவி யெழுதி, பெற்ருன் சாம்பாலுக்கு மூத்திரிகொடுக்கும்படி ஸ்ரீமந் நடராஜப் பெருமான் செய்தனரென்று கூறுகின்றனர். அப்பரமேசுவரன் எவ்வடி வத்தால் உமாபதி சிவாசாரியருக்குப் பிரத்தியக்ஷமாயினர்! மநுடவடி வத்தாலெனின், மநுடன் இவருக்குச் சிவனின்றிச் சீவனையிருத்தலின், அம்மநுடன் வாக்குப் பிரமாணமாகாதாம். வேறு வடிவத்தால் எனின், அதனைத் தெற்றெனவரைவ தவர்கடன். அங்ஙனம் வரைவதேல் அதனை யுங் கண்டனஞ் செய்தற்குக் காரணங் கலமுமாய் இருக்கின்ருமென் றுணர்க. தில்லை யூவாயிரம் பிராமணருள் ஒருவராய உமாபதி தீக்ஷித ரென்னும் உமாபதி சிவாசாரியர், சமஸ்கிருதஞான மூடையவராயிருக்க, சர்வஜ்ஞரான பரமேஸ்வரன், சமஸ்கிருத பாஷையில் சுலோக ரூபமாக எழுதியனுப்பலாமே. அவ்வாறின்மையின், அக்கூற்று இவரினத்தவ ருள் தொன்றுதொட்டுவரும் வழக்கேயன்றி வேறு விசேடமின்றென்க. அவ்வுமாபதி சிவாசாரியர் " தாம் பிரமங் கண்டவர்போற் றம்மைக்கண் டாங்கதுவே—நாம் பிரமமென்பவர்பா ணண்ணுதே " என்று கூறியிருக் கின்றனர் என்றும் " இக்காலத்திற் சிலர் இதே நிலையரா யிருந்தும், நாங் கள் மாயாவாதிகளல்ல, வேதாந்திகளென்று சொல்லிக் கொள்ளுகிறார் கள். அது காராட்டை வெள்ளாடென்பதுபோன்ற போலி வழக்கமே" என்றும் வரைந்தனர்.

உமாபதி சிவாசாரியர், பரமேஸ்வர அவதாரபூத ஸ்ரீமந் மகாதேவமா நுஷ அநுக்கிரக லீலா விக்கிரகமாகிய ஜகத்குரு சங்கராசாரிய சுவாமி களின் பிரபாவம் உணர்தற்குமுன், அவைதிகர்களின் கூட்டுறவால் மரு ண்டு முற்கூறிய செய்யுட்கூறியிருக்கலாம். அவ்வாறு கொள்ளாதொழி யில் பௌஷ்கராகமத்தில் பதிபடலத்தில் பதினைந்தாவது சுலோகவியாக் யான அவசரத்தில் " உபநிஷத்களின் வியாக்கியானஞ் செய்பவர்களாயும், மஹாஞையும் உள்ள ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளால், சுபாலோப நிஷத்து வாதத்தன்மையால் வியாக்யானஞ் செய்யப்படாமையின் " என்று வைஷ் ணவர்களைக் கண்டித்தற்கு, சிவரகஸியம், நவமாமிசம் பதினைருவதத்தி யாயத்தில் 46 சுலோகங்களாலும், மற்றும் ஆறு புராணங்களாலும், ஈஸ் வர அவதாரமென்று புகழ்ந்து கொண்டாடப்பெற்ற ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளையே, உபநிஷத்களுக்கு வியாக்யானஞ் செய்பவர்களென்றும், அவர்களால் சுபாலோபநிஷத் அநுவாதத்தன்மையால், வியாக்யானஞ் செய்யப்படவில்லை யென்றும் பிரமாணங்காட்டிய, சர்வாத்கிருஷ்ட சம்ஸ்கிருத பாஷையிலுள்ள கெம்பீர வாக்கியங்கட்கு இத்தமிழ் வாக்கி யம் மூரண்படுமாகலின், மூரண்படாவாறு யாங் கூறிய நெறியினையே கடைப்பிடித்தொழுகுக.

இன்னும், வேதாந்திகள் தங்களை வேதாந்திகளென்று சொல்லிக் கொள்வது காராட்டை வெள்ளாடென்று சொல்லும் போலி வழக்க மென்று நாவிற் புழுப்புழுத்து வைதரணிநதி தள்ளுண்டு தாண்டி வை வஸ்வதபுரம் செல்லவேண்டுமென்னுங் கருத்துடனேசெப்பினார்போலும். காராட்டை வெள்ளாடென்று சொல்லுகின்றனரென்றனரே, அக்கூட் டத்திலுள் வெண்மை நிறத்தினையுடைய ஆடிருப்பின் அதனை நம்மண்பர் புதுப்பெயரால் காராடென்று கழறுவர்போலும். வேதாந்திகள் தம்மை வேதாந்திகளென்று கூறுவது, அவர்கட்குரியதேயாகும். அவர்களை மாயாவாதிகளென்று சொல்லுமிவர்தாம், உரித்தல்லாத பேரால் வழங்கு கின்றனர். மாயையை ஜகத்திற்கு முதற் காரணமாகக்கூறும் சாங்கிய மதத்தரும், இவரினத்தவரும் மாயாவாதிகளாவர்களேயன்றி, உலகமெ லாம் பிரஸித்தமாய் யாவருமொப்புக்கொண்ட வேதத்தின் முடிவாய உபநிஷத்களிற் பிரதிபாதிக்கப்படும், நிர்க்குணப் பிரமப்பொருளினையே, தமது சொரூபமாகக்கொள்ளும் வேதாந்திகள் ஓர் காலத்தும் மாயாவாதிய ராகா ராகார். இனம்பற்றி மாயையைக்கூறுபவர் மாயாவாதி யென்று சொல்வீரேல், உமது நூலில் இனம்பற்றி நிர்க்குணப் பிரமத்தினையுங் கூறியிருப்பதிலுல் நீரும் நிர்க்குணப்பிரமவாதியாகி உமாபதி சிவாசாரிய ரது நிந்தாவாக்கியத்திற்கிலக்காகாது, தப்புதற்கு "ஊழிற்பெருவலியாவுள மற்றொன்று, சூழினுந்தான்முந்துறும்" என்றபடி உமது ஊழ்வினை விடாது ஈர்க்குமென்றுணர்வீராக.

அறிவிற் சிறந்தபெரியோரே!

வேறோர் வாதந்தொடுக்கின்றீர். அதனைச் சற்றுக் கவனித்து இவரது கற்றறிவுடைத் தன்மைக் கிரங்குவீராக. "வேதமுடிவாய உப நிடதங்களெல்லாம் பதிபசுபாசங்கள் அநாதி நித்தியங்களென்றே கூறுகின்றன" என்றும், "சில உபநிடதங்கள் சிவன் ஈஸ்வரன் ஜகத்தெல்லாம் பொய் என்று கூறுகின்றன என்று அவர்கள் கூறு கின்றார்க"ளென்றும், "அவ்வுபநிடதங்கள் சிலவே" யென்றும், "பொய்யென்று கூறுவதும் கருத்து வேறே" என்றும் கருதியவா றெல்லாங் கலந்தொடுத்துக் கறைமிடற்றண்ணலது கடாக்ஷவீக்ஷண் ணியத்திற் கருகராகா தவலமாய் அதோகதியடைய ஆரவாரஞ் செய்கின் றனர். முன்னர் "உபநிடதங்களெல்லாம் பதிபசுபாசம் அநாதி நித்தியங்க ளென்றே கூறுகின்றன" என்றீர். பின்னர், "சிலவுபநிடதங்கள் பதிபசு பாசங்கள் பொய்யென்று கூறுகின்றன" என்றீர். இவ்விஷயத்தில் இவரது விஞ்ஞானமயகோசத்தின் விஹீனத்தன்மை வெள்ளிடைமலை போல் வெளியாயிற்று. எல்லாவுபநிடதங்கள் என்னுஞ் சொல்லின்கண், சிலவுபநிடதங்க ளென்னுஞ் சொல் அடங்கியிருக்கின்றதென்பதைச் சாவ தானமாயுணர்ந்திருப்பாராயின், பிறர் கடாவுதற்குரிய "எல்லாம்" என் னுஞ்சொல்லை யுபயோகிக்காது "அநேகம்" என்னுஞ்சொல்லை யுபயோகித் திருப்பர். "அவசரக்காரனுக்குப் புத்திமட்டு"

என்ற வாக்கின்படி சாவதானமனமிலர்க்கு ஒன்றுந்தோற்றுதென்றுணர்க. எல்லா வபநிடதங்களிலும், பதிபசுபாசங்கள் அநாதிநித்தியங்களென்று கூறியிருக்கின்றன என்று பிரமாணங்களொன்றுங் காட்டாது, தமது வாக்கியத்தினையே, பிரமாணமாக வொப்புவரென்று கருதி குளறுபடை செய்தனர்போலும். உபநிஷத்துக்களைத் தக்க ஆசாரியர் வாயிலாகக் கேட்பதற்கு ''இளமையிற்கல்'' என்னும் ஔவை மூதாட்டியின் வாக்கின்படி, இளமைப்பருவம் வேண்டும். நம் நண்பர், அற்பப்புண்ணியத்தாற் பாண்டிநாட்டிற் பிறந்திருப்பினும், ஆகூழ்வலியின்றிப் போகூழ்வலியின் மிகுதியினால், ஈழநாட்டார் கூட்டுறவுற்று, நற்கல்வி கற்காது, இளமைப்பருவமனைத்தினையும் ''விழலுக்கிறைத்த நீர்போல'' வீணுக்கிவிட்டனர். அங்ஙனம் சம்ஸ்கிருதபாஷையின் ஞானமின்றிய நண்பர், உபநிடதங்களெல்லாவற்றினையும் எங்ஙனம் ஆராய்ந்தனர்? உபநிடதங்களை யாராய்வதற்கு தர்க்கம், வியாகரணம், பூர்வமீமாஞ்சை, சாங்கியம், யோகம், ஸ்மிருதி, முதலிய சாஸ்திர ஞானங்களின் சாதனம் வேண்டும். அவற்றினைக் குருவையடைந்து அப்யஸித்தற்கு, உத்தம அதிகாரியாய புருஷனுக்குப் பதினைந்தாண்டுகள் செல்லும். அவ்வாறு அப்பியாசஞ்செய்யாது, ஆரிய பாஷையின் வாஸனையுமின்றிய நம் நண்பருக்கு உபநிஷத்துக்களெல்லாம் பதிபசுபாசங்கள் அநாதி நித்தியங்களெனக் கூறுகின்றன என்று, குஜிலிக்கடையில் அச்சிட்டிருக்குங் காத்தவராயன் பாட்டுப்போன்று, பொருள் விண்டது, எந்தக்குருமூர்த்தியின் பாதசேவையின் விசேஷத்தாலோ யாமறிகிலேம். எவ்வாறாயினும், அரிதிற்கிடைக்கும்படியான ஆரிய பாஷைச் சொற்களின் ஞானமின்றியே, அதிசுலபமாய், உபநிஷத்துக்களின் பொருள் விண்டது பூர்வசென்மத்திற்செய்த புண்ணிய புஞ்சபாகத்தினாலே யாமென்பது, முன்பின் முரணுற வெழுதும் வியாஜவாயிலாயுணரலாம். தமக்கு உபநிஷத்துக்களின் பொருளையறியும் ஆற்றலின்றென்பதை ''இவ்விருவகை வேதாந்தங்களில் கொள்ளத்தக்கன எவை என்பது சிறுவருக்கும் விளக்கமாகும். விரிப்பானேன்'' என்று அறிவித்திருக்கின்றனர். உபநிஷத்துக்களில் கொள்ளத்தக்கன இவை தள்ளத்தக்கன வவை யென்பது சிறுவருக்கு விளக்கமாகுமென்றார். இவர் சொல்லிய சிறுவர் அறிவான் முதிர்ந்தோரும், வயதாற் சிறியவருமாய பக்குவிகட்கு விளங்குமேயன்றி, அறிவாற் சிறியோரும், வயதான் முதியோருமாய, நம் நண்பருக்கும், நண்பர் மதத்தினர்க்கும் விளங்காதென்பதை ''என்னைப்பன் குதிரினுள் இலன்'' என்னும் வாக்கியமானத், தாமே விளக்கினர். தம்மனச்சாக்ஷிக்கு விரோதமின்றிக் கூறினராகலின் உபநிஷத்துக்களின் பொருள் விள்ளா தொழியவே இவர் மதத்தினர்கள் அந்தபரம்பரா ந்யாயமாகக் கூறிவரும் பொய்ம்மொழிகளை மெய்ம்மொழி யென மருண்டு, ''மருண்டவன் கண்ணுக்கிருண்டதெல்லாம் பேய்'' என்னும் வழக்கின்படி கைகூசாது கலமெடுத்து, மனங்கூசாது நினைந்து வரைந்தனர். இதுகாறும்

பேசியவற்றுல், உபநிஷத்துக்களைப் பகுக்குமாற்றல் இவர் மதத்தினர்க் கின்றென்பது தெற்றென வெளியாம். வேதங்களில் தள்ளத்தக்கன வென்றுங் கொள்ளத்தக்கனவென்றும், இருபகுப்புண்டென்கின்றூர். அதுபோன்றே தேவாரத்திலும், திருவாசகத்திலும், திருமந்திரத்திலும், சிவஞானபோதத்திலும், திருவிளையாடற்புராணத்திலும், கந்தபுராணத்திலும், பெரியபுராணத்திலும், வேதபாஷியமாகிய ஆகமங்களிலும், தள்ளத்தக்கனவென்றுங் கொள்ளத்தக்கன என்றும் இருபகுப்புண்டாம். உண்டாகவே, இன்னவை கொள்ளத்தக்கனவென்றும், இன்னவை தள்ளத்தக்கனவென்றும், அந்நூற்களை யாராய்ந்து முறையாக அச்சிட்டு வெளியிடுதலவர் கடனும்.

"அர்த்தசாஸ்திர நியாயம்" போன்று சிலவற்றைத் தள்ளுவதற்கு, உபநிஷத்துக்கள் செய்வானேன்? தள்ளுதலென்றுல் ஒருவருக்கும் பயனற்றதென்று பொருளாம். ஒருவருக்கும் பயனற்ற வொரு பகுதியாயனூலைச்செய்வானேன்? அதுபோன்று தள்ளத்தக்க வொருவருக்கும் பயனற்ற ஆகமப்பகுதிகளைச்செய்த ஈஸ்வரன் எப்பயன் குறித்துச்செய்தனரோ? அதுபோன்றே நால்வரும், திருமூலநாயனூர், பரஞ்சோதி முனிவர் முதலியோரும், வீண்சிரமப்பட்டு, ஒருவரும் படித்தற்குத் தகுதியற்ற பகுதியாய செய்யுட்களை யெப்பயன் கொண்டு செய்தனர்? அவ்வாறு தள்ளத்தக்க செய்யுட்களை, சிவ சன்னிதானத்திற்படிக்கும் பண்டாரங்கள், எவ்வகைதாகதியை யுறுவரோ? அவ்வாறே, நம் நண்பரியற்றிய "வீரசேகரமணிமாலை" என்னும் நூலினும் கொள்ளத்தக்கதும் தள்ளத்தக்கதுமாய, இருபாற்பட்ட செய்யுட்களுளவாமே. அவற்றுள் தள்ளத்தக்கன் பாற்படுஞ் செய்யுட்களை, மிகப்பிரயாசையோடியற்றித் திரவியத்தைச் செலவு செய்து, அச்சிட்டு வெளியிட்டனர். அஃதெப்பயன் கருதியோ? அதனைப்படித்தலா லெப்பாவமுளதாமோ? அறிகிலேம்.

இதனுல் ஒரு சாஸ்திரத்தினுள் தள்ளத்தக்கதென்றொரு பகுதியின்றென்று நாட்டியதாம். சோபானமுறையாக சகுணநிர்க்குணப் பிரமங்களைப் பிரதிபாதிப்பனவே யன்றி, நம் நண்பர் கூற்றின்படி தள்ளத்தக்கனவென்றொரு பாகத்தைப் பிரதிபாதிப்பனவன்று. உபநிஷத்துக்களையெல்லாம் எழுத்தெண்ணிப் படித்தவர்போன்று, "ஈசாவஸ்யம், கேனம், கடவல்லி, மூண்டகம், பிருகதாரண்யம், கைவல்யம், சுவேதாஸ்வதரம், ஜாபாலம், பிருஹத்ஜாபாலம் என்பனவாதியாயுள்ள பேர்களைப் படாடோபமாக எழுதிவிடுகின்றனர். முற்புகன்ற உபநிஷத்துக்களை, எக்குருவாயிலாகப்படித்தனர்? படிக்காதிருக்கும்போழ்தே யித்தனைப்புரட்டுப் புரட்டு நண்பர், அற்பமேனும் ஆரியங்கற்றிருப்பாராயின், வாதங்களெழுதி யச்சிடுவதற்குப் புதிய அச்சாபீஸ்கள் திறக்கவேண்டிவரும். "உடையவன் குதிரையின் குணத்தினையறிந்து கோடுகொக்கவில்லை" என்னும் பழமொழிப்படி, பரமேஸ்வரன் நண்பர் குணத்தினை யுணர்ந்து ஆரியவித்தையின் ஞானமின்றி யறவே யழித்தனர்.

"பதிபசுபாசங்கள் அநாதி நித்தியங்கள்" என்றார். பாசம் எங்ஙனம் நித்தியமாம்? முன்னர்க்காண்பித்த திருவிளையாடற் செய்யுளாலும் "எந்தைதன், திருவளர்கோட்டங் கருணையிற்பெறலும் - யாவையுமெனக்குப் பொய்யெனத்தோன்றி - மேவருமீயே மெய்யெனத்தோன்றினை— ஓவியப்புலவன் சாயல்பெறவெழுதிய—சிற்பவிகற்ப மெல்லாமொன்றிற் றவிராதுதடவினர் தமக்குச்—சுவராய்த்தோன்றுந் துணிவுபோன்றன வே" என்ற பட்டினத்துப்பிள்ளையார் திருக்கழுமல மும்மணிக்கோவை யாலும்

சந்தானகுரவர்.

"இல்லே யெலுமா யையிலிட் டனைநீ
பொல்லே னறியாமை பொறுத் தினலேயே
மல்லே புரிபன் னிருவாக்குவி லென்
சொல்லே புனையுஞ் சுடர்வே லவனே".

சிவானந்தமாலை.

"எங்குஞ் சிவமொழிய வில்லையவன் றன்னுணை
அங்கந் திரள்கருவி யாணவமாம்—பொங்குமிருள்
மைசெய்த மாமாயை மாயைவினை மற்றனைத்தும்
பொய் பொய் பொய் பொய் பொய் பொய் பொய்."

காசிகாண்டம்.

கானலிடைத் தெண்ணீரும் கயிற்றினில்லா ளரவுமலை கடலிற்பட்ட, கூன்முதுகிப் பிறற்றேரன்றும் வெள்ளியுமம் மூதலுண்மை குறிக்கிற்றீரும், ஆனவைபோ னினையறியிற் றேரன்றுசக மனத்துநில்லா தழியுமாற்றால், தேனவிழ்பூங் கதிக்கையணி செல்வனின தறைகழற்றாள் சென்னி சேர்ப்பாம்.

திருவாசகம்.

"மாயப்பிறப்பறுக்கு மன்னனடிபோற்றி",
"பொய்யாயின வெல்லாம் போயகலவந்தருளி",
"இந்திரனூலங்காட்டிய வியல்பும்",
"இந்திரனூலம் போலவந்தருளி",
"இருமுச்சமயத் தொருபேய்த் தேரினை",
"பூத்தாரும் பொய்கைப் புனலிதுவே யெனக்கருதிப்
பேய்த்தேர் முகக்குறும்பேதை குணமாகாமே—தீர்த்தாய்",
"மாயவாழ்க்கையை மெய்யென்றெண்ணி மத்திடாவகை நல்கி
"இந்திரனூலவிடர்ப்பிறவித்துயரோகுவதாகாதே", [னை",
"பொய்யாய செல்வத்தே",
"சுந்தரவேடத் தொருமுதலுருவுகொண்
டிந்திரனூலம் போலவந்தருளி",

(உருவுகொண்டு வந்தது இந்திராஜாலமாகவின் உண்மையன்றென் பதாம்.)

திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம்.

"பொய்ம்மாயப் பெருங்கடலிற் புலம்பாநின்ற புண்ணியங்காள் தீவினைகாள் திருவே நீங்கள், இம்மாயப் பெருங்கடலே"

"பொய்யிலுல் மிடைந்தபோர்வை"
"பொய்விராமேனி தன்னைப் பொருளெனக் காலம்போக்கி"

திருமந்திரம்—பாவத்தை.

"ஆயும்பொய்ம் மாயை யகம்புற மாய்கிற்கும்"
"பொய்கண்ட மாமாயை"

பட்டினத்துப் பிள்ளையார்.

"மையாடு கண்ணியு மைந்தரும் வாழ்வு மனையுஞ்செந்தீ
ஐயாநின் மாயை யுருவெளித் தோற்ற மகிலத்துள்ளே
மெய்யா யிருந்தது நாட்செல நாட்செல வேட்டவெறும்
பொய்யாயப் பழங்கதை யாயிற்கண வாய்மெல்லப் போனதுவே"

சிவஞான வள்ளலார்.

"ஒன்று யுலகனைத்து மானுயென் றப்பமுனி
பொன்று மொழியாற் புகன்றிருக்கக்—குன்று
முத்தியினு மும்முதலு முண்டென் றுரைத்தலெவன்
பித்தமுறுஞ் சைவாநீ பேசு"

"ஓசை யொலியெல்லா மானுய்நீ யென்றபினர்ப்
பேசி வரண்டுண்டோ பேய்சீசைவா—ஆசையெல்லாம்
அற்றவிட முத்தி நிலையோ வஃதெல்லாம்
உற்றவிட முத்திநிலை யோ"

வடி. அந்துவிதக் கலிவெண்பா.

"ஈசன்வே றியான்வேறென் றெண்ணுகின்ற பாதகரை
நீசரெனக் கண்டு நினையென்று—மைசையோதம்
வேத முடிவறிந்த வேதியரைக் கூடென்றுன்
பேதநிலை யெல்லாம் பிரியென்றுன்"

திருவிளையாடற் புராணம்—பரிநரியாக்கிய படலம்.

"அத்தவோ கல்லாக் கடையேனை யாட்கொண்ட
பித்தவோ பொய்யுலகை மெய்யாகப் பேதிக்குஞ்
சித்தவோ சித்தந் தெளிவித் தெனைத்தந்த
முத்தவோ மோன மயமான மூர்த்தியவோ."

என்பனவாதி பற்பல பிரமாணங்களாலும் பாசம் அநித்தியமென்று தெளிவாய் விளங்கவும், அதனை யுணராது, துவைதமலத் தடிப்பேறி வாய்கூசாது பாசம் நித்தியம் நித்தியமென்று பறையறைகின்றார். இனி யாயினும் இப்பிரமாணங்களை யுணர்ந் தடங்குவாராக.

இனியோர் வாதந் தொடுக்கின்றார். அதனாலும் இவரதறிவின் றன்மை யிவ்வளவென வெளியாம். "சில வுபநிடதங்கள் பொய்யென்று கூறுவதுங் கருத்து வேறு. பிரயோஜனமில்லாத பிரபஞ்சாதிகளையே யிறுகப்பற்றி நிற்குஞ் சீவர்கள், அப்பற்றுமுழுது நீங்கிச் சிவத்தையே பற்றி நின்றுய்தற்காகவேயன்றி வேறில்லை. சில வுபநிடதங்கள் காரணம்பற்றிப் பொய்யென்பதையே நிச்சயமாக்கொண்டு, எல்லாம் பொய்யே பிரமமொன்றே மெய், நாமே அப்பிரமமென்று கூறிப் பிரமசொத்தைத் திருட நினைத்துச் சிவத்துரோகமே கொண்டலையாமல்" என்று வரைந்தனர்.

பிரபஞ்சத்தைப் பொய்யென்று சொல்லியது காரணம் பற்றி யென்கின்றார். அக்காரணம் யாது ? அதனை விரிப்பாராக. "பிரயோஜனமில்லாத பிரபஞ்சாதிகளை யிறுகப்பற்றி நிற்குஞ் சீவர்கள்" என்றார். பிரபஞ்சம் குரு ரூபமாயும் சாஸ்திர ரூபமாயும் இருந்து, மோக்ஷத்தைக் கொடுத்தற்குச் சாதனமாயிருக்க, அதனைப் பிரயோஜனமற்ற தென்கின்றார். மயலாகவாவது, பிரயோஜனமுடையதாகக் கருதி யொருவன் பற்றுவனேயன்றிப் பிரயோஜனமற்றதெனக் கருதிப் பற்றான். நம்மன்பர் கொள்கைப்படி, பாரமார்த்தப் பிரயோஜனமுடையதாயும், நங்கொள்கைப்படி வியாவகாரிகப் பிரயோஜனமுடையதாயுமுள்ள, பிரபஞ்சத்தினைப் பிரயோஜனமற்றதென "ஆய்ந்தோய்ந்து பாராதான் தான் சாகக் கடவன்" என்னும் பழமொழிப்படி, அவசரப் புத்தியாலெழுதி யவதிப்பட்டனர். இவர் கொள்கைப்படி சத்தியமாகவுள்ள பாசரூபமான பிரபஞ்சத்தினை, பொய்யென்று வேதாகமங்கள் கூறுமாயின், பொய்புகலும் அவ்வேதாகமங்களை யாவர் பிரமாணமாக வொப்புவர் ! ஒப்பார். ஒப்பாராகவே, அவற்றினை யியற்றிய பரமேஸ்வரனும் பொய்யராவர். பொய்யராகவே, அவர் கூறிய வாக்கியம் பிரமாணமாகாவாம். ஆப்த வாக்கியத்தினையே யுலகத்திலுள்ளார் பிரமாணமாகக்கொள்வர். ஆப்தன் உண்மையுரைப்போன். பரமேஸ்வரரானவர், உண்மையாய பிரபஞ்சத்தினை வேதாகமங்களிற் பொய்யெனப் புகன்றமையின், ஆப்தராகார். ஆகாதொழியவே அவரியற்றிய நூல்களும் பிரமாணமிலவாய், மனிதர்கள் விதிவிலக்குகளையறிந்துதுட்டித்து நற்கதியடைய உண்மை நூலொன்றின்மையின் உலகத்தில், நாஸ்திகமே தலைப்பட்டு, யாவரும் அதோகதியடைவரெனவறிக.

இன்னும், "வேறு கருத்துப்பற்றி வேறு கருத்துப்பற்றி," என்று பறையறைகின்றார். அக்கருத்தைத் தில்லை மூவாயிரவருள் சிலரைப்

பலவாறுகத் தூஷித்து மாறு கைச்சாத்திட்டு, “ மதேஷ்வரஞ்சனி ” யென் னும் மாதாந்தப்பத்திரிகை வாயிலாய் வெளியிட்ட, நம் கண்பருக்கு, அத் தில்லை மூவாயிரவராற் பூஜிக்கப்படும் பூரீமன்-நடராஜப்பெருந்தகையார், மணிவாசகப் பெருந்தகைக்கு உபதேசிக்க எழுந்தருளிவந்தாங்கு, காரைமா நகர் அறுபத்துமூவர் மடத்துக்கெழுந்தருளிவந்து, அர்த்தயாமத்தில், காட சூழ்த்திசமயத்து அதிரகஸியமாக வுபதேசித்தனரா? இன்றேல், வேறு கருத்துப்பற்றிய அப்பிரஸித்த ஆபாசச்சுவடிக ளேதேனும் வைத்திருக் கின்றனரா? இன்றேல், “பொக்கைவாயன் பொரிமாவை மெச்சினது போன்று” தமது காரியம் பலித்து விடுமென, ஒரு குருட்டு யோசனை செய்து, பொய்யென்றதொரு கருத்தைப்பற்றி யென்று இவரும், இவர் மதத்தினரும் தொன்றுதொட்டு ஊளோயிட்டுவருகின்றனர். ஒருசாஸ்தி ரத்தின் பொருளை முன்பின் முரணின்றியாராய விரும்பின், உபக்கிரமம், உபசம்ஹாரம், அப்யாஸம், அபூர்வதை, பலம், அர்த்தவாதம், உபபத்தி என்னும் ஆறுவகை இலிங்கத்தினால் விரோதமின்றி யுணரலாமலது, ஒரு கருத்துப்பற்றியதென்னும் வெற்றுரையாற் பலியாதென அமைவாராக. ‘பிரமச்சொத்தைத் திருட நினைத்துச் சிவத் துரோகங்கொண்டலையாமல்’ என்றார். திருட்டுத்தொழில் இவர்மதத்தினர்க்கேயன்றி, எம்மவர்க்கின்றும். யாங்கள் பிரமாணமாகக்கொண்ட வேதமுதலியநூல்கள், எம்மவரதுசொரூ பங்கள் சிவசொரூபங்களேயெனப் பிரதிபாதித்தலின், நாம் சிவமென்றும், நாம் பிரமமென்றுஞ் சொல்லுவது, எங்கட்குரிய சொத்தினையே கூறுவ தாம். நம்மன்பருக்கு, ஒருவாறு பிரமாணமாயுள்ள, தேவாரம், திருவாச கம், திருமந்திரம் முதலிய நூல்களும், ஜீவனை முத்திதசையில் சிவ சொரூபமென்று பிரதிபாதித்தலின், யாங்கொண்ட சிவத்துவந் திருட் டென்றும். “ கள்ளனுக்கோதுந் திருட்டுப் புத்தி ” என்பதுபோன்று, பிறர் நூலிலுள்ள விஷயங்களைத் திருடுவதும், பரமேசுரனுக்குரிய குணங்கள் முத்தி தசையிலுந் தனக்கில்லாதிருந்தும் இருப்பதாகப் பாவித் தலுமாய, திருட்டுத்தொழில் இவர் மதத்தினர்க்கேயன்றி, யெம்மவருக் கின்றும். செட்டியார் ஆழமறியாது காலைவிட்டுக்கொண்டு விழிக்கின் றார். உபநிஷத் விஷயமாகச் சிறுவர் பொருளை யுணர்வரென் றெழுதி விட்டு, “ விரிப்பானேன் ” என்றார். உபநிஷத்தைத் தாம் படித்திருந் தாலன்றே அதன்பொருளை விரிப்பார். படியாமையால் என் விரிப்பா னென்று அமைதியடைந்தனர்போலும். சற்று விரித்திருப்பாராயின், நடுத்தெருவிலிழுத்துவிட்டு, நான்கு பெயர் பார்த்து நகைக்கும்படியாகச் செய்திருப்போம். இது கருதியோ நண்பர் இவ்விஷயத்தில் விழிப்பா யிருந்து “ விரிப்பானேன் ” என்று மிக லேசாகச்சொல்லித் தப்பித்துக் கொண்டனர். இவ்விஷயத்திற் செட்டியார் செய்த சூழ்ச்சி வியக்கற்பால தேயாம். இவ்விடத்து கரத்தாற் கலமிடுங்கால், சொற்பப் புண்ணிய விசேடத்தால் சுருக்கி வரைந்தனர். விரித்திருப்பாராயின், காரைமா

நகர் கொப்புடையம்மன் சன்னிதானத்திலாவது, அல்லது நம் நண்பர் வசிக்கும் மடச் சமீபமாயுள்ள சிவன் கோவிலிலாவது பலரறியச் சபை கூடி, பாண்டித்தியத்தினையும், நண்பரது சரித்திரத்தினையும், பலருமறியப் பரவச் செய்திருப்பேம். இதனை யுணர்ந்தே, முன் யோசனையால் " விரிப்பானேன் " என்று சுருக்கினர்.

நம் நண்பரது ஊழ்வினையானது சும்மாவிருக்கவிடாது, நடத்தெருவிலீர்த்து வந்துவிடுகின்றது. அவரென்செய்வார் பாவம். " அச்சுரர்களானும் விலக்குதற்கரியவாகும்" என்று கூறியிருத்தலின், போகூழ் வினையினைக் கடக்கவல்லார் யாவருளர் ? ஒருவருமிலர். இலர். பாருங்கள். கவனித்துக் கேளுங்கள். சற்றுநிதானித்து யோசனை செய்யுங்கள். " ஒரு பற்றையேனும் விட்டு விலகாமல் உண்டுடுத்தி யுறங்கிக் களித்து, சிறிது நோய் வந்தால் வருந்தி வைத்தியாதிகள் மிகுந்த பரபரப்புடன்செய்து, இதற்கிடையிலே சில நூலாராய்ச்சிகளுஞ்செய்து, அதுவும் தங்கள் கருத்துக்கிணங்கவே திரித்துப் பொருள்கொண்டு, இறுமாந்து திரிகின்றவர்கள் கதியைப் பற்றி நாம் சொல்வானேன். அவர்களிருக்கும் ஊரிலும் செல்லப்படாதுபோலும் " என்று தம் இழிகுணத்தை யறிவிக்கும் வாயிலாய்ப் பொறித்தனர். இது கோவிலூரைப் பற்றிய நிந்தையாம்.

" ஒரு பற்றேனும் விட்டு விலகாமல் " என்றார். பற்றென்ப தின்னதென்றுணரு மறிவிலியாய் இவரும், இவர் மதத்தினரும் எப்பற்றை விட்டிருக்கின்றனர். சிவாலயப்பணி செய்தல் பற்றென் றுணர்ந்தனரா ? மோக்ஷ இச்சையுடைய சாதுக்களுக்கு ஊண் உடை உறையுள் கொடுத்து உதவிபுரிதலைப் பற்றென்றுணர்ந்தனரா ? இவ்விரண்டினையும் பற்றென்பரேல், இவர் மதி அவமதியேயாம். " உண்டு உடுத்து உறங்கிக் களித்து" என்றார். இவர் மதத்தினர், அன்றுருக்கிய நெய் தவிர வேறுவித நெய் சம்பந்தமா யுண்கிலர். உடுத்துவது திருநாகேஸ்வரத்தில், 100-ம் நெம்பர் நூலில் சுவர்ணநூற்கலந்த துப்பட்டாக்கள் உடுத்துவதேயன்றி வேறின்றும். உறங்குவதனையோயாம் எண்டு எழுதத்தகும் தாமன்றும். இவ்வாறுய மதக்கோட்பாட்டுள்ளிருக்கும் இவர்தாமா உண்டுடுத்தியுறங்கிக் களித்தென்றழுதுபவர்? உண்ணுதும் உடுத்தாதும் உறங்காதும், சிவாலயப்பணியும், சாதுக்கள் போஜனசாதகமும் எவ்வாறு செய்தல் கூடும் ? நம் நண்பர் உண்ணுதும் உடுத்தாதும் உறங்காதும் இருப்பதிலுலல்லவா எச்சிற்கையினாலும் காக்காய் விரட்டாதிருக்கின்றனர்? " களித்து " என்றார். களித்தல், சிவகைங்கரியம், சாதுக்கள் கைங்கரியம் செய்பவர்களுக்குப் பிரமானந்த மேலீட்டிலால் உளவாயுரியதேயாம். அவ்விரு கைங்கரியமும் மின்றிய இவருக்கும் இவரினத்தவர்க்கும் விஷயானந்தக் களிப்பேயன்றி வேறு களிப்பேயின்றும். எமது குருமூர்த்தியாய ஸ்ரீலஸ்ரீ வீரசேகர ஞானதேசிகப் பெருந்தகையார், மணிவாசகப் பெருந்தகையாரோடொப்ப, பதி

ஞயிரம் ஜனங்களின் மத்தியில் பரப்பிரம தேஜோரூபத்தினை யடைந் தார்க ளென்பதனைக் கண்கூடாகக் கண்டிருந்தும், "ஒரு பற்றேறலும்விட்டு விலகாமல்" என்று பெரும் பழியைத் தம்மீது சுமத்திக்கொண்டார். கோவிலூர்ப் பரம்பரையுண்டாய காலமுதல் இதுவரைப் பற்றுவிடாதார் யாவருளர்? ஒருவருமிலர். இலர். "சிறிது நோய்வந்தால் வயித்தியாதி கள் மிகுந்த பரபரப்புடன் செய்து" என்றார். நோய்வரின் வைத்தியஞ் செய்வது ஞானத்திற் கிழுக்கென்றுணர்ந்தனர் போலும். ஸ்தூலசரீர சம்பந்தமாய்ப் பிராரத்த கருமத்தால்வரும் வியாதிக்கும், அந்தக்காணத் தின் அகண்டாகார விருத்தியிலுண்டாம் பிரமஞானத்திற்கும், எச்சம் பந்தமுளதெனக் கருதி வைத்தியஞ் செய்தல் பொருந்தாதென்றுணர்ந்த னர். பிரமஞானியாயிருந்த ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள், சம்பந்தமூர்த்தி சுவாமிகள், மாணிக்கவாசக சுவாமிகள், பட்டினத்து சுவாமிகள், ஸ்ரீதிரு மூலநாயனார் முதலியோர்கள், மநுஷ சரீரத்தோடுகூடிச் சீவித்திருக்குங் காலத்து, உண்டு உடுத்தி யுறங்கிப் பிரமானந்தக் களிப்புற்று நோய்வரின் சிகிக்சை முதலியன செய்து வாழ்ந்தனரென்றே சரித்திரவாயிலாகயாம் உணருகின்றோம். நம்நண்பர்கூறும் சிவஞானியாய உமாபதி சிவாசாரியர், நமச்சிவாய தேசிகர், சிவஞானசுவாமிகள், ஆறுமுகநாவலர் முதலியோர் கள், ஜீவித்திருக்குங் காலத்து, உண்ணுதும், உடுத்தாதும், உறங்காதும், சிவானந்தமின்மையாற் களிப்புறுதும், நோய்வரின் வயித்தியஞ் செய்யா தும் இருந்தனர்போலும். இவ்வாறவர்களது சரித்திரத்திடத் தின்மை யின், புதிய பொய்ச்சரித்திரம் ஒன்றெழுதி யச்சிடலும் அச்சிடுவர் நம் நண்பர். நிற்க, "இதற்கிடையிலே சில நூலாராய்ச்சிகளுஞ் செய்து, அதுவுந் தங்கருத்துக் கிணங்கத் திரித்துப் பொருள்கொண்டு" என் றார்.

"இதற்கிடையில்" என்றதனால் நம் நண்பர் உண்டு உடுத்தி உறங் குங் காலத்தும் நூலாராய்ச்சி செய்வர்போலும். "சில நூலாராய்ச்சிக ளுஞ் செய்து" என்றார். சில நூல் என்பது ஒன்றா? இரண்டா? பலவா? அங்ஙனம் ஆராய்ச்சிசெய்தநூல் இவ்வளவென இவரிடத்துக் கணக்கிருப்பின், முறையே யச்சிட்டு விடலாமே? அவ்வாறு செய்யாது அஞ்சுவானேன்? சில நூலாராய்ச்சி யென்றதனானே தாம் பல நூலா ராய்ச்சி யுடையோரென்பதைக் கூறாது கூறினர். பல நூலாராய்ச்சி செய்திருக்கும் மகா பண்டிதராய இவர் சில நூலாராய்ச்சி செய்தவரது மாணாக்கராய எம்மவரோடு வாதப் போர்புரியவர அஞ்சுவானேன்? அவ் வாறு வாதஞ்செய்ய இஷ்டமாமேல் இவர் வசிக்கும் மடச் சமீபமாயுள்ள சிவாலயத்தில் பண்டித சிகாமணிகளை வரவழைத்துச் சபை ஏற்படுத்திக் கொண்டு, எமக்கு அறிவிப்பின், யாங்கள் வாதப்போர்புரிய வரத் தயாராக இருக்கின்றோமென்றுணர்வாராக. இன்னும் "அதுவுந் தங்கள் கருத் துக் கிணங்கவே திரித்துப் பொருள்கொண்டு" என்றார். இது இவரது

சுபாவ குணம்போலும். இவர் குருமுகமாக ஒரு நூலை யாராயின், அதன்கண் ணுள்ள பொருளைத் திரித்துணர்வது தொன்றுதொட்ட வழக்கமாமென்று, இவ்வாக்கிய முணர்த்துகின்றது. "பிணக்கன்" என்று நன்னூலை துக்கிய, அதிகாரமில்லாத இவருக்கு உபதேசித்த குரவர் சிகாமணியும் புகழத்தக்கவரே யாவர்.

இக்குணம் இவரது மதத்தினருக்கும் தொன்றுதொட்ட வழக்கமாயிருப்பதிலேயே, புராணங்களின் பொருளைத் திரித்துணர்ந்து செய்யுள்களைக் கோறல்செய்து கொலையராயினர். "இலுமாந்து திரிகின்றவர்கள் கதியைப்பற்றி நாம் சொல்வானேன்" என்றனர்.

"எவரேனும் தாமாக விலாடத் திட்ட திருநீருஞ் சாதனமுங் கண்டாலுள்கி, யுவராதே யவரவரைக் கண்ட போதங் குகந்தடிமைத் திறனினாந்திங் குவந்து நோக்கி, யிவர்தேவ ரவர்தேவ ரென்று சொல்லி யிரண்டாட்டா தொழிந்திசன் றிறமேபேணிக், கவராதே தொழுமடியார் நெஞ்சினுள்ளே கன்மூப்பூர் நடித்தறியைக் காண லாமே" என்றும்,

"நின்வர வுணரா வென்னை நெறிகொலோ சபிப்ப தென்ன
மன்னவன் வணங்கிக் கேட்ப மலையமா முனிவன் முக்கண்
முன்னவ னடியார் காணின் முன்புற எழுந்து தாழ்ந்து
பொன்னடி வணங்கார்க் கெல்லாம் புகல்வதிச் சாப மென்றான்"

என்றுங்கூறியுள்ள பிரமாணங்களை யுணர்ந்து சாதுக்களையும் பெரியாரையும் நேரிற்கண்ட அக்கணமே, சேரமான் பெருமாணையனார் போன்று, ஊன் மண்ணுர அஷ்டாங்க நமஸ்காரஞ்செய்து, அவர்களது பாததூளியினைச் சிரசிற்றரித்துக் கொள்வது நம் நண்பர் கடமையாயிருக்க, அதனைச்செய்யா திறுமாப்புற்றிருக்குமிவர் அவர்களை யிறுமாப் புற்றிருக்கின்றனரென்றும், அவர்கள் கதியைப்பற்றி நாம் சொல்வானேன் என்றும் உள்ள பழிமொழிகளைப் பன்னிப்பாவத்துக் காளாகின்றனர். அவர்கள் கதியைச் சொல்லுவதற்கிவர் அருகராவரா? அருகராகாமையினாலே, "சொல்வானேன்" என்று சொல்லித் தம்மீது குற்றமின்றிப் புறம்பே நின்றனர். "அவர்களிருக்கும் ஊரிலும் செல்லப்படாதுபோலும்" என்னார். தம்மிடத்து செல்ல யோக்கியதையிருந்தால், அவர்களிருக்கும் ஊருக்குச் செல்லுவர். அவர்களிருக்கும் ஊருக்குச் செல்லவேண்டுமாயின், நாண் கு சாதனங்களுள் மூதலாவதாயநித்தியா நித்திய வஸ்து விவேகம் வேண்டும். அக்கலமோ நம்மன்பரிடத்துப் பூச்சியமேயாம். சாதுக்களைத் தெய்வமாகப் பாவிக்கவேண்டும். அடக்கம், வணக்கம், நியமந்தவறாது நித்தியப்படி சிவாலயதரிசனம், ஈஸ்வரத்துவேஷமின்றியிருத்தல், நிந்தையின்றியிருத்தல் முதலிய பற்பல நற்குணங்கள் வேண்டும். பூர்வ சன்மத்திற்செய்த புண்ணிய விசேடத்தால், அக்குணங்களுள் ஒன்றேனுமில்லாத இவர், அவர்களிருக்கு மூருக்கு எவ்வாறு செல்லலேலும். எலாதாகவே தாம் வசிக்குமடமே மடமாக வசிப்பாராக. நிற்க,

இன்னும் தமது அறியாமை யொன்றை வெளிப்படுத்துகின்றார். அஃதென்னெனிற் கூறுதும். ஆழ்ந்த கருத்துடன் அறிவீராக. "எல்லாம் பொய்யென்றே போராடுகின்ற இவர்கள், உயிர் நீங்கிய உடம்பை "நார்த்தொடுத் தீர்க்கிலென் கன்றாய்த் தடக்கிலென், பார்த்துழிப் பெய்யிலென், பல்லோர் பழிக்கிலென்" என்று நூல்கள் கூறுவதும், திருவள்ளுவர் முதலிய பெரியோர் காட்டியதுங் கைக்கொள்ளாமல், உயிர் நீங்கிய வுடம்பைப் புதைத்து வைப்பதற்குப் பெருந் தொகை செலவிட்டுக் கோயில்களைச் சிவாலயங்களுக்கும் மேலாகச் செய்வித்தலும், தேவாரத்திருப்பதிகங்கள் பெற்ற சிவஸ்தலங்கள், எத்தனையோ பழுதாகிக்கிடத்தலையெட்டியும் பாராமல், அங்கங்குள்ள சிவாலயங்களுக்கு மேலாய்ப், பூஜாதிகள் செய்துவருதலும் என்னையோ ?" என்றார்.

உயிர் நீங்கியவுடம்பைச் சமாதிவைத்தலும், ஆலயஞ்செய்வித்தலும், பூஜையாதிகள் நடத்திவைத்தலும், அநியாயமென்று வயிற்றெரிச்சல் பட்டு, அவசரப்புத்தியால் மேற்கோள் தமக்குப் பாதகமா? சாதகமா? என்பது முணராது, செய்யுளைத்தீட்டி, (உடை) வேலா விருக்ஷமாகப் பிறத்தற்கு விரும்புகின்றனர். அவர்காட்டிய மேற்கோள், சுவபக்ஷவிகடக பரபக்ஷ ஸ்தாபனத்திற்குரியதாம். அச்செய்யுளின்கண் சமாதிவைத்தல் பொருந்தாதென்பதற்குமாறாய் "நன்றாய்ந்தடக்கில்" (நன்றாக விசாரித்து சமாதிசெய்வதனால்) என்று நமக்கனுகூலமாக இருக்கின்றது.

திருமந்திரம்—சமாதிக்கிரியை.

"அந்தமில் ஞானிதன் னுகந் தியினில்
வெந்திடி னுடலாம் வெப்புந் தியினி
லுந்திடு நாய்நரி நுகரினுண்செரு
வந்துநாய் நரிக்குண வாகும் வையமே". 1910

"எண்ணிலா ஞானி யுடலெரி தாவிடி
லண்ணறங் கோயி லழவிட்ட தாங்கொக்கு
மண்ணின் மழைவிழா வையகம் பஞ்சமா
மெண்ணரு மன்ன ரிழப்பா ரரசே". 1911

"புண்ணிய மாமவர் தம்மைமப் புதைப்பது
கண்ணெரி யனல்போக்கி னிட்டி லழிவாகும்
மண்ணெரி லழியி லலங்காரப் பங்கமாம்
மண்ணுல கெல்லாம் மயங்குமனன் மண்டியே". 1912

"அந்தமில் ஞானிதன் னரனா யடைந்தக்கால்
அந்த வுடல்தான் குகைசெய் திருத்திடில்
சுந்தர மன்னருந் தொல்புவி யுள்ளோருஞ்
அந்தமி லின்ப வருள்பெறு வாரே". 1913

" நவமிகு சாணுலே நல்லாழஞ் செய்து
குவைமிகு சூழலைஞ் சாணுகைக் கோட்டித்
தவமிகு சூகைமுக் கோணமுச் சாணுக்கிப்
பவமறு நற்குகைப் பத்மா சனமே". 1914

" தண்மனை சாலே குளங்கரை யாற்றிடை
நண்மலர்ச் சோலே நகரினற் பூமி
யுண்ணருங் கான முயர்ந்த மலைச்சாரல்
இன்னிலந் தான்குகைக் கெய்து மிடங்களே". 1915

" நற்குகை நால்வட்டம் பஞ்சாங்க பாதமாய்
நிற்கின்ற பாத நவபாத நேர்விழப்
பொற்பம நோசமும் மூன்றுக்கு மூன்றணி
நிற்பவர் தாஞ்செய்யு நேர்மைய தாமே". 1916

" பஞ்ச லோகங்க ணவமணி பாரித்து
விஞ்சப் படுத்ததன் மேலா சனமிட்டு
மூஞ்சி படுத்துவெண் ணீறிட் டதன்மேலே
பொன்செய்நற் சுண்ணம் பொதியலு மாமே". 1917

" நள்குகை நால்வட்டம் படுத்ததன் மேற்சாரக்
கள்ளவிழ் தாமங் களபங்கத் தூரியுங்
தெள்ளிய சாந்து புழுகுபன் னீர்சேர்த்து
வொள்ளிய தூப முவந்திடு வீரே". 1918

" ஓதிடம் வெண்ணீற்று லுத்தூளங் குப்பாய
மீதினி விட்டா சனத்தினின் மேல்வைத்துப்
போதறு சுண்ணமு நீறும் பொலிவித்து
மீதி விருத்தி யிருத்திடு வீரே". 1919

" விரித்தபின் றற்சாரு மேவுதல் செய்து
பொரித்த கறிபோ னகமின நீருங்
குருத்தலம் வைத்தோர் குகைமுகம் பார்வை
தரித்தபின் மேல்வட்டஞ் சாத்திடு வீரே". 1920

" மீது தொளிந்திடம் வெண்ணீறுஞ் சுண்ணமும்
போது பலகொண்டு தர்ப்பைப்புல் வில்லமும்
பாத வுதகத்தான் மஞ்சனஞ் செய்துபார்
மீதுமூன் றுக்குமூன் றணிநிலஞ் செய்யுமே ". 1921

" ஆதன மீதி லரசு சிவலிங்கம்
போது மிரண்டினி லொன்றைத்தா பித்து
மேதகு சந்நிதி மேவுத் தரம்பூர்வம்
காதலற் சோடசங் காணுப சாரமே ". 1922

மெய்ஞ்ஞான விளக்கம்.

" முன்னமே பாகமா மூரல் செய்யுநாள்
பின்னது வேவவேண் டிடுமோ பேசிடாய்
அன்னதே யிவ்வுடல் அறிவா லட்டது
பின்னினிச் சுடுவது பிழையே யாகுமால்".

" பிறிவி லாத பிரமபீ சனுடல்
இறுதி யாவனற் றீண்டிடி லெங்கணும்
மறுகி விற்கிடை கோடி யனலதாய்ச்
செறுவு செய்யுமத் தேசமென் றோதினர்".

என்பனவாதி நூல்களில் பிரமஞானியாகிய மகாத்மாக்களது சரீரங்களை, சமாதி வைக்கவேண்டுமென்றும், அவ்வாறு செய்யின், சுந்தர மன்னரும் தொல்புவியுள்ளோரும் அந்தமி லின்ப வருள் பெறுவாரென்றும், அவ்வாறு செய்யாது ஞானியினது சரீரத்தினை யனல்போக்கின், அந்நாடு அக்கினியிலால் நாசமாமென்றும், நாய் நரிக்குக் கொடுப்பின் கோர்மான யுத்தமுண்டு வையம் நாய்நரிக் குணவாகுமென்றும் கூறியிருக்க அதனையும் பொருட்படுத்தாது, சமாதிவைக்கக் கூடாதென்றும், காலில் நார்ப் பிணைத் தீர்த்து, மூச்சந்தியிற் போடவேண்டுமென்றும், சாதுக்கள் மனம் புண்படப் புகனறு

குரு நிந்தை.

" பத்தினி பத்தர்கள் தத்துவ ஞானிகள்
சித்தங் கலங்கச் சிதைவுகள் செய்தவ
ரத்தமு மாவியு மாண்டொன்றின் மாய்ந்திடுஞ்
சத்திய மீது சதாசிவ மாணையே ".

என்ற திருமந்திர வாக்கின்படி, மீளாநரகிற் காளாகின்றனர். அஃதோ டமையாது திருவள்ளுவநாயனருங் காட்டியிருக்கின்றனரென்றூர். சிலர், திருவள்ளுவநாயனர் சமாதி சென்னை மயிலாப்பூரில் சிவாலயத்தினுள்ளே யே இருக்கின்றதென்றும், ஆலயம் இயற்றுவித்துப் பூஜை முதலியன நடந்துவருகின்றனவென்றும் கூறுகின்றனர். யாமும் நேரிற் கண்டிருக்கின்றோம். பிரத்தியகூம் பிரமாணமோ? நம்மன்பர் கூறும் வெற்றுரை பிரமாணமோ ? பண்டித சிகாமணிகள் பகுத்துணர்வாராக. நம்மன்பர் காட்டிய நாலடியார் பிரமாணமாமா ? யாம் காட்டிய திருமந்திரம் பிரமாணமாமா? நாலடியார் பிரமாணமென்பரேல் திருமந்திரம் அப்பிரமாணமாம். ஆகவே யிவரது மதம் அடியோடு வேரற்று வீழும். வீழவே சிவாத்துவிதிகளாய வீரசைவர்கள், தம்மதத்தினராய, திருமூலநாயனரது வாக்கினை அப்பிரமாணமென்று, நண்பர் கூறுவதுபோன்று ஒப்புவரா ? ஒப்பார் ! ஒப்பார் ! ஒன்று நூர்ப்பலமடையாதவழி மற்றையது ஜீவித்தலிலதாம். ஆகவே திருமந்திரம் பரமப் பிரமாணமென்று யாவர்க்கு

மொப்ப மூடிந்ததாம். அதன்கண்கூறிய சமாதியினை நிந்தித்தவராக வின், திருமூலநாயனாரையும் நிந்தித்தவராகின்றார். அவைதிக சைவ சித்தாந்திகள், தமது குலகுருவென்று, சொன்மாத்திரையானே கொண் டாடும் திருமூலநாயனாரை நிந்தித்த இவர் வேறு யாரை நிந்தியாதிருப் பர்? குருத்துரோகியாய இவருடன், தமரெனப் பழகுபவரும், குருத் துரோகிகளாய் நரகத்திற் காளாவரென்பது திண்ணமாம். இன்னும், " நீரிடத் தன்றி யந்தரத் திடையே நிகழுமோர் மரைகொள விரும்பார், பாரிடத் தெவரும் விநோதிகள் சாலம் பண்ணலென் றெண்ணிமற் றது போற், சீருடைத் துறவு சமாதிபெற் றுலகிற் நிகழினு முயிர்க்கெலாந் தயவுந், சாருட் குருபத் தியுமிலார் தமையுந் தமரெனப் பழகவுந் தகு மே". "இதுநெறி யெனவோ ரூர்க்குமற்றொருவ னேகினு மாத்தன்வாய்க் குறிக,ளதுதனிற் காணு விடத்துல கருமோ ரடிபெயர்த்திடுகல ரதுபோ, லெதிரறு சமாதி யாதிபெற்றுடையோ ரென்னினு முன்னவ னுரைத்த, சதுர்மறை யாக மாந்தநிந் தகரேற் றமரென லவரையுந் தகுமே" என் னும் செய்யுளுக்கும் இலக்கியமாவாரிவரே. இதுகாறுங் கூறியவாற்றால் மகான்களின் திவ்ய திருமேனியைச் சமாதிவைத்துப் பூஜிக்கவேண்டு மென்பது சித்தமாயிற்று.

" பெருந்தொகை செலவிட்டுக் கோவில்களைச் சிவாலயங்களுக்கும் மேலாகச் செய்வித்தலும் " என்றார்.

குருவினை லுபதேசம்பெற்று, தமது யதார்த்த சொரூபமாய பிரயோ சனத்தினை யடைந்த மாணாக்கர்கள், பெருந்தொகை செலவிட்டு, சிவால யங்களுக்கு மேலாகக் கோவில்களைச் செய்விப்பார்க ளென்பதில் யாது சந்தேகமுளது? சாமானிய மனிதர்களால் சாதாரண பூமியில் மந்திர வாயிலாக ஸ்தாபிக்கப்பெற்ற, நர்மதை லிங்க முதலியவற்றிற்குப் பெருந் தொகை செலவிட்டு, ஆலயமியற்றுவதைப் பார்க்கிலும், பிரமத்தையுணர் ந்த பிரமஞானியின் திவ்ய திருமேனியாகிய ரத்தினத்தைச் சேமித்து வைத்திருக்கும்

அடியார் பெருமை.

" சிவயோகி ஞானி செறிந்தவத் தேசம்
அவயோக மின்றி யறிவோருண் டாகும்
நவயோகங் கைகூடு நல்லியல் காணும்
பவயோக மின்றிப் பரலோக மாமே "

என்ற திருமந்திரச் செய்யுளின்படி, புண்ணிய பூமியில், பெருந்தொகை செலவிட்டு ஆலயமியற்றிப் பெரியோரால் ஸ்தாபிக்கப்படும், இலிங்க மூடைய ஆலயமே யுயர்வுடைத்தாம். இதற்கு சிவாலயத்திலும் மேன் மையுடைத்தென்று கருதியல்லவா, "சிலகாலஞ் சென்றால் அச்சிவாலயங் கள் மழுங்கி, இவைகளே விளங்கி நிற்குமே " யென்று நம் நண்பர்

அஞ்சுகின்றனர். இதுவே சமாதி யாலயங்களைச் சிவாலயத்திலும் பெரி தாக வியற்றுவித்துப் பூஜையாதிகள் மிக்க விமரிசையாய் நடத்திவருதற் குப் போதிய பிரமாணமாகும்.

இன்னும், "ஞால முண்டவன் தலமிசை சுமப்பன்மெய்ஞ் ஞானி வேண் டவெவெல்லாம், ஆல முண்டவ னவன்பினே திரிகுவ னவனடித் தூட்கன்றே, சில மன்னரு மற்றுள தேவரும் திசைதிசை பணிந்தேத்த, காலி ரண்டையுந் தலமிசை வையெனக் கழறுவன் கமலத்தோன்"

"ஈசனும் ஞானி யிருந்துள விடத்தே யிருப்பது முத்திதா னந்தத், தேசிக னேவல் செய்பவன் காலென் சென்னியி லிருப்பது மன்னி, மாசிலாப் பிரம ஞானியா முனிக்கு மகேசனு மொப்பலன் மதிக்கில், ஆசிலா வியு மொப்பலன் யானு மொப்பல னேவரொப் பாரே"

" பலன்கள் வேண்டிய பரிசெலாம் பலித்திடும் பரமதத் துவ ஞானி, நலங்கொ ணுமமா மந்திரஞ் செபித்திட நயந்தவ னீராகுஞ், சலங் கொ டார்த்தமா மவன்றிரு மேனியே சகலதெய் வ மூ ஞ் செவ்வாய், மலர்ந்த வாசக மறுபிறப் பெனவரு மயற்பிணி மருந்தாகும்".

" ஒழுக்கமே புரிந்தோ ரைத லதனைவிட் டொழிந்தோ ரைதல்
இழுக்கஞ்செய் மூர்க்கரைதல் பண்டித ரைத லெண்ணில்
பழிப்பரு ஞானந் தன்னின் முயல்பவன் பணியத் தக்கோன்
மொழித்தகு ஞானி யென்று சொல்லவேண் டுவது முண்டோ".

" ஞானியே யெவரும் வணங்குதற்குரியோ னவிலுமா சைவசமில் பெரியோன், மானிலத் தவன்மு னுடல்விடிற் குகைப்பால் வைக்கவென் மறைப்படி புரிந, மூனும்வே தாந்தப் பொருணிக் திடினும் சாற்றினில் வாழுமந் தணர்க்கின், மூனதாற் றுறவு பெற்றநற் றவரே யமலவீ டடையு ஞானிகளே".

என்பனவாதிப் பிரமாணங்களில், பரமேஸ்வரன், ஞானிகளது பாத தூளி கிடைக்கவேண்டிப் பின்னே திரிவனென்றும், மகேசன் ஞானிக் குச் சமமலனென்றும், ஞானியினது திருமேனியே சகல தெய்வமூ மென்றும், ஞானி யொருவனே வணங்குதற்குரியவ னென்றும், இன் னும் பற்பல மகிமைகள் கூறியிருக்க, அவற்றினை யுணர, போகூழ் வினையின் வலியால் வலியிலராய், தம்மனம் போனவாறு, சமாதிவைத் தல் கூடாதென்றும், ஆலயமியற்றுவித்தல் பொருந்தாதென்றும் வரைந் திடர்ப்பட்டார்.

ஞானிக்குப் பரமேஸ்வரன், மகேஸ்வரன், சதாசிவன் முதலியோர் கள் சமமாகாமல், அவரது ஏவற்பணிக்குக் காத்திருப்பாராயின், அப் பரமேஸ்வரற்கியற்று மாலயத்திலும் நூறுமடங்கதிகமாகக் கறுப்புக்கல், சலவைக்கல் முதலியவைகளால், சாணைசெய்த ஆலயமியற்றுவித்து, தங்கஸ்தூபி முதலியவற்றை விமானத்தில் ஸ்தாபித்து, ஆறுகாலப்

பூஜை முதலியனவும், கண்டோர் அஞ்சிப் பக்தியதிகரிக்கும்படியாகச் செய்விக்கவேண்டுமென்பதனை முற்காட்டிய பிரமாணவாயிலாக வுணர் வாராக. இப்பொழுது பிரசித்தியாயுள்ள சிவாலயங்களெல்லாம், பிரம ஞானிகளாய மஹான்களது சமாதிகளேயெனச் சித்தர் நூல்கள் பல கூறுகின்றன.

போகர் - ஜனனசாகரம்—557.

ஆமப்பா வருணகிரி மலையிற் கேளு
ஐந்நூறு பேர்கள்சித்த ரதனில் வாழ்வார்
ஓமப்பா கழுக்குன்றி லொன்பதுபேர் கூட்டம்
உயர்வான கால்மலையி லொருநூறு சித்தர்
நாமப்பா மலைகளிலே யனேகஞ் சொன்னேனும்
நல்லதொரு சித்தரெலாஞ் சொலுப மாகி
சேமப்பா வவரவரே சமாதி நின்று
செகமலையி லிங்கமதாய் மூளத்திட் டாரே.

ஆதியென்ற சிதம்பரமே திருமூல ராச்சு
அவருடனே பதினெண்பே ரதிலே யாச்சு
சோதியென்ற காலாங்கி நாதர் தாமும்
துலங்குகின்ற காஞ்சிபுரத் தனிலே யாகும்
நீதியென்ற நீதியெல்லாம் வழுவ ராமல்
நீணிலத்திற் றபங்கணிச் சயமாய்ச் செய்வார்
வேதியென்ற கும்பமுனி கும்ப கோணம்
விளங்குகின்ற ரெங்காரு மந்த வூரே.

ஊரானமயிற் றேசமச்ச முனியே யாகு
முற்றதொர்சீ காழிசட்டை முனியேயாகும்
பேரான வழுகண்ணிச் சித்தர் தாமும்
பெரிதான நாகபட் டணமே யாச்சு
வேரான விடைமருதூ ரிடைக்காட ராகும்
விளங்கினின்ற மதுரைசுந் தரரு மாச்சு
சீரான கமலமுனி யதுவே யாச்சு
சிறந்ததுவா ரகையிற்பாம் பாட்டி யாமே.

ஆமென்ற புண்ணுக்கு ஈசர் தாமு
மழகான நாங்கணைச்சே ரியிலே யாச்சு
வாமென்ற கொங்கணர்தா மிருந்த மூலம்
வளர்ந்ததோர் திருக்கண்ணங் குடியி லாகும்
நாமென்ற நாமதனு நிருந்த மூலம்
நலமான விடைமருதூர் நாட்ட மாச்சு
ஓமென்ற வயித்தீச்சு ரம்ப சிட்ட
ருன்னதமா யுகந்துநின்ற மூலந் தானே.

காவனென்ற வால்மீகர் திருவை நின்றூர்
கருவூரார் காளமுகத் திரியு மாச்சு
தேவனென்ற காசியிலே விஸ்வா மித்தர்
திருவையா றதிலகப்பைச் சித்த ராகும்
வாவனென்ற கடுவெளிச் சித்தர் தாமும்
வளமான திருக்காஞ்சிப் பதியி லாச்சு
மேவனென்ற புலத்தியர்தா மிருந்த மூலம்
விதமான வாவடையார் கோவி லாச்சே.

ஆச்சென்ற கோரக்கர் கழுக்குன்ற மூல
மதிகருத்தி ரத்திற்கா சிபரு மாச்சு
நீச்சென்ற வருணகிரி தன்னிற் கேளு
நிஜமான கௌதமரு மதிலி ருந்தார்
காச்சென்ற கருவைநல்லூர் மார்க்கண் டர்தாம்
கருவான திருக்கூடல் மூல ராச்சே
வாச்சென்ற பாவவி நாசந் தன்னில்
வளமான புலத்தியர்தம் மூல மாமே.

ஆமென்ற சுந்தரகா லாங்கி நாத
ரதிலிருந்தார் திருக்கடவூ ரவர்தா மாகும்
போமென்ற திருப்பவண மவர்தா மாச்சு
புகழ்ந்ததிருக் கோவலூ ரவரு மாச்சு
நாமென்ற வாடுதுறை விஸ்வா மித்தர்
நல்லதிரு வாலம்பாம் பாட்டி சித்தர்
வாமென்ற திருப்பனந்தாள் வரரி ஷிக்காம்
வளர்பெருங்கா வூர்கன்னி சித்தர் தாமே.

தானென்ற வானைக்கா வதிலே கேளு
சமஸ்தான மச்சமுனி சமாதி யாகும்
தேனென்ற தென்மலையில் வரத ரைகுஞ்
சேரையெனுஞ் சேத்தூர்மார்க் கண்ட ராச்சு
வானென்ற மலைநாடு நெடுங்குன் றூரில்
மகத்தான திருமூலர் வாச மாச்சு
நானென்ற மேலச்சி தம்ப ரத்தில்
நாடியது திருமூலர் நாட்டந் தானே.

"தங்குற்றம் பார்க்குமவருளரோவெனத் தாழ்ந்தனளே" என்றுசிவப் பிரகாசப் பெருந்தகையார் கூறியாங்கு, நண்பர் நம்மீது குறைகூறவந்தவர் தங்குற்றத்தினைச் சிறிதேனும் நாடினரா? பிறரை நிந்திப்பதற்கே கங்கணங்கட்டியிருக்குமிவர் என் தங்குற்றத்தை நாடுவர்? நாடார். நாடார். இவர் யாண்டுந்தங்குற்றம் பாராது, பிறர்மீதுகுற்றமற்றதனைக்குற்றமெனைக்கூறி "யாகாவாராயினும் நாகாக்க காவாக்காற், சோகாப்பர் சொல்லிழுக்குப்

பட்டு" என்ற பொய்யாமொழிப்படி யிழுக்குறுவர். நம் நண்பர் சிவ ஞானிகளென்று சொல்லித் தம்பட்டமடிக்கும் தாயுமான சுவாமிகட்கு இராமநாதபுரத்திற் சமாதிவைத்துப் பூஜையாதிகள் நடக்கின்றன. திரு வள்ளுவ நாயனாருக்கு மயிலாப்பூரில் சமாதிவைத்துப் பூஜையாதிகள் நடக்கின்றன. திருமூலநாயனாருக்கும் நமச்சிவாய தேசிகருக்கும் இன் னும் பற்பல அதிபதிகள் தம்பிரான் முதலியோர்களுக்கும் திருவாவடு துறையிற்சமாதிவைத்துப்பதினாயிரத்துக்கு மேற்பட்ட திரவியஞ் செலவு செய்து, வருஷக் குருபூஜை நித்தியபூஜை முதலியவை நடந்து வரு கின்றன. சூரியனார் கோவில், தருமபுரம், திருப்பனந்தாள், மதுரைத் திருஞானசம்பந்தர் மடம், திருவண்ணாமலை யாதீனம், குன்றக்குடி, திருவண்ணாமலை, சிதம்பரம், முதலிய பற்பலவிடங்களில் இருந்த சைவ மடாதிபர்களுக்கும், மற்றையோர்க்கும், சமாதிவைத்துப் பூஜை முதலி யன மிக்க விமரிசையாக நடந்துவருகின்றன. சிதம்பரம் கொற்றவன் குடியில், உமாபதி சிவாசாரியருக்குச் சமாதிவைத்துப் பூஜை முதலியன நடந்து வருகின்றன. சீர்காழியில் திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிக ளுக்கும், குன்றத்தூர் சேக்கிழார் சுவாமிகளுக்கும், திருவாரூரிற் சுந் தரமூர்த்தி சுவாமிகளுக்கும், சிவாலயங்களுள் பலவற்றுள்ளும் அறு பத்துமூன்று நாயன்மார்களுக்கும், பெரும் பொருள் செலவுசெய்து சிவாலயங்களினும் பெரிதாய் ஆலயங்களைச் செய்வித்து, பூஜை முதலியனவும், பரமேஸ்வரனுக்கு நடப்பதைப் பார்க்கினும், பதின்மட ங்கு அதிகமாக நடந்து வருகின்றன. இவற்றினையெல்லாம் உற்று நோக்காது, வீண்வாதந் தொடுத்தார். இவை யாவும் தமக்கு உடன்பா டன்றென்பதேல், இச்சமாதி, ஆலயம்முதலியவற்றை யிடித்து அக்கற் களைச் சிலாலயங்கட் குபயோகப்படுத்தி, அந்நிலங்களை விளைநிலமாக்கு தற்கு, இத் **தூர்வையாசகப் படலம்** அச்சிடப் பொருளுதவிய பிரபுவி னிடம் சென்று, **50** ஆயிரம் ரூபா யாசகஞ்செய்து, அத்திரவியத்தினைப் பாங்கில் **சைவசித்தாந்தப் பெரியாரின் சமாதி யிடிந்தற் பண்டு** என் னும் பெயருடன் வட்டிக்குக் கொடுத்து அதன் வருவாயில் நாடோறும் எவலரைக்கொண்டு, சைவசித்தாந்தப் பெரியார் சமாதி யாலயங்களையும் அறுபத்துமூவ ராலயங்களையும் இடித்து நிர்மூலமாக்கி வருவாராக. இங் ஙனஞ் செய்து முடித்ததன் பின்னன்றே எங்கள்மீது குறைகூற வேண் டும். அங்ஙனமின்றித் தம்மீது குற்றத்தினை வைத்துக்கொண்டு பிறர் மீது பழிசுமத்துவது என்ன அறியாமை? இவரது வஞ்சக மொழிகள், நடுவுநிலைமை யுள்ளார்க்கு வெள்ளிடைமலைபோல வெளியாகும்.

"தேவாரத் திருப்பதிகங்கள்பெற்ற சிவஸ்தலங்கள் எத்தனையோ பழுதாகிக் கிடத்தலை யெட்டியும் பாராமல்" என்றார். எட்டிப் பார் த்து மௌனஞ் சாதித்துச் செல்லுதல் இவர் மதத்தினர்க்கேயன்றி யெம்மவர்க்கின்றுமாகலின், தம்மனுபவத்தினை "யெட்டிப் பாராமல்" என்று வெளியிட்டனர். நாங்களோ, எட்டிப்பார்த்து, அதற்குரிய

பெரும்பொருள்களைச் செலவுசெய்து, ஆலயங்களை யியற்றுவித்துப் பூஜை முதலியனவும் நடத்துவித்து வருகின்றோம். கோவிலூரிலுள்ள சிவாலயத்திற்கு, முத்திராமலிங்க ஞானதேசிக சுவாமிகள், அருணைசல ஞானதேசிக சுவாமிகள், சிதம்பர ஞானதேசிக சுவாமிகள், இராமசாமி ஞானதேசிக சுவாமிகள், வீரசேகர ஞானதேசிக சுவாமிகள், அண்ணு மலை ஞானதேசிக சுவாமிகள் முதலிய மகான்களால், சுமார் 30 லக்ஷ ரூபாவரை செலவுசெய்து யாவரும் பார்த்து இன்புறுமாறு ஆலயமியற்றிப் பூஜை முதலியன மிக்க விமரிசையாய் நடத்திவருவது உலகத்திலுள்ளார் யாவருங் கண்கூடாகக் கண்ட விஷயமாம். மதுரையம்பதியில் குட்டைய சுவாமிகளென்பவர்கள், ஸ்ரீ மீனாக்ஷி சுந்தரேசுரர் ஆலயத்தில் அளவிறந்த பொருள் செலவு செய்து, தேகப்பிரயாசையுமுற்று, நந்திமண்டபம் முதலியனவுமியற்றி விமானங்கட்கும், சுவர்ணகசிதம் செய்வித்தார்க ளென்பது நம் நண்பரும் உணர்ந்த விஷயமே! அப்பதியின்கண்ணே அரசப்பசுவாமிக ளென்னும் மகான் கான்மாறியாடிய கற்பகத்திற்கு ஆபரணமியற்றுவித்தார்க ளென்பதும் அறிந்த விஷமே. ஸ்ரீகருணைநிதி யென்னுஞ் சிதம்பரஞான தேசிக சுவாமிகளவர்கள் தமது சீடராகிய தேவிகோட்டை இலக்குமணச் செட்டியாரைப்பார்த்து, சிதம்பரம் ஸ்ரீ மூலட்டானேச்சுரர் ஆலயத்தை ஜீரணோத்தாரணம் செய்விக்க வேண்டு மென்று தத்தரவுசெய்ய, அவ்வாறே இலக்குமணச் செட்டியாரும் தம்மி னத்தவர்களை வரவழைத்து, அதற்கு வேண்டிய திரவியங்களைச் சேகரித் துக்கொண்டுவந்து குருமூர்த்தியின் சந்நிதியிற் றெரிவித்தனர். அப்போது ஸ்ரீ கருணைநிதி களிப்புற்று அடியார் திருக்கூட்டத்தோடு சிதம்பரத்திற் கெழுந்தருளி பலதேசங்களி லிருந்தும் வைதிகர்களான பிராமணோத்த மர்களையும் வித்வான்களையும், மற்றுமுள்ள பெரியோர்களையும் வர வழைத்து, அபரிமிதமாகப் பிராமணபோஜனஞ் செய்வித்து, ஸ்ரீ நடே சப்பிராஞக் கொப்பான தீக்ஷிதர்களனைவரையும் பூஜித்து மரியாதை செய்து, ஸ்ரீமூலட்டானேசுவாருக்குச் சொர்ணபந்தனம் செய்வித்து வேத விதிப்படி வெகு விமரிசையாய்க் காளயுக்திவருடம் ஆனிமீ 14உ சோமவாரத்தன்று கும்பாபிஷேகம் நடத்து வித்தார்கள். மணிவாசகப் பெருந்தகையோடொப்ப பல்லோருணரப் பரமபத வாழ்வுபெற்ற எமதரு ளிறையாய ஸ்ரீ வீரசேகரஞானதேசிகப் பெருந்தகை, தேவாரப்பதிகம் பெற்ற திருக்களர் க்ஷேத்திரம் பகலிலும் பயமின்றிச் செல்லக்கூடாத நிலைமையிலிருந்ததனை யுணர்ந்து, மிக்க விரைவில் 4 லக்ஷ ரூபாய் செலவுசெய்து ஆலயமியற்றுவித்து, அதி விமரிசையாக ஆராதனைகள் நடைபெறும்படி செய்த விஷயம் பல்லோரும் பரக்கக்கண்டதேயாம். சிதம்பரத்திற் பொன்னம்பல ஞானதேசிக சுவாமிகளால் "யெளவனேஸ்வராலயம்" இயற்றுவித்து பூஜையாதிகள் நடக்கும்படி செய்விக்கப்பெற்றதும் நன்கு புலப்படும். ஸ்ரீமந் நடராஜப் பெருந்தகையா லெழுந்தருளி யிருக்கும் ஆலயத்தினை உத்தாரணஞ் செய்வதற்கு முக்கிய

பிரானைக் கர்த்தாவாயவர்க ளிருந்தார்க ளென்பதும் அறிதற்பாலதாம். அரிமழம் சுந்தரமூர்த்தி சுவாமிகளால் பற்பல சிவாலயங்கள் உத்தாரணஞ்செய்யப் பெற்றதோடு கீழைச்சிவபுரியென்னும் ஊரிலுள்ள சிவாலயப் பிரதிஷ்டை செய்யப்பெற்றதும் அவ்வூர் வைசியசிகாமணிகளாலுணரலாம். வீரசேகர ஞானதேசிகப் பெருந்தகையாரால், சிற்பசாத்திரப்படி பிரான் தயாரிக்கப்பட்ட ஆலயங்களும், பற்பல திராவிய வான்கலைக்கொணர்ந்து ஏற்படுத்தப்பட்ட வேதபாடசாலை, வித்தியாசாலை, பசுச்சாலை முதலியனவும் அளவிறந்தன. அவற்றினை முறையாக வரையின் நூல்விரியுமென அஞ்சிவிடுத்தா மென்றுணர்க.

வேதாந்தியாய ஜூலியன். அள. அரு. அருணாசலச் செட்டியார் என்பார், இராமேஸ்வரம், காளையார் கோவில், உப்பூர் முதலிய சிவாலயங்களை யியற்றுவித்து பூஜையாதிகள் நடத்துவிக்கின்றார்க ளென்பது பிரதிதினமும் யாவரும் உணருவர். கோவிலூர் மடாலயத்தின் அபிமானியாயுள்ள தேவிகோட்டை, சித. முரு. முருகப்பசெட்டியாரென்பவர்கள், தேவாரப்பதிகம் பெற்ற உறையூர்ச் சிவாலயத்தை யியற்றுவிக்கின்றார்க ளென்பது அறியற்பாலதாம். இவ்வாறே முழுமனமுடைய வேதாந்திகளெல்லோரும் எண்ணிறந்த சிவாலயங்க ளியற்றுவித்திருக்க, "சூரியனை யுள்ளங்கையில் மறைக்க நினைத்தது" போன்று அறிவுக்குறைவினால், "சிவஸ்தலங்களெத்தனையோ பழுதாகிக் கிடத்தலையிட்டியும் பாராமல்" என்று மையலுற்றுக் கையாடினர் போலும்.

சிவாலயங்களும், உடம்பு முதலியனவும், வேதாந்திகள் பொய்யென்று சொல்லுகின்றார்களென்று மிக்க பரிதாபப்பட்டு, "பூஜையாதிகளும் சிவாலயங்களும் பொய்யாயின் பலனின்றி யாழ்பு" மெனப்பன்னுகின்றார். நம் நண்பர் கருத்துப்போல் சிவாலயங்கள் சத்தியமாயிருக்குமாயின் பழுதடைவானேன்? மகான்கள் சமாதி யாலயங்களுண்டாயவுடன் அச்சிவாலயங்களினது ஒளி மழுங்குவானேன்? நம் நண்பர் வாக்கினைனே, பாசமாய சிவாலயங்களும், உடம்பு முதலியனவும், அநித்தியமாமென்பது வச்சிரலேபமாம். பொய்யாய சிவாலயத்தைப் பூஜிப்பின் பலனிலவென் றையுறுகின்றார். நான் கருடனென்னும் பொய்யாகிய பாவனையினல் பிறர்பாலுள்ள விட நீக்குதல் எவ்வாறேனும்? எனாதாகவே, கருடபாவனை பொய்யேயென் றங்கீகரிக்க நேரும். அங்ஙனம் பொய்யென்று நம் நண்பர் அங்கீகரிப்பரா? அங்கீகரியாராகவே பொய்யாகிய கருடபாவனையினலும், மெய்யாகியவிட நீக்கங்கூடுமென்றுரையிற்று. அங்ஙனமே பொய்யாகிய சொற்பனத்தில், பொய்யாகிய மாதின் சேர்க்கையால், மெய்யாகிய வீரியவொழிவு காண்டலுமாம். இங்ஙனமே பொய்யாய தாரு, தாம்பிரம், பாஷாணம், வெள்ளி, தங்கம், முதலியவற்றிற் செய்யப்படும் பிரதிமைகளிடத்துப் பாவிக்கும் ஈஸ்வர பாவனையினலும், ஒருவாற்றானு முவமையின்றிய சாளக்கிராமத்திற்

பாவிக்கும் விஷ்ணுபாவனையிலையும், அங்ஙனமே குருவினிடத்துப் பாவிக்கும் ஈஸ்வரபாவனையிலையும், உண்மைப்பலன்களைப் பெறுவார்களென்பது வேதத்தின் சித்தாந்தமும், கம் கண்டபது சைவ சித்தாந்தக் கோளுமாம். இவற்றினைப்பற்றி மூன்றென்னையில் வேதாந்திகட்கும், சைவ சித்தாந்திகட்கும் நடந்த விவாதத்தில் விர்வாச வினைச்சுப்பட்டிருத்தலின் அவற்றினை யுணர்ந்து அடங்குவாராக.

நண்பருக்கும் நண்பர் மதத்தினர்க்கும் சகசமலம் அநாதியாயிருப்பதுபோன்று, வேதாந்த சாஸ்திரத்தினை யறியாமையாய மயலும் அநாதியாகவேயிருக்கின்றது. "ஜீவனும் பொய், ஈஸ்வரனும் பொய்" என்று சொல்லுகின்றார்களென்றார். 'ஜீவன்' என்னுஞ் சொல்லுக்கும், ஈஸ்வரனென்னுஞ் சொல்லுக்கும் பொருள் யாதென் றுணர்ந்தனரோ? ஜீவனென்னுஞ் சொற்கு, அந்தக்கரண ஆபாசமாகிய விசேஷணமும், கூடஸ்த சைதந்யமாகிய விசேஷ்யமும் ஆகிய விசிட்டம் பொருளாம். நம் நண்பருக்கு தர்க்கஞானமில்லாமையால், விசேஷணமாகிய தர்மத்தைப் பொய்யென்று சொல்லுகின்றார்களா? விசேஷ்யமாகிய தர்மியினைப் பொய்யென்று சொல்லுகிறார்களா? என்னும் பகுத்தறிவில்லாது பொதுவாகப் "பொய் பொய்" என்று பறையறைகின்றார். அவ்வாறே ஈஸ்வரன் என்னும் சொற்கு, மாயை பிரதிபிம்பங்களாய விசேஷணமும், பிரம சைதந்யமாய விசேஷ்யமும் ஆகிய விசிட்டம் பொருளாம். இதன்கண் ணும் விசேஷணமாய தர்மத்தினைப் பொய்யென்று கூறுகின்றார்களா? விசேஷ்யமாகிய தர்மியினைப் பொய்யென்கின்றார்களா? என்னும் பகுத்தறிவின்றி "பொய் பொய்" என்று மையலுறுகின்றார். தர்மதர்மி ஞானம், விசேஷண விசேஷ்ய ஞானம், குணகுணி ஞானம் முதலிய ஞானமில்லா இவர்தாமே, சாத்திரவாதஞ் செய்ய வல்லுநர்? தர்மியிரண்டினையும் பொய்யென்று கூறுவார்களாயின், ஐக்கியம் எதற்குக் கூறுவார்களென்னும் யோசனையின்றித் தமது முழுமூடத் தன்மையினையே முறையிட்டார். தர்மிகளைக் கைக்கியமேயென்றித் தர்மங்கட் கைக்கியமின்றும். தர்மம் அநித்தியமாயவிடத்து தர்மி நித்தியமாயிருத்தல்கூடும். நியாய சாஸ்திரத்திலும், பிருதிவி பரமாணுவின் குணங்கள் நித்தியமாயிலும், குணியாய பரமாணு நித்திய மென்றே யொப்பினர். விசேஷணமாய அந்தக்கரண ஆபாசமும், மாயை பிரதிவிம்பமும், விசேஷ்யமாய சைதனத்தின்கண் ஔபாதிகமாய்த் தோன்றி பாஸ்பாசம் விரோத தர்ம முடையனவாய், ஐக்கியமுறுமையின், விசேஷ்யமாய சைதந்தம், விசேஷணங்களொழிந்துழி, பேதத்தினை யுண்டாக்குந் தர்மமின்றி நிர்த்தர்மியாயிருத்தலின், ஐக்கியமுறுமென வுணர்க. இதன் சார்பான கண்டனங்கள் "பேத வாத நிரஸ்காரம்" என்னும் தூலில் விரிவாயிருத்தலின் ஆண்டுணர்க.

மாணாக்கர்கட்கு அறிவுறுத்தற்குச் சிவன் மூத்திரத்தையில், பிரம ஞானிகள் பிரமத்தை யநுபவிக்கின்றார்கள் என்று கூறியிருத்தலை

யுணராது, "அநுபவிக்கின்றவர் யார்? அநுபவத்தைக் கொடுக்கின்றவர் யார்?" என்று கடாவுகின்றார். ஒருபொருளிருக்குமிடத்தில், செய்தலும் செய்வித்தலு முளவாமோ?

நம் நண்பர் ஒருநிமித்தத்தால் தந்தலையில் மண்ணைவாரிப்போட்டுக் கொண்டாரென்று வைத்துக்கொள்வோம். அக்கா விலைரயொருவர், உங்கள் தலையில் மண்ணைவாரி யார்போட்டது என்று வினவின், நானே மண்ணைவாரித் தலையிற்போட்டுக் கொண்டேனென்று சொல்லுவர். போடுவித்தார் யார் எனில்? அப்பொழுது என்னுத்தரம் பண்ணுவர்? மௌனந் சாதிப்பர். அக்கா லொருவரும் போடுவிப்பாரிலாவினின், இருவரிருக்குமிடத்துச் செய்தலுஞ் செய்வித்தலுமுளவாமேயொழிய வொருவரிருக்குமிடத்து இன்றும்.

"இருவர்கூடுங் கலப்பிலேயேதான் இன்பாநுபவம் உண்டென்பதே யுலகமுணர்ந்த வுண்மை" என்றார். உலகத்திலுள்ள சிலர் இருவர்கூடுங் கலப்பில் இன்பமென்றுணர்ந்தாரே யன்றி, நண்பர் ஒருவர் மாத்திரமாயிருந்து கலப்பின்றி யநுபவிப்பதே யின்பமென்றுணர்ந்தாரென்பதை யறிவிக்குமே யிவ்வாறு பொறித்தனர். இருவர்கூடுங் கலப்பிலேயே யுலகத்திலாசங்கம் உளவாமேல், நம் நண்பர் ஒருவராயிருக்கின்றமையின், ஆசங்கமின்றித் துக்கியாயிருப்பரென்றுணரலாம். அன்றன்று, யாம் தவசிப்பிள்ளையோடிருவராக இருக்கின்றோமென்பதால், அவ்வாசங்கத்தைத் தவசிப்பிள்ளையோடு கலந்து அநுபவிப்பர்போலும்! உலகத்தில், இரண்டதிபதிகள், வீட்டிற்கிரண்டிஜமான், ஊரிலிரண்டு கணக்கு, தேசத்திலேக்யமின்றி யிருபகுதிப் படுந்தன்மை, ஒருஜாரிலிரண்டு வித்துவான்கள், எனப் பற்பல இருபகுதிகளிருக்குமாயின் கலாம் விளைகின்றதென்ப துலகப் பிரசித்தமான விஷயம். அதனை யுணராது இருவராயிருக்கின் ஆசங்க முண்டென்று மருண்டு வளைந்தார். இருவர் கூடுங்கலப்பிலேயேதான் இன்பாநுபவம் உண்டென்பதை மாற்றித், துன்பாநுபவ முண்டென்பதே யுலக முணர்ந்த வுண்மை யென்று படித்தலே சாலச் சிறந்ததாம்.

"இதற்கு ஸ்திரீ புருஷ ரிருவர் சேர்ந்தநுபவிக்கும் சிற்றின்பத்தையே உவமையாக வேதாந்த நூலெல்லாங் கூறுதலுங் காண்க." என்றார்.

வேதாந்த நூல்களில் விஷயாசங்கம்போன்று என்று ஆசங்கத்தினை ஒருபுடை யுவமை கூறியிருக்கின்றதே யன்றி, இருவர்கூடுங் கலப்புத் தொழிலினை யுவமை கூறவில்லை. உபமான உபமேயங்களின் லக்ஷணந் தெரியாதவிவர், இங்குக் கூறியாங்கே, வேதாந்த சாஸ்திரங்களையுந் தமது சைவசித்தாந்த சாஸ்திரங்களையும் ஆராய்ந்தார் போலும். பிரமாசங்கத்தினை யிவ்வாறென்று கூற முடியாததற்கு உவமையாக விஷயாசங்கத்தினை யிவர் நூலிலும் எமது நூலிலும் பன்முறை பகரையறைந்

திருக்கக் கூடுங்கலப்பித்து ஸ்திரீ புருஷர்களின் கலப்பு உவமையென்று, தான்தோன்றித் தம்பிரானுய்க் கூறினர். கடுந கண்பரதூஷில், குயவனை சுப்ரமணியருக்கு உவமையாகக் கூறியிருக்குமிடத்திலும், குயவன் சுப்ரமன், பார்சினன்னையும், கிருஸ்டியையும், சர்ச்சியாயும், உளனெனன்பதற்கு உவமையென்று கொள்ளவேயன்றி, கிறிஸ்து காயனையும் உளனெனன்பதற்கு மாத்திரம் உவமை யென்று முடிந்துங் கொள்ளார் கொள்ளார். கொள்வாராயின், இவர் வாக்கியம் பொய்க்கு மன்றே. இன்னதற்கு உவமை வேதாகம சாஸ்திரத்திற் கூறியிருக்கின்றதென்றாலும், உரனிலாவிவர், எமபுரத் செல்லவிருக்கும் அற்பக்காலத்தினையும், சும்மாவிருந்து கழிக்காது, வேதாகமத்திலேனும் விண்ணாகக் தெரிக்கவிரும்புகின்றது விக்ஞையிலும் விக்ஞதையே. வேதாகமத்தின் கருமணைக் காற்று, உலகெங்கும் வீசவேண்டுமென்று கருதி வாதத்செய்ய தினைப்பினை நினைப்பர். பெரிய பொருளுக்குச் சிறுபொருளை யொருபுடையொப்புக் கூறுவதேயன்றி, யெல்லாவற்றாலும் ஒப்புடைப்பொருளை, உவமை கூறுவதன்றாம். சாதிரியத்தின் இலக்கணமும், அதேக அவயவங்களின் சேர்க்கையென்றே கூறியிருக்கின்றது. 'சந்திரனைப்போன்ற முகம்' என்று கூறுமிடத்து, சந்திரன் பௌர்ணமியன்று இரவில் பொருள்களை விளக்குவதுபோன்று ஸ்திரீகளினது முகமும் அமாவாசையன்றிரவு இருட்டில் பொருளை விளக்கின்றி விளக்குமென்பதற்கு உவமானமன்று. பின்னையோ, சந்திரனைப் பார்த்தவுடன் சந்தோஷமுதலியன வுண்டாவனை போன்று ஸ்திரீகளின் முகத்தினைப் பார்த்தவுடன் சந்தோஷமுதலியன வுண்டாமென்பதற் குவமையாம். இனி யெழுதுங்கால் சற்குருவைச் சரணுகதியாகவடைந்து, சாதக சுலட்டயங்கள் வரப்பெற்று, சாஸ்திரங்களை சாவதாக மனதுடன், சிரவணஞ்செய்து, பொருளைத் திரித்துணராது, செவ்வனே யுணர்வதாகிய மனனஞ்செய்து, அதனையே மூலதானமாபோன்று நிதித்தியாசனமுஞ்செய்து, பின் வரைவாராக! இவ்வாறு செய்யாது, இனியும் முன்பின் பார்யாலோசனையின்றி வரைவதால், காரியமாகாரி வுள்ளார் காரியமிழ்வதற் கிலக்கியமாவர்.

"ஒருவர்மாத்திர மின்புறுவதெப்படி" என்கின்றனர். இவர் கருத்து ஸ்திரீ புருஷர்களிருவருங் கூடியிருந்தா லின்பமுண்டாமென்பதாம். இன்பமென்னும் சொற்குப் பொருள் விஷயாதிகமென்றே கொண்டனர் போலும். பிரமசாரி, சந்நியாசி, வாகப்பிரஸ்தர், விதுரர், விதவை முதலியோர்கள், ஒருவராய்த் தனித்திருத்தலின், அவர்கட் காநந்தமின்றென்று கொள்ளவேண்டிவரும். அவர்களை சதா பரமேஸ்வரத் தியானியாயிருத்தலின் ஆநந்தமுடையோரென்று சாஸ்திரங்கள் முறையிடுகின்றன. அவர்கட் காநந்த மின்றென்றிவரொப்புவதால், விதுராய இவர்க்கு ஆநந்தமின்றென்றே கொள்ளநேரும். நமதேயினிய நண்பரது "சோமசுந்தர மாலைக்கு"க் கண்டன மெழுதுங்கால், துக்கியாய சொக்கலிங்கச் செட்டியாரெனப் பட்டங்கொடுத்து எழுதவேண்டிவரும்.

வரவே இவர் துவைவஷத்தோடு கூடிச்செய்த சிவபூஜையும் நிஷ்பிரயோசனமாய் முடியுமென வுணர்க. உலகத்திலும், வியவகாரமுடையோர் "ஒருவருமின்றி யிதுகாறும் சித்தவிசிராந்தியாய் செனக்கியமாயிருந்தேன்" என்று ஒருவரா யிருத்தலேயே சுகமென்று கருதுகின்றனர். பின்னர் பற்பல வியாவகார நிமித்தமாய்ப் பலர்வந்து கூடுங்கால், கஷ்டப்படுத்துகிறார்களென்று அவர்மீது வருத்தமுற்று எப்பொழுது அகலுவரென் றெதிர்பார்க்கின்றனர். இதனையும் ஒருவருக்கே யாகந்த முண்டென்பது பசுமரத்தாணியாம்.

"இவர்களும் கூடஸ்தன் பிரமம் என்கின்ற இருபொருளுண்டெனக்கொண்டே, கூடஸ்த பிரம ஐக்கியம் கூறுகின்றார்கள். இதனால் அக்கூடஸ்தன் பசுத்துவ நீக்கத்துச் சிவப்பேருற்ற சீவான்மாவே யென்பதும், பிரமம் அவனுக்கின்பங் கொடுக்கின்ற பரமான்மாவென்பதும் விளக்கமாகின்றது." என்றார்.

சண் "ஆகின்ற சோயம்" என்னும் திருமந்திரச் செய்யுளை நினைப்பாட்டி "அக்குழையன் இவனே" என்புழி முன்னர்ப் பார்த்த குண்டலமுடைய புருடனை, பின்னர், குண்டலமின்றி யொரு புருடன் பார்ப்பானையின், அவனுக்கு குழையன் வேறு இவன் வேறு என்றுண்டாயிருக்கு மயலை நிவிர்த்திப்பான், உண்மையுணர்ந்த புருடன், "அக்குழையன் இவனே" யென்று கூறுவனையின், அவ்விடத்து, குழையன் என்னும் புருஷனையுருவனும், குழையின்றிய இவனே யென்னும் புருடனையுருவனும், என இருபுருடரிருக்கின்றனரா? இலரே. குழையாகிய வுபாதியினால், வேறுபோற் றோற்றிய பிராந்தியை நிவிர்த்தித்தலேயன்றி வேறின்றாம். அஃதேதமான, கூடஸ்தனென்றும், பிரமமென்றும், நம் நண்பரைப்போன்றும், நண்பரது புத்திரனைப்போன்றும், கண்டப்பொருளா யிரண்டிலவாம். ஒரே ஸ்திரீக்கு, மகளென்றும், மனைவியென்றும், மாதாவென்றும், மாமியென்றும், மதினியென்றும், உபாதியின் வயத்தால் பலபெயர்கள் வருவதுபோன்று, ஒரே சேதனத்திற்கு, வியாபகத் தன்மையாற் பிரமமென்றும், அந்தக்கரண வுபாதியால் வரையப்பட்டிருத்தலிற் கூடஸ்தனென்றும், உபாதியால் வந்த இருபெயரேயன்றி, உண்மையி லிருபொருள்களிலவாம். உண்மையி லிருபொருளிருந்து, அவற்றிற் கைக்கியமாய சையோக சம்பந்தத்தினைக்கூறின், மோக்ஷம் மீண்டும் பிறப்புடை மோக்ஷமாம். கையோகம் அவ்வியாப்பிய விருத்தியாயிருந்து அநித்தியமா யுளதாகலின், ஒருபொருளிற்கு, பிராந்தியிற் றோற்றிய இரண்டாந்தன்மையினை நிவர்த்தித்து, ஒன்றுந்தன்மையினைத் "தத்துவமசி" மஹாவாக்கியம் கூறுவதேயன்றி, நண்பரது கூற்றுப்போன்று, பிணைத்துவைத்திலவாம். சையோக சம்பந்தத்திலால், பிணைத்திருந்தமையிலுனென்றோ, சுந்தரமூர்த்தி நாயனார் மீண்டும் பிறப்புற்றனர். இவரது மோக்ஷம் மீண்டும் பிறப்பைக்கொடுக்கும் மோக்ஷமாகலின், இஃதிவர்க் கிழுக்கின்றிப் பூதிணமே யாம்.

" கூடஸ்தன் சிவான்மாவே " என்றனர். தேற்றகாரங்கொடித்து வரைந்த இவரது புத்தியே புத்தியாம். கூடஸ்தன் என்னுஞ் சொற்குப் பொருள், முன்னமே விளக்கியிருக்கின்றும். " ஜீயன் " என்பவரால் " செந்திராதையருக் கெழுதப்பெற்ற பேதவாததிரஸ்காரத்தின் " கண் ணும் பரக்கக் காணலாம். " பிரமம் " என்னுஞ் சொற்குப் பொருளும் முன்னர் யாம் விளக்கினும். பேதவாததிரஸ்காரத்தின் கண்ணும் விள க்கி யிருப்பது கண்டமைவாராக. வேதாந்தசாஸ்திரத்திற்கூறும் கூடஸ் தன் பிரமம் என்பதன்பொருளே வேதாந்தப் பெரியாரிடத்துக் கேட்டுத் தெரிந்துகொண்டாயினும் வரைந்தாரா? அங்ஙனஞ் செய்யாது, தம்மைச் சர்வஞ்ஞராகமதித்து, தம்மினத்தவர் கூறும், புன்மொழிகளே மெய்ம் மொழிகளாக நம்பி, கூடஸ்தன் என்பதற்குச் சிவான்மா என்றும், பிர மம் என்பதற்குப் பஞ்சகிருத்திய பரமேஸ்வரனென்றும் வரைந்தனர். அதிலும் ஒரு சூதுசெய்து, " விளக்கமாகின்றது " என்று வரைந்தார். ஞானமாகிய விளக்குடையார்க்கு விளங்குமே யன்றி, அஞ்ஞானமாகிய இருட்டுடைய இவர்க்கு விளக்கமாங் கொல்லோ! விளங்காது! காது!

" இனிச் செய்யும் செயலெல்லாம் வியவகாரம். அச்செடல்களின் பலனே முடிவில் அநுபவிப்பதே பரமார்த்தம் என்பது யாவருக்குஞ் சம் மதமே. விவகாரத்திற் செய்வனவெல்லாம் பொய்யாமல், முடிவிலநு பவமும் பொய்யன்றி மெய்யாகுமா? முடிவிலநுபவத்திற்கு மோசமாக விவகாரச் செயல்களைப் பொய்யென்ப தென்னையோ?" என்றார்.

விவகாரம் பொய்யாமல், அதன் பலன் மெய்யாகா தென்று மிகவும் வற்புறுத்துகின்றார். " பிஷ்டபிஷணை நியாயம்" போன்று, கூறியது கூறல் இவர்களது குலதெய்வமாம். முன்னருங் கூறியிருக்க ஈண்டுங் கூறினர். இதனைச் சொற்பன ஸ்திரீ திருஷ்டாந்த முதலியவற்றால் முன்னர் விளக்கியிருக்கின்றோம். ஆண்டறிந் தமைவாராக. விவகாரம் பொய்யென்பதற்கு, விவகார காலத்தின்கண்ணே விவகாரம் பொய் யென்று பொருள்கொண்டனரோ? விவகாரகாலத்தில் விவகாரம் பொய் யன்றும். பரமார்த்தகாலத்திலேயே விவகாரம் பொய்யாம். சொற்ப னம் பொய், சாக்கிரம் பொய்யென்றால், சாக்கிரகாலத்திற் சொற்பனம் பொய்யென்றும், சொற்பனகாலத்தில் சாக்கிரம் பொய்யென்றும் அவ் விரண்டும் சுழுத்திகாலத்திற் பொய்யென்றும், அம்மூன்றும் துரியகாலத் திற் பொய்யென்றும் பொருள்கொள்க. இவ்வா றன்றித் தம் மனம்போன வாறு பொருள் கொள்ளற்க.

" ஒருவன் ஒரு பெண்ணை விவாகஞ் செய்துகொள்ளச் செய்யு முயற்சி சடங்கு முதலிய எல்லாம் விவகாரமே; அதற்குப் பரமார்த்தம் அப் பெண்ணைக் கலந்து அநுபவித்தலேயாகும். ஒருவன் பகையை நீக்கிக் கொள்ளச் செய்யு முயற்சி சமைத்தல் முதலிய செயல்கள் விவகாரம்;

அதற்குப் பரமார்த்தம் அதனையுண்டு இளைப்பாறும் அநுபவமேயாகும். ஒருவன் நிலத்தைச் சீர்திருத்தி நெல்லை விதைத்துச் செய்யுஞ் செயல்கள் விவகாரம்; அதற்குப் பரமார்த்தம் முடிவில் அப்பலனைப்பெற்று அநுபவித்தலேயாகும். இவை போல்வன பல" என்றார்.

விவகாரத்திற்கும் பரமார்த்தத்திற்கும் உள்ள பேதத்தைத் தெரிந்துகொள்ள வேண்டுமாயின் யாவரும் நம் நண்பரிடத்திற்றான் செல்ல வேண்டும். "ஒருவன் விவாகஞ்செய்துகொள்ள முயற்சித்தலும், பசியை நீக்கிக்கொள்ள முயற்சித்தலும், நெல்லை விதைக்க முயற்சித்தலும், விவகார"மென்கின்றார். "அப்பெண்ணை மைதுனித்தலையும், உண்டு இளைப்பாறுதலையும், நெல்லைப்பெறுதலையும் பரமார்த்தம்" என்கின்றார். கடினமேயோ! கவனித்துப் பாருங்கள். நண்பர் கூற்றுப்படி வியாவகாரிகம் பொய்யும் பரமார்த்திகம் மெய்யுமாம். கூறிய திருஷ்டாந்தத்தில், மெய்ப்பொருளென்றும் பொய்ப்பொருளென்றும் வேறுபாடுண்டோ? யாவும் வியாவகாரிகப் பொருளே! அதன்கண் எவ்வாறிருவித கற்பனை செய்தனர்? சிருஷ்டிகாலத்திலுண்டாய், முத்திகாலத்தில் நசிக்கும் பொருளே வியாவகாரிகப் பொருள் என்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. அப்பொருள்கள் பிரமஞானத்திலும் நசிப்பனவாம். சிருஷ்டிக்கு முன்னும், பிரளயத்தின் பின்னும், முத்திகாலத்திலும், உள்பொருளே பரமார்த்திகமென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. அப்பொருள் நிர்க்குணப் பிரமமொன்றேயாம். பிரமஞான மின்றி, வஸ்துவின் யதார்த்த வுணர்ச்சியால் நசிக்கும் பொருள் பிராதிபாஸிகப் பொருளாமென்று சாஸ்திரங்கள் கூறுகின்றன. இவ்வாறிய பேதமுணராது மீண்வாதந்தொடுத்து மீண்சிரமப்பட்டார். ஒருவன் மலடிக்கு மகனுள னெனக் கூறின், அக்கூற்றை, வியாவகாரித மென்றும், அதனால் மலடிக்கு மகனுள னெனவுண்டாய சாப்தபோதத்தினைப் பாரமார்த்திக ஞானமென்றும் கொள்ளினும் நம் நண்பர் கொள்வர். சாஸ்திர முணர்ந்தா னன்றே விரோதந் தோற்றும். சாஸ்திர ஞானமிலார்க்கு விரோதந் தோற்றுவ தியாங்ஙனம்?

"இச்செயல்க ளில்லையாதலந்த அநுபவம் வாய்ப்பதெப்படி? இதுபோலச் சிவர்களாகிய கூடஸ்தர்கள், சிவமாகிய பிரமத்தைச் சேர்ந்தநுபவித்தற்குச்செய்யும் சரியை கிரியாதி செயல்களு மெய்யாயுள்ளனவே. பரமார்த்தாநுபவமு மெய்யாயுள்ளதெயென்று கொள்ளும் பொருத்தம் இவர்களுக்கு விரோதமாய் விபரீதவினைவைச் செய்வதென்னையோ? விரிப்பானேன்? நிற்க" என்றார்.

இதுவும் முன்னர்க் கூறியதனையே "வெள்ளரிப்பழத்துக்குப் பூண்கட்டியது போன்று" கூறுகின்றமையின், கூறியது கூறலென்னும் குற்றமடையாது விடுத்தாம். இதற்குச் சமாதானம் முன்னர் வந்துழிக்கண்ணினர்க.

"இனி ஆதிசங்கராசாரியரும் ஆரம்பத்தில் அகம்பிரம மார்க்கத்தினின்று, பின்பு நீலகண்ட சிவாசாரியரால் தெளிந்து சிவதீக்ஷாதிபெற்றுச் சைவராய் வாழ்ந்தனர். அது அவர் செய்துள்ள நூல்களாலும், சங்கரமௌளீசுர பூஜாதியாலும் தெளியலாம்" என்றார்.

ஸ்ரீமன் மஹாதேவ அநுக்கிரக லீலாவிக்கிரகமாகிய சங்கராசாரிய சுவாமிகள், நீலகண்ட சிவாசாரியரிடத்து சிவதீக்ஷை பெற்றார்களென்று வரைந்தார். அங்ஙனம் அவரிடத்துத் தீக்ஷைபெற்றார்க ளென்பதற்குப் பிரமாணமெங்குளது? பிரமாணமின்றிப் பொய்புகலுவதி லிவரே சமர்த்தராவர். நீலகண்ட சிவாசாரிய ரெத்தன்மை வாய்ந்தவர்? கோகரணத்தில் வைதிக பிராமண குலத்திற் சனித்து, கிரகஸ்தராயிருந்து, சகுணபரமாகப் பிரம சூத்திரத்திற்குச் சாமானிய பாஷ்யமியற்றி வாழும்நாளில் சங்கரபூஜ்ய பகவத்பாதாசாரிய சுவாமிகள், திக்குவிஜயத்தின் பொருட்டு கோகரணஞ் சென்றிருக்குங்கால், வாதஞ்செய்து ஸ்ரீ சங்கரமூர்த்தியிடத்துத் தோல்வியுற்று, தமது சிஷ்யருடன், எமது லோக குருநாதனுக்கு மாணாக்காயினரென்று சரித்திரமிருக்க, மாறாய் சிவரகஸ்யம் நவமாம்சம் 16-வது அத்தியாயத்தில் 61 சுலோகங்களால், பரமேஸ்வரன் பார்வதிக்கு நாமே ஸ்ரீ சங்கரன் என்னும் பெயரோடவதரித்து, பேதவாதிகளோத் தொம்சம்செய்து, அத்வைதத்தை நிலைநாட்டுவோம் என்று பலவாறு புகழ்ந்து கூறியிருக்கும், ஸ்ரீமத் சங்கரபூஜ்ய பகவத்பாதாசாரிய சுவாமிகட்கு, ஜீவர்களுள் ஒருங்குணவைத் தெண்ணத்தக்க நீலகண்ட சிவமெண்பார், தீக்ஷைசெய்தற்கெவ்வா றருகராவர்? இன்னும் நீலகண்ட சிவமெண்பார், வேதாந்தத்தை யொருபுடை யொப்பினவராயிற்றே! நண்பர் கருத்துப்படி அவர் தமதாசாரியராய, ஸ்ரீமத் சங்கராசாரிய சுவாமிகளுக்கு தீக்ஷை செய்வரா? அவர் நண்பருக்கு கேள்விரோதியுமாவரே! நண்பரோ ஈஸ்வரன் கேவலம் நிமித்தகாரண னென்பவர். அவரோ, ஈஸ்வரன் அபின்ன நிமித்த உபாதான காரண னென்பவர். இவரோ ஆண்டானடிமைத் திறங்கூறி மோக்ஷதசையில் இரண்டும் ஸ்திரீபுமான் போன்று சையோகித்திருப்ப தென்பவர். நீலகண்டசிவமோ ஐக்கிய வாத வெவமென்னுஞ் சிவாத்வைதங்கூறுபவர். இவ்வாறு இவருக்கும் நீலகண்டசிவத்திற்கும் மூழுவிரோதமாய்ப் பற்பல விஷயங்களுள்ளன. நீலகண்டசிவங்கூறும் இவ்விஷயங்கள் நமக்கநுகூலமாம். இவ்வாறிருக்க தீக்ஷைசெய்தாரென்று பொய்ம்மொழிபுகன்ற மகாபாதகத்திற்கு என்ன பிராயச்சித்தஞ் செய்துகொள்வாரோ? சிவாவதாரமாகிய சிவத்திற்குச் செய்த பாபத்திற்குப் பிராயச்சித்த மில்லையென்றே, பிராயச்சித்தம் விதிக்கு நூல்கள் விதிக்கின்றன. சிவத்துரோகியுங் குருத்துரோகியுமாகிய இவரைக்காண்டலுந் தகாதாம். இவரெழுதியதுபோன்றே "இவரும் இவர் மதத்தினராய சிவஞானசுவாமி, செந்திநாதையர், ஆறுமுகநாவலர், அம்பலவாணநாவலர், சத்தியோஜாதசிவாசாரியர் முதலியோர்கள், ஸ்ரீ ரங்கத்தில் இராமாநுஜாசாரியார் பரம்பரையிலுள்ள குருமார்களால்,

வைஷ்ணவதீக்ஷை செய்யப்பெற்று, பரம்பரை வைஷ்ணவராவர்கள். இஃது அவர்களது நூல்களாலுணரப்படும்'' என்று யாம் எழுதின் ஒப்பு வரா ? ஒப்பாரன்றே ? அதுபோன்றே, நாம் பொய்ம்மொழி புகலலாமா என்ற அறிவு அற்பமேனும் வேண்டாமா ? பாபங்களிலெல்லாம் பொய் புகல்வதே மகாபாவமென்று சாஸ்திரங்கள் புகல, அதனையுணராது இவரும் இவர் மதத்தினருங் குலத்தொழிலாகக் கொண்டாடுகின்றார்கள். என் செய்வார்பாவம் ! ஊழ்வினை யாரை விட்டது ?

இன்னும் ஒருவிந்தையைப் பாருங்கள். ''அது அவர் செய்துள்ள நூல்களாலும் தெளியலாம்'' என்றார். இதுகாறும் ஸ்ரீரங்கம் வாணி விலாஸ பிரஸில் ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் செய்ததாக அச்சுவாகண மேறியிருக்கும் 115 திரந்தங்களுள், ''நாம் நீலகண்ட சிவத்துக்கு மாலைக்காராகி, சிவதீக்ஷை பெற்றுக்கொண்டோம்''என்று பிரமாணமிருப் பின் எடுத்து வரைவாராக ! பிரமாணங்களை வரையாது கட்குடியன் போன்று, கண்டபடியெல்லாங் கணைப்பது கற்றார்க் கழகன்றும். ''அது அவர் செய்துள்ள நூல்களாலுந் தெளியலா''மென்று எழுதிவிட்டால், வேதாந்திகள், மௌனமுற்று ஒப்புவரென்று வரைந்தனரோ ? இவ்வா றுபக் கண்டனங்கள் வருமென்று முன்னரே யுணர்ந்திருப்பாராயின், இங்ஙனம் வரையாதிருந்திருப்பர். வரைந்தபின் இவர் குட்டெல்லாம் கதத்தருவிற்கு வந்துதானே தீரவேண்டும்.

''வியாசரும் அகம்பிரமச் சார்பின் மதிமயங்கி நாராயணனே பரம் பொருளென்று, விசுவநாத சந்நிதியில் பொய்கூறிக்கை தம்பிக்கப்பெற்று அந்நாராயணரே வந்து பணிந்து பிரார்த்தித்து வேண்டிப்பெற்ற விசுவ நாதர் திருவருளால், தம்ப நீங்கப்பெற்றுச் சைவரேயாகி யுய்ந்தனர்'' என்றார்.

ஸ்ரீ வியாசபகவான் சைவராகி ஆண்டானடிமைத் திறங்கொண்டு ய்ந்தார் என்பதற்கு, புராணங்களில் பிரமாணமுளவோ ? வியாசபக வானே யெழுதி யிருக்கின்றனரா ? அங்ஙனமிருப்பின், தம்மையாப் பின்னே யென்னும் சுதந்த இயற்பெயரினை யுடைய சுவாமிநாத பண் டிதரென்பார் ஸ்ரீ வேதவியாச பகவானை அடங்கன் முறையின் முகவுரை முதலியவற்றில், ''மருளர்'' என்று பலவாறு கிந்தித்து எழுதுவரா ? நண்பர் கூறியாங்கு சைவரா யிருப்பின் சிவஞானசுவாமி யென்னும் நம் பிரான் தமது பேருரையின்கண் ஸ்ரீ வியாசபகவானை, ஓரிடத்தில் சொல் முதலியவற்றும் பலவாறு நிந்திப்பரா ? இவர் மதத்தினர் பலரும் ஸ்ரீ வேதவியாச பகவானை வாய்கொண்டமட்டுந் திட்டுபவராக வின், இவர் மதத்தினர் கொள்ளாத புதுக்கற்பனையினை யிப்பொழுது நண்பர் கற்பிக்கின்றார். பிரமசூத்திரத்தினை யிவர் அகம்பிரம நூலென் கின்றனர். நம் நண்பர் குலகுருவாய சந்திரசேகரையர் அதனைச் சைவ சித்தாந்த சாஸ்திரமென்கின்றனர். இவ்விருவர் கூற்றில் எவர் கூற்றுக்

கூறு கூறுமோ? அறிஞர்கள் உணர்தற்பாலதே. இப்பிரம சூத்திரத் திற் கண்ணியமாக அகம்பிரமச் சார்புடையநூல் ஸ்ரீ வேதவியாச பகவான் செய்திருப்பாராயின் அதனை வரைவாராக! செந்திகாதையரோ ஸ்ரீவியாச பகவானை எக்காலுஞ் சைவசித்தாந்தியே யென்கின்றனர். நண்பரோ முன்னர் வேதாந்தியாயிருந்து, பின்னர் சைவசித்தாந்தியாயினரென்கின் றனர். எப்பொழுதுஞ் சைவசித்தாந்தியா யிருந்திருப்பாராயின், பிரம சூத்திரமொன்றே போதியதாயிருக்க வேறு பேருரைகளியற்றவேண்டிய ஆவசியகமின்றும். வேறுரைக ளியற்றி யதனாலே வியாசபகவானியற்றிய பிரமசூத்திர முதலியன, சைவசித்தாந்தக் கோட்பாடுடையனவல. வைதிக ராய வியாசபகவான் அவைதிகமாய சைவசித்தாந்தத்தைக் கொள்வரா? ஸ்ரீ வியாசபகவானென்னும் பெயருடன், ஒன்பது பேர்கள் அவதரித்தன ரென்று பாகவதம் கூறுகின்றது. நம் நண்பர் கூறியாங்கு சைவராக வாழ்ந்திருப்பின் எந்த அவைதிகக் குருவினிடத்துத் தீக்ஷைபெற்று, எந்த அவைதிக சாஸ்திரத்தினை, எந்தவூரில், எந்தக்குருவினிடத்துப் பாடங் கேட்டு, அவ்வாறநுட்டானஞ் செய்தனர்? இவற்றையெல்லாம் வரையாது, வீண்வெற்றுரையாகச் சைவரேயாய் வாழ்ந்தனரென்று, பிரமாணமின்றி வரையின் யாவ ருடன்படுவர்? யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவல ரும், தமது பிரசங்க ஆரம்பத்தில், "சங்கரன் உலகைக் கெடுத்தான். வியாசன் வீண்வாதந்தொடுத்து வேதமுதலியவற்றைக் கெடுத்தான்" என்று பலவாறான நிந்தை மொழிகளைக் கூறுவரா? அவர்களெல்லா ரும் "அத்வைதி" யென்று ஸ்ரீ வேதவியாசபகவானை யொதுக்கி யிருக்க அவர்களைப்பார்க்கிலும் கூரியபுத்தியுடையவராகலின், நம் நண்பருக்குச் சைவசித்தாந்தி யென்று தோற்றியது போலும்.

"ஸ்ரீராமர் பாலியத்திலே பிரபஞ்சத்தில் விமுகராய், ராஜபாரம் வகிப்பதில் நோக்கமின்றிச் சன்மார்க்கோப தேச விருப்புற்றுக் கிடைக்கப் பெறுமல், எப்பொழுதுந் துக்கமுற்றிருப்பது நோக்கித் தசரதர் வேண்டு கோளுக்காகவே, வசிட்டர் வந்து, (இந்திரனுக்கு அவன் பருவ நோக்கித் தமக்குக் கருத்தில்லாத "மங்கை மாரிடத்தின்பமே யின்பம்" என்பதா தியான காமநூற் போதனை செய்த வியாழ பகவான் போலத்) தமக்குக் கருத்தில்லாத, நாம் பிரமமென்னும் போதனைசெய்து, ராஜபாரம் வகிக் கும்படி யேவினராயினும், ராமர், பின்னர் அகஸ்தியராதியராற் சைவோ பதேசம் பெற்றுச் சிவலிங்க பூஜாதிகள் செய்து சைவராகியே வாழ்ந்த னர்" என்றனர்.

வசிட்டர் தமக்குக் கருத்தில்லாத "நாம் பிரமம்" என்னும் போ தனை செய்தனரென்றார். ஸ்ரீ வசிட்ட பகவான், தாமியற்றிய நூல்களி லெல்லாம், நாம் பிரமமென்னும் வேதாந்தமார்க்கம், உடன் பாடல்லவென்று கூறியிருக்கின்றனரா? அங்ஙனங் கூறியிருப்பின் அவ் வாக்கியங்களை யெடுத்து வரைய அஞ்சுவானேன்? தமக்குடன்பாடில்

லாத வேதாந்தத்தினை யுபதேசிப்பாராயின், அவரைப் பெரியாரென்றியா
வர்கொள்வர்? உண்மையுரைப்போர் பெரியாராவரே யன்றிப் பொய்கூறு
வார் ஒருபோதும் பெரியராகார். ஸ்ரீ ராமபிரானை ராஜரீகப்பற்றுடையவ
ராக்கும்பொருட்டு, யான் வேதாந்தத்தினை யுபதேசித்தேனென்று யாண்
டேனும் ஸ்ரீ வசிட்ட பகவான் கூறியிருக்கின்றனரா? அங்ஙனமின்றே!
ஸ்ரீ ராம மூர்த்தியும், ஸ்ரீவசிட்ட பகவா னுபதேசித்த வேதாந்த
மார்க்கம், உண்மையான மார்க்க மன்மையின், நான் சைவசித்
தாந்த மார்க்கத்தைக் கைக்கொள்கின்றேன் என்று, எந்த நூலிலே
னும் வரைந்திருக்கின்றனரா? இன்றே! இவ்வாறவர்களது பிரமாண
வாக்கியங்களின்றி இவரினத்தவர்கள் பரம்பரையாகக் கூறிவருங் கற்ப
னைக் கதையைப் பிரமாணமாகக்கொண்டு வரையின் அங்கீகரித்தலெ
மோ? எலாது! எலாது! வாசிட்டத்தினையும் மஹா ராமாயணத்தினை
யும் நன்காராய்ந்திருப்பின் இவ்வாறு வரையார்! வரையார்! இதனால்
ராமதாபனீயம்முதலிய வுபநிஷத்துக்களில் கூறப்படும் பரம அத்வைத சித்
தாந்தத்தினை ஸ்ரீராமபிரான் கைக்கொண்டிருந்தனர் என நாட்டியதாம்.

" அர்ச்சுநர் யுத்த பூமியிலே கொலைப்பாவத்துக்கஞ்சி, வில்லையுங்
கைவிட்டு நின்றதுகண்டு, சமயோஜிதமாகக் கண்ணபிரான் நாம் பிர
மென்று உபதேசித்த போதனைபெற்று, அக்கொலைத் தொழிலைச் செய்தா
ராயினும், அவர் நான் பிரமமென்னும் ஆபாசநிலையைச் சிறிதுங் கொள்
ளாமற் சிவபூஜையே செய்து சைவராயே வாழ்ந்தனர் " என்றார்.

யுத்த பூமியில் அர்ச்சுனன் கொலைசெய்தற்கஞ்சி, வில்லைவிட்டு நிற்
குங்கால் கண்ணபிரான் நாம் பிரமமென்று சமயோஜிதமாய் உபதேசித்
தார் என்றார். ஸ்ரீ கண்ணபிரான் சமயோஜிதமாய் யாவரையுங் கொல்
லும்படி யுபதேசித்தனரா? இன்றே! கொல்லப்படுவன சரீரங்களே
யன்றி ஆன்மா வலவென்றும், கொல்வனவும் சரீரங்களேயன்றி ஆன்மா
வலவென்றும், பிறத்தலிறத்தல் உடம்பிற்கேயன்றி ஆன்மாவிற்கின்றென்
றும், நம் நண்பர் மதத்தினரும் உடன்பட்ட யதார்த்த நிலையினை யுபதே
சித்து, அவருக்கிருந்த மயலை நிவர்த்தித்தனரேயன்றி, வேறின்றாம். அத்
வைத நூல்கள் கொலை நூலகளென நண்பரது கருத்தேபோலும். அத்
வைத வுபதேசம் பெறுபவர்களெல்லாங் கோறல் செய்பவரெனக் கருது
கின்றார். நம் நண்பரிடத் துபதேசம்பெற்று, சிற்சில புஸ்தகங்களச்சிடப்
பொருளுதவிய மாணாக்கர்கள், ஆறுமாதம் மாமிச பக்ஷணிகளாயும், ஆறு
மாதம் அமாமிச பக்ஷணிகளாயும் இருக்கின்றார்களென்பதை யுணர்ந்து,
அவர்களை அக்கொலைப் பாதகத் தொழிலினின்றும், நிவர்த்திப்பிக்கா
திருக்கும், இவரே கொலைசெய்யும்படி யுபதேசிக்குங் குரவராவர். மூக்
காலுணர்ந்து, விஸ்வரூப தரிசனங் காண்பித்த ஸ்ரீ கண்ணபிரானது
உபதேசத்தினை, " ஆபாச நிலையென்று கருதி சிறிதுங் கொள்ளாது அர்ச்
சுனர் வாழ்ந்தாரென்று ஆபாசச் சொற்புகன்று அவக்கடலில் மூழ்க

ஆசைப்படுகின்றார். ஸ்ரீ கண்ணபிரானை அர்ச்சுநர் தெய்வமாகப் பாவித் திருக்க, அவரதுபதேசத்தினை யாபாச வுபதேச மென்று கொள்வரா ? அங்ஙனங் கொண்டிருப்பின், யாண்டாயினும் அவரதுபதேசம் ஆபாச மென்று கூறியிருப்பரோ ? அங்ஙனங் கூறுதிருப்ப, நம்மன்பர் ஆருடத்தா லறிந்தனரா ? அர்ச்சுநர் எவரிடத்துத் தீக்ஷைபெற்றுச் சைவராய் வாழ்ந் தார் ? பிரமாணமின்றி வெற்றுரையாகத் தாமெழுதிய 21 பக்கமுள்ள புத்தக முழுவதும், உலகத்திலுள்ளவர்களுள் பெரும்பான்மையோர் சைவராய் வாழ்ந்தனரென்று எழுதி முடித்தார். எழுதி முடித்தாராயி னும், சமணர் பௌத்தர் முதலியோர்களைச் சைவரென்று கூறுதி விட் டதன் கருத்து இன்ன தென்று புலப்படவில்லை. அவர்களையுஞ் சைவ ரென்றே சொல்லிவிட்டால் அறுபத்து மூவரையும், வேதாந்தப் பெரி யோர்களையும், வைஷ்ணவப் பெரியோர்களையும், மூர்த்திகளாகச்செய்து ஸ்தாபித்துப் பூஜை செய்துவரத் தாம் விரும்பும் சிவாலயங்களில் இட மின்றிப் போ மெனக் கருதியே யொதுக்கினர் போலும்.

" ராமர் அர்ச்சுநர் இருவரும் அப்பொழுதுகொண்ட நிலைமைநோக்கி, அவர்களை யந்தந்தக் காரியங்களிற் செலுத்துதற்காகவே, வசிஷ்டர் கிருஷ்ணரிருவரும், வாசிஷ்டமும், பகவத்கீதையும் உபதேசித்தார்களன்றி, உபதேசித்த இருவர் கருத்தும், உபதேசம்பெற்ற இருவர் கொள்கையும், அதுவல்ல வென்பதை, " அர்ச்சுநர்க்கு மிராமருக்கு மதிகார மவை நோக்கி யறைந்த நூலின், கருத்தறியாய் " என்ற மகாராஜாதுறவு நூலினுலுங் காணலாம். இந்நூல் நாம் பிரம மென்பவராற் பாராட்டப் பெற்றதே " என்றார்.

உபதேசித்தவருக்கும் உபதேசம் பெற்றவருக்கும் உடன் பாடல்லாத ஒரு மதத்தினை யுபதேசிப்பானேன் ? அவர்களதனை அங்கீகரித் துடன் படுவானேன் ? இதுவே நூல் வழக்கென்பாராயின், நமது கண்பரதாகமத் தினைத் தமது கருத்தின்றியே, யீஸ்வரன் உபதேசித்தாரென்றும், அதனை யிவர் மதத்தினர் உடன்பாடின்றியே வாமாகமம் போன்று உடன் பட்டாரென்றும் பிறர்கூறின் எத்துன்பமுறுவரோ அது போன்று பிற மைப்பழிமொழிகள் நாம் கூறின் ஒப்புவரா வென்று சற்றேனும் யூகம் வேண்டாவோ ? இவ்வாறு கூறியதலுல் இவர்க்கு என்னையிலாபங்கிடை த்தது ? இவ்வபிப்பிராயத்தினை விளக்குதற்கு மேற்கோளாகக்கொண்ட மகாராஜாதுறவுச்செய்யுள் ஒன்றனையேனும், முன்பின் உள்ளவற்றை யேனும் ஆராய்ந்துவரைந்தனரா ? " ஆத்திரக்காரனுக்குப் புத்திமட்டு " என்னும் பழமொழிப்படி, அவசரப்புத்தியால் விசார மின்றி " அருச்சு நர்க்கு மிராமருக்கு மதிகாரமவை நோக்கியறைந்த நூலின் கருத்தறி யாய் " என்னும் இவ்வளவு வாக்கியத்தினைத் " திருப்பதி யம்பட்டன் போன்று " பிரமாணமாக எடுத்துக்கொண்டனர். மேல் " ஞாத மொன்றே பிரமாணம், சரிதையது கணக்கன்றாகும், விருத்தம், அறிவாசார மூடையோனே ஞானி, இல்லோன் விருத்தனாகும், திருத்தமுடன்,

அமைச்ச! இது துணிவென்றே யுட்கொள்வாய், நீ ருரை,'' என்றுள்ள வாக்கியத்தினை யெடுத்திருப்பாராயின் தமக்கு அநுகூலமா யிருக்கின்ற தென்பதும், பிரதிகூலமாயிருக்கின்றதென்பதும் விளங்கும். அவ்வளவு தூரஞ்செல்லுதற்கு ஆற்றலற்ற இவர்க்கு முன்பின்னுள்ள விஷயங்க ளெங்ஙனங்கோசரமாம்? முன்பின்னுள்ள சரித்திரத்தின் ரூடர்பினை யாவதுணர்ந்தனரா? உணராது வெற்றுரையாகக்கூறி ''வாய்க்கொழுப் புச் சீலையில் வடிந்தது போன்று'' என்னும் பழமொழிக்கு இலக்காயினர்.

''நன்மகாராஜன் துறவடைந்து, ஆரண்யத்திற் பிரமாநந்த முற் றிருக்குங்கால், வித்தக னென்னும் மந்திரிசென்று, அரசனைத்தரிசித்து, ஞாநமடைதற்கு இல்லறமும் போதியதாயிருக்க, துறவறமெற்றிற்கு?'' என்று விரைவினன். அதற்குத்தக்க சமாதானங்கள் கூறியபின், ''ஞாந மடைந்தபின் ஸ்ரீ ராமர் அர்ச்சுநர் முதலியோர்கள்போல் இல்லற வாழ்க்கையிலிருக்கலாம்'' என்று மந்திரிகேட்க, அதற்குச் சமாதானமாக நன்மகாராஜன், லோகபாலர்களாய், அவதார புருஷர்களாயுள்ள ஸ்ரீராமர் அர்ச்சுநர்களின் உத்தமாதிகாரத் தன்மையினைக்கருதி, ஸ்ரீ வசிட்டபக வானும் ஸ்ரீ கண்ணபிரானும் உபதேசித்த ஸ்ரீ வாசிட்டம் பகவற்கீதை யென்னும் நூல்களின் கருத்தினை யுணர்ந்தா யில்லை. அந்நூல்களிற் கூறப்பட்ட பிரமஞாநமொன்றுமே பிரமாணமாக யாங்கொள்ளத்தக்க தாகும். ஸ்ரீராமபிரான் சமுத்திரத்தில் கரையிட்டு, இலங்கைசென்று இராவணனைச் செயித்ததும், அர்ச்சுநர் பாரதப்போர் நடாத்தினதுமாய சரித்திரங்களை யாம் கொள்ளேம். அவைகள் பிராரத்த கருமாநுசார மாகலின் ஞாநசாஸ்திரங்கள் விதிப்பனவலவாம். ஞாநசாரமுடையவர் யாவரோ அவரே ஞாநியாவர். ஞாநசார மிலாதவர் ஞாந சாஸ்திர விரோதியாவர். அமைச்ச! திருத்தமுடன் இது துணிவென்றே யுட் கொள்வாய் என்று கூறி, நான் இல்லறத்துக்குவரேன். நீ யுனதூருக்குச் செல்வாய் என வுபதேசஞ்செய்துவிட்டு மௌந முற்றிருந்தனர் என்று அம்மகாராஜாதுறவு என்னும்நூல் கூற அதனை யுற்றுநோக்காது தமக் கதுகூல மென்று கருதி ''அருச்சுநர்க்கு மிராமருக்கு மதிகாரமவை நோக்கி யறைந்தநூலின், கருத்தறியாய்'' என்னும் இவ்வளவு வாக்கிய த்தினை மாத்திரம் ''அந்த கோலாங்கூல நியாயம்'' போன்று கைக்கொண் டார். கைக்கொண்டதனைலன்றே மதங்கொண்ட பசுவாவினைப்பிடித்துத் தன் வீட்டுக்குச்செல்ல நினைத்த குருடன் போலாயினர். அவ்வாக்கியத் தினைக் கொள்ளாதிருப்பின், இக்கதியுற வேறருந்தவஞ் செய்யவேண்டும். தவமின்றி யிக்கதி யடையலாமென்று கருதியன்றே, இவ்வாக்கியத்தினைக் கையாடினர்.

''இந்நூல் நாம பிரமம் என்கின்றவர்களால் பாராட்டப்பெற்றதே'' என்றார்.

ஒரு நூலிற் கையாட நினைத்தவர் தமக்கு எதிரிகளாயுள்ள வேதாந் திகளாற் பாராட்டப்பெற்ற நூலில், பாதகமா யிருக்குமேயன்றிச் சாதி

கமா யிராதென்று கருதாது, " ஒளியப்போய் தலையாரிவீட்டி லொளிந் தான் " கதைபோன்று, எதிரிகளாயுள்ள வேதாந்திகளது, தமக்கு முழு விரோதமாயுள்ள வாக்கியத்தில் நுழைந்து, மறைதலாகிய பிரமாணமா கக் காட்டுதலைச் செய்யச் சென்று சிறைவாசமாயினர். இவ்வாறு செய் யாது சும்மாவிருப்பின் சிறைவாச மிவர்க்குக் கிடைக்குமோ ? அந்தோ ! இவரதற்பமதி யிருந்தவாறென்னே !

" இனி அந்த வாசிஷ்ட கீதாதிகளிலும் சைவநலங்கள் பொதிந்துள் ளன. இதனை " அற்பவறி வினர்க்கிந்த வரிய மெய்ந்நூ, லினமுறு மட மைதரு மிதுபோன் மற்றை யெந்த நூல்களு மடமை யியற்று தன்றே " ' ஆய்ந்தவென் சிந்தை சிவ நாயகன் வசமா கைக்கே, யேய்ந்தது நிலையுங் கொள்ளா திறைவனைப் பிரிந்தாள் போல '—' ஆவா விப்போ துள்ளபடி யறியு நெறியி லெனை யறிந்தேன், ஓவா விகற்ப மற்றறிவுள் ளொளியாஞ் சிவ னுருவிதுவோ'—'ஈனமில்லை வாகமர்க்குச் சிவனுய்' என்பன வாதிக ளால் விளக்கும் வாசிட்டத்தாலும் " என்றார்.

வாசிஷ்டத்தில் சைவநலங்கள் பலவுளவென்று சிற்சில செய்யுளிற் சிற்சில வாக்கியங்களைக் காண்பித்தார். முற்றிலுங் காண்பித்திருப்பின் முரண்வெளியாம். வாசிஷ்டத்தின் வைராக்கியப் பிரகரணத்தில், ஸ்ரீராம பிரான் ஸ்ரீ விசுவாமித்திர முனிவர் கேட்ட வினாவுக்கு, தனது மனோ பாவத்தைச் சொல்லிக்கொண்டு வருமிடத்துள்ள செய்யுட்களுள்,

" மாந்தர்தம் இளமை நில்லா தினையெலா மநத்தி னெண்ணிச்
சாந்திகொள் பெரியோர் நீவிர் சமாதியோ கத்தைச் சார்மின்
ஆய்ந்தவென் சிந்தை சிவ நாயகன் வசமா கைக்கே
யேய்ந்தது நிலையு மெய்தா திறைவனைப் பிரிந்தாள் போல " 117

என்னும் இச்செய்யுளுமொன்றும். இதன்கண் தமக்கு ஏதோ அநுகூல மிருப்பதாகக் காண்பித்தார். " ஆராய்ந் தறிந்த என் மனமானது கூட ஸ்த பிரம வைக்கியத்தினை யடைவதற்கே யிசைந்தது. நாயகனைப் பிரிந்த நாயகியைப்போல, ஆத்ம நிச்சயத்திலும் விஷய விச்சையிலுஞ் சேராது." என்பது நண்பர் காட்டிய இரண்டு வரிக்கும் பொருளாம். இதன்கண் இவர்க்கு யாதும் அநுகூல மின்றிப் பிரதிகூலமாய், எமக்கு அநுகூலமா யினவாறு காண்க. வலியுளதேல் இதன் மூலசுலோகத்தினையும் ஆராய் ந்து பார்ப்பாராக! இச்செய்யுளில் முன் இரண்டு வரியில் இவர் கூற்றுக்கு மாறாய்ப் பாசமறித்திய மென்று கூறப்பட்டிருக்கின்றது.

இதற்கு முன்னுள்ள,

" இறப்பிலா வின்ப மோக மிறையுமீட் டெண்ண மின்றி
மறப்பதே நல்ல தென்று மதித்துயர் மநத்தி னுக்குத்
திறப்படக் காணப் பட்ட திவ்வெனச் சித்தி னுலே
யுறப்பெறு மெப்போ தப்போ துயர்பர சுகம தாமே. " 10

"வழிபடு மிதனை விட்டு மற்றுள நூல்க ளென்னுங்
குழிகளிற் புரண்டஞ் ஞாநக் குணத்திறற் பிறப்போர்க் கெல்லா
மொழிவற வொருவர் செய்தற் குரித்தன்ரு யத் தானே யுண்டாங்
கழிதலிற் பரம வின்பங் கற்பங்க ளாலுங் கூடா." 11

என்னும் இவ்விரண்டு செய்யுட்களும், இன்னும் பற்பல செய்யுட்களும் இவர்க்குப் பிரதிகூலமாகக் கூறியவற்றை யுணர்ந்திருப்பாராயின் இச்செய்யுளைக் காண்பித்திரார். இரார்.

முமுக்ஷுப் பிரகரணத்திலுள்ள,

"ஊனமிலா ஞாநநூல் விசாரத் தாலே யுயர்வீடு நண்ணு மெனலுண்மை யன்ரே, தானறியு மநுபூதி ஞாந நன்னூற் சற்குருவிம் மூவகையுந் தம்மி லொத்தே, யானவகை யியற்றில்விடா தான்மாத் தோன்று மற்பவறி வினர்கற்ற வரிய மெய்ந்நூ, லீனமுறு மடமைதரு மிதுபோன் மற்ற வெந்தநூல் களுமடமை யியற்ரு தன்றே." 14 என்னும்

இச்செய்யுளில், பின்னுள்ள ஒன்றரை வரியில் தமக்கநுகூலமிருப்பதாகக் காண்பித்தார். முன்னுள்ள வாக்கியங்களில் சுருதி குரு சுவாநுபவ மூன்றுங்கூடில், எப்பொழுதும் நீக்கமற நிறைந்த ஆன்மாத் தோன்றும் என்று கூறப்பட்டிருக்கின்றது. பின் வாக்கியத்தில் அற்ப அறிவுடையார் அப்பியஸித்த ஞாநசாஸ்திரமானது, இழிவுள்ள அஞ்ஞாநத்தினைக் கொடுக்கும். இந்த ஞாநசாஸ்திரம் போன்று அற்ப அறிவினையுடையார்க்குக் கருமம் பத்தியினைக் கூறுஞ் சாஸ்திரங்கள் அஞ்ஞாநத்தினைக் கொடுக்கா தென்று, நம் நண்பரது அற்ப அறிவின் அப்பியாஸத்தினையே கண்டித்துப் பேசியிருக்க அதனை யுணராது பாதகத்தினைச் சாதகமாக வுணர்ந்து பாணுசூரனைப் போன்ரு யினர்.

"மடமையொடு வாழ்கின்ற வாழ்வி னீசர் மனைதொறுமோட் டிரந் துழல்கை வரிசை யாகு, மடர்தனகட் புறவுபர தேசந் தீர்த்த மாச்சிரம மெய்வருத்த மனைத்தி லுறும், தொடருதவி யில்லமர வருத்தத் தாலே துர்யபத முறுமுத்தித் துவார பாலர்க், கடவகுணங் கேட்டியுயர் சாந்தி வந்தாற் காதலுந்துன் பமுங்கதிர்முன் கங்குல் போற்போம்" 15

என்று பின்னுள்ள செய்யுளில், நண்பரது அற்ப அறிவின் அப்பியாஸத்தினை யிகழ்ந்து பேசியும், பாசத்தினைப் பொய்யென்று கூறியிருத்தலையும், நேத்திரத்தினைக் கீழ்நோக்கிப் பார்த்திருப்பரேல், தமக்குப் பிரதிகூலமான செய்யுட்களை மருண்டு கையாடார். கையாடினவர் பிறர்பாலதன் பொருளைக் கேட்டுணர்ந்தாயிலுங் கையாடினரா? பிறர்பாலுணர்ந்து கையாடியிருப்பின் இவ்வாரூய சங்கடத்திற் காளாகாமற் றப்பித்துக்கொள்ளலா மன்ரே?

உபசாந்திப் பிரகரணத்திலுள்ள பிரகலாதன் கதையில்,

"ஆவா விப்போ துள்ளபடி யறியு நெறியி லெனை யறிந்தே
ரேவா விகற்ப மற்றறிவுள் ளொளியாஞ் சிவ னுருவி துவோ!

தாவா தெங்கு முளாஞாஞைத் தத்து வத்திற் சகமெல்லா
மேவா நின்ற விரவிமுதற் கடமீ ரூக வினங்கியதால்" 30

என்னும் இச்செய்யுளில் முன் னிரண்டடியைத் தமக் கநுகூலமாகக் குறித்தனர். அதன்கண் யாதநுகூலமுளது? அது என்னையாணுணர்ந்தேன், அறிவுக்குட் பிரகாசரூபமான ஆத்மசொரூப மிதுவோ? என்று தன்னையறிந்த ஆச்சரியத்தினைக் கூறுவதாம். பின் னிரண்டடியில், "ஆத்மாவாகிய கூடஸ்த சொரூபத்தில் எல்லாப் பிரபஞ்சங்களிலும், விரவிய சூரியன் முதல் கடம் வரையுள்ள வஸ்துக்கள் யாவும் வினங்குகின்றன" என்று கூறப்பட்டிருக்கின்றது. இதனனும் இவருக்குக் கைவந்த தொன்றுங் காண்கிலம்.

மேற் கூறிய பிரகரணத்தி லுள்ள வீதகவ்வியன் கதையில்,

"சூரியமென் பார்க்கதுவாய்ப் பிரம மென்று சொல்லுவார்க் கதுவாய் விஞ் ஞாக மென்று, தானியம்பு வோர்க்கதுவாய்ப் புருட ஞகிச் சாங்கியர்க்கு மியோகியர்க்கீ சன்ரு ஞகி, யீனமில்லை வாகமர்க்குச் சிவஞய்க் காள மென்பாருக் கதுவாய்மத் தியர்கட் கெல்லா, மானமுறு மத்தியமாய்ச் சமமாய்க் காணு மந்தினர்க்கெல் லாமான பொருடா ஞனென்" 74

என்னும் இச்செய்யுளின்கண், "ஈனமில்லை வாகமர்க்குச் சிவஞய்" என்னும் வாக்கியம் தமக்கு முக்கிய ஆதாரமான அநுகூல மென்று, "உண்மை நாயன்மார் மகிமை" யென்னும் நிந்தா நூலினும், இந்நூலினும் வரைந்தனர். தமிழில் மொழிபெயர்த்த "ஆளவந்தார் முனிவர்" எதுகைத்தொடை நோக்கி "ஈனமில்" என்னும் அடைப்பதங் கொடுத்திருக்கின்றனரென்றுணரு முரனின்றி, புத்தகங்கடோறும் அதனையே யெடுத் தெழுதுகின்ரூர். அச்செய்யுளின்கண் அவ்வம் மதத்தினர்க்கு அவ்வத் தேவதையாக, ஒரே பிரமப்பொரு ளிருக்கின்றதென்று, அவிரோதபாவம் கூறப்பட்டிருக்கின்றதே யன்றி, இவர் கருதுவது போன்று விஷமபாவம் கூறப்படவில்லையாம். இதற்கு மூலமாயுள்ள சுலோகத்தின்கண், "ஈனமில்" என்னும் அடைச்சொல் இன்றென்று இனியேனும் வடநூல் வல்லார் வாய்க்கேட் டுணர்ந்து அதனை வழங்காது வாழ்வாராக! "ஈனமில்" என்னு மடை, 'சைவாகமர்க்கு' என்னுஞ் சொல்லிலுள்ள "சிவ" என்னுஞ் சொல்லுக்கு உரித்தாமே யன்றி, ஆகமத்திற்காவது, அதனை யுடையார்க்காவது உரிய தன்ரும். தூராந்வயம் குற்றமுடைத்தாகலின். இவ்விஷயத்தினைச், சங்கரத்வேஷியரின் வாய்ப்பூட்டின் இரண்டாம் பாகத்தில் ஸ்ரீ சுப்பய்ய சுவாமிக ளவர்கள், கண்டித்திருக்கின்ரூர்களாகலின், யா மீண்டு விரிக்காது விடுத்தனம். இவர் காட்டிய வாசிட்டச் செய்யுள் நான்கிலுலும், இவர் யாதொரு பயனும் பெரூது, யாம் பயன் பெற்றமையின், இச்செய்யுட்களைத் தமக் குரியதென மறந்தும் நினையாதிருத்தலே சாலும்.

"எண்ணிய வுலகமு முலகுக் கீசனும்
புண்ணிய பாவமும் பொய்யென் றேகொள்வார்

"கடப்பரி தாய நரகமென் கின்ற கடல்களில் வீழுவே கடவார்" என்பனவாதிகளால் விளக்கும் பகவற்கீதையாலும் நன்கு தெளியலாம்" என்றார்.

அசுரர்களுடைய சுபாவத்தினைக் கூறும் 16-வது தேவாசுர சம்பத்து விபாக யோக அத்தியாயத்தி லுள்ள,

"எண்ணிய வுலகமு முலகுக் கீசனும்
புண்ணிய பாவமும் பொய்யென் றேகொள்வர்
பெண்ணினே டாண்புணர் கின்ற பெற்றியா
னண்ணிய யாவையு மென்று நாட்டுவார்." 7

"தொடக்கற வில்லா நினைவெனப் பட்ட சூழலைப் பற்றியே சுழல்வா
ரடக்கரி தாய மயக்கமென் கின்ற வலையுளே யகப்பட்டு நின்று [திக்
ருடற்குடில் வாழ்வாம் புன்னுனிப் பனிநீ ருலர்ந்திடி னுயிர்நடக் கெய்
கடப்பரி தாய நரகமென் கின்ற கடல்களில் வீழுவே கடவார்" 13

என்னும் இச்செய்யுட்களில் முற்செய்யுளில் முன்னிரண்டடியையும், பிற் செய்யுளில் நான் காவதடியையும், தமக்கநுகூலமாக வொப்பினர். யாதநு கூலமுளதோ? அதன்கண் உலகாயதது சுபாவத்தைக்கூறி, மேலிரண் டடியில் உலகத்திற்கு ஸ்திரீபுருஷர்கள் சையோகத்திற்கேதுவாய காம மே காரணமென்று கூறுவார்க ளென்று கண்டிக்கப்பட்டிருக்கின்றது. பிற்செய்யுளில் அவர்களையே 'நரகத்தில் வீழ்வார்கள்' என்று நிந்திக்கப் பட்டிருக்கின்றது. இதனையும் இவருக்குக் கிடைத்த பலன் யாது? மாறாய் அந்நூல் முழுதும் பிரமமே நித்தியம், பசு பாசம் அநித்திய மென்று கூறப்பட்டிருக்கின்றது.

அன்றி, ஒரு நியாயஸ்தலத்தில் இவர்போன்ற நுண்ணிய மதியுடைய வக்கீலொருவர், பத்திரிகையில் "மாஜிஸ்டிரேட் 163-வது செக்ஷன்படி போக்கிரியைத் தண்டித்தார்" என்றிருப்பின், அவ்வாக்கியத்தின் தொ டர்பறுத்து "மாஜிஸ்டிரேட்.....போக்கிரி....." என்றிருக்கிறது என்று நியாயாதிபதியிடங்கூறின், நியாயாதிபதி தொடர்பு பாராது பத்தி ராதிபர்க்குத் தண்டனை விதிப்பரா? அவ்வக்கீலுக்கு மதிப்புரை கொடுப் பரா? அதுபோல வாசிட்டாதி நூல்களில் மூழுக் கவிகளின் மூடர் பறுத்து, "நெடுமால் திருமருகா.....மதுராபுரி யம்பிகையே" என்று கூறும் இக்கூரிய மதியுடைய வையிய வயோதிகரும் வாசிட்டாதி நூல் களில் மூழுக்கவியினை எடுத்து பிறர்க்குக்கூறின் தனக்கு விளங்காத அர்த்தத்தினைக் கூரிய மதியையுடைய அவர்கள் அக்கவிகளின் உரைவே றென இவர் முகத் தறைவர். அதனற் றமக்கு மானக்கே டுண்டா மென அஞ்சிச் செய்யுட்களைத் துண்ட துண்டமாய்க் கோறல் செய்து காட்டு கிறார். ஆனலும், அறிஞர்கள் இவர்போன் மதி மயங்காக் காகலின், யாங் காட்டிய மூழுக் கவியினையும் அதனது கருத்தினையு மிவ ரின்னு மவலக் கடல் வீழ்ந் தழியா திரங்கி யிவர் முகத் தறைவாராக.

" அன்றியுங் கண்ணர் அர்ச்சுனர்க்கு விஸ்வரூபங்காட்டி எல்லாம் நானே. என்னைத்தவிர வேறொன்று மில்லை. என்னையே நீ சரணாக அடைந்து பூசிப்பாயென்று கூறியது, அக்கண்ணர், உபமன்னிய பகவானுடைய திருவடி சிரமேற்கொண்டு சிவதீக்ஷைபெற்றுச் சிவோகம் பாவனை கைவரப் பெற்ற திருவருள் வலியாலன்றி வேறில்லை. இதனை 'யாதவன்றுவ ரைக்கிறை யாகிய, மாதவன்முடி மேலடி வைத்தவன்' என்பதனாலும், இன்னும் பாரதம், அரிவம்சம் முதலிய நூற்களாலும், அர்ச்சுனர் விசுவரூபங்கொண்ட கண்ணனை நோக்கி நீர் யாரென்று கேட்டபோது, நான் ஆதிபுருடனையே சரணாக அடைகின்றேனாதலால், அவனேயான். சர்வசங்காரஞ் செய்கின்றவன் நானே யென்று கூறியதனாலும், அதுகேட்ட அர்ச்சுனரானவர், அக்கண்ணர் சிவபாவனையால் அச்சிவமாகி நின்று கூறியவுண்மை தெரிந்து, சிவபூஜையே செய்துவந்தமை முதலிய பல காரணங்களாலும் தெளியக் காணலாம்" என்றனர்.

இவ்விஷயம் எம்மவராற் பலகாலும் மறுக்கப்பட்டிருத்தலினாலும், தாமியற்றும் புத்தகங்களோறும் இதனையே யெழுதுவதனாலும் இதனை விசாரித்திலம்.

பகவற்கீதை 7-வது மாயாரூப அத்தியாயத்தில்

" தானந்த மிலியுவமை தரநின்று தாவரிய
வானந்த வுருவமென வெனையொன்று மறிவதிலர்
கோனந்தன் மகனாசர் குலமைந்த னிவனுமெழி
லானந்த மிலியொருவ னிவனென்ப தறிவிலிகள்" 20

" மருவுற்ற பிரகிருதி யதிலுற்று மறைவனெழி
லொருவர்க்கு மறியும்வகை வெளிநிற்ப திலையுலகில்
வெருவுற்ற பெருமயலின் மன்முற்று விழிமறைய
வருவுற்ற வெனையுலக மறிகிற்ப திலையடைய" 21

என்று உள்ள இவ்விரண்டு செய்யுட்களாலும் ஸ்ரீ பகவானே நம் நண்பர் போன்ற அறிவிலிகட்கு, தமது மகிமை விளங்காதென்றும், தம்மைப் பாவவிசேடத்தாற் சிவரூபப் பாவிப்பார்களென்றும், கூறியிருக்கின்றமையின், இவர் கூறிய கூற்று, இவரது போகூழ்வலியின் பாவ விசேடத்தாலாம்.

" தத்துவாயர், சிவப்பிரகாசர், சிதம்பர சுவாமிகள் முதலிய பிற்காலத்தவர்களும், " தமக்குமே லொரு கடவுளுண்டு, அவன் பரமசிவனே" யெனக்கொண்டு, பல நூல்களாற் றுதித்து, ஆண்டானடிமைத் திறங்காட்டி வழிபட்டு வாழ்ந்தார்கள்" என்றார்.

பொய்புகலப் புகுந்தவர் பொருந்தும்படியாகப் புகலலாகாதா ? "பிடிக்குப்பிடி நமச்சிவாயம்" என்னும் உலக வழக்குப்போன்று, வாக்கியங்களோறும் ஆகேஷபமுண்டாமாறு எழுதுவது அறிஞர் கூற்றன்றே ! தத்துவராய சுவாமிகள் ஆண்டானடிமைத் திறங்கொண்டு சைவராய் வாழ்ந்தார்

ரென்று வரையப் புகுந்தவர், அவர்களியற்றிய, "ஈச்வரகீதை, பிரம கீதை, துறுந்திரட்டு, பெருந்திரட்டு, பாடுதுறை, அடங்கன்முறை," முதலிய நூற்களைத் தம்மிடத்துப் பொருளில்லாதிருப்பினும், பிறர்பாற் பொருளாயாசித்தாவது நியமத்திற்குப்பெற்று, நன்காராய்ந்து வரைந்தனரா? வரையாது, தத்துவராய சுவாமிகள் முன்னர் வேதாந்தியா யிருந்து, பின்னர் யாரிடத்தாவது சைவதீக்ஷைபெற்று, சைவராய் வாழ்ந்தாரென்று வரையாத வோர் சூழ்ச்சியுஞ் செய்தார். "பலநூல்களாற் றுதித்து "என்று பாசஞ்சு பண்ணினவிவர், பல நூல்களைக் காண்பித்தனரா? அப்பல நூல்களை, யிவருக்கநுகூலமா என்று பலரும் பார்க்கும்படி காண்பிப்பாம்.

"சதிவன்னபோதம்"

"பூசனையு மதுசகல பொருளுமறி தமையு
மீசனையும் வேறுதற வறிவதறி வெனவே"
"ஊசற்கி யப்பா சிவர் தங்க ளுடம்பி ரண்டு மிலக்கணை
வாக்கி யப்படி நீக்கி னுலொரு வத்து வேபர வத்துவே"

அந்நவவதைப்பாணி.

"பணியப் படுவா ருள்ளிருக்கும் பாதை வதையைப் பாராதே
மனியையத் தலக்கி னிணுகினென வரும்பேய் தனக்கும் வாரீரே."
"வேதா கமங்கள் சொன்னபொருண்மெய்ம்மையறிவார்போலிருந்து
பேதா பேதஞ் சாதிக்கும் பெரும்பேய் தனக்கும் வாரீரே."
"ஞானம் போலே பலசொல்லி நாடற் கரிய முத்தியினுங்
தானுஞ் சிவனும் பாசமுமென் சைவப் பேயுந்தும் வாரீரே"
"கம்மாலே காண்கின்ற நாமும்போய் நாமாகி
சும்மாவே யிருந்தனங்காண் சும்மேலோ சும்மூலக்காய்"
"அழிந்தற மாலை யிருட்டெலா மறிவுரு வாகமம் மண்ணலார்[யே"
மொழிந்தது மிங்கொரு வார்த்தையே மூவுல குமொரு வார்த்தை
"எம்பி ரானை வந்தெ திர்ந்த திறந்த வுருவ னிங்குரு
வும்பர் வானு ருனிருமை லொன்றி னுனவ் வொளியொடே"
"அல்ல லான காம ராச னுதி யான சேனையு
மில்ல வாகி ஞான ரூப மாகி யேயி லங்குமே"

"பொய்ம்மை யாகிமெய் போல விளங்கிய,பொருடெ ரிக்கினற் புற்
புதக் கண்ணினை,மெய்ம்மை யான பொருளா யுளத்தினில், மீண்டு பார்க்கில்
வெறுங்குரு டாவன"

"என்றிவ் வுலகுள தன்று முதலெதி,ன்று வாயிதி னென்றுதா,
னின்ற தனைவிலை யென்று மொழிவற, நின்ற தொருபொரு ளென்
றுமே"

" மூத்திவரும் படியன்றி முற்றுடலம் விடுமளவுங்
கத்திவரும் படியாகக் கற்பித்தா யெங்களாயே "

" மாசாய நாவுடையார் வாய்திறந்தா லவர்களுடன்
பேசாம லிருந்துவிடு மதுவன்றே பெருந்தவகமை "

" வைதாரை வாழ்த்தினர்போன் மதித்தென்று மறக்கொடுமை
செய்தாரை யறியாத செயலன்றே செயலாதல் "

" பொதுவிதுவாய் நிறைந்தபாம் பொருளைபோல் யாவர்க்கு
மதுவதுவா யிருந்துவிடு மதுவன்றே வவிரோதம் ".

பாடு துறை.

" மெய்ஞ்ஞா நிகட்கு விரதங்கள்கூடாணம மெல்லியலா யேடிகேளா
யஞ்ஞாந மாயையைச் சுட்டுக்கொடல்ல தறிவுதியா துதித்த
விஞ்ஞாந மாயையிலு லதன்கா ரியத்தாகும் விரதமயரன் [வாதே"
மெய்ஞ்ஞாந மாகி விளங்கலான் மேல்வினை மேவலொன் றுலுமே

" இந்த வுடலம் விடுவதன் முன்விரைந் திப்பவந் தீராவிடின்
வந்து வந்துபல வுகிப்பிறந் தெய்த்து மாண்டே விடுவர் கிடீர் "

" நான்மறையோதிப் பொருளுணர்த்து நாடறியக்கல்வி சாற்றினுலும்
தானதுவாகை யரிதுகாணுந் சலிப்பறநிற்கை யரிதுகாணும் "

" ஆறுசமயப் பொருளுங்கற்றே யங்குள்ள தர்க்கங்கள் சாற்றினுலும்
ஆறியிருக்கை யரிதுகாணு மதுவிதுவாகை யரிதுகாணும் "

" வேறுபிறிதிலா மெய்ம்மைதன்னை வித்தாரமாக விளம்பினுலு
மாறியிருக்கை யரிதுகாணு மவிரோதமாகை யரிதுகாணும் "

" பிணஞ்சுடு தடியென்ன வெண்ணெக்கொண்டே பெரும்பற்றை
யெல்லா மறச்சாடி, யணைந்த வெண்ணெயு மப்படி பீறில்போ தத்தில் விட்
டனுபோகத் திருந்தானே "

" சந்த மொன்றின்றி யிருக்கவேண்டுந் தானவழிய வுகவேண்டு
மிந்த வுடம்பிலே காணவேண்டு மெங்குந்தானுகி யிருக்கவேண்டும் "

" காட்சி யொன்றின்றி யிருக்கவேண்டுங் கரத்தின்மணிபோலக் காண
வேண்டு, மீட்சி செலவற் றிருக்கவேண்டும் விடாதேபற்றே தி யிருக்க
வேண்டும் "

" தன்னிலேயெல்லா மிருக்குமாகிற் றுனெல்லாத் தள்ளு மிருப்ப
துகிற், பின்னிலன் முன்னில வுவலுகிற் பொரிது முடிந்தென்ன வாழ்க்
கைப்பாடே "

" அஞ்ஞான காரிய மனத்தையு மற்விட்டு, விஞ்ஞான மாகுமென்
றுந்தீபற, வெளியாகி நின்றுமென்றுந்தீபற "

" முடியாத பிறவிகண் முடிந்திட மாயையைத் தடியாம லறுத்தேன
மென்றுந்தீபற, தரிசற்று நின்றேனென்றுந்தீபற "

" மூன்செய் தவத்திலே முயன்றவப் பெருமையாற் பின்சாதி கழிந் தோமென் றுந்தீபற, பிரமமே யாஞ்மென் றுந்தீபற "

அதுவேகா னிதுவென்ஞான் ஞரியனருள்செய்ய விதுவது வாகு மென் றுந்தீபற விலக்கணை புகுந்ததென் றுந்தீபற "

" தொம்பதந் தனிலுள்ள தூகளினை யறுத்தக்காற் றம்பத மறிவே யென் றுந்தீபற, தாக்கற்று நின்ஞேமென் றுந்தீபற "

" தற்பதந் தன்னிலுஞ் சபளத்தைக் கழித்தக்கா, னிற்பது போத மென் றுந்தீபற, நீக்கியொன் றில்லையென் றுந்தீபற "

" அசிபதந் தனக்குள்ளே யவனேகா னிவனென்ன, வுசிவத்தொண் ஞஞ்மென் றுந்தீபற, வொழிவற நிறைந்ததென் றுந்தீபற "

" பாக்கியத் தாலேநாம் பழமறை மொழிந்திட்ட, வாக்கியங் கேட் டோமென் றுந்தீபற, வாவுபோக் கற்ஞேமென் றுந்தீபற "

" அக்கண மறிவாக வடியிணை தருவார்க்குத், தெக்கணை காஞ்மென் றுந்தீபற, செய்வதொன் றில்லையென் றுந்தீபற "

" உந்தீபற பெண்கா ளுந்தீபற, வுணர்வோ மாஞ்மென் றுந்தீபற"

" என்னை யறியா வறியாமை போயிட, வேகமா யின்ப மெனக்கே யருள்செய்து, பின்னமில் லாத பிரமந் தியென்றிட்டுப், பேச்சற்ற மெய்ப் பொரு ளாஞ்மே யப்பா "

" கண்ட கருக்குழி மாளும்படிக்குக் கருணையி றற்கலம் தாண்டு கொண்டு, பண்டை வடிவது நீயாளு யென்றிட்டுப், பார்க்கப் பரமா யிருந் தோமே யப்பா "

" சோதித்துப் பார்க்கிலேன் சுருதிக ளேற்றிலென், பேதிக்கப் போ காத பிரமநா மாஞ்மே "

" ஆதிப் பிரம வறியாமை தன்னுலே, பேதித்துத் தோன்றிற்ஞ றண் றிம்பிலடி, பிறப்பிறப் பில்லையென் றிம்பிலடி "

" வந்த பிறவியும் வாஞதி பூதமு, மிந்திர சாலமென் றிம்பிலடி, யெனக்கழி வில்லையென் றிம்பிலடி "

" ஏகமே யல்லா லிரண்டில்லை யத்வைதப், பேதாமே யாஞ்மென் றிம்பிலடி, புலன்வழி கெட்டதென் றிம்பிலடி "

" ஆரியன் வந்திங் கடிதலை வைத்தபின், பூரண மானதென் றிம்பி லடி, போக்குவ ரில்லையென் றிம்பிலடி "

" பன்னு மறையின் படியே பாஞுகத், தன்னை யுணர்ந்தே மென் றிம் பிலடி தத்துவந் தானையென் றிம்பிலடி "

" ஒன்ஞகி நின்றபே ருணர்வே யுணர்ந்திட், டோமென்னும் காதத் திஞற் பந்தாடா நின்றேன், பின்ஞதே யென்ஞேடே பிழைப்பாயோ பந்தே, பேய்த்தேரி னீருண்ணப் போவாயோ பந்தே "

" கறையறு முளத்தூசிற் காமாதி முழுதுங் கமையென்னும் பெருங் கல்லிற் கரிசறப் புடைத்து,வறையுறு மலமா மதியுவர் பிடித்து வைம்பூதத் தொடக்கென்று மறவாவி வைத்து, வுறைதரு பெருமாயை யொதுக்கற வொலித்து வொழிவற வொளிர்போதப் பிரமமே யாக, மறைமுறை கழுவிய வண்ணத்தனடியேன் வாசாம கோசர வண்ணத்த னடியேன் "

" தேசறு முளத்தூசிற் றிகழ்மையன் முழுதுஞ் சிதையவே யெடுத் தடித் தலம்பியங் கதனை,யாசறு சமதம மதியுவர் பிடித்து வகிலத்தோடனை வொன்று மறவாவி வைத்துப், பேசறு பெருமாயை பிறழ்வற வொலித் துப் பிறிதற வொளிர்போதப் பிரமமே யாக, மாசறக் கழுவிய வண்ணத் தனடியேன் வாசாம கோசர வண்ணத்த னடியேன் "

" அழுக்குறு முளத்தூசி லாகுமுக் குணமீ டனைமுழு தறப்புடைத் தலம்பியங் கதனை, யிழுக்கறும் விமலமா மதியுவர் பிடித்து யானென தென்முழு தறவாவி வைத்து, புழுக்கூடி னுளமாயை புரையற வொலித் துப் புனைபூ ரணப்போதப் பிரமமே யாக, வழுக்கறக் கழுவிய வண்ணத்த னடியேன் வாசாம கோசர வண்ணத்த னடியேன் "

" அன்னிய மில்லையென் றூதேடா காளம் ஆனந்த மாமெனென் றூதேடா காளம், தன்னு சுடரேயென் றூதேடா காளம் சோதியுட் சோதியென் றூதேடா காளம் "

" பிறவி கழிந்ததென் றூதேடா காளம் பேதைமை தீர்ந்ததென் றூதேடா காளம், அறிவே வடிவென் றூதேடா காளம் அறியாமை போன தென் றூதேடா காளம் "

" கோசங் குலைந்தென் றூதேடா காளம் கூறறி வானதென் றூதே டா காளம், பாசம் பறிந்தென் றூதேடா காளம் பரமே பரமமென் றூதே டா காளம் "

" பற்றற்று நின்றேனென் றூதேடா காளம் பார்ப்பறப் பார்த்தோ மென் றூதேடா காளம், உற்ற வுணர்வேயென் றூதேடா காளம் உன் வொளி யானேனென் றூதேடா காளம் "

" உள்ளது போதமென் றூதேடா காளம் உலகமோகி காளமென் றூதேடா காளம், வெள்ள வெளியிதென் றூதேடா காளம் வேதஞ் சொன்னவண்ண மூதேடா காளம் "

" ஊனே மறிவதென் றூதேடா காளம் உணர்வே பிரமமென் றூதேடா காளம, நானே யவனெனென் றூதேடா காளம் நானுவதில்லை யென் றூதேடா காளம் "

" நில்லா வுபாதிகளை நிருபியா நிலையாலே, பொல்லாத விடயத்திற் புகுந்துவிழுங் குறத்தியல்லேன், எல்லாம் பிரமமென வெண்ணிஸ்வே நிலை கண்டு, சொல்லா லுணர வொண்ணுச் சுகமாங் குறத்தியேனை "

ஈசுர கீதை 11—அத்தியயம்.

" ஏதமுற நாரணனே யென்னிலயல் காணும்
பேதவிழி யாளர்பிற விப்பிணிய ரூரே
மாதவனே யாவனன மந்தினினே கிற்கும்
போதவிழி யாளர்பரி பூரண மடைந்தார் " 72

2-ம் அத்தியாயம்-3வது செய்யுள்.

" இந்த ஞானத்தை யெய்திய வின்பத்தா
ரந்த மில்பிர மத்துரு வாயினோர்
பந்த மேவிடார் பண்டுமின் றுமென்றே
யெந்தை யீறிலி யீச னியம்பினன்."

பிரம கீதை.

" தருமம தறிவில்பா சண்டர் தங்களை
மருவலால் வேதமா வாக்கி யப்பொருள்
கருதிடா ரதுகா மணியிற் காட்டிடும்
குருவையும் வழிபடார் குதர்க்க மேவலார் " 2-19

" வேதநூன் மிருதி புராணமத் துவித மெய்ம்மையே விளம்பமெய்த்
சாதியா கிற்கத் தத்துவ ஞானத் தவருமிப் பொருளையே சார [தர்க்கஞ்
வாதியாஞ் சிவனு ராயண னுனிங் கறைந்தது மபேதமா யிருக்க
வாதியாமொருவர்க் கிதையனுதரித்தல் மாயையினுடையவல் லபமே "

" ஆதர முடையீர் கேண்மி னருமறைப் பொருளீ தென்றே
யோதலா லுவமை யில்லாப் பொருளிதி லைய முண்டேல்
தீதற மழுவைக் காய்ச்சிச் செங்கையி னிடுவே னென்றுன்
நாதனு யுலக மெல்லாம் படைக்குநான் முகனு யுள்ளோன் "

" பத்தரா யுள்ளீர் கேண்மின் பகர்ந்தவே தத்தி னர்த்தம்
இத்தகைத் தாகும் வேறுன் றில்லையா மிதனி லுங்கள்
சித்தநம் புதலுண் டாகச் செப்பிலே மாண மூன்றே
டத்தனர் பாதந் தொட்டே யென்றன னலரின் மேலோன் "

" அன்பரா யுள்ளீர் கேண்மி னறிவித்த பொருண்மெய் யன்றேல்
என்சிர மிற்று வீழ்வ தென்றன னிதுவு மன்றி
யின்பமே யளிக்கு மீச னிவ்விடந் தன்னின் வந்து
தன்பெருங் கருணை யாலுந் தளர்வறப் பண்ணு கின்றுன் "

" நானே முழுது மெனையொழிய நாடிற் சிறிதும் வேறில்லை
யானபொருளை யருமறைதா னறையும் படியா னதனுலும்
யானு மிசைத்த படியாலு மிதுவே நிடமா யுளபொருடான்
மனன் மின்றி நான்முகனு முணர்த்த துங்கட் குண்மையிதே "

" உண்மையிற் பேத மின்றி யிருந்தையும் பேத மென்னல்
வெண்மையேசெய்த ரூப வியாபாரந் தோற்றங் கேடு
பண்வயி னிவற்ரூற் கொள்ளும் பயனும ரூபம் வேறு
முண்மையி லெல்லாம் பொய்யா லுண்டாகு மனேத்து மன்றே "

" தொல்லேல் வினையால் சுருதிநன் மிருதி சொன்னவாதுணிந்தவத்
[தூயோர்
ஒல்லையில் பரமாத் துவிதமே தனத்தை யுள்ளவா றுணரவே யுணர்வர்.
கல்லவிப் பரமாத் துவித ஞானியைநா ராயணன் நாலுருத் திரனும்
எல்லையி லெல்லாத் தேவரும் பூசித் தேத்தவும் படுமிவ னென்றும் "

" சகலமும் ஞாநி யிருந்துள விடத்தே யிருப்பது முத்திதா னந்தத்
தேசிக னேவல் செய்பவன் காலென் சென்னியி லிருப்பதுமன்னி
மாசிலாப் பரம ஞாநியா மூங்கு மகேசனு மொப்பலன் மதிக்கில்
ஆசிலா வரியு மொப்பல னனு மொப்பல னேவரொப் பாரே "

" பின்ன கடாகா யாதிக ளாலா காயம பேதம் பேதமு ரூதே
யன்ன வனேகா காரண னேகா காரவ கம்புக் காலு மனேத்தா
மன்னிய பேதா காரம பேதா காரமு மாய்மா தேவனி ராளேல்[றே"
இன்னதெ னுமத் தானெனு மாறெ னியாவையு மீசா னென்பிறிதன்

" இந்த வுடம்புறை சீவப ரங்க ளெனப்படு மன்ன மிரண்
டந்த விரண்டிலு மொன்று விளைப்பய னங்கு நுகர்ந்திடு மாந்
தொந்த மறும்பா மொன்று முணுது சொலப்படு பேதமில் வான்
வந்த கடத்தி லகப்படு பேதமெ னப்படு மாயை யிரும்பல் "

" மண்ணைதோர் திரளைக் காண வனேந்தகா ரியங்க ளந்த
மண்ணில்வே றிலாதெக் காலும் வருதலே யாத லால்வே
றெண்ணிடு நாம ரூப மிசைந்திலை யாரு மின்று
மண்ணிதே யுள்ள தென்றும் வானவர்க் கயன்முன் சொன்னன்".

" தற்பர னுருவஞ் சித்தே தற்பர னிடையே யக்
கற்பித ஜீவன் ரூப மதானக் காலந்தச்
சிற்பொரு ளொன்றே வேறெனின் மற்றது சித்தாமோ
அற்பமும் வேரு காதுசித் தாகா ரத்தாலே "

" வேதமோ தியதே மெய்ப்பொருள் மற்றைப் பொருளெலா மித்தை
யே வேத, மோதமே வுற்ற பொருளிரு வகையா மதனிலொன் றென்று
முண் மையதாய், போதவா நந்த மாகிய சிவனும் பொருளது மற்றதப்
பொருளில், வதமே வாமற் கற்பிதமாகு மற்றத னியல்பையு மிசைப்பாம்."

" புகலினின் றிடுபிரம புரமெனும் பதியதனில்
தகாடுண் டாகி மெனு மகமிலங் கியதகா

கனமுண் டதுமறைகள் கருதரின் றுளபிரம
மிகவிரும் புவர்பிறவி விடவிலார் துளவிமலர் ”

“ தத்தமா லான பெத்தவா தியர்தாந் தங்களிற் றுங்கடர்க் கங்கள்
கத்திடா நிற்கும் பரிசெலாஞ் சுருதி மிருதிகள் கருதிய தழிக்குஞ்
சுத்தமா விருத்த மாகுமென் றேறயென் றுணிவுதால் பிறவியிற் சுழல்வார்
சித்தமா னதுபோ யிவற்றிலே காதல் செய்யுமுன் செய்ததீ வினையால்”

“ காதும்வா தியர்க ளாலே கலியுகத் துள்ளோர் கெட்டு
வேதமோ தியவா செய்யார் மிருதிசொல் லுவதுஞ் செய்யார்
பூதியு மணியார் ஞான சாதன பூத மாக
வோதுவ தொன்றுஞ் செய்யா ரொழிந்ததே யுகந்து செய்வார்.”

என்பன வாதிச் செய்யுட்களில் தத்துவராய சுவாமிகள், ஆண்டா னடிமைத் திறத்தினையும், பசுபதி பாசங்கள் நித்திய மென்பதனையும், விளக்கி யிருக்கின்றனரா ? மாறாய், நாடற்கரிய முத்தியின்கண் ணுறும் சிவனுஞ் சிவனும் பாசமும், நித்தியமாய்க் கொண்டொழுகுஞ் சைவர்க ளைப் பேய் என்று கூறியிருக்கின்றனர். சும்மாவிருப்பின் இவ்வாறய இவரது அறியாமை பலருக்கும் வெளிப்படாது போய்விடு மென்று கருதி யன்றே இவ்வாதந் தொடுத்தார்.

சிவப்பிரசாச சுவாமிகள் சைவராயிருந்து வாழ்ந்தா ரென்று “ மூக் கரையன் கதை போன்று ” முனு முணுக்கின்றார். அம்முனு முனுப் தலையும் சற்று விசாரிப்பாம்.

வேதாந்த சூடாமணி.

“ விடயமது சிவசீவர் தமதேகத் துவமாம் ”.. “ நீ கடவு ளொருப நிசம் சச்சிதா நந்தம், நித்தியம்பூ ரணமர்க நீ நினைந்து கொள்ளை.”

“ இகலிலா அறிவுமாத் திரமாகி நின்ற விலக்கியமாம் பிரமகூ டத்த வுயிர் கொள்ளிற், புகரிலா வதுவிதுவே யிதுவதுவே யென்னப் பொருந் துதா தான்மியம்வந் துறுமெனவே யறிக ”

“ என்றுமெவ் விடத்தினுமோ ருடம்புமுரு தொன்று, யிருந்தசச்சி தாநந்த சிவரொருப மாதல், நன்றிதரு விதேகமுக்தி வல்லியமென் றிசைப் பர் ”

“ அவ்வகிலங் கட்கெலாம் பொய்ம்மையே புகலு மரியதாம் வேதாந்த பக்கமதி னினைய, யெவ்வமறு சுருதிவிசா ரத்தினு லுண்மை யெனுமுத்தி கூடுமென லெவ்வாறிங் கென்னி, லவ்வியமென் சொற்பனமா தீவினை னென் மெய்ம்மை யாயவீ ரியவொழிவுங் கற்பிதமாம் வடிவிற், செவ்வியவொண் கடவுள்வழி பாட்டினை லிட்டனு சேர்த்தலும்போ னுலுணர்வான் முத்தியுஞ்சித் திக்கும் ”

" தடத்தினுயர் கரையமர்வோ னத்தடத்துப் புனலிற் றூனதோ
முகமாக விருப்பதுபொய் யென்று, படைத்தகளி வுளமொடிருப் பினு
மதோ முகமாம் படிவந்தோன் றுதல்போல மூலவகங் கார, மடித்துவரு
சிவபா வாதிகமோ மித்தை யறிதுரியன் றூனனவே யுணரினுஞ்சி வாதி,
தொடுத்தவுல குறுதலிறற் சிவன்முத்தன் றனக்குத் துய்க்கும்வினைப்
போகவிவ காரமுடம் பாடாம்."

" அப்பிரம காண்டத்துட் சிவமொடுயி ரயிக்க மறைதலாற் சங்கரா
சாரியனுங் குருவால், ஒப்பரிய பாடியமொன் றுரைக்கப்பட் டது "

பிரபு லிங்க லீலை.

" சச்சி தாநந்த சங்கர னுகவே
யச்ச நீங்குபு தன்னை யறிந்தவன்
றுச்ச மாந்துயர்த் தோன்மலி யாக்கையை
யிச்சி யானதை யானென வெண்ணியே "

" பூத நீயலை பொறிகளு மலையலை புந்தி
யேது நீயலை யிவற்றினை மயங்கியா னென்னும்
போத நீயலை யென்றிவை யனைத்துமே போக்கிச்
சோதி யாகிய பிரமமே நீயெனச் சொல்வி "

" னேய னாகனா துருவெனு மிவைபல நிற்கு
மாயின் வேறறு முத்தியன் றதுசக மாமென்
றேயு மாறிது அதுவெனுஞ் சுட்டலா வியல்பை
மாயை மாறிய தேவிபா லருளினன் வள்ளல் "

" வான மல்லேன் வளியல்லே னழனீ ரல்லேன் மண்ணல்லேன்
ஞான மில்லா வொருசிவமே யாவ னிவ்வா றுன்னுதா
னீன மெல்லா மூடையவுடம் பெடுத்துச் சுழலு மெஞ்ஞான்றும்."

" தன்னைச் சிவமென்ற றிந்தவனே யறிந்தான் றன்னை யுண்மையாத்
தன்னைச் சிவமென்ற றியாதா னறியா னென்றுந் தன்னுண்மை
தன்னைச் சிவமென் றறிந்தவன்றே தாழ்வாம் பாசந் தனைநீப்பன்
தன்னைச் சிவமென் றறியாதான் றனக்குப் பிறப்பே துணையரகும் "

" தன்னைப் பேத மாய்க்காண்கை சகத்திற் காணப் பட்டதாந்
தன்னைப் பேத மறச்சிவமென் றறிவோன் ஞாநி தானுருவ
னென்னைக் கருதி மறையதுநீ யாரு யென்ன வத்துவிதத்
தன்னைப் புகலுங் கண்டதனைச் சாற்றன் மறையின் கருத்தன்றே "

என்பனவாதிச் செய்யுட்களில் சைவராய் வாழ்ந்து, ஆண்டானடி
மைத்திறங் கொண்டிருந்தே மென்று கூறுது, மாறாய் சிவப் பிரம வைக்
கியத்தினையும், பொய்ப் பொருளைக் கொண்டு மெய்ப் பொருளை யடை
பலா மென்பதனையுஞ் சிறுரு மூனருமாறு விளக்கி யிருக்க, அதனைச்

செவ்வனே தெரிந்து கொள்ளும் பண்ணிய மின்றிக் "கிழக்குமேற் கறியா தான் வழக்குப் பேச வந்தான்" என்னும் பழமொழி போன்று வரைந்து வாணுளை வீணாளாக்கிக் கொண்டனர்.

சிதம்பர சுவாமிகளையும் ஆண்டான டிமைத் திறங் கொண்டு சைவமே யாய் வாழ்ந்தா ரென்று வெற்றுரை தொகுத்து விசன முறுகின்றார். சிதம் பர சுவாமிக ளியற்றிய, ஒழிவி லொடுக்க வுரை, கொலை மறுத்த லுரை, வைராக்கிய சதக வுரை, வைராக்கிய தீப வுரை, அவிரோத வுந்தியா ருரை, திருப் போரூர் சந்நிதி முறை, முதலிய நூற்களையேனும் கல்லாசிரி யரிடத்து நன்கு பயின்றுரையினும், வரையத் துணிய வேண்டாமா? அவர்கள் தமது ஆசிரியர் ஸ்ரீ குமார தேவர் பேரி லியற்றிய நெஞ்சுவிடு தூது:—

—சுகசொரூபம்.

" ஒன்றென்ற சொன்று லுலகமே தென்றிடவே
நின்ற பழுதையினை நீளாவ—மன்ற
ஓதிக்குமா றப்பொருளி லுண்டாமென் றோத
வீதித்த பழுதை விளங்கின்—மதித்தபாம்
பேகு மதுபோ லெழிற்சிவங்கண் டும்முலக
மோகாதி தோன்ற லெனையென்ன—மோகமறக்
கானலினீ ரில்லையெனக் கண்டீர் தோன்று தல்போ
லீனமில்பொய் யாத்தோற்ற மென்றிசைப்ப—வான
பழுதையினிற் பாம்பும் பகல்கான னீரு
மெழுமோ தகையா யிலைதாங்—குழுமியே
நானவா யோர்பொருளி னண்ணுவதே தென்றிசைப்ப
ஆனைத பொன்மண்ணி லாபரண—நாநா
கடமாதி தோன்றுமொரு காரணம்போற் றோற்றுங்
திடமாகீ காணென்று செப்பத்—திடவா
லெருவன் றெழிலா லுளவா மிலைதா
மருவுமிலை யாவரால் வந்த—துரையெனவே
விண்ணினிடைப் பீலி வெயிற்குஞ்சந் தோன்றுவபோ
னண்ணுறு மெனவே நயந்துரைப்ப—வெண்ணுமலை
பற்பல வாலுலும் பகருருவொன் றுமிலைதாங்
துப்புடைநா நாவுருவாய்த் தோற்றுவதென்—செப்புகனக்
காந்தருவ மாகர்போற் காணெனவே யங்ஙகர்தான்
போந்தவிவ காரமின்றாப் பொய்யாகு—மேய்ந்த
விவற்றுள்விவ காரமேய்வ தெவ னென்னக்
கவற்றுள் கனவுவிவ காரம்—நவிற்றுதல்போ
லாமென் றுரைப்ப வதுநினைவின் வாதனையாந்
தோமுறுபொய் வாதனைதாந் தூய்தாய—சேமப்
பொருட்கே தனைவந்தப் பூரணத்திற் றோன்றுங்

தருக்கா தினைவாகுந் தானென்—றுரைப்ப
வதற்குதினை வெழுமோ யாதென்று கேட்பக்
கதித்த கனலிலை கண்டா—யிதைப்பொய்யென்
றுன்னுது கேட்டி யுளஞ்சற் றசைத்தக்கான்
முன்னும் பாமுயிர்கண் மொய்த்தெழுந்த—மன்னுல
வுலகமிவை தோன்று முளமிறந்தா லிந்தக்
கலகமெலாம் பொய்யாய்க் கனைதை—யிலகியதோர்
மெய்யென்றே யாகு மிளிரு முளத்துருவ
நையா வுருவமொடு நாமமாம்—பொய்யுளத்தா
லுன்னினவு நீதென்றே யூகத்தா லேக்குமிடத்
தங்கினவ நாமவுரு வாகுங்கா—ணங்கினவு
கோடி கணத்திற் குதித்தெழலா லிவ்வுலகு
நாடற் கருவுருவ நாமமாய்ப்—பீடுபெறத்
தோற்று தினைவைத் துணித்தாற்சற் சிற்சுகமே
மாற்றற் கரிதாய் வயங்கலுறுஞ்—சாற்றுமிதா
லுள்ளமே யிவ்வுலகா மிவ்வுலகே யுள்ளமா
முள்ளமலா தேயுலக மொன்றில்லை—யுள்ளே
மதுரந் தருஞ்சாத்தன் வன்கோயின் முன்னே
சதுரங்க மாவலமாத் தங்குங்—குதிரைகாரி
தேரா ளெனும்பெயருஞ் செப்பியபேர் கொள்ளுருவு
நேராது பொய்யென்று நீக்கியே—தேருமிடத்
துற்றிடுமுக் காலத்து முள்ளமண்ணே மற்றெல்லாம்
வெற்றவெறும் பொய்யாய் விடுமிவைபோற்—சாற்ற
பெயருருவ மானவெல்லாம் பேணுது நீக்கிற்
செயிரறுசித் தொன்றே திகழும்—
கடலிற் றிரைநுரைகாண்டிவலை மொக்குள்
இடமுற் றெழினு மிதுபொய்—திடமுறுமெப்
யாவ தெதுவென் றறியுமிடத் தப்பொருளின்
மேவு திரைநுரை வெண்டிவலை—தாவியெழும்
மொக்கு ளெனும்பெயரு மொழிபெயர்கொள் ளும்முருவும்
ஒக்க வெறும்பொய்யா மூருசியுடன்—றக்க
நெகிழ்ச்சி குளிர்ச்சிமய நீரொன்றே மெய்யாம்
பகுக்கு மவைபோலப் பாரிற்—றொகைக்கரிதாய்
காணு முறுநாமங் காணுது பொய்யாகும்
மாணுறு சிற்சுகமே வாய்மையாம்—மாணு
இருப்பதுசத் துச்சத்தா லெண்ணுருவ நாமம்
இருப்பதுபோற் றோன்றும்வே றில்லை—யுரைப்பரிதாய்த்
தோன்றுதல்சித் துச்சித்தாற் றோன்று முருநாமங்
தான்றனித்துத் தோன்றுவது தானில்லை—யான்றசுகம்

தானே யுளதிதனுற் றங்கு முறுநாமம்
ஆனை சுகம்போ லணுகியிடு—நாணுத
வேறெது மில்லை விரிதிரையா திகடாங்
கூறுசல மொன்றே குறிக்குங்கால்—தேறல்
பொருளொன்றே யாகும் புனிதமுறு நெஞ்சால்
தெருளொன்றிக் காணென்று செப்ப—அருளொன்று ''

திருப் போரூர் சந்நிதி முறை மாலை.

பாம்பாகத் தோன்றிற் பழுதைசற்றுந் தோன்றாதாம்
பாம்பின்றித் தோன்றிற் பழுதையே—மேம்பாடாய்ப்
பொய்தோன்றின் மெய்தோன்று போரூரா நின்னருளான்
மெய்தோன்றிற் பொய்தோன்று வீடு.

கானலுநீ ரன்றென்று காட்டக்கண் டாரெருவன்
மானலநீ ரென்று மயங்கல்போ—னீலமாய்ப்
பொய்யுலகம் பொய்யாகக் காட்டியும்போ ரூரானை
மெய்யெனவுண் ணேர்தென் மிக.

வஞ்சகட்டளைக் கலிப்பா.

'' கான னீரினை மெய்யென்ற வாவியே கனவி டாய்கெட வுண்ணக்
கருதிலை, னை நீருவர் நீரென நாவெ தன்ன மாமய லென்றினி யாறு
வேன், வான நாடரு மாமுநி வோர்களு மதித்த வாரண மூந்துதிக் தே
தொழுந், தான மாமழை யானைக் கிளையவா சமர மாபுரிச் சண்முக
வேலனே ''

'' பழுதை பாம்பல வென்றெளி யாற்கண்டும் பாம்பு வாதனை தீரா
தவனென, வெழுமுன் சிற்சுக நின்னரு ளாற்கண்டு மிந்நி லப்பொய்ம்மை
வாதனை நீங்கிலேன், முழுது ணர்தல் முதலாய வெண்குண மொய்த்த
பஞ்சர மேமறை யுச்சியே, தழுவு வெண்சுதை மாளிகை நீடிய சமர மா
புரிச் சண்முக வேலனே.''

வஞ்சந் துறுங் கழி நெடிலடி விருத்தம்.

'' கடைபடு முலகப் பொய்யினை மெய்யாக் கருதினேன் கானனீ
ரென்று, மடமையாற் கருது மவனென வினியுன் மலர்ப்பதச் சுகத்தை
யென் றடைவேன், றடவரைக் குறவர் குலத்தெழு வல்லி சாதகக் கொடி
படர் தருவே, மிடலெழு தோகைப் பாகனே போரூர் வீறிவா ழாறுமா
முகனே.''

'' எங்குமென் சொலுப சச்சிதா நந்த விலகொளி யிருந்திடு மதனுட்,
டங்குபல் பொருள்கள் கானலிற் சலம்போற் ருமுறும் வேறிலை யென்றே,
பொங்கருட் குருவாய் வந்துநீ யளித்தும் புலையனேன் மயங்குறு கின்
றேன், வெங்கதிர் விலக்குந் தண்டலைப் போரூர் வீறிவா ழாறுமா
முகனே.''

" நெஞ்சகத் துள்ளும் புறனுமாய் நிறைந்த நின்பரி பூரண நினைந்து,
வஞ்சகச் சகப்பொய் யனைத்தையு மற்ந்து வாழுநா ளெந்தநா ளடியேன்,
செஞ்சடைக் குழக னஞ்செவிக் கமுதாத் திகழ்மறை முடிவினைப் புகன்
றேய், தஞ்செனப் பணிவோர்க் கருடரும் போலூர்ச் சரவணை பிரணவப்
பொருளே "

" அறிவுதன் னினைவிற் கலந்துறு போதி லரும்பர மூயிர்சக மூள
வாம், பிறிவிலவ் வறிவந் நினைவினை யகன்றூற் பேதாபே தங்களொன்
றின்றி, நெறியுறத் தானே தன்னிடத் திருக்கு நிச்சய மென்றனைக்
கிசைத்தான், பொறிமறு மார்பன் மருகவே ளெனையாள் போரிவா ழாறு
மா முகனே."

" சுருதியின் றுணிவா னினைவுகொண் டுலகந் துச்சமென் றுணர்
தனிச் சயமாங், கருதுறு நினைவை யடக்கியிவ் வுலகங் கானலென் றுணர்ந்
திடல் சமாதி, யிருவகை யாய்மூன் றுரைத்தவை யின்றி யிலங்கறி வுருவ
மா யிருத்தல், பொருவறு சகச ஞானமென் றிசைத்தான் போரிவா ழாறு
மா முகனே."

" நிச்சய ஞானஞ் சமாதிஞா னங்க ணிராசையார் மநத்தினிற் கலங்கா
தெச்சமின் றிருக்கு மாசையார் மநத்தி லிரண்டுஞா னங்களுங் கலங்கு
நச்சுதல் வெகுளி யின்றிய சகச ஞானிக ணைசையுளர் போலப்
பொய்ச்சகத் துறினுங் கலங்குரு ரென்றூன் போரிவா ழாறுமா முகனே."

" சித்தொரு நான்கிற் பிரமங்கூ டத்தன் செப்புமா யாரகி தங்கண்
மத்தமி லீச னுயிர்கடா மாயா சகிதங்கள் வழுத்துமிவ் வீசன்
சத்தெனுந் தன்னை மறப்பிலா மையிறூற் றகுகதி தேடிலன் சீவன்
பொய்த்தலில் வீடு தேடுமென் றிசைத்தான் போரிவா ழாறுமா முகனே"

வடநேரிசை வெண்பா.

" அறிவைவிடத் தோன்றிடா தம்புவியு நெஞ்சுஞ்
செறியறிவாய் நில்லென்று செப்பிப்—பிறிவறவென்
னெஞ்சைத் திருத்தி நிறையவைத்த போரூரன்
கஞ்சத் திருத்தண்டைக் கால் "

என்பன வாதி செய்யுட்களில் அத்வைதத்தினை அவைதிக சைவ சித்
தாந்திகள்கண் டஞ்சுமாறு வெளிப்படையாக ஸ்ரீ சிதம்பர சுவாமிகள் புக
ன்று, துவைதிகளது பதி பசு பாச நித்தியத் தன்மையினையும் ஆண்டா
னடிமைத் திறத்தினையும் அறவே யழித் தொழித் திருப்பவும், இன்னும்
உரை நடை முதலியவற்றிலும், அத்வைதத்தினை யவல மதியினரு முணை
ருமா றறிவித் திருப்பவும், அவற்றினை யெல்லாம் அறியும் ஆற்ற வின்றி
" கீழே விழுந்தவன் மீசையின் மண்பட்டதா பார் " என்பது போன்று
வெற்றுரை தொடுத்து நம் நண்பர் வீண் வாதம் பேச வந்தனரே. அவ்
வாதம் " சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை, வெல்லுஞ்

சொல்லின்மை யறிந்து, என்னும் வாக்கின்படி நிலைபெறுது போயிற்றே. போகவே "உடன்படற்பால தல்லதனை யுடன்படுதல்" என்னுந் தோல்வித் தானத்தைத் தொன்று தொட்ட தொடையாகத் தோளிற் போட்டுக் கொள்ளாது தூரத்தே செல்லுதல் யாங்ஙன மேலும்.

"இக்காலத்திலுஞ் சமிவன மென்னும் கோவிலூர் மடத்துக்கு மூல புருஷராய், ஆண்டவ ரென்று அவ்வகையா ராலேயே கொண்டாடப் பெற்ற முத்தி ராம லிங்க சுவாமிகளும், வாசிஷ்ட கைவல்ய கீதாதி நூல்கள் பிறர்க்குப் போதித்து வந்தாலும், "தமக்குமேலொரு ஆண்டவனுண்டு, அவன் ஸ்ரீசாலிவாடீசுவரி சமேத ராஜகட்க பரமேஸ்வரனே, நாம் அவனுக்கு அடிமையே" என்ற வுண்மைக் கருத்தாலேயே சைவநெறித் திருப்பணியாதிகளே செய்து, பின்னேயோரும் அந்நெறியே பற்றியொழுகும்படி வழிகாட்டியாய் வாழ்ந்தார்." என்றனர்.

"வாசிட்ட கைவல்ய கீதாதிநூல்களைப் பிறர்க்குப் போதித்து வந்தாலும்" என்று உம்மை கொடுத்து எழுதியதன் கருத்து யாதோ? உம்மையால் தமக்குக் கருத்தில்லாத அத்வைத நூல்களைப் போதித்துக் கொண்டு ஆண்டானடிமைத் திறமே தம துட்கருத் தென்று கொண்டு வாழ்ந்தார்களென்று கருதுகின்றீர். எழுதுமிடங்கடோறும் இவ்வாறே அறிவின்றி யெழுதலாமோ? தாம் ஆண்டானடிமைத் திறத்தினை முக்கியப் பொருளாகக் கொண்டு, தமது மாணாக்கர்கட்கு "நாம் பிரமம்" என்னுந் தமக்குக் கருத்தில்லாத அத்வைதக் கொள்கையினை யுபதேசிப்பவ ரெங்ஙனம் ஆசிரியராதல் கூடும்? தங் கொள்கையினை மாணாக்கர்கட்குப் போதிப்பவர் ஆசிரிய ராவரே யன்றிக் தமக்குடன்பாடல்லாத வோர் மதத்தினை யுபதேசிப்பவ ராசிரிய ராகார். இவரது உபாசனமூர்த்தியாகிய யாழ்ப்பாணம் நல்லூர் ஆறுமுக நாவலரும் தாம் அகம் பிரம மென்னும் அத்வைத மார்க்கத்தினைக் கைக்கொண்டவராய்த் தமக் குடன்பாடல்லாத, ஆண்டானடிமைத் திறங் கூறும் அவைதிக சைவ சித்தாந்தத்தினை அவரது மாணாக்கராய நம் நண்பருக்கு உபதேசித்தனர் போலும். அங்ஙனம் உபதேசித்தமையா லல்லவா, தமது அநுபவத்தினையுந் தம்குரவர தநுபவத்தினையும், பிறர் மதத்தினரது குருமார்களிடத்தும், அவர்களது மாணாக்கரிடத்தும் கற்பிக்க முன் வந்தனர். அநுபவிக்காது பிறர்மீது கற்பிக்க முற்படுவரா?

தன்னில் வேறிலா மையிற்பர முத்தியிற் றனதுபுத் தியினலே
யன்னி யங்களாய்த் தோற்றுமா பாசர்க்கும் பரபத மறிகின்றன்
முன்ன மெப்படி மூடமாந் தசையிற்றன் மோகத்தா லெலாம்பெத்த
மென்ன வுற்றனன் முத்திய மப்பரி சிருக்கும தியல்பேயாம்.

என்ற பிரம கீதைச் செய்யுளின்படி ஞானிக்கு யாவரும் ஞானியாகத் தோற்றுகின்றனர். அஞ்ஞானிக்கு யாவரும் அஞ்ஞானியாகத் தோற்றுகின்றனர்.

தருமராஜர்க்கு உலகி லுள்ளார் யாவரும் நல்லவர்களாகத் தோற்றினர். திரியோதனர்க்கு உலகத்தி லுள்ளார் யாவரும் அயோக்கியராகத் தோற்றினர். அதற்குக் காரணம் அவ ரவரது அநுபவமும் புண்ணிய விசேடமும் பாவ விசேடமுமே யாம்.

ஓர் பாவியானவன், பூர்வ சன்மத்திற் செய்த பாவ விசேடத்தால் மூக்கின்றியவனுகப் பிறந்தான். அவனை யெல்லோரும் மூக்கரையன் என்று எளனஞ்செய்து வந்தார்கள். அதனை நிவிர்த்திப்பான் ; அவனோர் சூக்ஷிசெய்து "எனக்குக் கைலாயம் தெரிகின்றது. நீங்களும் என் போன்றே மூக்கரைய ராவீர்களாகில், உங்கட்கும் கைலாயம் தோற் றும்" என்று தனக் குடன்பாடல்லாத தனையே புகன்றனன். அவர்களுட் சிலர், அவன் வார்த்தையினை மெய்யெனக் கருதி, மூக்கை யறிந்து கொண்டு, அண்ணுந் துயரப் பார்த்தார்கள். கைலாயந் தோற்ற வில்லை. தோற்றுதாகவே தாம் செய்தது தவ றென்று தோற்றினும், பிறர் பழிப் பை நிவிர்த்திப்பான் 'எங்கட்குங் கைலாயம் தோற்றுகின்ற தென் றவர் களும் தமக்குடன்பா டல்லததனையே பிறர்க்குப் புகன்றனர். பின்னுஞ் சிலர் அவ்விடைப்பட்ட மூர்க்கரையரது வார்த்தையினை மெய்யெனக் கருதி மூக்கரையராகி யிவ்வாறே பலரும் மூர்க்கரையராயினர். அது போன்றே அவைதிக சைவ சித்தாந்தக் குருமார்களுள் மூல புருடாயி னர் "நாம் பிரமம்" என்னும் பரமாத்வைதக் கொள்கையினை யுடைய ராய்த் தமக்குக் கருத் தின்றிய அவைதிக சைவசித்தாந்த ஆண்டா னடி மைத் திறத்தினை, அதிகாரிகளின் அபக்குவத்தினைக் கருதி யுபதேசித் தனர். அவ்வுபதேசத்தினைப் பெற்றுப் பின். ஆசிரியராய இடைப்பட்ட குரவரும், தமக்குப் பரிபக்குவம் வந்த ஞான்று, ஆண்டா னடிமைத் திறத்தினை யறவே யொழித்து "நான் பிரமம்" என்னும் வைதிக சித் தாந்தத்தினைக் கைக்கொண்டவராய்த் தமக் குடன்பா டல்லாத அவை திக சைவ சித்தாந்த ஆண்டா னடிமைத் திறத்தினை அதிகாரிகளின் அப க்குவத்தினைக் கருதி யுபதேசித்தனர். அவ்வுபதேசத்தினைப் பெற்றுப் பின் ஆசிரியராய கடைப்பட்ட குரவரும், தமக்குப் பரிபக்குவம் உண் டாயவிடத்து ஆண்டா னடிமைத் திறத்தினை யறவே யுமிழ்ந்து. "**பிரமை வாகும்**" என்னும் ப்ரஸித்த வேதாந்தத்தினைப் பெரி தெனப் பெரியாரா லுணர்ந்து பேணினராய்த் தமக்குடன்பா டல்லாத வேத பாஹ்ய துவிதாக மக் கோளைக் கேட்போர் தாங்கருதிக் கிளர்ந்தனர். இவ்வாறே தமக்குடன் பா டல்லாத ஆண்டா னடிமைத் திறத்தினையே பலரும் உபதேசித்து வந் தனர். அவ்வாறே யிவர் குரவரும் "**நாம் பிரமம்**" என்னும் வேதா ந்த மார்க்கத்தினை முக்கிய சித்தாந்தமாகக் கைக்கொண்டவராய்த் தமக்கு ஒருவாற்றலும் கருத் தின்றிய ஆண்டா னடிமைத் திறத்தினை நம் நண் பருக் குபதேசித்திருக்கின்றனர். இவ்வாறு, இவர் பரம்பரையி லுள்ள அநுபவத்தினைக்கொண்டே யன்றே, எமது பரமேஷ்டியாய குருநா தன்

மீதும், கூறத் துணிந்தனர். இவர் கூறிய கூற்று இவர் மதத்தின்கண் ணே யன்றி யெங்கள் மதத்தி லின்மும்.

ஆண்டவ ரென்று விதந் தோதப் பெற்ற ஸ்ரீ முத்தி ராம லிங்க ஞான தேசிக சுவாமிக ளென்னும், எமது பரமேஷ்டிய குருநாதன், தாம் மூக் கிய சித்தாந்தமாகக் கொண்ட "பிரமைவாகம்" என்னும் அத்வைதத்தி னைப் பிரதிபாதிக்கும் வாசிஷ்டம் கைவல்யம் கீதை முதலிய நூல்களைப் பக்குவியாய மாணாக்கர்கட்கு, தம துண்மைக் கருத் தென்றே யுபதேசித் தார்கள். உபதேசித்தார்களாயினும், சகுண பிர்மோபாஸனையினனே னிர்க்குணப் பிரம மடையத்தக்கதாம். அச்சகுணப் பிர்மோபாஸனை செய்ய வலியிலார்,

"சிரந் துறக்கஞ் செவிதிசைக ளிருசுடர்கள் வழிதீ, பாங்காய முக முந்தி விசும்புநிலம் பதமாம் பரமனுரு வாயவிராட் புருடவடி வெனினும்"

"அன்றியள வுறுபெருந்தோட் படைபணியோ டுற்ற வண்ணல்வடி வெனினுநினைந் தவயவங்க டம்மி, லொன்றொன்றை விடித்துநின்ற வவய விமாத் திரமா முண்மையாம் பிரமத்தின் மநமடங்கல் பாவஞ், சென் றளவு கரணமுரு வொருபிரமந் தன்னிற் சிந்தையடங் குதலபா வம் படைப்பி லொழிவிற், றன்றெரித தெரியாமை யிடத்திலோர் பரிசாய்த் தன்வடிவாம் பிரமத்தின் மநமிறன்மா யோகம்" 136

என்ற வேதாந்த சூடாமணிச் செய்யுளின்படி காரியப் பிரம முதலிய வற்றை யுபாசித்து அதன் வலியாற் காரணப் பிரமோபாஸனை செய்து, சுத்தப் பிரம மடையத்தக்கதா மென்னும் வேதாந்த சாஸ்திரத்தி னுட் கருத்தினைப் பற்பல மாணாக்கர்களுக்கு மறிவுறுத்தற்குச் சிவாலயப் பணி முதலியவற்றை, நம் நண்பர் மதத்தினரும், நண்பரும் செய்துவரும் வாசா ஞாநம் வாசாப் பணி போன் றின்றி, உண்மை யன்புடன் உண்மைப் பணியாகச் செய்தும் வந்தார்கள். அவர்கள் உண்மைக் கருத்தினைத் தம் மாணாக்கட் குபதேசித்து வந்தமையா னன்றே, இதுகாறும், அவர்கள் பரம்பரையில் வந்த யாவரும் உண்மையான பிரம ஞானிகளாய்ப் பிரமரூப மாயினர். முன்னர் ஸ்ரீமத் ஆண்டவரைச் சைவ சித்தாந்தி யெனப் பகர் ந்து, பின்னர் "ஆண்டவரும் திருப்பணியாதிகளே செய்து பிரபஞ்ச வெறுபபுடையரா யிருந்தமையாலும், பெரியோரை யடைந்து நன்மை பெற வேண்டு மென்று விரும்புகின்றவர்களுக்கு, இக்கோயிலூர் மடமே புகலாகத் தோன்றப் பெற்று வந்தடைத்தார்கள். அடைத்தாலும், 'அங்கு ஆண் டவ;ரொருவன் நமக்கு மேலா யுளன். நா மெல்லா மடிமைகளே. நாம் ஆண்டவனைச் சரியை கிரியை யோக ஞான நெறி நின்று [வழிபடுதலே முத்தி சாதனம்' என்கின்ற போதனை விளக்கங் கிடைப்ப தருமையாய் 'எல்லாம் பொய் - நானே பிரமம்' என்கின்ற போதனையே மலிந்து கிடத்தலால்..." என்று மைய லுற்று மாறுய் வேதாந்தி யென் றுடன் பட்டு மூன்பின் னுள்ள மூ ணறியாது மொழிவாராயினர். அப்பெருந்

கையா ரியற்றிய "சுவாநுபவத் திரு வாக்கு" என்னும் நூலினையே லும் ஆராய்ந் தறைந்தனரா? அந்நூலில் உள்ள,

"ஆலோ னிறந்து முமைபாகத் தண்ண லிறந்துங் கமலமுறை
நாலா நநத்தோன் முடிந்திறந்து நாரா தாதி யோரிறந்துங்
காலா திகளு மொழிந்திறந்துங் ககன மாதி யழிந்திறந்தும்
ஆலோ கங்க ளிறந்துநின்ரு யம்மே கொப்பை யுடையாளே"

"கண்ட பொருளல்ல காணப் பொருளல்ல கண்டபொருள்
மண்டு மிருளல்ல மாயு மொளியல்ல மன்னுமொளி
பண்டென் பதுமல்ல வின்றென்ப தல்ல பராபரமாம்
அண்ட மடங்க வடங்காப் பெருவெளி யையுளியே"

"கனவிற் குழவி மலடுபெற் ருளுட் களித்தவள்தான்
நனவிற் கருதப் பொய்யா னதுபோ னனவினுற்ற
கனமிக்க மக்களும் பெண்டிருஞ் சுற்றமுந் தன்னுடம்பும்
இனமுற்ற வென்னை யறியப்பொய் யாகி யிருந்ததுவே."

"விண்ணுதி பூதமெலாஞ் சிவமே யாகு மெய்யுருவும் பொய்யுருவுஞ் சிவமே யாகும், கண்ணுனை வேதமெலாஞ் சிவமே யாகுங் கருதுகின்ற நினைவெல்லாஞ் சிவமே யாகும், எண்ணிறந்த பேதமெலாஞ் சிவமே யாகு மிப்படியே திருந்தோறுங் காண்பா னுகிற், பெண்ணுனை மலியா கும் பேத மின்றிப் பிரமமய மாதறிண்ணம் பேத மின்றே."

"தன்மயமாஞ் சத்தி தானினைக்க நாமவுரு
மின்மயம்போற் ரூன்றி விளிந்திடுமே—யென்மயமே
யாமே யனைவையல்லா மாலுல்யா னும்மெனதும்
போமே சிவமாய்ப் போம்"

"பின்னு பின்ன மொன்றிலதாய்ப் பெரிதாஞ் சத்தா சத்திலதாய்
முன்னு நின்ற நிரவயமாய் முடியா திருந்த சாவயமாய்ப்
பன்னு வேது மில்லாமற் பகரு மநுடக் கொம்பாகு
மன்ன மாயை தனையகற்ரு யம்மே கொப்பை யுடையாளே"

"எல்லா மிறந்த நிலையாகி யாரு யெனது கற்பிதமாம்
எல்லா மாகி யல்லவுமா யிருந்து விளங்கு மின்னமுதே
பொல்லே னவிவே கத்தாலே புன்மை விடய மாக்கலைந்தே
யல்லற் படுவ துனக்கழகோ வத்தா வண்ணு வாரணனே"

"முத்துவெண் ணகையார் சித்தம தொதாக்க முயல்வதே கருமமென் றுன்னிப், பித்தரின் மயங்கிப் பிறவியங் கடலிற் பீழையுற் றழுந்துறு வேனைச், சித்தம தொதாக்க வாவென வழைத்துத் தீகழுநீ பிரமமென் றருளு, முத்தம குருவே பொருள்வைமா நகர்வா ழுகந்தருள் சிகரா மணியே"

" அத்தியந்தா பாவ மாகுமிழி கோசமைந்தும்
புத்தியிலை னித்தியமாய்ப் பொற்புறல்போற்—புத்தியிலை
யில்லாதாய் நீங்காதோ வேழைமன மேயிதனிற்
புல்லா திருந்தவலை பொய் "

" ஈயக் கதிரா மிலக்கணமு மின்குறளு
மாயப் பொருளா வறைந்தாலு—நோயகலா
துன்னை மறந்த வொருதுரிய பூமியிலே
மன்னி யிருக்க மதி "

" இந்தப் பெரும்பிரமா காரணிலை யெய்தாமற்
றொந்தப் பிராந்திநிதந் தோய்ந்தனையே நெஞ்சகமே."

" எல்லா மிறந்தநிலை யீதென்று கண்டிருந்து
நில்லாம லந்தநிலை நீங்கினையே நெஞ்சகமே "

" துன்பத் துவிதம் தொலைந்தசுக நிஷ்டையிலே
யின்பத் துருவா யிருப்பதென்றே நெஞ்சகமே "

" சித்திரத்தி லேவரைந்த தீபம்போ னில்லாமற்
கத்திக் தலைவெடிக்கக் கற்றனையே நெஞ்சகமே "

" எல்லா வுலகு மிறந்துமிற வாதபதஞ்
செல்லாது காண்பவற்றிற் சிக்கினையே நெஞ்சகமே "

" அத்திபா திப்பிரிய வாதிவெளி யாயிருந்தாற்
சுத்தமிலாச் சீவபரத் தொய்தமெங்கே யஞ்சுகமே "

என்னுஞ் செய்யுட்களில், அத்வைதத்தினைக் கூறி யிருக்க, அதனை யுணரும் புண்ணிய விசேட மில்லாது சைவ சித்தாந்தி யென்று முன்னை யொழுதித் " தான் கெட்டது மன்றிச் சந்திர புஷ்காணியையுங் கெடுத் தான்" என்னும் வழக்குப் போன்று, மற்றோரையும் ஏமாற்ற நினைத்தார். நினைத்தவர், அவர்களது சரித்திரத்தினை யாராய்ந்து அவ்வழியாயினுஞ் சென்றனரா? துறவு சுவாமிக ளென்றும், துற வாண்டவ ரென்றும் வழங் கப் பெறும் ஸ்ரீ அருணாசல ஞான தேசிக சுவாமிக ளிடத்தில், பக்தி செய் தொழுகிய நம் நண்பரது உபாசனை குருவாகிய யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலரியற்றிய,

" சீர்கொண்ட சகவருட மாயிரத் தெழுநூறு சேருமறு பத்தொன் பதிற் றிருமருவு பிலவங்க வருடமதின் மீனமாந் திங்களிட் டாந்தேதி யிற் றிராமருவு பானுவா ரத்தினுத் திரமெனச் செப்புங் கடித்திரத்திற் சிறந்தபூ ரணியெனுந் திதியதனி லினிதுவரு திகழ்கன்னி லக்கினத்தே, கார்கொண்ட புயல்வண்ணன் மலரயன் வருந்தியுங் காணாத பெரு வாழ் வெனுங், கமைமிடற் றிறைராஜ கட்கபர மேசுரன் கருணையுரு வோட மர்ந்து கனவெழில்கொள் மணிமாட நிலவுசமி வநமெனக் கழறுமுயர்

பதியில் வாசன் கணிதமறு சீடர்தம தகவிரு ரெத்தவரு கருதரிய ஞாக தபனன், போர்கொண்ட காமக்கு ரோதலோ பாதியாம் புகல்குற்ற நீங்கு புனிதன் பொறையறி வடக்கமருண் முதலகற் குணமொடி பொருந்திவள ருற்ற முதல்வன் புவனமூன் றினுமிவன் புகழ்சென் றிடற்கிடம் போதா தெனச்சிறந்தோன் பொருவிலா துயர்சுத்த வேதாக்த சாஸ்திரம் போத மிக் குள்ள நிபுணன், பேர்கொண்ட நிர்மல சமாதிசா ஷாத்கார பிரதாப மிகுசி ரேஷ்டன் பெருமை நிறை தருமுத்து ராமலிங் கக்குரு பிறங்கியிடு மத்து விதநிட் பிரபஞ்ச நிர்விஷய நிஷ்களா தீதமாம் பெருவெளிய தாகி நின்ற பேசரு மகண்டபரி பூரண சுகாகந்த பிரமமா யிலகிலுனே" என் னும் இச் செய்யுளில் சமான ரகிதமானது அத்வைத மென்றும், பிரபஞ் சம் பொய் யென்றும், ஜீவப் பிரம வைக்கிய முடைத் தென்றும், இவ்வா ரூய தன்மையினை ஸ்ரீ முத்தி ராம லிங்க ஞாக தேசிக சுவாமிக ளுடை யவர்களா யிருந்து பிரம வுருவ மாஞர்க ளென்றும், விளக்கி யிருப்ப, அதனை யுணராது "குதிரை குருடாலுலுங் கொள்ளுத் தின்பதிற் குறை வில்லை" என்பது போன்று, குருட்டுத்தனமாய் எழுதினர். இவரது உபாசனை குருவாய ஆறுமுக நாவலர் ஸ்ரீ அருணாசல ஞாக தேசிகப் பெருந் தகையா ரிடத்து எங்ஙனம் அன்பு பூண் டொழுகின ரெனின்,

"துறவு சுவாமிக ளிருவரும் தில்லையை யடைந்து நடராஜ தரிசனஞ் செய்து ஆத்மாநுசந்தானபரர்களா யிருந்தனர். அப்போது யாழ்ப்பாண த்தைச் சார்ந்த நல்லூர் என்னும் நகரத்தில் வசிக்கும் சைவ சித்தாந்த வித் வத் சிரேஷ்டராகிய ஆறுமுக நாவல ரவர்கள் ஸ்ரீ நடராஜ தரிசனத்தின் பொருட்டுச் சிதம்பரத்தை யடைந்து, சிற்சபேசர் திருவீதியி லெழுந் தருளத் தரிசனார்த்தமாக அங்கு வந்து சேர்ந்தனர். அப்போது துறவு சுவாமிக ளிருவரும், அடியார் குழாங்களோடு நின்று, சபாநாதனைத் தரிசித் துச் செல்லுவதை நாவல ரவர்கள் கண்காணுயாகப் பார்த்துப் பின்தொடர் ந்து கோணி மடத்திற் சென்று இரண்டு மூர்த்திகளையும் அஷ்டாங்க நமஸ்காரஞ் செய்து வணங்கி நின்றனர். அவரைச் சுவாமிகள் "நாம் யார்?" என்று வினவ, அவர் "யான் வசிப்பது யாழ்ப்பாண நல்லூர். என் பெயர் ஆறுமுகம். ஸ்ரீ நடராஜப் பெருமானைத் தரிக்கும் பொரு ட்டு இங்கு வந்தேன்" என்று கூறி நிற்க, அவர் வார்த்தை நயத்தைக் கேட்டு உட்காரும்படி ஆஞ்ஞாபித்ததின் பேரில் சற்று நேர மங்கிருந்து, அவர்கள் பிரபாவங்களைக் கண்டு ஆச்சரிய மடைந்து உத்தரவு பெற்றுச் சென்று, பின் நாடோறும் அவ்வாறே வந்து தரிசித்துப் போவர். சுவாமிக ளும் அவரது நல் லொழுக்கத்திற்கு வியப் படைந்து ஸ்காந்தப் புராணத் தைத் திங்தோறும் பகல் பதினைந்து நாழிகைக்கு மேல் பிரசங்கஞ்செய்து வரும்படி ஆஞ்ஞாபிக்க, அங்ஙனமே செய்து வந்தனர். சுவாமிகள் அப் பிரசங்கத்தைக் கேட்டுச் சந்தோஷித்து, ஒரு நாள் இன்று முதற் புராணப் பிரசங்கஞ் செய்து வரவேண்டுமே யன்றிப் பாதிரிமார்களுக்குப் பாடஞ்

சொல்ல லாகா தென்று உத்தரவு செய்ய, அவ்வாறே, அன்று முதல் பாதிரி மார்களுக்குப் பாடஞ் சொல்லுத லொழிந்து, புராணப் பிரசங்கஞ் செய்து வாழ்ந்திருந்தார்" என்னுந் துறவு சுவாமிகள் சரித்திரத்தி லுள்ள இச் சரித்திரத்தா லுணர்க !

இவரது உபாசனை குருவாய ஆறுமுக நாவலரை முன்னர் "நான் பிரமம்" என்னும் வேதாந்தக் கொள்கையி லிருந்து பின்னர் சைவ சித்தாந்தி யாயின ரென் றெழுதினு மெழுதுவர். "ஆண்டவ ரென் றவ்வகையாராலே கொண்டாடப் பெற்ற" என்றார். இவர் கூற்றுப்படி சைவ சித்தாந்தக் கொள்கை யுடையவர்களா யிருந்திருப்பின், இவராலும் இவர் மதத்தினராலுங் கொண்டாடப் பெற்றிருக்கலாமே? அவ்வா றின்மையின் "வஞ்ச மனத்தான் படிற்றொழுக்கம் பூதங்க, ளைந்து மகத்தே நகும்" என்றபடி வஞ்சகத் தன்மையோடு, 'சைவ சித்தாந்தக்கொள்கை யுடையவ' ரென எழுதினரே யன்றி மூழுக்கருத்துட னெழுதினவ ரல்லர். அங்ஙனமெழுதி யிருப்பரேல், பின், 'வேதாந்தக் கொள்கை யுடையோ' ரென்று மாறுகொளக் கூறுவரா ?

"நாம் அவனுக் கடிமையே யென்ற வுண்மைக் கருத்தாலேயே" யென்றார்.

யா மிதுகாறுங் காட்டிய சுவாநுபவத் திரு வாக்கி லுள்ள செய்யுட்களில், இவர் காட்டிய இரண்டு தேற்றேகாரங்கட்கு மாறாய், அத்வைத சித்தாந்தமே நிலைநாட்டப்பட் டிருக்கின்றது. அதனை யுணராது "ஆண்டான் அடிமைத் திறத்தையே" யுண்மையாகக் கொண்டிருந்தார்க ளென்று "அறிவே னறிவேன் ஆலிலை புளிபோன் றிருக்கும்" என்பது போன்று இரண்டு தேற்றேகாரங் கொடுத்து வரைந்த அறி வின்மையை யாவரே கண்டு நகையார். "உண்மைக் கருத்தாலே" என்று எது கொடுத்தனரே. அவ்வேது "இன்மைக் கருத்தாலேயே" யென்னும் வேறொரு வேதுவினைக் கொணர்ந்து, இவரது பிரதிஞ்ஞையினைக் கோறல் செய்தது, 'சற்பிரதி பக்ஷி மென்னும் ஏதுப் போலிப் பெயர் புனைந்து நின்றதனை, தர்க்கநூல் வல்லார்வாய்ச் சரணைதி யடைந்து கேட்டுச் சாந்தி பெறுவாராக ! இவர் கூறிய மேற்கோளு(பிரதிஞ்ஞையு)ம் கோளாய வாறு காண்க.

முன்னர் "வாசிட்டங் கீதாதி நூல்களில் பல சைவ நலங்க ளுள" வென்று பிரதிஞ்ஞை செய்தார். அப்பிரதிஞ்ஞையும் முன்னர் யா மறிவித்த அந்நூல்களின் செய்யுட்களால் அழிந்தமையின், "பிரதிஞ்ஞா சந்நியாசம்" (மேற்கோ ளழிவு) என்னும் தோல்வித்தானத்தை யுற்றவரு மாயினர். அப்பிரதிஞ்ஞையும், யா முன்னர் அறிவித்த அந்நூற் செய்யுட்களால் அந்நூலி லின்மையின் "ஆகாயத் தாமரை மண முடைத்து" என்னும் ஆசிரியாசித்த ஏத்துவாபாச முடையோரு மாயினர். இவ்வாறு 'பிரதிஞ்ஞா சந்நியாசம்' என்னுந் தோல்வித்தானத்தையும், சற்பிரதி பக்ஷம்,

ஆசிரயாசித்தம்' என்னும் எத்துவாபாசங்களையும் நண்பர் ஆபரணமாக அணிந்து கொள்ளுகின்றனரே யென்று யாம் மிகவு மிரக்க முறுகின் றோம். முன்னர் வாசிட்டங் கீதாதி நூல்கள் சைவாநுகூலமா யிருக்கின்ற தென்றனர். பின்னர் "வாசிட்ட கைவல்ய கீதாதி நூல்கள் பிறர்க்குப் போதித்து வந்தாலும்" என்ற வாக்கியத்தால் சைவாநுகூல மின் றென்று கூறுகின்றார். சிறார் போன்று அறிவிலியாய் முன்னர்ச் சைவநூ லென் றும், பின்னர் அத்வைத நூலென்றும் "பழய குருடி கதவைத் திறவடி" என்னும் பழமொழிக் கிலக்காய் மீண்டும் மீண்டும் அம்மூரண் மொழி களையே, முத்திக் கேது வெனக் கருதி மூர சறைகின்றார்.

"பின்பு சீடராய் அங்கு வந்த துறவு சுவாமிகளும் அச்சைவ நெறியே மேற் கொண்டு, அக்கோயிலூரில் மூப்போது முண்டு வசித்திருத்தலின் நோக்க மில்லாமற் சிதம்பர மடைந்து ஸ்ரீமந் நடராஜ தெரிசந செப தப தியானுதிகளே பெருவாழ் வெனக் கொண்டு ஆண்டா னடிமைத் திறமே பேணி ஒரு பொழுது பிசகி யேற் றுண்டு, பிசகிப் பெருவாழ்வினராய் வாழ்ந்தனர்" என்றார்.

ஸ்ரீமத் ஆண்டவரிடத்து மாணைக்கராய துறவு சுவாமிகள், தமது குருவினது கொள்கைக்கு மாறுய கொள்கையினைக் கைக்கொள்வர்களா? நம் நண்பர் கொள்கைப்படி ஸ்ரீமத் ஆண்டவர் 'சைவ சித்தாந்தி'யா யிருப் பினும், அக்காலும் ஆண்டா னடிமைத் திறம் பேணுதற்காக ஸ்ரீ கோவி லூரி னின்று மகல வேண்டாமே! "செப தப தியானுதிகளே பெரு வாழ் வெனக் கொண்டு" என்றனரே,

"மந்திரஞ் செபந் தியாநம் பூசனை வணக்கம் வேண்டா
அந்தமி லாத முத்திக் குபாயமே யறிய வேண்டும்
சிந்தனை புறனே செல்லிற் றுயரமே திரிய மீட்கில்
பந்தமாந் துன்ப நீங்கிப் பரமான வின்பஞ் சேர்வார்" என்னுந்

தேவிகாலோத்திரச் செய்யுளைக் கைக்கொண்டு ஒழுகிய ஸ்ரீ துறவு சுவாமி கள், செப தப தியானங்களையே பெரு வாழ் வென்னும் மோகூடி மென்று கொள்வர்களா? "அக்கோயிலூரில் மூப்போது முண்டு வசித்திருத்த லின்" என்று வசை மொழி புகன்றார். என்றையத் தினம் நண்பர் கோவி லூரில் வந்து மூப்போது மங்கம் புசித்தலைப் பற்றியி லொருங் கிருந் துண் டுணர்ந்தனரோ? உணர்ந்திருப்பி னந் நாளைக் குறிப்பிட்டு வரைய லாமே! அவ்வாறு 'மூப்போது முண்பதில் நோக்க மில்லாதவர்களாய்ச் சிதம்பரஞ் சென்றார்கள்' என்று ஸ்ரீ துறவின் பெருந்தகையாரை வரைந் தவர், பின் யோசனை செய்து வரைந்தாரா? அங்ஙனங் கருத்துடையவர் களா யிருப்பின், ஸ்ரீ மூத்து ராம லிங்க ஞான தேசிக சுவாமிக ளென்னும் தமது குரு மூர்த்தியின் ஆஞ்ஞையைச் சிரமேற் கொண்டு, அக்கோயிலூர் மடாலயத்தின்கண் பிரம ஞானசாரிய மூர்த்தியா யெழுந்தருளி யிருந்து,

எண்ணிறந்த மாணாக்கர்கட்குப் பிரமோபதேசஞ் செய்துகொண்டிருந் திருப்பார்களா? அவர்களியற்றியுள்ள 'கைவல்ய வுரையினையேனும், சீடாசாரத் தினையேனும்' உணர்ந்து உளறுபடை செய்தனரா? நம் நண்பர் அவைதிக தாந்திரிக சைவ சித்தாந்தியெனப் பெயர் வைத்துக் கொண்டு, காலையில் ஸ்நானம் ஜபம் தபம் பூஜையின்றி,

"ஆசினை யடைந்த நெஞ்சிற் ரூமத ருணவு கேட்கில்
ஊசினை பழஞ்சோ றெச்சி லும்பர்பூ சனைக்கா காமை
யேசினை வெந்தி லாத வினையன விவற்றி னூலே
காய்சின மூதலா யுள்ள துயரெலாம் விளைவ கண்டாய்"

"இப்படி யன்றி வேரு யிராசத ருணவு கேட்கிற்
கைப்பன புளிப்பு வர்ப்புக் கூர்ப்பன கடிய வெய்து
நெய்ப்பயி னெருப்புப் போலச் சுடுவன விவற்றி னூலே
மெய்ப்படு நோயு நெஞ்சத் திடும்பையும் விளைவ வேலோய்"

என்னும் பகவற்கீதைச் செய்யுளிற் கூறியாங்கு, புளித்த இட்டலி யினையும், மாட்டென்பு கலந்த சினியினையும், இன்னும் இவை போல்வன பலவற்றையும், வயிறு புடைக்க ஏகாந்த ஸ்தானத்தி லிருந்து புசித்துப், பின் அது ஜீரணிப்பான் மூன்று மணிவரை மஹான்களை நிந்தித்தும், அதன் பின் பூசாரி யென்னும் பெயருக்கியைய ஏனைச் சைவ சித்தாந்த வைசிய மணிகளை யேமாற்றும் பொருட்டு, டம்பமாக

"கையொன்று செய்ய விழியொன்று நாடக் கருத்தொன்றெண்ணைப்
பொய்யொன்று வஞ்சக நாவொன்று பேசப் புலால்கமழும்
மெய்யொன்று சாரச் செவியொன்று கேட்க விரும்புமியான்
செய்கின்ற பூஜையெவ் வாறுகொள் வாய்வினை தீர்த்தவனே"

என்று பிரமாநந்தப் பரமபத வாழ்வுற்ற எமது பட்டினத்துப் பெருந்த கையார் கூறியாங்கு வாக்கு மநமுங் கண்ணும் வேறிடஞ் செல்லும்படி பூஜை புரிந்து, பின் அறுசுவைகளும் பொருந்தும்படியான அன்னதிகளை யபரிமிதமாக விலாப்புடைக்கவருந்தி உண்டு, அவ்வுணவும் பரிணமிப்பான் வேதநிந்தை, வேதாந்த நிந்தை, விஷ்ணு நிந்தை, வித்வான்கள் நிந்தை, விப்பிரர் நிந்தை முதலியவற்றினை விரிவாய் மாலுறு மாலைக் காலம் வரும் வரைச்செய்து, பின் காலை முதல் மாலை வரை யாவரையு நிந்தித்த வுஷ்ணத்தினை நிவர்த்திப்பான், அரசாங்கத்தாருக்கு முக்கிய ராஜதானியாகிய சென்னபட்டணத்து முகத்தலளவைக் கருவியாகிய பக்காப்படியால் ஒரு படி ஆன்பாலை வாங்கி அரைப்படியாக அக்கினி பகவனிடத்துப் பிரார்த்தித்து வற்றச் செய்து, அதனோடு தமக் கிஷ்டமான அன்னதிகளையும் அளவின்றிப் புசித்து, அயர்ந்து நித்திரை செய்து வருகின்றனரே! அது போன்றே கோயிலாரின்கண்ணும் முப்போதும் அந்நம் புசித்து வருகின்றார்க ளென்று கருதிக் கழறினர் போலும். ஒரு நிகமாயினும் கோவிலாரின்

கண் வந்திருந்து அங்கிருக்கும் அடியார் குழாங்களையும், அவர்கள் செய்யும் கைங்கரியம் சிரவணம் முதலியவற்றினையும், கண்கூடாகப் பார்த்துப் பந்தியி லொருங் கிருந்து போஜநஞ் செய்திருப்பாராயின், "நரி வாலினல் ஆழியின் ஆழம் பார்த்தல் போல்" என்னும் பழமொழிப்படி மகிமை யுணராது மநச் சான்றுக்கு மாறாக வரையார். வரையார்! ஸ்ரீ துறவின் பெருந் தகையாரைச் சைவ சித்தாந்தி யென்று வரையக் கருதிய நண்பர், அவர் கண்மீது திரு வாவடு துறை யாதீனத்து மஹா வித்வான் மீனாக்ஷி சுந்தரம் பிள்ளை யவர்களால் துதிக்கப் பெற்ற,

"துறவொழுக்க மனைத்துமொரு வடிவுகொண் டாலன்ன தூயவன்
றன்மயமாக யாவையுங்கண் டிருப்போன், மறவொழுக்கங் கடிந்துயிர்கள்
சுவாநுபவ மருவ வயங்கியவே தாந்தசிர வணமேற்றும் வலியோன், அற
வொழுக்கந் தலையெடுப்பக் காரணங்கண் டவப்போ னடங்குமிட மாகிய
சிதாகாசப் பிரியன், உறவொழுக்கம் வளர்த்தவரு ணைசலதே சிகனென்
றுரைத்திடுஞ் சீசனெனு மொருவனேவாழ்த் திடுவாம்"

என்னும் இச் செய்யுளையேனும் ஆராய்ந்து அறைய லாகாதா? இச் செய்யுளில் அவர்களை அத்வைதிக ளென்று கூறி யிருக்க மாறு கூறி மயங்கினரே.

இன்னும் ஸ்ரீ துறவின் பெருந்தகையா ரியற்றிய,

"தந்தைதுதற் பந்துவெலா மநந்த தேகத் தருவதலா லனுதினபவ
பந்தந் தீர்க்கார், சிந்தையிலு லாய்ந்திடலப் பந்து வெல்லாஞ் சிறுமை
தருஞ் சத்துருவே யாகா நிற்ப, ரந்தமிலா வருள்வடிவாங் குருவோ
வென்ரு லகண்டபரி ஞாநத்தை யருளா னல்கித், தொந்தமதா மநாதி
பவ பந்த மெல்லாந் துப்பறவே நன்ரு கத் துடைந்துங் காப்பன்"

"இந்த விடும்பை யுடம்புறு மேது
தந்தை யெனப்புகழ் கின்றிலர்தக்கோ
ரந்த மிலாத வகண்டழ நம்முட்
டந்தவர் தந்தை யெனச்சமை வுற்றூர்"

"வருபிறப் பறவே வேண்டினுன் மறையீ றென்னுமம் புயத்தினை
மலர்த்தற், கிரவியாய் நெஞ்சிற் கிசைந்தநற் குருவை யாதொரு வழுயினை
விறைஞ்சி, யருள்சுரந் திடுதற் காவதே செய்வா னருமறை முடிவிலா
மறையும், பொருளேநே ராக வுமக்கெனக் சீசன் புகன்றவப் படியிலே
புகன்றேன்"

என்னுஞ் சீடாசாரச் செய்யுட்களானும் பதி பசு பாசங்கள் அநித்தியங்க ளென்னுங் கொள்கை யுடையோர்க ளென்பதை யினியேனு மூணர்வாராக!

" ஈன்றளித் தழிக்குஞ் செய்கைக் கேதுவா மயலுய் மாலாய்
ஆன்றவீ சனுமாய்த் தானே யாகந்த மூர்த் தியுமாய் நிற்கும்
பூன்றமுத் தனுமா யின்பப் புணரியா தவலுய் நாளுந்
தோன்றிய விமல போத சொரூபத்தைப் பணிக்கின் றேனே. "

என்னுங் கைவல்யநவநீதச் செய்யுட்கு, எமது துறவின் பெருந்தகை யார் இயற்றிய வுரையில், நம் நண்பரது கோளாகிய ஆண்டா னடிமைத் திறத்தினையும், பதி பசு பாச நித்தியத்தினையும் சுருதி யுத்தி சுவா நுபவ வாயிலாய் விரிவாய்க் கண்டித்துப் பத்துப்பக்க மெழுதியிருக்க, அவை யாவும் தமக்கு முரா ணென வுணராது, " அஷ்டதரித்திரன் முப்பத்திர ண்டறமும், சர்வசுவ தக்ஷிணை யாகமும் செய்ய நினைத்த கதை" போன்று, வீணை வெழுதி வெட்க முற்று வெங்கிட விரும்புகின்றார்.

" இவ ரிடத்துச் சீடராய் வந்த மெய்யப்ப சுவாமிகளும், அங்கு மூப் போது மூண்டு வசித்தலினும், அக்கொள்கையிலுஞ் சிறிதும் நோக்க மில் லாமல், அக்கோயிலூரை விட்டு நீங்கி மதுராபுரியை டைந்து, ஒருபோ தண்டு சிவ தீக்ஷாதி பெற்றுச் சித்தாந்த சாஸ்திர முற்று முணர்ந்து, பிரபஞ்சப் பற்றை வேரறக் களைந்து, ஸ்ரீ சோமசுந்தர பாதங்களேயே யிறு கப் பற்றிச் செயற் கரிய சிவ நியமானுஷ்டான தற்பர சிவ ஞானச் செல்வ ராய் அம் மதுரா புரி யெல்லை கடவாமற் சீவன் முத்தராய் வாழ்ந்தனர் " என்றார்.

" இவ ரிடத்துச் சீடராய் வந்த மெய்யப்ப சுவாமிகளும்" என்றதே. ஸ்ரீ துறவு சுவாமிகளைக் குருவா யடைந்த இவர்க்கு, அவர்கள், நம் நண்பர் கூற்றுப்படிக் கைக் கொண்ட சைவ சித்தாந்தம் நோக்க மில்லாது போயி ற்றோ ? நம் நண்பர் துறவின் பெருந்தகையாரைச் ' சைவ சித்தாந்தி ' யென்று கூறுகின்றமையின், ஆண்டா னடிமைத் திறங் கொள்ள வேண்டு மென்று கருதிச் சீடரா யடைந்த மெய்யப்ப சுவாமிக்கு நோக்க மிலதாகவே ஸ்ரீ துறவின் பெருந்தகையார் கருத்துப் பரம அத்வைத சித்தாந்த மென்று சித்த மாயிற்று. நம் நண்பருக்கு ஒருவகைக் குருவாய மெய்யப்ப சுவாமி யென்பார், நம் துறவின் பெருந்தகையாரை யத்வைத சித்தாந்தி யென்று கருதுகின்றனர். அம்மெய்யப்ப சுவாமியின் மாணாக்கராய நம் நண்பர், நமது துறவின் பெருந்தகையாரைச் சைவ சித்தாந்தி யென்று சாற்றுகின் றனர். இவ்விருவரது கூற்றில், எவரது கூற்று எதுவரை யுண்மையாம் என்பதனையு மாராய்வாம். நண்பர் கூற்றுப் பிரமாணமாமேல் நண்பரது குரவன் கூற்றுப் பொய்யாம். நண்பரது குரவன் கூற்று மெய்யாமேல் நண்பர் கூற்றுப் பொய்யாம். இவ்வாறு " சுந்தோபசுந்த " நியாயத் தால் இருவர் கூற்றும் பொய்யாய்ப் போயினவாறு காண்க.

ஒரு சிறிய ஆபாசச் சுவடியின்கண் ஆரம்ப முதல் அந்தம் வரைப் பரம் பரையாக வுள்ள வாக்கியங்களுள் ஒன்றையேனும் முன்பின் முரணின்றி

கற்றூர் பார்த்துக் காழுறும்படி வரையத் தலைப்பட்டனரா ? அந்தோ ! இவர் தலைவிதி யிருந்தவா றென்னே ! யாம் எத்தனையோ பண்டிதரைப் பார்த் திருக்கின்றோம். இவர் போன்ற அறிவிலியைப் பார்த்திலம். "பெரிய மாதேவ சுவாமிகளும், அக்கோயிலூரிற் சிலகால மிருந்தும், மற்றவர்கள் போல நால்வகை யறுசுவை யுணவு கொள்ளாது வெற்றங்காத் தையும் பசையறக் கழுவி யுண்டு சிவ ஸ்தல சஞ்சாரியாய்ப் பின்பு திருப் பெருந் துறையை யடைந்து சிவாதூதிச் செல்வராய் வாழ்ந்தனர்" என்று வரைந்தார்.

வரைந்தவர் சைவ சித்தாந்தி யென்று வரையாது, தங் கொள்கைக்கு மாறாய், அத்வைதி யென்றும், வைராக்கிய மூடையவர்களா யிருந்தார்க ளென்றும், வரைந்தார். "சிவாதூதிச் செல்வராய்" என்னுஞ் சொற்றொடர், "சிவன் பரசிவமேமே" என்னுந் திருமந்திரச் செய்யுளின் படி, "சிவன் நான்" என்னும் அநூபூதிச் செல்வராய் வாழ்ந்தார் எனத் தத்துவமசி மஹா வாக்கியப் பொருளை யறிவித்தலையும் அறிவாராக !

"அக்காலத்தில் தங வைசியர்களாகிய நாட்டுக் கோட்டை நகரத்தார்கள் வசிக்கின்ற நகரங்களில் வேறு சைவ சித்தாந்த மடாலயங்களில்லாமையாலும், ஆண்டவருந் திருப்பணியாதிகளை செய்து, பிரபஞ்ச வெறுப்புடையரா யிருந்தமையாலும், பெரியோரை யடைந்து நன்மை பெற வேண்டு மென்று விரும்புகின்றவர்களுக்கு இக்கோவிலூர் மடமே புகலாகத் தோன்றப் பெற்று வந்தடுத்தார்கள். அடுத்தாலும், அங்கு ஆண்டவ னொருவன் நமக்கு மேலா யுளன், நா மெல்லா மடிமைகளே, நாம் ஆண்டவனைச் சரியை கிரியா யோக ஞான நெறி நின்று வழிபடுதலே முத்தி சாதன மென்கின்ற போதனை விளக்கங் கிடைப்ப தருமையாய், எல்லாம் பொய், நானே பிரமம் மென்கின்ற போதனையே மலிந்து கிடந்தலால் அதில் விருப்ப மின்றி மேற்குறித்த பெரியர், அவ்விடத்தை விட்டுச் சென்று ஆண்டா னடிமைத் திறமே பேணி வாழ்ந்தார்கள்" என்றனர்.

அக்காலத்தில் நகரத்தார்க ளுள்ள ஊரில் சைவ சித்தாந்த மடங்க ளின்மையால் இக்கோவிலூரே புகலிடமா யிருந்த தென்றனரே. இக்கால் நகரவைசியர்க ளிருக்கின்ற ஊர்களில் எத்தனைச் சைவ சித்தாந்த மடங்க ளிருக்கின்றன. ஒன்றேனு மின்றே. ஆண்டா னடிமைத் திறம் பேணி பெரியாரை யடைய வேண்டு மென்று விருப்புடையோர் தங்கொள்கைக்கு மாறாய கொள்கையுடைய அத்வைதப் பெரியாரை வந் தடைவானேன் ? குன்றக்குடியில் 207 வருஷமாக வுள்ள திருவண்ணமலை யாதீனம், பிராமண குலத்தி லவதரித்து அவதூதாயிருந்த, தெய்வ சிகாமணி தேசிகரவர்கள் வேதாந்தியா யிருக்க. பின் அவர்கள் பரம்பரையில் வந்த சைவத் தம்பிரான்கள் சைவ சித்தாந்த மடமாக மாற்றிய, அதிசமீபமா யிருக்கும்

அம்மடத்தின்கண் வசிருக்கும் பெரியாரைப் போய்ச் சரண கதியாக அடைந்திருக்கலாமே? அங்ஙனஞ் செய்யாது கோவிலுரி லுள்ள பெரியாரையே சரண கதியாக வந் தடைந்தமையின் கோவிலுருக்கு வந்த மாணாக்கர்கள் யாவர்க்கும் அத்வைதமே யுடன்பா டென்று இவர் வாக்கியத்தானே வெளியாகின்றது.

நம் நண்பர் வசிக்குங் காரைமா நகரில், தமக்குபதேசிக்கச் சைவ சித்தாந்தப் பெரியார் கிடைக்கா திருப்பின், தமக்கு சேர் விரோதியாய கிறிஸ்துவப் பாதிரிமார்கள் வசிக்கும் மடாலயத்தினைப் புகலிடமாக அடைவார் போலும். அங்ஙனந் தான் அநுபவியா திருப்பின் பிறர்மீது வெற்றுரை கூறுவரா ?

ஸ்ரீ மகாதேவ சுவாமிகள் தேகாந்தம் வரையும் பகவற் கீதை வாசிட்டம் முதலிய நூல்களை நாடோறும் பாராயணஞ் செய்து வந்தவர்களாயிற் றே? அதனையேனு முணர்ந்து வைத்தனரா ? அவர்கட்குக் குருவாய தேழுத்துப்பட்டி ஐயா வென வழங்கும் பழநியப்ப சுவாமிக ளென்பவர்கள் வேதாந்த கொள்கையுடையோ ரென்பதையேனு முணர்ந்து வைத்தனரா ? சிவஸ்தல யாத்திரை செய்வதே சைவசித்தாந்த மோக்ஷ மென்று,

திருமந்திரம்—ஞானம்.

ஞானத்தின் மிக்க வறிவறி காட்டில்லை
ஞானத்தின் மிக்க சமயமு நன்றன்று
ஞானத்தின் மிக்கவை நன்முத்தி நல்காவா
ஞானத்தின் மிக்கார் ஞானின்மிக் காரே. 1467

நவ நூடணம்.

கத்தவும் வேண்டாங் கருத்தறிந் தாறிலுற்
சத்தமும் வேண்டாஞ் சமாதிலை கூடிலுற்
சுத்தமும் வேண்டாஞ் சுதாடக்கற்று நிற்றலாற்
சித்தமும் வேண்டாஞ் செயலற் றிருக்கிலே. 1644

ஓதலும் வேண்டா முயிர்க்குயி ருள்ளுற்றுற்
காதலும் வேண்டாமெய் காயமிடங் கண்டாற்
சாதலும் வேண்டாஞ் சமாதிலை கூடிலுற்
போதலும் வேண்டாம் புலன்வழி போகாற்கே. 1633

அவா வறுத்தல்.

" மாடத்து ளானலென் மண்டபத் தானலென்
கூடத்து ளானலென் கோயிலுள் ளானலென்
வேடத்து ளானலென் வேட்கைவிட் டார்நெஞ்சின்
மூடத்து ளேயின்று முத்திதந் தானே " 2614

சர்வஜீவோத்தரம்.

ஆன்மாவே பரமசிவ மெனவுண்மை யாக வறிகின்று னவனைந்த வவத்தையடை யினுமவ், வான்மாவே பரமுத்தி யெளிதடைபு மிந்த வான்மலா பத்தையொத்த லாபம்வே றில்லை, ஆன்மாவே விசிட்டகர ணாதீத வாக்கு மனாதீத சருவஞ்ஞ னைபூ ரணனும், ஆன்மாவே பரமசிவ சொரூபமா கலினு லான்மலரு பத்தையே சிந்திக்கக் கடவன். 18

வன்னமாச் சிரமமுயர் தவஞ்செபந் தி யான மந்திரந்தீர்த் தங்கெய்வ வுபாஸ்தி திக்கு காலஞ், சொன்னதரு மஞ்சாதி சங்கமெலாம் விட்டுச் சுயம்பிரகா சத்தினே திராசிரய ணாகி, அன்னியசிந் தனைவிட்டுச் சகல பதார்த் தத்து மாசையற்றுப் பாவனு தீதனு மென்றும், தன்னுலே தன் னனத்தன் னிடத்திலே தானே தானிருந்து சிந்திப்பர் தருஞானத் தவரே.

ஆனசக காரணனும் புருட னேன வக்கரவத் துவுநானே பரப்பிரம நானே, ஈன மன்றி யழிவற்ற பரசிவனு நானே யென்றுசிவ யோகத்தாற் கருமத்தை யிழந்து, ஞானநிலை யாலைய முழுதுமறப் பாஞய் நாடரிய சீவபர வைக்கியத்தை யடைந்து, மோனமா நிருவிகற்ப னுவரன்போ னித்த முத்தனு வான்மவுபா சனைபண்ணக் கடவன். 64

நிர்க்குணமாய் நிர்மலமாய் நிருவிகற் பனுமாய் நித்தநிரஞ் சனநிரா தாரநிரா மயமாய், அற்புதமாய்ப் பிரகிருத வப்பாலேய வசந்தேக மாய விடா வியமாய்ச்சூக் குமமாய்த், தற்பரமாய் ஞாகவழி யிற்காணும் விசுத்த சாசுவத மாய்ச்சருவ சர்வகத மாகிச், சிற்பரமாய்ச் சருவேதா முகவியா பகமாஞ் சிவனைத்தன் னிடத்திலே பின்னமறத் தெரிந்து. 65

. மந்திரம் பதவர்ணம் புவனந்தத் துவங்கண் மருவுகலே பாதிமூர்த் தாமூர்த்த மாக, மூந்துபிரக் கிரியைமார்க் கங்களா மண்ட முழுதுந்தன் னிடத்திருப்ப தாகவே கண்டோன், சந்ததமுஞ் சருவதரி சனசர்வக்ஞ னாகிச் சர்வபரி பூரணனின் மலவிமுத் தனுமாய், வந்தசல னுபூத நிரதி சயா னந்த மயனுகிச் சிவசாகூஷாத் காரதையா யிருப்பன். 67

என்னுஞ் செய்யுட்களுள் கூறப்படாமையாதலும் சிவ ஸ்தல தெரி சன யாத்திரை, மோகூஷ சாதனமே யன்றி மோகூஷரூப மன்மூம்.

அதில் விருப்ப மின்றி மேற்குறித்த டெரியர் அவ்விடத்தை விட்டுச் சென்று ஆண்டான டிமைத் திறமே பேணி வாழ்ந்தார்கள் என்று வரைந்தவர், எவ்வூரி லெக் குருவை யடைந்து எச் சாத்திரத்தினைப் பாட னுகேட்டு ஆண்டான டிமைத் திறம் பேணினர்க ளென்று வரையாது வெற்றுரையாக வரையின் பிரமாணமாமா? தீக்ஷை, குருபதேச முதலி யன வின்றிச் சைவ சித்தாந்தத்தினைக் கைக் கொண்டார்க ளென்பது நம் னண்பர் கருத்தே போலும்.

" புண்ணிய பாவ மில்லை. சுக துக்க மில்லை. பந்த மோகூ மில்லை. நாம் பிரமம். நாம் எது செய்தினுந் செய்யலாம் என்பதே யுறுதியாகத்

கொண்டு, தேகாந்தம் வரையும் மாமிசாதிகளில் மிகப் பிரியமாய்ப் புசித்து வந்தாரும், துறவுக்கு விரோதமான மாதர் போக மேற் கொண்டு அதுவே தேகாந்தமாயி ருருஞ் சில ருளர்.'' என்று வரைந்தார்.

மாமிசாதிகள் புசிப்போரும் துறவுக்கு விரோதமான விஷயாதங்களை யநுபவிப்போருமாய்ப் பல நிருந்து நாசத்தை யடைந்தார்க ளென்று வசை மொழி புகன்று,

திருமந்திரம் அசற்துரு நெறி.

" உணர்வொன் றிலாமூட ருண்மையோ ராதோன்
கணுவின்றி வேதா கமநெறி காணுன்
பணிவொன்றி லாதோன் பாநிந்தை செய்வோன்
அணுவின் குணத்தோ னசற்குரு வாமே. "

என்னுஞ் செய்யுளுக் கிலக்காகக் கருது கின்றார். இவர் இன்னு ரென்ற பெயருடன் வெளிப்படையாக எழுதி யிருப்பாராயின், கிரிமினல் கோர்ட்டில் கேஸ் தொடுக்கப்பட்டு, சென்னை சூளை சோமசுந்தரநாயகர் வைஷ்ணவர்களை நிந்தித்து நூறுரூபாய் அபராதங் கொடுத்தது போன்றும், தேவிகோட்டையி லிருந்து, பத்திரிகை நடாத்திய வோர்யாழ்ப்பாணி கோவிலூரைப் பற்றி நிந்தையாக எழுதி 50 ரூபாய் அபராத மிறுத்தது போன்றும், நம் நண்பரும் பொதுப் படையாகக் கூறியது தாம் அபராத மிறுக்கும்படியா நேரும் என்னுங் கருத்தை யுட்கொண்டே போலும் !

" பாவ புண்ணிய மில்லை. சுவர்க்க நரக மில்லை " என்ற போதனை யினி யெதைத் தான் செய்விக்க மாட்டாது" என்று வரைந்தார்.

சுவர்க்காதிகள் அநித்திய மென்று பல நூல்களும் பறை யறை வித் தாற் போன் றறிவித் திருக்க அதனை யுணராது,சுவர்க்க மில்லை யென்னும் ஞானமானது சாத்திர நிஷித்த காரியங்களைச் செய்விக்கு மென்று வீணை பெரியோர்களை நிந்தித்து நாகிற் காளாகக் கருது கின்றனர்.

" மாதர் போக மற்ற சைவா தீனங் களில் இப்போ துண்டென்ப தால், அவர்கள் பிறரால் ஒரு தாணமாகவு மதிக்கப்படா ரென்ப "என்று திரு வாடுதுறை யாதீனம், சூரியனார் கோவில், திருப்பனந்தாள், தரும புரம், மதுரை திருஞான சம்பந்தர் மடாலயம், குன்றக்குடி திருவண்ணா மலை யாதீனம், முதலிய விடங்களி லுள்ள சைவ சித்தாந்தப் பெரியோர் களால் ஸ்தாபிக்கப் பெற்ற ஆதீனங்களையும், அவற்றி லுள்ள அதிபர்களைத் தரும்புக்குச் சமானமானவர்க ளென்றும், நிந்தித்து எழுதி யிருக்கின்றார். இதனால் இவர்க்குச் சைவ சித்தாந்தம் உடன்பா டன்றென்று வெளியா யிற்று.

பிரமசாரி, கிரகஸ்தன், வானப் பிரஸ்தன் சந்நியாசி என் னும் நான் காச்சிரமங்களுள், ஓராச்சிரம மின்றி விரராய வீணைச் சிரமத்தினை

தாம் கைகொண்டிருப்பது போன்றே, சைவ சித்தாந்தமும் வேதாந்தமுமின்றி யிடைப்பட்ட வீண் மத மொன்றைப் பெரியார் கொள்கைக்குஞ் சாஸ்திரங்கட்கு மாறாய், சுவகபோல கற்பனையாகக் கற்பித்துக் கொண்டு வீண் வாதந் தொடுத்து வாணாள வீணாளாகக்கக் கருதுகின்றனர்.

எஞ்சியுள்ள இரண்டு பக்கங்கட்கும் முன்னரே யெம்மவரால் பலகாலும் "நல்ல மாட்டிற் கொரு சூடு, நல்ல மனிதர்க் கொரு சொல்" என்று கண்டிக்கப்பட்டிருத்தலினாலும், யாமுங் கண்டியா திருப்பின் மீண்டும் இதனையே எழுதுவ ரென்னுங் கருத்தினாலும், அவற்றின் கண்டனத்திற்கு இரண்டாம்பாகம் எனப் பெயர் தந்து வரைவோமாக!

நண்ப ரெழுதிய தூர்வையாகசப் படத்தில், "ஞாநசனகர், ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள், இறும்பூதூர் ஸ்ரீ தத்துவாராய சுவாமிகள், நல்லாற்றூர் துறை மங்கலம் ஸ்ரீ சிவப்பிரகாச சுவாமிகள், திருப்போரூர் ஸ்ரீ சிதம்பர சுவாமிகள், கோவிலூர் ஆண்டவ ரென்னும் ஸ்ரீ முத்திராம விங்க ஞாந தேசிக சுவாமிகள்; துறவு சுவாமிக ளென்னும் ஸ்ரீ அருணைசல ஞாந தேசிக சுவாமிகள், திருப் பெருந்துறையில் ஸ்ரீ பெரிய மகாதேவ சுவாமிகள், என்னும் எண்மரையும் ஆண்டானடிமைத் திறங் கொண்ட சைவ சித்தாந்தப் பெரியார்" என்று கூறப்பட்டிருக்கின்றமையின் அவ் வெண்மருக்கும் விக்கிரகங்கள் செய்து சிவாலயங்களில், அறுபத்து மூவரோடு எழுப்பத் தொருவராக ஸ்தாபித்து நித்திய நைமித்திக பூஜையாதிகளும் விமரிசையாக நடத்தி, அறுபத்து மூவர் மடம் என வழங்கு மடத்தினை எழுபத் தொருவர் மட மெனப் பெயரை மாற்றி, அம்மடத்தின்கண் இவ் வெண் மருக்கும் குருபூஜா காலங்களிற் படித்தற்குச் சரித்திரம் வேண்டுமாகலின், பெரிய புராண மியற்றிய சேக்கிழார் நாயனாருக்குப் பிரதிநிதியாக நம் நண்பர் இருந்து கொண்டு, அவ் வெண்மரது சரித்திரங்களையுஞ் செய்யுளாகப் பாடி, அப்பெரிய புராணத்துட னொருங்கு சேர்த்து, அச்சிட்டு, அரங் கேற்றி, அப்புத்தகத்தினை யானையின்மே லேற்றிக் காரைமா நகரை வலம் வந்து, பின்னர் எழுபத் தொருவர் மடத்தினுள் வைத்து பூஜை முதலியன செய்து யாவரும் படிக்கும்படி செய்வாராக! அங்ஙனஞ் செய்யா திருப்பரேல் இவ ரெழுத்து நீர்மே லெழுத்துக்கு நிகராகு மென் றுணர்வராக! விரிப்பிற் பெருகும். பின் வரும் இரண்டாம் பாகத்தையும் பார்த்து நன்மை கடைப்பிடிப்பா ரென நம்புகின்றேம்.

நம் நண்பர் பெரியோர்களின் சரீரத்தினை 'நார்த் தொடுத்து' ஈர்த்து முச்சந்தியிற் போடவேண்டுமென்று வற்புறுத்திக் கூறுகின்றமையின், இவரது சரீரத்தினையும் துஞ்சியதின் பின், நார்தொடுத்து ஈர்த்துக் கொண்டு காரைமா நகரை மும் முறை வலம் வந்து முச்சந்தியில் பல பேய் நாய்கள் பிடுங்கித் தின்னும்படி போடுங்க ளென்று ஞாதியரிடத்து ஆஞ்ஞை செய்து தம் சரீரத்தினை விடுவாராக! அவ்வாறு செய்யாது மௌந மூற்றுச் சாவரேல் தம் வாக்கியம் பொய்த்துப் பிரமாணமாகக்

கொள்ளாது வீண் வெற் றுரையுடைய புத்தகமா மென்றறிஞருணர்வா
ரென் றுணர்வாராக !

தெருள்விழியோ ரிதுதன்னைத் தேர்ந்தறிவு தியிற்கொள்வர்
மருள்விழியோ ரிதுதன்னை மாயாவா தமதென்பர்.

திருமந்திரம்.

ஒழிந்தேன் பிறவி யுறவென்னும் பாசங்
கழிந்தேன் கடவுளு நானுமொன் றானே
னிழிந்தாங் கினிவரு மார்க்கமும் வேண்டேன்
செழுஞ்சார் புடைய சிவனைக்கண் டேனே. 2958

பிங்கள ஹரு ஐப்பசி மீ

சொக்கலிங்கச் செட்டியாரின் தாஷணை நாவுக்கோர்

சூட்டுக் கோல்

மூதற் பாகம்

முற்றிற்று.

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.

கூட்டுக்கோற் பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
6	15	மறவாற்	மறவாமற்
4	29	சோற்றில	சோற்றில்
11	10	தரிசிநம்	தரிசநம்
17	15	காலத்தில்பேதம்	காலத்தி லபேதம்
,,	32	தரும்படிப்பிரார்	தரும்படி பிரார்
18	28	உபநிஷத்து	உபநிஷத்தது
21	30	ஈசாவவஸியம்	ஈசாவாஸியம்
23	11	பின்ளையார்	பிள்ளையார்
38	31	கருடபாவனை பொய்யே	கருடபாவனையின் பலன் பொய்யே
60	1	அத்தியயம்	அத்தியாயம்
69	6	மூக்கின்றியவ	மூக்கறுபட்டவ
,,	,,	மூக்கனையன்	மூக்கறையன்
,,	9	மெ	மெ
,,	16	மெ	மெ
,,	17	மெ	மெ
,,	,,	மெ	மெ
74	33	சந்தியாசம்	ஹரஹி
,,	37	மெ	மெ
83	11	தத்துவாராயர்	தத்துவாராயர்
,,	24	லேண்டு	வேண்டு.

78	14	டைந்து	யடைந்து

கொள்ளாது வீண் வெற் றுரையுடைய புத்தகமா மென்றறிஞருணர்வா
ரென் றுணர்வாராக !

தெருள்விழியோ ரிதுதன்னைத் தேர்ந்தனுபூ திபிற்கொள்வர்
மருள்விழியோ ரி [illegible] தமதென்பர்.

ஒழிந்தேன்
கழிந்தேன்
னிழிந்தாங்
செழுஞ்சா

சோக்கலி

பிழை திருத்தம்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
9	30	வாயிலால்	வாயிலாய்
9	34	பாகத்தில்	பக்கத்தில்

நூல்.

4	3	பொருட்டு	பொருட்டுச்
5	32	பெற்று	பெற்றுப்
6	2	மாத்திர	மாத்திரமாயு
6	9	பக்ஷிவாதியாத	பக்ஷபாதியாக
7	17	பொருளிஎ	பொருளினை
12	13	மீறுக	யீறுக
14	15	ஆவரும்	அவரும்
14	26	கின்றீரென்	கின்றேனென்
15	24	மென்று	மென்றுணராது,
16	31	திருவாசக சுருதி	திருவாசகச் சுருதி
20	2	வபனிடதங்	வுபனிடதங்
22	33	மத்திடாவகை	மதித்திடாவகை
24	21	பாமார்த்தப்	பரமார்த்தப்
27	12	பட்டினத்து	பட்டினத்துச்
33	6	தேத்த	தேத்தக்
35	38	நாகாக்க	நாகாக்கக்
36	24	சிலாவயங்	சிவாலயங்
48	37	கருதி	கருதிச்
56	22	நாமாகி	நாமாகிச்
58	22	றேற்றிலென்	றேற்றிலேன்
58	28	பேதாமே	போதமே
64	14	ஓதிக்குமா	உதிக்குமா
64	77	ஆணை	ஆனை
65	34	மூறுநாமங்	மூருநாமங்
66	1	மூறுநாமம்	மூருநாமம்
69	16	மூர்க்கரையர	மூக்கரையர
69	17	,,	,,
73	34	ஸ்காந்தப்	ஸ்காந்த
78	14	ஸடந்து	யடைந்து

ஸ்ரீ காசிகாநந்த சுவாமிகள் அவர்களால் இயற்றப் பெற்ற நூல்கள்.

	ரூ.	அ.
1. மண்டூலப் பிராஹ்மணோபநிஷத்தும் - ராஜயோக பாஷ்யமும்	0	4
2. வியாச தாத்பர்ய நிர்ணயம்	0	8
3. வேதாந்த சஞ்ஜா	0	2
4. ஸைவ்ஷ கர்மிய சித்தி	0	8
5. சுவாராஜ்ய சித்தி	0	8
6. விசாராசாகரம் - மூலமும், அதற்குச் சரியான அகவலும்	2	0

அச்சி லிருப்பன.

7. பேத திக்காரமும் சத்கிரியை யென்னும் உரையும்	1	0
8. ஹரிமீடையும் - ஹரி தத்வ முக்தாவலியும்	0	8
9. சிவ சங்காராவதாரம் - சங்காராசாரிய சுவாமிகள் சிவாவதார மென்பதற்குப் புராணப் பிரமாணங்கள்	0	8
10. மஹாத்ம சரிதாமிர்தம்	1	8
11. வேதாந்த பதார்த்த மஞ்ஜூஷா	1	8
12. ஈசாவாசிய உபநிஷத்தும் சங்கர பாஷ்யமும்	0	4
13. வேதாந்த சித்தாந்த முக்தாவலி	0	8
14. வேதாந்த பரிபாஷை	0	5
15. தர்க்க சங்கிரக மூலமும் - தர்க்க சங்கிரக தீபிகையும்	0	4

விஜய சக்தி (வெற்றி வேல்) இது இருப்பாங் குன்றம் ஸ்ரீமத்-சச்சி நாதையர் எழுதிய மகா உக்ர வீரபத்ராஸ்திரம் என்னும் புத்தகத்தின் மறுப்பாம்.

வேதாந்த சாஸ்திர ரத்நாவலி	1 0
பஞ்சதசி செய்யுள்	0 10
சங்கர விஜய விலாசம் (சித்விலாச சுவாமிகள் என்னும் சித் புருஷ ரியற்றியது)	0 12

லோகோபகாரி ஆபீஸ்,
கோமளேசுவரன் பேட்டை,
சென்னை.



சிவமயம்.

ஸ்ரீ சங்கராசாரிய குருப்யோ நமஃ

கூட்டுக் கோலாற் கூவண்டு
துள்ளி யெழுந்த தூத்துக்குடி முத்தைய பிள்ளை
கடாரனை யடக்குங் கட்டோரி.

இது

கோவிலூர் மடாலயம்

ஸ்ரீ வீரசேகர ஞான தேசிக சுவாமிக ளவர்களின்

பாத சேகரரும்

உபய பாஷா வேதாந்தப் பிரவர்த்தகாசாரியரும் ஆகிய

ஸ்ரீ காசிகாநந்த சுவாமிக ளவர்களால்

விடப் பெற்று

சென்னை

கோமளேசுவரன் பேட்டை

சச்சிதாநந்த அச்சியந்திர சாலையில்

பதிப்பிக்கப் பெற்றது.

1919.

உ

சற்குருப்யோ நமः

கூட்டுக் கோவலாற் கூறின்று,
துள்ளி யெழுந்த தூத்துக் குடி மூத்தைய பிள்ளைக்
கடாரனை யடக்குங் கட்டாரி.

ஒத்த தறிவா னுயிர்வாழ்வான் மற்றையான்
செத்தாருள் வைக்கப் படும். 214 (திருக் குறள்)

நுனிக்கொம்ப ரேறினு ரஃதிறக் தூக்கி
னுயிர்க்கிறுதி யாகி விடும். 476

திரு வாவடு துறை யாதீனத்திற் சம்பளம் பெற்றுத் தென் சமுத்திரக் கடையி லுள்ள தூத்துக் குடியில், "திரு வாவடு துறை யாதீன சைவப் பிரசாரகர்" என்னும் பெயருடன், வேதாந்தம் சைவ சித்தாந்தம் என்னும் இரண்டினையுங் கைக் கொண்டு வசிக்கும், பொ. மூத்தைய பிள்ளை யென் பார் "ஸ்ரீமத் காசிகாநந்த சுவாமியார் கட்டுரையின் மேல் கடா" என் றொரு சிறு ஆபாசச் சுவடியினை யெழுதி, சிவ நிந்தை, சிவாதார நிந்தை, தீத் தார் நிந்தை, வேதாந்த சாஸ்திர நிந்தை முதலிய நிந்தைக ணிரம்பப் பெற்று, வெளியிட்டிருக்கின்றனர். அவரால் வெளியிடப் பெற்ற அப் புத்தகம் தன் பெயருக் குரிய கடா விஷயங்களைத் தாங்காது, விடைக் குரிய விஷயங் களையும், 4-வது பக்கத்தில், "இனியேனும் இவரும் இவர்சார்பினரும், திரு மந்திரம் முதலிய திரு வாக்குகளுக்குச் சைவ சித்தாந்தப் பெரியாரிடம் பொருள் கேட்டு உண்மை யுணர்வார்களா?" என்றும், 5-வது பக்கத்தில் "தருக்க ஞானத்தில் வல்லவர் போன்று தம்பட்ட மடிக்கும் சாமியார் அறி யாமைக்குக் காரணம் யாதோ?" என்றும், "இப்பொருள் கூறுதல் இவர் மதத்தினர்க்குப் பழம் பாடமே, ஜீவன் ஈஸ்வரன் என்னுஞ் சொற்களுக்கு இவர் கூறிய பொருளே பொரு ளென, மாயா வாதச் சார் பில்லாத வட மொழி வல்லார் முன் சாதிப்பரா?" என்றும், 7-வது பக்கத்தில் "எத் தடிப்புப் பற்றி" என்றும், "செட்டியா ரவர்க ளெழுதியதும் பொய்யாத லின் அதற்கு இவ்வளவு சிரமப்பட வேணடாமே. இதனினே, பொய்யை மெய் யென்று வீணுச்சிரமங் கொள்ளும் புண்ணிய முடையார் சுவாமியா ரும் இவர் மரபினரு மென்பது விளங்க வில்லையா?" என்றும், 9-வது பக் கத்தில் "சுவாமியாரையும் இவர் மரபினரையும் மாயா வாதிக ளென்று எந் தச் சைவர்கள் கூறினும், நாங்கள் மாயா வாதிக ளல்லர். வேதாந்திக ளென் றும் மட்டும் சொல்லிக் கொள்ளத் தடையிட்டிடத்தக்கோ யார்?

சைவர்களாகிய நீங்கள் தாம் மாயா வாதிகள் என்று கூறுதல் பொருந்துமா ?" என்றும், 12-வது பக்கத்தில், "சான்றோர்களைக் கேட்கு முறையிற் றக்கோரிடங் கேட் டின்மை யுணராது, மனம் போன வாறு சொல்லுதலும் எழுதுதலும் முறையாகுமா ?" என்றும், "இவர் எத்துணைவு கொண்டெழுதினர்" என்றும், 13-வது பக்கத்தில் "சுவாமியார் தர்க்க சாஸ்திரத்தில் வல்லவர் போன்று தம்மைப் பலவிடங்களிலும் வியந்து கொள்ளுகின்றனரே" என்றும், "இனியேனும் கவனித்து அங்கரிப்பாரா" என்றும், "இவருக்குத் தாயுமான சுவாமிகள் மீது இத்துணைக் கோபம் வந்தமைக்குக் காரணம் என்னையோ ?" என்றும், 14-வது பக்கத்தில், "தெரியாதாயின், வாதத்திற்கு வரும் போ தாயினும் தெரிந்து கொள்ள வேண்டாமா ?" என்றும், "தன் நாவைக் காத்துக் கொள்ள முடியாமல், படிப்பின் கர்வம் பற்றியா ?" என்றும், "சித்தாந்த நூல்களைச் செவ்வனே தெரிந்து கொள்ளாக் குறை பற்றியா ?" என்றும், 15-வது பக்கத்தில், "ஸ்ரீ சங்காசாரிய சுவாமிகள் முன்னர் பௌத்த மதத்தை வெல்லுதற் பொருட்டு ஏகான்ம வாதஞ் சாதித்து, பின்னர்த் தாமுய்ய வேண்டிச் சைவ சித்தாந்த நெறியைத் தலைக்கூடி நின்று" என்றும், 16-வது பக்கத்தில் "இவரும் இவர் சார்பினரும் ஒரு வார்த்தையாவது குற்ற மறச் சொல்ல விரும்பாது, வெற் றுரையாகப் பலவாய வார்த்தைகளைச் சொல்ல விரும்பி, ஒரு நூலையாவது கசடறக் கல்லாது, பல நூல் வல்லா ரென்று றியாதார் புகழ, மே லெழுந்த வாரியாய், பல நூல் படித்தவ ராதலின், அது பற்றி இப் புரட்டுக் கதை கூறினரா ?" என்றும், "அந் நூலையும் அவ் வுரையினையும் முறையாய்ப் பாடங்கேட்டு நன் குணர்ந் தெழுத வேண்டும்" என்றும், "இனியேனும் படித்துச் சிவ ஞான சுவாமிகளை பற்றிக் கூறிய குறைக்கு, மன்னிப்புக் கேட் டெய்வாரா ?" என்றும், "கற்றறிந் தடங்காக் குறையிலுலேயே யென்பதை மறுக்க முடியுமா?" என்றும், 17-வது பக்கத்தில் "இவர் மதத்திற்கு முதலாய ஆசிரியராய் விளங்கிய ஸ்ரீ சங்காசாரிய சுவாமிகள், தாமுய்தற் பொருட்டு ஆண்டான் மைத் திறம் பேணி, பௌத்த மதத்தை வெல்லுதற் பொருட்டு ஏகாத்ம வாதஞ் சாதித் திருக்கவும், அவ் வுண்மை யறியாது அவர்க்குப் பின் வந்த இடையாய ஆசிரியரும், கடையாய ஆசிரியரும் ஏகான்ம வாதமே ஆதி சங்காசாரிய சுவாமிகள் கொள்கை யென்று தம்பட்ட மடித்துத் திரிவது, நுணுகி யாராயும் அறிவின்மை என்பது மறுக்க முடியுமா ?" என்றும் "இனியேனும் அறிந்து கொள்ளுவா ?" என்றும், 18-வது பக்கத்தில், "இவர் மதத்தைத் தம்மட்டில் வைத்துக் கொள்ளாது, பெரியார் கருத்தும் இதுவே யென்று அவர் கண் மீதும் தமது மதத்தை யேற்றுகின்றார். அந்தோ ! இத் தீச் செயலுக் கென்ன பய னடைவரோ?" என்றும், "இப் புரட்டு முகவுரையும் வாங்கிச் சேர்த்து வெளியிட்ட சுவாமியாருக்கும் திருக் குற ளாராய்ச்சி யுண்டென்று ஒப்புதல் கூடுமா? தாங் கற்ற நூல்களினும் தமக்கு நுணுகிய வாராய்ச்சி யுண்டோ வில்லையோ என் றையுறச் செய்வதை விட, தம்மளவில் தா மடங்குதல் முறைமை யென்பதை யினியேனும் அறிந் தடங்குவா ரா ?"

என்றும், "ஷணப்பண் வீட்டுக் கோழி தானே விலங்கில் மாட்டிக் கொண் டது போன்று, யோசனை யின்றித் தாமே மாட்டிக் கொண்டார்" என்றும், "இனி யேனும் இத்தகைய குற்றங்களில் மாட்டிக் கொள்ளாது" என்றும், உள்ள வசை மொழிகளையும் தன் னகத்தே தாங்கி வந்திருத்தலின், அப் புத் தகத்திற்குக் "கடா" என்னும் பெயர் பொருத்த முடைத் தன்றும். பின் னர், எப்பெயர் கொடுக்கின் பொருத்த முடையதாம் எனின், "வேதாந்தம் சித்தாந்தம்" என்னும் இரண்டுங் கெட்ட, பெயர் மாத்திரையாற் சைவ சித்தாந்தத்தைக் கைக் கொண்ட, "தூத்துக் குடி, போ. ழ்த்தைய பிள்ளையின் தூஷணைச் சுவடி" எனக் கொடுக்கின் நலமாம். அப் புத்தகத் தில் "விஞ" எனப் பெயர் தந்து இருபது போலி விஞக்கள் வினவுகின்ற னர். அவர் எமக்கு எழுதிய கடிதத்தில், "அறியாமை யுடையேன். உண் மை யறிய விரும்புகின்றேன்" என்று எழுதி யிருக்கின்றமையின், அறியா மையின் பாற் பட்ட விஞவாய், பின் கடாவில் அதனைக் கடந்து கடாவு கின்றமையின், அவற்று ளடங்காது, போலி விஞ எனப் புதுப் பெயர் தாங்கி நின்றமை யுணர்க.

விஞவாவன:—1. வேதாந்த சாஸ்திரங்கள் மூத்தித் தலையில் மூப் பொருள் நித்திய மென்று கூறுகின்றன. 2. திரு மந்திரம் வேதாந்தத் தைக் கூறுமிடத்து, மகா வாக்கியத்திற்கு "முத்தியில் மூப் பொருள் நித் திய மென்று கூறுகின்றது. அதன் தொடர்பு சில. 3. உபமானம் பொ ருள் பொருந்த வில்லை. 4. திருவந்தாந்தம் இரு பொருளைக் கூறுகின்றது. 5. 'பொய், அநித்தியம், இல்லை, மாயை' என்பவற்றிற்கு நிலையாமை யென்பது பொருள். 6. சிவ ஞான சுவாமி யுள்ளிட்டார் வைதீக சைவ சித் தாந்திகள். 7. மாயா வாதிகள் வேதாந்திகட்கு வேறாய் ஒருவ ருளர். 8 ஞான வாசிட்டத்திற்கு முத்தியில் மூப் பொருள் நித்திய மென்று கொள்க. 9. சிவ ஞான வள்ளலார் மூப் பொருளை நித்திய மெனக் கொண்ட வேதாந்த சித்தாந்த சமரச சைவராவர் முத்தாத்துமாக்கட்கு முத்தித் தசையில் இரு பொரு ளுள. பெத்தாத்துமாக்கட்குப் பெத்த தசையில் மூப் பொரு ளுள. 10. வாசிட்டத்தில், பாசம் நித்திய மென்று வேதாந்திகள் கொள்கின்றனர். 11. கருட பாவனையின் வாக்கியம் பொருத்த மன்று. 12. திரு மந்திரத் தைத் தேவி கோட்டை ஜமீந்தார் கைக் கொண்டதற்காகக் கொண்டது. 13. திரு மூல நாயனாரை உண்மையாகக் குரு வென் றங்கீகரிக்கின்றோம். 14. சைவ சித்தாந்திக ளறிவிலி களல. 15. உமாபதி சிவாசாரியர் சமஸ் கிருதத்தில் ஒரு நூலுஞ் செய்ய வில்லை. ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் தவைத சித்தாந்தியே. 16. சிவ ஞான சுவாமிகள் "மோகூத்தில் ஜீவத்வம் கெட்டுச் சிவ ரூபம் ஜீவன் ஆகின்றான்" என்கின்றனர். 17. ஸ்ரீ சங்கரா சாரிய சுவாமிகள் அபிப்பிராயம் மூப் பொருள் நித்தியமாகிய தவைத வாத மே. 18. வேதாந்திக ளனைவரும் படித்தவர்களா? 19. பசு பதி பாசத்திற்கு அந்தியமான நித்தியப் பொருள் யாது? 20 முகவுரையி லுள்ள குறள் திரி வுடையது" என்பனவாம்.

1. "தர்மிகளுக் கயிக்கியமே யன்றித் தருமங்களுக் கயிக்கிய மின்மை" மென்று கூறியதனால், இருபொருள் நித்திய மென்று யா மெழுதி யிருப்ப தாகச் சூட்டுக் கோலை, யெம் மிடத்து வந்து, சரணகதி யடைந்து கேட்கு முறையிற் கேளாக் குறையாலும், முன்னர் வேதாந்தியாயிருந்து பின்னர்ப் பலேச்சையாற் சைவ சித்தாந்தியாகிய காரணத்தாலும், எழுதி யிக் கட் டாரியாற் ருக் குண்டனர். விவகார காலத்தில் உபதேசிக்கும் போதும், வாதம் நடக்கும் போதும், பேதமாக வைத்துத் தான் உபதேசிக்கவும் வாதஞ் செய்யவும் கூடும். இரு தருமிகள் இருக்கின்றன என்று கேட்ட சிஷ்யனுக்கு, இரு தருமிகளை யநுவதித்துச் சாஸ்திரங்களா லுபதேசிக்கப்படுகின் றது. அவ்வாறே, விவகார காலத்தில் வாதம் நடக்கும் போது அநுவதித் துக் கூறியதாம். அதனை யுணராது, இரு பொருள் நித்திய மென் றுணர்ந் துறுமுகின்றார். "சிவனுக் குரிய எண் குணங்கள் சீவனுக்கு வந்து பொ குந்து கின்றன" என்பதன் பொருள், மோக்ஷ காலத்திற் சீவத்துவங் கெட்டு, சிவ ரூபமாகுதலால், சிவனுக் குரிய குணங்கள், மறையாது வெளிப் படுகின்றன என்பதாம். அவ்வா றின்றி, ஜீவன் வேறு யிருப்பவன். அவன் மீது, சிவனுக் குரிய குணங்கள் கஞ்சுகம் போன்று வந்து மறைக் கின்றன என்று பொருள் கொள்ளற்க. "சாஸ்திர சித்தாந்த லேச சங் கிரகம்" என்னுங் கிரந்தத்தில் ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதரவர்கள் இவ்வாறே யெழுதி யிருக்கின்றார்கள். அக்கிரந்தம் பார்க்க அவர்க் காற்ற லின்மையின் சமஸ்கிருத ஞான மூடையார்பாற் சரணகதி யடைந்து கேட் டுணர்வாராக. உண்மைச் சித்தாந்தத்தைக் கூறுங்கால் ஒரு பொரு ளென்றும், வினையர்க் கறிவித்தற்கு இரு பொருள்கள், இரு தருமிகள், சிவனுக் குரிய குணங்கள் ஜீவனுக்கு வந்து பொருந்துகின்றன என்று விவகாரத்தை யநுவதித்துப் பேதமாகவும், எழுதி யிருப்பதனுன் மூ ணின்மை யுணர்க. "ஸ்ரீமத் அப் பய்ய தீக்ஷித ரவர்கள் கருத்தோடும் மாறுபடின், இவர் மதம் யாவர்க்குத் தான் சம்மதம்" என்று எழுதினர். கருத்தோடும் என்ற வும்மையால், இவர் கருத்தோடும், இவரைச் சார்ந்த சிவ ஞான போத மூள்ளிட்ட 14 சாஸ்திரத்தினைக் கைக் கொண்டார் கருத்தோடும், மாறு படுகின்ற தென்று கருதுகின்றனர். 14. சாஸ்திரமும் முத்தியில் மூப் பொரு ளுண் டென்று தூலமாகக் கூறுகின்றமையின், அதனோடு மாறுபடுதல் தேற்றமே. ஸ்ரீ அப்பய்ய தீக்ஷித ரவர்க ளியற்றிய 'பரிமளம், வேதாந்த சாஸ்திர சித்தாந் த லேச சங்கிரகம். உபக்கிரம வுபசம்மாரம்." என்பன வாதி நூல்களை யும், அவர்கள் ஆசாரியராய காசிம்ம சுவாமிகள் இயற்றிய "பேத திக் காரம்" என்னும் நூலினையும் படித்து, அதன் பின் "அவர்கள் கருத்தோ டும் மாறுபா டாகாதா?" என்று வினவினரா? அவ்வா றின்றித் தம் மனம் போன வாறு ஆராய்ச்சி பார்க்குத லழ கன்றே. அந் நூல்களைச் செவ்வனே யாராய்ந்து, அவ்வாறே மாறுபடா தறைந்தா மென் றறிக.

2. சூட்டுக் கோலிற் காண்பிக்கப் பட்ட "திரு மந்திரச் செய்யுளும் வினைச் செய்யுளும், 'ஜீவன் பரன் சிவன்' என்னும் மூன்று பொருளைக்

கூறுகின்றன வென்பது வெளிப்படை " யென்றும், " திரு மூல நாயனார் திரு வாக்கிற்கு மாறாக ஒன்றும் தன்மையினையே தத்துவ மசி யுணர்த்துவ தென்றல் எவ்வாறு பொருந்தும் ?" என்றும் வலாந்தனர். இதனால், முத்தியில் ' சிவ சேதநம், பா சேதநம், சிவ சேதநம் ' என மூன்று சேதநப் பொருள்களும், பாச மாய சடப் பொருளும், நித்தியமாய் இருந்து, ' நான்கு பொருள் நித்திய ' மென்று கூறுகின்றவர் திரு மூல நாயனரென்று கருதுகின்றனர் போலும். ஸ்ரீ மூல நாதர், " வேதாந்தம், சித்தாந்தம், நாதாந்தம், போதாந்தம், யோகாந்தம், கலாந்தம் " என்னும் ஷடாந்தங்களையும், சமஸ்கிருதத்தி லுள்ள ' மந்த்ர மாலிகா ' என்னும் நூலினும், தமிழி லுள்ள ' திரு மந்திரம் ' என்னும் நூலினுங் கூறினவ ராயிற்றே. அவ்வாறு கூறியவர் வேதாந்த சித்தாந்த சாஸ்திரங்களின் பொருளை யுணராது, வேதாந்த சாஸ்திரங்கள் மூப் பொருள், அல்லது நாற் பொருள் நித்திய மென்று கூறுகின்றன என்பரா ? " அம்பத மேலைச்சொரூப மாவாக்கியம், செம்பொருள் ஆண்டருள் சீர்நந்தி தானே." என்ற வாக்கியத்தால் ஒரு பொருளே யுள தென்றும், " திரிமலந் தீர்ந்து அவன் சிவமும். நான் என்றும் தான் என்றும் இரண்டில்லை. மல மூன்றுஞ் செற்றவர் சுத்த சிவ மாவர். தூரியமும் ஈசவெடு ஒன்றுக்கால் பின்னையும் வந்து பிறந்திடும். அறிவு என் வடி வென்று அறிந் திருந்தேன், எகமான தவம் உறுதத் துவ மசி. எல்லாம் அறிந்த அறிவினை நான் என்னில் எல்லாம் அறிந்த இறை யெனலாம். தன்னை யறிந்திடுந் தத்துவ ஞானிகள். தனை மாற்றி யாற்றத் தகும் ஞானி. தனையாய்ந் திருப்பது தத்துவம் " என்பன வாதி வாக்கியங்களால் ஒரு பொருளே யுள தென்றும், கூறியிருப்பவும், அவற்றை யுணராது மூப் பொருளைக் கூறுதல் வெளிப்படை யென்றும், திரு மூலர் திரு வாக்கிற்கு மாறாக வுணர்த்துவ தென்றல் எவ்வாறு பொருந்தும் ? என்றும் எழுதி யிடர்ப்பட்டு, அந்நூல் கொண்டும், சூட்டுக் கோல் கூறியது கொண்டும் யாவரு முணர்ந்த பொருளை யுணராமையின் " அஞ்ஞானம் " என்னுந் தோல்வித் தானத்தை யடைந்தனர்.

இன்னும் 2393. " சிவமாதல் வேதாந்தம் ". 2401. ' அநாதி ஜீவன் ஐம் மலமு மற்று அப்பாலாய் அநாதி யடக்கித் தனைக் கண்டு அறுத்தன் ஆதி மலம் கெடத் தத்துவாதீதம் விளவு நீர் பாலாதல் வேதாந்தத்து உண்மையே.' என்பன வாதி பல செய்யுட்களிலும், ஒரு பொருள் உண்டென்பதைக் கூறியிருக்கின்றார். நீர் கெட்டு எங்ஙனம் பாலாகின்றதோ, அங்ஙனமே ஜீவத்துவங் கெட்டு, சிவ ரூபமாகிய பிரஹ்ம மாதல் வேதாந்தத்தின் சித்தாந்தமாம் என்பது கருத்தாம். பாசம் அநித்திய மென்பதற்கும், பசுத்துவம் நீங்கிச் சேதந மொன்றே முத்தியி லுள தென்பதற்கும் பிரமாணமாக எண் ணிறந்த செய்யுட்கள் திரு மந்திரத்தி லுள தென்றுணர்க.

' அக் குழையன் இவனே ' என்பது போன்று பொரு டரும் விட்டு விடாத விலக்கணைக்கு, ' முன்னர்ப் பாசத்தோடு கூடிப் பசுவாயிருந்தவனே

இப் பொழுது பிரமத்தோடு கூடிப் பிரமமா யிருக்கின்ற னென்பது பொரு ளா?' என்று வரைந்தார். அஃதோ டமையாது, திரு மந்திரம். 2634-வது செய்யுளும், சிவ ஞான போதம் 11-ம். சூத்திரமும், 'ஜீவன், மூத்தியில் வேறாய் உள்பொரு ளென்றே கூறுகின்றன' என்று மிகைபடக் கூறிச் சித்தாந்தப் படுத்தி, 'அஞ்ஞானம். அதிகம்' என்னுந் தோல்வித் தானங்களை யடைந்தனர். சிவ ஞான சுவாமிகள் என்னுந் தம்பிரான் என்பார், 'சோயந் தேவதத்தன்' என்னுந் திருட்டாந்தத்தோடு திரு மந்திரத்திற் கூறிய விட்டு விடாத விலக்கணையை, தமக் குடன்பா டன் றென்று கண்டித்துத் திரு மந்திரத்தை யொரு புடை யொதுக்கி யிருப்ப, அதனை யுணராது, சாதக மாகக் கருதி வினவுகின்றார். திருவ்டாந்தத்தில் 'அவன் இவன்' 'அக் குழையன் இவன்' என, ஒரு பொருளே யுள்ளது. இவர் கூறும் தாவ்ந் டாந்தத்தில் 'பதி பசு பாசம்' என மூப் பொருள்க ளுள்ளன. திருவ்ந் டாந்தத்தி லுள்ள பரோக்ஷத் தன்மை அபரோக்ஷத் தன்மைகளையும், குண் டல மாகிய விசேடணத்தையும், நீக்கி விடின், விவகார காலத்திற் பொரு ளொன்றே யாம். இவ்வாறு, தாவ்ந்டாந்தம் இன்மையின் பதிப் பொரு ளோடு பசுப் பொருளையும் பாசப் பொருளையும், ஒன்று சேர்க்கின் பெத்த தசையினும் மூத்திக் தசையில் விசேட மின்றாம். பாசம் நாசமாயவழி. பசுத் தன்மை, பதித் தன்மையாய விசேடம் நீங்கின் சேதந மொன்றே யெஞ்சும். அதனைப் பிறர்க் குணர்த்துவான், சிவம் என்றும் பிரஸ்மம் என் றும் சான்றோர்களில் வழங்கப் பெறு மெனக் கொள்க. இவ்வாறு, கொள் ளாக்கால் திருட்டாந்தத்தில், குழையோடு கூடி யிருந்த புருடன், குழை. யில்லாக்கால், குழை யின்மை யென்னும் அபாவமாய விசேடணத்தோடு கூடி யிருப்பதே? தேவ தத்தன் பாசமாகிய அக் காலம் என்னும் விசே டணத்தை விட்டு, இக் காலமாய விசேடணத்தோடு கூடி யிருப்பதே? அவ்வாறு, துஷ்யது துர்ஜந நியாயத்தாற் கொள்ளினும், பாசமாய அக் கால, இக் கால, குண்டலங்களும், தேவ தத்தன் புருடனுய பொருள்களு மாய் இரண்டே யுள்ளன. பெத்த தசையிற் பாசத்தோடு கூட்டுற வற்ற பசு, மூத்தி தசையில் பாசத்தை விட்டால் சிவத்தோடு கூட்டுற வுறும். பாசம் நித்திய மாகலின், பாசத்தை விட்டுச் சிவத்தோடு கூட்டுற வுறல் பொருந்தாதாம். இவர், பிரணவ பாசம் அநித்திய மெனக் கூறியவாறே பாசம் அநித்திய மெனக் கொள்ளின், பாசம் நீங்கிய வழி, பசு, பசு என் னும் பெயரைப் பெறுதாம். பாசத்தாற் கட்டுறலால் பசுவாய சேதநம் பசு என்னும் பெயரைப் பெற்றதே யன்றி, இயற்கையிற் கட்டுறற்கு முன் பசு என்னும் பெயரைப் பெற் றிலது. ஆகலின், பாசம் நீங்கிய விடத்தும், பசு சுத்த சேதந மாக விருக்கின்றமையின், சுத்த சேதநமாய சிவத்திற் கும், அதற்கும் பேத மின்மையின், அபேத மாகவே யிருக்கு மென் றுணர்க. தத்துவ மசி மகா வாக்கியம் சேதநங்கட்கு ஐக்கியத்தினைக் கூறிச், சடப் பொருட்கு அநித்தியத்தினை யறை கின்றதே யன்றிச், சடமாய பாசத்திற் கும், பசு, பதி, என்னுஞ் சேதநங்களோடு ஐக்கியத்தினைக் கூறவுதின்றும்.

தத்துவ மகி மகா வாக்கியத் திருட்டாந்தத்தில், மூப் பொருளின்மூகலின், சட சேதனமாய மூப் பொருள் நித்தியத்துவத்தைக் கூறுவதற்கு, அவ்வாக் கியமும், அத் திருட்டாந்தமும் முழு விரோதமாம். முன்னர்ப் பாசத்தோடு கூடிப் பசுவா யிருந்தவன், வேதாந்த சாஸ்திரம், பிரஹ்ம ஞானாசாரியாது உபதேசங்களால், பாசத்தை நசிப்பித்துத், தனது முன்னிலைமையாய பிரஹ் மமாயினன் என்றும், உண்மையில், அஃதாவது பரமார்த்தத்தில் பசு என் றொரு பொருளில்லை யென்று முணர்க. திரு மந்திரம், சிவ ஞான போதம் கூறியது பேத நிலைக்கண் என்று பித் தின்றிக் கொள்க.

"ஒரு சேதனஞ் சுத்தமா யிருந்து அந்தக்காண உபாதியைக் கூடிற் றூ? அசுத்தமா யிருந்து அந்தக்காண உபாதியைக் கூடிற்றூ? சுத்தமா யிருந்து கூடிற் றெனின் எதற்காகக் கூடிற்று? எப்பொழுது கூடிற்று? உயிர் ஆணவ மலத்தை யநாதியே கூடியவாறு போல எனின், அது சுத்தப் பிரமமாகுமா? அநாதியே கூடிய உபாதியைத் தானே நீக்குதல் எவ்வாறு கூடும்? கூடுமாயின், முன்னமே நீக்கி யிருக்கலாமே? உபாதியைக் கூடுத லும் பிரிதலும் இயல் பெனின், பிரிந்த பின்னருங் கூடு மென்றூகி, பிரிவ தற்காகச் செய்யுஞ் செபல்க ளெல்லாம் வீண் செயல்களா யன்றூ முடி யும்? சைவ சித்தாந்தத்தில் ஆன்மா அநாதியே மலத்தைச் சார்ந்து பெத்த ஞ்ய் நின்று, பின்னர் குரு கிருபையால் மலத்தினின்றும் நீங்கிச் சிவத் தைச் சார்ந்து முத்தனாகு மென்று கூறுதலால், மலத்தைச் சார்ந்து நின்ற வுயிர், அதினின்றும் நீங்கிய வாறு போல, சிவத்தைச் சார்ந்து நின்ற உயி ரும் அதனின்றும் நீங்காதா? நீங்குமாயின் சார்தற்காகச் செய்யுஞ் செயல்க ளெல்லாம் வீண் செயல் தானே யென்பீரேல் நன்று விளம்பினீர்; மல சத்திக்குக் கேடுண்டு, சிவ சத்திக்குக் கேடின்று. மல சத்தியின் கேட்டி னால் மலத்தினின்றும் நீங்கிய வுயிர் சிவத்தைச் சாரும். சிவ சத்திக்குக் கேடின்மையால் சிவத்தைச் சார்ந்த வுயிர் மலத்தில் பிரிந்த வில்லை இது எதுபோலு மெனின், எரிக் கரைக்குக் கேடுண்டு. கடற் கரைக்குக் கே டின்று. எரியின் கரை யுடைந்தால் அங்குள்ள நீர் கடலைச் சாரும். கடற் கரைக்குக் கேடின்மையின் அதனைச் சார்ந்த நீர் எரிக்கு பிரிந்த வில்லாதது போலும் என்க. ஆதலின், இது கொண்டு நுமது செயல் வீண் செய வில்லை யென்று தப்பித்துக் கொள்ள முடியுமா? எல்லாம் பொய்யா யிருக் கப் பொய்யில் இத்துணைத் தர்க்கம் எதற் கெனின், இங்ஙனம் கூறுவது சூனிய வாதமாகிய நிரீச்சுர வாதமாகு மன்றி ஆஸ்திக வாத மாகுமா?" என்றூர்.

வேதாந்த சாஸ்திரத்தினைத் தக்க பெரியாரிடத்துச் சாணைகதி யடை ந்து, கேட்கு முறையாற் கேட்டுச் சங்கிக்காது, தம் மனம் போனவாறு "சுத்தப் பிரமமா யிருந்து உபாதியைக் கூடிற்றூ? அசுத்தப் பிரமமா யிருந்து உபாதியைக் கூடிற்றூ?" என்று சங்கிக்கின்றூர். இவர் மதத்திற் கூறும் விஞ்ஞான கலர் முன்னர் சுத்தமாய பதியா யிருந்து, பின்னர் ஆணவ மலத்தை யடைந்தனரா? அன்றூ? சந்திரன் சுத்தனை யிருந்து

" இந்துவினை யநாதியடைந் தனைத முழுது மறையாம லிந்து தன்னுல், அந்திறனை யொளிர்வித்துக் கொள்களங்க மென " என்று களங்கத்தி னைப் பொருந்தினரு ? இன்று ? பொருந்தின வெனின் மல நீக்கமும், களங்க நீக்கமும், உண்டாய விடத்து, மலமுங் களங்கமும் அத்தியந்தம் நாசமா யினமையால், மீண்டும் அவர்களை வந்தடைதற்கு மலமுங் களங்கமு மின்மையா லின்றும். அவ்வாறே, அநாதியாகிய அஞ்ஞானத்தாற் பந்தப் பட்ட ஆத்மா, குருபதேசாதிகளால் அஞ்ஞான நாசஞ் செய்துழி, மீண்டும் பந்தப் படுத்தற்கு அஞ்ஞானமாகிய திரவிய மின்மையின், மீண்டும் பந்த முறுது சுத்தமா யிருக்கு மென் றுணர்க.

" எதற்காகக் கூடிற்று ? எப்பொழுது கூடிற்று ?" என்று வினவு தல் சாஸ்திரங் கற் றறியாத் தன்மை யாலாம். கற்பித அநாதியாக அஞ்ஞான முண்டென் றுணர்ந் திருப்பின், அதற்குப் பிரதி யோகியா யுள்ள, 'ஆதி' யென்னும் சொல்லின் பரியாயமாய ' எப்பொழுது ' என்னுஞ் சொல்லைக் கூறார். அநாதியே அஞ்ஞான முண்டென் றெமக்கும் எம்மவருக்கும், அநாதியே மல முண்டென்பது இவர்க்கும் ஒப்ப முடிந்ததாம். ' எதற்காக ' என்பது பயனை யுணர்த்துவதாம். கயிற்றிற் பாம்பையும், தெளிந்தசலில் வெள்ளியையும், கானலிற் சலத்தையும், காண்பது பிராந்தியால், கடித்தலா லுண்டாம் பய நிவிர்த்தி, திரவியத்தாற் சுகமாய்ச் சிவித்தல், தாக விடாய் நிவிர்த்தித்தல், முதலிய பிரயோஜநத்தைக் கருதி யாம். அவ்வாறே, சேத நம் அநாதியாய அஞ்ஞானத்தைப் பொருந்திய வுடன், துக்க ரூபமான சம் சாரமான பிரயோஜந முண்டாயிற் றென்றும், அத்துக்க ரூப சம்சாரத்தை நிவிர்த்திப்பான் குருவை யடைந்து, காரியத்துட னஞ்ஞானத்தினை யறவே யொழித்து, தனது யதார்த்தப் பிரஹ்ம ரூபமா மென் றறிக. அவ்வா றன்று யின், முன்னரே சிவ திரு வடியி லிருந்த ' விஞ்ஞாந கலர், பிரளயா கலர், சகலர் ' என்னும் ஆன்மாக்களும், சுந்தா மூர்த்தி சுவாமிகளும், மூறையே ஆணவ மலத்தையும், ஆணவ கார்மிக மலங்களையும், ஆணவ கார்மிக மாயீய மலங்களையும் அடைய வேண்டிய தின்றும். விஞ்ஞாந கலர்க்குக் காவ னின்றித் தாமே யறியுந் தன்மையும் பொருந்தாதாம்.

" சிவ சத்திக்குக் கேடின்று. உயிர் சிவத்தைச் சாரும். சிவ சத்திக் குக் கேடின்மையால் சிவத்தைச் சார்ந்த வுயிர் மலத்தில் மீளுத லில்லை." என்று கூறுகின்றமையின், சிவத்தைப் பசு அடைகின்ற தென்றும், பதியி னிடத்துச் சத்தி யொன் றிருத்தலின், அதற்கு நாச மின்மையின், பதியை யடைந்த பசு மீளா தென்றும், பதியிடத் துள்ள சத்தி நாச மாயின் பசு மீளு மென்றும், பதி யிடத்துப் பசு அடைதற்குப், பசுவிடத் துள்ள மூல மலமாகிய அஞ்ஞானப் பொரு ளனைச் சிவ ஞான சாமியார் கூறும் மல சத்தி யின் நாசமே காரண மென்றும், பதி தன்னிடத்து வந்த பசுவை, யம னைக் காலா லுதைத்துத் தள்ளி யாங்குத் தள்ளா திருத்தற்கும், பசு, பசு பதியின் காலை விட்டு நீங்கே ளனைக் கெட்டியாய்ப் பிடித் திறுகப் பற் றிக் கொள்ளற்கும், பதியிடத்துள்ள சத்தியே காரண மென்றும், அச்சத்தி

நாச மாகா திருத்தற்குக் காரண மென்னை யெனின், நாச மில்லா அநாதி பசுவை யாசரித்த பாச சத்தி நாச மூறுதல் போல், நாச மில்லா அநாதி பதியை ஆசரித்த, பதி சத்தி நாச மூரு தென்பதே போதிய காரண மென் றும் விளங்குகின்றது. அநாதி பசுவை யாசரித்த பாச சத்தி, நாச மடைவது போல் அநாதி பதியை யாசரித்த பதி சத்தியும் என் நாச மூரு தெ? திருட்டாந்தங் கூறிய எரிக் கரையும், கடற் கரையும், மிகப் பொருத்தமேயாம். எரிக் கலையாய மண், சீரால் அழிவுறுங்கால், சமூத் திரத்துள் அடைவது போன்று, குருவால் பசுவிடத் துள்ள பாச மழியுங் கால், சமூத்திர ஸ்தானமாய சிவனைப் பசுவிடத் துள்ள பாச மடையும். அடையவே '' பதி யணுகில் பசு பாசம் நில்லா'', '' பதியினைச் சென்றணு காப் பசு பாசம்'' என்னுந் திரு மந்திரச் செய்யுட்கு மூணம். சமூத்திரத் திற்குக் கரை யுண் டென்று, ஆமைப் பால், ஆமை ரோமம், மலடி மகன், மூயற் கோடு, கந்தருவப் பட்டணம், முதலியன போல் கல்லாரை யேமாற்ற வல்ல இவர், கைக் கொண்டனர் போலும்.

வாரசாவுணோதீதி — வாராவாரஃ கரை யில்லாதது.

வாதாலை விபா யாஹீ வாzசீரவொஸீசாரொஹ விசிரொஸிரஃ
வாரராவார வரம்வராதொர தயிஷ்யாஸா நபாதோ தஹ!
கூயிவுாயிஜாரவராஹத யதி ஷேஷம் நிஜம் வாஹவி
ஸீ கூவெஷ்கி ரஸொபதம் ரஹப ரெ ஸ்சிவெருஃ கிசிவெரு
ஹ்ருவெஃ ॥

வாரசிவாரதிவெரு கி — வாராவாரஃ — கரை யற்றது.

வதசிாஹ தசிாஅதபா வாரராவாராய யஹ ஹ ஹாவெவா ஹாவ
ஜதி ஹரிவு வொபெ வரஹஷ யதிகூ

வசிாவெஹாzவிரகுவெவாரஃ கவிஹுகோநா கூஃ — வுஷ்டி
வாரெ கவெரு கி — சகுவெவாரஃ — கரை யற்றது. (அமரகோசம்)
நவிஹுதெ வாரஃ கவெரு கி — சவாப்ஃ கரை யற்றது.

வஸாதூரவிவாதூராஸிஸிஷீ — வாநாம் வஹுகுவா ஹணஹுதூர
வஷீ — வாநாம் ! சவாசிவாரவஹு நிவியரு வஸாஹுவாஹு — வொவா
வகூ — ஜவாஹு — வொவா ஹசிஃ ॥

எள்ளா திருப்ப விழிஞர்போற் றற்குரியர், விள்ளா வறிஞரது வேண் டாரே — தள்ளாக், கரைகாப் புளதுநீர் கட்டுளை மன்றிக், கரைகாப் புளதோ கடல். (நன்னெறி) என்பன வாதிப் பிரமாணங்களாலும் கடற்குக் கரை யின்றென் றுணர்க.

தமது குல குரு வென்று வேதாந்தத்திற்குஞ் சைவ சித்தாந்தத்திற் கும், சமரசப் படுத்துபவராக இவர் கொண்டாடும் தாயுமான சுவாமிகள் " ஆழாழி கரையின்றி நீங்கினிலையோ ?" "உரையிறந்து பெருமைபெற் றுத் திரைக்கை நீட்டி யொலிக்கின்ற கடலேயிவ் வுலகஞ் சூழக், கரையு மின்றி யுன்னை வைத்தா ரியாரே யென்பேன்", என்று கூறிய செய்யுட் களையேனு முணர்ந்து நீட்டக்கல மெடுத்தனரா? குரவரிலுங் கூரிய புத்தி யுடையவ ராகலின், குரவர் கூற்றுக்கு மாறுய்க் கடற்குக் கரை யுண்டெ ன்று கரைந்தார். குரவருக்கு மாறுய்க் கூறுவதில், பிரயோஜநங் கரு தாது கூறுவரோ ? உள்ளக் கிடக்கையாய், சூக்குமப் பிரயோஜ மொன் றுடைத்தா யுள தென வுணர்ந்தே யித் திருட்டாந்தங் கூறின ரென்று, திருட்டாந்தமே விளக்குகின்றது. அஃதென் னெனின், தாயுமான சுவாமிகள் கூறிய கூற்றுப்படி, கடற்குக் கரை யின்மை போல், பதிக்குச் சத்தி யின்மையேயாம். சத்தி யில்லா தொழியவே, பதி சுத்த னென் றாகி, பசு, பாசத்தை யறவே யழித் தொழித்து, சுத்த னென்னும் பெயர் பெற்று, ' பதி பசு ' என்னும் இரு சுத்த சேதநமும் தம்மில் வேற்றுமை யின்றி, நீர் நீரேயாய், பொன் பொன்னேயாய், பால் பாலேயாய், " மதரங்கருஞ் சாத்தன் வன்கோயில் முன்னே, சதுரங்கமா வலமாத்தங் கும் குதிரை கரி தேர் ஆள் எனும் பெயரும், செப்பிய பேர் கொள் உருவும் நேராது பொய் யென்று நீக்கியே, தேருமிடத்து உற்றிடும் முக்காலத்தும் உள்ள மண்ணே, மற்று எல்லாம் வெற்ற வெறும் பொய்யாய் விடும்," என் பது போல் நாநா வுருவங்களாய மண், மண்ணேயாய் இருக்குமாறு போல, இருக்கு மென் றுணர்க.

இவர் கருத்துப்படி கொள்ளிலும், கடல் பொங்கிய காலத்து, எரியை வந்து அடையுமாறு போல, பதியைச் சார்ந்த பசுவும், பதி சத்தி கடந்து, மீண்டும் பாசத்தாற் கட் டுண்டு, ' அநாதி பெத்தன் ' என்னும் முன்னைப் பெயரையே பெறு மென் றுணர்க. ' ஆதலின் இது கொண்டு ' என்னும் சூட்டுக்குப் பொருள் யாது ?

"எல்லாம் பொய்யா யிருக்க பொய்யி லித்துணைத் தர்க்கம் எதற் கெனி ன்," என்கின்றார். பொய்யின்கண்ணே தர்க்கஞ் செய்வதே யன்றி, உண் மையினிடத்துத் தர்க்கஞ் செய்ய தின்றும். உண்மைப் பொருளை யுபதே சிக்குங்கால், அதனுணை மூர்த்தி சிந் முத்திரையுட னறிவித் தாங்கு, மௌனமா யிருந் தறிவிப்ப தன்றித் தர்க்கங்க ளொன்று மின்றும். இவர் போன்ற பேதவாதிகளது பேதை மதியைப் பிளத்தற்குத் தர்க்கம் பொய்ப் பொருளில் செய்ய வேண்டுவ தாவசிகமாம்.

" இங்ஙனங் கூறுவது சூனிய வாதமாகிய நிரீச்சுர வாத மாகு மன்றி, ஆஸ்திக வாத மாகுமா? " என்கின்றார். சூனிய மென்பது இல்லை யென் றும். எதனை இல்லை யென்று சொல்பவர் நிரீச்சுர வாதி யாவர் ? ஜகத்தை யில்லை யென்று சொல்பவர்கள் நிரீச்சுர வாதி யாகார். ஈச்வரனை யங்கீக

ரிக்காத சாங்கிய மதத்தர் நிரீச்சுர வாதியாய் நாஸ்திக ராகா திருக்குங்கால், எனையர் நாஸ்திக ராவ தெவ்வாறும் ? ஜகத்தைப் பொய் யென்பவர் சூனிய வாதியும், நிரீச்சுர வாதியும், நாஸ்திகரும் ஆவர் என்பதோல், இவரும் மல சத் திக்குக் கே ணெ டென்று பறை சாற்றுகின்றமையின், சூனிய வாதியும், ருத்திரர் முதலியோர்க்கு மல முண் டென்று கூறி அவரை ஈச்வராகக் கொள்ளாமையின், நிரீச்சுர வாதியும், வேதத்தை யிவரு மிவரினத்தவரும் பழிக்கின்றமையின், நாஸ்திகரும், ஆகி, முத் தோடங்களை யுடையவராவர்.

" அசுத்தமா யிருந்து கூடிற் றெனின் அப்பொழுதும் நமது பிரமம் சுத்தப் பிரம மாகாதே. ' ஊனுய் உயிராளுய். உணர்வு மவனே யுயிரு மவனே, சிவன்ருன் பல பல சீவனுமாகி. ' என்பன வாதி திரு வாக்கு களால், சிவனே யுயிரா யிற்று, உலக மாயிற்று என்ன லாகாதோ வெனின், ஆகாது. என்னே ? எல்லாப் பொருள்களோடுங் கலந்து நிற்குங் கலப்புத் தன்மையால், அதுவதுவாய் நிற்கும் நிலையும், பொருட்டன்மையால் அவற் றின் வேருய் நிற்கும் நிலையும் என, இரு நிலைகள் சிவபெருமானுக் குண் டு. அவற்றுள் அதுவதுவாய் நிற்கும் நிலைபற்றி அவ்வா றருளிச் செய் தன ராகிரிய ரென்க." என்ருர்.

சேதநம் உபாதியோடு கூடியபின் அசுத்த மூற்றிருக்க, அதனுல் சிவ னென்னும் பெயர்வந்து பொருந்துகின்றது. மீண்டும் மூன் கூடிய அஞ் ஞானமாய வுபாதியைப் பிஷ்ட பீஷண நியாயம் போன்று, கூடுவ தெற்று க்கு? சிவம் சீவனையும், ஜகத்தாயும் ஆனதற்குச் சில செய்யுட்களைக் காட்டி னர். அச் சிவன், அசுத்த சிவ ரை யிருந்து, பின் சீவனுய் சகத்துமாகி ஈ சுத்த மூற்றன னென்று கருது கின்றனர் போலும் "ஈச்வரனுக்குக் கலப் புத்தன்மை யென்றும், பொருட் டன்மை யென்றும், இரு தன்மைக ளுள" என்கின்ருர். ஈச்வரன் திரவியமா? குணமா ? தொழிலா ? அல்லது ஈச் வரனிடத்து கலப்பாகிய தொழிலும், பொருளும் இருக்கின்றனவா ? ஈச் வரன் திரவியமாயின், அவனிடத்து வேறு ஒரு திரவியம் இருக்க வேண் டுவ நின்றும். திரவியமாகிய தாமே தம்மிடத் திருக்கின்ற தெனின், ஆன் மாசிரய தோஷமாம் ஈச்வரன் ' இச்சை ஞானம் ' யத்தனம், என்னும் மூன்றையே யுடைய னென்றும், நிஷ்கிரிய னென்றும், கூறுகின்றமை யின், 'கலப்பு' என்னும் தொழிலு மின்ரும். ஈச்வரன் குணரூபமும், கர்ம ரூபமும் அன்ருவன் குணமும், கரு மமும் சரூபமாயின், குடத்தை யாச ரித்துக் குணமும் தொழிலு மிருப்பன போன்று, ஈச்வரன் பரமாத்மாவும், ஜீவான்மாவை யாசரித்து இருப்ப னென் றுணர்க. ஆயின், அச் செய்யுட் கள் சுத்த சிவனே அஞ்ஞான வுபாதியால், ஜீவரூபமும், விவர்த்தோபாதானத் தால் ஜகத்தாகவும் ஆயின னென்று கூறுகின்றன. அதுவதுவாய் நிற்கு நிலைபற்றி யாசிரிய ரருளின ரென்று இவர்க்கு யாவர் கூறினர்? ஆராய்ந் தா லறிந்தலா ? உபக்கிரம உபசம்மாராதி லிங்க மின்றி யொரு நூலின் கருத்து விளங்குங் கொல்லோ ?

"இனியேனும், இவரும் இவர் சார்பினரும் திரு மந்திரம் முதலிய திரு வாக்குக்களுக்குச் சைவ சித்தாந்தப் பெரியாரிடம் பொருள் கேட்டுண்மை யுணர்வார்களா?" என்கின்றார். ஆறந்தங் கூறிய திரு மந்திரத்திற்கு, ஒரு மதமும் மோராப் புறமதத்தராய இவரும் இவர் சார்பினரும் எங்ஙனமருகராவர்? அதிற் கூறியுள்ள வேதாந்தத்திற்கும், யோகாந்தத்திற்கும் இவர்கள் எக் குரவரை யடைந்து பொருளுணர்ந்தனர்? வேதாந்தத்தைக் கூறும் பாகத்திலுள்ள செய்யுட்கட்கும் பொருளோ இவரை, யாரும் எம்மவரும் கேட்ப தெற்றிற்கு? இனியேனும், இவரும் இவர் மதத்தினரும் திரு மந்திரத்தைத் தமது நூலென்று மறந்துங் கையாடாது, வகுடந்த வேத்தாக்களிடத்துச் சமித் பாணியாகச் சரணகதி யடைந்து, அதன் பொருளாக்கேட்கு மாற்றாற் கேட்டு, அவர்கள் விளக்கு மாற்றால் விளக்கிய வாறே யுணர்ந்து, அவ்வழி யொழுகுவாராக.

மூத்தித் தலையில் ஒரு பொருளே யுண்மைப் பொருளென்று, கூறியிருப்பவும், "மூத்தி தலையி லிரு பொருளுண்டென்று கூறியதனேடு மாணைகாதா?" என்று கூறுகின்றார். இது வேதாந்த சித்தாந்த மூணாது கூறியதாம். "மாணைக்கர்கட் கறிவுறுத்தும் பொருளுண்மையா?" என்கின்றார். மாணைக்கர்களது சொரூபமாயுள்ள பொருள் உண்மையேயன்றி, அறிவுறுத்தல் உண்மை யன்றும். இதனை "பிணஞ்சுடு தடியென்ன வென்னைக் கொண்டே பெரும் பற்றை யெல்லா மறச்சாடி, அனைந்த வென்னையு மப்படி யிறில்போ தத்தில்விட்டறுபவத் திருந்தாண்டி" என்னுஞ் செய்யுளாலும், தேற்றாங் கொட்டை முதலிய திருட்டாந்தங்களாலு முணர்க.

"பொய்யை யுபதேசித்தற்கு ஆசிரியரும் வேண்டுமோ?" என்கின்றார். பொய்யை யுபதேசித்தற்கு ஆசிரியர் வேண்டுவ தின்றென்பது யாவருக்கு முடன்பாடேயாம். மெய்ப் பொருளை யுபதேசித்தற்கு நல்லாசிரியர் வேண்டுமாகலின், மாணைக்காத சொரூப மெய்யே யன்றி, கருடபாவனை, சொப்பன ஸ்திரீயின் சேர்க்கை, தாரு தாம்பிராதிகளில் ஈப்வரபாவனை போன்று, உபதேசம் உண்மை யன்றும். இவை யெல்லாம் வேதாந்த சாஸ்திரத்தை நல்லாசிரிய ரிடத்துப் பாடங் கேளாது, மேலெழுந்த வாரியாய்ப் படித்த தூல வறிவுடையோ ராசங்கைகளாம்.

மூத்தியி லொரு பொருளே யிருக்குங்கால், அநுபவித்த லென்னும் விவகார மின்மையின், கரும கருத்துரு தோஷமும், ஆன்மாசிரய தோஷமும் மிலவாம். தான் மாத்திரமா யிருக்குங்கால், பொருளின்மை யாகிய சூன்யமும் மன்றும். மூத்தியில் மூப் பொருளுள்ளார்க்கே, அநுபவித்தல் பொருந்துமே யன்றி "கைவல்யம்" என்னும் தனிமையாக வொரு பொருளிருத்தற்கண் அநுபவ மின்றும். மண்ணை வாரிப் போட்டுக் கொண்ட கதை, ஒருவரு யிருத்தற்கண், செய்வித்தல் இலதென்பதற்கு மாத்திர முவமமாகக் கூறியதே யன்றி, சுவகத பேதமாகக் கூறிய தன்றும்.

"நுணுகிய ஆராய்ச்சி யின்மையாற் கூறினர்" என்றார், இன்ன தற்குத் திருட்டாந்தங் கூறிய தென்று, உணரு மூரனிலா விவர்தாமா, பிறர் மீது நுணுகியவாராய்ச்சி யின் றென்று கூறுபவர்? ஆரிய மொழி யின் வாசனை யற்பமேனு மில்லார்க்கு, உவமாநத்தி னிலக்கண மெங்ஙனம் விள்ளும்?

"சாமியார் அறியாமைக்குக் காரணம் யாதோ?" என்கின்றார். தலை, மநம், கை என்னும் மூன்றுஞ் சடமாயிற்றே. சடப் பொருள் செய்தலை யுஞ் செய்வித்தலையு மெங்ஙனஞ் செய்யும்? சடமாய வூசியைச் சடமாய காந்தம் சேட்டிக்கு மாறு, சடமாய மநம் சடமாய கையைச் சேட்டிக்கச் செய்ததோ? சேதநப் பொருளாய பசுவும், பதியுஞ் செய்தற்குஞ் செய்வித்தற்கும் வேண்டாவோ? அங்ஙனமாயின், பந்த மோக்ஷங்களைக் கையே யுறு மன்றி, பாசமாய மநமும், சேதநமாய பசுவு மூறுவாம். உறு தொழியே, பதியும் பசுவும், என் றென்றைக்கும் ஐக்கியமாய் உள தெனக் கூறும் வேதாந்தமே, நிலவுறு மென் றுணர்க. இவ்வாறாய தோடங்கள் வரு மென் றுணராது தூல வறிவாற் றிருட்டாந்தத்தை விளக்கப் புகுந்த இவர் சூக்ஷ்ம அறிவுடைய பிறர் மீது அறியாமை கூறி, தமது அறியா மையை வெளிப்படுத்திக் கொண்டனர்.

3. வேதாந்த சாஸ்திரங்களில் ஆநந்தத்திற்கு ஆநந்தத்தை யுவமை கூறியதை யுணராது, ஆநந்தமாய பொருட்குச் ஸசமாய குணமாய கலப் பை யுவமையாக வுரைத்திருக்கின்ற தென்று மருண் டெழுதிய படலக்கா ரர்க்கு, "வேதாந்த சாஸ்திரத்தைத் திரித் துணர்ந்தாங்கே, நுமது தூலிற் கூறிய குலால திருட்டாந்தத்தையுந் திரித் துணர்ந்து கொள்ளுதிர்" என்று விடை யிறுத்ததாம். குலால திருட்டாந்தம், பதி நிமித்த காரண மாவதற் கென்பதனை யாவரு மூணர்வர். சூட்டுக் கோலிற் காட்டிய விஷயங்க ளைப் பார்க்கும் படிப் பிலாதவர்தாமா, "மணம் போனவாறு கூறுதல் முறை யாகுமா" என் றெழுதுபவர். "இவ்வாறு கொள்ளுகின்றன ரென்பதை யெவ்வாறு தெரிந்தனர்?" என்கின்றார். படலக்காரர், வேதாந்த தூலிற் கூறிய திருட்டாந்தத்தை மாறுகொளக் கூறினமையின், அது கொண்டு தெரிந்தா மென் றுணர்க. 'குயவன்' திருட்டாந்தத்தில் கூறியன, தமக்கு விரோத மெனக் கருதி, "ஒரே சேதநத்திற்கு உவமை காட்டிய வொரே ஸ்திரீயும், வியாபகமாயும், பேரறிவுடையவளாயும், அசரீரியாயு முள்ளா ளென்று கொள்வாரா? அல்லது, இவர் பிரமமாகிய வொரே சேதநம் பரிச் சின்னமாயும், இஞ்சிக்ஞத்வமாயும், சரீரியாயும், உள தென்று ஒப்புக் கொள்வாரா?" என்று எதிர் விணவை மாறு கொள வினவியவர், வேதாந்த சாஸ்திரத்தும், சூட்டுக்கோ லிடத்தும் உள்ள திருட்டாந்தங்களை, வேண்டு மளவு திருட்டாந்தமாகப் பொருத்தாது, தம் மநம் போனவா றெழுதி அக் கூற்றும் கற்றார் பார்த்துக் காழுறும்படி யன்றி, கல்லாருங் கண்டு பொருண் மூர ணைக் கூறும்படி, யிடருறுவ தெற்றுக்கு? "வாழிற் பெரு

வலி யாவுள யாதொன்று, சூழினுந் தான்முந் துறும்" என்னும் பெரியார் வாக்கின்படி போகூழ்வலி யிவரைப் பிடர்பிடித் தந்நிய தென் றுணர்க.

"இப் பொருள் கூறுதல் இவர் மதத்தினர்க்குப் பழம் பாடமே. ஜீவன், ஈச்வரன் என்னுஞ் சொற்களுக்கு, இவர் கூறிய பொருளே பொருளனை மாயா வாதச் சார் பில்லாத வடமொழி வல்லார் முன் சாதிப்பரா?" என்கின் றார். பழம் பாடத்தைக் கூறுதல் தவ றென்றும், முற் பாடங்களை மாற்றி, யெண்ணிலாக் கற்பனைக ணிறைந்த புதுப் பாடங்களைக் கூறுதல் சால் புடைத் தென்றுங் கருதுகின்றனர் போலும். வேதத்தின்கண் எவ்வ ர றெழுத்துக்க ளுள்ளனவோ, அவ்வாறே சிருட்டியின் ஆரம்பத்தில், ஈச்ப் வரன் பழம் பாடமாகவே யொப்பிக்கின்றனனே யன்றி, யி வர் போன்று புதுப் பாடங்களை யொப்பிவிக்க வில்லை. அப் பழம் பாடங்களை, பிரமமா முதல் யாவருங் கேட்டு, அவ்வாறே தமது மாணாக்கர்கட்கும் பழம் பாடங் களையே கூறுகின்றனர். இதனுற் முன் வேதத்திற்கு அநாதி யத்தியய பரம்பரையா லறையுந் தன்மை யென்னும் பழம்பாடத் தன் மை வந்து பொருந்தியது. இவ்வாறே, ஈச்வரன் குருவாகவும், நிதி முனிவனாகவும் அவதரித்து, ஜீவர்கள் மோகூத்தை யடையும் பொருட்டுக் கருணையாற் கழறிய பல சாஸ்திரங்களாய அத்யாத்ம வித்தைகளை, அவர்பாற் கேட்டு, கேட்டவாறே தம் தம் மாணாக்கர்கட்குப் பழம் பாடமாகக் கூறி வருகின்ற ர்கள். இதனுற் முன் வேத மொழித் தொழிந்த சாஸ்திரங்கட்கு அநாதி யத்தி யய பரம்பரையா லறையுந் தன்மை யென்னும் பழம் பாடத்தன்மை வந்து பொருந்தியது. இதனால், ஈச்வரனும், எம்மவரும், யாமும் வேதம் முதலிய நூற்களி லுள்ள சொற்களையும், அவற்றின் பொருள்களையும், உள்ளவாறே மாணாக்கர்கட்கு மேனையர்க்கும் கூறி வருகின்றமையின், பழம் பாடங் கூறுவோ ராகின்றோம். அவ்வா றின்றி, ஈச்வரன் கூறிய நூல்களையும் அவற்றின் வழி நூல்களையும், உள்ளபடி பிறர்க்கும் மாணாக்கர்கட்கும் இவ ரும் இவர் மதத்தினருங் கூறுது, பொருள் பொருத்த மின் றென்று, அவத் தவ விசேடத்தால், சோற்று மிடங்களில் பதி வாக் கென்றும் பெரி யார் வாக் கென்றும் கருதாது, அஞ்சா நெஞ்சினராய், நூற்களையுஞ் செய் யுட்களையுஞ் சொற்களையுந் திரித்து, புதுப் பாடமும் புதுப் பொருளுங் கற்பித்துக் கூறுதலின், இவரும இவர் சார்பினரும் புதுப் பாடங் கூறுப வரே யன்றி, பழம் பாடங் கூறுபவ ராகார். ஆகார். புதுப் பாடங் கூறு பவ ராயினமையா னன்றோ, வீர சைவர்களுக் குரிய திரு வாசக திரு மந் திரத்தையும், வேதாந்திகளாய எம்மவர்க் குரிய தேவாரத்தையும், ஏனையர்க் குரிய பாரதம், இராமாயணம், பிரபுலிங்க லீலை, திரு விளையாடல், பெரிய புராணம், திருக் குறள் என்பனவாதி நூல்களி லுள்ள செய்யுட்களையுங் கோறல் செய்தும், புன் மொழிப் புதுப்பாக்களைப் புகுத்தியும், முன் மொழி மாற்றித் தம் மொழி புகுத்தியும், முன் னடை யொழித்துத் தம் மடை புகுத்தியும், முன் னடை யொழித்துத் தம் மடை புகுத்தியும், முன் னடை யொழித்துத் தம் நடை புகுத்தியும், இவ்வாறு பல மாறுபாடு செய்தனர். இஃது உலகறிந்த வுண்மையே.

வடமொழிக்கு, "மாயா வாதச் சார் பில்லாத" என்று விசேடங் கொடுத்தனரே, இதனால் வடமொழி மாயா வாதச் சார்புடைய தொன் றென்றும், மாயா வாதச் சார் பில்லாத வடமொழி யொன் றென்றும், அவ் வாறே, மாயா வாதச் சார்புடைய தென்மொழி யென்றும், மாயா வாதச் சார் பில்லாத தென்மொழி யென்றும், இரு மொழி யுண் டென்று விளங்கு கின்றது. மொழித் தன்மையான் வளர்ந்த மொழி யொன்றே யன்றி, மாயா வாத வடமொழி, அஃதின்றிய வடமொழி யென்றும், மாயா வாதத் தென்மொழி, அஃதின்றிய தென்மொழி யென்றும், மொழியின் கண்ணேனும், அதற் குறுப்பாகிய எழுத்தின்கண்ணேனும் பேத கற்பனை யின்றும். மாயா வாதச் சார்புடைய சாங்கிய மதக்கொள்கை யுடைய வட மொழி வல்லார் முன்னே, பொங்கூறிய பொருளை ஜீவேச்வரர்களுக்குப் பொருள் வளைச் சாதிக்குங்கால், எனையரிடத்துச் சாதித்தற் கியா தையமுளது? எமது மத சித்தாந்தப்படி ஜீவேசுவரர்களுக் கிதுவே பொருள் வளை, எந்த வடமொழி வல்லா ரிண்டெவரிலுஞ் சாதித்தற்குத் தயாரா யிருக்கின்றோம் என் றுணர்க. வடமொழி வல்லார் முன் சாதிப்பா ரெண் றமையானே, தமக்கு 'ஜீவேசுவரன்' என்னுஞ் சொற்குப் பொருள் விளங்க வில்லை யென்றும், வேதாந்திக ளுபதேசிக்கினும், கவர்ந்து கொள்ளற் குள் ளத்து வன்மை யின் றென்றும், அநதிகாரியாய தம்மை யொழித்து, அதி காரபுருடராய வடமொழி வல்லாரிடத்துச் சாதிப்பீர்க ளென்றும், அவ் விஷயத்தைக் கடாவுதற்கு அதிகாரம் பெறுமையின், தாம் அகடா வென் றும் விளக்கினர். இவ்வாறு, உணரு மூனிலா விவர் கடாவுதற் கெங் ஙன மரியவராவர்? 'சார்ந்த வண்ணஞ் சார்தல்' என்னும் 'தொழில் ரூப மே, பசுவின் சொரூபம்' என்றும், சேதநம் பசுவின் சொரூப மன் றென்றும், இவரு மிவ ரினத்தவரும் எம்மவர் முன் வந்து எனைய சாஸ் திரங்கட்கு மூல னுரு தல் கூறுதற் கற்ற லுடையரோ?

4. தூல திருஷ்டாந்தமாக, பிரமசாரி மூதலியோர், ஒருவரா யிருப்ப தெ யாகந்த மடைதற்குக் காரண மென்று கூறி யிருக்க, அவ்வளவில் திரு ஷ்டாந்தத்தைக் கொள்ளாது, தியாதாவும், தியேயனும் உளராதலின், இரு பொருள் சித்திக்கின்ற தென்கின்றார். இவ்வாறு சூக்ஷ்மமாகப் பேத கற்பனை செய்தவர், தியாதா சரீரமும் இடமு மின்றித் தியானிப்ப தின் றாகலின், தூல சூக்ஷ்ம சரீரங்களும், பூமியாகிய இடமு மிருத்தலின், ஐந்து பொருளுண் டென்றுவது, அல்லது, மூன்றையும் பாசமாகக் கொண் டு மூப் பொருளுண் டென்றுவது என் கூறவில்லை? அவ்வாறே படலக் காரர் கூறிய திருட்டாந்தத்தில், ஸ்திரீ, புருஷர், ஈச்வரன், தூல சூக்ஷ் ம சரீரங்கள், இடம், கலப்பாகிய தொழில், அதனாலுண்டா மாநந்தம், என எட்டுப் பதார்த்தங்கள் உள வென்று என் அவர்மீ திவர் கடாவ வில் லை? அவ்வாறே, தாவ்டாந்தத்தில், ஜீவன், ஈச்வரன், திருவடி, அயுத சித்த சம்யோகமாகிய அத்துவித சம்பந்தம், ஜீவனது மூல ஆணவ மலம், மாயை, கைவல்யமாய விடம், சிவ சத்தி ஆக எட்டுப் பொருளு மூள்

பொருளென்று படலக்காரர்க்கும், எவ்வைச் சைவசித்தாந்திகட்கும் விளக்கமாயுபதேசித்து, அவர்கட்குள்ள, மும்பொருள் நித்திய மென்னு மயலைப் போக்காத தேனோ? திருட்டாந்த தார்ட்டாந்தப்படியே மூத்தியில் எண்பொருள் சித்திக்க, இதனைக் கொண்டு 'பதி பசு' என்னும் இரண்டே நித்தியம், பாசம் மூத்தாத்மாக்கட்கு அநித்திய மென்று, தான் கொண்டிருக்கு மயலை நீக்கிக் கொள்ளாத தேனோ? இவ்வாறுய தோடங்களியாவும், தம்மீது வரு மென்று கருதியிருப்பாராயின், திருட்டாந்தத்தைக் கூறிய அளவிற் கொண்டிருப்பர். அளவு கடந்து சென்றமையின் 'அநிகம்' என்னுந் தோல்வித் தானத்தை யடைந்தனர். கருத் தறியாது இவர் விகற்பித்துக் கூறினமையின் 'பிரதிக்ஞா சந்நியாசம்' என்னுந் தோல்வித்தானத்தை யா மடையாது, இவர் 'அநுநுமானம்' என்னுந் தோல்வித்தானத்தை யடைந்தனர்.

5. கந்த புராணம், சிவஞான மாலை, திரு வாசகம், தேவாரம், திரு மந்திரம், பட்டினத்துப் பிள்ளையார் பாடல், சிவ ஞான வள்ளலார், திரு விளையாடற் புராணம், முதலியவற்றி லுள்ள, 'இல்லை, பொய், அநித்தியம், நாசம்,' என்னுஞ் சொற்களுக்கு 'நிலையாமை பொருளே யன்றி, இன்மை, பொருளன்று' என்றும், அந் நிலையாமையாய பொருளும் பெத்த தசைக் கண்ணே யொன்றும், 'இல்லை யெனு மாயை' என்ற கந்த புராணச் செய்யுட்கு, சுவாநுபவ காலத்திற் பாசம் நாசமானமையின், நிலையாமைப் பொருள் மூத்தி தசைக்கண்ணே யொன்றும் என, பாசம் நாசமென்பதற்கு இரு நிலையாமைப் பொருள் கூறுகின்றனர். அதனால், பெத்த தசைக்கண்ணும், மூத்தி தசைக்கண்ணும், பாசமாய மூலாஞ் ஞானம் நித்திய மென்று கருதுகின்றனர். பிறண்டு, 'சித்தாந்த சைவத் தின்படி மூத்தியில் உயிருண்டு. மல மில்லை. மூத்தியில் மல மில்லா தொழி யினும் எனைப் பெத்தரிடத் திருத்தலால், மலம் அநாதி நித்தியம் என்றற் கிழுக் கில்லை' என்று கூறி, ஈண்டுக் கூறிய கூற்றிற்கு மாறு கொளக் கூறுதலின், 'மாறு கொளக் கூறல்' என்னுந் தோல்வித் தானத்தையும், 'சுவ வசந வியாகாதம்' என்னும் தோஷத்தினையு மடைந்தனர்.

'நிலையாமை' என்னுஞ் சொற் பொருளை யாராய்வாம். நிலை பகுதியும், மை விகுதியும், ஆகார வெதிர் மறை விகுதியும் பெற்று முடிந்த வொரு பகு பதமாம். இடையி லுள்ள ஆகாரம், பகுதியின் விகாரப் பொருளாய நிலைத்தற்கு மறுதலைப் பொருளை யுணர்த்தும். மறுதலைப் பொருள், பிராகபாவம் (முன் னின்மை), பிரத் தொம்சாபாவம் (அழிவு பாட் டின்மை), அந்நியோந்நியாபாவம் (ஒன் றொன் றன்மை), அத்தியந்தா பாவம் (மூழுது மின்மை), சாமயிகாபாவம் (கால விசேடத்தாற் றோன்று மின்மை), என ஐவகைத்தாம். நிலைத்தல் உண்மையாம். உண்மையின் மறுதலை, ஐவகைப்படு மென்றுகி அஞ்ஞானம் பிரவஞ்சம் என்னும் சத்தின் பிராகபாவம், பிரத் தொம்காபாவம், அந்நியோந்நியாபாவம், அத்தியந்தா

பாவம், சாமயிகாபாவ மெனப் பொருடந்து நிற்கும். 'பூதலத்திற் குட மில்லை' என்னுந் தொடர் மொழி, பூதலத்தில் குடத்தின் பிராகபாவத் தையும், பிரத் தொம்சாபாவத்தையும், அத்தியந்தாபாவத்தையும், சாமயிகா பாவத்தையும், "குடம் பட மன்று" என்னும் தொடர் மொழி அந்நியோந் நியாபாவத்தையும் விளக்குவ போன்று, ஓர் அதிகரணத்தில், அஞ்ஞாகம் பிரவஞ்ச மென்பவற்றின் பிராகபாவ மூதலியவற்றை விளக்க வேண் டும். சிவம், அல்லது பிரம்மம் பூதலம் போன்று, பிரவஞ்ச, அஞ்ஞாநங்கட் கதிகரணமாம். அவ் வதிகரணத்தில், அஞ்ஞாந, பிரவஞ்சங்களின் பிராக பாவங் கூறுவோமாயின், அஞ்ஞாந, பிரவஞ்சங்கள் 'உண்டாம்' என எதிர் காலத் தோற்ற முண்டாக வேண்டும். அவ்வா றின்றி நிகழ் காலத் தில், அஞ்ஞாந, பாசங்கள் காணப்படுகின்றமையின் சிவ மெனும் பிர ஹ்மமாய அதிகரணத்தின்கண் அஞ்ஞாந, பாசங்களின் பிராகபாவங் கூறுத லடாதாம். பிரத் தொம்சாபாவங் கூறுவோமாயின், 'குடம் அழிந்தது' என்பது போன்று, பிரவஞ்சம் அழிந்தது என்னுந் தோற்ற முண்டாதல் வேண்டும். அவ்வா றின்றி, நிகழ் காலத்தில், உள் பொருள் போலத் தோன்றுகின்றமையின், பிரஹ்மத்தின்கண் பிரவஞ்சத்தின் பிரத் தொம்சாபாவமும் கூறுத லடாது. சாமயிகாபாவங் கூறுவோ மாயின், ஒரு காலத்தில் நீங்கிப் பின் வெரு காலத்தில் மீண்டும் வருத லின் முத்தர்கட்கு நீங்கி மீண்டும் அம் முத்தர்கட்கே, சுந்தர மூர்த்திகட்கு ஆணவ முனைப்பான் மீண்டும் பிறப் புற்றாங்கு, அஞ்ஞாநம் பிரவஞ்சம் பிறப்பு என்பன வரும். ஆகலின், அது எம் மதச் சாஸ்திரங்கட்கும் சம் மத மன்றாகலின், அஃது முடன்பா டன்றும். பிரஹ்மத்தின்கண் பிர வஞ்ச வஞ்ஞாநங்களின் அந்யோந்யாபாவ முள தெனக் கூறின், பிரவஞ் சத்தின்கண் பிரஹ்மமுமம், பிரஹ்மத்தின்கண் பிரவஞ்சமும் இன்றிக், 'குடம் பட மன்று' என்பது போன்று, சிவம் பிரவஞ்ச மென்னு மிரண்டும் பரிச்சிந்நமாய், 'சிவன் உலக மாயினன்' என்பன வாதி சைவ சாஸ்திர முதலியவற்றிற்கு முரண்படு மாகலின், அஃதும் பொரு த்த முடைத் தன்றும். ஆகவே, பாரிசேட நியாயத்தால், பிரஹ்மம் சிவம் என்னும் அதிகரணத்தின்கண், முக்காலத்தினு முடைய நிஷேதமாய பிரவஞ்சத்தைப் பிரதியோகியாக வுடைய, அத்தியந்தாபாவமே கொள்ளற் பாற்றும். எதிர் காலத்து மிறந்த காலத்தும், பிரவஞ்சத்தின் அத்தியந்தா பாவம் உளதாமாயின், நிகழ் காலத்திற் பிரவஞ்சந் தோற்றுதலின் முக் கால முடைய நிஷேத மென்னும் விசேடணம், பிரவஞ்சத்திற்குப் பொருந்தா மையின், நிகழ் கால வத்தியந்தாபாவம் பொருந்தாதாலோ வெனின், நன்று நவின்றாய். எதிர் காலத்து மிறந்த காலத்து முளதாய பிரவஞ்சத்தி னத்தி யந்தாபாவம், சாகூர துண்டாம். நிகழ் காலத்தி னத்தியந்தாபாவ மருத்தா பத்திப் பிரமாணத்தினு லுண்டாம். அஃதெங்ஙன மெனிற் கூறுதும்:— நிகழ் காலத்தில் பிரவஞ்சமாய காரியந் தோற்றுதற்குப் பிரஹ்மத்தின்கண் காரணமான அவயவ மின்மையினாலும், வேறு அதிகரணத்தின்கண்ணும்

அவயவ மின்மையினையும், நினிருசலித் தோற்றும் வெள்ளியினிலக்கணம், விகசாச பாரமார்த்த வெள்ளியின் எதிர்கால விறந்த கால நிகேதந முளதா மாயினும், நிகழ் காலத்திற் தோற்றும் பிராதிபாசிக வெள்ளியின் தோற்றத்திற்குக் நினிருசலின்கண், காரணமான அவயவ மின்மையினையும், வேறு அதிகாணத்தின்கண்ணு மவயவ மின்மையினையும், அர்த்தாபத்திப் பிரமாணத்தினால் நிகழ் கால நிகேதந்தையும், நினிருசலினிடத்துப் பொருந் துவதுபோல் நிகழ் கால நிகேதம் பொருந்து மென் றனைக. அங்ஙனம், மூப் காலத்து மிலதாய பிரவஞ்சம் பிரதிபந்தத்தின்கண் தோற்றலாதோ வெனி ன், மாலைக் காலமாய வுபாதி யிருக்கும் வரை, ரச்சுவிடத்துச் சர்ப்பப் பிராந் தியு மதன் காரியமுங் தோற்றுவ தோலவும், ஜல வுபாதி யிருக்கும் வரைப் புருடனுக் கதோ முகங் தோற்றுவ தோலவும், பிரதிபந்தத்தின்கண் அந் நூாக வுபாதி யிருக்கும் வரைப் பிரவஞ்சந் தோற்று மென் றனைக. நூகத் தா லாதியாய அந்நூாக வுபாதி யொழிந்துழிப் பிரவஞ்ச மின் றென் றனைக. வேதாந்தத்தின்கண், அஜாத வாதம், ஏகஜீவ வாதம், நாநா ஜீவ வாதம், பாரமார்த்திக சத்தா வாதம், பாரமார்த்திக சத்தை பிராதிபாவிக சத்தை யென்னும் இரண்டு சத்தா வாதம், பாரமார்த்திகம் வியாவகாரிகம் பிராதிபாவிகம் என்னும் மூன்று சத்தா வாதம், திருஷ்டி திருஷ்டி வாதம், திருஷ்டி திருஷ்டி வாதம், ஆபாச வாதம், அவச்சேத வாதம், பாத சாமாநாதி கரண்ய வாதம், மூக்கிய சாமாநாதிகரண்ய வாதம், பிம்பப் பிரதிபிம்ப வாதம் என்பன வாதியாக, ஜடப் பிரவஞ்சத்தின்கண்ணும், சேதநத்தின்கண்ணும் பல வேறு அவாந்தர பேத முற்றுப் பல மதங்க ளுன வென்றனைக. எவ் வெம் மதத் கோட்பாடு கொண்டோ டாசன்னிக்கப்படினன்றோ தா, அவ்வெம் மதக் கோட்பாடு கொண்டே சமாதானம் கூறப்படு மென் றனைக. இவை யாவுந் சாஸ்திரார்த்த ஞாகலின், வேதாந்த சாஸ்திர வல்லுநர்பால் சமித்பாணி யாகச் சாஸ்திரதி யடைந்து கேட்டு முறையாற் கேட்டு, அவர்கள் விளக்கு மாற்றல் விளக்க வுணர்க. அவ்வா றின்றி மனம் போனவாறு தவறுப்பட் டபொருள் கொள்ளற்க.

எவ்வாறு நிலையாமை யென்று பிரவஞ்சத்திற்குப் பெயரோ, அவ்வா றே, தமம், மோகம், அவித்தை, மித்தியா சொரூபி (பொய்ம்மை யுருவி) என்பனவும் நாமங்களாம். அசத்து, ஜடம், துக்கம், அநித்தம், கண்டம், என்பனவும், பிந்தம் அபிந்தம் பிந்தாபிந்தம், சுத்த அசுத்த சுதசுத்த, சாவயவம் நிரவயவம் சாவயவ நிரவயவ மென்னும் ஒன்பது விதத்தும் நிர்ணயிக்கக் கூடாத அநிர்வாச்சியமும் வருணனம் எனவுங் கொள்க. விரிப் பில் பெருகு மாகலின் அமைக. இன்றேல், சுத்தாவைத சித்தி, மெய்யடி யியாதாத்மியம், துந்வப் பிரகாசிகை, பேதாபேத சித்தாந்தம், பாமதி, சாரீரக பாஷ்யம், கல்பதரு கல்பதரு பரிமளம் என்னுமிவை முதலிய தால்களைத் தக்காரிடத்துச் சாஸ்திரதி யடைந்து கேட்டுத் தெளிந்து பெறுவாராக. அந் நூல்களி லுள்ள விஷயங்களோ டன்றித் தென்னெழுத்தி னெழுத்தின் அமை விளக்க முறுவாகலின், சம்ஸ்கிருதத்தி னெழுத்தின் தென்மொழி கற்றார்க்

குப் பயன்படாமையாலும், டாக்டர் யோகாநந்தேந்திர சரஸ்வதி ஸ்வாமிகளவர்களால் 'ஆதி வைவ நாமக தெனமேலய நாக டாங்க ஏந்தயம்' என்னும் நூலின்கண்ணும், 'நாந்திரிக துண்ட கண்டநம்' என்னும் நூலின் கண்ணும், ஒரு பிரிதுர சம்ஸ்கிருதத்தில் காண்பிக்கப்பட்டிருக்கின்றமையி னாலும், ஈண்டுக் கூறாது விடுத்தாமென்றுணர்க.

'இட்டவை' என்னுஞ் சொல் நியோமையை நிலை நிறுத்தா மென்றார். 'மாயையி டிட்ட தென' என்பது பொருளன்றி, வேறு பொருளின்றும். அம் மாயை யெவ்வாறாய தெனின், அத்தியந்தாபாவ மூடைய தென்னும் பொருளென்ற இல்லை யென்னும் பதங் கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதனை யுணராது கூறினமையின் 'மதாநுஞ்ஞை' என்னும் தோல்வித் தானத்தை யடைந்தனர்.

"நிரு வள்ளுவ நாயனாரும்' முதலில் நியாயமை கூறி, பின் துறவு கூறியதனால், அவர் கருத்தும் பிரவுஞ்சத் சத்திய மென்பதையாம்" என்றும், பொய் யென்னுஞ் சொல்லை "பொய்படு மொன்றே; பொய்ம்மை மூயக்கம்; என்ற குறட்களில் விளக்கி யிருக்கின்றார்" என்றும், "அவ்விரண்டிடத்து மின்மை தான் பொருளென்று சாதிக்க முடியுமா" என்றும் கூறுகின்றார்.

34 வது நியாயமை யதிகாரத்தின் அவதாரிகையில், "நியாயமை யாவது தோற்ற முடையனை யாவும் நியாயுத லிலவாந் தன்மை" எனமாயையின் அத்தியந்தாபாவ விலக்கணமே கூறப்பட்டிருக்கின்றது. மற்றும், கானற் சலம் போற் தோன்றி, கயிற் றாவிற்போ லழிவு மென்பார்க்கும், சூனியக மென்பார்க்கும், சதசத் தென்பார்க்கும் பொதுவாய், நியாயமை யென்று கூறப்பட்ட தென்றும், 'தோற்ற முடையவற்றைக் கேடில மென்று கருதும் புல்லறிவால்' என்றுள்ள வாக்கியத்தில், தோற்ற முடையவற்றை யென்னுந் தொடரால், நியாயமைக்கு 'தோற்ற முடையது' என்றும், 'கேடில' என்னுந் தொடரால், 'நியாயின' என்னுஞ் சொற்கு, 'நாச மின்மை' என்றும், விளக்குவதனால், உற்பத்தி யுடையவற்றை 'நாசமில' என்று கருதும் இழிந்த ஞானமா மென்று கூறப்பட்டிருக்கின்றது.

35-வது துற வதிகாரத்தில், 'பற்றினை யவற்றது நியாயமை நோக்கி விடுதல்' என்றமையான், பற்றை யநித்திய மென்றுணர்ந்துறவி விடுதலன்றி வேறு வகைத்தா யின்றும். நித்தியமான பற்றை விரும்பின் நித்திய துக்கமும், அநித்தியமான பற்றை விரும்பின் அநித்திய துக்கமு மூண்டாம். "பொய் பற்றம்" என்பதற்கு 'புலை பற்றம்' என்று பொருடரலின், மாயையின்பாற் பட்டு இலக்கணையா லநித்தியத்தையே யுணர்த்தும். "பொய்ம்மை மூயக்கம்" மித்தையான மூயக்க மெனப் பொருடந்து அநித்திய மென்னும் பொருள் கொள்ளக் கிடத்தலி னென்றுணர்க.

400-வது " கேடில் விழுச்செல்வம் கல்வி யொருவற்கு, மாடல்ல மற்றை யவை " என்னுங் குறட்கு, " ஒருவனுக்கு அழி வில்லாத சீரிய செல்வம் " என்று பரிமே லழகர் கூறுதலின், ' நிலையாமை ' யென்று பொருள் கொள்ள லேலுமா ? ஈண்டு அநித்திய மென்பதே தேற்றமாம். இவ்வாறு, குறண் முதலியவற்றி லதேகருத் தொற்க வுரை. அவை யாவு மீண்டெடுத் தானின் விரியு மாகலி னவைக.

" பொய்யாகு மென்பதற் கில்லையாகு மென்று பொருள் கொண்டெழுதினார ?" என்கின்றார். இவர் வாக்கியம் பொய்க்கும், அதாவது இவர் வாக்கியம் மித்தையாம். அத்தியந்தாபாவமாம் என்னும் பொருள் கொண்டே யெழுதிரு மென் றுணர்க.

திரு மந்திரம், 115, 2213, 2236, 2405, என்பனவா றிச் செய்யுட்களால், " பதி பசு பாசம் மூன்றும் அநாதி நித்தியம் என நன்கு விளங்கவும் " என்றார். அச் செய்யுட்கள் " பதி பசு பாசம் " என்னும் மூன்றையும் அநாதி யென்று கூறுகின்றனவே யன்றி நித்திய மென்று கூற வில்லை. அநாதி யென்று கூறுமிடங்களில், ஏறுமதப் புச்சம் போன்று நித்தியம் என்னுஞ் சொல், சுவ கபோல கற்பனையாக வந்து நுழைவ தென்ன வறியாமை ? யாண்டுப் புகை யுண்டோ ஆண்டுத் தீ யுண்டென்பது போன்று, யாண்டு அநாதி யுண்டு ஆண்டு நித்திய மென்னு நியம வியாப்தி யின்மை. ஏது சாமானாதிகரண்ய அத்தியந்தாபாவ அப்பிரதியோகி சாத்தியாசாமானாதிகரண்யம் என்பது மூடிவான வியாப்தியாம். மூல மலமாய அருளாக திரவியத்தின் சத்தியாய, ஆணவ காமிய மாயீக வென்னும் மும் மலங்கட்கும் நிவர்த்தியினை சிவ ஞான சுவாமி கூறுதலின், அநாதித் தன்மை யிருந்தும் ஆண்டு நித்தியத் தன்மை யின்றும். பிராக பாவத்தின்கண்ணும் வட திசைச்கண்ணும் அநாதித் தன்மை யிருந்தும் நித்தியத் தன்மை யின்றும். ஆதலின், அநாதித் தன்மைக்கும் நித்தியத் தன்மைக்கும் நியம வியாப்தி யின்மையகலின், அநாதி யென்னுஞ் சொல் வரு மிடந்தோறும் நித்திய மென்னுஞ் சொல்லைப் புகுத்து மறியாமையை யற வே யொழித்து, யா மறைந்த அறையின்படியே யடங்கி வாழ்தலே சாலச் சிறந்ததா மென் றுணர்க. அவ்வாறு கொள்ளா தொழிவதோல், இவர் நூல் களிற் ' பசு ' என்று வருமிடங்க டோறும், சொற் சாதாரிஸ மயக்கத்தால், வால் கோடு முதலியன வுடையது ஜீவாத்மா என்று, ஜீவனையும், சதுவித் பாத் மிருகத்தோடு சமானமாக்கி, மிருகமாகிய ஜீவாத்மாவுக்கு ஞான சாஸ் திர மின் றென்று, இவரைச் சார்ந்தார் யாவருக்கும் நல் லுபதேசஞ் செய் வாராக.

பசுத் தன்மை, பதித் தன்மை, பாசத் தன்மைகள், அநாதியாயினும், பாசம் நீங்கிய வழி, பசுவிற்குப் பசுத்தன்மை யின்றாகலின், பசு வில்லா விடத்து, பதிக்குப் ' பசு பதி ' யென்னும் பதித் தன்மையு மின்றும். ஆகவே, சுத்த சேதந மிரண்டு மொன்றா மென்று நிரு மந்திர முதலிய வற்றிற்குப் பொருள் கொள்க. பாசம் அறுதல் அறுதல் என்று பல

விடத்துப் பன்முறை திரு மந்திர முதலியவற்றிற் கூறுதலின், அதற்கு அத்யந்தபாவப் பொருளொன்றே பொருந்து மன்றி, யேனைப் பொருள் பொருந்தாதாம்.

"இனி, பொய் யென்பதற்கு இல்லாமை யென்ற பொருளை யாவது இவர் உண்மையிற் கொண்டிருக்கின்றாரா? கொண்டிருப்பின், செட்டியாரவர்க ளெழுதியதும் பொய்யாதலின், அதற் கிவ்வளவு சிரமப்பட வேண்டாமே. இதனாலே, பொய்யை மெய் யென்று வீணைச் சிரமங் கொள்ளும் புண்ணிய மூடையார் சுவாமியாரும் இவர் மாபினரும் என்பது விளங்கவில்லையா?" என்கின்றார். உண்மையில், பொய் யென்பதற் கில்லை யென்னும் பொருளைக் கொண்டமையா னன்றே, விவகாரத்துப் பொய் கூறிய படலக்காரச் செட்டியாரைக் கண்டித்தற்குச் சூட்டுக் கோற் போட்டதாம். பொய்யை மெய் யென்று ஸ்தாபிக்கும் முசலாக்கிர புத்தி யுடையார் இவரும் இவர் மதத்தினரும் என்பதை யுணராது, பிறரை நிந்தித்தனர். 'வீணைச்சிரமங் கொள்ளும் புண்ணிய மூடையார் சுவாமியார்' என் றெழுதியிருக்கின்றமையின், நான்காவதாய துறவாச்சிரமத்திற் றுவேஷ மூடைய ரென்று விளங்குகின்றது. இதனால், தம் மதத்தி லுள்ள தம்பிரான்களை யும், தம் மதத் தேனைத் தேசத் துறவிகளையும், வீண் ஆச்சிரமம் பூண்டவ ரென்று நிந்தித்தவ ராகின்றார்.

"நிறந்தருந் தெய்வப் புலமைவள் ளுவனார் நீத்தவர் பெருமைநுன் முகப்பாற், சிறந்திட வமைத்தாங் கதுகொடில் வாழ்க்கைச் சிறுமைதூற் றினரது தெரியார்க், கறந்தவா தியற்றி னவனினுங் கோடி யதிகமா மெனமம மறுது, துறந்துளோ னையும்பட் டணைத்தெம தடிக டொகுத்த கட் டுரைதிகழ்த் திடுமே".

"ஞாலியே யெவரும் வணங்குதற் குரியோ னவிலுமா சௌசமில் பெரியோன், மாநிலத் தவன்ரு னுடல்விடிற் குகைப்பால் வைக்கவென் மறைப்படி புரிந, ருலும்வே தாந்தப் பொருடுணிந் திடினுஞ் சாற்றினில் வாழுமந் தணர்க்கின், ருனதாற் றுறவு பெற்றதற் றவரோ யமலவீ டடையு ரா கிகளே".

"அறந்தா னியற்று மவனினுங் கோடி யதிகமில்லந், துறந்தா னவனிற் சதகோடி யுள்ளத் துறவுடையோன், மறந்தா னறக்கற் றறிவோ டிருந்திரு வாதனையற், றிறந்தான் பெருமையை யென்சொல்லு வேன்கச்சி யேகம் பனே."

என்று துறவாச்சிரமத்தினைப் புகழ்ந்து கூறியிருப்பவும், தாம் கொண் டாடும், பட்டணத்துச் சுவாமிகள் வாக்கையும் பொருட்படுத்தாது, சந்நியாசி களை வீணைச்சிரமங் கொண்டவர்க ளென்று தூஷிக்கின்றமையின், "கூற் றத்தைக் கையால் விளித்தற்ரு லாற்றுவார்க், காற்ரு தாரின்ரு செயல். எரி யாற் சுடப்படினு மூப்புண்டா மூய்யார், பெரியார்ப் பிழைத்தொழுகு வார். பெரியாரைப் பேணி தொழுகிற் பெரியாராற், போர விடும்பை தரும்." என்னும் பெரியார் வாக்கிற்கு இலக்காகாது தப்புதல் யாங்ஙனே மேலும்?

6. "திரு மந்திரம்:—68, 84, 1477, 1512, 2394, 2397 என்னும் ஆறு செய்யுட்களையு மறிவித்து, சிவாகமம் சிவனு லருளிச் செய்யப்பட்ட தென்றும், வேதாந்தத்தைத் தழுவியது சித்தாந்த மென்றும், வேதாந்தம் சித்தாந்த மென்னும் இரண்டும் அபேதமான கருத்துடையன வென்றும் விளங்க வில்லையா? என்றும்" கூறுகின்றார். வாமாகமம், கௌலே யாகமம் முதல் சர்வாகமமும், சிவனு லியற்றப்பட் டிருக்குங்கால், சிவாக மும் சிவனு லியற்றப்பட்டதேயாம். அதிகாரிகளின் பேதத்தாற் பலநூல் களைக் கருணையா லீசுவரன் செய்திருக்க, அவை யாவும் சாபாக முறை யா லொரு கருத்துடையனவாமே யன்றி, சாகூதாத்தாக வொரு கருத்துடை யன வாகா. சிவன் செய்தமையால், ஆகமம் வைதிக மாமேல், ஆகமங் கள் யாவும் வைதிக மாதல் வேண்டும். அங்ஙனமே, சிவ சிருஷ்டியாகலின் பிரபஞ்சம் யாவும் சேதனமாதல் வேண்டும். அவ்வா றின்மையின், கருத்த ரதிக வைதிகத் தன்மை யவற்றிற்குப் பொருந்தாதாம். மூலமாய வேதத் திற்கு விரோத மின்றிய ஆகமங்கள் வைதிகங்களாம். மூலமாய வேதத் திற்கு விருத்தமாகக் கூறும் ஆகமங்க ளனைவதிகங்களாம். வேதாந்தங் கள் ஒரே பிரஹ்மப் பொருளைக் கூறுகின்றன. அவற்றிற்குச் சாதகமாகச் சைவ முதற் பல சாஸ்திரங்களும் மந்த் தொழிலாய வுபாசனையைக் கூறுகின்றன என்றுணர்க. இதனை யுணராது பிறர் மீது 'விளங்கவில் லையா' என்ற அறியாமையைக் கூறித் தா மறியாமை யுடையவராயினர்.

"இனி, வேதாந்த மென்பது நூற் பெயரா? சமயப் பெயரா? சம யப் பெயராயின், சைவம் சிவ சம்பந்தம், வைஷ்ணவம் விஷ்ணு சம்பந்தம், என்பன போல வேதாந்தம் இன்ன தெய்வத்தின் சம்பந்த மென, அச் சொல்லில் வைத்துக் காட்டக் கூடுமா? நூற் பெயராயின் அந்நூலுக் குரிய சமயம் யாது?" என்கின்றார். இவரே முன் 5-வது சங்கை முத லியவற்றில் வேதாந்தம் 'ஒரு மதம்' என்றும், அதன் முடிவும், ஆகமத் தின் முடிவு மொன் றென்றும் தம்பட்ட மடித்து, மேலு மிவ்வாறே புக ன்று, வேதாந்தம் ஒரு பொருளா என்றும், அம் மதத்திற் கொரு தெய்வ முண்டா என்றும் பலவாறு, துவைத மலத் தடிப்பால் பறை யறைகின் றார். வேதத்தின் அந்தம் வேதாந்தமாம். அந்தாவது வேதத்தின் முடி வாம். ஆண்டுப் பிரதிபாதிக்கப்படும் பிரஹ்மப் பொருளும் வேதாந்த மென்னும் பெயரைத் தத்திதப் பிரயோக மின்றிச் சினையாகு பெய ரென்னு மிலக்கணையாற் பெறு மென்றுணர்க. சில விடத்துத் தத்திதப் பிரயோகம் பெற்றுப் பரார்த்தத்திலும் ஸ்வார்த்தத்திலும், சில விடத்துத் தத்திதப் பிரயோகம் பெறாது ஸ்வார்த்தத்திலும் பரார்த்தத்திலும் வரு மென்றுணர்க. ஆகலின், வேதாந்த மென்பது பிரஹ்மப் பொருட்கும் அதனைப் பிரதிபாதிக்கும் உபநிஷத்கட்கும், அவற்றினை விசாரிக்கு முத்தர மீமாம்ஸா சூத்திரங்கட்கும், அவற்றின் வழி நூலாய, அத்வைத சித்தி, தத்துவப் பிர காசிகை, கண்டந கண்ட காத்தியம், பேததிக்காரம், பஞ்ச தசி, வாசிஷ்டம், பகவற் கீதை, கைவல்ய நவநீதம், வேதாந்த சூடாமணி, இலக்ஷணவிருத்தி

யென்பனவாதி தால்களுக்கும், சத்தியினுலும், லகூஷணையினுலும் பெயரா மென் றுணர்க.

7. "திரு மந்திரம் 2179-வது ஆகின்ற என்னும் செய்யுளால் சைவத் திலும் வேதாந்தத்திலும் வேருக மாயா வாத மொன் றுண் டென்று பெறப் படுகின்ற தன்றே" என்கின்றார். இதனை யிவ ருண்மைக் கருத்தோ டெழு தி யிருப்பின், 'வேதாந்திகளே மாயா வாதிக ளெனக் கூறுதீர்க' வென இவ னினத்தவரைத் தழுகொண்டு தடுத்திருப்பா ரன்றே? வேதாந்தமுஞ் சைவமு மொன்று யிருக்குமாயின், வேதாந்தத்தினுஞ் சைவத்தினு மென் றும் மை கொடுத்து வேறு பிரிப்பானேன்? இருபத் தெட்டும், மூப்பத் தாறும் எனத் தத்துவங்களைத் திரு மூல நாயனர் விதந் தோதுவானேன்? இவர், பிறண்டு மாயா வாதச் சார்பில்லா எனக் குறிப்பால் வேதாந்திகளை மாயா வாதிக ளென்று கூறுவானேன்? இதனை லிவர் உண்மைக் கருத்துடன் பறை யறைய வில்லை யென்று பகர லாயிற்று.

"சிவ ஞான போதம், சிவாகமத்தைப் பரமப் பிரமாணமாகக் கொண் டொழுகும், சைவ பரம்பரையிலேயே, உபதேசிக்கப் பெற்று வருகின்ற தென்பதும், யாவரும் அறிந்தனவாகும் ஆகவே, ஸ்ரீ மாணிக்க வாசக சுவாமிகள் சைவ சித்தாந்தி யென்பது வெளிப்படை" என்கின்றார். சிவ ஞான போதம் ஸ்ரீ மாணிக்க வாசக சுவாமிகட் குபதேசிக்கப்பட்டது திருப் பெருந் துறையிலாம். அக் கோயில் வீர சைவர்களாய அம்பலத்தாடி ஸ்வாமி களைச் சார்ந்ததாம். ஸ்ரீ மாணிக்க வாசக ஸ்வாமிகளும் 'ஐக்கிய வா த சைவர்' 'சிவாத்துவித சைவர்' என்று சிவ ஞான சுவாமியாற் கூறப்படும் வீர சைவ மதத்தைச் சார்ந்தவர்களே. அவர்க ளியற்றி, பரமேஸ்வரன் திருக் காத்தா லெழுதப்பட்ட திரு வாசகமும், அம்பலத்தாடி ஸ்வாமிக ளிடத்தே யிருக்கின்றது. அதனை லன்றே, அவர்கட்கு நடராஜா போன்று கருதிப் பாத பூஜை முதலியன நடத்தி வருகின்றார்கள். அவர்களும், பாதத்தைப் பூமியில் வையாது வேறு ராதனத்தின்மீ திவர்ந்து செல்லுகின்றனர். அச் சமஸ்கிருத சிவ ஞான போதத்திற்கு அநேக வீர சைவர்கள் அநேக வியாக்கி யானங்க ளியற்றி யிருக்கின்றார்கள். அத் திருப் பெருந்துறை யாதீனம் சின்னெண் மூன்னர் திரு வாவடுதுறையிலுள்ள சில தம்பிரான்களாற் சுவர்ந் துகொள்ளப்பட்டது. இன்றும், திருப் பெருந்துறை யாதீனத் தர்ம கர்த் தா வீர சைவ அம்பலத்தாடி ஸ்வாமிக ளென்றே கைச்சாத்திடுதலே சான் றும். திரு வாசகத்தைப் பேழையுள் வைத்துச் சிதம்பரம் சிவ கங்கையில் விடுஞான்று, அம்பலத்தாடி ஸ்வாமிகளைச் சார்ந்துஞ் சான்றும். மாணிக்க வாசக ஸ்வாமிகள் வீர சைவர்க ளென்பதற்குப் பெரிய புராணத்தில் அவர் கள் சரித்திரத்தினைக் கூட்டாதது மொரு சான்றும். சமஸ்கிருதத்திலுள்ள மாணிக்க வாசக ஸ்வாமிகள் சரித்திரமும், எனைய வீர சைவ வடமொழி, தென்மொழி சாஸ்திரங்களும் வீர சைவர்க ளென்றே கூறுகின்றன. இவ் வாறிருக்க, யாவரும் அறிந்தனவாகு மென்றும், வெளிப்படை யென்றும்,

கூறிய தெத்துணைப் பொருத்தமாம். திரு வாவடுதுறை யாதீனத்து மடாலய இடமும் ஸ்ரீ மூல நாதர் சமாதியும், வீர சைவ மடாலயாதிபதிகளிடத்திருந்து கிடைக்கப் பெற்றிருக்குமாயின், வேறு மிகைபடக் கூறுவ தெதற்கு? ஆகலின், சிவ ஞான போதம் சிவ ஞான சுவாமியை யுள்ளிட்டார்க்கே யுரிய தென்னுங் கூற்று கூற்றிற்கே யினையாம். சிவ ஞான போதத்திற்கு வேதாந்த பரமாக நான்கு வேதங்களின் பாஷ்ய கருத்தாவாகிய ஸ்ரீ வித்தியாரண்ய முனீந்திரா ரவர்கள் பொரிய வொரு பாஷ்யமும், தமிழில் ஸ்ரீ குப்புஸ்வாமி ராஜு அவர்கள் தத்துவப் பிரகாசிகை யென்னும் உரையும், ஸ்ரீ சிவாநந்த ஸ்வாமிக ளவர்கள் சிவாநந்த பாஷ்யமும், ஸ்ரீ வடிவேலு செட்டியா ரவர்கள் சிவ ஞான போதச் சிற்றுரையும், இன்னும் பல தமிழ் சமஸ்கிருத வுரைகளும் உளவாகலின், சைவ பாம்பரையிலேயே யுபதேசிக்கப் பட்டு வருகின்றது' என்னுங் கோள் கோளாய வாறு காண்க.

"சைவர்களே மாயா வாதி யென்று வாளா கூறியதற்குப் பிரமாணம் யாது?" என்கின்றார். மாயையைச் சகத்திற் குபாதான காரணமாகவும், ஈச்வரனை நிமித்த காரணமாகவுங் கொண்டு, உபாதான காரண அம்சத்தில் ஈச்வரனுக்குப் பாதந்திரத் தன்மை கூறிப் பரிசிங்கனைச் செய்து, மாயைக்குச் சுதந்திரத்தன்மை கூறி அபரிச்சிந்தத் தன்மை கொள்கின்ற மையின், இவரும் இவரினத்தவரும் இக்காரணத்தாலே மாயாவாதியாவர்.

"மாயா வாத மொன் றுண் டென்று கூறுஞ் சைவர்கள், வேதாந்த மில்லை யென்று கூறுவ தில்லை. திரு மந்திரக் கருத்தின்படி வேதாந்தி களு மூண்டென்றே சைவர்கள் கொள்ளுகின்றனர்" என்கின்றார். 'மாயா வாத மொன் றுண் டென்று கொள்ளுகின்றனர்' என்றலுமையால், மாயா வாத மில்லை யென்போர் வேதாந்த மில்லை யென்பா ராயிற்று. 'புகை யிருப்பின் நெருப் பிருப்பது போல், மாயா வாத மிருப்பின் வேதாந்த மிருக்குமாம். வேதாந்த மின்மையின் மாயா வாத மின்மாம்.' என்னும் வியாப்தி கூறுகின்றார். நெருப்பினுள் காரியமாய புகை யடங்கி யிருப்பது போன்று, காரணமாய வேதாந்தத்தினுள் காரியமாய மாயா வாத மடங்கி யிருக்கு மென்று கருதுகின்றார். ஆகலின், சிறப்பு வகையால் இரண்டும் வே றென்றும், பொது வகையா லிரண்டு மொன் றென்றும், பொருள் கொள்ளக்கிடக்கின்றது. இவ்வாறுயின், மாயா வாதமும், வேதாந்தமு மொன் றென்று கூறும், "திரு மந்திரம் மூன்றாம் தந்திரம். 2-வது அசுத்த சைவம். 1423:—'நினை யார் திருவடி யேத்துஞ் சிங்கத், தினையா ரினைக்குழை பீரணை மூத் தினை, குணமா ரினைக்கண்ட மாலையுங் குன்று, தினைவாழ் சினைய கிரி யையி னர்க்கே.' 1424:—'காதுவெ ளைந்த கடுக்க னிரண்டிருசேர்த், தோதுந் திருமேனி யுட்கட் டிரண்டுடன், சோதனை செய்து வுபதேச மார்க் காரா, யோதி யிருப்பா ரொருசைவ ராகுமே.' என்ற சைவர்களினும், இவர் வேறுவரா? இருவரு மொருவரா யிருக்க 'மாயா வாதமும் வேதாந் தமும் வேறு' என்று கூறுஞ் சைவர் தா மென்றும், எனையர் இரண்டும்

ஒன் றென்று கூறுஞ் சைவ ரென்றும் எவ்வாறு வேறு பிரித்தனர். பொருள் வகையாலுஞ் சொல் வகையாலு மிருவரு மொருவரா யிருக்க, வேறு பிரித்தது ஒரு வகையாலு மொவ்வாததேயாம்.

" சுவாமியாரையும் இவர் மாபினரையும், மாயா வாதிக ளென்று எந்தச் சைவர்கள் கூறினும், நாங்கள் மாயா வாதிக ளல்லர், வேதாந்திக ளென்று மட்டுஞ் சொல்லிக் கொள்ளக் கடமைப்படுகிறார்களே யன்றி, சைவர்களாகிய நீங்கள் தாம் மாயா வாதிக ளென்று கூறுதல் பொருந் துமா ?" என்கின்றார். சைவரா யிருக்கு மிவர் தம் மதத்த நிருக்கு மிட ங்க டோறுஞ் சென்று, அவர்க ளிடத்து 'வேதாந்திகளே மாயா வாதிக ளென்று இனிக் கூறுதீர்கள். கூறுவீர்களாயின் அவர்கள் நம்மை மாயா வாதி யென்றும், நாஸ்திக ரென்றும், சூனிய வாதி யென்றும், ஆஸ்திக நாஸ்திக ரென்றும், நாற் சொற் புணர்த்து நவில்கின்றனர். அஃதெமக்கு மிக்க தோர் மானக் கேடாக விருக்கின்றது.' என்று இரந்து சாம பேத தாந தண்ட மென்னும் நால் வகை யுபாயத்து ளோ ருபாயத்தா லவர்களை யடக்காது, எமக்குச் 'சைவர்களே மாயா வாதிக ளென்று சொல்லத் தகா தென்றும், தாங்கள் வேதாந்திக ளென்று கூறிக் கொள்ளலே தகுதியா' மென்றும் ஆஞ்ஞை செய்ய எவ் வதிகாரம் பெற்றிருக்கின்றார்? திரு வா வடுதுறை யாதீனத்திற் சம்பளம் பெறுதலாகிய அதிகாரம் பெற்றிருக்கின் றமையின், அவ் வதிகாரத்தாற் கூறினே மென்பரேல், திரு வாவடுதுறை யாதீனம், நாலாம் வருணத்தாராய சூத்திரர்க்குக் குருத் தானமே யன்றி, யேனை வருணத்தாருக்கும், எனை மதத்தினராய நான்கு வருணத்தினர்க் கும் குருத் தான மாகாமையின், அவ் வதிகாரத்தை அம் மதத்திற்கும் அவ் வாதீனத்திற்கும் கீழ்ப்படியும், சூத்திரத் தம்பிரான்களிடத்தும், அவ்வா றுள்ள நிலத்தாரிடத்தும் பிரயோகிப்பாராக.

" எந்தச் சைவர்கள் கூறினும் " என்றமையால், சிவ ஞான சுவாமி சிவ ஞான பாஷ்யத்தில் ' வேதாந்த மென்பது யோகப் பெயரான் வேதத் தின் முடிவாகிய வுபநிடதங்களைக் கூறும். உருடப் பெயரால் அவற்றை யெடுத்துச் செய்த வகான்ம வாத நூலைக் கூறும்.' என்றும், பிறுண்டு, ' வகான்ம வாதமாவது மாயா வாதம். இந்த மாயைக்கு வேறுகிய பிர ம்ம ரூபமே யா வனை வேதாந்த ஞானத்தால் அறிவதே முத்தி யென்பதாம்." என்றும், ' வகான்ம வாத நூல் செய்தவன் வியாத முனிவன் ' என்றும், ' இதனுட் கூறும் அத்தியாச வாதம் மாயா வாதத்திற்கு உபகாரமாம்' என்றும், இன்னும் பலவாறும் வேதாந்திகளே மாயா வாதிக ளென் றெழுதி யிருக்கின்றமையின், அவர் ஈண் டின்றிக் கை லாயத் திருப்பவ ராகலின் ஆண்டுச் சென்று " தாங்கள் வேதாந்திகளே மாயா வாதிக ளென்று திரு மந்திரத்தோடு மூ ணூறுமாறு வலைந்தமையின், அவர்கள் நம்மை நியாய வாயிலாக மாயா வாதிக ளென்று ஸ்தாபிக்கின்ற னர். தாங்கள் மொழி பெயர்த்த தருக்க சங்கிரக மூலம் உரை முதலியவற்றை

யாராய்ந்து, அவற் றுள்ள மயக் குற்ற மொழி பெயர்ப்புக் குழூஉக்களை யெடுத்துக்காட்டித் தங்கள் வெள் ளறிவை வெளியாக்கிவிடுவார்கள் போது மிருக்கின்றது. ஆகலின், வேதாந்திகளே மாயா வாதிக ளெனத் தூஷித் தது தவறு மென ஒரு மன்னிப்புப் பத்திரம் அச்சிட்டு வெளியிடுவீர்க ளாக" வென்று அவரிடத் திரந்து மன்னிப்புப் பத்திரத்தைப் பெற் றுண்டு யாவருக்கும் விளக்கமாம்படி வெளியிடுவாராக. இவ்வாறு, செய் திருப்பதோல் 'எந்தச் சைவர்' என்னுஞ் சொல் வீணர் சொல்லாய் முடியு மென் றுணர்வாராக.

"இனி, இவரும் இவர் சார்பினரும் வேதாந்திகளாயின் இருபத் தெட் டுத் தத்துவங் கொள்கின்றனரா ?" என்கின்றார். இதனால், யாங்கள் வேதாந்திக ளல்ல வென்று கருதுகின்றார். இக் கருத்தையுடையிவர் 'வேதாந் திக ளென்று மட்டுஞ் சொல்லிக் கொள்ளக் கடமைப் படுகின்றார்கள்' என்று எவ்வாறு கூறினர்? முன் பின் முரணுறக் கூறலால், அறிவிலி யென்பது விளக்க மாயிற்றே. தக்கார்வாய்ச் சாரதி யடைந்து கேட்டு முறையாற் கேளாக் குறையாற் கூறினரா ? மயக்க வுணர்வாற் கூறினரா? துவேஷத்தாற் கூறினரா ? தமோகுணத் தடிப்பாற் கூறினரா ? சத்துவ குண மின்மையாற் சாற்றினரா ? எகாக்கிரத் தன்மை யடையுந் துறவா சிரமமாய விறை யாசிரம மின்றியதர் விசைத்தனரா ? எக் காரணத்தாற் கூறின ரென்ப தறிஞ ரறிவாராக.

"இருபத் தெட்டுத் தத்துவங் கொள்கின்றனரா ? கொள்கின்றே மென்பரேல் அத் தத்துவங்க ளிவை யென்றும், அவற்றைப் பற்றிக் கூறும் நூல் இது வென்றுங் காட்டக் கூடுமா ?" என்கின்றார். வேதாந்திக ளாகிய யாங்கள் இருபத் தெட்டுத் தத்துவங் கொள்ள வில்லை யென்று எவ்வா றுணர்ந்தனர்? தம்மைச் சர்வஞ்ஞ ராகவும், சர்வ வேதாந்த சாஸ்தி ரங்களையுந் தென்மொழி வடமொழி யிருமொழியிலு முணர்ந்தவராகவும், மதித்து, "கொள்கின்றனரா ? நூல் இது வென்று காட்டக் கூடுமா ?" என்கின்றார். வேதாந்த சூடாமணியில் "ஈங்குமந மிருபத்து நான்காவ தாகு மிருபத்தைதந் தாவதுதான் மூலவகங் காரம், ஆங்கதனை யடைத லுறும் சிதாபாச சிவன் அறையுமிரு பத்தாரு மவன்மாயை மருவும், ஓங் கொளியா மீசனிரு பத்தேழா மவனவ் வுயிர்மூதலாந் தூரியனிரு பத்தெட் டா மவன்" என்றும், ஸ்ரீ சங்காசாரிய ஸ்வாமிக ளியற்றிய தத்துவ போதம் என்னும் நூலில், தூல சரீர தத்துவம்-5; ஞாநேந்திரியம் 5; கருமேந்திரியம்-5; பிராணாதி வாயு-5; மநம் 1; புத்தி 1; ஆக சூக்ஷ்ம சரீர தத்துவங்கள்-17; காரண சரீர தத்துவம்-மாயை-1; அவித்தை-1; ஜீவன், ஈச்வரன், சுத்தன்-3; ஆகத் தத்துவங்க ளிருபத் தெட்டு என்றும் கூறியிருத்தலை யுணராது, வினவுகின்றார். இதனால், அந் நூல் களை யிவர் படித் தறியாக் குறையால் இக் கடாத்தோற்றிற் றென்றுணர்க. அறியாமை வயப்பட்ட விவர் பிறர்க்கு கடாக் கடந்து கடாவுகின்ற மையின், இவர் கடா கடாவாகாது ஊரோ ரன்ன மதர்ப்புற்ற கடாவாம்.

8. ஞான வாசிட்டம் திதிப் பிரகரணத்தில் உள்ள தாசூரன் கதையில் 'தண்டலத் தோலும்' என்னும் முதலே யுடைய 107 - வது செய்யுளில் இரண் டடியைப் பெற்று "இதனுல் ஞான வாசிட்ட ஆசிரியரும் சைவர்க ளோடு சேர்ந்தவ ரென்றாகி, இவரும் இவரினத்தவரும் ஞான வாசிட்டக் கருத்துக்கு மாறுபட்டவ ரென்பதை மறுக்க முடியுமா? இதனுலும், வேதாந்த மென்பது ஏகான்ம வாதமாகிய மாயா வாதத்தின் வே றென்பது விளங்க வில்லையா? ஞான வாசிட்டத்தில் ஏகான்ம வாதஞ் சாதிக்குஞ் செய்யுட்கள் பல வுள என்று காட்டுவாராயின், மேலே காட்டிய செய்யு ளோடு முரணுத வண்ணம் அச் செய்யுளுக்குப் பொருள் கொள்ளுதலே முறையாகு மன்றி மாறுபடக் கொள்ளுதல் முறையாகுமா?" என்கின் றூர்.

" தண்டலத் தோலுஞ் செம்பினிற் களிம்புஞ் சகசமாய்த் தொழில் விசே டத்தால், விண்டுபோ மதுபோற் புருடனு மலத்தை மேவியே போக் குத லியல்பாங், கொண்டசந் தேக மொழித்துநீ முயல்வாய் குருவின்வல் லபவிளக் கத்தாற், கண்டன மெனல்வீ ணுனுந் தானுங் கண்டன பரம் பொருட் பொலிவே." என் றுள்ள செய்யுளைக் கூறினமையின், ஞான வாசிட்ட மொழிப்பெயர்ப் பாசிரியராகிய ஆனவந்தான் முதலிவர் சைவராயின ரென்கின்றூர். அச் செய்யுளில் பதி பசு பாச மென்னு மூன்றும் நித் திய மென்று கூறப்பட்டிருக்கின்றனவா? இன்றே. " அரிசியில் உமி யும், செம்பிற் களிம்பும் அநாதியா யிருந்து, குற்றல், புளியாற் றேய்த்தல் முதலிய தொழில்களால் நீங்குவன போல், ஜீவனும் அஞ்ஞானத்தை யநா தியே பொருந்தி, குருவின் அநுக்கிரகத்தால் நீக்கிக் கொள்ளுவன். நீ சந் தேகத்தை நிவர்த்தித்து முயற்சிப்பாயாக. குருவின் சாமர்த்திய விளக்கத் தா லறிந்தே னெனல் வியர்த்தமாம். நானும் நீயும் கண்டன அதாவது பார்க்கப்படும் பொருள் யாவும், சித்து ரூபமாய ஆத்ம தத்துவமேயாம்." என்பது அச் செய்யுளுக்குப் பொருளாம். இவ்வாறே, காஷ்மீர தேசத்து தர்க்க வாகீஸ்வர சாஸ்திரியாசாரிய கௌட மண்டல வலங்காராய் விளங் கிய ஸ்ரீமத்-அபிநந்தன பண்டித ரவர்கள் மூப்பத் தீராயிர வாசிட்ட சுலோ கங்களை ஆருயிரமாகச் சுருக்கிய லகு யோக வாசிட்ட மென்னும் கிரந்தத் துள் நான்காவது-திதிப் பிரகரணத்தில் தாசூரன் கதையைக் கூறும் 17 - வது சர்க்கத்தில்-52, 53, 54-வது சுலோகங்களில் கூறப்பட்டிருக்கின் றமையின், அவற்றின் பொருளை சமஸ்கிருத வல்லார்வாய்க் கேட்டுச் சாந்தி பெறுவாராக.

'புருடன் மலம்' என்னுஞ் சொல்லைக் கண்டு, தமது சைவ நூலென மயங்கினரோ? சொல் ஒருவருக்குஞ் சொந்த மன்றும். சைவ சாஸ்திரம் பதிஞலிலும், பிரம்மம், ஈஸ்வரன், ஜீவன், சகத்து, அஞ்ஞானம், ஞானம், வேதாந்தம், உபநிடதம், என்பன வாதி சொற்கள் மிகுதியாக வழங்கப்படு தலின், அது கொண்டு அப் பதிஞன்கு சாஸ்திரமும் வேதாந்த நூலென

ஒருவரு மயங்குவா ரிலர். இலர். வாசிட்டம் ஒரே பிரஜ்ஞாதத்தினே யுறை யாது, மூப் பொருளே முறை யிடுகின்ற தென்று கருதுகின்றதோ டமை யாது, ஏகான்ம வாதமும், மாயா வாதமும் ஒரு நூ லென்றும், அதனின் வேறு வேதாந்த மென்றும், பகை யுறுகின்றார். பின், அந் நூலில், ஏகான்ம வாதங் கூறப்படுகின்ற தென்றுங் கூறுகின்றார். நிந்திக்கப் புகுந்தவர் ஒரு வழி நில்லாது, மறை முனை முகப்பாகிய ஆணவ மூலைப் பின் வயப்பட்டு மாறு கொளக் கூறி, "மாறு கொளல்" என்னுந் தோல்வித் தானத்தை யடைந்தனர்.

ஸ்ரீ ஜகதீச்வர அவதாரமாய் மற்றுமத் அத்வைத ஸ்தாபகாசார்ய விக்ரஹமாகிய ஸ்ரீ சங்கராசார்ய ஸ்வாமிகளுமும், அவர்கள் மாணாக்கர் பரம்பரையில் வந்த யாவரும் இருபத் தெட்டுத் தத்துவங்களைக் கைக் கொண்டொழுக்கு வருகின்றமையின், யாங்களே வேதாந்திக ளாவோம். எனையோர்களெல்லாரு ஞும் வேதாந்தி யாகார். ஆகார். வாசிட்ட ஆரம்பத்தில் "உயர் மதத்தி னுக்குத் திறப்படக் காணப் பட்ட நில்லனைச் சித்தி னுலே, உறப்பெறு மெப்போ தப்போ துயர்பர சுகம தாமே." (10) "வழிபடு மிதனே விட்டு மற்றுள தூல்க ளென்னும், குழிகளிற் புரண்டுந் நாகக் குணத்தினுற் பிறப்போர்க் கெல்லாம், ஒழிவற வொருவர் செய்தற் குரித்தன்ரு யுந்தா னே யுண்டாங், கழிதலிற் பிரம விண்பங் கற்பங்க ளாலுங் கூடா". என்னுஞ் செய்யுட்களில், பிரஜ்ஞ நாக நூலாகிய வாசிட்ட மொழிந்த வேனை நூற்களை, அஞ்ஞாநமாகிய சேற்றுக் குழி யென்றும், அக் குழியில் வீழ்ந்து அஞ்ஞாநத்தாற் பிறக்கின்றார்க ளென்றும், கூறி யிருக்கின்றலாற் றை யுணர்ந்திருப்பாராயின் சைவ நூ லென்று கூறார். தாரூரன் கதையி னாரம்பத்தில் "ஒளியாத துயர்மாலை யெனுமா பத்தை யொழிக்கமை நாச மோ ரூபாய மாகும், இழியாத மெய்ஞ்ஞாநப் பொருளே யெல்லா மியம் பக்கேட் டயராம லிதயங் கொள்வாய், பழியான மோகத்தி னிச்சை தானே பந்தமா மதுவிடலே பரம மாகும், வழியான பன்னூலாற் ப யன் கொ லென்ன வருந்தாம லிவ்வழியே வருதல் வேண்டும்." (1) " இன்ப மிதா மின்பமிதா மென்ற வெல்லா மெனினெனுஞ் சினனினேக வேற்றுத் தாழ்வாய்த், தன்புறுமோ கம்பலவாற் ரேய்ந்து நெஞ்சிற் ரேயாம லெளி தருந்திற் சுகமே யாகும், வன்புபயின் மநத்தோற்ற நாச மாரு மநத்தி னது நாசமே மகத்தாந் தோற்ற, நன்பரம ஞானிகளெனுஞ் சிறந்து மோரு நடைவிலங்கா மறிவிலர்க்கு நவைகூர் நெஞ்சம்." (2) " ஆநந்த மிராமந்த மிரண்டு மில்லே யசைவுமனை வின்மையுமா மலையு மில்லே, ஈனந்தீர் சுத்த சத்தன் றிவற்றுக் கெல்லா மிடையல்லா ஞாநிமந மென்ற லோகிற், தானந்த மிலாவறிவா யுலகின் மேலாந் தத்துவத்தி லுலகிருக்கும் தன்மை தன்னே, ஞாநந்தான் வளர்பொருட்டா யுரைப்பா யென்று நாதனியம் பிடவசிட்ட னவில்வ தாமுன்." (3) என்று, மநநாச வுபாயத்தைக் கூறி, "எழுந்தசங் கற்ப பாவனே விட்டா லிறந்துபோ மிதனையீங் கிதனை, யழுந்துற மாய்த்து மநத்திரண் மநத்தை யறுத்துநின் னறிவினி நிற்பாய்,

டழுந்துருள் பொழுதின் முடியுமீ தரிதோ வுலகமும் வானமு மொக்கு, முழுந்திய பொய்யாய்ப் போம்விகற் பத்தான் முளைத்தலை யன்றிமுன் னிலதால்." (106) என்று, பின் அதனையே யுபசம்மாரத்தில் முடித்தலால் மகோகாசத்தி னுபாயத்தைக் கூறுதற்குத் தாருரன் கதையாய இக் கதையும் இவை போன்ற பற்பல கதைகளும் கூறப்பட்டிருக்கின் றனவே யன்றி, இவர் மத சித்தாந்தமாய மூப் பொருணித்தியத்தைக் கூறுதற் கின்றும். இராமபிரான் அடைந்த பிரம்ம ஞானத்தைக் கூறும் வாயிலாகப் பல விதிகாசங்கள் வாசிட்டத்திற் கூறப்பட்டிருக்கின்றன. இதனை லன்றே, வாசிட்டமும் இன்ற ரண்ண பகவற் கீதை, கை வல்ய நவநீதம், விசார சாகரம், விருத்திப் பிரபாகரம், பஞ்ச தசி, வேதா ந்த சூடாமணி, விவேக சூடாமணி, முதலிய பல நூல்களையும், வேதாந்தக் கொள்கை யுடையார் பல்லோ ராலுங் கொள்ளப்பட்டுக் கோவிலூர் மடா லயம் முதலிய வேதாந்த பரம்பரையி லுபதேசிக்கப்பட்டு வருகின்றன. இதனையு முணராது சூரியனை யுள்ளங் கையின் மறைக்க நினைத்தது போன்று, வாசிட்டத்திற்குச் சைவ சாஸ்திர சம்பிரதாயப்படி மூப் பொ ருள் நித்திய மென்று கொள்ளுமாறு கட்டளையிடுகின்றார். இவர்கட்டு ளையா மன்றிக் கட்டளை யாகாதாம். இவர் திருட்டாந்த தார்ட் டாந்தங்களைச் சமன் செய்பவ ராகலின், திருட்டாந்தத்தில், தண்டிலத்திற் சேரலையுந் தாம்பிரத்திற் களிம்பையும் தொழிலா னீக்குவது போன்று, புரு டனும் மலத்தைக் கருமத்தா னீக்குவ னென்று, சமன் செய்து கொள்ளு வர். கொள்ளின், கருமத்தான் மோகந மென்றாகி, 'ஞானத்தால் மிருத்தியு வைக் கடக்கின்றான். மோகநத்திற்கு வேறு வழி யில்லை' என்னும் ருக் வேத சுருதிக்கு விரோதமாம். ஆகலின், சாஸ்திரங்கட்குப் பொருளையும், திருட்டாந்தங்களையும், ஆனவ வயப்பட்டு மனம் போனவாறு தலைவஷத் தாற் கொள்ளாது, சாஸ்திர முறையாற் கொள்க.

9. "சைவ சித்தாந்திகள் மூத்தியிலும் பாச மூன்டென்று கொள்ளு கின்றார்க ளென இவர் கருதுகின்றார். அம் மட்டோ, சிவ ஞான வள்ள லார் தமது மதத்தினை யொன்றுங் கருதுகின்றார் ? என்றும், "வள்ளலார் சாஸ்திரம்-சிவ ஞானப் பிரகாச வெண்பா - 72, 73, 74, 75, 76, என்னும் ஐந்து செய்யுட்களை யறிவித்துச் சிவ ஞான வள்ளலார் சைவ சித்தாந்தி" யென்றும், 93, 94, 95 - வது - செய்யுட்களை யறிவித்து, அத்வைதம் சைவத்திற்கே யுரிய தென்றும், சிவ நால்-கார்மைமிர்தம்-63-வது செய்யுளை யறிவித்து, "வேதாந்தத்தைத் தழுவியது சைவ சித்தாந்த மென்றும், சித் தாந்த சைவத்தின்படி, மூத்தியி லுயி ருண்டு மல மில்லை. மூத்தியில் மல மில்லா தொழியிலும் ஏனைப் பெத்தர்க ளிடத்தி லிருத்தலால், மலம் அநாதி நித்தியம் என்றற் கிழுக் கில்லை. பதி, பசுவுட னென்றும் பிரி வின்றி நிற்குமாறு போலப் பாசம் நில்லாமை பற்றியே, பாச மநித்திய மெனப் படும். இவ்வாறே, சிவ ஞான போத முதலிய சித்தாந்த சாஸ்திரங்கள் போதிக்கின்றன என்றும்" கூறுகின்றார்.

மூத்தியில் மும் பொருளுண்டென்றும், இரு பொருளுண்டென்றும் கூறுகின்றவர்களையே சிவஞான யோகிகள் பேய்ச் சைவ மென்றும், பித்த மூறுஞ் சைவ மென்றுங் கூறியிருக்கின்றனர். இவர் சிவஞான பாஷ்யத்தை யொரு புடை யொப்பியும் ஒரு புடை யொப்பாதும், கூறுகின்றவை ராதலின் இவ ரன்ன படலக்காரர் மூதலியோரையும் இலக்கியப்படுத்தாது, தன்னெழுதிச் சிவஞான பாஷ்யத்தையும் எல்லாப் பதி ணென்கு சாஸ்திரங்களையுங் கைக் கொள்ளுஞ் சைவரை நோக்கிக் கூறுவாம். சிவஞான பாஷ்யத்தின் 6-ம் சூத்திரம் இரண்டாம் அதிகரணத்தில் " அவ ரெல்லாருங் அத்துவிதமே என்னுஞ் சொற்குப் பொருள் ஒன் றென்பதே யா மெனக் கொண்டு, தத்தம் மதங்களோடு மாறுபடுமெப் பொருட்டு, கேவல மென்றும், விசிட்ட மென்றும், மறுதலை யென்றும், அடை கூட்டி, யிடர்ப்பட்டுப் பொருள் கொள்வர். அவருள் மாயா வாதி கூறுங் கேவல மும், பேத வாதிகள் கூறும் மறுதலையும், சுருதிகளோடு மாறுதலின் ஈண்டைக் கேவலாதீதம் எனையோர் கூறும் விசிட்ட மென்பது பொருந்து மாயினும், அத்துவிதம் என்னுஞ் சொற்குப் பொரு ளொன் றதனைக் கோடல் பொருந்தாது. என்னை ? ஒன் றென்பது பொருளாயின் ஒன் றதனை வே விளங்கக் கூற வமையும். அல்வா றின்றி அத்துவித மென வுடம்பெடுத்தோ னைவத்து ஓதவேண்டாமையாதலும், ஒன் றதனைப் பொருள் கொள்ளின் மற்றை வாக்கியப் பொருள் பயப்ப தோர் விசேட மின்மையின், அத்துவித மென்பதுபற்றி ஈண் டொரு பயன்படாமையாலு மென்க. மற் றன்னே யோ அத்துவிதம் என்னுஞ் சொற்குப் பொருளினில், தத்துவமசி (அது நீ ஆகின்றாய்), அகம் பிரம்மாஸ்மி (அது நானாகின்றேன்) அயம் ஆத்மா பிரம்மம் (அது இது ஆகின்றது) என மூவிடம் பற்றி நிகழும் தத்துவ மசி மூதலிய மகா வாக்கியங்களைக் கேட்ட வழி, அது என்பது ஒரு பொருள், நீ யென்பது ஒரு பொருள், ஆகலின் ஒரு பொருள் மற் றொரு பொருளா மாறு, யாங்ஙனம் என்னும் ஐயம் நீக்குதற் கெழுந்த தாகலின், அது இது ஆதற் கேதுவாய், அவ் வாண்டற்கு மூளதாய சம் பந்த விசேட முணர்த்துதலே, அத்துவித மென்னுஞ் சொற்குப் பொரு ளென் றுணர்ந்து கொள்க. " என்றும், " இரு பொருளை அது அதுவா யொற்றுமைப்பட்டு, ஒன்றாய் நிற்றற் கேதுவாகிய தானான்மியம் அத் துவித மென்றும் வழங்கப் படும்." என்றும், சிவஞான சுவாமி கூறுகின்றமை யின், சைவர்கள் மூத்தியில் ' பதி பசு ' என்னு மிரு பொருளும், ஈண் டுள்ளு மடங்காத அத்துவித சம்பந்த மென்னும் பாசப் பொருளுமாய், மும் பொருள் நித்தியங் கூறுகின்றனர். கடாவிய நம் பின்னையாசோ, மூத் தியில் உயி ருண்டு மல மில்லை யென்கின்றமையின், மலத்தின்பாற் பட்ட அத்துவித சம்பந்தமாய மலத்தினை நீக்கி மூத்தியில், பதியும், பசுவும் என இரு பொருளுண்டென்று கூறுகின்றனர். இவ் விருவகையுமே சிவஞான வள்ளலார் பேய்ச் சைவ மென்று கூறியதாம். சைவ சாஸ்திரங்கள் மூத்தியிற் பசு, பதி, பாசம் என்னும் மும் பொருளும் நித்தியமாகக் கூறு

கின்றனை வென்று யாண்டும் பிரசித்தமா யிருக்க, அதனை மறைத்து மூத் தாத்மாக்களுக்கு மூல மலமாகிய அஞ்ஞானமும், அவற்றின் சத்திகளா கிய ஆணவ கார்மிக மாயைகளும் நாசமாகின்றனை வென்றும், சைவ சாஸ் திரங்கள் மூப் பொருள் கூறியதற் கபிப்பிராயம், பெத்த தசையின்கண் பெத்தாத்மாக்களுக்கு மூப் பொருளுண்டென்றும், அதனால் சைவ சாஸ்தி ரங்கள் மூப் பொருள் நித்தியங் கூறுகின்றதற்குத் தோஷ மில்லை யென் றும், ஒரு வித சமாதானங் கூறுகின்றார். இச் சமாதானத்தைச் சிவ ஞான வள்ளலாரைச் சந்தித்து அக்கால் கூறியிருப்பாராயின், 'பேச வாண் டுண்டோ பேய்ச் சைவா' என்று கூறியிருப்பர். சித்தாந்த சாஸ்திரங் கள் மூத்தியில் மூப் பொருளுண்டெனக் கூறுகின்ற தென்று கூறுபவர், சிவ ஞான வள்ளலார் செய்யுளைக் கண்டவுடன், மூத்தியில் மூப் பொருளு மிரு பொருளுங் கூறுவோ ரலர், ஒரு பொருளே கூறுகின்றோம், என் கின்றார். அவ்வாறு தென் மொழிச் சைவ சாஸ்திரக்காரருடன்பாடா யின், முன்ன ரறிவித்த சிவ ஞான பாஷ்ய வாக்கியத்தில் மூத்தியி லொரு பொருளைக் கொள்ளும் வேதாந்திகளைக் கண்டித்து மூப் பொருளைச் சிவ ஞான சுவாமி நிலை நாட்டுவரா? சிவ ஞான வள்ளலார் வேதாந்தத்தினைச் சாத்திய மாகவும், சைவ சித்தாந்தத்தினைச் சாதன மாகவுங் கொண்டு விளங் கினார். விளங்கிய ராயினும், வேதாந்த சாஸ்திரங்கள் பந்த காலமாய விவ காரா காலத்தில், ஜீவன், ஈச்வரன், அஞ்ஞானம் என மூன்று பொரு ளிருப்பது போன்றே, சைவ சாஸ்திரத்திலும், பெத்த தசையில், பதி பசு பாசம் என மூன்று பொருளைக் கூறுகின்ற தென்றும், முத்தித் தசைக்கண், தனது சொரூபம் பிரம்ம ரூப மென்று கூறுவது போல், பசு, பதி ரூபமே யென்றும், பாசம் இன் றென்றும், கூறுகின்ற தென்றும், கைக் கொண்டு வாழ்ந்தா ரென் றுணர்க. இவற்றினை யுணராது, 'அத்வைத மென்பது சைவத்திற்கே யுரியது' என்று வீ ணுரை வகுத்தார். அத்வைதம் என் பது சைவத்திற்கே யுரியதா மாயின், சுத்தி விசிட்டாத்வைதம், விசிட்டாத் வைதம், அத்வைதம், என்னும் சொற்களைக் கொள்ளு மதத்தர்கட்கு, அத் வைத மென்பது யாது? அத்வைதம் என்னுஞ் சொற்குப் பொருள் யா மிவ்வாறு கூறுகின்றோ மென்று கூறி, சைவத்திற்கே யுரியது என்று கூறியது வழுவாம். "மும் முதலும் சோராமல் நிற்குமோ சொல்" என்று இவ் வறிவித்த செய்யுள் கூறுவதனையு முணர்வாராக. "சைவ சித்தாந்த சாஸ்திரங்களே சிவ ஞான வள்ளலார் பயின்ற நூல்" என்கின் றார்.

சிவ ஞான வள்ளலார் (சுத்திய ஞான போதம்).

கொடிவிழி யன்ன கொள்கைய ராகி, யாசா பாசத் தார்ப்புண் டன் றே, தன்னை முன் னீட்டித் தான்பின் ஞாகி, மறந்து நினைந்து மதிக தை ராகி, யாகம் பெணி யறிவை மறந்தாங், கிச்சைப் புலிவா யிடர்ப்படு மூயி னே.

செயற்கை யியற்கை தெரிக்குங் காலை, கேயற்கை யுயிர்க்குத் திரிமல மென்னில், வெண்மடிக் கழுக்கு விரவுந் தன்மை, போல நீங்கிப் புகுவன வதுவே.

சடத்திரா ணீப்பத் தனித்திடு மான்மாச், சோகம் பாவனை தொக்கிய பின்னறக், கருடனை நினைப்பான் கடுக்கழன் றன்ன, வுபாதி நீங்கி யுணர் வா யினவே.

சிவனீ யாரு யென்னுங் திகழ்வுஞ், சிவரு ஞேன வெனவுங் நிற முஞ், சிவனே யாவினு முளனெனலுங் திருவுஞ், சிவனே காட்டித் தெளித் தன வெனக்கே.

அறிவா காரு வெனவறிந் தணர்தல், செறிபரப் பிரமம் யானெ னத் தேறல், அறைசிவ னருளி லடங்கா தடங்க, லுருவ தொரிசுருஞ் சுத் தியு முயிர்க்கே.

கன்னன் கௌந்தி புத்திரா கதைபோற், சிவன் சிவத்தாற் சிவ நீங்கி, மாசறு திங்கண் மண்டிலம் போன்றுங், கவாவிறந் தொளிரு மதிசயம் பெறுமே.

ஆலம் பன்னிவ னவனிரா லம்பன், சுதந்தா மிலியிவ னவன்சுதந் தா னே, சரீரி யிவனச ரீரி யவனெனலு, மலநீக் கந்தீ லிவ்வழுக் கின்றே.

பூரண போதப் பொருடா னுகவி, னுரண மாகம மவர்க்கென் செய வே.

சூரிய பாச மாண்டுழிச் சோதி, நானது வென்னு ஞாநமு மின்றே.

ஐவகை ஞாநத் தந்தர வான்மா, வாங்கலை யிறப்பி னதுப மான்மா.

உன்னலு முரைத்தலு முறுதொழி லுருத்தலு, மாதியி லிலபொரி யறிவொடு மாய்தலி, னிக்கை மாட்டென் றுரைத்தனர் புலவர்.

சிதம்பர மாதலிற் சேர்விட மில்லை, யவனிய னுதலி னயனுமி லில்லை, யறிவுரு வாதலி னுகையு மின்றே.

ஒன்றே யாதலி னுணர்படை வின்று, நானது வாதலின் ஞாநமு மின்றே.

கோறல் வெகுளல் நுகைதோன் நுணர்ந்தன், நிருவரு ளில்லோன் சேகழக னயன், வழிபா டில்லோன் மந்த னிவர்க்கிங், நிந்தா லறையி னேழைக் குருவே.

மறைதிக ளொடுக்கி மறைமுடி வுணர்ந்து, வழிபடன் மந்தி ரகலை யென மதியே.

அதிதிதன் மைந்த ரலமரு காலைப், பிரம கீதையைப் பேசின னவரே, சிதாகா யத்திற் நிருவுருத் தாங்கி, மறலியை முனிந்த வாத னவரே, வான்முறை யுலகம் வயின்வயி னுதிக்க, நான்முகத் திருந்து நான் மறை யுரைத்தன், றுபநிட தத்தி லொளிர்த்தவ னவனே பிரம மென்றறி மன்னே.

மூலமென் றழைத்த மூனைக்கொம் பியானை, வருத்தந் தீர்ப்பான் வந்தவ னெவனே, தூணிலு மிருப்பன் றுரும்பிலு மிருப்ப, னெனுமழ சொல்லுக் கெதிர்ந்தவ னெவனே, துகிலுரி காலத் துருவதன் மகட்கு, மாளாத் துகிலை வருத்தின னெவனே, வருச்சுநற் காக வமரிடை யிருந் தாங், குணர்மெய்ஞ் ஞான முரைத்தவ னெவனே,வவனே பிரம மென்றறி மன்னே.

கல்லா லின்கீழ்க் கடவு ளாகிப், பொல்லா ஞானம் புரிந்தவ னெவனே, மால்வரை வில்லாய் வலியவர் புரங்க, ணீறெழ வொருக்கி நின்ற மூவ ரைச், சேவடி நீழலிற் சேர்த்தவ னெவனே, காலனை மாட்டிக் கவின்சிறு பாலன், மரணந் தவிர்ப்பான் வந்தவ னெவனே, அவனே பிரம மென்றறி மன்னே.

ஒருமல வழக்கு மிருவினைத் தொடரு, மும்மலச் செருக்கு நால்வகை வாக்கு, மைவகைப் பொறியு மறுவகைக் குற்றமு, மற்ரு லன்றி யறிவா காயே.

பசு பதி பாச விளக்கம்.

பாச மைந்தையுந் தனித்தனிப் பரிந்திட நீக்கி, நேச மாகிய வறிவு நீயெனக் காட்டிப், பேசு மேழ்வகைப் பிறப்புனக் கிலையெனப் பேசித், தூசு நீக்கிய சுயம்பிர காசனைத் தொழுவாம்.

துக்க சாகரத் துக்கொரு தோணியாய்ப், பக்கு வச்சுக னைப்பெறு பாக்கிய, தக்க வாம்ம தயாபர னுகிய, மிக்க வேத வியாதனைப் போற்று வாம்.

பாவ மகலப் பரிகார விதத்தைப் பகருஞ் சிலநூல்க, ளாவ லோடு மறம்வளர் வறங்கள் பகருஞ் சிலநூல்க, ளேவ மில்லா முத்தியினு மிரண் டே யென்னுஞ் சிலநூல்கள், சீவ பிரம வயிக்கியத்தைச் செய்யு மிந் நூற் சித்தாந்தம்.

புன்னூலாம் பரசமயப் பொய்ந்நூலின் மயங்குவரோ, செந்நூலா மருமறையின் சிரத்தொளிரு முபநிடத, நன்னூலி னெறிநின்ற மயமுணர்ந்த நாதாக்க, ளெந்நூலுங் கைவிட்டே யிந்நூலைப் பற்றுவார்.

மண்ணோடு மண்ணர் போலர் வளியொடு வளியார் போலர், தண் ணெடு தண்ணர் போலர் தழலொடு தழலார் போலர், விண்ணெடு விண் ணர் போலர் விளங்கரி வுருவாய் நின்ற, நுண்ணிய னெனை யெங்கு நுழைந்திடா திருக்கின் றேனை.

செம்புயி ராகு மந்தச் செம்பினிற் களிம்பு பாசஞ், செம்பினிற் களி ம்பு போலுற் செம்பொரு மாறு போல, நம்பனர் ஞானத் தாலே நானெ னும் மலம்போம் போலு, னம்பனு ராவ ரென்று நான்மறை சொல்லு மன்றே.

மன்னையு மறந்து மிக்க வநசா வடிவ மாகித், தன்னையு மறந்து ருக்த
தனயனைப் போன்று நீயு, மென்னையு மறந்தைதம் போத வெயினர்தம்
வடிவ மாகி, யுன்னையு மறந்தாய் நீயென் னுருவென வுணர்ந்து கொள்ளே.

மாசறப் பழுத்தா னேனு மயலறத் தெளிந்தா னேனு, மாசறுத் நறந்
தா னேனு மஞ்செழுத் துணர்ந்தா னேனு, நீசன்வே றியான்வே றென்னு
மிருணையுங் கழலா ஞகிற், பாசமுங் கழல்வ தின்றும் பதித்துவந் நாறு
மின்றே.

பாசத்தாற் பசுவெனப் பகரப் பட்டனை, பாசந்நா னிரிதரப் பதியெ
னப்படுங், காசத்தாற் குருடனைக் கழறப் பட்டனை, காசந்நா னிரிதரக்
கண்ணெ னப்படும்.

சிவனை மிந்த வான்மா வியற்கையைத் தெரிக்குங் காலைக், கேவலன்
சூத்தன் சாந்தன் சுக்குமன் கிளர்ச நாதன், பாவமில் சர்வா நந்தன் பர
ஞந் சர்வ சாக்கி, மேவுசிந் மாத்தி ரந்தன் மிகுசுத்த மென்பது மைமால்.

யாதா மொருவ னிவ்வண்ணை மிலகு மான்ம சொரூபத்தைப், பேத
மாக வறியுமவன் பேசி னந்ம வடகாரி, யோது சோர னலெந்தப் பாவ
முறுற்றப் படவில்லை, வேத மெல்லா முறையிடனுங் தெளியா மையை மே
லிட்டோர்.

புண்ணிய பூமியிற் பிறந்தும் பூசரப், பண்ணைவ னெயு மூங்கை பாறி
யுங், கண்ணிய குடும்பமாங் கடலை நீந்திடான், றிண்ணிய பிறவி யாரி
தேறிடே.

ஆகையா னுனை முயற்யிசி னுலு மவிழ்ந்தபே ராதர வாலுங், கோகன
கத்தா டருகுர வண்பாற் குறைவற பத்தியி னுலும், மோகமே விலக்கும்
பிரசிரு தியின்றன் பாவனை முழுதையும் தணந்திட், டேகமாஞ் சிவனே
நானெனச் சிந்தித் திடவொழிந் திருந்திடத் தகுமால்.

யாவ னெருவன் றன்னிடத்தி லிருக்குஞ் சிவனை விட்டயலே, மேவி
யிருக்குஞ் சிவனாநனி பூசிப் பவண்றன் வியன்கையிற், பாவி யிருக்கும்
பாயசத்தை விட்டுக் கூன்கை பாந்தோடித், தூவும் தூளியை நாநனியாற்
றுய்க்கு மவனே சொல்லுங்கால்.

வானவர் தமக்கு நீங்கா மயறரு பேத வேது, வானவற் நூக நூக
வலியிறற் சிதைந்த பின்னர், தீனமார் சீவ னென்றுஞ் சிவனென்று பில்
பே தத்தை, மீனமார் புந்தி யாலே யெவண்பண்ணைப் படிவான் கொல்லோ.

ஆன்மா சுத்தன் சதாநித்த னழியா வின்பச் சுகசொரூப, நன்மா
சகஞ்சொற் பிரகாச னஞ்ஞா நத்தா லசுத்தனைப்போ, லான்மா தோன்றப்
படுகின்ற னருவ மாகி நிரவயமா, மான்மா ஞாநத் தாறிந்த னகி வினை
கட் படுகின்றன்.

ஆன்மா நித்தன் சருவபரி பூரண னரிய கூடத்த, னான்மா தோட
மிலியோக னுகி யிருந்தும் பிரான்நியை, லான்மா பிந்நம் போற்றுனற்ப்

படுவ ணரிய குரகத்தா, லாக்மா பிந்நம் போற்றேன்றட் படானென் றறைந்தா னழலாழ.

எப்போ துதன்சொ ரூபமெ தார்த்தமா, யொப்ப நோக்கி யுலகங்க ளியாவையுங், கப்பு மாயா மாயமெனக் காண்பனே, லப்போ தேயச் சுக வடி வாயினுன்.

எப்போ துந்நன் னிடந்திற் சருவழுந், தப்ப லின்றியே தான்சரு வத்தினு, நுட்ப ஞாநநோக் காலேக் குவானெனி, லப்போ தேயப் பிரம மடைவனுல்.

எப்போ தியாதாமெ ரூவனுக் கிப்பவ, வெய்ப்பு லாம்பிணிக் கேக மூ லிக்கையாம், பெட்பின் மேலாம் பிரமஞா நம்பெறி, லப்பொழு தீவ னே தீவ முயிரனுன்.

வேத மெய்ம்மொழி கண்டு விமலா, யாதி யாந்ம நிலையறி ஞாந மைய, நோத கச்சொவித் தூடிக்கு நோயிலவ, சோத மாரா குக்கிரை யாவரே.

நெல்லினுக் குமியுந் செம்பி னீடுகா ளிதமும் போலத், தொல்லே தொட் டின்று காறு முயிரிடைத் தொக்கி நிற்கும், வல்லியோர் பங்க ஞசான் வடிவெடுத் தருளுங் காலம், புல்லுறு பனிபோற் பொன்றும் போதவா தவனெ முங்கால்.

இம்மல மூன்று லாவி யிருளடைந் தறிவு மாழ்கி, மும்மைகொள் புவ னந்தோறு முறைமுறை போகி மீளுஞ், செம்மலங் கருணை வள்ளற் றிரு வருட் டிரோதை மாறி, மம்மர்கொள் பாம்பு மிழ்ந்த மதியென விளங்கு மன்றே.

ஆக்கைக்குஞ் சாக்கி ரமே யனைத்திற்குஞ் சாக்கி ரமே,போக்கொடு வரவு மில்லே டுண்ணிய பர்வ மில்லை, வாக்கொடு மாமு மில்லை மந்திரந் தியாத மில்லை, சாக்கிமாத் திரமே யென்று தெளிந்தவன் சந்நியாசி. .

நிறைந்த மாகடற் போலுயர் நெடுமலை முடியிற், சிறந்த போதமா வாக்கியச் சிரவணத் தாலே, யிறந்த சிந்தையி னற்றனை யீச்சுர ஞக, வறிந்த வன்சொலு மதிவந்நாச் சிரமியா வாழுல்.

வருணமாச் சிரம மாகி மலிகதே கத்தின் கண்ணை, கருமலி மாயை தன்னுற் கற்பிக்கப் பட்ட வெல்லாம், பொருவரு போத ஞமேற் கெப் போது மில்லை யென்றே, யருமறை யாலு ணர்ந்தோ னதிவந்நாச் சிரமி யாவான்.

சொன்னத்திற் கடக மாதி சூழணி தோன்று மாபோ, லென்னிடத் நகில மெல்லாங் கற்பிக்கப் பட்ட தென்றே, பன்னுமா மறையந் தத் தாற் பகுத்தறிந் தநுப வித்திங், கன்னிய மிலாமை கண்டோ னதிவந்நாச் சிரமி யாவான்.

ஆதித்தன் சந்நி தானத் தகிலஞ்சேட் டிக்கு மாபோற், போதத்தென் சந்நா நத்திற் புவநஞ்சேட் டிக்கு மென்றே, வேதத்தி னந்தத் தாலே

மெய்ப்பட வறிந்து ணர்ந்தோ, ருநித்த னிவனே யென்ன வறிவன்னாச் ஜோதி யாவான்.

இப்பியிற் பிராந்தி யாலே யிரசிதந் தோன்று மாபோன், மெய்ப்படு மென்னி லிந்த வியன்சக முதிந்த தென்றே, யிப்படி யாவ னேனு மெ ழின்மறை முடிவி ருலே, யற்புத வறிவு ணர்ந்தோ னறிவன்னாச் ஜோதி யாவான்.

இந்தனூ நத்தி ருற்றன் னஞ்ஞாந மிறக்கு மத்தாற், பிறந்தமாந் ஜவித வத்து தொலைந்திடுங் தொலைந்த வத்தாற், புந்திதா னரிக்கு மத்தாற் புகழிகழ் நசிக்கு மத்தா, னந்திடுங் குடும்ப மத்தா ருலனையுஞ் சொருபம் தோன்றும்.

பாம்பிதன் றுணர்ந்த போது பழுதையே யில்லை வெய்ய, பாம்பிதன் றெனவு ணர்ந்தாற் பழுதையே யாருற் போலச், சோம்புறு குடும்பி யென்னிற் றுகளுறு சீவ ருகுஞ், சோம்புறாக் குடும்பி யென்னிற் றுகளறு பிரம மாவான்.

கன்னலுன் புளிரு னென்றே கவலையுற் றழுங்குங் காலைக், கன்னலீ கிராத னன்று கெளந்திபுத் திரனென் ருற்போ, லந்திய வுடலு னென்றே யயர்ந்துள மழியேன் மைந்த, வந்திய மென்று கண்ட வறிவுநீ யுணர்ந்து கொள்ளே.

கல்லெலா மெறிந்து மீதிக் கையினை யெறிவா ருண்டோ, சொல்லிய கருவி யெல்லாந் தொலைத்தவன் மீதி யன்றே, வல்லறி வவனே சோதி யாகிய பிரம மாவர், னெல்லையின் மறைக ளெல்லா மிவ்வண முரைக்கு மன்றே.

ஒருவனெரு தேயத்திற் பிரமசரி யாயுற்றான், மருவிமற்றோர் நாட் டகத்தின் மகிழ்கிரகி யாயினான், பாவிபின்றோர் மண்டலத்திற் பகர்துறவி யாய் நடித்தான், விரவியகோ லம்போக்கின் வேறில்லை யவனிவனே.

பொன்னை யன்றிப் பூணில்லை பூணை யன்றிப் பொன்னில்லை, யென்னை யன்றிச் சிவனில்லை சிவனை யன்றி யானில்லை, யின்ன வண்ண மறிந்தோனே யீசன் றனையு மறிந்தோனு, மின்ன வண்ண மறியாதா னீ சன் றனையு மறியானே.

நிறையறி வாயி ருந்து நின்மலன் றன்னைத் தேடி, மறைமுத லோலா ராய்ந்தும் பின்னரு மயங்குந் நன்மை, யிறைவனே யெனக்கு நாக்குண் டில்லையோ வென்று கேட்க, வறைவது நாக்கே யென்ன வகந்தனி யானைப் போலும்.

என்று மிருந்த படியிருந்து மியல்பே யென்று மொருவேத, மொன்றே யொழிய விரண்டாம்வந் தில்லை யென்று மொருவேதம், வென்றிப் பழு நீயும்வே றில்லை யென்று மொருவேதம், தன்று மதுவே நீயாரு யென்றே சொல்லு மொருவேதம்.

கேவலச் சங்கன் முன்குட் கேள்பகை யிரண்டு மின்றி, மேவிய சுத்த மென்னு மெல்லணை மீதி ருந்து, சாவுயர் பிறப்பு மில்லாத் தத்துவச் செங்கோ லோச்சிப், பாவனை யிலாத கானம் படர்ந்துரு மாறி னனே.

அறுவகைச் சமயத் தோர்க்கு மதிதமா யகள மாகி, மறுவறு பொரு ளா யொன்றுய் மன்பதை தொறுநி றைந்து, குறைவறு பிரம நாமே யென்றுகோ சங்க ணீங்கி, யறிவுரு வாகி நிற்ற லழகிய யோக மாமே.

உடலெரு முயிரு மாகி யுயிர்தொறு மூணர்வு மாகிச், சடமச டங்க டோறுஞ் சாக்கியு மாகி நின்ற, வடல்புனை சிவனுர் நம்மை யன்றிவே றில்லை யென்றே, யுடைகுட விசும்பு போலொன் றுதலே யோக மாமே.

இந்திய மாம்மா வென்ப ரிறைவனின் றிருநோக் கில்லார், மூந்திய பிராணன் றன்னை யுயிரென மொழியா நிற்பர், சிந்தையை மனவ கத்தைப் புந்தியைச் சீவ னென்பர், சந்துறு மிவைகட் கெல்லாஞ் சாக்கிநா னென்று கண்டேன்.

பிண்டமா முடலை னல்லேன் பிராணவா யுவுநா னல்லேன், கண்ட வைவம் பொறியு மல்லேன் காணுமோர் நான்கு மல்லேன், பண்டைய வறிவ னெனன் றுன்னருள் கொண்டு பார்க்கி, லெண்டிசை கீழ்மே லெங்கு மேகனு யிருந்திகின் றேனே.

காயனை யகாய னைக்கிக் கண்டனை யகண்ட னைக்கிப், பேயனைப் பிரம மாக்கிப் பிறப்பிறப் பிலாமை யாக்கித், தாயினு மினிய னுகி வந்தெனைத் தனைகந்தாட் கொண்ட, தூயசற் குரவ நின்னைத் தொழுந்தொறுங் களிது ளங்குரும்.

பாசத்தாற் பாசி யாகிப் பலபல பிறப்பிற் சென்று, பாசத்தாற் பிறந்தி றந்து பலபல போகந் துய்த்த, பாசத்தைத் தாளாற் போக்கிப் பதித்துவம் பதித்த நாதன், பாசத்தை நினையுந் தோறும் பசுத்துவங் கழலு மன்றே.

எல்லாருங் களிதுள்ங்க விருமலையிரும் பொன்னுக்கி, கல்லார்க டொழுந்தேவாய் நாட்டுகின்ற ஞாயம்போற், கல்லாத புலையேனைக் கருணை யினுற் கடைக்கணித்துப், பொல்லாத பரப்பிரம மாக்கினையென் போல் வந்தே.

சித்தாந்த தரிசனம்.

திருமூலர் மாலையெனும் தெப்பத்தைப் பற்றிக், கருவேலை யைக்கடப் போங் காண்.

திருநோக்கான் முலமலந் தீயும் பரிசத்தா, லிருண்மாயைக் கூட்ட மிரியும்.

திருமொழியாம் கண்மமலஞ் சிந்துந்தி யாகத்தாற், பெருமாயை போ யொழியும் பின்.

சைதந் நியவுருநா லென்று நமந்நீங்கல், சைதந் நியனுருவம் தான்.

னேவிட வேறில்லை யியானே பாப்பிய, மெனவுணர்த் றற்றிசை நம்.

அந்தச் சிவநம்மை யன்றியிலை யென்றேறிந், துந்துஞ் சிவமேயாக மோர்.

ஆமயத்தை நீங்கி நிராமயத்தை யாதரிக்கி, றுமையம்போ நீயேய வண்.

புத்திக்குச் சாக்கியாம் போதமய வாநீமா, புத்திசட மாதலிறற் பொய்.

சீவனத்தாற் சிவனெனல் சீவமிறந் நாலிந்தச், சீவனே யந்தரிப் பய்.

ஊனை யொதுக்கி யுணர்வாக்கி விட்டபினர், நானே பிய மெனை நாடு.

சொப்பநமுஞ் சாக்கிரமுந் தொலையொத்த காலத்துச், சுப்பிய மென்றுநீ சொல்.

உபதேச மாலை.

சிவபர மிரண்டுந் தேருமிடத் தேகமென்று, மேலியசின் முத்திமை கொள் மென்காத்தா-லோவில், வழக்கறுத்தான் பல்சமய வாதிகளே காண்மின், மழுக்காத்தி லேந்தியவெம் மான்.

பாசத்தை விட்டாற் பசுவோ பதியோமா, னுசற் றுவர்வணங்கு மையமே - யோசித்துச், சொல்வா யருட்குருவே சுத்தபரி பூரணனே, யெல்லா மாய் நின்றவனே யின்று.

பாசத்தி னலுணக்குப் பாசியெனும் போர்வந்த, தாசற்ற மாறை வறையக்கே - ணேசித், தருமலறமயி னலு மநுபவத்தி னலும், பிரமனென்று மீசனென்றும் பேர்.

தீக்கையினு லுண்ணாச் சிவமாக்கி நிறுமதன்றி, யாக்கைதீ யிலையடை மாக்கிக்கே - நோக்கியே, நானேநீ யென்று நவின்றாமுட தேசித்தோ, மேனே மயக்கமெ முழும்.

என்று பிறந்தேனை யென்று வளர்ந்தேனை, யென்று தாயருந் நிறந் தேனை - யென்று, மழியாத சித்துருநா வென்பே மகிழ்தல், மழுவாத நின்றாரிச நம்.

நானே சிவன்சிவனே நாவென்று நாடியெறும், நானுநி நின்றநிலை நானன்றே - வானுப், பவசலநி நீந்திவரும் பண்புடைய மானை, சிவ போக மென்றே தெளி.

உன்னை யொருவ னுயர்சாமி யென்றுணர்த்தா, லென்னை மகிழ்ச்சி யங்கே யெய்திலுய் - பின்னெருவன், பாவி பசுவென்றுற் பலதடைகட் பா யாகையினுற், சீவனல்ல நீயே சிவம்.

விழலாம் விலாமிச்சி வேட்டிலைநெய் தேட, மழலா மயப்பா மாலி - தொ ழிலா, லுவமா முவகி லுதரித்த மானை, சிவமாநற் வெய்யமென்ன செப்பு.

ஈசனுனைக் கெஞ்ஞான்று மிதசத் துருவென்னும், வாசகத்தைச் சொல் லக்கேண் மாணவக - வீசன்ரூன், தத்துவத்தி லாக்கித் தவத்தில் வளர்த் தன்னேத், முத்தியினிற் சங்கரிப்பான் மூன்.

சிவமல்ல நாமென்றுஞ் சீவரு மென்றும், விவகாரம் வந்தவிட மெல் லாம் - துவமகலச், சாம மறைபுகலுஞ் சத்தியமா வாக்கியத்தைத், தோமற வுட் கொண்டு தூணி.

ஆதிமறை யாகமங்க ளெல்லா மளவிட்டே, யோதி யுணர்ந்தெல்லா முரைத்தாலும் - வேதை, யெழுநூன்கு கோடி யிழிநிரைய மெல்லாம், விழுவர் சிவனுகா விடின்.

மாதாபி தாநாத்தி மற்றொருக்க லுநாத்தி, யாதார வைப்பு மரண்மனையுந்- தீதான, நாத்தியிவை மெய்யென்று நம்பாதே யென்றறைந்த, மாத்திரத் தே வீடுற்ரூன் மன்.

தாயரையுந் தந்தையையுந் தற்சார்ந்த கேளிரையு, மாயு மயல்காட்டு மனைவியையுஞ் - சியென்று, சோற்பநம் போற் கண்டெட்டாத் தூரப் போ யோகநிலை, நிற்பவனே ஞானியென நேர்.

எண்ணுஞ் சிவயோக மான்மியத்தை யென்சொல்கேன், மண்ணுல குஞ் விண்ணுலகும் வந்திறைஞ்சி - யண்ணுவென், ரோலமிடு நீசிவமா யோனிமைப்பு நிற்பையெனிற், காலனுங்கை கூப்பிநிற்பன் காண்.

ஓவா பவக்கடலுக் கோரம்பி யாகலான், மாவாக்கி யம்புகல்வேன் மைந்தாகேள் - மூவாத, தற்பதநான் தொம்பதநீ சாற்றசியா வுயென்னு, மூப்பொருளுங் கண்டு மூடி.

அறிவுநா மென்றறிய மாட்டாதா ரண்ரே, வெறிகாற் புனலருந்தி யென்னும் - தறிபோலு, நிட்டையுடன் மட்டாய் நெடுங்கால நின்ரூர்க, ணட்டமலா லுண்டோ நயம்.

சுகண்வாம தேவன் துருவாசன் காதி, மகன்விதுரன் வெண்காடன் மாறன் — சகமாண்ட, பத்ரகிரி வாங்மீகி பற்றற்றே மூத்தியினை, யுற்ரூரு ரூர்க்கிவரொப் பார்.

அண்ணா றுவணைக் காசனலகிறந்த, வண்ணமூலப் போக மகிழ்ந் துண்டு - மெண்ணின், மூங்கிக்குழவின் முன்னே முழுப்பிரமங் காட்டி, மாக்கவலை தீர்வகுத் தான்.

பாசங் கடந்து பதியான பண்ணவர்க, ளாசங் கடத்தி லலைந்தாலு - மீசன், றலையோட்டி லேயிரந்துந் தன்மைகுறைந் தாரே, மலைகோட்டி மூப்புரமட் டான்.

சிவ ஞானப் பிரகாச வென்பா.

பாலொடு சேர்ந்தநீர் பாலாகு மாங்கதுபோல், வாலறிவ னச்சேர்ந்த மன்னுயிர்கள் - வாலறிவன், ரூனுநி நிற்பதல்லாற் றண்டாத வைம்பாச, வூனுநி நில்லாரு வந்து.

ஆயிழையைக் காமுற்றே யாலிங்க னுஞ்செய்தே, குயிழையே தானுனை வாதரம்போன் - மாயையையிட், டையமெறி தேர்ந்தபினு மாங்கிரண்டுண் டேயென்ரு, லுய்யுமெறி யில்லையுவந் தது.

அரசன் மகனாசை குறிகின்ரூற் போலப், பாமகிள வீரிரேரன்றும் பல்லுயிரும் - பாம, சிவனுகி நிற்பதலாற் சீவனுயி நில்லா, சிவனுணை யுள்ளே தெளி.

ஆசானே நீனுனென்ன றங்கைத் தலைவைத்தான், பாசா நிகளைந்தும் பாறித்தே - யாசானை, யுள்ளபடி நோக்கி யுறுபூசை செய்வதல்லாற், கள்ள னிடத் துண்டோகைம் மாறு.

நீயேநா னென்று நிலையளித்த தேசிகனைத், தூய மலமொத்துத் தூவாதார் - போய்வாழுங், காட்டிற் கனிதுய்க்குங் கருங்குரங்காய்ச் சென்ரையாய், வேட்டுவனுய்ச் சென்மிப்பார் மேல்.

ஆக்கையு நீயல்ல வைம்பொறியு நீயல்ல, தாக்கு கரணங்க டான்ல்ல - சூக்க, வுடலல்ல நீனல்ல வுண்ணமநீ யென்ரூர்க், குடலுருகி நிற்பேனு வந்து.

கறுத்த விரும்பைக் கனகமய மாக்குதல்போற், சிறுத்தமைப் பேருரு வாய்ச் செய்தானை-வறுத்த, விதைபோல் வரும்பிறப்பை வேரறுத்த வேதி யரைப், புதைமருத்து ளைப்போதும் போல்.

அறிந்தவிடத் தில்லை யறியாமை யத்தைப், பிறிந்தபினும் பேசல் பிழையன்ரே - செறிந்த, சுடர்கொண் டிருட்டேடித் தையருறுவா ருண்டோ, மடமகமன்ற மாணைக்க னை.

பாவநா தீதப் பதியேறிப் பின்னுநாந், சீவனென்றுஞ் சிந்திப்பா நுண்டோசொல்—சிவ, மகன்றபுழுப் பின்புழுநா வனென்றறைத லுண்டோ, சுகமறிந்த தண்டோ சுகம்.

உளுறங்கி யாறுத வுள்ள முறங்கியொரு, நாளுறங்கி ஞால முறங்கி யுமே—தானுறங்காச், சிவனை யறிந்தவனைச் சீவனைலா மோ, சிவகுரு நா தாவிதனைச் செப்பு.

ஞாந விளக்கம்.

ஆகாயந் தேடி யலைவோருக் காகாய, மாகாயத் தட்காட்டன் மாறு மே-யேகபரி, பூரணத்தைத் தேடிப் புலம்புவோ னுங்காசான், பூரணனே யென்று புகறல்.

ஆறு தத்துவத்துக் கப்பா லதீதத்தே, வேருகத் தம்மை விசாரித்துங்-கூருக, வாநந்தநீ நானென்ன றியாம வழியிலை, ளாநந்தந் தேடியலையும்.

தத்துவத்துக் கப்பாலே தன்னைத் தரிசித்து, நித்தபரி பூரணத்தி னில்லாமல்-சுத்த, பனிமாலை யாற்செய் பதுமையினைத் தேடு, மனிமா னிடமிருக நாடு.

வாழ்நா ளுடம்புண் டுடம்பால் வினையுண்டு, தாழும் வினையாற் சக முண்டு-காழ்கொண்ட, வித்துமுளை யும்போல வீயா தொருகாலு, முந்தி யிலே வீயுமு ளை.

நினைப்பு மறப்புமிந்த நீலகு மித்தை, யனைத்தும்போ லுலோ கவே ஸ்-உனற்காகிய, கன்னனுக்கு வேடு கழித்தகதை போலுனக்கு, மங்கியமே வேடென் றறி.

கல்லகுலத் திற்பிறந்து நல்லாரைச் சேர்ந்தொழுகி, கல்லறிவு பெற்று டைய நன்மாணு-நல்ல, சிவம்வேறே யென்றெண்ணிச் சிந்தை கலங்காதே, சிவமென்ற நீயேசி வம்.

நானே பரமசிவ னானே பரப்பிரமம், நானே யுலகுயிர்த்த நாதன்-நானேயோ, கண்டதுவுங் காணாது மென்றிவணங் கண்ணாகக், கண்டவனே சீவன்முத்தன் காண்.

மலமில்லை மாசில்லை மாநாபி மாநங், குலமில்லை யென்னறிவின் கூற்றிற்-கலக, மலமுண்டு மாசுண்டு மாநாபி மாநங், குலமுண்டு திரிபயங் கூறு நில்.

அத்துவிதக் கலி வெண்பா.

அறிவகையாற் போக்கினே மானமையா னீயே, பிறிவில் பிரமமெ னப் பேணி-மறுபிறப்பை.

நான்வே றியான்வேறென் றெண்ணுகின்ற பாதகனை, நீசனெனக் கண்டு நினையென்ரு-னுசையொடும்.

வேத முடிவறிந்த வேதியனைக் கூடென்ரு ன், பேதநிலை யெல்லாம் பிரியென்ரு ன்.

அதி ரகசியம்.

வானே முதலாம் பூதங்க ளல்லை காண வகுப்பல்லை, யாலுப் பொறியு லைமம்புலனு மல்லை யறியு மறிவல்லை, யூனு குடம்பின் வயத்தாலே யுள்ளந் தளரா லொன்ரு ய, நானே நீயென் றருள்செய்த ஞான குருவை வணங்கு வாம்.

ஆல யந்தொழு வறந்தலை நிரப்புதல் லருச்சனை புரியென்றே, யோல மிட்டுநான் மறையெலா மூரைப்பது வுலகனைக் குறித்தன்ரு, மூல காரண பரம்பரு க்கமாய் முழுதையுங் காணென்னுச், சில முற்றிய வறி னுரைக் குறித்துரை செய்ததம் மறையன்றே.

தந்தைதா யிவரோ வென்ரு ண் ஞானம் பிரம மென்றுன், பைந்தொடி யாளை யாலே பாகதி யிழந்தே னென்ரு ன், புந்தியார் போந்த போக்குப் பொறுக்கிலே னென்ரு னந்தோ, வெந்துயர்க் கடலில் வீழ்ந்தே னென வுளம் வெருவி னனுல்.

சதுமெய் யீதுவொய்ம்மை யெணும்வத்து விமேக மெய்ஞிப், பூதலத் தானை மேலேப் புவநத்திலாகை போக்கிச், சாதுநற் சமமே யாநி சட்குண தானுய் மீளா, மோதுவெங் கலியை மாய்ப்பான் முத்தியில் விருப்ப மூற் றனனுய் மீளா.

கண்டான் குருவைக் கண்ணுரக் கதறி வீழ்ந்தான் கமல மிசை, யண்டா வாணை மகமேலே யயனை யென்று ணகமகிழ்ந்தான், முண்டா லியலும் பணிசெய்யத் துணிந்தான் பணிந்தான் மும்முறையே, பண்டா னிறைந்த பாவாலும் காவா யென்னைப் பாடினன்.

பஞ்ச பூத தீயல்லே பஞ்ச கோச தீயல்லே, விஞ்சு காண தீயல்லே விருதி பருதி தீயல்லே, துஞ்சு சீவ னீயல்லே தோன்று பாழ தீயல்லே, மிஞ்சி நின்ற மையுறே னிலே யடிநாய் பாவியேன்.

ஆத மேவடி வாகிய சீடனை, யோகனேயென் நியம்பலு மெம்பிரான், மோக வாரியின் மூழ்கிய பாவியே, னேக முருவ மெவ்வண மென்னையே.

என்றி யம்பிய வேழையை நோக்கியே, யன்ற னாகைத் தானெங்க ணையகன், வென்று தொட்டுறும் வாதனைச் சோம்பினை, லென்று நீயப் பாம்பொரு னாதுவாய்.

காலு வேதமு மோது நலத்தினை, யேல வோதிய மேனிழுட் கென் செயப், பாலு மெய்யும் பறையனுக் கென்செயத், தோலு மென்பும் தானிக செயப், மொழியுமே.

சமய மேபர மென்னுஞ் சமர்த்தராய்ச், சமய சாத்திரங் காட்டுஞ் சழக்கரீர்காள், சமய மென்னுஞ் சுத்தார்த்த மூணர்கிலீர், சமய மென்பது தன்னை யறிதலே.

கற்புடை மகளிர் கொல்லாங் கணவனே தெய்வ மென்பர், சிற்பொலி சமய வேடர் சிலபலையே தெய்வ மென்பர், நற்கொலி மாந்த ரெல்லாங் தாருவே தெய்வ மென்ப, நற்புற பொரியோ ரெல்லா மறிவையே தெய்வ மென்பரி.

நித்தனன் றுரைத்த வாக்கியப் படியே நிகழ்ந்துவன் பிராந்தினையர் நினையுஞ், சித்திய மித்த வுலகெனல் கருவி தணந்திடா துடலோடு மெனன் னல், கத்தபோத் தாவு காலனை ரூணுங் கடவுளும் வேறனைக் கருதல், சித்துரு வாகி யிருந்துநு ணுகேன் சிவனெனல் சிதடர்பா லறியே.

காசி வாஞ்சியுங் காளத்தி கழுக்குன்றுங் காஞ்சி, மாசி லாருரைப் பருப்பதங் கோகன்னை மறைக்கா, டோசி லாதுறை பூர்த்திநங் தெரிசன மெல்லாங், தேசி கன்றிருத் தலையை நிகர்த்துபோ செப்பில்.

ஆகையா னுனே யெல்லாப் பொருன்கட்கு மறியாய் நின்றே, தேகமா நிகளுக் கப்பாற் சிதம்பர வடிவை மாகி, யோகமு யுகாதி முதிர்ந்து ணையினில் லேவெரன் றின்றிப், போகமோ கங்க ளின்றிப் பூரண வறிவா னேனே.

அறிவென்னு முதல்வேத மகமென்னு மிரண்டாமோத், தறிவதுதீ யாருயென் றலைறயுழன் றும்வேதத்து, செறியிந்த வாங்மாலே சிவமென்னு மதர்வண்ணைத்து, செறிபுரால் வாய்மையத்தின் சித்தாந்த மறிந்தேதனே.

தானேநீ நீமானே யாலாலையாயான் குரங்குரு, வானவனே வைம்மாறும் வழிபாடுந் தோத்திரமு, மீனதிலாப் பூசனேயு மியற்றுவான் றனைக்காணை, னானுமிலை யுயிருமிலை யுனையன்றி யொன்றுமிலை.

எல்லாநா னென்றுணராக் காலத்தி லிடர்ப்பட்டே, னெல்லாநா னென்றுணர்ந்த காலத்தி லின்புற்றே, னெல்லாநா னேயன்றிங் கெவையெடுத்து விழுங்கிரு, யெல்லாநீ யென்றுணரு மெண்ணமும்போய் மாண்டதே.

ஒன்றென்று சொல்வதற்கு முரையில்லை நாவில்லை, யன்றிதா மென்பதற்கு மறிவில்லை செயலில்லை, சென்றெடுங்கு மாறில்லை சோதிற்பதுமில்லை, நன்றுமிலை தீதுமிலை நானுமிலை நீயுமிலை.

நிரண்டொழுகும் போற்றிற் சிறுவூற்றுக் குழிதேடிப், புரண்டுபுரண் டழுவார்க்குப் புத்தியெவர் போதிப்பா, நிரண்டிறந்த வாநந்த மெழுந்தபினை றுசிமய, முரண்டொருசிற் றூற்றுண்டோ முழுஞான மூர்த்தியே.

சிவாகமக் கச்சி மாலை.

அறிவா யிருந்தறி யாமையை நோக்கி னஃதொதாழியுரு, சி றி யு ம் பரிபூ ரணவுருத் தானெனிற் றேகமறு, மறிகரு மங்கட்குச் சாக்கி யுயிரொ னின் மாளுமது, பிறியா நிலையிது வென்றுன் பெருங்கச்சி யேகம்பனே.

விருப்பு வெறுப்பற் றுண்மெத மொழிப்படி மெய்யுணர்ந்து, ம ரி ப் பைச் சனிப்பையு மற்றொளி யாகிய மாதவர்பாற், கருப்புச் சிலையனுங் காலனும் வந்தென் செயக்கடவர், நெருப்பைப் புழுப்பற்றுங் கொல்லோ வெதிங் கச்சி யேகம்பனே.

அஞ்ஞான மீக்கத்தி லாருயி ரோசில மானமையான், மெய்ஞ்ஞானி யென்ப தெவர்க்குஞ் சரியொக்கும் வேறென் றுன்னிப், பொய்ஞ்ஞானம் பேசும் புருடர்க்குன் பாதப் பூணைகிடையா, வெஞ்ஞான் றவர்க்கருள் செய்குவை யோகச்சி யேகம்பனே.

வேறென்று பேசுவ தெல்லாம் விவேகமி லாமையன்றே, கூறுன் நிலாமறை கூறுஞ் சிவனுநீ சீவனென்றும், தேறு முமையபுரத் தேக மென்றும்மிதைத் தேறுவதோ, வீறின் மலமயப் பட்டோ மொழிற்கச்சி யேகம்பனே.

சிருட்டிக்கு முன்னுயி ரெல்லாந் சிவமெனச் செப்புமறை, சிருட்டிக் குப் பின்னுயிர் வேறுபட் டானென்று சிவனென்றே, சிருட்டியை நீக்கிச் சிவோகமென் பாவனை சேர்தலுஞ், சிருட்டிக்கு முன்சிவ மானுன் நிகழ்க் கச்சி யேகம்பனே.

கர்ணாமிர்தம்.

பாவமு மறமு மொத்துப் பக்குவம் பருவ முற்றிங், காவியைம் புலனைப் பற்ற தகமுக மாகி யென்று, மோவியம் போன்றிட் டங்க ணுணருணர் ராமைபோக்கிற், சிவனுஞ் சிவனும் வேறே நிருப்புலி வதத்த னானே.

ஆகாச மல்ல விந்த வைம்பொறி காசே யல்ல, கோடோ நாளென் றுன்னு மிருடிக ளிதயத் துள்ளாய்ப், பாசமா முலைமை ணைவ பசுபதி பிறவி வேண்டேடன், சேகறு மந்தேசர் போற்றச் திருப்புலி வந்து ளாசேன.

அறிவினி லகமுண்ட டாகி யகத்தினின் மாமுண்ட டாகிப், பிறிவரு மந்தின் மாயை மாயையிற் பிண்டாண்ட டங்கள், மறியலை யந்தி முக்கை வந்தவிம் மாய மெல்லாஞ், சிறிதாரா தருளிச் செய்வாய் திருப்புலி வந்து ளாசேன.

சுருதி சார விளக்கம்.

செத்தாச் செத்தப் பிறக்குந் செருக்கற, மெய்த்த ஞான விசேவகங் கண் மேலிடச், சுத்த வாதை கொடுப்போ ரியலுலகு, சத்தி வேற்கைச் சாவணற் போற்றுவாம்.

மூப்பாழும் பாவழுன்ற மூலவு மடிபோற்றி, யப்பாலும் பாவழுன்ற சடசோகா மடிபோற்றி, யொப்பாரு மிலேயென்ற சிவக்க ருணாபோற்றி, பொய்ப்பாலை யறத்துறந்த வெண்காடர் புகழ்போற்றி.

கண்ணுதலுங் கருத்தாலுங் கையாலு மெய்யாலு, கண்ணுறுத பாருடலை நாதாந்த நாயகனை, யுண்ணுறுபவர்க்கெளிய ருத்தமனை யுடனிடமுங், ஙனிய மடியவரைக் கருத்தாப் போற்றுவாம்.

பெற்றதபோ தனர்பாதப் பெய்தாளி பூணந்திடவுங், குற்ற முறு மெனதுள்ளங் குவிந்தறிவைக் குறுகிடவும், பற்றறத்தி ரத்துறந்த ஞகழுறி பங் கயத்தாளை, யற்றமறத் துறந்தவண்போ லறிவாரி வணங்குவாம்.

ஆக்கையல விந்தியநீ யல்லவகக் காணமல, தேக்குபிரா ணனுமல்ல சீவனல சாக்கியல, போக்குவர வில்லாத பூமணி யென்றருளு, மாக்குரு வன் றிருத்தாளை மறவாமல் வணங்குவாம்.

ஆலவிடஞ் சிவண்மிடற்றி லடங்கியத்தா லிலிலைமலர, மாலவிட மென் றிகழா ரஞ்சவிசெய் வார்போல, ழலமைய வாக்கியமா மணிச்சிலை மூடிங் நிமிம், ழலயறிந் தோரிகழா ரதுவேயென் மொழியம்மா.

நாதாந்தி யர்சுகர்க்கு ஈவின்றநால் வாக்கியமும், தீராய் முத்திபெறச் சித்தமொருப் பட்டவர்க்குத், தூமமா யணித்தாய சுயம்பிரகா சப்பெயரோ, ஞியன்சே வடிபோற்றி யறைவணரும் தமிழாலே.

உலகமே பரப்பிரம மூலாக்கு மந்தப் பிரமந, மலகில்கலை யுணர்ந் தாலு மருத்தமிதே யறிகண்டாய்ப், பலமயலைத் துறந்தரிய பரமபதந் தானேத் தாவி, யுலவுங முரியரேனை யென்றணைந்தா ஞயம்முனிவன்.

ஆகிவிந்தப் பரப்பிரம மகிலமயமா யிற்றென்றுற், சோகமொடு பிறந் நிறக்கும் தொழிலுளரேனு வெண்பாலே, லீலைபல பணியாயு பிறந்தனு வோ வதுபோல, வேகபர மகிலமுமா யிருக்கும்மியா பகுத்தாலே.

தந்தைதயி ஞண்டாய சந்தியு மவனென்றே, மூந்துமறை யுளதருமான் மூழுவதுந்தா னன்றிவொரு, சிந்துவிலை யெனவீசன் சேயிழைக்கோ தியபரிசாற், பந்தமறுஞ் சகமுறிவ பார்பியதி சேகமென்றே.

எல்லாவண் டமுமியானே யாவருமென் சொந்தமே, கல்லார்பொல் லார்நானே நண்மையொடு தீமையுநா, னுல்லாச பரமுத்தி யொன்றழிய விரண்டில்லை, கல்லார்க்கிட் போருடரியா கண்ணிலர்க்குக் கதிருண் டோ.

ஒலியாகிப் பரிசமா யுருவாகி யிரதமாய்ச், சலியாத கந்தமாய்த் தாரணி யாய்ப் புனலநலாய், மலிவாயு வானமாய் மதியிரவி யியமானு, மலியாகி யாணுகிப் பெண்ணுகி யமர்கின்றேன்.

சாவதுவும் பிறப்பதுவுந் தனுவன்றே வஃதறிந், சாவதுவும் பிறப் பதுவுந் தாமென்றே யுரைதருவார், போவதுவும் வருவதுவும் புரியட்ட சரீரமே, போவதிலை வருவதிலை போதமயப் பொருணமே.

தன்னை யறிந்தோர் தபோதனரே தன்னை யறியார் தபோதனரோ, முன்னை வினையின் முடிபறியார் முதன்மைப் பிரமந் தானென்றே, சொன்ன மறையின் பொருளறியார் துறந்துந் துறவார் சுபமுத்தி, பிந்நமென்றே பிதற்றுவா ரென்னை யுலகின் பேதமே.

வான்மூத லுலக மெல்லா மகத்திடை யாக்க வல்ல, நான்முகப் பிர மன் றன்னை நவில்சுக முனிவ னேக்கி, மோகவத் தவிதச் சொற்கு மொழிபொரு ளியம்டோ வென்றே, ஞானசற் குரவ சொல்வா யென்று ளை நைந்து கேட்டான்.

ஏகமேவாத் துவிதம்பிர மோகமென் றிசைப்பத், தாகமொடுஞ் சுக முனிவன் சந்தேகத் தடைநீங்கி, யாகமெனுஞ் சிறையுலவா தாநந்தச் சிறை யாகி, யேகமே யத்துவிதம் பிரமந்தா மெனத்தெளிந்தான்.

அத்துவிதத் துவிதமில்லா தெனவரிய மறை யேக, மத்துவித மிதற் கைய மிலையென்றே யறைந்தாலும், பொய்த்துவித மயக்கோழியார் பூருவவா தனையாலே, யத்துவித மொழிபொருடா னந்நியமாய்த் தெளி வால்.

ஒன்றுகிப் பரவெளியா யுருவருவ மிலதாகிக், குன்றுத பரப்பிரமங் நுகையிருந்து மதைவிளக்கி, னன்றுரு மிதயதுகை நாமதுவே யையமிலை, கன்றுத நின்மொழியான் மெய்ஞ்ஞானங் கடைப்பிடித்தேன்.

உடலுடி யுயிர்நாடி யுண்ணுடிப் புறநாடி, வாளுடி வளிநாடி மண்ணுடி நீர்நாடித், தினாடி நாதவிந்து செங்கதிரோன் றனைநாடி, நாளுடிப் பார்ப்பளவி னனையப் பரப்பிரமம்.

பல்கலையா லாகமத்தாற் பகர்கிலைந் பதினேட்டா, னல்வினையாற் கருமத்தா னன்மறையான் ஞானத்தாற், சொல்லுகத் தான் மறையாத் துணிவாலிற் றுறந்தோரா, னல்லோரா னன்பார்க்கி னனையப் பரப் பிரமம்.

ஒருகாலந் தோன்றினை யொருகாலம் வளர்கின்றே, யொருகாலஞ் சாம்பினை யென்றுரைக்கு முணர்விலிக, ளொருகாலம் பிறந்ததிலை யொரு காலம் வளர்ந்ததிலை, யொருகால மறிந்ததிலை நானையவ் வுயிர்பிரமம்.

நான்மனித னன்றுநா னவிலுறுதே வனுமன்று, நானிராக் கதனன்று கலியசுர னனன்று, நான்முகிவ னன்றுரக னுன்முகனு நானன்று, நான் றிருமா லன்றரனு மன்றியம பிரமநான்.

மூன்னவரு நானல்ல முடிமன்னர் நானல்ல, னுன்னுவகி யருமல்ல சூத்திரரு நானல்ல, வன்னியரு நானல்ல வன்னியரு நானல்ல, பிங்கமொடு பிறப்பிறப்பு மில்லாத பிரமநான்.

நான்பிரம மெனுனுநாக னூனிகள்டா வுளவாகு, முன்பிரமை யெழியாக நார்த் கொருக்காலுங் தோன்றுவா, மான்வயிற்றி னரிதாக மருவுமன்றி வாகவயிற், றுண்பிறக்கக் கண்டாரு முண்டோவொய்க் கலியுகத்தும்.

ஆதலா லகம்பிரம மெனுந்நூற் யுகங்தெளிந்து, தோநிருண் முகப் பிரமன் புண்டரிகத் தாள்வணங்கி, யோதெரணு மதிழ்ச்சியொடு முலாவிரு வுலகமெலாஞ், சோதியிவன் ரூனென்னத் துறந்தகக முதியம்மா.

பக்குவர்க்காய்க் கல்லாலின் பாங்கெழுந்த தெய்வமே, தக்கவிரட் டிருவுருவாய்த் தரியேன்றன் விண்ணப்ப, முக்குறும்புன் கடந்தவிட முழுத் துரிய நிலையென்ரு, லக்குறும்பைக் கடப்பவன்யா யெனோயீ டாட்டிய மம்.

காரணகா ரியங்கடந்த கரிப்பிரம நானென்றே, யாரணநூற் புகன்ற படி யநுபவிப்பா யருந்தவனே, காரியமேழ் காரணமேழ் கழறிலுபா திக ளாருங், காரியழுன் பாலுடைத்துக் காரணமுங் கடவுடன்டால்.

தேகமொடு பொறிகரணந் தெரியுயிரோ டேழென்பா, ராதிலயி ருபாதியிதா லகிலேச னுபாதிசொலிற், சோகமிலாச் சருவசிட்டி முதற்சரு வாந் திரியாமி, பாகமுறுஞ் சுகமுனிவ கடையேழும் பரிந்தறியே.

இன்னணமா யுயிராணைக் கடந்தேறி யிறையாணைப், பன்னுமறை யின்படியே கடந்திடிற்பைங் கிளிப்பெயரோய், சொன்னபடி பிரமமய நீ யாயே தோன்றுமா, லந்தியமா யொருபொருளுந் தோன்றுவே யநுப வத்தே.

தேகமலென் பொறியல்லென் செறிகரண நானல்லென், மூகபிரா ணனுமல்லென் முழுப்பிரம நானென்னச், சோகமெனப்பாவிக்கிற் சுகமுனிவ வுயிர்த்தடைபோம், மாகமுறு மதிபோல விளங்குமுன்றன் மதிதானே.

பாவனையெ லாமிறந்தாற் பாழன்றே பரமேட்டி, பாவனையெ லாமிருந்தாற் படிசகமன் றேயிரண்டு, மோவியதே நின்னிலைய முபாதியறு நூனி யமா, யோவியம்போ னிருவிகற்ப வுணர்வாயிற் சுகமுனிவ.

அறிகின்றே னறிவில்லே னனுநிலையுங் கடந்தநிலம், பிறிவரிய சுவாநுபவா தீதம்பா மோகமென, மறவின்மறை கூறுமா வாக்கியத்தைக் கடைப்பிடிக்கி, னறிகின்ற வநுபவமு மநுபவமன் றுமன்றே.

உன்றன்தை யுரைத்ததுவு முயர்முனிவ னுரைத்ததுவு, மன்றல்கமழ் கமலனுரை வாக்கியமு மகதேவ, ரன்றுரைத்த வாக்கியமும் யானுரைத்த வரும்பொருளு, மொன்றேயா மையமிலை யுனையன்றி வேறில்லே.

பெறுபவன்யார் பேறியாது பேசென்றான் சுகமுறிவ, னறிபவன்போ யாநந்தத் தநுகூல மானபினர்ச், செறிபிரம மொன்றெழிய விரண்டிலி லாத் திறத்தசேதல், பெறுபவன்யார் பேறியாது பேசென்றான் பெருஞ்ஜாக கன்.

காண்பவன்யார் காண்பனயார் கழறென்றான் சுகமுறிவன், சேண்பயிலு மொளிக்கொளியாய்ச் சித்தாகிப் பரவான்மா, தான்பிரகா சித்தபினர்த் தானேதா னனைமையாற், காண்பவனயார் கான்பளயார் கழறென்றான் கனஜாகன்.

பூசனேயார் பூசகன்யார் புகலென்றான் சுகமுறிவ, னுசையெலா நிரா சையா யாநந்த முங்கடந்த, வீசனு ளனீச னிரண்டற்ற வெல்லையிலே, பூசனேயார் பூச்கன்யார் புகலென்றான் புகழ்ச்சாகன்.

தோத்திரியார் தோத்திரம்யார் சொல்லென்றான் சுகமுறிவ, னூர்த்த மொடு மநவாக்குக் ககோதத்தே யளவிறந்த, சேத்திரத்திற் சிவமாகித் திறம் பாத நிலையத்திற், றோத்திரியார் தோத்திரம்யார் சொல்லென்றான் றுரைச் சாகன்.

முத்தியுண்டோ பெத்தமுண்டோ மொழியென்றான் சுகமுறிவன், சித்தமல மிறந்தரிய சிற்பரையைங் கடந்துபோ, யெத்திசையு மெப்பொரு ளும் யாமாகி நின்றிடத்தின், முத்தியுண்டோ பெத்தமுண்டோ மொழி யென்றான் முதிர்ச்சாகன்.

முன்பண்ணிய விருவாதனை முதிர்தேசிகன் விழியாலுகும், பின்பண் ணிய விருவாதனைப் பிரமாற்பணைத் தாலெதெடு, மன்பொன்றிய நாமச் சுத னென்கின்றபே ராநந்தமேற், றுன்பங்களா ரின்பங்களார் சுகயோ கியே சுகயோகியே.

ஜயமெனும் புறங்காட்டை யட்டேனின் னருண்மொழியால், வையகத்தி னின்போன்ற மாதவரா ரெனவாழ்த்த, வுய்யுநெறி யுணர்ந்தேனே யுன்வாவெற் கிடைக்குமோ, செய்தவத்தா லுன்பாதத் தெரிசனையான் பெற்றேனே.

வாழ்த்திடவும் வாயில்லை வணங்கிடவுஞ் சிரமில்லை, சூழ்த்திடவு மல நில்லை தொழுதிடவுங் கையில்லை, யெத்திடவும் பாவில்லை யெதிர்நீதிடவோ ரிறையில்லைப், பார்த்தவிடந் தொறுமியானே யெனையானே பணிகின் றேன்.

பண்டைமறை மொழிப்படியே பாமபத மினிதுணர்ந்து, தண்டிதலில் வியாதமுநி மநங்குவியத் தானினைப்பக், கண்டையொத்த மநங்குவித்துக் கனகவரை மீதடைந்தங், கண்டரொலா மறியாத மத்துவித வீடற்றான்.

மாறுத வாசையெலா மநமாரத் துறந்துபோ, யேறுத முத்திமலை யினிதேறி யிசசுகந்தை, நீறுங்கி நினையாம னித்தியா நந்தமுற்றான், றேறுவென் போலியெலாந் திநமலையுந் தெரிவையர்க்கே.

காற்றிலா விளக்கொளியோ கண்ணுடி மண்டிலமோ, நீற்றொளியோ சுரர்க்கால நிறைமதியோ நிறைவாலே, தேற்றுறுதூங் கங்கையோ தினை யற்ற பாற்கடலோ, வாற்றிய தவமேற்ற சுகமுனிவ னகமம்மா.

ஆங்கவனே நினைதாறுமென் னகங்கார மடுக்கழியும், பூங்கமலத் திரு த்தாளே யுள்குதொறும் புகலுளவாம், நீங்கறுமன் னவன்காதை செவிடுக வென் றீமையுகும், பாங்குடையோன் றுறவெணக்கும் பதியுமோ பாரிடத் தே.

சிந்தனை வெண்டா.

தேறிஞர் சித்தத் திருந்தார் சிவனென்றல், வேறு படுத்தவதேன் வீணே - மாறுபட்டுப், பேசாதே யெல்லாம் பிரமமென்னும் வேதாந்த, மாசையற்று னீயே யது.

சிவன் வேறு சீவன்வே றென்றிரண்டாய்ச் செப்பு, மவன்றிவனை யென்றுமறி யாதான் - றவமில்லா, வுள்ளத்தார்க் கெய்துமோ வூர்க்குருவி யாகாச, மெள்ளப் பறந்தறியு மே.

அதுவேநீ யாமென் றருமறைகள் சொல்லும், எதிர்சிவனே நீயாரு யென்னு - முதசைவம், வேறுவே றன்றே றுசொல் வேதியனே விண் விசும்பும், வேறுவே றன்றே று விளம்பு.

தானே பாமாறற் றத்துவசா லத்திலே, யேறு பிறந்திறந்தே னித் தனைநாள் - மாணுதேள், நீபிறந்த தில்லையுண்மை நெஞ்சுடுல னும்பொறியு, நீபிறந்தாற் போனிச்ச யம்.

நானே சிவமல்லாற் றனிச்சிவம்வே றில்லையென்ற, மோக மொழி யொன்றின் மூடிபறியா - யோகிதாறுஞ், சென்றுபிறந் தெய்த்தேன் சிவாயசிவ வென்செய்கே, னென்றுகடைத் தேறுவே னியான்.

நிராமய வந்தாதி.

மெய்யைப் பொய்யென்றுன் வெளியையல்ல வீடென்றுன், சைவத் துரைகாழிச் சம்பந்தன் - ஐயமற, நின்போதம் போமிடத்தே நீயே சிவ மென்று, னென்போதத் துள்ளே யிருந்து.

இருந்த படியிருந்தா லிறையுருவந் தோன்றும், பொருந்தாமல மீம் மையிலே பொன்று - மிருந்தபடி, யேதென்றங் குன்னி யிரண்டாட்டு வார்க்குண்டோ, போதமுண்ட பின்னே புகல்.

உற்றுணரி னீயே யுயர்பிரம மென்பதுவு, மற்ற சிவன் றுயி வகுப் பதுவு - மேற்று, மிறந்தவிடத் தோண்டு மேகமே யென்றுன், சிறந்த நீ காழிவரு தே.

அறுபத்து நாலு சங்கை சமாதானங்கள்.

'பாச பத்தனே ஜீவ:, பாசமுத்தனே சதாசிவ:' 'ஆத்மாவுக்குள்ளே சிவ முண்டு, சிவத்திற்குள்ளே ஆத்மாவுண்டு, சமவாய சம்பந்தமாயிருக்கு மென்று ஆகமங்கள் சொல்லி' 'அறிவுந் சிவமு மொன்று, அல்ல வென்கின்றவன்

வாயில் மண்ணு' என்கின்ற உலக வசனமே சாகூடி. 'அறிவென்ற றியாத வாணவமே ஞானச், செறிவாய வென்னேநீ தீண்டற்க—வறிவாய, வென்னே நீக் சிவமாக்கி." 'ஒளியை யிருள் மறைக்குமோ' 'சந்திராதித்தர்களை, இராகு கேது மறைக்கிறது போலும், நெருப்பை ஈரம் மறைக்கிறது போலும், ஆகாசத்தை மலை மறைக்கிறது போலும்' ஆனால், இந்த மறைப் புத் தான் வருவானேன், நீ பண்ணின கன்மத்தால். நான் அவயவம் இன்றி நிரவயவமா யிருக்கக் கன்மத்தை எப்படிச் செய்தேன்? நிரவயவன் நா னென்பதை மறந்து, அவயவம் நா னென்னுங் கருத்தாற் கன்மம் வந் தது. அந்தக் கன்மத்தால் மாயை யுண்டாயிற்று. இந்த மாயையால் சர்வ பதார்த்தமும் உண்டாயின. இது போமாறு, சிற் றறிவாகிய நீ, போறிவாய் நின்றுற் பசு பாசம் இல்லை.

அறிவுரு வாய வென்னே யாணவ மறுதி கூடிப், பிறிவறி யாதநின் னைப் பிறித்துத்தான் மூழுது மாகி, நெறியினை மறைத்துப் பொல்லா நீச ருக் கடிமை யாக்கிச், செறியிரு ணின்ற தென்னே திருப்புலி வ ந த் து ளானே.

ஆத்மாவென் றென்று வேதாந்தஞ் சொல்ல-விஞ்ஞாநகலர், பிரளயாகலர் சகல ரென்று அநேகமாக ஆகமஞ் சொல்வானேன் ? வேத வழி சென்ற வன் ஆகம வழியிற் செல்லான், வடக்கே போகின்றவனுக்குக் காவேரி தெரியுமோ ? அ ப் ப டி ப் போல், 'முத்தி பலவும் பகர்ந்தோம் பக்கு வத்துக் கீடாய்.' 'வேதம் வேதாந்தம் வேத்தியம் வேத மகாவாக்கியம் வேதாந்த மகாவாக்கிய விசாரம், வேத்தியப் பிரஹ்மம். இப்படி வேத பண்டி தர்கள் வெகுமுகமாகச் சொல்ல, ஆகம வாக்கியமே பிரதாந மென் று மூற்சொல்லிய வேதத்தை நிந்திப்பானேன்? தத்துவமசி, சிவத்துவமசிக்கும் அது நீயாஞய்-சிவம் நீயாஞய்-என்று அர்த்தம், ஏகமே. ஆத்துமாவே சிவ மென்பது சித்தாந்த மானால் சிவ மென்றும், பிரஹ்ம மென்றும், அரிகரப் பிரமாதி யென்றும் பலவாய் வருவானேன் ? உபாசியர்கள் உபாசனையால் வேறு வேறுயின.'

'காவேரி யொன்று கால்வாய் நூற்றெட்டு, மண்ணெண்று பா ண் டம் வரும்பல வாகி, விண்ணெண்று ஆகாயம் வேறு வேறு, மாவியு மிவ் வண மாய்ந்துகொள் வீரே' என்று வசன மிருக்கிற படியினாலே சங்கை யில்லை, இந்த ஆத்மாமைவிடச் சிவ மில்லையோ? விளாங்கு சம்பந்தம் போல உண்டு. அஃதெப்படி (ஆமடி கெட்டேனே-பாம்படி-யல்லடி கெட்டே னே) என்பது போல, வெகு முகத்திற் சிவனையும், அகமுகத்திற் சிவனை யுந் தோற்றும். இந்த வித்தை நா னெங்குங் கண்டதில்லை யென்னில், வேத வீதியிலே போனற் காணலாம். ஆத்மா சுதந்தர போதனை அசுதந்தர போதனை வென்னில், ஆகமம் முத்தியில் சுதந்தர போத னென்று சொல்லும்; வேதம் பெத்தம் முத்தி யிரண்டிலுஞ் சுதந்தர போத னென்று சொல்லும். ஆனால் சுபாவ ஸித்தாந்தமே தென்னில், அநுபவத்திற் காண்க. ஆணவ மலத்துக்கு அநேக சத்தியும் சிவனுக்கு இரண்டு சத்தியுமாயின் ஆணவ முயர்ந்து சிவந்

தாழுமே யென்னில் சிவந் தாரு யறிகின்ற சத்தி யொன்று, சருவாத்மாக்க
ளுக்கும் அறிவிக்கின்ற குண சத்தி யொன்று. இந்த ஆணவமாதிய பஞ்ச
பாசங்களும், நித்திய மென்று சிவாகமஞ் சொல்லு மெனில் கூடாது. எப்
படி? ஒரு வேதம் பஞ்ச பாசங்களும் அநித்திய மென்று சொல்லிற்று. பின்
னொரு வேதம் கானற் சலம் போலத் தோற்றாவு மாத்திரமே யென்று
சொல்லிற்று. பின் னொரு வேதம், ககனாவிந்தம் - வந்தியா புத்தான்
சச விஷாணம் போல அநுபவத்தில் பஞ்ச பாசம் இல்லை யென்று
சொல்லிற்று. காலாம் வேதம் மாயையே யில்லை; இருக்கின்ற தெல்லாம்
பிரமமே யென்று சொல்லிற்று. அட்டாவக்கிரர் தன்முப்பயிற்றிலிருந்து
கொண்டு தகப்பனை நோக்கி எல்லாம் மாயை யென்கின்ற வாய், எல்லாம்
பிரமம் மென்று சொல்லாதோ வென்று திருவுளம் பற்றினபடியாலும்,
பஞ்ச பாசங்களு மில்லை யென்பதே சித்தாந்தம். மலம் அறிவை மறைக்கு
மோ? மந்தை மறைக்குமோ? மனைதத்தான் மறைக்கும் அறிவை மறைக்கு
மென்று வசன மிருப்பானேன். மனமும் அறிவின் சம்பந்தமானபடியி னால்
அங்ஙனஞ் சொல்வாரு முளர். கண் ஜடம், நான் சித்து, கண்ணைக் கொண்
டறிகிறதுமனம்.மனிதற்குச் சாக்ஷி நான்.கண்ணும்,விடயமும்,மனமும்,மாயை;
நான் அறிவு; என் பெயர் ஆத்மா. செவி ஜடம், நான் சித்து; செவியைக்
கொண்டறிகின்றது மனம்; மனதுக்குச் சாக்ஷி நான்; செவியும் விடயமும் மன
மும் தூலம்; நான் சூக்குமம்; என் பெயர் ஆத்மா. தொக்கு நாவல்ல-ஜடம்;
நான் சித்து; தொக்கால் பரிசத்தைத் யறிகின்றது மனம்; மனதுக்குச்சாக்ஷிநான்;
இவை யெல்லா மிறந்தாலும் நாவிறவாதபடியிலே நான் சிந்மாத்திரன்.
நாசிகாணம் நாவல்ல, ஜடம்; நான் சித்து; நாசிகத்தைக் கொண்டு கந்தத்தை
யறிகின்றது மனது, மனதுக்குச் சாக்ஷி நான், சிவம் வேறு நான் வேறல்ல.
நாசிகமும் கந்தமும் மனதும் அழிய நானழியாமல் பாசத்தைப் பின்னிட்ட
படியால் நான் சிதானந்த ரூபன். நாக்கு நானல்ல; நான் சித்து; நாக்கு ஜடம்,
நாக்கைக் கொண்டு ருசியை யறிகின்றது மனம்; மனதுக்குச் சாக்ஷி நான். சிங்வ
லையும் ருசியும், மனமும் அழிய நான் அழியாதபடியால் நான் நித்தியானந்தன்.
பிராணவாயுவும் நானல்ல; பிராணன் ஜடம்; நான் சித்து; பிராணனைக்கொண்
டறிகின்றது ஆத்மா; அந்த ஆத்மாவே நான். ஆணவம் இருள், மாயைவிளக்கு,
கன்மம் கருக்கலே வெள்ளியோ வென்னு மயக்க அறிவு, கண்-ஆத்மா,
சூரியன்சிவம், பகல் சகலம், இரா கேவலம்; இப்படி அநாதி தொட்டு இன்றள
வும் வரும். சற்குரு ஞானத் தீக்ஷையால் சகல கேவலம் அறும்; அறவே
ஞான சூரியன் உதயமாம். ஆகவே ஆணவ விருள் - நாசத்தை யடையும்
அடையவே, மாயை விளக் கவியும்; அவியவே - மயக் நிரிபு அறும்;
அதனால் ஆத்மா சுவாநுபவத்தைப் பெறும். சிவத்தைவிட ஆத்மா வெ
ன்று நாமம் வருவானேன், சிருட்டியால். ஆனால் சிருட்டிக்கு முன்
சிவ நாசி யில்லையோ? இல்லை யென்றே வேதஞ் சொல்லும். ஆகமம்
உண்டென்று சொல்லுகின்றதே, அது பூருவ காண்டத்திற் சொல்லும்;
உத்தர காண்டத்தில் வேதஞ் சொன்னபடியே சொல்லும். சிவ பே த
மெல்லாஞ் சிவ மென்று திவ்வியாகமஞ் சொல்லும். அதற்கு முன்னே

வேதஞ் சொல்லும்; சந்திரனிடத்திலே யிருக்கின்ற களங்கத்தைமுய லென் றும் மா னென்றும் ஆல விருக்ஷ மென்றும் பூமிச் சாயை யென்றும் பல வாய்ச் சொல்லுவ தன்றிப் பிரத்தியக்ஷமே பிடிபடாமல் மயங்கு மென்னில் அநாதியிலே விளைந்த விருத்தாந்தம், நீ சிவமாய் நின்றுற் றறியு மன்றிச் சிவனுய் நின்று பார்க்கு மளவும் தோன்று தென்பதே சித்தாந்தம். ஒரு குள வியாற் கிடத்துக்குக் கிடத்துவம் போய்க் குளவி சிந்தனை முற்ற முற்றக் குளவியான தன்மையும், ஒரு பாடாணஞ் சிற்பலல் வேதாங்கப்படி செய் யத் தெய்வமான தன்மையும், ஒரு விழல் ஆறு அமாவாசி பறித்துப் பறித்து கட விலாமிச்சியான தன்மையும் போல சிவன் தீக்கையாலுஞ், சிவ ஞானத் தாலும் சிவ மாவன். சிவன் மூத்தர்கள் உலகத்தோடு கூடியுங் கூடாமல் எப் படி யிருப்பார்? தாமரை யிலையுந் தண்ணீருஞ். சேறும் பிள்ளைப் பூச்சியும், புளியம் பழம் ஓடும் போலும் நிற்பர். சிவ ஞானியைப் பிராரத்தம் வாதிக் குமோ வாதி யாதோ? வெகு முகத்தில் வாதிக்கும்; அக முகத்தில் வாதி யாது. அக முகமாலுல் வெகு முகம் வருமோ? அது தான் பிராரத்த வாசனை. இந்த வாசனை கிருஷ்ணர், சீராமர், சுகர், வாமதேவர், நந் தி, பிருங்கி, வதிட்டர், வாமீகி, இவர்க ளிடத்திலுங் காண்க

சிவ யோகிகள் சிவாலய தரிசனஞ், குரு தரிசனஞ், சங்கம தரிசனஞ் செய் வாரோ? ஜீவனே ஆலயமாகவும், சிவமே குருவாகவும், அறிவே சிஷ்யனாக வும் தரிசிப்பர்: தான் சிவாகாரமாவதே சங்கமமாகவுந் தரிசிப்பர்; சிவா லயமாகவுந் தரிசிப்பர். கடைசாரஞ் சீவாத்மாவே பரமாத்மா, பரமாத்மாவே சிவமாலுற் சைவ சித்தாந்தம் ஒப்புக் கொள்ளுமோ? பூருவ காண்டத்திற்குத் தள்ளுபடி, உத்தர கண்டத்திற்குச் சம்மதம்.

தச வழக்குச் சிந்தனை.

ஆலல் மித்தை யென்றல் ஆகம சித்தாந்தம் என்னமாய் முடியும்? மல சத்தி யிறந்தும், மலம் அப்பிராகாசமா யிருக்கு மென்றதுஞ் சரியோ? என் தகப்பன் செத்தது தெய்வமா யிருக்கின்றனென்றும், வீம னெறிந்த யானை ஆகாயத்திலே தோற்றி ஒன்றரை முழ மின்னைக்கு மென்றும், இந்த மரத்திலே பேயிருந்தது, இப்போது சிறிது காலமா யிறந்திருக்கின்றதென் றும், கலியுக அந்தத்திலே கற்கோழி கூவு மென்றும், பொய் வழக்குப் பல விதம்; இது போ லாமென் றறிவாய். இருள் போன பிறகு இருட் டுண் டென்னில் சொல்லல வன்றிப் பொருளில்லை. உண்டோ வென்னில் உனக்குண் டெனக் கில்லை என்பதே சித்தாந்தம். 'அறிந்த விடத்தில்லை யறியாமை தன்னைப், பிறிந்தபினும் பேசல் பிழை யன்றே.' நா மார் என்னும் ஞானமே சமயாதீத ஞானம். இந்த ஞானத்தால் சுகர் வாம தேவர் வதிட்டாதி கபில னீறுய விருடிகளும், சம்பந்தர் முதல் மாணிக்க வாசக னீறுய மகத்துக்களும் முத்தி யடைந்தார்கள். தெய்வ மென்பது பொது. தெய்வத்தை யார் கண்டவர். கைலாயம் பொன் னெயில் வட்டஞ் ஸ்ரீரங்கம் திருப்பாற் கடல் சகஸ்ரதம் இவை ஒரு

காலங் தோன்று மொரு கால மழியும்; ஒரு தெய்வம் ஒரு தெய்வமாகியும் போயும் வரும். ஆனற் றெய்வ நிச்சய மில்லையோ வென்னில், தெய்வ நிச்சயம் தெய்வம் அறியாதவனுக்கு. நாமே சித்து, சிதாநந்தன், நிவ்விய சொரூப னென்று கண்டவன் எந்தத் தெய்வத்தை வணங்குவான்? எந்தத் தெய்வத்தையும் வணங்கான்? ஆகையாற் சிறு பிள்ளைகள் தெய்வங்களைக் கொண்டாடுதல் போல, அறி வில்லாப் பெரிய பிள்ளைகளுந் தெய்வத்தை யாராதனை பண்ணுவார்க ளென்ற றறி 'தானே சிவ மல்லாற் றனிச்சிவம் வேறில்லை' யென்னுந் திரு வாக்கே எறு கடைசி ஆகம சித்தாந்தம்.

குரு மரபு சிந்தனை.

அநாதியே ஆணவ சம்பந்தம், இயற்கைச் சம்பந்தம் அன்று; செயற்கைச் சம்பந்தமே. சிவ னுண்டான போதே சிவத்வ முண்டாயிற்று. வேறு ண்டான போதே புலச் சேரி யுண்டானற் போலும். சமுத்திர முண்டான போதே கரிம் புண்டானற் போலும். செம் புண்டான போதே களிம் புண்டானற் போலும். மேக முண்டான போதே மழை யுண்டானற் போலும். இப்படி ஆயிர முவமை யுண்டு. சிவனுக்கு சிவனவன் சாமர்த்தி. 'திசையாருஞ் செம்பிரதக் குளிகையிற்பொன் னதுபோற் சிவனுமெய்ந் ஞானத்தாற் சிவத்துவத்தைப் பெறுமே'. சிவனுக்கு மல மாயை கன்ம மூன்றும் அநாதி யியற்கை யன்று, அநாதி செயற்கை யென்றே சித்தாந்தம். செம்புக்குக் காளிதமும். நெல்லுக் குமியும் அநாதி செயற்கை யெனக் கொள்க. " திஷ்டே பூர்வ மாந்ம யேகமேவ " ஜீவன் முத்தன் புசித்த தெல்லாஞ் சிவன் புசித்த தென்று வேதாகமங்கள் பிரத்தியக்ஷமாய்ச் சொல்லுகின்றதே யென்னிற், பத்தி காண்டத்திற் சொல்லும்.

அநுபவ சந்திரிகை.

ஸதம்ருதெஷு நிஷாதஷடஜம் நிஷாதமதெஷு நிதிதர்ஷபஜம் ।
நிதிதர்ஷபதெஷு நிஷாதகாந்தரம் நிஷாதகாந்தெஷு ஜீவநாடிஃ ॥

என்னு மொழுங்கு வந்த காலத்தில் கன்ம மொழியும். ஒழியவே, மகா வாக்கியத்தில் விசுவாசம் வரும். சந்தாநத்திலே விருப்ப மில்லாதவனுக்குத் தாரத்தின் மேலே விருப்ப மில்லாதது போலும், வேத விருப்பற்றவனுக்கு வேத வாக்கிய விருப் பெங்ஙனம் வரும்?

ஸாரஸ்வதஸ்ய ஸாரஸ்யமதஸ்ய மதஸ்ய ஜிஹ்வா
ஸ்ய । ஸாரஸ்வதாகஸ்ய தரஸ்வஜஸ்ய தஸ்யை ஸ்ரீ ஸாரஸ்வை நமஃ ॥

மகா வாக்கிய மறிந்தவனே ஞாநி, மற்றைய மந்திரங்க ளறிந்தவன் ஞாநி யன்றே வென்னில், " சத்த கோடி மகா மந்திரஞ் சித்த விப்பிரம காரணம் " என்றமையால், அந்த ஞாநி ஞாநி யன் றென்பதே சித்தாந்தம். இம்மந்திரப் பஞ்சாக்ஷரம், பிரணவம் அசபை மூத்தி வறி யல்லவோ வென்னில், மூத்தி பலவும் பகர்ந்தோம் பக்குவத்துக் கீடாய். " ஒருவசை மாகவே

முடிந்தபொரு ளுலைத்தோ மொன்றுகக் காண்பதுவே காகி யின்னும் பலவாய்ப், பெருவகை மாகமீ பலபடக்கேட் டாலும் பின்னுநாம் நிகழ்த்து வது மிந்தவுப தேசம், திருவகைநஞ் சமுதாயம் பலபொருளும் விளக்கும் தமி மாரு தேகமாய்த் தானேதா னுகி, நிருவகை மாய்ஞான மோகமொன் றுமின்றி நில்லாத நினையன்றி நின்றநிலை நிலையே" மகா வாக்கியத்தில் அறிவதத்துக்காக வந்தது அத்வைதம். அத்வைதம் துவிதக் கலப் பென்பாரு முளர்.

திரு முகப் பாசுரம்.

ஒன்றே பரமதுமீ யுற்றுணரி லென்று, நானேநீ தானே யென் றுனக்கு நான வின்றேறும், மறைப் பெல்லா நீங்கினவிடமும் மறைப்பு நீங்க வே யீசான் வேறல்ல நாமே யீசா வனன்னும் போராநந்தம் அபரிமித மாய்ப் பெருகும். நிர்ச்சஞ்சலமான வாத்மாவே சர்வ வுபாதி சூன்யரான பராபரவத்து, 'நாற்றமிகும் பூமாலை நற்குரங்கின் கைகொடுத்தாற், போற்றி மணங் கொள்ளாவாம் புத்திதனக் கில்லாமை, வேற்றொருவர் காணுத வேதாந்தத் துட்பொருளோத், தேற்றமிலி கைக்கொடுத்தேன் றேறுவனே தேறுனே".

மரபுவிளை.

'அஞ்ஞானத்துக்குச் சாதகி பூதம் நாமென் றறியின் அஞ்ஞானமும் மில்லை, நல்வினை தீவினையாகிய விலங்கு மில்லை, அதற்கு முன்னே நாக சொர்க் கமு மில்லை'.

என்பன வாதிச் செய்யுட்களில் வேதத்தையும், வேதாந்தத்தினையும், வேதாந்தப் பெரியார்களையும், புகழ்ந்து கொண்டாடியும், வேதாந்த சாஸ் திர சித்தாந்தம் முத்தியில் ஒரு பொருளே புண்டென்ப தென்றும், அஃதே தமக்கு உடன்பா டென்றும், பாசம், மலம், ஆணவம், அஞ்ஞானம், பிரபஞ் சம் என்பன முத்தியில் அத்தியந்தாபாவ மடைகின்றன வென்றும், ஆகம சித்தாந்தமும் முத்தியில் ஒரு பொருளே யுள்ளது என்று கூறுகின்ற தென் றும், அதற்கு முரண் கூறுவோரைப் பழித்தும், மும்மூர்த்திகளைச் சமப் படுத்தியும், ஜகந் நாஜாவைப் பிரம்ம ஞானி யென்றும், தென்மொழிச் சிவ ஞானபோதத்திற்கு விரோதமாய் ஆத்மாவே சிவம் என்றும் முத்தியிற் கலத் தல் கூடா தென்றும், பாச மிருக்கின்ற தென்பது முயற் கோடு போலச் சொல் லளவே யென்றும், அதிகாரி பேதத்தாற் பத்தி செய்யும் மந்தர்கட் குப் பாச முண்டென்று பத்திகாண்டம் சொல்லிற் றென்றும், சைவர்கள் நிந்திக்கும் விஷ்ணுவையும், விஷ்ணு பக்தர்களையும் புகழ்ந்தும், இன்னும் பலவாறு பற்பல விஷயங்களைக் கூறியிருப்பவும் அதனை யுணராது, 'சைவ சித்தாந்தமே யவர் கொள்கை' யெனத் தேற் றேகாரங் கொடுத்துக் கூறி னர். இதுகாறும் யாங் காட்டிய அவாது செய்யுட்களால், அவர் சாத்திய மாய அத்வைதக் கொள்கை யென்னும் வேதாந்தக் கொள்கையை யுடை யோ ரென்று நிலை நாட்டப்பட்டமையின், கேவல சைவ சித்தாந்தி யென்

று சிவ ஞான வள்ளலாரைக் கொள்ளா தொழியாக. சிவ ஞான போத பாஷ்யத்தில் மூத்தித் தலையிலும், பெத்த தலையிலும் முப் பொருள் நித்திய மென்று, யாங் காட்டிய வாக்கியங்கள் அறியக்கின்றனவாயின், "இவ்வா றே சிவ ஞான போத முதலிய சித்தாந்த சாஸ்திரங்கள் போதிக்கின்றன" வென்று, மூத்தி தலையில் இரு பொருள் நித்தியம் கூறினவாயின், "அவை சிந்தாந்தம்' என்னுங் தோல் விந் தாகத்தை யடைந்தனர். முன்னர் இவற்று பக்கத்தில் 'மல சத்திக்குக் கே வண்டு, மல சத்தியின் பேட்டினால் மலத்தி னின்றும்' என் றுள்ள வாக்கியங்களால், சத்திக்குக் கேடு மண்டி மலத் திற்குக் கேடின் றென்றும், மண்டு 'முத்தியி னுயி ருண்ண மல மில்லை' யென்ற வாக்கியத்தால், மலத்திற்கு நாசு முன்னே யென்றும் கூறினின்றமை யின், 'மாறு கொளாக் கூறலி' என்னுஞ் சூத்திரத்தை மீறினர்..

10. 'இறப் பிலா இந்த மோகம், என்ற தற்கு வேறுபட்டுச் செய்யுளுக்கு இவரும் இவர் சார்பினரும் என்ன பொருள் கொள்கின்றனர்" என்கின் றார்.

"நல்லது சிறுவரி யுரையை நாணது, வெல்லுவன் கேட்குறி தாயம் செய் மோகமீ, வெல்லலா மோகத்தால் சுகத்தின் வேறாம்பி, மல்லல்லா வரிறும் படைத் தென்ன வந்தறும்"

ளாயுக வுத ஸுப ஹரஜ விபரிதுவலி கைவிடி ஷ ।
ஸு ஷவிதக விபத ஸுவிசாரஜ்ஜை கூடுவ வரிஷ்டுவலி ॥ 5

ஹ ஜஸ்ரு ஜாஹதஸ்ரவுஸ்ரு ஜா குஸ்ரவுஸ்ரகாப வண்டுவக ।

"இறப்பிலா விந்த மோக மிலையுரி வென்ன வின்றி, மறப்பதே நல்ல தென்று மதித்தயர் மதந்தி ணுக்குத், திறப்படக் காணப் பட்ட தில் லெனச்சித்தி ரூலே, யுறப்படு மெப்போ தப்போ தயர்பா சுகம தாமே".

ஜவாகஃ ஸரணம ஸுவிபர ஜிஷ்ரு விஸ்ரவணம வாப்ரு ॥ 6

கூஸ்ரும் ஹாஷீத் வொவிபக ஜிதுவிஸ்ர கூஸ்ரஸ்ரோஜக்ரு ।
ஸுவெஹம விஷ்ருகூஸ்ரு தென்ர ஸ்ரபாதிவிடுணை நிவ்ரக்ரு ॥ 7

என்னும் செய்யுளி னுள்ள, 'இறப்பிலா மோகம்' என்றதற்கு நித்திய மென்று பொருள் கொண்டு, சைதாந்திகள் 'மோகத்தைத் நித் திய மென்று கொள்ளுகின்றார்களா? இன்று' என்று வினவு கின்றார். மாயை, அஞ்ஞானம் என்னுங் காரணங்களே மோக மென்று கொள்ளாத வேதாந்திகள், அந்தக் காரணத்தின் காரியமான மோகத்தினை நித்திய மென்று கொள்வார்களா? "நல்லது" என்னுஞ் செய்யுளுக் குள்ள சுலோகத்தின் கண் 'சம்மோஹம்' என்னும் பதத்தை, மொழி பெயர்ப் பாசிரியர் எதி ரைத் தொடை நோக்கி யதவுதித்தனர். அல்லது, 'அபாவ மாணம்' என் னும் சொல்லுக்கு விசேடமாக 'இறப் பிலா மோகம்' என மொழி பெயர்த்

தனென்றுணர்க. 'நித்தியம் போலுங் காணப்படும் இந்தச் சகத்தை' என்பது அதன் பொருளாம். வடநூல் வியாக்கியானத்தின் பொருள் 'திருஷ்டவிஸ்மரணத்தை' யென்பதாம். இது போன்றே, படலக்காரரும் இந்நூலில் 'ஈனமில்லை வாகமமர்க்கு' என்னுஞ் சொல்லை யெடுத்துக் கூறித், தமக்கு அநுகூலம் வேதாந்தத்தி லிருப்பதாகச் சாதிக்க நினைத்துப் பன் முறை யெழுதி, மூலத் தின்றென்று கண்டன மிறுக்கப் பெற்ற பின் பேசாது மௌன முற்றனர். இவரும் அவர் போன்றே தென் மொழி மாத்திரம் ஒரு சிறிது கற்றவ ராகலின், மொழி பெயர்ப் பாசிரியர் எதுகைத் தொடை மோனைத் தொடை நோக்கிக் கொடுத்த அடைப்பதங்க ளெல்லாவற்றையும், தமக்கு ஒப்புயர் வற்ற பெரியதோ ராதார மெனக் கருதி வலாகின்றனர். யாம் காட்டிய சுலோகங்களால் அது நிராதார மானமை காண்க. மூத்தியில் மூத்தாத்மாக்கட்குப் பாச மில்லை யென்று கூறுமிவர், வேதாந்திகள் மோகமாய சகத்தை நித்திய மென்று, கூறுகின்றார்க ளென்று கூறுதற்கு, "இறப்பிலா இந்த மோகம்" என்னுஞ் செய்யுளை வரைந்தனரோ? வேதாந்திக ளிவரினுங் கூரிய புத்தி யுடையவர்களாகலின், இறப்பிலா மோகமாய சகத்தையும், பதித்தன்மை பசுத்தன்மைகளையும் நித்திய மென்று கொள்ளாது, சேதநப் பொரு ளொன்றே நித்திய மெனக் கொள்ளுகின்றன ரென் றுணர்வாராக.

11 "எலாதாகவே யென்ற பின்னர் பொய்யே யென் றங்கீகரிக்க நேரும் என்றது எத்துணைப் பொருத்த முடைத்து?" என்றனர். 'நான் கருடன் என்னும் பொய்யாகிய பாவனையினுல் பிறர்பாலுள்ள விட நீக்குத லெவ்வா றேலும்? எலாதாகவே, கருட பாவனையின், பலன் பொய்யே யென் றங்கீகரிக்க நேரும். அங்ஙனம் பொய் யென்று நம் கண்பர் அங்கீகரிப்பரா? அங்கீகரியாராகவே, பொய்யாகிய கருட பாவனையினுலும், மெய்யாகிய விட நீக்கங் கூடு மென் றுரையிற்று.' என்று குட்டுக் கோலி வெழுதியிருக்க, பிழை திருத்தத் தண்டுப் பத்திரத்தில் உள்ள 'யிச்சபலன்' என்றதைக் கூட்டிப்படிக்கு மறிவில்லாது 'எத்துணைப் பொருத்த மூடைத், தென்று எழுதினர்? அஃதோ டமையாது, "சுவாமியார் தர்க்க சாஸ்திரத்தில் வல்லவர் போன்று தம்மைப் பல விடங்களிலும் வியந்து கொள்ளுகின்றனரே. இனி யேனுங் கவனித் தங்கீகரிப்பாரா?" என்று பிழை திருத்தத்தை யுணரும் உரனிலாத் தேவாணும் பிரியாய இவர் எங்ஙனம் கவனித்து நடக்கும்படி யாருரைத்தனர். பிற குணர்ந்த பிழை திருத்தத்தினை யிவ ரறியாமையின் 'அந்நாதம்' என்னுந் தோல்வித் தானத்தை யடைந்தார்.

12 "இவருக்குத் தாயுமான சுவாமிகள் மீது இத்துணைக் கோபம் வந்தமைக்குக் காரணம் என்னையோ? தாயுமான சுவாமிகள் திரு மூல நாயனார் போலவே, வேதாந்தஞ் சித்தாந்தம் இரண்டனையுஞ் சமரசமாகக் கொண்டு சித்தாந்த நெறியே சென்றவர். 'சிவ ஞானிக ளென்று சொல்லித் தம்பட்டமடிக்கு' மென்று எனனுஞ் செய்தது இவர் மதத்தைக் கண்டித் திருத்தல்

று சிவ ஞான வள்ளலாரைக் கொள்ளா தொழிவாராக. சிவ ஞான போத பாஷ்யத்தில் முத்தித் தலையிலும், பெத்த தலையிலும் மூப் பொருள் நித்திய மென்று, யாங் காட்டிய வாக்கியங்கள் அறிவிக்கின்றமையின், " இவ்வா றே சிவ ஞான போத முதலிய சித்தாந்த சாஸ்திரங்கள் போதிக்கின்றன " வென்று, முத்தி தலையில் இரு பொருள் நித்தியங் கூறினமையின், " அவ சித்தாந்தம் " என்னுந் தோல்வித் தானத்தை யடைந்தனர். முன்னர் 3-வது பக்கத்தில் 'மல சத்திக்குக் கேடுண்டு, மல சத்தியின் கேட்டினால் மலத்தி னின்றும்' என்றுள்ள வாக்கியங்களால், சத்திக்குக் கேடே யன்றி மலத் திற்குக் கேடின் றென்றும், ஈண்டு 'முத்தியி லுயி ருண்டு மல மில்லை' யென்ற வாக்கியத்தால், மலத்திற்கு நாசமுண் டென்றும் கூறுகின்றமை யின், 'மாறு கொளக் கூறல்' என்னுங் குற்ற முடையவ ராயினர்.

10. 'இறப் பிலா இந்த மோகம், என்ற ஞான வாசிட்டச் செய்யுளுக்கு இவரும் இவர் சார்பினரும் என்ன பொருள் கொள்கின்றனர் " என்கின் றார்.

" நல்லது சிறுவரீ யுரியை நானது, சொல்லுவன் கேட்குதி துயர்செய் மோகரீ, வெல்லலா மோகந்தான் சகத்தின் வேறன்றி, மல்லல்வா னிறம் பலடத் தென்ன வந்துறும் "

ஸாயுத வத ஹர ஆஜ பொஹ்யாவி கயொஜி தெ ।
ஸ ரிதந பெத ஸம்மோஹமிம் உதிர கரிஷ்யஸி ॥ 5

ஹ ரிஸ்ய ஜாதிஸ்யாவ்ய ஜாதஸ்யாகார்ய வணுஸ்வச் ।

" இறப்பிலா விந்த மோக மிறையும்மீட் டெண்ண மின்றி, மறப்பதே நல்ல தென்று மதித்துயர் மருத்தி னுக்குத், திறப்படச் காணப் பட்ட தில் லெனச்சித்தி ரூலே, யுறப்பெறு மெப்போ தப்போ துயர்பா சுகம தாமே".

அவோசந் ஸரணம் ஸாயொ பிஹ்ரு விஸ்ரவணம் வாரு ॥ 6

ஏஸரும் காஸீகி யொபெத பிதரொ ஏஸரும்ஜாதுந் ।
ஸஸைஹம் வெதஹுதெஹா வ்ரஹ்மநிவாணமிவ்ரு தீ ॥ 7

என்னும் செய்யுளி லுள்ள, ' இறப்பிலா மோகம் ' என்றதற்கு நித்திய மென்று பொருள் கொண்டு, வேதாந்திகள் ' மோகத்தை நித் திய மென்று கொள்ளுகின்றார்களா? இன்று? என்று வினவு கின்றார். மாயை, அஞ்ஞானம் என்னுங் காரணங்களையே நித்திய மென்று கொள்ளாத வேதாந்திகள், அந்தக்காரணத்தின் காரியமான மோகத்தினை நித்திய மென் று கொள்வார்களா ? " நல்லது " என்னுஞ் செய்யுளுக் குள்ள சுலோகத்தின் கண் 'சம்மோகம்' என்னும் பதத்தை, மொழி பெயர்ப் பாசிரியர் எது கைத் தொடை நோக்கி யநுவதித்தனர். அல்லது, ' அபுநர்ப் மரணம் ' என் னும் சொல்லுக்கு விசேடமாக 'இறப் பிலா மோகம்' என மொழி பெயர்த்

தனரென் றுணர்க. 'நித்தியம் போலுங் காணப்படும் இந்தச் சகத்தை' என் பது அதன் பொருளாம். வடநூல் வியாக்கியாநத்தின் பொருள் 'திருடிய விஸ்மாணத்தை' யென்பதாம். இது போன்றே, படலக்காரரும் இந்நூ லில் 'ஈனமில்லை வாகமர்க்கு' என்னுஞ் சொல்லை யெடுத்துக் கூறித், தமக்கு அநுகூலம் வேதாந்தத்தி லிருப்பதாகச் சாதிக்க நினைத்துப் பன் முறை யெழுதி, மூலத் தின்றென்று கண்டநு மிறுக்கப் பெற்ற பின் பேசாது மௌந முற்றனர். இவரும் அவர் போன்றே தென் மொழி மாத்திரம் ஒரு சிறிது கற்றவ ராகலின், மொழி பெயர்ப் பாசிரியர் எதுகைத் தொடை மோனைத் தொடை நோக்கிக் கொடுத்த அடை ப்பதங்க ளெல்லாவற்றையும், தமக்கு ஒப்புயர் வற்ற பெரியதோ ராதார மெ னக் கருதி வரைகின்றனர். யாம் காட்டிய சுலோகங்களால் அது நிராதார மானமை காண்க. முத்தியில் முத்தாத்மாக்கட்குப் பாச மில்லை யென்று கூறுமிவர், வேதாந்திகள் மோகமாய சகத்தை நித்திய மென்று, கூறுகின் ரூர்க ளென்று கூறுதற்கு, "இறப்பிலா இந்த மோகம்" என்னுஞ் செய் யுளை வரைந்தனரோ? வேதாந்திக ளிவரினுங் கூரிய புத்தி யுடையவர்க ளாகலின், இறப்பிலா மோகமாய சகத்தையும், பதித்தன்மை பசுத்தன்மை களையும் நித்திய மென்று கொள்ளாது, சேதநப் பொரு ளொன்றே நித்திய மெனக் கொள்ளுகின்றன ரென் றுணர்வாராக.

11 "எலாதாகவே யென்ற பின்னர் பொய்யே யென் றங்கீகரிக்க நேரும் என்றது எத்துணைப் பொருத்த முடைத்து?" என்றனர். 'நான் கருடன் என்னும் பொய்யாகிய பாவனையினால் பிறர்பாலுள்ள விட நீக்குத லெங்வா றேலும்? எலாதாகவே, கருட பாவனையின், பலன் பொய்யே யென் றங்கீகரிக்க நேரும். அங்ஙனம் பொய் யென்று நம் நண்பர் தங்கீ கரிப்பரா? அங்கீகரியாராகவே, பொய்யாகிய கருட பாவனையினாலும், மெய்யாகிய விடநீக்கம் கூடு மென் றுயிற்று.' என்று குட்டுக் கோனி லெழு தியிருக்க, பிழை திருத்தத் தண்டுப் பத்திரத்தில் உள்ள 'பிள்பலன்' என் றதைக் கூட்டிப்படிக்கு மறிவில்லாது 'எத்துணைப் பொருத்த மூடைத், தென்று எழுதினர்? அஃதோ டமையாது, "சுவாமியார் தர்க்க சாஸ்திரத் தில் வல்லவர் போன்று தம்மைப் பல விடங்களிலும் வியந்து கொள்ளுகின் றனரே. இனி யேனுங் கவனித் தங்கீகரிப்பாரா?" என்று பிழை திருத் தத்தை யுணரும் உரனிலாத் தேவாரும் பிரியராய இவர் எங்ஙனம் கவனி த்து நடக்கும்படி யாருரோபித்தனர். பிற ருணர்ந்த பிழை திருத்தத்தினை யிவ ரறியாமையின் 'அந்நாநம்' என்னுந் தோல்வித் தாநத்தை யடைந்தார்.

12 "இவருக்குத் தாயுமான சுவாமிகள் மீது இத்துணைக் கோபம் வந் தமைக்குக் காரணம் என்னையோ? தாயுமான சுவாமிகள் திரு மூல நாயனார் போலவே, வேதாந்தஞ் சித்தாந்தம் இரண்டனையுஞ் சமாசமாகக் கொண்டு சி-த்தாந்த நெறியே சென்றவர். 'சிவ ஞாநிக ளென்று சொல்லித் தம்பட்ட மடிக்கு' மென்று வனனஞ் செய்தது இவர் மதத்தைக் கண்டித் திருத்தல்

கொண்டு போலும். திரு மூல நாயனாரைப் பெரியா ரென்று கொண்டது ஜமீந்தாராகிய பூ மான் அள அரு. அருணாசலஞ் செட்டியா ரவர்கள், திரு மந்திரத்தைப் பரமப் பிரமாணமாகக் கொண் டொழுகுவது பற்றியா? அல்லது உண்மையா?" என்கின்றார்.

'நம் நண்பர் தம்பட்ட மடிக்கும் தாயுமான சுவாமிகள்' என்று சூட்டுக் கோல் சுடுகின்றமையின், தம்பட்ட மடித்தற்குக் கருத்தா, நண்ப ராவ ரேயன்றித் தாயுமான சுவாமிக ளன்றும். "நாம் டொய்யெனத் நம் பட்ட மடியே" யென்று அவர் கூறியிருக்கின்றனர். நும்மவர்மீது கோபமே யன்றித் தாயுமான சுவாமிகள் மீது சோப மின்றும். திரு மூல நாயனார், வீர சைவக் கொள்கை யுடையராய் 'சிவாத்துவிதம் அக்கிய வாத சைவம்' என்னுஞ் சித்தாந்தத்தை யவலம்பித்தவ ரென்பது, சமஸ்கிருதத்தி லுள்ள மந்திர மாலிகா என்னும் நூலினாலும் அவரது சரித்திரப் புத்தகங் களினாலும், அதன் மொழியி லுள்ள திரு மந்திரம், வீர சைவக் கிரந்த மூத லிய வற்றாலு மூணரலாம்.

வேதாந்தம் சித்தாந்தம் இரண்டனையுஞ் சமரசமாகக் கொண்டு என்னுஞ் சொற் பொருளை யாராய்வாம். வேதாந்தத்தோடு சித்தாந் தத்தைச் சாரவைத்தலால், சமரசமா? வேதாந்தத்தைச் சித்தாந்தத் தோடு சார வைத்தலாற் சமரசமா? வேதாந்தஞ் சித்தாந்த மிரண்டையும் சகட சக்கரம் போல் கொள்ளுதலாற் சமரசமா? இரண்டாவது பொருந் தாது; மூலமாய வேதத்திற் கூறும் வேதாந்தத்தை, யுரையாய ஆகமத்திற் கூறுஞ் சித்தாந்தத்தோடு சார வைத்தல் பொருத்த முடைய தன்றும். ஒன் றென்று வேதத்திற் கூறிய பொருட்கு மூணி, மூன் றென்று பொருள் கொள்ளுதல் அறிஞர் கூற் றன்றும், மூன்றாவது மன்று:—சகட சக்கரம் போலக் கொள்ளின் வேதாந்தத்துட் கூறிய பிரபஞ்சப் பொரு ளோடு, சித் தாந்தத்திற் கூறிய பசுப் பொருளையு மூடன் கூட்டிப் பொரு ளிரண்டாம், அவ்வாறே சித்தாந்தத்திற் கூறிய பாசப் பொருளை அபாவமாக்கி, பொரு ளிரண்டாய், வேதாந்தஞ் சித்தாந்த மென்னு மிரண்டற்கும் சமரசங் கூறல் வேண்டும். அஃது, சித்தாந்தத்திற்கும் வேதாந்தத்திற்குங் கருத் தன்றும்; அவசித்தாந்தமுமாம். ஆதலால், மூதலாவதே சால்புடைத்தாம். 'தந்தை யொடு மகன் வந்தான்' என்பது போன்று மூலமாய வேதத்திற் கூறும் வேதாந்தத்தோடு, உரையாய ஆகமத்திற் கூறும் சித்தாந்தத்தி லுள்ள பாசத் தை யபாவஞ் செய்து, அபாவஞ் செய்துழிப் பசுத்தன்மை பதித்தன்மை நீங்குதலின் சுத்த சேதன மொன்றே யெஞ்சும். அச் சுத்த சேதனத்திற்கு வேதாந்தத்திற் கூறும் பிரஹ்ம சேதனத்தோடு, சமமாந்தன்மை யிருத்தலின், மூன் மொழியாய வேதாந்தத்தோடு, பின்மொழியாய சித்தாந்தத்திற்குச் சம மாந் தன்மை பொருந்தும். இவ்வாறே, வேதாந்த சித்தாந்த சமரசம் என்று எந்நூலில் வரினும் பொருள் கொள்க. இதனை யுணருந் தவ விசேட மின்றி, மே லெழுந்த வாரியாய், 'சித்தாந்த நெறியே சென்றவர்' என் றெழுதியது

நாமாபிமாந மாத்திரமா யுள்ள வைசவ சித்தாந்திகளே யேமாற்றும் பொருட்டா ?

தாயுமான சுவாமிகள் பாடல்.

அத்துவித வத்துவைச் சொப்ரகா சத்தனியை அருமறைகண் முடி சறையவே' 'விரிவாய பூதங்க ளொன்றொன்டொன் றுபழியும்' 'இந்திரசா லங்கனவு கானலினீ ரெனவுலகம்'. 'மைவிடா தெழுதீல கண்ட குரு வேவிஷ்ணு வடிவான ஞாநகுருவே' 'மலர்மேவி மறையோது நான்முகக் குருவே மதங்கடொறு நின்ற குருவே' 'வேதமே வேதாந்தமே'. 'சொல்ல வேண்டும்வலக நல்ல காதிகதை, சொல்லு மாயையினு மில்லையென், 'தெரிவதற் கரிய பிரம மேயமல சிற்சு கோதய விலாசமே'. இது போன் றே இன்னும் பத்துப் பாட்டு உள்ளன. 'மதவுண்ட வண்டெனவுஞ் சநக நாதி மன்னவர்கள் சுகர்முதலோர் வாழ்ந்தா ரென்றும்' 'ஓதரிய சுகர்போல வேனேனென்ன வொருவரிலை யோவெனவு முரைப்பென்றனே.' 'நான் முகத் தேவே நின்னுரைட்டிய வகிலமாயை, கான்முயற் கொம்பே யென் கோ கானலம் புனலே யென்கோ, வான்முக முளரி யென்கோ மற்றென் கோ விளம்பல் வேண்டும்' 'திடம் பெறவே நிற்கினெல் லாவுலக மும்வந் தேவல்செய்யு மிந்தநிலை நின்றோர் சநகன்முதன் முனிவர்.' 'பாராதி யண்ட மெலாம் படர்கானற் சலம்போற்' 'சகம் பொயெனத் தம்பட்ட மடியே.' இரவுபக னினைப்புமறப் பெனுந்தொந்த மறியார்க ளிதயம்வே தச்சிரமென வாழ்,'அத்துவித வநுபவத்தை யநந்தமறை யின்னமின்ன மறியே மென்னு, நித்தியத்தை நிராமயத்தை நிர்க்குணத்தைத் தன்னருளா னினைவுக் குள் ளே, வைத்து வைத்துப் பார்ப்பவரைத் தாலுக வெந்நாளும் வளர்த்துக் காக் குஞ், சித்தினைமா தூவெளியைத் தன்மயமா மாநந்தத் தெய்வந் தன்னை.' 'பாரனைத்தும் பொய்யெனவே பட்டினத்துப் பிள்ளையைப்போ, லருந் துறக்கை யரிதரிது, 'தவனே பரமு மவனே குருவு, மவனே யகில மனை த்து-மவனேதா, மானவரே சொன்ன லவரே குருவெனக்கு, நானவனுய் நிற்பதெந்த நாள்' 'நேரே மநத்துறவு மப்படியே மாணை விவற்றி, லுனக் கிசைந்த வாவெறன்றே றியோர்.' 'மெய்யைப்பொய் யென்றிடவு மெய்யனை யாப் பொய்யெஞ்சே, பொய்யைத்தான் மெய்யெனவும் போகுமோ - வையமறத், தன்மயத்தை மெய்யெனவே சார்ந்தனையே லாநந்த, மென்மயமு நின்மயமு மே.' 'மதுசூதநன் றங்கையே' 'தந்தைதாய் மகவுமனை வாழ்க்கை யாக்கை சகமனைத்து மெளனியரு டனைத்தபோதே, யிந்திரசா லங்க னவு கானனீரா யிருந்ததுவே யிவ்வியற்கை யென்னை யென்னை' வேதமே வேதமுடி வானமோன' 'நெறிபார்க்கி னின்னையன்றி யகிலம் வேறு நிலை நீர்த்திக் காள்வாலு நீயலாத, குறியாது மில்லையென்றுல் யாங்கள் வேறு கோதையொரு கூறுடையாய் கூறுய் கூறுய்' 'ஏகதே சம்பூர ணத் துக் குண்டோ தான்புகலல் வேண்டும்.' 'ஆறிவா ரென்ன வநந்தமறை யோல மிடும், பேறரிவே யின்பப் பெருக்கே பராபரமே.' 'வாநந்த மண்ணினந்தம் வைத்து வைத்துப் பார்க்க வெனக், காநந்தந் தந்த வரசே பராபரமே.' 'வே

தாந்த வீட்டில் விளக்கே பாபாமே.' 'விளக்குங் தகளினையும் வெதன் னுர் நின்னேத், துளக்கமறச் சிவனென்று சொல்வார் பாபாமே' 'பாராதி நீயாப் பகர்ந்தா லகமெனவு, மாராயுஞ் சிவனுநீ யாங்கான் பாபாமே.' 'வரு வாண்வந் தேதனனல்போன் மன்னியழி யுந்தகத்தை, தெரிவாக வில்லை யென்ற தீரம் பாபாமே.'

'மாயா சகமிலையேன் மற்றனைக்கோர் பற்றுமிலை, நீயாக வென்று வந்து நிற்பேன் பாபாமே,' 'வாணுதி நீயனலே வைத்தானை றை யென்னையு நீ, தானுகச் சொல்லாதே தா சாற்றாய் பாபாமே.' 'மாயையுற தலாம் விணுநீ மன்னுயிர்நீ மன்னுயிர்தோர்ந், தாயுமறி வானதுநீ யன்றோ பாபாமே.' 'தன் னேத் தன்தெதன்னேத் தடுத்தாண்ட தின்கருணைக், தென்னேக்கென்கான் டென்ன டபல வெனந்தாய் பாபாமே.' 'என்று மிருந்துபழக் தென்னேயெனக்களித்த, தென்றும் பாதாதே தா வுரையாய் பாமே.' 'எண்டிசைகீழ் மேலான வெல் லாம் பெருவெளியாய்க், கண்டவிடத் தென்னேயுநான் கண்டேன் பாபா மே.' 'பாலொடு பேயர் பித்தர் பான்மையென நிற்பதுதேவ, நீலமிரு நோனி யர்தஞ் செய்கை பாபாமே.' 'அப்பு மூப்பும் போன்ற வயிக்யபாரா தர்தமக், தொப்புவமை சொல்லவும்வா யுண்டோ பாபாமே,' 'சித்தந் தெளிந் து சிவமாதே லெல்லார்க்குங் தொத்தடிமை யான குடிதான் பாபாமே' வல்லமையே காட்டுகின்ற மாமாயை நாவெறுவ, னில்லையெனி னெங்கெ யிருக்கும் பாபாமே.' 'மூக்குணத்தா லெல்லா முனேக்கப் பிரகிருதிக் தித் குணத்தை நல்கியதா லெந்தாய் பாபாமே.' 'பாசசா லங்களெல்லாம் பற்று விட ஞாகனைவாள் வீசுநா வளங்நாள் வினம்பாய் பாபாமே.' 'மின்னேயை பொய்யுடலே மெய்யென்று நம்பினையோ, நின்னே மறக்கை நரியோ பாபாமே.' 'நித்தியமொன் றில்லாத நீர்க்குமிழி போன்றவுடற், தித்தனே தான் றுன்பமுண்டோ வெண்னே பாபாமே.' 'நூலத்தை மெய்யெனவே நம்பி நம்பி நானுமென்றன், காலத்தைப் போக்கினையென்னை கண்டேன் பாபாமே.' 'அங்கமே நின்வடிவ மானசுகர் கூப்பிடினீ, யெங்குமே னேனென்ற தென்னே பாபாமே.' 'சிற்பரமே தற்பரமே தெய்வச் சுருதிசொன்னை, வற்புதமே யன்பே யறிவே பாபாமே.' 'அத்துவித மான வயிக்ய வுறுபவ மே, சுத்தநிலை யங்கிலையார் சொல்வார் பாபாமே.' 'தானந்த மான சுக நிரு விகற்ப, வானந்த நிட்டையருள் வாயா பாபாமே.' 'சிங்தை மயக்கமறச் சிங்மயமாய் நின்றவுன்னேத், தந்தவனைக் கென்னேயுநான் றந்தேன் பாபா மே' 'மண்ணுனை மாயையெலா மாண்டுவெளி யாகவிரு, கண்ணுறா வுன்கனவு கண்டேன் பாபாமே.' 'நீயாக வென்று நினேப்பு மறுப்புமறத், தாயே யனைவரு டந்தாய் பாபாமே.' 'பூதமுத லைதவனை பொய்யென்ற மெய்ய ரல்லாய், காதலித்த வின்பக் கடலே பாபாமே' 'நீர்க்குமிழி பூணைமத்து நின்ரு லு நில்லாமெய், பார்க்குமிடத் திதன்மேற் பற்றுவை தெந்நாளோ' 'காக்கைகரி தெந்தாய் கழுதைகருகாட் கூடியுண்டு, தேக்குவிருந் தாமுடலைச் சீயென்ப தெந்நாளோ.' 'வேலையிலா வேதன் விதித்தவிந்த் சாலவுடன், மாலையிலா பாமயக்கெதாழிவ தெந்நாளோ.' 'வித்தியா தத்துவங்க ளைழும்

வெருண்டோடச், சுத்தபா போகத்தைதத் தியக்குநா ளெங்நாளோ' 'எல்லா மிறந்தவிடத் தெந்தை நிறைவாம் வழிவை' 'சாலோக மாதி சவுக்கியமும் விட்டகம்பான், மேலான ஞாமவின்ப மேவுநா ளெங்நாளோ.' 'தற்பாத்தி ஞள்ளையுந்ந சாலோக மாதி யெனும்.' பொற்பறிந்தா நந்தம் பொருந்துநா ளெங்நாளோ.' 'ரானற் சலம்போன்ற கட்டழலைப் பொய்தீர, வான மூத வாவி மருவுநா ளெங்நாளோ.' 'வீறியலே தாந்தழுதன் மிக்க கலாந்தவரை, யாறுமுணர்ந் தோதாணர்வுக் கன்புவைப்ப தெந்நாளோ.' 'எனைக்குணி யென்று மியற்வையாய்ப் பின்னு, முனைக்குணை னென்ற வுறுதிகொள்வ தெந்நாளோ.' 'நாம்பிரம மென்ரு னடுவே யொன்றுண்டாமா, றேம்பியெல்லா மொன்ரும்ப் நிகழுநா ளெங்நாளோ.' 'நித்தான நாமென் ஜடத்தைதநா மென்னவென்றுந், சத்தான வுண்மைதனைச் சாரவா நல்லறிவே' 'இருக்காதி மறைமுடிவு மிதயத்துள்ளே, யொருக்காலே யுணர்ந்தவர்கட் கெக்க ஞந்தா வெழியாத வின்பவெள்ள முலவா நிற்கும்.' 'பாராதி பூதநீ யல்லை உன்னிப்பா நிந்திரியங் காணநீ யல்லை' 'யாரா யுணர்வுநீ யென்ரான்,' 'அன்பருக் கன்பான மெய்யன், ஐயனந்த மோக னருட் குருநாதன், தன்பாதந் தென்னியில் வைத்தான் என்னைந்நா னிநீதேன் நந்நீ நானிறந்தேநேன்' 'இறப்பும் பிறப்பும் பொருந்த, னெக் கெவ்வணம் வந்தென்ன றண்ணியான் பார்க்கின், மறப்பு நினைப்புமாய் நின்ற மாயா மதத்தால் வளர்ந்தது' 'என்னையுந் தன்னையும் வேரு உள்ளத் தெண்ணுத வண்ணம்' 'தத்த நிலையே முந்நி முடிவென வாத தர்க்கமும்' 'குறியுங் குணமு மன்றி நிறைவுங் குறைவு மன்றி மறையோன் றென வினம்ப' 'சுகலை யகண்டத் தூவெளி யெல்லாந் திகழவே காட்டுஞ் சின்மய சாகூி' 'அதுநா னெனவே யாற்றிடு மதுபவஞ் சதுர் வேதாந்தத் தன்மையென் றுரைத் தோன்'.

என்பனவாதி செய்யுட்களில் வேதாந்தத்தைப் புகழ்ந்து கொண்டாடி யிருக்கவும், 'இவர் மதத்தைதத் தாயுமான சுவாமிகள் கண்டித் திருத்தல் கொண்டு போலு' மென் றெழுதியது அந் நூலைப் பார்த் தவ்வழி நில்லாக் குறையாலேயாம். ஒருவரை யுலகத்தி லுள்ள எம் மதத்தரும் பெரியா ரென்று கொள்ளல் தகாதாம். பிரமா, விஷ்ணு, ருத்திரன், சிவன், பிரஹ்ம மம், என்பவரையே, அவ்வம் மதத்தர் உயர்த்திக் கூறுவதனை, யேனையர் தாழ்த்திக் கூறுதலின், ஒருவர் பிற ரொருவரைப் பெரியா ரென்று கொள் வது, அவரிடத்துள்ள தமக்கு வேண்டிய நற்குணத் தளவே யன்றி வே றின் ரும். திரு மூல நாயனர் தமது நூலிற் சடாந்தங்களையுங் கூறுமிடத்து, முதலில் வேதாந்தத்தினைக் கூறி, அம் மதத்தின் முக்கிய சித்தாந்தமான "ஞ்வந்தத்அசி" (தத்துவ மசி) என்னும் வாக்கியப் பொருளைப் பிரண்டு பல செய்யுட்களால் 'நீ அது ஆனை' 'நீ அவன்' 'நீ அவனா யிருக்கின்ராய்' என விளக்கி யிருத்தலின், அது கொண்டு அவரை, உண்மைக் குருதோடு, பெரியா ரென்று கொண்டோ மன்றிப் பிறர் கொண்டதற்காகத் தாகூண்ய மும் பற்றிக் கொள்ள வில்லை. ஸ்ரீமாந். அழ. அரு. அருணாசலச் செட்

டியா ரவர்களும் இவ்வாறுய கருத்துப் பற்றியே, கைக் கொண்டார்க ளன்றி, அந் நூல்களையும், வேத வேதாந்த சாஸ்திரங்களாய, மேநாந்து நூடாமணி, கைவல்ய நவநீதம், ஞான வாசிட்டம், விசாரசாகரம் முதலிய நூல்களையும் ஸ்ரீ செல்லப்ப சுவாமிக ளவர்களாய தமது குரோசாரிய ரிட த்து முறையாகப் பாடங் கேட்டும், உணர்ந்தவர்க ளாகலின், பிறர் தாக்ஷண் யத்திற்காகக் கொள்ள வில்லை. கடாவிய இவர், தாம் கொண்ட வேதாந்தத் தைக் கை விட்டு, திருஷ்டப் பிரயோஜனமாய வுபகாரம் கருதிச் ஸ வ சித்தாந்தத்தைக் கைக் கொண்டது போன்று வேதாந்திகளும், ஜமீந்தார வர்களும் கைக் கொண்டார்க ளென்று கருதுகின்றனரோ? அவ்வா றின் றென்று தெள்ளிது ணுணர்வாராக.

13. "பெரிய புராணத்திலும், திரு முறை வகுப்பிலும், எழுத்து மூல மாகவும், சிவாலயங்களில் வழிபாடு மூல மாகவும், திரு மூல நாயனுரைச் ஸைவ சித்தாந்திகள் கொண்டாடுகின்றார்கள் என்பது சுவாமியாருக்குத் தெரியுமா? தெரியாதா? தெரியுமாயின் சொன் மாத்திரையானே கொண் டாடும் என்றது பொருந்துமா? தெரியா தாயின் வாதத்திற்கு வரும்போ தாயினும் தெரிந்து கொள்ள வேண்டாமா?" என்கின்றார்.

'தமது குல குரு வென்று சொன் மாத்திரையானே கொண்டாடுந் திரு மூல நாயனார்'என்று கூட்டுக் கோவில் எழுதியதனைக் குறித்துக் கவல் கின்றார். இவர்க ளெழுத்து மூலமாகவும், வழிபாட்டு மூலமாகவும், திரு மூல நாயனுரைக் குரு வென்று கொள்வது, சொன் மாத்திரையே யன்றி யுண்மைக் கருத்தோ டன்றும். திரு மூல நாயனார் 28 தத்துவங் கொள் வோர் வேதாந்தி யென்றும், 25 தத்துவங் கொள்வோர் மாயா வாதி யென் றுங் கூறியிருக்க, இதனை யுணரும் ஆசூழ்வலி யின்றிப் போகூழ் வலியின் புணர்ப்பிஞல், தென்னிந்தியாவில் பேத வாத சைவமாய, இவர் மதந் தோன்றி ஐந்நூறு வருஷ கால முதல், இவரு மிவர் மாபினரும், வேதாந்தி களை மாயா வாதிக ளென்று மருண்டு கூறி நிந்திக்கின்றமையின், சொன் மாத்திரையே குருவாகக் கொண்டவ ராவர். உண்மைக் குருவாகக் கொண் டிருப்பின், அவர் வாக்கியத்திற்கு மாருக, வேதாந்திகளை நிந்திப்பரா? நீங் கள் தாம் மாயா வாதிக ளென்பதால், 28 தத்துவங் கொள்ளும் யாங்கள் மாயா வாதியாகுங்கால், 36 தத்துவங் கொள்ளு மிவரும் இவர் மாபினரும் மாமாயா வாதியாவர் என்க.

திரு மந்திரம் - இரண்டாந் தந்திரம் - 2-வது. குரு நிந்தை - 531:— "ஓரெழுத் தொருபொரு ளுணராக் கூறிய, சீரெழுத் தாளரைச் சிதையச் செப்பினேர், ஊருடைச் சுணங்கையிப் பிறந்திங் கோருகம், பாரிடைக் கிருமியாய்ப் படிகுவர் மண்ணிலே." 533. "மந்திர மோரெழுத் துரை செய்த மாதவர், சிந்தை செருந்திடத் தீமைகள் செய்தவர், நுந்திய சுணங் கையப் பிறந்து நாறுரு, வந்திடும் புலையராய் மாய்வர்கள் மண்ணிலே." 535. "சன்மார்க்கச் சற்குரு சன்னிதி பெய்வினின், நன்மார்க்க முங்

குன்று ஞாநமும் தங்காது, தொன்மார்க்க மாய துறையு மறந்திட்டுப், பன்மார்க்க முங்கெட்டுப் பஞ்சமு மாமே.'' என்பன வாதிச் செய்யுட்கட்கு இலக்கிய மாவர் இவரு மிவர் மாபினருமேயாம்; குரு வாக்கியத்திற்கு மூலனுய்க் கூறினமையா னென்க. தெரிந்தே சொன் மாத்திரையாகக் குருவாகக் கொண்டாடுகின்றுர்க ளென்று கூறினேம். கொண்டாடுபவர்க ளெல்லாரையும், இவர்க ளுண்மைக் கருத்தோடு கொள்ளுகின்றுர்க ளென் பதற்கு இடனின்று; நீல கண்ட சிவாசாரியர் இவர் கோளுக்கு மாறுய் அபிந்த நிமித்த வுபாதாந காரணங் கூறுகின்றுர். பூரீ அப்பய்ய தீக்ஷித ரவர்கள் சுத்தாத்வைதத்திற்கு மாறுய் சிவாத்வைதங் கூறுகின்றுர்கள். உமாபதி (சிவாசாரியர்) சுவாமிகள், இவர்கள் நிந்திக்கும் பூரீ சங்காசாரிய சுவாமிகளைப் புகழ்கின்றுர்கள். பூரீ மாணிக்க வாசக சுவாமிகளும், பூரீ சம்பந்த மூர்த்தி சுவாமிகளும், இவர் நிந்திக்கும் வேத வேதாந்தங்களைப் பல விடத்தும் புகழ்ந்திருக்கின்றுர்க ளாகலின் என்க. மற்றும், இயற்கையில் பிராமண வருணத்தைத் தூஷிக்கு மிவர்கட்கு, சுந்தரமூர்த்தி நாயனுர், திரு நாவுக் கரசு நாயனுர்களிடத்து மிருக்கும் குரு பாவனை போன்று, பூரீ ஞாந சம்பந்த சுவாமிகளிடத்தும், பூரீ மாணிக்க வாசக சுவாமிகளிடத்தும், பூரீ அப்பய்ய தீக்ஷித ரவர்க ளிடத்தும், பூரீ உமாபதி சுவாமிகளிடத்தும், குரு பாவனை யின் றென்பதனை யாவரு முணர்வர்.

வாதத்திற்கு வருங்கால் தென்மொழி வடமொழிகளிலுள்ள நூல்களை யுணர்ந்து, வாதத்திற்கு வா வழி யறியாது, பிறர்க் கிட்ட சூட்டுக் கோல் நுழைந்து, அச்சூட்டைத் தாமும் பெற்று, அதனல் வினவல் முறை யறி யாது, வினவி யிடர்ப்படு மிவர், பிறரைத் "தெரிந்து கொள்ள வேண்டா மா?" என்று எழுதுதற் கெவ்வா றருக ராவர். தெரிந்தே வாதத்திற்கு வந் தோ மென் றுணர்வாராக.

14. "படிப்பின் கர்வம் பற்றியா? சித்தாந்த நூல்களைச் செவ்வனே தெரிந்து கொள்ளாக் குறை பற்றியா?" என்கிறுர்.

படிப் பின்றியே, கர்வத்தா லொன்றை யொன்றுகக் கூறுங் கர்வ மூடையோரும், நூல்களைச் செவ்வனே தெரிந்து கொள்ளாக் குறை யுடை யோரும், இதுகாறுங் கூறியவற்றலும், இனிக் கூறுமாற்றலும், இவரு மிவர் மாபினருமே யாவர். உண்மையை யுள்ளபடி யெழுதினே மன்றிக் கவர்த்தாலும் படிப்பின் குறையாலு மன்றும்.

15. "சமஸ்கிருத ஞாந மூடைய உமாபதி சிவாசாரிய சுவாமிகள், சமஸ்கிருதத்தி லொரு நூலேனுஞ் செய்யாது, தமிழிற் பல நூல்கள் செய்து வைத்தமைக்குக் காரண மென்னை?" என்கின்றுர்.

சூட்டுக் கோலில், உமாபதி சிவாசாரியர் சமஸ்கிருதத்தில் பௌஷ்க ராகமத்திற்கு வியாக்கியானஞ் செய்திருக்கின்று ரென்றும், பூரீ சங்கரா சாரிய சுவாமிகளை யதிற் றூஷித்திருக்கின்று ரென்றும் அறைந்திருக்க, அதனை யறியு மறி வின்றி, சமஸ்கிருதத்தி லொரு நூலேனுஞ் செய்யா'

தென்றார். இது தென்மொழிஞரை யேமாற்றற்கா? சூட்டுக் கோலைத் தக் காரிடத்துப் பாடங் கேட்டறியாக் குறையாலா? உரை, நூலன்று என்ப தால், வேதவுரையாய ஆகமம் இவர்க்கு எங்ஙனம் முதனூலாம்? ஸ்ரீ அப் பய்ய தீக்ஷிதரவர்கள் இயற்றிய 104 சிரந்தங்களுள், சிவார்க்கமணி தீபிகை, யின்னே ரன்ன பிறவுரைகளும், அடங்கியிருத்தலின், அவற்றிற்கு நூலென்னுந் தன்மை பொருந்தாதாம். "இதனை விரித்து, சிவாதித்த மணிதீபிகை, சிவ தத்துவ விவேகம், முதலிய நூலுடையார்" என்று சிவ ஞான சுவாமி தமது பாஷ்யத்திலெழுதி யிருத்தலின், இரண்டுரைகளும் நூலெனக் கொண்ட சிவ ஞான சுவாமியும் புகட்டினாவர். சிவ தத்துவ விவேகம் நூலே யன்றி யுரை யன்று என்பதால், அஃதறிவிலி கூற்றாய் முடியும். நூலுக்குச் சிகாமணி மாலை யென்றும், உரைக்குச் சிவ தத்துவ விவேகம் என்றும் பெய ருண்மையின், மொழி பெயர்த்தாரும் அச்சிட்டா ருந் தமோகுண வயத்தராய், "நூலாசிரியர் கருத்தினை நோக்கா, தொரு சூத்திரத்திற் கொவ்வொரு மதமா யுரையுரைக்குவ ரே, யவ்வுரை யதனு ளடுத்தவா சகங்கட், கவர்கருத் தறியா தவரவர் கருத்தி னுட், கொண்ட பொருள்படப் பொருள்கூ றுவரே,.....நூலுரை போதகா சிரியர் மூவரு, மூக்குண வசத்தான் முறைமறந் தனரவரே, யிம் முறை யெல்லா மெவர்மதுத் தறியினு, மவத்தை வசத்தா லலகுவர் திட னே, யதிமதி நுட்பமோ டதிகலை கற்பினும், விதியது வசத்தால் விதி விலக் கயர்ப்பார், ஆகையா லளவிட லரிதே....." என்று இலக்கணக் கொத் தூரைத்தாங்கு, முறை பிறழ்ந் துரைத்தன ரன்க. இதனால், சமஸ் கிருதத்தில் நூல் செய்திருக்க, 'ஒரு நூலேனுஞ் செய்யாது' என்று புகட் டினமையின் புகட்டரும், தம்மதத்தர் உரையை நூலெனக் கொண்டாங்கு, கொள்ளாமையின் 'அவசித்தாந்நம்' என்னுந் தோல்வித்தாக முடையோ ரும், சிவ ஞான பாஷ்யத்தை யறியாமையின் 'அஞ்ஞானம்' என்னுந் தோல் வித்தாந்தை யுடையோரும், சிவஞான பாஷ்யத்திற்கு மாறுபாடாகக் கூறின மையின், 'மாறு கோளாக் கூறல்' என்னுங் குற்ற முடையோருமாயினர்.

"ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் முன்னர் பௌத்த மதத்தினை வெல் லுதற் பொருட்டு, ஏகாத்ம வாதஞ் சாதித்துப் பின்னர்த் தா முய்ய வேண் டிச் சைவ சித்தாந்த நெறியைத் தலைக்கூடி நின்று சைவ சித்தாந்த சம் பந்தமாகச் சில வியாக்கியானங்களும், சிவ வழிபாடுகளும், செய்து வந்த மையால், ஸ்ரீ உமாபதி சிவாசாரிய சுவாமிகள், பின் செய்த வியாக்கியா நத்தை யெடுத் தாண்டனர் என்று ஏன் கொள்ளக் கூடாது?" என்கின் றார்.

பிறரை வெல்லுதற்கு, வேதாந்த நூல் சாதகம் என்கின்றமையின், பகலே யிர வென்று கூறின், மறுமொழி கூறாது, அங்கீகரிக்கும் மாணாக் கனுக்குக் கூறுவது சைவ நூலென்றாகின்றது. அவ்வாறாயின், இவர் மாபினரும் எம்மவரிடத்துச் சரணாகதி யடைந்து, பிறரை வெல்லுதற்கு

வேதாந்த நூலைக் கேட்கலாமே? அவ்வாறு செய்யாமையின் இவர் கூறியது புரட்டாம். வேதாந்தத்திற்குப் பிறரை வெல்லுதற் பயனே யன்றி மோக்ஷ மின் றென்கின்றார். மூலமாய வேதத்திலுள்ள உபநிடதத்திற் கூறும் மார்க்கத்திற்கு, மோக்ஷ மின்மையின், வேதத்தி னுரையாய ஆகமத் திற் கூறுஞ் சைவத்திற்கு மோக்ஷ மெங்ஙனமாம்? அங்ஙன மாமேல், திரு வாசகம், தேவாரம், பெரிய புராணம், திரு விளையாடற் புராணம், திரு மந் திரம் முதலிய மூலத்திற்கு மோக்ஷ மின் றென்றும், அவற்றின் உரையைப் படித்தலாலே மோக்ஷ முண்டா மென்றுங் கொள்ளல் வேண்டும். அங்ஙனம் அறிஞர் அங்கீகரிப்பரா?

"பின், தா மூய்ய வேண்டி சைவ சித்தாந்த நெறியைத் தலைக் கூடி நின்றார்கள்" என்று, குரு, தீக்ஷை, முதலியன வின்றி, வெற் றுரையாகச் 'சைவ நெறியைச் சார்ந்தார்க'ளென்று கூறிய தெற்றிற்கு? சாஸ்திரங் களிற் சைவ குருவும், தீக்ஷையுஞ் சாற்றப்படாமையாலா? குரு, தீக்ஷை, முதலியன வின்றிச் சைவ சாஸ்திரத்தான் மோக்ஷ மடையலா மென்னுங் கருத்தாலா? இவ்வாறு இவர் ஒப்பினும், இவர் மாபின னொப்புவரா?

"சைவ சித்தாந்த சம்பந்தமாகச் சில வியாக்கியானங்களு" மென்றனரே; உம்மையால் வேதாந்தத்திற்குப், "பிரஹ்ம சூத்திர பாஷ்யம், ஈஸா வாஸ்யோபநிஷத் பாஷ்யம், கேநோபநிஷத் பாஷ்யம், கடோபநிஷத் பாஷ்யம், பிரச்நோபநிஷத் பாஷ்யம், முண்டகோபநிஷத் பாஷ்யம், மாண்டூக்கி யோபநிஷத் பாஷ்யம், ஐதரேயோபநிஷத் பாஷ்யம், தைத்ரீயோபநிஷத் பாஷ்யம், சாந்தோக்கியோபநிஷத் பாஷ்யம், பிருகதாரண்யகோபநிஷத் பாஷ்யம், நரசிம்ம பூர்வதாபநீயோபநிஷத் பாஷ்யம், பகவத்கீதா பாஷ்யம், விஷ்ணு சகஸ்திர நாம பாஷ்யம், சுத்த சுஜாதீய பாஷ்யம், லலிதா திரிசதீ பாஷ்யம்" என்னும் பதிமூறு பாஷ்யங்களைச் செய்திருக்கின்றார்க ளென்று விளங்குகின்றது. சைவ சித்தாந்தத்திற்குச் சார்பாக வியற்றிய சில வியாக்கியானங்களின் பெயரை யிவர் என் எடுத்துக் காட்ட வில்லை? இருந்தா லன்றே காட்டுவர். கமட ரோமம் போ லில்லாமையாற் காட்ட வில்லை போலும்!

"சிவ வழிபாடு செய்து வந்தமையால்" என்று கூறுகின்றமையின், சிவ வழிபாடு ஆகமத்திற்கே யுரிய தென்று கருதுகின்றனர் போலும்! வேதத்தின்கண் சிவ வழிபாடு முதலியவற்றை விரித்துக்கூறி யிருத்த லின், அதனை நோக்க ஆகமத்திற் கூறிய தொரு நிறைவே யாம். தாந்திரிக வழிபாட்டினும் வைதிக வழிபாடே யுயர் வுடைத்தாம். பிரமாணமாதற்கு நூல் காரணமே யன்றி, வழிபாடு முதலியன காரண மன்றும். வழிபாடு முதலியனவே காரணமாமாயின், வழிபாடு முதலியன வுடையோர், வெள் ளறிவாற் கூறிய மூர் னுரைகளும் பிரமாணமாதல் வேண்டும். இவத்திற்கு மேலொரு சிவ மின்மையால், அச்சிவன் சிவ வழிபாடு செய்யாமையின், அவ ரறைந்த ஆகமம் பிரமாண மன்றுதல் வேண்டும். "ஸ்ரீ உமாபதி சிவாசாரிய சுவாமிகள் பின் செய்த வியாக்கியானத்தை யெடுத் தாண்டனை

வென்று என் கொள்ளக் கூடா " என்று சோதிக்கும் கூறுகின்றார். இங்
ஙனம் சோதிடத்தாற் காரியம் பலிக்குமாமா ? வைஷ சித்தாந்த பரமாக,
வியாக்கியானம் இயற்றி யிருந்தாலன்றோ, " என் கொள்ளக் கூடாது "
என்று கூறுவதும், பௌத்த சமண மதத்தின் வியாக்கியானங்களைச்
சமஸ்கிருத வல்லார்வாய்ச் சாரைகளி யடைந்து முறையாகக் கேட்டு,
என் வடநிலத்துப் பாஷ்யத்தின் அநுவாத மென்று வரைந்திருக்கின்ற
தென வுணர்ந்தனரா ? அப் புத்தகமே அச்சுவாகனை மேற் றிருக்க, எங்ங
னங் கேட்டோ றும் முணருவர் ? " வைதிக வடநிலத்தின் அநுவாதத்
தன்மையால் உபநிஷத்திற்கு வியாக்கியானஞ் செய்பவர்களாயும், மறை
யுமுள்ள, ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளால், வியாக்கியானஞ் செய்யப்
பட்டிருக்கின்றதே யன்றி, சுபாலோபநிஷத் அநுவாதத் தன்மையால்
வியாக்கியானஞ் செய்யப் படாமையின் " என்று உமாபதி சிவாசாரியர்
எழுதியுள்ள வாக்கியங்களை யுணர்ந்தனரா ? வைதிக வடநிலத்துக்கு
அவைதிக தாந்திரிக வைஷ சித்தாந்த பதி பசு பாச நிராகரண சிவாத்துவித
ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் பாஷ்ய மெழுதி யிருக்கின்றார்களா ? இல்
லா திருக்க " பின் செய்த வியாக்கியானத்தை யெடுத்துக் கொண்டால் என்று
என் கொள்ளக் கூடாது " என்று சிறிதேனுங் மிகையாய்ப் பற்று முங் குறி
வழக்க மிகவெடுத்து காட்டும் தன்மையராய் வரைந்து அறிவுக் குறைவி
லாம். படலக் காரர் வாங்கிய சூடு, தமக்கும் வந்து பொருந்தியதாகத்
தள்ளி யெழுந்து குடி குடிதிருத்துக் குன்ற வனைத் துறைக்கனைப் பலிவர்த்
தன் போன்று மதர்ப்பால் முன் பின் யோசனை யின்றித் தூல வறிவால்
சோம லெழுந்த வாரியாய் இருபது கடாக்களை யேவினமையா னன்றே இக்
கட்டாயியால் இத்தனை யிடர் நிலையத்தனர். சமஸ்கிருத நூல் யின்றிய தாம்,
சமஸ்கிருத நூல் விஷயமாகத் தலை யிட்டுக் கொள்ளலாமா ? என்னுஞ்
சத்துவ குண மின்றித் தமோ குண மிகுதிப் பாட்டால், தம்மவர் சென்ற
வழியிலுஞ் செல்லாது, புதிய பாட்டு வழி யொன்றைக் கற்பித்து, " பின்
தூவைத வைஷ சித்தாந்த பரமாகச் செய்த வியாக்கியானத்தைப் பிரமா
ணித்தன வென வென் கொள்ளக் கூடா தென்று, குருட்டுத் தனமாகக் கூறி,
ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளை அவைதிக தாந்திரிக தூவைத சைவ சித்
தாந்தியாக்கக் கருதின்றனர். ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதர்கள் பிரமாண
மணி தீபமை முகப்பில் " பிரமாணங்களாய ஆசாரிய மதங்களானவை ஸ்ரீ
சங்கராசாரிய சுவாமிகட்கு, அநுவைதமே (வைதாந்தமே) உடன்பாடாம் "
என்று கூறி யிருந்தலையு முணர்வாராக. சிவ நாக சுவாமி ஸ்ரீ வியாச பக
வானையும், ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளையும், வைதாந்திக வென்று கருதி
வேறு படுத்தி யிருக்கவும், குரவரிணங் கூறிய புத்தி யுடையவ ராகலின்,
' வைஷ சித்தாந்தி ' யென்று சாற்றினர் போலும். இவ் விஷயத்தைப்
பாட்ட நினைத்த இவர், எனைச் சாதாரண விஷயங்களை யென் பாட்டுப்
பாட்டுவர்? இவரை அண்டப் பாட்டரு வளாருலகத்தலை சாயும்.
இனி, வரைவாராயின், அவ்வந் நூல்களைப் படித்து, அவற்றிலுள்ள வாக்

கியங்களை யெடுத்துக் காட்டி வரைவாராக. அவ்வா றின்றி யிவ்வாறே வெற் றுரையாக வரையின் வேண்டிய சேளனஞ் செய்வ தொன் றுணர்க.

16. "சிவ ஞான சுவாமிகள் சிவனுக் குரிய எண் குணங்களும், மோக்ஷ காலத்திற் சீவனுக்கு வந்து பொருந்தாது என்று எவ்விடத் தெழுதி யுள் ளார்கள்" என்கின்றீர்.

சிவ ஞான பாஷ்யத்தில் ஆறாஞ் சூத்திரத்தில் "ஆன்மா பசுத்துவ நீங் கிய முத்தி காலத்தில் சிவனைப் போல முற்று முணர்தல் முதலிய வெண் குணங்களு முடைய னென் றாகமங்களிற் கூறுதலின், ஆண் டாங்மாவி னறிவு சிவ ஞானத்தோ டொத்த ஞானமே யன்றிப் பச ஞானமன்மையா னவ் வறிவா னறியப்படுங் கோசரப் பொரு ளென்றலே பொருத்த முடைய தெனச் சிவ சமவாதி மதம் பற்றி யாசங்கை நிகழ்ந்த வழி யதனை மறுத்து" என்றும் "அத்தன்மையதாகிய முதல்வனைத் தலைப்பட்ட வான்மாவும் முதல் வரை டொன்றாய்ப் போதலே யன்றித் தா னென வேறு நிற்குமா றின் மையிற் றன்னருளா லான்மா வுணரு மென வேறு படுத்துக்கூறுதல் பொருந்தா தெனச் சிவாத்துவித சைவர் மதம் பற்றி யாசங்கை நிகழ் வதனை மறுத்து" என்றும், "பசுத்துவ நீங்கியவழி யான்மாவின் ஞானத் திற் கோசாமா மென்னுஞ் சமவாத சைவரையும், முத்தியிற் சிவமே யன்றி யான்மா வென வேறின்மையின் ஆன்மாவுக்குக் கோசாமாடா றியாண் டைய தென்னுஞ் சிவாத்துவித சைவரையு மறுத்து" என்றும், "சிவாக மங்களில் ஓரோ ரோரிடத்தி லான்மாப் பெத்தத்திற் பாதந்தான் முத்தியிற் சுதந்திரன் எனவும், பாதந்திரனுதல் பற்றி மல வுண்மை துணியப்படு மெனவுங் கூறுவன வெல்லாம் பொது வியல்பு பற்றிப் பதி யென நின்ற முதல் வன் செய்யு மைந்தொழிலின்கட் பட்டு நிற்றலு மவற்றி னகப்படாது நிற் றலும் பற்றியே பிறி தில்லை யாகலின் அது பற்றித் தன்னியல்பி னின்ற முதல்வனை நோக்கியுஞ் சுதந்திர னவன் போலு மென மலையற்க" என் றும், "இன்னே ரன்னவை யெல்லா முபசாரம் பற்றி" என்றும், "ஆன் மாவுக்கு விசேட குண மில்லையாயிற் குண குணிகட்கு வேற்றுமை யில்லை யென்பது மேற்காட்டுதலிற் குணமில் வழிக் குணியு மில்லை யெனப் பட் டுச் சிவாத்துவித மதமாய் முடியு மாகலி னது பொருந்தாது" என்றும், "தனித்து நின் றறிவதாகிய சிவமும் தானும் தம்முள் ஒத்தல் சாலாமை யான் என்பது" என்றும், "நீரொடு நீரும் பாலொடு பாலுஞ் சேர்ந்தாற் போ லென அக்க வாதங் கூறுவார் மதமும், குட முடைந்த வழிக் குடாகாய மகாகாயத்தோடு கூடி யொன்று மாறும், சிறை முறிந்த வழி யாற்று நீர் கட னீரோடு கூடி யொன்றுமாறும் போ லெனச் சிவாத்துவிதங் கூறுவார் மதமு மறுக்கப்பட்டன. ஆகமங்களி னவ்வா றவற்றை யெடுத்துக் காட் டிய தொற்றுமைப்படச் சேர்தன் மாத்திரைக் கொருபுடை யொப்புமை யாதல் பற்றியே பிறி தில்லை யென்க." என்றும், "கற் றருமை தருமி யென் றோதியதனை மீளவும் அதனை விரித் துணர்த்துவான் புகுந்து முற் றுணர்தன் முதலியனவாக வெண் வகைப்படுத் தோதி, யவற்று ளாதி

போத மென் றெருரு குணம் முற் றுணர்வு மூதலியவற்றின் வேறு வைத் தெண்ணப்பட்டது ; படவே அஃதாதி முத்தத்தன்மை யென்னும் குணத் திற்குப் பரியாயப் பெயரா ணாதியே நூலும் விளங்குத லனைப் பொருடரு வதே யாமாகலி னக்குண மாதி மூத்தலுகிய சிவனுக் கன்றி யிடையே மூத்தி பெற்ற வான்மாவுக் கில்லை யென்ப தனைக்கு மொத்தலா ணாதி போத னல்லாத வான்மாவுக்கு அநாதி போதத்தன்மை கூறியது, மாணிக்க வொளி முழுவதும் தன்னைச் சார்ந்த படிகத்தின் விளங்கிறற் போலச் சிவ னுக் குரிய தருமம் தன்னைச் சார்ந்த வான்மாவின்மாட்டு விளங்குதன் மாத் திரையே பற்றி யாகலின் [illegible] வனைக் குணங்களான்மாவிற் கோதியது தூவ மவ்வாறையா மென்பது தெளிபக்கிடந்த வா றறிக." என்றும், "பவுட்கா மதங்க மூதலிய சிவாகமங்களிற் சிவனுக் குரிய வெண் குணங்களே யன்றி யவற்றோ டொப்ப வேறு யான்மாவுக் கெண் குணங்க ளுள வெனு யாண் டானு மோதாமை யானும்" என்றும், "அற்றுகலி னன்றே மல சத்திகள் பலவாயினை—சிவமும் ஆன்மாவும் இலக்கணத்தா லொன்றிய வழிப் பதி பசு வென வேறு வைத் தெண்ணுதல் பொருந்தா மையானும்" என்றும், "சிவனு மான்மாவு மிலக்கணத்தா லொன்றிய வழிச் சிவனே மறைக்க மாட்டாத வாணவ மலம் ஆன்மாவுக் காவாரக மாதல் சொல்லாமையானும்" என்றும், "என் குணங்களி னாதி போத மென மூற்றுணர்வின் வேறு வைத் தெண்ணியது அநாதி மூத்தத் தன்மைக்குப் பரியாயப் பெயரே யாகலி னதுவு மதனோடை யெண்ணிய வேனைக் குணங்களு மாதி மூத்தலுகிய சிவனுக்கே யுரிய குணங்க ளென்பது முணராது, அக் குணங் கள் முழுவதும் படிகம் போலப் பற்றியதன் வண்ணமாய் நிற்கு மியல் புடைய வான்மாவின்மாட்டு விளங்கிய வுபசாரத்தால் என்பது முண ராது," என்றும், "ஒன்றிய வழி அது வதுவாய் நின் றறிதலாகிய வான் மாவி னிலக்கணம் மூத்திக் காலத் தில்லை யெனப் பட்டு வழுவா மாகலி னது பொருந்தாமையானும்" என்றும், எழாந் சூத்திரத்தில் "அவையே சிவகாரணங்களாய்ச் சிவத்தை யறியு மென்பதனை மறுத்து" என்றும், முதற் சூத்திரத்தில் "அது கொண்டு தானே நிருபரித வைக்கியம் கூறுதல் சாலா தென்பது" என்றும் கூறப்பட்டிருக்கின்றது.

இவ் வாக்கியங்கள் சிவனுக் குரிய குணங்கள் நாசமாவ தில்லை, சிவனுக் குரிய ஆணவ, கார்மிக, மாயேய மலமும், மூல மலமும் நாசமாவ தில்லை. சத்தி மாத்திரம் அடங்குவதாம். சிவன் குணங்கள் சீவனிடத்து தோற்றன் மாத்திர மன்றி உண்மையில் இல்லை யென்ற படிக திருஷ்டாந்தத்தாற் கூறி, ஆகமங்களில் சிவ குணங்கள் ஜீவனுக்கு வந்து பொருந்துவதாக உப சாரமாகக் கூறப்பட்டிருக்கின்றன வென்றும் கூறுகின்றனர்.

வேதாந்த ஆசாரியராய ஸ்ரீ அப்பய்ய தீக்ஷிதாவர்களும் சித்தாந்த லேச சங்கிரகத்தின் நான்காவது பரிச் சேதத்தில் "பிரதிபிம்பம் ஜீவன் பிம்ப ஸ்தானீயன் ஈச்வரன். ஈரிடத்தும் அநுஸ்யூதமா யிருக்கின்றது சுத்த சைதந் யம் என்னும் பகுத்திலோ மூக்தனுக்குச் சர்வ மூக்தி வரும் வரைச் சர்வஞ்

ஞத்வ, சர்வ கருத்திருத்வ, சர்வேஸ்வரத்வ, சத்திய காமத்வாதி குண பாமேஸ்வர பாவ அடைவி னங்கிகாரமாம். எங்ஙனம் அநேகந் தருப்பண ங்களில் ஒரு முகத்திற்குப் பிரதிபிம்ப முற்றவழி ஒரு தருப்பண மொழிக் கின் அந்தப் பிரதிபிம்பம் பிம்ப பாவமாக நிலை பெறும்; முக மாத்திர ரூப மாக வன்றும். அஞ்ஞான்றும் வேறு தருப்பண சந்நிதானத்தா லாக்கப்பட்ட பிம்பத் தன்மை வதனத்தில் அகலாமையின். அங்ஙனம், ஓர் பிரஹ்ம சை தன்யத்திற்கு அநேக உபாதிகளில் பிரதிபிம்ப அடைவுறவே ஒரு பிரதிபிம் பத்தில் வித்தையின் உதயமாக, அதனன் அதன் உபாதி அகலவே அந்தப் பிரதிபிம்பத்திற்குப் பிம்ப பாவமாக நிலை பெறுத லின்றியமையாததாய் முடியும். முக்தனுக் கவித்தை யிலாமையின் சத்திய காமத்வாதி குண விசிஷ்ட சர்வேசுவரத் தன்மையி னடைவு கூடாதா மென்னற்க; அவன தவித்தை யின்றேனும் அக்கால் வேறு பத்தர தவித்தை யிருத்தலின், ஈசு வரரது ஈசுவரத் தன்மையும், சத்திய காமாதி குண வைசிஷ்ட்யத் தன்மை யும், தம தவித்தையினு லாக்கப் பெற்ற தன் றன்றே; அவர்க்கு நிரஞ் சனத்தன்மை யுண்மையின்; மற்றே, பத்தரது அவித்தையா லாக்கப் பெற்றதேயாகு மவையாவு மென அங்கிகரிக்கத் தக்கதாம். "எத்தகைக்குண மூடை யீசத்தி யாகவான், இத்தனை யிலடையே யிசைசு வாறே, அத்தகை யீசனை யாகம்வீழ்ந் தடைவன்", "எவ்வெக் குணத்தொடு மீசனை யேத்து தவர், அவ்வக் குணமூடை யவரையே யடைவர்" என்பன வாதி சுருதிக ளில் சகுண உபாசகர்கட்கும் ஈசுர சாயுச்சியங் கேட்கப்படுதலின் முக்திக் குச் சகுண வித்தையின் பலச் சம அடைவாம் என்னற்க; சகுண உபாச கர்கட்கு அகண்ட சாகூஹாத்கார மின்மையின் அவித்தையின் நீக்கமு மின் றும்; அவரது மூல அகங்கார நீக்கமு மின்றும். ஆவரண நீங்காமையின் அகண்டாநந்த விளக்க மின்றும். "உலக வியாபார மொழியும் பிரகாணத் தான் முன்னிலை யின்மையினனும்", "யோக மாத்திரம் ஒப்புமைக் குறி யானும்" என்பன வாதி சூத்திரத்திற் கூறிய நியாயத்தானே அவர்கட்குப் பாமேஸ்வரோடு போக சமாநத் தன்மை யிருந்த போதினும், சங்கற்ப மாத்திரையானே தமது போகத்திற்குப் பொருத்தமான திவ்ய தேகேந் திரிய வநிதை முதலியவற்றைச் சிருஷ்டிக்கும் ஆற்ற லிருந்த போதினும், சகல ஜகத் சிருஷ்டி சங்காராதி சுவாதந்திரிய இலக்கணம் வாய்ந்த நிரதி சய ஐஸ்வரிய மின்றும். முக்தர்களோ, எல்லா வடிவானுமே ஈசுவர பாவத் தை யடைந்து அவை யாவற்றையுமே யடைவர் என்பதாகப் பெருஞ் சிறப்புளதாம்."

"பாமேசுவருக்கு இருகுணாதந்தி அவதாரத்தில் அறியாமையோ டற்றமை தன்ப அடைவு முதலியன கேட்கப்படுதலின், முக்தர்கட்கு ஈசுர பாவ முறவே மீண்டும் பந்த அடைவாம் என்னற்க; அவர்க்கு விப்பிர சாப அமோகத் தன்மை முதலிய தாமியற்றிய மரியாதையைக் காக்கும்பொருட் டுத் தம்மிச்சையினனே பிருகு சாபாதிகள் சத்தியத் தன்மையை யடைவுறு மாறு நடனகுப்ப ஈசுவருக்கு அதன் அபிநய மாத்திர பாத்தன்மை யுண்மை

யின் ; அன்றியின், அவர்க்கு நித்திய முக்தத் தன்மையையும் தடை யற்ற சுவாதந்திரிய ஒப்புயர்வு இல்லாமை முதலியவற்றையுங் கூறும் மறை முரணன்றோவாம். ஆகலின், சர்வ முக்தி வரை பரமேஸ்வர பாவம் முத்தனுக்கா மெனப் பிம்ப ஈஸ்வர பாவத்தில் ஒரு கோது மின்றும். இப் பகுதியே சுருதி சுத்திர பாஷ்யாதி யநுகூணமானதாம்."

"சூத்திரக் காரர் நான்காவது பரியாயத்திற் பிரதிபாதிக்கப்பட்ட முக்தனுக்கு ஈஸ்வர பாவ அடைவை வெளிப்படையாய் விளம்புகின்றார். அஃதின்றேல், முக்தனிடத்தும் சத்திய சங்கற்பத் தன்மை முதலியன கூடாமையின் உபக்கிரமத்திற் கேட்கப்பட்ட குணவ்டகத்திற்கு ஈஸ்வராினும் வேற்றிடத் திருப்பாதலின் செய்த சங்கா பரிகார இலாப மின்மையினுமென் றுணர்க."

"ஸ்ரீமத் பாஷ்யக் காரரும் மிகவெளிப்படையாய் முக்தனுக்குச் சகுண ஈசுவர பாவத்தினைக் கூறி யுள்ளார்".

"முத்தர்கட்கு ஈசுவர பாவம் இன்றியமையா தங்கீகரிக்க வேண்டலின்".

"நித்திய சித்தமாகிய பாவ மற்ற தன்மையோ எப்போதும் பாவ மற்ற தன்மையாம். உண்மையாக எப்போதும் பாவ மற்றதில் பாவ சம்பந்தமேனும், பாவ சம்பந்த மூல கருத்திருத்வ, போக்திருத்வ, சம்பந்தமேனும் பாரமார்த்திகமாகச் சம்பவியாதாம். இவ்வாறுகவே, ஜீவனுக்கு ஈஸ்வரா பேதமும் நீக்க முடியாதாம். சுருதியிலுற் போதிக்கப்பட்ட அதனை தபேத விரோதி பந்தத்திற்குச் சத்தியத்தன்மை யின்மையின் என்க."

"சூத்திர அநுசாரிகளானே முக்த ஜீவர்கட்குச் சர்வ முக்தி வரை உண்மையாகச் சைதந்ய மாத்திரத்வ அவிரோதியாய பத்த புருட ரவித்தையாலாக்கப்பட்ட தடை யற்ற ஐச்வரிய அதனநுகூண கலாப விசிஷ்ட நிரதிசய ஆநந்த விளக்க சம்பத்தாகிய சர்வான்மகமாகப் பரமேஸ்வர பாவம் ஆதரிக்கத் தக்கதா மெனத் துணியப் பெறும்" என்று. ஜீவனுக்கு ஈஸ்வரத் தன்மையினைக் கூறிப் பந்தம் மித்தை யென்றும், பந்த காலத்தில் தன் குணங்கள் அவித்தையினால் மறைப் புண் டிருக்கின்ற தென்றும், முத்தி காலத்தில் இயற்கைக் குணம் வெளிப்படுகின்ற தென்றும் கூறியிருக்கின்றார்கள்.

இவற்றை விரித்துச் சைவ மத சகஸ்ர தூஷிணி யென்னும் நூலுள் வரைவாம். ஆவா வுடையோர் புத்தி கௌசல்யத்தினை ஆண்டுக் காண்க.

"இவரும் இவர் சார்பினரும் பொய் பொய் யென்று, பொய்யினையே சிந்தனை செய்பவராகலின் இப் பொய்க் கதை கூறினார? இவரும் இவர் சார்பினரும் ஒரு வார்த்தையாவது, குற்ற மறச் சொல்ல விரும்பாது, வெற் றுரையாகப் பலவாய வார்த்தைகளைச் சொல்ல விரும்பி, 'ஒரு நூலையாவது கசடறக் கல்லாது, பல நூல் வல்லா ரென்று, அறியாதார் புகழ், மேலெழுந்த வாரியாய், பல நூல் படித்தவராதலின், அது பற்றி யிப் புரட்

தக்கதை கூறினரா? ஒரு நூலைப்பற்றியாவது ஒருவருரையைப் பற்றியாவது எழுதுவதாயின் அந் நூலையும், அவ் வுரையினையும் முறையாய்ப் பாடங் கேட்டுப் பொருளை நன் குணர்ந் தெழுதல் வேண்டும். அவ்வாறின்றித் தன் மதம் போனவா றெழுதல் முறையாகுமா? — இனியேனும் படித்துச் சிவ ஞான சுவாமியைப் பற்றிக் கூறிய குறைக்கு மன்னிப்புக்கேட்டுய்வாரா?" என்று வசை மொழி புகன்றார்.

மேலே காட்டியவாற்றால் சிவ ஞான சுவாமி கருத்து வெள்ளிடை விலங்கலாய் விளங்குகின்றமையின், இவரும் இவர் மதத்தினருமே பொய்க்கதை கூறுபவரும், குற்ற மற்ற வார்த்தைகளைக் கூறுதவரும், பல வெற் றுரை கூறுபவரும், நூலைக் கசடறக் கல்லாதவரும், சில நூலிடையும் வன்மையின் றென்று அறிஞருருவருக்கும்படி நூல்படிப்பவரும் ஆகின்றனர். இவர் பௌஷ்காராகம விருத்தியை முறையாய்ப் பாடங் கேட்டு, அல்லது, அதிகாரமின்றுயின் பிறரை மொழி பெயர்த்துத் தரும்படி யிரந்து, பின் மொழி பெயர்ப்பை நன் குணர்ந்து, எழுதாது தம் மதம் போனவாறு ஸ்ரீ சங்காராசாரிய சுவாமிகளைத் தூஷித்து எழுதியது தவறை மலத் தடிப்புப் பற்றியா? அறியாமை பற்றியா? பாம்பரைக் குணம் பற்றியா? இனியேனும் ஸ்ரீ சங்காராசாரிய சுவாமிகளைத் தூஷித்த பாவம் நீங்குதற்கு, எம்மவரிடத்து மன்னிப்புக் கேட்டு உய்தற்கு யாங்கள் கூறுமாறு நடப்பாரா? வேதாந்த சாஸ்திரங்களைக் கற் றறியாக் குறையால் வேதாந்திகளை நிந்திக்கின்றரென்பதை மறுக்க முடியுமா?

"ஸ்ரீ சிவஞான சுவாமிகள் உரையைப் பற்றிய இந்த வொரு விஷயத்தையாவது, வாத சபையில் சாதிக்கச் சித்தமா யிருக்கின்றனரா? இருப்பின் சபைத் தலைமை வகிப்பதற்கு ஸ்ரீமான் ஜமீந்தார் - அருணைசலச் செட்டியா ரவர்களையே நான் சம்மதிக்கின்றேன்" என்று பிள்ளைகடா கூறுகின்றது.

"இந்த வொரு விஷயத்தை யாவது," என்றமையின், தாம் கடாவிய ஏனைப் பத் தொன்பது விஷயத்தையும், நிலை நாட்டுவதற்கு ஆற்ற லில்லை யென்று கூறினரென்பது எதிர் மறை முகத்தால் விளங்குகின்றது. இது காறும், கூறியவாற்றால் பத் தொன்பது கடாக்களும், நமது கட்டாரியாற் குத்துண்டு போயினமையின், அவ்வாறே யிதுவும் குத்துண்டதென் றுணர் வாராக. ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம் பார்ப்பதே போன்றது, பத் தொன்பது கடாக்களுங் குத்துண்டு பட்டபின், இக்கடா எங்ஙனமெஞ்சி நிற்ற றகும்? வாதத்திற்கு வருவதாக இவ்வாறே எமக் கொரு கடிதம் மிறுத்தனர். அவ்வாறே வருமாறு மறு மொழியாய குரு மொழி விடுத்தேம். அது கண்டு ஒரு மொழியு மெதிர் பேசாமலொடுங்கியே நின்றனர். வாதத்திற்கு வர ஆற்ற லுடையவராயின், அக்கால் வந்திருக்கலா மன்றே? யாங்கள் சைவ சித்தாந்திகள் யாவரோடும் வாதஞ் செய்யச் சித்தமா யிருக்கிறே மென்று 'அத்வைதி' என்பார் வெளியிட்ட

"அசுத்த சைவ சித்தாந்தக் கோர் வாத வரை யுறை" என்னும் பத்தினி கை கண் டடங்கினர் போலும்.

17. "அவ்வாறே தாட்டாந்தத்தில் புகுத்திலுல், நான் பிரமம் என் னும் ஞானம் எளனத்துக் கிடமாகு மென் றஞ்சி மறைத்துக் கொண்டது முறையாகுமா? அன்றியும், அக் கதையின்படி லூக்கையன் தாகத்தில் ஆண்டா னடிமை ஞானமும், சுவாமியார் கருதாமலே அமைந்தன என் பதை அறிந்தாவது திரு வருட் சம்மதம் எது என்பதை யுணர்வாரா?" என்றனர்.

அத் திருட்டாந்தம், தமக்குக் கருத் தின்றிய கைலாயம் தோற்றுகின்ற தென்ற அவ்வளவில் உபயோகமே யன்றி, யேனையவற்றிற்கு உபயோக மன்றும். முழுத் திருட்டாந்தமும் முபயோகப்படுத்துவா ராயின், ஈப்வர சங்கற்பத்தாற் கர்மாதீனமாக லூக் கின்றியவனுகப் பிறப்பது போன்று, பிறப்பிலேயே வேதாந்தியாகப் பிறத்தல் வேண்டும். அவ்வாறு ஒருவரும் பிறக்கக் கண்டிலேம். பிறந்தபின் நிஷ்காம கருமம் பக்தி முதலியன செய்து, திருவை யடைந்து பிரமஞானியாகின்றனரே யன்றிச், சாம்சித்தர் போன்று, இயற்கையிலேயே ஞானியாகப் பிறத்த லிலாதாம். அவ்வாறே பிறர் பழித்தல் போல், அனைதிக சைவசித்தாந்திகட்கு அந்தியமாக வேதாந்தத்தைப் பழிப்பா ரொருவர் வேண்டும். அப்பழிப்பை நிவர்த்தித் தற்குத் தனக்கு உடன்பா டல்லாத "ஆண்டா னடிமைத் திறம்" என்றமை யான், 'திரு வருட் சம்மதம் எது என்பதை யுணர்வாரா?' என்றெழுதுதல் விவேகிகள் கூற்று? ஆண்டா னடிமைத் திறம் கருத் தில்லாது போக, அதனை நிவர்த்தித்தலே திரு வருட் சம்மதமாம். எளனத்துக் குரிய மதம், வேதத்திற்குப் புறம்பாகலின் இவர் மதமே யன்றி வேதத்திற் கூறிய எம் மவர் மத மன்றும். 'முறை யாகுமா?' என்று, முறையாற் சூட்டுக் கோலைப் பெறுத இவர், முறை பிறழக் கூறு முறை முறையாகுமா?

"இவர் மதத்திற்கு முதலாய ஆசிரியராய் விளங்கிய ஸ்ரீ சங்காசாரிய சுவாமிகள், தா முய்தற் பொருட்டு ஆண்டானடிமைத் திறம் பேணி, பௌத்த மதத்தை வெல்லுதற் பொருட்டு எகாத்ம வாதஞ் சாதித்திருக்கவும் அவ் வுண்மை யறியாது, அவருக்குப் பின் வந்த இடையாய ஆசிரியரும், கடை யாய ஆசிரியரும், எகான்ம வாதமே ஆதி சங்காசாரிய சுவாமிகள் கொள் கை யென்று தம்பட்ட மடித்துத் திரிவது நுணுகி யாராயு மறிவின்மை யென்பதை மறுக்க மூடியுமா?" என்கின்றனர்.

உய்தற்குக் கொள்ளுஞ் சைவ சித்தாந்தத்தில் பிறரை வெல்லுதற் காற்ற லின் றென்றும், பிறரை வெல்லும் ஆற்றலுடைய வேதாந்தத்தில் மோக்ஷ மில்லை யென்றுங் கூறுகின்றனர். அவ்வாறுயின் சிவ ஞான சுவாமி தம் பாஷ்யத்தில், எனை மதங்களைத் தம் மனம் போன வாறு சோபாக முறையா லெழுதியது பெரும் பூட் டென்று கொள்ளல் வேண்டும். பிற ரைக் கண்டித்தற் கெழுதிய தனின், கண்டித்தற் காற்றலுடைய சைவத்

தில் மோகந் மின்றும். இன்றுகவே, சைவ மதம் பிறரை யேமாற்றிப் பொருள் கவரும் மதமாம். இவர் கூறியவாறே வேதாந்தத்திற் பிறரை வெல்லுதற்கு மாற்ற லுடைமையா னன்றே, வேதாந்திகளைக் கண்டு, சைவ சித்தாந்திகள் யாவரும் அஞ்சியோடும் சீர்மைய ராயினர். ஸ்ரீ சங்கரா சாரிய சுவாமிகள், தங்கருத்து ஆண்டா னடிமைத் திறம் பேணும் அவைதிக மே யென்று, இதுகாறும் வெளி வந்திருக்கும் 115 கிரந்தங்களுள் யாண் டாயினு மெழுதி யிருக்கின்றார்களா ? பிரமாணமாக வொன்றையும் வரை யாது, ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள், ' அவைதிகமாய எமது சைவர் ' என வெற் றுரையாக, வீதிகள் சந்துகள் பொந்துக டோறும், இவரும் இவர் மரபினரும் தம்பட்ட மடித்தல் தகுதியாமா? அவர்க ளியற்றிய 115 கிரந்தங் களின் வாயிலாக, அவர் கருத்து அத்வைதமே யென்று கொண்டிருக்கும், அவர் மாணக்கராய எம்மவர் யாவரையும், " நுணுகி யாராயும் அறிவின் மை என்பதை மறுக்க முடியுமா " என்று எழுதியது, எந்த எரிவாய் நரகிற் புகுதற்கோ ? கும்பி பாகம் என்னும் நரகத்தினையே யடைவர். அவர் க ளியற்றிய நூலைப் பரிசித்தற்கும் அதிகார மற்ற இவரும் இவர் மதத்தினை ரும். அவர்கள் நூலை யெங்ஙனம் நுணுகி யாராய்ந்தனர்? அவர் மாணக்க ராய எம்மவருக்கு விளங்காது, சுவாமிகளைத் தூஷிக்கு மிவர்கட்கு விளங் கியது எப் பாவ விசேடத்தாலோ? நுணுகி யாராய்தற்குத் தர்க்கம் வியா காணம் சாங்கியம் யோகம் பூர்வ மீமாஞ்சை முதலிய நூல்களைக் கற்றிருக் கின்றனரா ? அவ்வா றின்றி, அபூர்வ நுண்ணிய ஆராய்ச்சி யுடையவரா யெங்ஙன மாயினர் ? உமாபதி சிவாசாரிய சுவாமிகளும், அப்பய்ய தீக்ஷித ரவர்களும் புகழ்ந்து கொண்டாடிய ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளை நிந்திக்கு மிவர், தமது மதாசாரியர் எனக் கொண்டாடும் உமாபதி சிவாசாரியர், சிவ ஞான சுவாமி, திரு மூல நாயனர், சிவ ஞான வள்ளலார், கண்ணுடைய வள்ளலார், தாயுமான சுவாமிகள், சுந்தர மூர்த்தி முதலியோர்களை நிந்தித் தற்கு அஞ்சா ரஞ்சார். இனி யெழுதும் புஸ்தகத்தில் அவர்களை நிந்தித் தெழுதப் புகினும் புகுவர். இக் கருத்தா னன்றே வேதாந்திகளுஞ், சைவ சித்தாந்திகளும் தம்மொடு சேர்க்கா திவரை விலக்கினர். அதனை லிவரும் தனித் தொரு மத முடையரா யிருக்கின்றனர். சங்கர திக் விஜயம் 16-வது சருக்கத்தில், கோகரணத்தி லிருந்த லீல கண்ட சிவாசாரியர் ஸ்ரீ சங் காராசாரிய சுவாமிகட்குத் தோல்வி யுற்று மாணக்க ராயின ரென்றும், இன்னும் பல மதத்தினரும் தோல்வியுற்று மாணக்காயின்ரென்றும் கூறி யிருக்க, அதனை யுணராது பௌத்த மதத்தை மாத்திரம் ஸ்ரீ சங்கரா சாரிய சுவாமிகள் வென்றதாக மையலுற்றுக் கையாடினமையின், அஞ்ஞா நம் என்னுந் தோல்வித் தாய அறை யுண்டனர். ஐயாறு அன்னவும் ஆமா வன்னவும் மதர்ப் புற்றுத் திரியு மெல்லா மத வாதிகளையும், அடக்குதற்குப் பரப் பிரஹ்மப் பொருளாய பரசிவனே ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் என் னும் பெயருடன் அவதரித்தன ரென்றுணர்க. ஐந்நூறு வருடத்திற்கு முன் தென்னிந்தியாவில் தென் மொழியில் தோன்றிய சைவ மதத்தினராய இவ ரும் இவர் மாடினரும் மூவாயிர வருடத்திற்கு முன் னவதரித்த, வேதத்

தின் பொருளை யாவருக்கும் விளங்கும்படி விளக்கி, வேதாந்த நூல் பல செய்த ஸ்ரீமந் மஹாதேவ மாநஸ அநுக்ரஹ லீலா விக்ரஹமாகிய ஸ்ரீ சங்கராசார்ய சுவாமிகளைப் பற்றிப் பேசுதற் கெவ்வா றருகராவர்? அருகராகாமையின் ஒன்றும் பேசா தொழிவாராக.

"ஆண்டா னடிமைத் திறத்தி னுண்மைப் பொரு ளிவருக்காவது, இவர் மாபினருக்காவது தெரியுமாயி னதனை யெளனஞ் செய்ய மாட்டார்" என்றார்.

ஆண்டா னடிமைத் திறத்தி னுண்மைப் பொருளை யாரும் எம்மவரு மூணர்ந்தே யெளனஞ் செய்கின்றே மென் றுணர்வாராக.

"இரு பொருள்களு முருவுடைப் பொருளாய், ஓரிடத்திற் குந்திக் கொண்டிருப்பதே யாண்டா னடிமைத் திற மென்று, இவரும் இவர் சார்பி னரும் வீணுச்சாமங் கொள்ளுகின்றனர்" என்றார்.

'இரு பொருள்களு முருவுடைப் பொருளாய்' என் றதன் பொரு ளென்னை? உருவம் என்பது குணமா? சொருபமா? குணமா யின், உற்பூத குணமா? அநுற்பூத குணமா? அல்லது 'உருவம்' என்பதற்குக் குணமுஞ் சொருபமும் என்பது பொருளா? உற்பூத குணம் உடைய பொரு ளென்று கூறுதல் பொருந்தாது; புறவிந்திரியக் காட்சி யன்மையி னென்க. அநுற்பூத குணம் என்றல் பொருந்தும். இரு பொருளுக்கும் அறிவு இச்சை செயல்க ளென்னும் மூன் குணங்களு மூண்மையின். அங்ஙனமாயினும் கேவலம் குணப் பொருள்க ளெனக் கூறல் பொருந்தாது. குணியாய சொருப மின்றி, அறி விச்சை செயல்க ளாய குணங்கள் தனித் நியங்கா வாதலின் பொருந்தாதாம். சொருபம் என்றல் பொருந்தும். சிலர் சேதநமே, பதிக்கும் பசுவுக்கும் சொருப மென்றும், சிலர் சார்ந்த வண்ணஞ் சார்தல் சொருப மென்றும் கூறுகின்ற மையான். அங்ஙனமாயினும், அறிவாய சொருப மாத்திரத்தால் சரிடத் தும் பேதந் தோற்றுமையின், ஆண்டா னடிமைப் பேதந் தோற்றுதற்கு, அறிவு இச்சை செயல்கள் தனித் நியங்கல், தனித் நியங்க வின்மை, முத லிய குணங்கள் வேண்டப் பெறுதலின் பொருந்தாதாம். குணமுஞ் சொ ருபமும் உடைய பொரு ளென்றலே பொருத்த முடைத்தாம். அறிவு, இச்சை, செயல், தனித் நியங்க வின்மைக் குணங்களையும், அறிவாகிய சொருபத்தையும், உடைய பசுப் பொருளும், அறி விச்சை செயல் தனித் நியங்கற் குணங்களையும் உடைய பதிப் பொருளும், ஓரிடமாய மகா கைலா யத்தில் பசுவின் மீது, பதி தமது நிருவடியை வைத்துக் குந்திக் கொண் டிருப்பதே, ஆண்டா னடிமைத் திறத்தின் பொருளா மென்று யாரும் எம் மவரு மூணர்ந்திருக்கின்றோம். எனையோர்க்கு மிதுவே பொருளாம். விரிப்பின் ஆயுள் போதா தாகலினும், புத்தகம் விரிய மென்னுங் கருத்தி னாலும், நண்பர்கள் சுருக்க வேண்டு மென்று விரும்பியதனாலும், சுருக்கினே

மென் றுணர்வாராக. இதனற்றான் ஆண்டா னடிமைத் திறம் சுருதி விரோத மெனக் கொண்டு வளனுஞ் செய்கின்றீரும்.

"பெத்த முத்தி யிரண் டிடத்தும், இறைவனே யின்றி உயிர் தனித்து நில்லாமையானும், தனித்து ஒன்றை யறியாமையானும், தனித் தொன் றைச் செய்யாமையானும், தனித் தொன்றை யிச்சிக்காமையானும், எவ் விடத்து மிறைவன் ஆண்டானும், உயிர் அடிமையும் என்று சைவ சித் தாந்திகள் கூறுகின்றார்க ளென்பதை யினியேனு மறிந்து கொள்ளுவா ரா?" என்கின்றார்.

'பெத்த முத்தி யிரண் டிடத்தும், எவ் விடத்தும் இறைவன் ஆண்டா னும், உயிர் அடிமையும்' என்று சைவ சித்தாந்திகள் கூறுவார்களாயின், பெத்த தசையினும் முத்தி தசைக்கு விசேடம் யாது? பெத்த தசையினும், பதியும் பசுவும் ஆண்டான் அடிமையாயும், உயிர்க்குத் தனித்து நிற்றல், அறிதல், செய்தல், இச்சித்தல் எலாமையானும், முத்தி தசையினும், பதி யும், பசுவும் ஆண்டா னடிமையாயும், உயிர்க்குத் தனித்து நிற்றல், அறிதல், செய்தல், இச்சித்தல் எலாமையானும், இரு தசையும் ஒன்றேயாம். குருவை யடைந்து அநந்த சிவ முற்று, ஞான மடைந்ததற்கு யாது பய னுளது? பெத்த தசையினும் முத்தி தசையில் அதிக விசேட முள தெனக் கருதி யன்றோ ஜீவன் பிரவிர்த்திக்கின்றான். விசேட பலனைக் கருதாது ஒரு மங் கலனும் பிரவிர்த்தியான், என்பதை யுணர்ந்து இனியேனு மடங்குவாராக.

18. "வேதாந்திக ளென்று சொல்லித் திரிகின்ற அனைவரும் வேதாந்த சாஸ்திரம் படித்திருக் கின்றார்களா?" என்கின்றார். வேதாந்திக ளனைக் கருதுவோர் யாவரும் சிவ காருண்யம், ஈஸ்வர பக்தி, பாச வைராக்கியம், பிரஹ்ம ஞானம் தான்கும் ஓர் வடிவா யெழுந்தருளியிருக்கும் ஞானாசாரியரை யடைந்து, தம் மதத்திற் குரிய நூற்களுள் தம் கருத்தளவில் பாடங் கேட்டு, அவ்வாறே யொழுகுகின்றார்கள். சைவ சித்தாந்திகளோ பெயர் மாத்திரம் சைவ சித்தாத்தி யென விட்டுக் கொண்டு, தம் மதத்திற் குரிய நூல் இன்ன தென்றும், தம் மத சித்தாந்த மின்ன தென்றும் உணரும் உணர்விலியாய், பிறர் கேட்கின் தம் மத சித்தாந்தத்தை, தம் மத நூலிற் கூறி யாங்கு கூறாது மூர் ணூறக் கூறியும், பொருள் கவர்ந்து திரிவார் அநேகரை யித்தே சத்து மெத் தேசத்துங் காண்கின்றோ மாகலின், கல்வி யில்லாது நாமாபி மான மாத்திரமாயும், பல சைவ சித்தாந்திக ளீண் டிருக்கின்றன ரென் றுணர்க.

19. "பதி பசு பாசம் மூன்றும் அநித்தியமாயின், இம் மூன்றின் வேறான நித்தப் பொருள் எது? இவர் தம் மதத்தைத் தம் மட்டில் வைத் துக் கொள்ளாது, பெரியார் கருத் திதுவே யென் றவர்கள்மீதும், தமது மதத்தை யேற்றுகின்றார். அந்தோ! இத் தீச் செயலுக் கென்ன பய னடைவரோ? இவரா லெடுத்துக் காட்டப்பட்டிருக்கும் செய்யுட்களில்,

பதி, பசு, பாசம், மூன்றும் அநித்தியமாகக் கூறி யிருப்பதாகக் காட்டக் கூடுமா?'' என்கின்றார்.

பதியும் பசுவும் பாசமும் அநித்தியமேயாம். பசுத் தன்மை, பதித் தன்மைகள் நீங்குழி, யெஞ்சிய சேதநங்கட்குப் பேத மின்மையின் அபேத மாய்ப் பிரஹ்மம் என்னும் பெயர் பெற்று, ஒரு பொருளை நித்தியமா யிருக்கு மென் றுணர்க. சூட்டுக் கோல், 55-வது பக்க முதல் 83-வது பக்கம் வரை யெண் ணிறந்த செய்யுட்களை யறிவித்து, இதுவே அப் பெரி யார் கருத் தென, அறிவித்திருக்க, அதனை யுணராது, எம் கருத்தை அப் பெரியார்மீது ஏற்றுவதாகக் கூறினர். ''பொய் யுலகம் பொய்யாகக் காட்டி யும். பொய் தோன்றின் மெய் தோன்று. கடைப்படும் உலகப் பொய்யினை மெய்யாகக் கருதினேன். எங்கும் என் சொரூபம் சச்சிதானந்த இல கொளியா யிருந்திடும். வஞ்சகச் சகப் பொய் யனைத்தையும் மறந்து. சுருதி யின் றுணிவால் நினைவுகொண் டுலகம் துச்சமென் றுணர்தல் நிச்சயமாம். பொய்ச் சகத் துறவுங் கலங்குறார். ஈசன் உயிர்கள் தாம் மாயா சகிதங் கள். உமைபாகத் தண்ண லிறந்தும், என்னை யறியப் பொய்யாகி யி ருந் தது. மறுடக்கொம்பாகு மன்ன மாயைதனை யகற்றாய். திகழும் நீ பிரம மென்றருளும். துன்பத் துவிதந் தொலைந்த எல்லா வுலகு மிறந்தும், அத்தி பாதிப் பிரிய ஆதி வெளியா யிருந்தால் சுத்தமிலாச் சிவ பரத் தணைவ தெங்கே? அநாதி பவ பந்த மெலாம் துப்பறவே நன்றாகத் துடைத்து. ஆன்மாவே பரம சிவம். ஆன்மாவே விசிட்ட காரணாதீத, வாக்கு மநாதீத சர்வஜ்ஞனை பூரணனும். ஆன்மாவே பரமசிவ சொரூபம். சககாரண னும் புருடனனை. பாப் பிரமம் நானை. பாசிவனும் நானை. சிவ பர வைக்கியத்தை யடைந்து. ஆன்ம வுபாசனை பண்ணக் கடவன்.'' என்பன வாதி வாக்கியங்களால், பதி பசு பாசம் அநித்தியம் என்று கூறப்பட் டிருப்பன அப் பெரியார் கருத்தா? எமது கருத்தா? பெரியார் கருத்தை யே அப் பரம்பரையி லுள்ள யாரும், எம்மவரும் கைக் கொண்டு கூறியிரு க்க, அதனை யறியாது, எமது கருத் தென்று பொய் புகலுகின்றார். இப் பொய்க் கூற்று லௌவாம் பாவத்திற்கு, எக் குருவைக் கொண்டு பிராயசித் தம் செய்து கொள்ளக் கருதியிருக்கின்றனர்? இவை யாவும், பொ ய் யென்று கூறிய இவர்க்கு, அவ் வாக்கியங்களை யுணரும் அறிவின்றியினும் னை யறிஞர் குழாங்கள் உண்மை யறிவார்களாக. தாம் தீச் செயலைச் செய்து விட்டு, 'அந்தோ! இத் தீச் செயலுக் கென்ன பய னடைவதோ?' என்று கூறியது அறியாமை பற்றியா? கர்வம் பற்றியா? இழி குணம் பற்றியா? பரம்பரைக் குணம் பாழாகா திருக்க வேண்டு மென்னும் கருத் துப் பற்றியா? இவ்வா றெழுதின் தம்மைச் சார்ந்த அறிவிலிகள் வியப்ப வொன்னுங் கருத்துப் பற்றியா? இக் கருத்துள் எக் கருத்துப் பற்றி யெழுதி னும் அடா தடாது. சூட்டுக்கோலிற் காட்டிய செய்யுட்களில் பதி பசு பாசம் அநித்திய மென் றுள்ள வாக்கியங்களை யீண் டெடுத்துக் காட்டினமையின், அது கொண்டடங்கி வாழ்வாராக.

20. "முக வுரை யெழுதிய யாரோ வொருவர் தம் முடைய படிப்பின் றிறத்தைப் பிறர் அளந்து கொள்ளுமாறு ஏதேதோ கூறுகின்றார். அவர் தங் கூற்றே டமையாது தொல்லாசிரியர் திரு வாக்குக்களையும் தம் மனம் போனவாறு திரித்து, அவ்வாசிரியர் கூற்றாகக் கூறுகின்றார்." என்கின் றார்.

முக வுரை யெழுதுவோரும், நூ லெழுதுவோரும், தம் படிப்பின் றிறத்தைப் பிற ரறிந்து கொள்ளுவதற்கே யெழுதுவ தன்றித் தாம் கற்ற தொன்றும், மூன்பின் மூ ணுற எழுவ தொன்றுமாய்ப் பிறர் செவ்வனே யுணராதிருக்கு மாறு, எழுதுவது கற்றார் திற னன்றும்.தாம் கற்ற வளவில் முகவுரை யெழுதியவரை யேளனஞ் செய்கின்றமையின், இவர் எழுதிய கடா, இவர் கற்ற கல்வியிற் குறைந்தும், அல்லது பிறர்பால் விஷயங்களை யாசித்தும், எழுதியிருக்கலா மென்று விளங்குகின்றது. இதனால், கற்ற வற்றை யுண்மையாக எழுதுந்திற னின்றிப் பொய் பொதிந்த புரட்டுக் குழூஉக்களை யெழுதி வெளியிடுபவ ரென்று வெள்ளிடை விலங்கலாய் விளங்கலாயிற்று. 'ஏதேதோ' என்றதை விரியாது விடுத்ததன் காரண மென்னை? விரிக்கின் படலக்காரர் ஒழுக்கம் வெளியா மெனக் கருதியா? படலக்காரிடத்துள்ள நசையாலா? பிறர் பழிப்ப ரெனக் கருதியா? முக வுரையிற் கூறியயாவும் படலக்காரிடத் துண்மையாயினமையின், மீண்டுங் கூறப்புகின் வழுவா மெனக் கருதியா? விரியாது விடுத்த கருத்தை விளக் குவாராக. 'தொல்லாசிரியர் திரு வாக்குகளையும்' எனப் பன்மைச் சொற் புகன்று, ஒரு குறளையே திரித்ததாக அறிவித்தனர். 'வாக்குகள்' என் பது குறட்பாவை யுணர்த்துவதா? சொல்லை யுணர்த்துவதா? வாயை யுணர்த்துவதா? வாயையுஞ் சொல்லையும் அன்று; கருவியாகுபெயராய்ப் பாவை யுணர்த்திற் றென்பரேல், ஒருமையைப் பன்மையாக மயங்கினது, நன்னூல் தொல்காப்பிய மதங்கள் பற்றியா? தம் மதம் பற்றியா? தம் மதம் பற்றி யெனின், அம் மதம் ஈண் டெவர்க்குஞ் சம்மத மன்றாகலின் செம் மதமே சம்மதமாம் என்க. 'புலவனார் வந்தார்' என்பது போன்று, ஒன் றனையே பன்மையாக வுயர்த்திக் கூறினே மென்பரேல், கடா "2-ம் பக் கம், திரு மந்திரச் செய்யுளாலும், 8-வது பக்கம்-திரு மந்திரத் திரு வாக்கி னாலும், என்ற திரு வாக்கினாலும், -வது பக்கம்—என்னுந் திரு வாக்கால், 12-வது பக்கம் - ஞான வாசிட்டச் செய்யுளுக்கு, 13-வது பக்கம், என்றற் றொடக்கத்துச் செய்யுளால், 14-வது என்னுந் திருக் குறளுக்கு," என்ற இடங்களில், திருக் குறட்கும், மற்றைச் செயயுட்கட்கும் உயர்வு பற்றிப் பன்மைச் சொற் புணர்த்திக் கூறுத தேனை? ஓர் நூலிலுள்ள குறளை யோரிடத் தொருமைச் சொல்லாலும், ஓரிடத்துப்பன்மைச் சொல்லாலும், சகசாணவ வயப்பட்டு மயங்கிக் கூறிய இவர் தாமா முகவுரை யெழுதிய வரைப் புன் மொழி புகல்பவர்?

'தம் மனம் போனவாறு திரித்துக் கூறினை' ரென்றார். பாடபேத முள்ளவற்றைக் கூறுபவர், திரித்துக் கூறுபவராயின், பாடதே மென்

னுஞ் சொல் உலகில் வழங்கக் காரண மின்றே. அவ்வாறாயின், சிவ ஞான பாஷ்யத்திற் பாட பேத முள்ளனவாகக் காட்டப்பட்ட யாவுந் திரித்த தென் றுணர்ந்து சிவ ஞான சுவாமி புரட்ட னென் றங்கீகரிக்க நேரும். ஆகலின் பாட பேதங் கூறுவோர் திரித்தவ ராகார்; ஆகார். திருக் குறளில் பாட பேதம் பல வுள்ளன வாக, சென்னை, கோ – வடிவேலு செட்டியார், சோழ வந்தான் — அரசஞ் சண்முகனார், தூத்துக்குடி வ. உ. சிதம்பரம் பிள்ளை யென்பாரும், இன்னும் பலரும் அறிவித்திருக்கின்றனர். அவ்வாறே சில பாட பேதங்க ளுள்ள பிரதி முகவுரை யெழுதியவ ரிடத்து மிருக்கின்ற தென் றுணர்வாராக.

"காலத்தி னாற் செய்த நன்றி யொருவற்கு, ஞாலத்தின் மா ணெப் பெரிது." என்று கூட்டுக் கோன் முக வுரையி லச்சிட் டிருக்க, அதனைப் புரட்டிக் கடாவின் 18-வது பக்கத்து, 'ஒருவர்க்கு' என்று கூட்டுக் கோளி லிருப்பதாக அச்சிட்டனர். இவ்வா று இதனைப் புரட்டிய விவர் புரட்டை யெப் புரட்டிற் சேர்ப்பது? எழுத்துப் புரட்டிலா? சொற் புரட்டிலா? வாக்கியப் புரட்டிலா? செய்யுட் புரட்டிலா? நூற் புரட்டிலா? சமயப் புரட்டிலா? மதப் புரட்டிலா? புவனப் புரட்டிலா? அண்டப் புரட்டிலா? ஜகப் புரட்டிலா? ஜீவப் புரட்டிலா? சிவப் புரட்டிலா? இத் துவாதசப் புரட்டின் ஒரு புரட்டுச் சேர்த்துக் கொள்ளுமா று இனி யெழுந்துங்கா லெழுதுவாராயின், அந்தப் புரட்டுடையோ னென் றிவருக்குப் பட்ட ங் கொடுக்கலாம். அப் பட்டத்தைப் பெற்றுச் சைவப் பிரசாரகர் என்னும் பட்டத்துக்கு முன், புரட்டு என்னும் பட்டத்தையுங் கூட்டிப் 'புரட்டுச் சைவப் பிரசாரகர்' என்னும் பெயரோடு விளங்குவாராக.

"காலத்தி னாற்செய்த நன்றி யொருவற்கு (சிறி தெனினும்), ஞாலத் தின் மாணப் பெரிது", 'ஒருவனுக்கு இறுதி வந்த வெல்லைக்கண் ஒருவன் செய்த வுபகாரம், தன்னை நோக்கச் சிறிதா யிருந்தாயினும், அக் காலத்தை நோக்க நிலவுலகத்தினும் மிகப் பெரிது.' என்பது பரிமேலழகர் உரையாம். இதன் கண் 'ஒருவற்கு' என்னும் பதமும், 'சிறிதெனினும்' என்னும் பதமு மின்றி இவ் வுரை முடிவு பெறுதாம். ஒருவர் 'சிறி தெனினும்' என்னும் பாடத்தைக் கொண்டு, 'ஒருவனுக்கு' என்ற சொல்லை அத்தியாகாரஞ் செய் தனர். ஒருவர் 'மாணப் பெரிது' என்றதனனே 'சிறி தெனினும்' என்றது தானே பொருந்துதலின் 'ஒருவற்கு' என்னும் பாடத்தைக் கொண்டு 'சிறி தெனினும்' என்றதை அத்தியாகாரஞ் செய்தனர். ஆகலின், இருமையுஞ் சால்புடைத்தேயாம். இதனை யுணரா வரா னின்றி, முகவுரை யெழுதியார் மீது புரை யுரை கூறிப் புல் லொழுக் குடையோ ராயினர். முகவுரை யெழுதியவரைப் பற்றி விரித்திருப்பாராயின், அவர் தங் கல்வித் திறத்தை யிவ ளங்கொள்ளுமா று கண்டாங் கெழுதி யிறுத்திருப்பர். இக் கருத்துப் பற்றியோ விரிக்காது விடுத்தனர்?

"இப் புரட்டு முகவுரையை வாங்கிச் சேர்த்து வெளியிட்ட சுவாமியா ருக்குத், திருக் குற ளாராய்ச்சியுண் டென்று ஒப்புதல் கூடுமா? தாம் பயின்

றறியாத திருக் குறள், திரு மந்திரம், தேவாரம், திரு வாசகம் முதலிய நூற் களிற் றலையிட்டு, தாங் கற்ற நூல்களிலும், தமக்கு நுணுகிய ஆராய்ச்சி யுண்டோ? இல்லையோ என் றையுறச் செய்வதைவிடத் தம் மளவிற் ரும் அடங்குதல் முறைமை யென்பதை யினியேனு மறிந் தடங்குவாரா?" என் கின்ரூர்.

திருக் குறட் செய்யுள், சூட்டுக் கோலி லச்சிட்டிருப்பதனை, அறியும் தன்மை யில்லா இவர்க்கு, திருக் குற ளாராய்ச்சியேனும், சூட்டுக் கோலா ராய்ச்சியேனு முண் டென் ரெப்புதல் தகுமா? சூட்டுக் கோலைப் படித் தற்கு பாவ விசேடத்தாற் கண் ணின்ரு யினும், பிறர்வாயிலாகக் காதாற் கேட் டவ்வாரு யினு மெழுதலாம். அதற்கும் பாவ விசேடத்தாற் செவி மந்தமாயின், கண் ணில்லாக் குருடரும், கா தில் லா ச் செவிடரு மாய் வாதத்திற்கு வந்திடருறல் என் ன அறியாமை கொல்லோ? திருக் குறண் முதலிய நூல்களில் நுணுகிய ஆராய்ச்சியின் நின்ன யிரு ந்தமையா னன்ரே, சைவர்கட்குப் பாதகமான அவற்றின் செய்யுட்களை யெல்லா மறிவித்து வாதிட்டுக் கண்டித்தோம். இவர்க்குத் திருக் குறள் திரு மந்திரம் தேவாரம் திரு வாசகம் முதலிய நூல்களிலும், சிவ ஞான பாஷ்யத் திலும், சிவ ஞான வள்ளலார் சாஸ்திரம், தாயுமான சுவாமிகள் பாடல் முத லியவற்றிலும், ஞான வாசிட்டம் முதலிய வேதாந்த சாஸ்திரங்களிலும், 'ஐயம்போ லரந்தையுண்டோ' என்ரும் கையமுளதாமாயின், அதனை நிவர்த்திப்பான், பெரியாரைச் சரணகதியாக அடைந்து, கேட்குமாற்ரூற் கேட்டு, அவர் விளக்கு மாற்ரூல் விளக்கப் பெற்று, அவ்வழி ஒழுகி யடங் காது, ஐயத்தோடு வெளி வந்து ஊரே றன்ன மதர்ப்புற் ரூவாரித்த லெற் றிற்கு? இனியேனும் இக் கட்டாரி பெற்று அடங்குவாராக.

"சணப்பன் வீட்டுக்கோழி தானே விலங்கில் மாட்டிக் கொள்வது போன்று, யோசனை யின்றித் தாமே மாட்டிக் கொண்டார்." என்கின்ரூர்.

பிறர்க்குப் போட்ட சூட்டுக் கோலின் மத்தியில் நுழைந்து மாட்டிக் கொண்டு, தாழுஞ் சுடுண்டு, துள்ளித் துடித் தெழுந்து, கடாவிடுத்துக் கட் டாரியால் சரிருபத் திடத்துக் குத்துண்டு விழிப்பவர் இவரா? யாமா? தாம் சூட்டுக் கோலின் மாட்டிக்கொண்டதனை யுணராது, சூட்டுக் கோலான் மாட் டிக் கொண்டா ரென்று, கூறுதல் அறிஞர் கூற்ரு? அறிவிலி கூற்ரு?

"அவற்றுட் சிலவற்றை யீண் டெடுத்துக் காட்டினும்" என்ரூர். முழுமையு மெடுத்துக் காட்டி யிருப்பாராயின், தமது கடா முழு வுடலுங் கட்டாரியாற் குத்தப்பட்டு அங்கத் தன்மை பெற்றிருப்பர். இக் கருத்தே பற்றி முழுமையுங் காட்டவில்லை போலும்!

"எமது கேள்விக்கு எழுத்து மூலமாக விடை தரினுந் தருக" என்று கூறினமையின் இவர் கடாவை யடக்கற் கேற்ற கட்டாரி விடப்பட்டிருக் கின்ற தென் றுணர்வாராக.

"வாத சபை கூட்டி விடைதர எண்ணினும் நாம் சித்தமா யிருக்கின் றேம்." என்று கூறிக் கடாவை முடித்தார்.

இவ ரன்ன பல்லோரது தொல்லையும் ஒருங்கே யொழிப்பான் கருதி யே 'அந்வைதி' என்பார், "அத்வைதிகளை வாதத்திற்கு வர வழைத்த அசுத்த சைவ சித்தாந்திக் கோர் வாது வரை யறை" என்ற பெய ருள்ள பத்திரிகையைப் பல்லோரு மறியப் பகிரங்கப்படுத்தினர். அது கண்டு சைவ சித்தாந்திகள் வாதத்திற்கு வரும் வழி கூறுது, பல வெற் றுரை கூறிக் காலங் கழிக்கின்றனர். அச் சைவ சித்தாந்திக ளேற்படுத்துஞ் சபைக்கு, 'அந்வைதி' என்பார் கூறிய வாது வரை யறையின் பிரகாரமே, வேதாந்திகளை வாதத்திற் கழைப்பார்களாயின் அக்கா லச்சபைக் கிவர் வரின், இன்றே ரன்ன பிற நிகழ்த்திறுங் கண்டகஞ் செய்யச் சித்தமா யிருக்கின்றே மென் றுணர்வாராக.

இவர் பிறர்க்கிட்ட சூட்டுக் கோலைப் பெற்று, அதனைச் செவ்வனே யுணராது, முன் பின் மூ ணுற வுணர்ந்து, இருபது கடாக் கடாவினர். அதனால், "சூட்டுக் கோலாற் சுடுண்டு, தள்ளி யெழுந்த தூத்தக்குடி முத் தைய பிள்ளை கடா" என இவரைக் கடாவாகக் கொண்டு, அதனை யடக் கற் கேற்ற கட்டாரியாக, இப்புத்தக ரூபமான கட்டாரி விடப்பட்டமை யின் இந்நூற்குச், "சூட்டுக் கோலாற் சுடுண்டு, தள்ளி யெழுந்த தூத்தக் குடி முத்தைய பிள்ளை கடாவை யடக்குங் கட்டாரி" எனப் பெய ரீந்தா மென்க.

இனியேனும், பெரியார் நிந்தை, வேதாந்த சாஸ்திர நிந்தை, ஸ்ரீ சங் காசாரிய சுவாமிகள் நிந்தை, குறட் புரட்டு, வியாக்கியாநப் புரட்டு, பெள்வ் காகம வுரைப் புரட்டு முதலியவற்றைச் செய்யாது, பெரியாரைச் சரண் கதியாக அடைந்து வேதாந்த சாஸ்திரங்களை முறையாகக் கேட்டு அவ்வழி யொழுகித் தோல்வியுற்றதற்கும், நிந்தித்ததற்கும் எம்மவரிடத்து மன்னிப் புக் கேட் டுய்வாராக.

இவர் போன்றே, ஆரியம் அற்பங் கற்ற அந்திய தேயத்துறைந்தார், வே ரொருவரது பெயரைப் போர்த்துக் கொண்டு, கற்றூர் கண்டு கழித் தொதுக்கு மாறு இருபத் தைந்து விடயங்க ளெழுதிச் "சைவ சித்தாந்த வைபவம்" என்னும் மூக்கியப் பெயரையும், "நியாய கட்கம்" என்னுங் கௌணப் பெயரையும் இட்டு எழுதிய ஆபாசப் புத்தகம் ஒன்று மறைவாய்ச் சிற்சில விடங்களிலு நிலவுதல் கண்டாகம். அவ் வல வலை யொழிக்கக் "கட் கம்மெனும்ட கரளையைச் செயிக்கும் காமாரி" என்ற பெயருடன் கண்டகம் வெளியிடுகின்றேம். அதனையும், இவரும் அவருங் கண் டடங்கி யிடர்ப்படா தின்புறுவாராக.

உடைத்தம் வலியறியா ரூக்கத்தி னூக்கி
யிடைக்கண் முரிந்தார் பலர்.

அமைந்தாங் கொழுகா னளவறியான் றன்னே
வியந்தான் விரைந்து கெடும். 474

வெண்மை யெனப்படுவ தியாதெனி லெண்மை
யுடையம்யா மென்னுஞ் செருக்கு. 844

இகலின் மிகலினி தென்பவன் வாழ்க்கை
தவலுங் கெடலு நணித்து. 856

கூற்றத்தைக் கையால் விளித்தற்ரு லாற்றுவார்க்
காற்ருதா ரின்னு செயல். 894

எரியாற் சுடப்படினு மூய்வுண்டா மூய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகு வார். 896

வகைமாண்ட வாழ்க்கையும் வான்பொருளு மென்னுந்
தகைமாண்ட தக்கார் செறின். 897

சூட்டுக் கோலாற் சூடுண்டு
துள்ளி யெழுந்த தூத்துக்குடி முத்தைய பிள்ளை
கடாவை யடக்குங் கட்டாரி
முற்றுப் பெற்றது.

காள யுத்திரு ஐப்பசிமீ

கணபதி துணை.

சற்குருப்யோ நமः

குரு தோத்திரம்.

காருருவக் கமலமலர்க் கண்ணனிவர் வாகனமாங் கருடப் புள்ளின்
சீருருவத் தியாகிப்போர் திகழுமரா விடதீக்கஞ் சேர்ந்தாங் கெண்ணெண்
வாருருவக் கலைகடந்த காசிகா நந்தனெனும் வள்ளல் நாமந்
தோருருவைத் திருஞ்செபிப்போர் மடமையரா விடதீங்கி யுய்வா ரன்றே.

சீராரும் தென்மொழியும் வடமொழியும் பயின்றவற்றுட் சிறற்புற் றேர்ந்து
மோராரு மிலக்கியமும் மிலக்கணமுந் தருக்கமுமுற் றெளிதி னேர்ந்தே
பாராரும் வேதாந்தக் கேசரியாய்ப் பாசமயப் பகட்டை மாய்க்கும்
காராரும் தெருள்வள்ளல் காசிகா நந்தனடி கருதி வாழ்வாம்.

ஸ்வாமிநாத பிள்ளை.

சுவிஷ்துவாரி நியிஷ்டு ஜாதுஷாரா—
வீயஷிஷவா நஜ நிதம் சிவ காரஸிகாயாடி ।
சுநந்வ சிரஷ ஈஹி துஷ நரூவ்டி—
தஷா துஷிஷஷ்டும் நவ நாஷ ஶ்ரேதஸ் ॥

விஜ்ஜீயதாம் மீரம் காரஸி—
காநந்தாவெரா ஷஹா நாஷி ।
உஷ்தா ஷுகாஷஃ ஷம்ஷாரா—
ஷிஸுள ஷ்டாநு ஷாவஷ்டுஃ ॥

வி. ஆர். வேலப்ப பிள்ளை.

(*)

உசிவமயம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
1	14	சிவாதாரா	சிவாவதாரா
4	10	இன்றது	இன்றன
5	8	ஷடாந்த	ஷடந்த
,,	37	ஔள தென்	ஔள வென்
16	38	பிரத்தெரம்கா	பிரத்தெரம்சா
20	20	சாத்தியாசாமாரதி	சாத்தியசாமாரதி
24	16	பரிசிந்தனை	பரிச்சிந்தனை
26	6	செய்திருப்பரேல்	செய்யாதிருப்பரேல்
34	37	தோடயிலி யோகனை	தோடமிலி யேகனை
38	36	மேன்ன	மென்ன
52	30	ஹர	ஹ்மா
,,	,,	ஷ்ணு	விஷ்ணு
59	39	ஸ்ரீமாக	ஸ்ரீமாந்
75	33	சேயயுட்	செய்யுட்
76	18	யெழுந்துங்கா	யெழுதுங்கா
,,	39	ளாராய்சிச்	ளாராய்ச்சி
77	22	ரூவாரித்த	ரூஹாரித்த
,,	32	வுலடங்	வுடலுங்

ஸ்ரீ சாகிசுவராதிக ஸ்வாமிகள் இயற்றிய புத்தகங்கள்.

1. விஜய சக்தி (வெற்றி வேல்) — செந்திலாண்டவர் மேலாக உள்ள விசயத்திரளான்றிய சிற்றுரை கண்டனம்.
2. ஆட்சிச் சோல (முதற் பாகம்).
3. செந்தி இரண்டாம் பாகம். சென்னை விக்டோரியா ஸ்ரீசுப்பிரமணிய பாடல் மறுப்பு.
4. கடலை படைக்கும் கட்டாரி. ஸ்ரீ ஆறுமுக நாவலரின் கடவுள் மறுப்பு.
5. கட்டை வண்டி சாலியைச் செயிக்கும் சாமரி. சாமி யையர்யார் தேசிகர் கைவை சித்தாந்த வைபவ மறுப்பு.
6. சிவ சங்கராவதாரம். சென்னை விக்டோரியா சேசாத்ரி சாஸ்திரி மறுப்பு.
7. சங்கியாச விதி.
8. சமாதி விதி.
9. சங்கியாசப் பத்ததி மொழி பெயர்ப்பு.
10. பிரம்ம சூத்ர வசனம் மொழி பெயர்ப்பு. ரூ. 0—12—0
11. சான்றித்தாக்க லேசு தாத்பரிய சங்கிரகம். ஸ்ரீவாசு தேவப் பிரம்ம மேந்திர சரஸ்வதி ஸ்வாமிகள் விஷயத்தில் பதன் மொழி பெயர்ப்பு. 0—8—0
12. பிரம்ம சூத்திரமும் ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகள் பாஷ்யமும். 3—0—0
13. பிரம்ம சூத்திரம். ஸ்ரீ கண்டாசார்ய பாஷ்யம் 3—0—0
14. வேதாந்தப் பரிச்சேதம். சம்ஸ்கிருத மொழி பெயர்ப்பு. 0—4—0
15. சிவ வண்ண போத உரை. 0—8—0
16. தேசாசார வுரை 0—6—0

கைவல்லிய நவநீத மூலமும், துறவு சுவாமிகள் எண்ணும் ஸ்ரீ அருணாசல தூக தேசிக ஸ்வாமிகள் விஷயத்தில் பத சாரம் என்னும் உரையும். 1—0—0

"லோகோபகாரி" ஆபீசு,
சேலம் சுவாமிகள் பேட்டை,
சென்னை.

சற்குருப்பேறு கடன்.



வேத பாஷ்ய அவைதிக பாச பத தாந்திரிக துவைத சைவ தர்வாதியாகிய காரைக்குடி அறு பத்து மூவர் மடச் சோக்க லிங்கச் செட்டியாருக்குச் சூட்டிக் கோற் புச்சம்.

(இதில் பல வேதாந்திகள் எழுதிய 21 நோட்டீஸ்கள் அடங்கி யிருக்கின்றன.)

சென்னை, கோமளேசுவரன் பேட்டை,
சக்தி நாதந்தம் பிரஸில்
பதிப்பிக்கப்பட்டது.
1919.

காரைக்குடி அறுபத்து மூவர் மடச் சோக்க லிங்கச் செட்டியாரும், விஷ்ணு நிந்தை பெரியார் நிந்தையும்.

இவர் விநாயகர் புராணத்துத் தூர்வை யாசகப் படலமென்று பெயரிட்டு அச்சிட்டு வெளியிட்ட புஸ்தகத்தில், கோவிலூர் ஆண்டவரென்னும் ஸ்ரீ முத்தி ராம லிங்க ஞான தேசிக ஸ்வாமிகளைப் பலவாறு தூஷணமாக எழுதி யிருத்தலின், காரைக்குடி மு. கு. சித. குடும்பத்தாரையும் பிள்ளையார்பட்டிக் கோவில் நகரத்தாரையும் நிந்தித்த ராகின்றார்.

துறவு ஸ்வாமிக ளென்னும் ஸ்ரீ அருணாசல ஞான தேசிக ஸ்வாமிகளையும், கருணாநிதியென்னும் ஸ்ரீ சிதம்பர ஞான தேசிக ஸ்வாமிகளையும் தூஷித்திருத்தலின், தேவி கோட்டை பிச. அரு. அரு. குடும்பத்தாரையும், வி. சித. குடும்பத்தாரையும், இலுப்பைக் குடிக் கோவில் நகரத்தாரையும் நிந்தித்த ராகின்றார்.

ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிக ளென்னும் லோக குரு ஸ்வாமிகளைப் பலவாறு தூஷித் திருக்கின்றமையின், பிராமணர்க ளெல்லோரையும் நிந்தித்த ராகின்றார்.

பெரியோர்களைப் பரிபூரண மடைந்தவுடன் சமாதி வைக்காது காலிற் புரி கட்டி யிழுத்து முச் சந்தியிற் போடவேண்டுமென்று நிந்திக்கின்றார்.

ஸ்ரீ விஷ்ணு பகவான் நிந்தை மிகுதியாகச் செய்திருத்தலின், காரைக்குடியில் வேங்கடாசல பதியைக் குல தெய்வமாகக் கொண்ட நகரத்தாரையும், அரியக்குடி நகரத்தாரையும், நிந்தித்த ராகின்றார்.

வேத நிந்தை, பிராமண நிந்தை, வேதாந்த நிந்தை முதலியன பல வுள்ளன.

இவை யாவும் நியாயந்தானே வென்று இதைக் கண்ணுறும் நகரத்தார்களனைவரும் உணர்ந்து அவரது யோக்கியதையைத் தெளிவாக அறிவார்களாக!

25—11—17. சச்சிதானந்தம்.

கணபதி துணை.

சற்குருப்யோ நமः

காரைக்குடியி லிருந்து வெளிவரும் 'மதுரை மித்திரன்'

என்னும் பத்திரிகையில்

'கோவி லூர் உபந்நியாசப் பத்திரிகையின்

மேல் கேள்வி'

என்று தலை முழி சூடிக்கொண்டு

காரைத் திராவிடன் என்னு மறு பேரைத் திரமாக

இட்டுக் கொண்டு வெளிவர வறியாது ஒட்டிக் கொண்டு வெளிவந்த

காரைக்குடி ராம. செரா. செராக்கலிங்கச் செட்டியாரது

புரட்டுக் கடாரனை விரட்டும் வினை.

ஓ காரைத் திராவிடரே ! நீர் என் பேரைப் புரட்டத் தலைப்பட்டீர்? உம்மால் ஓட்டப்பட்ட கடிதம் பசையின்மையால் சற்றே பற்றுத லொழிய உமது உள்ள பெயரை உலகத்தாருக்கு அது வெளியாக்கி விட்டதே. ஓட்டுப் பெயர் உமக்கு ஓட்டாப் பெய ராயிற்றே. ஒரு சிறு கடிதப் பற்றை நம்பி யிவ்வித காலாகாலத்துக்கு நீர் ஆளாகலாமா ? பரிதாபம் ! உம்மால் விளுவப்பட்ட விரு வடங்கிய வியாசம் இராகஸ்வரு இப்பரிசு 14உயிர் நாகபட்டணம் செந்தமிழ்ச் செல்வி யென்னும் பத்திரிகையிலே ஓர் உலக உபகாரி என்பவரால், முன்னிருரு முறை பிரசுரிக்கப்பட்டிருக்கிறதே ! நீர் என் அவ் வுலக உபகாரி வியாஸத்தைத் திருடத் தலைப்பட்டீர். இதனுல் உம்மிடத்துப் புரட்டுத் தொழிலொடு திருட்டுத் தொழிலும் புகுதலாயிற்றே! நீரே அவ் வுலக உபகாரி யென்றீரோ, ஓர் விஷயத்தைப்பல பத்திரிகையில் வெளியிட நேரின், ஒரே பெயரை யன்றே கீழ் கைச் சாத்தாக இருத்தல் மரபு. அவ்வாறின்றி 'செந்தமிழ்ச் செல்வி' பத்திரிகையில் உலக உபகாரி யென்றும், காரைக்குடியிலிருந்து வெளிவரும் பிங்கள ஆவணி மாசுழியு மலரஞ்சனிப் பத்திரிகையில் காரைத் திராவிடன் என்றும் மாறுகொள வரையலாமா ? இதனுல் மாறுகொளக் கூற லென்னுங் குற்றம் நுமது தலையிற் றங்கலாயிற்றே ! இந்தத் திருட்டுக்கும் புரட்டுக்கும் இடையில் வேதாகம புராணேதி காசாதி சகல சாஸ்திரப் பண்டித ரென்றும், சுத்தாத்வைத சைவ சித்தாந்த சிகாமணி யென்றும், உண்மை யுணர்ப்போ னென்றும், நல்லொழுக்க நயந்தோனென்றும், பூரீ வன்மீகண்ட ரவர்கள் மாணாக்கர் என்றும், பலவித பெயர்களை யிரவல் வாங்கத் தலைப்பட்

டீர். இஃதென்ன விபரீதம் ! அத்தகைய பெறுதற்கரிய பெரிய பெயர்களை நீர் வகிக்க அநேக அரிய தவஞ் செய்தாலும் அவை யுயர்வு அடைக்குமா ? ஒருவாற்றானும் அடாது ! ஒரு போதும் அடாது !

" இல்லை ! இல்லை ! நான் பெயரை யிரவல் பெறவில்லை. அவர் தான் நான் நான் தான் உலக உபகாரி, நான் தான் ராம. சொ. சொக்கலிங்கச் செட்டியார். வயோதிகப் பருவ வலியால் இவ்விதப் புரட்டுத் தொழிலுக்குந் திருட்டுத் தொழிலுக்கும் என் மனம் புகுதலாயிற்று. பெயரைப் பற்றியேன் இவ்வளவு விவகாரம் " என்பீரேல், நுமது பெயரை யொரு நெறிப்பட எழுத அறியாத நீவிர் என்றோ? பிறர்பா லிலக்கணைக் குற்றங் கற்பிக்க எழுபவர் ? இவ்விதப் புரட்டுத் தொழிலுக்கு விதி யென்ற இலக்கண நூலில் வரையப்பட்டிருக்கிறது. நூற்புரட்டு, சரித்திரப் புரட்டு, மதப் புரட்டு, மதாசாரியர் புரட்டு, முதலிய பல புரட்டும் செய்துழல்வது போதாமல், இப்போது பெயரைப் புரட்டற்கும், நீவிர் தலைவீர். நுமது புன் செய்கை நன்று ! நன்று !! இதலால் உமது புரட்டுத் தொழில் வெளியான தாலே இனி உம்மைக் காணும் பள்ளிச் சிறாரும் " ஓ ! பேரைப் புரட்டும் தாயிடமே ! ' என்று எள்ளி நகைப்பா ரன்றோ ? இன்னும் அரசாங்கத்தாரால் விதிக்கப்பட்ட பெயர் மாறுட்டம் என்னுங் குற்றமும் உமது தலையில் வந்து விடியுமன்றோ ? " கோவிலூர் உபந்நியாசப் பத்திரிகையின் மேல் கேள்வி " என்ற அளவிலே, உமது கேள்வி, பத்திரிகையின் மேற் சென்றதை யொழிய, கோவிலூர் உபந்நியாசத்தின் மேற் செல்லவில்லையே ! உபந்நியாசத்தின்மேற் செல்லின் உபந்நியாசகர்களெல்லாம் பிரபல பண்டித சிகாமணிகளாகிய சாஸ்திரியார்களும் சாதுக்களும் ஆவார்களே ! அவர்கள் நுமது புரட்டுக் கடாவைச் சும்மாவா விடுவார்கள்? அப்பெரியோர்கள் பிரபல சுருதிப் பிரமாணங்களாகியகூட்டுக் கோலாற் குடிட்டுத்,தருக்க யுக்திகளாகிய தாற்றுக்கோலாற் தாறிட்டு,அநுபவமாகிய சாட்டை வாரால் புரட்டிப் புரட்டி ஓங்கி யோங்கி யடிக்கு மடியில் உமது புரட்டுக் கடா விரட்டப்பட்டு, புண் பட்டுக், குத்துப் பட்டுப் பொறி கலங்கி,நெறி மயங்கிப் புகுமிட மறியாது புலம்பித் தவிக்கத் தக்கவாவீர். அத்தோ ! பரிதாபம். இத்தகைய புரட்டுக் கடாவால் நுமக்குப் பொருந்தும் பயன் யாது ? உபந்நியாசப் பத்திரிகை யிப்போதுதான் கிடைத்த தென்றீரே! நீரே உண்மை யுரைப்போர்! இதே விஷயத்தைச் சென்ற ஈராண்டுக்கு முன் செந்தமிழ்ச் செல்வி யென்னும் பத்திரிகையில் வெளியிட்டபோது, " இப்போது தான் டீடி பத்திரிகையைப் பார்க்க நேர்ந்தது என்றீர் " இவ்வருடம் "மதுரை ரஞ்சனி" என்னும் பத்திரிகையில் வெளியிட்ட காலையில் " இப்போது தான் டீடி பத்திரிகை கிடைத்தது என்றீர். சென்ற காலத்தையும் இப்போது என்றீர். நிகழ் காலத்தையும் இப்போ தென்றீர். நீர் பத்திரிகையை வாசித்தது இராகஸ வருடத்தில் ஆனால் அது உமக்குக் கிடைத்தது இந்த வருடத்தில் ! இந்தக் கால் வேற்றுமை யும்மை யணைந்ததற்கு எந்த இலக்கண நூலில் விதி கூறுகின்றது. உமது

கால பலன் சரியா யில்லை ! அமைக. இவ் வருடம் உமக்குக் கிடைத்த பத்திரிகையில் நீர் கூறிய இலக்கண வழுப் பிரயோக மூள்ள வாக்கியமே காணப்பட வில்லையே. உமக்கு மதவாதஞ் சேட்டித்து, சமய பித்தந் தலைக் கேறி சாத்திர வைபம் மேலிட்டதால் உமது பெயரை யெழுதவும், விஷ யத்தை வெளியிடவும், வகை யறியாது, தட்டுக் கெட்டுத் தலைதடுமா றுகி றீர். கூடிய சீக்கிரத்தில் அம்முத்தோடங்கள்நீங்கத் தக்க கண்டன வோஷ திகளைப் பண்டித சிகாமணிகள் கொடுக்கப் பெற்றுய்வீர். அவ்வளவுதம் பெறுஞ் சுப திரத்தைப் பிரார்த்தித் தமைக !

நீர் உபந்நியாசப் பத்திரிகையிலுள்ள விஷயத்திற் சென்று ஆராய்ந்து, " தாங்கள் உபந்நியசிப்பிக்கும் உபந்நியாசமானது பலன் பெறவா ரில்லாத கோலாகலமே யன்றி வேறு யாது ? அதில் யாருக்கு என்ன பலன் ? இதற்கு விடை தந்தருளத் தங்களே மன்றாடிக் கேட்டுக் கொள்ளுகிறேன்" என்று முடிவுரை கூறி யிறைஞ்சினீர். நீர் வயோதிகரா யிருப்பதாலும், மிகவும் மன்றாடிக் கேட்பதாலும், உமக்கு விடை தந்தருள வேண்டியது அவசியமே யாம். கோவிலூர் பூரீதிருநெல்லை நாயகியார் ஆடிப்பூர மகோற்சவங் கொண்டாடக் காத்தில் கங்கணம் பூணுந் சுபதினத்தன்றே, அவ்வம்மையாரின் திருவருட் செல்வராகிய பூரீ ஆண்டவரது வேதாந்த மடாலயக் கட்டடத்தின் சந்நிதானத்திலே, நிறுவப் பெற்றுள்ள "பிரமவித்தி யாப் பிரசாரணி" என்னும் பெயரினையுடைய சபாநாயகியாரும், உபந்நி யாச மகோற்சவங் கொண்டாடத் தமது திருக்கரத்திலே, தங்கையைத் தட் டிக்கொண்டு, பனிரண்டு தினம் வரையில் ஆங்குக் குழுமிய பக்த கோடி கள் கேட் டானந்திக்கும் வண்ணம், பிரம வித்தியா சம்பந்தமான பற்பல பிரசங்கக் காட்சிகளைத் தந்தருளி வருகிறார் என்பது உலகப் பிரசித்தமே யாம்.

நீரோ, தூரத்தி லிருப்பவர் போலும், ஒன்று மறியாதவர் போலும், ' உமது பிரசங்கத்தைத்தக் கேட்பவர் யார் ? அவர் சொரூபத்தைச் சொல் லும் ' என்றீர். " உன்னை நீ யறிவா யாகி லுனக்கொரு நேருமில்லை " என்று பெரியோர் பணித்தவாறு, உமது சொரூபத்தை யுள்ளவா றுணர்ந் திருப்பீராயின், கேட்பவர் சொரூபத்தை யாம் சொன்று லுமக்கு அது பஞ்சுத் துய்யில் நெருப்பு பற்றியதுபோ லுடனே பற்றும். உமது சொரூப நிச்சயந்தான் உமக்குச் சூனியமாயிற்றே ! அப்படி யிருக்க; உமக் குச் சொல்லின் அது விழலுக்கிறைத்த நீர் போல் வீணுமன்றே? என்று லும் ஒருவாறு சொல்லக் கேளும். இவ்வருடம் மகோற்சவ காலத்திலே தேவிகோட்டை ஜமீன்தார் பூரீமான் அள. அரு. அருணாசலம் செட்டியா ரவர்களும், மேற்படி யூர் டிப்டி கலெக்டர் ராவ்பகதூர் பூரீமான் T. N. சிவஞானம் பிள்ளை யவர்களும், இன்னும் பற்பல பிரபல வித்தியா விநோ தர்களும் விஜயஞ் செய்திருந்த காலையில், எங்கள் பாம்பரை, வேதாந்த பாஸ்கரரும், நியாயச்சந்திரரும் ஆகிய பூரீ வீர. கட்டையகவுண்டி யவர் கள் ஈஸ்வர பக்தி யென்னும் விஷயத்தைப் பற்றி, மிக அழகாகவும் இனி

மையாகவும், விரிவாகவும், சுருதி யுக்தி யநுபவ சம்மதமாகவும், பண்டிதர் பாமரர் முதலிய பலரும் கேட்டுச், சிரக் கம்பமும், கரகோஷமும் செய்து ஆநந்தங் கொள்ளும்படியாகவும், ஓர் அற்புத உபந்நியாசம் புரிந்தார்கள் என் பது யாவரும் உணர்வர். அப்போது கண்ணியமும் புண்ணியமும் நிறை ந்த அவ்வதிகார புருஷர்கள், " ஓ சுவாமிகளே ! நீங்கள் தாம், ஈஸ்வர னில்லை, சகத்தில்லை, சிவனில்லை " என்று சொல்லுபவர்க ளாயிற்றே ! அவ்வாறிருக்க, ஈஸ்வர பக்தியைப் பற்றி நீங்க ளுபந்நியசிப்பது எவ்வாறு பொருந்தும் ?" என்று அந்தச் சுவாமிகளே என் கேட்கக் கூடாது ? நும் போன்ற நுண்ணுணர்வு அவர்களுக் கில்லைபோலும். அவர்க ளவ்வாறு விஞவி யிருப்பின், அதற்கேற்ற விடையை அச்சமயம் அந்தச் சுவாமிகள், அவர்கள் மனத்திற்குப் பொருந்தும் வண்ணங் கூறி யிருப்பார்கள். நீர் பெற்ற செல்வமும், கல்வியும், அதிகாரமும் அவர்கள் பெறவில்லைபோலும். உம்மைப்போல், பெர்ய்யும், புரட்டும், புனைசுருட்டும் பொருந்திய வுலுத்த குணமுள்ளவர்களா அப் புண்ணிய சீலர்கள் ? அவர்கள் கல்வியை நல்லா சிரியர்பால் வான் முறையாகக் கற்று வேதாந்த சித்தாந்த சாஸ்திரங்களின் தாரதன்மியத்தையும், அந்தரங்கத்தையும், கசடறத் தெளிந்து, வித்யா பூஷ ணம் பூண்டு, விளங்கும் உத்தமப் பிரபு சிகாமணிகளெனப் பல்லோராலுங் கொண்டாடப் பெறும், பாக்கியமுற்ற பெருந்தகையாளர்க ளன்றே ? இவ் வாறு ஜமீன்தார்களும், கலெக்டர் முதலிய அதிகார புருஷோத்தமர்களும், மற்றும் எவ்வளவோ சாஸ்திரிகளும், நகரத்தார்களும், சாதுக்களும், பிற ரும், ஒவ்வொரு வருடமும் எமது சபைக்கு விஜயஞ்செய்து, ஆங்கு நடை பெறும் உபந்நியாசங்களைக் கேட்டுப் பலவித ஆசிமொழிகூறி யானந்த பர வச மடைந்து வருகிறார்களென்பது அவ்வவ்வருடத்தில் வெளியிடப்பெ றும் எமது சபையின் அறிக்கைப் பத்திரத்தால் நன்கு விளங்கும். அவ்வா றிருக்க, உபந்நியாசம் நடைபெறு மிடமாகிய இக் கோயிலாருக்கு ஒரு மைல் தூரத்திலே நீவிர் குடியிருந்தும், எமது உபந்நியாசங்களைக் கேட்டுப் பயன்பெறத் தக்க ஆசுழ் வலியின்றிப் போகுழ் வலியின் புணர்ப்பினாலே இவ்விடம் வருவதற்குக் காவில்லாத முடவரும், மகோற்சவக் காட்சிகளைக் கண்டு களிக்கக் கண்ணில்லாத குருடரும், உபந்யாச மொழிகளைக் கேட்கத் தக்க செவியில்லாத செவிடரும், உபந்நியாசங் கேட்ட பாவாணர்கள் பல் லோரும் பற்பல பாடல்களால் பலவாறு புகழ்ந்து கொண்டாடுவதைப் போல் புகழ்ந்துகூறத் தக்க வா யில்லாத ஊமையும், நீவி ரானீரே என்ப தைக் குறித்து மிகவும் விசனிக்கின்றேம். பற்பல நகரத்தார்களும் நீண்ட தூரத்தி லிருந்தும் வந்து கேட் டானந்திக்கிறார்கள். நீரோ ஒரு மைல் தூரத்திலிருந்தும் வந்து கேட்டற்கு உமக் கிடங்கொடாத உம்முடைய ஊழ், போகுழ் என்பதற்கு வேறு பிரமாணம் வேண்டுமோ ? இதுவே போதிய சான்றும். ' தண்டா மரையி னுடன் பிறந்தே தண்டே னுகரா மண்டூகம்' என்ற பெரியார் வாக்கிற்கு நீரே கரியானீர். அந்தோ ! நமது போகுழ்வலி போனவா றென்னே !

வேத வேதாந்தங்களி னுண்மையை யுணர்ந்து, அவைபரியி லுறைத்து நின்று ஆனந்த மயமாகிய மோக்ஷத்தை அனைவரும் அடையும் வண்ணம், எம்முடைய குலமணியா யவதரித்து, இளமையிலேயே சற்குருவை யடைந்து, அவருக் கிடையரூத் தொண்டு பூண்டு, வித்தையை விதிப்படி பயின்று, அது கூறிய அடக்கம், அன்பு, அருள், வாய்மை, வயிராக்கியம், முதலிய உத்தம குணங்களை யுற்று, சாதந சதுஷ்டயங் கைவரப்பெற்று, தேக சுதந்தரம், போக சுதந்தரம், ஜீவ சுதந்தரம் முதலிய பாவற்றையுஞ் சர்வ சுதந்தரமாகத் தன்னை யாட்கொண்ட குருபாலுக்குத் தத்தஞ் செய்து விட்டு, துறவொழுக்கம் பூண்டு, ஒப்புயர்வற்ற ஆனந்த பூரணராய் சுவாமி பூதி மகாலிபாவராய் விளங்கும், பரம கருணாநிதியாகிய ஓர் ஞானசிரியர் உமது அருகே ஒரு மைல் தூரத்தி லெழுந்தருளி யிருந்து தம்மை யடைந்த பக்குவர்களுக்கு ஞானோபதேசம் செய்து கொண்டிருக்க, அப்புண்ணியத் தலைவ வழிபட்டு நும தையத்தைப் போக்கிக் கொள்ளக் கருதாது தான் தோன்றித் தம்பிரானைப் தமிழிலுள்ள சிற்சில இலக்கண இலக்கியங்களைக் கற்ற மாத்திரத்திலே யிறுமாப்புற்று, பிரமம், கூடஸ்தன், ஈச்வரன், சீவன், சகத்து, என்பனவற்றின் பொருள்களைக் கண்டவர்போல், பலவாறு பிதற்றலானீர். நீர் இவ்வாறு கண்ட கண்ட விடங்களிலெல்லாம் பிதற்றிக்கொண்டு திரிதலை யுணர்ந்தே, ஒவ்வொரு வருடத்தும் இவ்வூர் உற்சவப் பத்திரிகையிலும், உபந்நியாசப் பத்திரிகையிலும், " ஜய மிருப்படவீர்கள் வந்து கேட்கும் சாஸ்திர விஷயமான கேள்விகளுக்குத் தும்ப உத்தரங் கூறப்படும் " என்றும் வெளியிட்டிருக்கின்றோம். இஃதிங்ஙனமாக, பத்திரிகை வாயிலாக ஆத்ம ஞானத்தை யடையப் பார்க்கிறீர் நீர். பன்னிரண்டு வருடம் ஞானசாரியர் பாதத்தைக் காத்தவருக்கும் விளங்குதற்கரிய பிரம ஞானம், உமக்குப் பத்திரிகை வாயிலாகவா விளங்கும் ?

" சூரியனே பொந்துக்குள் நுழைந்து விட்டான். வெளியில் வர வழி தேரிய வில்லையென்று ஓங்கி, அதற்காக வெளிச்சம் காட்டுகிற வர்கள், சாஸ்திரிகளும், சாதுக்களுமாகக் காட்டுவிக்கிறவர்கள் தாமுமா யல்லவோ முடிந்தீர்கள் " என்று பிதற்றுகிறீர். உம்மைப்போல், " பெயர் வெளிப்பட்டால் பெருமோசமாகும் " என்று பயந்து பத்திரிகையில்கூட கோபாய் எதிர்த்துநின்று வாதம் புரிய முன்வர ஆற்றாது, ஓட்டுப் பெயரை யொட்டிக் கொண்டு, வெளிவருபவர் யாங்களல்லர் என்பது உலகத்தார் அறிந்த விஷயமேயாம். ஆயிரக் கணக்கான பொருளைச் செலவிட்டு, பல தூரத்திலிருந்து பற்பல பண்டித சிகாமணிகளை வரவழைத்து, பல்லாயிரஞ் சனங்கள் மத்தியில், ஒவ்வொரு வருடமும் பன்னிரண்டு நிமிஷ வரையில், எமது மத சித்தாந்தத்தை வெளியிட்டு வருகிறோமென்பது ஜகத்தார்களும் பிறரும் அறிந்ததேயாம். இஃதிவ்வாறு பிரசித்தமா யிருக்க, யாங்கள் பொந்துக்குள் விருந்து கைகாட்டுகிறோமா? நீர் கடிதத்தைமேலே யொட்டிக்கொண்டு ஒளிந்து சந்துக்குள் னிருந்து கைகாட்டுகிறீரா? இதனை நீரே யுற்றுநோக்கி யொரு தெறி யடைவீராக! வேத சம்பந்தமான அத்து

வித மதத்தின் கோட்பாடுகளை யுள்ளவா றுணர்ந்துரை யாடாது, திரிபுணர்ச்சிகொண்டு, வேதாந்திகள் ' சுவர்வானில்லை, செகத்தில்லை, சீவனில்லை, பாவ புண்யமில்லை, சுவர்க்க நரகமில்லை, பந்த மோக்ஷமில்லை என்று சொல்லுகிறார்கள் என்று ' பற்பல புரட்டுப் பத்திரிகைகளையும், பொய்ச் சரித்திரங்க ளடங்கிய, பகட்டுப் புத்தகங்களையும் நீர் வெளியாக்கிவிட்டால், ' உலகப் பிரசித்தியுற்ற கோவிலூர் மடாலய சாதுக்களிடத்திலும், வேதாந்திக ளிடத்திலும், நகரத்தார்களும் பிறரும் விருப்பங் குறைவார்கள் ' என்று நீர் எண்ணிய அவல எண்ணம், ஆயிரங்கோடி சென்மமெடுத்து, அக்கினி மத்தியிலே, ஊசி முனையிலே, ஒருவிரலூன்றி நின்று அருந்தவம் புரிந்தாலும், நிறைவேறத் தக்கதன்று என்பது அறிஞர்கள் அறிந்ததேயாம். '' மேலே உமது கால பலன் சரியாயில்லை என்று '' சுட்டப் பட்டிருக்கிறதன்றோ ? அதனால், நீர் அவலமதி கொண்டெழுதிய '' விநாயக புராணத்துள்ள தூர்வை யாசகப் படலம் '' என்ற நூலில் உம்மால் புனையப்பட்டுள்ள புரட்டுகள் பலவும் கூடிய சீக்கிரத்தில் புத்தக ரூபமாக வெளிப்படுத்தப்படும். அதனையுங் கண்டு உம தவல மதிக் கிரங்கி மன மழுங்குவீராக !

இதனைக் கண்ணுறும் நகரத்தார் முதலிய யாவரும், அப்புத்தகத்தையும் இலவமாகப் பெற்று வாசித்து, இவரது திருட்டுத் தொழிலையும், புரட்டுத் தொழிலையும் தெளிவாகக் கண்டு இவருக்கு இடித்திடித்துப் புத்தி புகட்டுவார்களென, எமது ஆண்டவ ரென்னும் பூரீ முத்து ராமலிங்க தூத தேசிக சுவாமிகளின் திருவடிக் கமலங்களைச் சிந்தித்து வாழ்த்தி வந்திக்கின்றேம்.

பிங்களவரு
பங்குனிமீ 14உ

இங்ஙனம்,
காரியதரிசி,
பிரஹ்மவித்தியாப் பிரசாரண சபை,
கோவிலூர்.

காரைக்குடி

ஸ்ரீமத் ராம. சொ. சொக்க லிங்கச் செட்டியா ரவர்கள்

செய் துள்ள

பல புரட்டுப் பிரபல புரட்டு.

கொத்தமங்கலம்

(தந வைசியனது தப் பபிப்பிராயத்தைத் தண்டித்தல்.)

அறிவிற் சிறந்த அன்பர்காள் ! நந வைசிய நண்பர்காள் !!

காரைக்குடி, ராம. சொ. சொக்க லிங்கச் செட்டியார் என்பார், பற் பல சற்குணங்களும் நிறைந்த மகா வுத்தம ரொன்றும், அற்பமும் குற்ற மற்ற அவரிடத்து இல்லாத புரட்டுத் திருட்டு மூதலிய சில ஈன குணங்க ளைக் கற்பித்து, யாம் புரட்டுப் பத்திரிகை வெளியிட்டிருக்கின்றே மென் றும்' கொத்த மங்கலம்—தந வைசியன் என்னும் பெயர் பூண்ட ஓர் நண் பர் " சைவ பரம்பரைத் தந வைசிய நகரத்தார்களுக்கு விருதாபகம் " என்ற பெயரை யுடைய பத்திரிகை யொன்று வெளியிட் டிருப்பதாகக் காணப்படுகிறது.

இவர் மேற்படி செட்டியா ரிடத்துத் தனக்குள்ள அபிமானத்தா லவ ரைப் புகழ மூன் வந்து, " கணைகொடி தியாழ்கோடு செவ்விதாங் கன்ன, வினைபடு பாலாற் கொளல்." என்ற தேவர் திருவாக்கை யறியு மியல்பில ராய், எம்மிடத்தில்லாத பல வீன குணங்களையுங் கற்பித்து, உண்மை யறி யாத அறிவிலி யெனத் தன்னை வெளிப்படுத்திக் கொண்டார். " பாவ னயாத அறிவிலி யெனத் தன்னை வெளிப்படுத்திக் கொண்டார். " பாவ சோற்றுக்குப் பதம் ஒன்று " என்னும் பழமொழிக் கிணங்க, இந் நண்ப ருக்கு, அச் செட்டியார் செய் துள்ள புரட்டுகள் பலவற்றுள், உலக மறிந்த ஒன்றை உள்ளவாறு இதனடியி லெடுத்துக் காட்டி, உண்மை யுணர்த்தி அறி வுறுத்தி இவர் கொண்ட தப் பபிப்பிராயத்தைத் தகர்த் தெறிப்பாம்.

ஓ தந வைசியரே ! நன்றாய்க் கவனியும். நீவிர் கபடறக் கற்றவரா யிற்றே. உல கெங்கும் புகழும் எமது பரம குரவசாரியராகிய, கோவி லூர் ஆண்டவர் என வழங்கும் ஸ்ரீ முத்தி ராம லிங்க குரு தேசிக சுவாமி களின் " சுவாநுபவத் தீந வாக்கு " என்னும் நூலில்,

" வானுடர் மனம்பொருந்தும் வாழ்வு நினையாதே மண்ணுடர் பதி யடையும் வாழ்க்கை நினையாதே, நானுனென் நிலவாழ்வில் நண்ணியுழ லாதே நாலிரண்டு சமயநெறி நாடியலை யாதே, ஆனவித அத்தவித நினை

யமற வாதே அகம்புறமும் ஒருருவை யன்றியுண ராதே, தேனுடுங் காவின்மலர்த் தேனுறு பாயுந் தென்கழனித் திருவெல்லி யின்பாத நாடே" என்ற திரு வெல்லி யம்மை ஸ்தோத்திர ரூபமாகிய இத் திரு விருத்தமும், ஒன்று.

" ஒளியப் போய்த் தலையாரி வீட்டில் ஒளிந்தான் " என்னும் முது மொழிக் கிணங்க, நீர் புகழத் தலைப்பட்ட மகா வுத்தம குண சிகாமணியா கிய செட்டியார் தாம் வெளியிட்டுள்ள 'வேதாந்தம்' என்னும் ஓர் சிறு ஆபாசச் சுவடி பீற்றிற் பதினேழாம் பக்கத்திலே, வேதாந்த நெறி யொழு குங் கோவிலூர் மடாலய சாதுக்களை மாயா வாதியரென்று கூறி, அவர் கள் கொள்கையைக் கண்டிக்கத் தலையிட்டு அதற்கு மேற்கோள் தடவிப் பார்த்துப் பரமாத்வைத சித்தாந்தம் நிலைநிறுத்தப் பெற்ற இத் திருப் பாட லிலே, " நானெனன் றில்வாழ்வில் நண்ணியுழ லாதே " என்ற பாகத்தை " நாம் பிரமம் என்று சொல்லி நண்ணியுழ லாதே " என்று அவல மதி கொண்டு புரட்டி யச்சிட்டு வெளியிட் டிருக்கிறீர். இவர் இவ்வாறு செய் தது, உண்மை யுணராது அவசரப் புத்தி கொண்டு நடுவிலே தவறி வெளிக் கிளம்பிய நும்போன்றவரை யேமாற்றவா? அல்லது வேதாந்திகளை யேமாற்றவா? அவ்விரு நூற்களையும் ஒப்பிட்டுப் பார்த்து, உண்மை யுணர் ந்து, உமது செட்டியாரின் வஞ்சச்செயலை நெஞ்சாரக் கண்டு, அவரது புரட் டேத்தை நாறும் பெருவாயை யடக்கி யொழுகுவீராக!

நீர் எம்பால் வீணை சுட்டிய பல புரட்டில், ஸ்ரீ ஆண்டவரது அநுப வாமிர்த அருள்வாக்கையே புரட்டி யச்சிட வெளிவந்த மகா பாவியினும் பாவியாகிய நுமது சற்குணச் செட்டியார் செய்துள்ள இந்த அண்டப் புர ட்டை யெந்தப் புரட்டி லினைக்கக் கருதுகிறீர்? எழுத்துப் புரட்டிலா? சொற் புரட்டிலா? வாக்கியப் புரட்டிலா? சாஸ்திரப் புரட்டிலா? நீர் காட் டிய எல்லாப் புரட்டும், இந்த ஒரு புரட்டிலேயே யடங்கத் தக்கதாய், நும் மையும் நீர் புகழத் தலையிட்ட செட்டியார் தம்மையும், இம்மையினும் மறு மையினுந் துன்பப் படுகுழியில் வீழ்த்தத் தக்க பெரும் புரட்டாமே யிது. 'புலந்தரு நூலி னில்லாப் பொருளினைக் கூறுவானும்' அவனைப் பெரிதும் புகழ்ந்து கொண்டாடுவானும், மிக்க இழிந்த குலத்தவ ராவா ரென்று முன் னோர் நூல் பல முறையிடுகின்றன. இது பற்றியே 'நலத்தின்கண் ணூரி ன்மை தோன்றினவனைக், குலத்தின்க ணேயப் படும்' என்ற பொய்யா மொழியு மெழுந்தது. நீரோ தக வைசிய ரெனப் பெயர்கட்டிக்கொண்டு வெளிவந்திருக்கிறீர். 'அரச மரத்தைப் பிடித்த சனியன் பிள்ளையாரையும் பிடித்தது' என்னும் பழ மொழிக்கு உமது தலைவிதி யிலக்கானதைக் குறி த்து விசனிக்கின்றேம். புரட்டுந் திருட்டும் யாரிடத்துள்ளன என இதனை லேனுந் தெரிந்துகொண்டீரா? இவ்வாறே உமது செட்டியாரது புரட்டுக் களை யெல்லாந் திரட்டி யெழுதப்புகின் அது பெரும் புராணமாக விரியுமே.

தூர்வை யாசகப் படல மென்ற நூலில் உமது சற்குண சிகாமணி யாகிய செட்டியார் செய் துள்ள புரட்டுகள் பலவற்றையும் 'தூர்வை யாசகப் படல ஆராய்ச்சி' என்று எம்மால் வெளிப் படுத்தப் பட்டிருக்கும் நூலினைப் பெற்று, நடுநிலைமின் முராய்ந் தறிந்து, 'இவ்வாறு புரட்டு நூற் களை வெளியிட்டு நமது மதத்தை வளர்த்தல் ஒரு பிழைப்பாமா?' என்று நீர் புகழத் தலையிட்ட செட்டியாருக் கிடித் துரைத்து, இனியேனும் பெரி யாரை யிகழத் தலை நீட்டாது பெட்டிப்பாம் பென அடங்கி யொழுகுவீ ராக!

ஓ! கசடறக் கற்றவரே! பெயர் எழுதத் தெரியா தென்ற எமக்கு, அத னைக் கசடற வெழுதுவ திவ்வாறென் முயினும் விளக்கினீரா? 'விரட்டு' என்ற சொல், நமது நகாங்களில், 'மஞ்சு விரட்டு' என்று சிறுவர்களும் வழங்கக் காணும்படி யிருக்க, அஃதொரு தமிழ்ச் சொல் லன்று என்று புரட்டுகிறீரே! அதனல் நீர் சொற்புரட்டர் என்னும் பட்டங் சூடப் பார்க் கிறீர். இதனைப் பற்றி விரிக்க இப்பத்திரிகை யிடந்தரா தாதலின் பின் னெருமுறை விவகரிப்பாம். எமது கல்வி யறிவையும், நமது செட்டி யார் கல்வி யறிவையும் பற்றி, உம்மூர்க் கும்பாபிஷேகப் பத்திரிகை வர லாற்றை மகா-ரா-ரா-ஸ்ரீ உமது நகரவைசிய பிரபுக்கள் கூறக் கேட்டு நன்கு தெளிவீராக? உண்மை யுணராது பக்க வாதங் கொண்டு நீர் சிற்றறிவின் மேலீட்டால் எம்மைத் தூற்றிய பல வசைமொழித் திமிரம் இவ் வுண்மை விளக்கத்தாற் றிசைகெட் டோடு மெனத் தெரிந் தடங்குவீராக!

நகர வைசிய பிரபுக்களே! நம்மவர்கள் இன்றும் நியமமாகப் பாராயண ஞ் செய்து வரும், நமது ஆண்டவர் சுவாநுபவந் திரு வாய்மலர்ந்த இந்தச் சொக்க லிங் கச் செட்டியாரது வஞ்ச நெஞ்சங் கொஞ்சமும் அஞ்சுமா, பன்னெடுங் காலத்துக்கு முன் னிருந்த சநக மகா ராஜா முதலிய பெரியோர் கொள்கை யைப் புரட்டிக் கூறுவதற்கு? இதனை நீங்களே உற்று நோக்கி இவர்களுக் குச் சற்புத்திகூறுவீர்க ளெனக் கருதுகிறேம்.

இங்ஙனம்,

கரியதரிசி,

பிரஹ்ம வித்தியாப் பிரசாரண சபை,

கோவிலூர்.

காளயுக்திவரு
வைகாசிமீ 1உ

சிவ மயம்.

ஒரு சற் காரிய தரிசியின்

மத வாத வலிப்பின்

திமிர்ப்பை யடக்குந் தண்டம்.

அறிவிற் சிறந்த பெரியோர்களே !

நமது நாட்டிலுள்ள கோவிலூர் மடாலயமானது பிரம ஞாநப் பெரு வள்ளலாகிய ஸ்ரீ முத்தி ராம லிங்க ஞாந தேசிக சுவாமிக ளவர்களால் சென்ற நூற்றாண்டில் ஸ்தாபிக்கப் பெற்று, அத் திரு வருளாளர் கட்டளை யின் வண்ணமே இந் நாள் வரை அவரது அடியார்களாற் செவ்வனே பரி பாலிக்கப் பெற்றுச் செழித் தோங்கி விளங்குகின்ற தென்பது உலக மறி ந்த விஷயமே யாம். தற்காலம் அம் மடாலயக் கருத்தராய் விளங்கும் ஸ்ரீலஸ்ரீ அண்ணாமலை ஞாந தேசிக சுவாமிகள் வித்தியாபிவிருத்தி செய் யின் பலவித நன்மை பயப்பதாகும் எனத் திருவுளங் கொண்டு, ஜீவ கருணை மேலீட்டால் சென்ற பிரமாதீச வரு ஸ்ரீ ஆண்டவர் குருபூஜா சுப தினத் தன்று 'பிரம வித்தியாப் பிரசாரண சபை' என்னும் பெயருடன் ஒரு சபை யை ஸ்தாபித்து, பல ஜாதி லிருந்தும் பல பண்டிதர்களை வர வழைத்து, அநேக அரிய பெரிய வித்தியா விஷயங்களை யுபந்யசிக்கச் செய்து, அவர் களை யாதரித்து வருகின்றார்க ளென்பதும் யாவரும் உணர்ந்த விஷயமாம்.

இவ்விதம் வண்ணம் பிரஸித்தமா யிருக்க, காரைக்குடி ராம. சொ. சொக்க லிங்கச் செட்டியா ரென்பவர், கோவிலூரையும், அதில் நடை பெறுஞ் சபையையும், அச்சபை சம்பந்தமான பிறவற்றையும் அறியாதவர் போல், "கோவிலூர் உபந்யாசப் பத்திரிகையின் மேற் கேள்வி" என்று ஒரு வியாச மெழுதி, பலவித மாறுபட்ட கையெழுத்துடன் பத்திரிகையில் வெளியிட்டார். அப்புரட் டுரையைக் கண்ட ஷை சபைக் காரிய தரிசியார், "புரட்டுக் கடாவை விரட்டும் விடை" என்ற பெயரை யுடைய ஒரு தனிப் பத்திரிகையை வெளியிட்டார். அந்த அதி கம்பீர விடையா லறை யப்பட்டுப் பல விடத்துங் குத்துண்டு, பல்லோராலும் மொத்துண்டு, மன மழுங்கி யயர்ந்து, இருக்கு மிடம் தெரியாது பதுங்கிக் கிடந்த அப் புரட் டுக் கடா, தற் சூழ்ந்த வருக்கும் தனது புரட்டுத் தொழிலைக் கற்பிக்குங் கருத்தை யுட்கொண்டு, "சற் காரிய தரிசி" என்ற வோர் சாமானியரை வெளிக் கிழுத்து விட்டது. இது விந்தையிலும் விந்தையே யாம். அச் செட்டியாருக்குப் பீடித்திருந்த மத வாத வலிப்பு, இச் சற் காரிய தரிசிக் கும் ஒட்டிக்கொண்டமையால், அத் துர்நோய்களைத் தவிடு பொடியாக்கும் பரம ஔஷத மெனப் பெரியோர்க ளநுபவித்துக் கைகண்ட இந்தத் தண்

டச் சாற்றில், இந்தச் சற்காரிய தரிசிக்குங் கொஞ்சங் கொடுத்து, அவ் வலிப்பா லுண்டாகிய இவரது திமிர்ப்பை யடக்கி, விஷயத்தை விளக்கு வாம்.

ஓ! சற்காரிய தரிசியாரே! நீவிர் விளக்கினவை யாவும் பலவித வகை யாகிய அசத் காரியமா யிருக்க, உமக்குச் சற்காரிய தரிசி யென்னும் பெயர் எவ்வாறு பொருந்தும்? ஆதலால், நீவிர் அப்பெயரைப் பெற்று வந் தது, கண் ணில்லாதவர் பொன்னாம் பூண்டு வந்தமை போலாம். ராம. சொ. சொக்கலிங்கச் செட்டியார் "காரைத் தீராவிடன்" என்னும் பெய ரை யொட்டிக் கொண்டு வெளி வந்தது, பத்திராதிபர் குற்றமே யொழிய, செட்டியார் சம்மத மன்று என்று புரட்டத் தலைப்பட்டீர். நுமது பொய் யுரை மிக நன்று நன்று. நீவிர் குறித்த பத்திராதிபர்களது திருக் காத்தா லேயே அவரது அச்சுவாகனத்தில் மூன்று திநம் வரையி லலங்கரிக்கப் பெற்று அவ்விடை வெளிப்பட்ட தென்று காணப்படுகிறது. நீர் சொல்வ துண்மையானால், அப்பத்திராதிப ரதனை வெளிக் கிளம்பாது தடுத்தல் வேண்டுமே. அல்லது, அது வெளி வந்த பிற்றை நாள் வரையில் என் அவர் அதைத் தடுக்க வில்லை? தம் குற்றமாயின், நீர் சொல்லியபடி, தாமே செய்ய முன்வந் திருப்பர். ஆகையால், செட்டியாரது புரட்டுத் தொழிலைப் பத்தி ராதிபர் மே லேற்றிக் கூறுவது பேதைமை யன்றி வே றன்று. கரும்பு கசப்பது கரும்பின் குற்ற மென்று கருதுவதோ டொக்கும் நுமது புல்லு ரை. அடங்குக!

"அவர் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லு மாற்ற லின்றி" என் நீர். அவர் என்ற சுட்டு யாரைச் சுட்டியது. பத்திராதிபரையா? அல்லது செட்டியாரையா? நுமது வசனத்தாலும் கேள்விக் குரியவர் வெளிப்படா தொழியவே, அது விடையிறுக்கப் படுவ தண்டோ? அத்தகைய அக்கேள் வி "அறிவு அறியாமை....." என்று வருக்கப்பட்ட அறு வகை வினுக் களு ளடங்காது, ஆபாசமாய் விளங்கியதால், அதற் கேற்ற விடையாற் ருக்கப்பட்டு மறிபட்டது. காரிய தரிசியின் பத்திரிகை வச வென்றீர். நுமது செட்டியாரது புரட்டுக் கடாத்தான் "சூரியனே டொந்துக்குள் தழைந்து விட்டான். வெளியில்வர வழிதெரிய வில்லை யென் றிரங்கி, அதற்காக வெளிச்சங் காட்டுகிறவர்கள் சாஸ்திரிகளும் சாதுக்களுமாக, காட்டுவிக்கிறவர்கள் தாங்களுமா யல்லவோ மூடிந்தீர்கள்" என்று டெரும் வசனவைச் சுமந்து வந்த தெனவும், காரியதரிசியின் விடை அக் கடாவுக்கு உள்ள வாறே யறைந்த தெனவும் உலக மறியும். இன்னும், "நுமது செட்டியார் சற் காரியங்களிலேயே தமது கருத்தைச் செலுத்துபவர்" என்று விளக்கு மாற்றை மேற் கொண்டீர். அவருக்கு இராப்பகல் வேதாந் திகளே மாயா வாதி யென்று சொல்லவும், ஜகத்குரு ஸ்ரீ சங்கராசாரியர் ஓர் நல்லாசிரிய ரன்று, சாமானிய மனிதரே யென்று ஸ்தாபிக்கவும், கோயி லூர் மடாலய சாதுக்களிடம் நகர வைசிய பிரபுக்கள் கொண்ட பக்தியை

எந்த விதங் கெடுப்ப தென்று முயற்சிக்கவும், எழுதவும், அச்சிடப் பொருள் சேகரிக்கவும், வெளியிடவுந் தான் காலம் போதா திருக்கிறதே, சிவநாமத்தை ஒருதரம் நினைக்கவேனும் அவரது மனத்திற் கோய்வுண்டா? அவரது செயலே யாவருக்கும் அவரது சற் காரியம் விளங்கும்படி வெளியாக்கி விடுகிறது. நூற் புரட்டு, மதப் புரட்டு, மதாசாரியர் புரட்டு, சரித்திரப் புரட்டு, புராணப் புரட்டு முதலிய புரட்டுக் குப்பைகள் தாம் நமது செட்டியாரிடம் மலிந்து காணப்படுகின்றனவே யொழிய, வேறொரு சற்காரியம் கடுகளவுங் காணப்பட வில்லை யென்பது இப்பொழுது இக்காட்டி லியாவருக்கும் விளக்க மாயிற்றே. நமது செட்டியாரது புரட்டுத் தொழிலை அவரும் கீரும் ஒப்புமாறு, பற்பல பத்திரிகைகளும் புத்தகங்களும் உலகத்தில் நிதர்சனமாக விளக்கிக் கொண்டிருக்க, அவரது காரியத்தை யறிய எங்குங் கண்ணுடைய விறைவன் வேண்டுமென்றீரே. நமது பகட்டுரையும் புரட்டுரையும் மிக நன்று! நன்று!!

"வையும் பூசல்" என்றீர். நமது செட்டியாரே, வையும் பூசலை முதலில் வருந்திச் செய்தன ரென, அவரது புரட்டுக் கடாவும், பொய்ந் நூல்களுந் தெளிவாய்ப் புலப்படுத்தும். " ஆடு கோழிகள் மயிர் சிலிர்த்தல் போல்" என்றீர். அவ்வாறு மயிர் சிலிர்த்துக் கொண்டு பலிக்கு முன் வந்தது, நமது செட்டியாரது புரட்டுக் கடாவே யென வுண்மை தெளிந் தடங்குக! நமது செட்டியாருடன் இது விஷயமாய் வியாச்சியஞ் தொடுக்க, அவரது புரட்டுப் பொருளே மிகுதியாக விருக்கக் கோவிலூர் மடாலயப் பொருள் எற்றுக்கு? அமைக!

ஓ சற்காரிய தரிசியாரே! இத் தண்டத்தாற் மூக்குண்டும் நமது மதவாத வலிப்புத் தீராது, மேலுந் திமிர் வாதஞ் சேட்டிக்குமேல், எம்மவர் ஊட்டுக்கோல் கொண்டு தீய்க்கும் சூட்டை யேனும் பெற்றுச் சுக முறுவீராக! "இன்னும் என் துள்ளுகிறீர்" என்றீர். துள்ளி வந் தெதிர்த்தது முதலில், நமது செட்டியாரது புரட்டுக் கடாவே யென்பதும், அதன் றுள்ளல் காரிய தரிசியின் விடையால் அறையப்பட்ட டடங்கிய தென்பதும் அன்பர்க ளறிந்தனவேயாம். " தன்வினை தன்னைச் சுடும் " என்றீர். நமது செட்டியார் செய்த உலக விரோதப் புரட்டு வினையும், நமது மூரட்டு வினையும், உங்களையே பற்றிச் சுட்டன வென் றுலக மறியும் என, வுண்மை யுணர்ந் தடங்கி யொருவழி நிற்பீராக! இனி இத்தகைய வாபாசவுரை கொண்டு வெளி வாத் துணிந்து அவமானத்திற் காளாகாது அடங்கி யொழுகுவீராக!

☞ ஞான பண்டிதன்.

கணபதி துணை.

சற் குருப்பேறா நம:

கோட்டைக் கோட்டை நகரத்தார்களுக்கு

ஓர் விருந்தோடபதம்.

வா புறை வாழ்த்து.

பல்லவை கற்றும் பயமிலரே நல்லவையுள்
நன்கு செலச்சொல்லா தார்.

நகர வைசிய நண்பர்காள்!

காரைக்குடி ராம. செ. செகாக்க லிங்கச் செட்டியா ரென்பார், சோம சுந்தர மாலை, வேதாந்தம் முதலிய சிற் சில சிறு புத்தகங்களையும், உண்மை யுரைப்போன், நல் லொழுக்க நயந்தான், சத்திய வாக்கி, சற் காரிய தரிசி, உலோகோபகாரி, முதலிய மறு பெயர்களைக் காட்டி சிற் சில நாண்டுப் பத் திரிகைகளையும், அச்சிட்டு வெளியிட்டு, வேதத்தையும், வேதாந்தத்தையும், அவ்வழி யொழுகும் கோவிலூர் மடாலய சாதுக்களையும், ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகளையும், விஷ்ணு மூர்த்தியையும், பற் பல வாறு நிந்தித்துச் சாமா னிய படிப்புள்ள சில நக வணிகரை யேமாற்றிக் காலங் கழித்து வருகிறார் என்பது, இந்நாட்டில் யாவரும் அறிந்த விஷயமேயாம்.

இவை யெல்லாம் இவ்வா றிருக்க, காரைக்குடியி லிருந்து வெளிவரும் பிங்களவரு மார்கழித்ர மலரு ரஞ்சனிப் பத்திரிகையில், "கோவிலூர் மட பிங்களவரு நீதியாசப் பத்திரிகையின் மேல் தோன்வி" என்ற ஒரு வியாசம் வெளி யிட்டு, "காரைத் தியாகிடன்" என்னும் மறு பெயரை யொட்டிக் கொண்டு வெளிவந்தார். அவ்வாறு வெளிவந்த அவரது கடாவானது, பாட்டுக் கடா வாகு மென்று தக்க பிரமாணங் கொண்டு, அச்சனைக் காரியதரிசியால் பல வாறு நிரூபிக்கப் பெற்று, விரட்டப் பட்டு அடியற் றொழிந்தது. இப்பொ ழுது மேற்படி "பிரஹ்ம வித்தியாப் பிரசாரண சபை" பதிலேரு நிரும் வெரு விமரிசையாக நடைபெறுகிறது.

வேதாகம புராணேதிகாசாதி சகல சாஸ்திரங்களையுங் கரைகண்டுணர்ந் தரு செ. செட்டியார், அச்சனையை யடைந்து, நமது விருக்களை விரைவி விடை பெற வேண்டியது முக்கிய கடமை யன்றோ? எனினில், "ஐய மிருட்டபவர்கள் வந்து கேட்டும் சாஸ்திர விஷயமான தோன்வி களுக்குத் தக்க உத்தரங் கூறப்படும்" என்று அச்சனைக் காரியதரிசியார் உபந்யாசப் பத்திரிகையில் பகிரங்கமாய் வெளியிட்டிருத்தலின், —இது சம யம் செ. செட்டியார் வெளியூரில் மறைந்து வசிப்பதாகப் புலப்படுகிறது.

இஃதென்ன விநோதம்? நீங்களே யூகித் துணருங்கள். சபை நிறை வேறி, உபந்நியாசகர்கள் தங்க டங்கள் ஊருக்குச் சென்ற வுடன், வெ. செட்டியார் தமது ஊரை யடைந்து "வேதம் பசு நூல் வேதாந்தம் மாயா வாதம். அவ் வழி யொழுகும் கோவிலூர் மடாலய சாதுக்கள் மாயா வாதிகள். ஜகத் குருவாகிய ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் சாமானிய மனிதருள் ஒருவர். அவர் ஈச்வர அவதார மன்று. அவர் லே கண்ட சிவாசாரிய ரிடத்துச் சைவ தீக்ஷை பெற்று சைவ சித்தாந்தியாய் வாழ்ந்தவர். விஷ்ணு மூர்த்தி நம் போன்ற சீவர்களில் ஒருவர். அவர் கடவுள ரல்லர். அவருக்குக் கோயில் கட்டுவோர் நரகத்தை யடைவர்." என்று இத்தகைய பகட்டு மொழிகளைப் படிப் பில்லாதவ ரிடத்துப் பகட்டித் தன்னைச் சர்வ சாஸ்திரப் பண்டிதராகப் பாவித்து இறுமாந்து காலங் கழிப்பார். இஃதெவ்வளவு அறியாமை பாருங்கள்.

"காணுமல் வேணுதல்லாங் கத்தலாங் கற்றோர்முன்
கோணுமல் வாய்திறக்கக் கூடாதே—நாணுமல்
பேச்சுப்பேச் சென்னும் பெரும்பூனை வந்தக்கால்
கீச்சுக்கீச் சென்னுங் கிளி"

என்று நமது ஔவைப் பிராட்டியார் அருளிய நீதி இவருக்கே யுதித்தது. ஆண்மைக் குண மூடையோருக்கு இஃதுதித்த செய்கையாமா?

வெ. செட்டியாரிடத்து அபிமானங் கொண்டு, அவரது வீண் மொழி களை வேத மொழியாகக் கருதி, அவரைத் தலையிற் றூக்கிக் கொண்டு கூத் தாடும் பிரபுக்களும், அவ ரெழுதும் புரட்டுப் புத்தகங்களை யச்சிட்டு வெளி யிட முன்வரும் புண்ணிய சீலர்களும், இப் பத்திரிகையைக் கண்டாயினும், "ஓ! சுத்தாத்வைத சைவ சித்தாந்தப் பழமே! சர்வ சாஸ்திர சாகரமே! எங் களை யடிமை கொள்ளக் காரைமா நகரின் கண் அவதரித் தருளிய கற்பக மே! இது சமயம், கச்சிக்குங் கொச்சிக்குங், காட் டேருக்குங் கோட் டேருக் கும், ஆச்சா புரத்திற்கும் அரி மழத்திற்கும், கொத்த மங்கலத்திற்கும்,கும்ப கோணத்திற்கும், தேவரீர் கம்பி நீட்டத் தலைப்படுதல் தரும மாமா? நீதி யாமா? நன்று நன்று நமது செய்கை. புறப்படுக! புறப்படுக! கோவிலூரு க்கு இது தருணம் புறப்படுக! ஆண்டு ஆடிப் பூர மகோற்சவமும், அத்து வித மகாசபையும், அதிவிமரிசையாக நடைபெறுகின்றன. வேதம் பசு நூல் என்பதற்கும், வேதாந்தம் மாயா வாதம் என்பதற்கும், அவ்வழி யொ ழுகும் கோவிலூர் சாதுக்கள் மாயா வாதிக ளென்பதற்கும், அவர்களது ஆண்டவராகிய ஸ்ரீ முத்தி ராம லிங்க ஞான தேசிக சுவாமிகள் "நாம் பிர மம் என்று சொல்லி நண்ணி யுழலாதே" என்று தம்மைச் சார்ந்தவர் களுக்கு உபதேசித்து வந்தார்கள் என்பதற்கும், அவ்வாசிரியப் பெருந் தகையார் தவித ஞானங் கொண் டொழுகிய சைவ சித்தாந்தி யென்பதற் கும், மகான்களைச் சமாதி செய்யாது காலிற் புரி கட்டி யிழுத்து நாய்நரிகள் தின்னு மாறு காற் சந்தியிற் போட வேண்டு மென்பதற்கும், ஜகத் குரு

வாகிய ஸ்ரீ சங்கராசாரிய சுவாமிகள் தீல கண்ட சிவாசாரியரிடத்து சைவ தீகை பெற்று சைவ சித்தாந்தியாய் வாழ்ந்தார் என்பதற்கும், அவர் போ லவே நாரதர், வியாசர், சநகமகா ராஜன் முதலிய பெரியோர்கள் தவித ஞாநங் கொண் டொழுகிய சைவ சித்தாந்திக ளென்பதற்கும் ஆதாரமான சுருதி மிருதி புராண இதிகாசாதி சாஸ்திரங்களை மூட்டை கட்டித் தலை யிற் றூக்கிக் கொண்டு தேவரீருக்குத் தேசிகரா யுள்ள நாவலர் பெருமான் களையும், மற்று மிந்நாட்டிலுள்ள மகான்களையும், துணையாகக் கூட்டிக் கொண்டு போவோம் புறப்படுங்கள். கோவிலூருக்குப் போவோம் புறப் படுங்கள்'' என் றுரைத்து அச் செட்டியாரை யழைத்துக்கொண்டு, அச் சபையை யடைந்து, பல நாளாய் வெளியிட்டுவரும் அவரது பகட்டுக் கொ ள்கைகளை நிலைநாட்டிலுல், என் போன்றவர்கள் செட்டியார் கூறும் நெறி யின் உண்மை யுணர்ந்து அவ்வழி ஒழுகப் பேருபகாரமாகும். அவ்வா றின்றி, மெ சபை நடைபெறுங் காலையில், மிகுந்த பக்தியாளர் போல் ஸ்தலயாத்திரைக்குப் புறப்பட்டு விட்டு, பின்பு வந்து கல்லா மாந்தரிடத் தும் கைம் பெண்களிடத்தும், காக்கை கரைவதுபோல் கத்துகின்ற இவ ரது சைவ சித்தாந்தத்தாற் பயன் பெறுவார் யாவர்? வீண் புலம்பலேயன்றி வே றின்றே.

இதனைக் கண்ணுறும் நகா வைசிய பிரபுக்கள், இவ்வாறு ஊ ரூரா யோடி யொளிகின்ற மேற்படி செட்டியார், தமது போலி மதக் கொள்கை களை யுலகத்தில் இனி மேல் வெளியிடுதல் நகா தென்று அவருக்கு உள்ள வாறு அறைந்து அவரது பரட்டு நாவையும் கையையும் அடக்கி வைப்பார்க ளெனக் கருதுகிறேன்.

மேற் கூறியாங்கு அச்செட்டியார் செய்யாது, பின்னும் பத்திரிகை வாயிலாய்ப் புலம்புவாராயின், அதனை அச்சபையார் ஒரு பொருட்படுத்தாது ஒதுக்கிக் கழிப்பார்க ளெனத் தோன்றுகின்றது.

உளமெனு மில்லாமொ டொப்பர் களனஞ்சிக்
கற்ற செலச்சொல்லா தார்.

இங்ஙனம்,

சித. கரு. ராம. சிவ கிரிச் செட்டி.

உ

சிவ மயம்.

காரைக்குடி

அறு பத்து மூவர் மடச் சொக்க லிங்கச் செட்டியார்

வேதாந்திகட்கு அஞ்சி யோடியதும்

அதன் பொருட்டு உபந்நியாசமும்.

கோவிலூர் உற்சவத்தில் பதினெரு திரும் வித்வ சிகாமணிகளால் உபந்நியாசங்கள் நடை பெற்ற போது அவரும் அவரைச் சார்ந்தாரும் அங்கு வந்து தமது அவைதிக பகுத்தை நிலை நிறுத்து மாற்ற லின்றித் தம் மூரிலு மிராது பயந்து ஓடிவிட்டனர்.

அங்ஙனஞ் செய்தாராயினும், அவர் மீது அத்வைதிகள் கருணை கூர்ந்து அவர் வசிக்கும் காரைக்குடி அறு பத்து மூவர் மடத்தில் காளயுக்தி வரு ஆடிமீ 28உ திங்கட் கிழமை மாலை 4-மணி முதல் 9-மணி வரை நியாய சந்திரரும் வேதாந்த பாஸ்கரரும் ஆகிய ஸ்ரீ சுப்பைய ஸ்வாமிக ளவர்க ளின் அக்ராசனத்தின் கீழ் ஸ்ரீ காசிகாநந்த ஸ்வாமிகள், ஸ்ரீ சிவ ராம லிங்க ஸ்வாமிகள் முதலிய சந்நியாசிகளால், சிவ தத்துவ விசார முதலிய விஷயங்கள் உபந்நியசிக்கப்படும்.

ஆண்டு இவரும் இவரைச் சார்ந்தாரும் எனைய பக்த சிகாமணிகளும் வந்து சிரவணித்து அவ்வா றெழுகுக.

அத்வைதி.

உ

சிவ மயம்.

"உண்மை உரைப்போன்" "நல்லொழுக்கம் நயந்தோன்" என்ற

துராசாரர்க்குச் சிலைகை.

[சொக்க லிங்கச் செட்டியாரின் த்வாதச மகிமை.]

"பொய் யுரை மறுப்பு" "உள்ளபடி அறைதல்" என்று பெயர் புனைந்து இரண்டு பத்திரிகைகளை வெளியிட்ட துராசாரரே! நீவிர் ஸ்ரீ மஹா விஷ்ணுவின் பாத ஸ்பரிச முற்றமையால் பவித்திர மடைந்த கங் கையினைச் சிரசில் தரிக்கின்றமையின் பரமேஸ்வரனுக்கு மஹிமை யுண் டாயிற் றென்று ஒருவர் கூறிலும், அதனை நிந்தை யென்று கொள்ளாது

தநி யென்று கொள்ளல் வேண்டும்; அங்ஙன மன்று பாகவதாநி கூறு வனவும் ? அதற்கு மாறாய் நிற்பதெனை மருண்டு நிலை குலைவானேன் ?

" அவர்க ளெல்லாம் செட்டியா ரவர்க ளுடைய யதார்த்த நிலையை உள்ளபடி தெரிந்தவர்க ளாதலால் " என்கின்றீர். நகரத்தார்கள் சொக்க லிங்கச் செட்டியாரின் தன்மையினைப் பிறந்தது முதல் இன்றளவும் அறிந் தவர்களாகலி னன்றே தாயுமான ஸ்வாமிகள் " கற்று மறி வில்லாத " என்று கூறியாங்குப் " படித்துக் கெட்டவர் " என்று கூறுகின்றார்கள். ' நகரத்தார்கள் எம்மிடத்து விரோதிப்பார்கள் ' என்று எழுதி யிருக்கின் றீர். நகரத்தார்கள் எம்மிடத்து விரோதிக்கின்றார்களா ? அல்லது, அறு பத்து மூவர் மடச் சொக்க லிங்கச் செட்டியாரிடத்து இரு வழக்காலும் விரோதிக்கின்றார்களா ? வென்பதனை இனியேனும் காலைமா நகரிற் பல் லோர்வாய்க் கேட் டுணர்வீராக.

" இவர் செட்டியா ரவர்களது மகிமை சிறிதுந் தெரிந்திலர் ஆதலாற் சிறிது காட்டுவாம் " என்று எழுதுகின்றீர். செட்டியா ரவர்கள் மகிமை யாவன:—(1) அவர் குடியிருந்த வீடு மெச்ச வகையறு-பழுதியப்ப செட்டி யாரால் எல்லம் போடப் பட்டது. (2) அவர் சம்சார மின்றி விதவாச்சிர மத்தி லிருப்பது. (3) சிருங்கசிரி ஜகத் குரு பூலபூரீ சச்சிதானந்த சிவா பிநவ நர சிஹ்ம பாரதி ஸ்வாமிக ளவர்களைச் சிவாலயத்துட் செல்லல் கூடா தென்று நிந்தித்த பாபத்தால் அவர் புத்திரன் ராம நாதன் (திரு நாவுக் கரசு) சம்சாரம் இறந்தது. (4) அவர் தம்முடைய வர்ணச்சிரம தருமத்திற்கு விரோதமாக நிந்தாப் புத்தகங்களை அச்சிட வைசியப் பிரபுக்க ளிடத்து யாசித்தல். (5) அவர் தம் புத்திரனது விவாக நிமித்தம் பல்லோ ரிடத்தும் யாசகஞ் செய்ய முயலுதல். (6) அவர் ஆச்சாபுரத்தில் அந்திய ருடைய அந்தத்திற்கு வாசஞ் செய்தல். (7) அவர் கொத்த மங்கலத்தில் ஊருக்கு மேற்புற மடத்துக்குச் சமீபமா யுள்ள விக்நேஸ்வராலயத்தின் மூன் பாத ரக்ஷையாகிய வாஹனத்தின்மீது நிற்கும் ஈழத்துச் சிட்டாசா மூடையவ ராதல். (8) நீத்தாரை நிந்தித்தல். (9) அவர் பந்து வர்க்கத்தா ரோடு கூட்டுற வின்மை. (10) மேலச் சிவபுரியில் அக்நிராசகம் வதரிக் கச் சென்ற காலத்து வடலூர் ராம லிங்க ஸ்வாமிகள் அருட்பாவால் வந்த பெருமை. (11) இவர் எழுதி யனுப்பிய நிந்தா வியாசங்களை அக்நிராச ஹோதிபதி படித்தல் கூடா தென்ற பெருமை (12) வைசிய மித்திரன் பத் திரிகைக்கு எழுதிய நிந்தா வியாசங்கள் வெளியிடப் படாதபோன பெரு மை முதலியனவாம். இவை யாவையும் யாம் நன்குணர்ந் திருக்கின்றோம். நீவிர் உணராதிருக்கின், தேதி மாதங்களோடு மறு முறை வெளியிடுவாம். இவை போன்ற மஹிமைகளை விரிவஞ்சி எழுதாது விடுத்தாம்.

" செட்டியா ரவர்களது லோகப் பிரசித்த மஹிமையை " என்கின் றீர். லோகப் பிரசித்த மென்றால், ஸ்வர்க்க மத்திய பாதாள மென்னும் மூன்று லோகப் பிரசித்தமா ? அல்லது, பூலோகப் பிரசித்தமா ? பூலோகத்

திலும் பல சில்லாக்களிற் பிரசித்தமா ? பல சில்லாக்களிலும் எந்தச் சில்லாவிற் பிரசித்தம் ? மதுரைச் சில்லாக் காரைக்குடியில் " படித்தும் தெரியாத ", " படித்துக் கெட்ட ", " நிந்திக்கின்ற ", " வைகின்ற " அறுபத்து மூவர் மடச் சொக்க லிங்கய்யா வென்பது பிரசித்தம். இவ்வாறுள்ள பிரசித்தியை மறைக்க நாம் முயலுதல் ஒவ்வாததே யாம்.

" நாவில் புழுப் புழுத்துச் சாவான் " என்று ஒரு மஹாத்மாவினது சாபத்தினையு மேற்ற சொக்க லிங்கச் செட்டியாரின் தூற்பாக்கியத்தினைக் கூறுவதில் பய னின் றென விடுத்தாம்.

தூர்வை யாசகப் படலம் முன்னரே வசன ரூப மாக விருக்க, இப்பொழுது வசன மாக்கினதாகப் பொய் புகலுகின்றார். விரிப்பில் விரியும் அமைக.

☞ துவைத சைவ துர்வாத கோளரி.

சிவ மயம்.

நன் மதி கூறல்.

அறு பத்து மூன்று நாயன்மாரை நிந்திப்பருவம்,
ஆதி சைவைர் (குருக்)களை நிந்திப்பவரும், சமயாசாரியர்
முதலியோர் குலத்தினை நிந்திப்பவரும், ஆகிய காரைக்குடி
அறு பத்து மூவர் மடச் சொக்க லிங்கச் செட்டியாருக்கு
நன் மதி கூறல்.

---

1. அறிவிற்சிறந்த அன்பர்களே! காரைக்குடி அறு பத்து மூவர் மடத்தில் வசிக்கும் ராம. சொ. சொக்க லிங்கச் செட்டியா ரென்பார் காரைக்குடியில் உள்ள மீனாக்ஷி சுந்தரேஸ்வரர் சிவாலயத்துள் அறு பத்து மூன்று நாயன்மாரைப் பிரதிஷ்டை செய்தல் தகா தென்று, ஒரு வைசியப் பெண் மணி விக்கிரங்களைப் பதினாயிரத்துக்கு மேற் பொருள் செலவு செய்து வார்த்தும் பூஜைக்கு மூலதனம் கொடுத்தும் இருக்க, பல இடையூறுகள் செய்து வருகின்றார். ஆகலின், அவருக்கு நாயன்மார்களுள் நால்வர்கள் ஒழித் தொழிந்த ஏனையரிடத்துச் சிவ னடியார் என்னும் புத்தியில்லை யென்பது விகசிதமாகின்றது. அதனால், நாயன்மார்களை நிந்திப்பவரு மாகின்றார்.

2. இவர் ஆதி சைவர் (குருக்) களை, ஆதி சைவ குல மான்மியம் 7-வது பக்கத்தில் " ஆதி சைவர்கள் கூலிக்குப் பூசை செய்கின்றார்கள் கூலிப் பூசை இழிவு தரு மென்ப துண்மையே " என்றும் 16-வது பக்கத் தில் " இனிச் சிவப் பிராமணர்கள் தங்களுக்கு நான்கு படி கீழுள்ள பிராம ணர்களை உபாத்தியாயர்களாகக் கொண்டு சிராத்தாதி சகல கிரியைகளைச் செய்வது விதி விரோத மெனத் தெளிந்து தாங்கள் எல்லோரும் வேத சிவாகமாதி நூல்களை நன் குணர்ந்து தாங்களே செய்து கொள்ளாமற் பர முகமா யிருப்பது என்ன தலைவிதியோ இது அறியாமைக் குண மன்றி வே றில்லை " என்றும் இன்னும் பலவாறுகவும் எழுதி மூடர்க ளென்றும் தலைவிதிக் கென் செய்வ தென்றும் பிரஹ்மாவினிடத்து முறையிடுவது போற் பற்பல விதமாக நிந்திக்கின்றார். ஆகலின், சிவத் துரோகியுமாயி னர்.

3. உமாபதி சிவாசாரியர் நாயன்மார்கள் சாதியை வகுக்குங் காலத்து முதலில் வைதிக பிராஹ்மணர் குலத்தினையும், பின் ஆதி சைவர் குலத் தினையும், வகுத் திருப்பவும், சுந்தர மூர்த்தி ஸ்வாமிகள் " தில்லைவா ழந்த ணர்தம் மடியார்க்கு மடியேன் " என்று கூறி யிருப்பவும், ஸ்ரீ மாணிக்க வாசக சுவாமிகள், ஸ்ரீ ஞான சம்பந்த ஸ்வாமிகள், ஸ்ரீ உமாபதி சிவாசாரிய ஸ்வாமிகள், ஸ்ரீ ஹர தத்த சிவாசாரியர், ஸ்ரீ நீல கண்ட சிவாசாரியர், ஸ்ரீ அப்பய்ய தீக்ஷித யோகீந்திரர் முதல் அள விறந்த பெரியோர்கள் வைதிகப் பிராஹ்மண குலத்தி லவதரித் திருப்பவும், அவற்றினை யுணரும் உர னிலாது, குருக்களுக்கு மான்குபடி தாழ்ந்தவர்க ளென்றும் வைசியர்க ளென்றும் பிராஹ்மாவினையே பூஜிக்கத் தகுதியுடையோர்க ளென்றும், ஜாதிப் பிரஷ்டர்களென்றும் இன்னும் பலவாறு பிராஹ்மண குலத்தினை இவர் நிந்திக்கின்றமையின், பிராஹ்மண குலத் துவேஷியும், குரு குலத் துவேஷியும், குருத் துவேஷியுமாகின்றனர்.

இவர் சதாசிவ மூர்கோத்பன்னரா ? பிராஹ்மா மூர்கோத்பன்னரா ? பிராஹ்மா மூர்கோத்பன்னராயின், இனிப் பிராஹ்மா வினையே அர்கோராத் திரம் பூஜனை புரிவாராக சிவனைப் பூஜியா திருப்பாராக.

இன்னும் தன் புத்திரனுக்கு விவாஹத்தின் பொருட்டுப் பெண் கொடுக்கும் பிதா மாதாக்களை தம்வசமாக வேண்டு மென்னும் கருத்துடன் மாந்திரிகனைக் கொணர்ந்து மந்திரங்கள் ஓதுவிக்கின்றார்.

இவ்வாறு, சிவ துரோகியும், சிவ னடியார் துரோகியும், சிவ குருத் துரோகியும், சிவ குரு குலத் துரோகியும், சிவப் பிராஹ்மணத் துரோகியு மாய்ப் பஞ்சத் துரோகங்களைச் செயும் சொக்க லிங்கச் செட்டியாருக்கு அவரைச் சார்ந்த குருமார்களும், அவர் நண்பர்களும், அவர் மாணாக்கர் களும், அவர் பந்து வர்க்கத்தாரும், ஒன்று கூடி இவ்வாறாய பஞ்ச நிந்தனை களைச் செய்யாதி ரென்று திரு வள்ளுவ நாயனார் கூறியாங்கு குமட்டி லிடித்துக் கூறுவார்களாக.

சிருங்க கிரி ஸ்ரீலஸ்ரீ ஜகத் குரு கச்சிதாகந்த சிவாபிநவ நர சிம்ஹ பாரதி ஸ்வாமிகளிடத்தில் திருநெல்வேலி குறுக்குத் துறையில் ஆத்மார்த்த பூஜையின் பொருட்டு சிவ லிங்க முதலியவற்றைத் தீக்ஷையோடு ஸ்ரீ அம் பல வாண நாவல ஸ்வாமிகள் பெற்றுக் கொண் டிருக்கிறார்கள் இதனால், ஸ்ரீ உமாபதி சிவாசாரிய ஸ்வாமிகள், ஸ்ரீ ஆறு முக நாவல ரவர்கள், ஸ்ரீ அம் பல வாண நாவல ஸ்வாமிகள் முதலியோர்கட்கு வேதாந்தக் கொள்கை யுடைய பெரியோர்களே குருமார்களாக இருந்திருக்கிறார்க ளென் றுணர்க.

வைசிய மித்திரன் பத்திரிகைக்கு வைசிய சிகாமணி யென்று கைச் சாத்திட்டு வியாச மனுப்பியவர் சென்னை லோகோபகாரி, சக்திரவர்த்தினி முதலிய பத்திரிகையின் ஆசிரியராகிய கோ. வடி வேலு செட்டியா ரவர் கள் ஆகலின் ஸ்ரீலஸ்ரீ சுப்பைய ஸ்வாமிகள் எழுதியதாக மருண்டு எழு தாது நன்மை கடைப்பிடித் தொழுகுக.

அறு பத்து மூவர் மடத்தில் கடைபெறுவதாக இருந்த உபந்யாசத்தை இவரைச் சார்ந்த அநேகம் நகர வைசிய பிரபுக்கள் நிறுத்தி வைக்கும்படி கேட்டுக் கொண்டமையின் அவ்வாறு செய்யப்பட் டிருக்கின்றது

இதுகாறும் ஓடி ஒளிந்தது போன்றே இனி நாவினை யடக்கிக் கொண்டு நன் மதியோடு இருக்கும்படி தெக்ஷ்ண மூர்த்தியை யநுக்கிரகஞ் செய்யும்படி வேண்டிக் கொள்கின்றேன். விரிப்பிற் பெருகும்.

அத்வைதி.

உ

சிவ மயம்.

மாயா வாதத் துவைத மலத் தடிப் பேறிய

அசுத்த சைவ சித்தாந்திக் கோர்

* அ ணை று .

சைவ சித்தாந்தியாரே !

" காரைக்குடி அறுபத்து மூவர் மடத்தில், பிரசங்கஞ் செய்வதாய்ப் பிரசுரித்துப் பின்னிட்ட அத்வைதிக்கு அறிவிப்பு " என்று பெயர் பூனை ந்து நிற்கை நிரம்பிய சிறு துண்டுப் பத்திரிகை யொன்றை நீவிர் வெளி யிட்டிருக்கின்றீர்.

---

* முதனிலைத் தொழிற் பெயர்.

பிரசங்கஞ் செய்வதாய்ப் பிரசரித்ததின் நடைபெறாது நின்றமைக்குக் காரணம் யாவை யெனின்:—தேவி கோட்டை அரு. அரு. சோம. சோம சுந்தரஞ் செட்டியார், அழ சுப. பழ. சுப்பைய செட்டியார், நி. அ. சு. சுப் பிர மணியஞ் செட்டியார், கீழை வீட்டுச் சுவாமிநாதன் செட்டியார் முதலி யோர்கள், காரைக்குடி ஆவி. பழ. சிதம்பரம் செட்டியார், அ. வீர. ராம சொக்க லிங்கச் செட்டியார், முதலியோர்கட்குக் கடிதமெழுதி உபந்யாசத் தை நிறுத்தி வைக்கும்படி கேட்டுக் கொண்டார்கள். இவர்களும், சி. முரு. முருகப்ப செட்டியார், மெ. பழ. லெட்சுமணன் செட்டியார், ராம. ப. மெ. சொக்க லிங்கச் செட்டியார் முதலியோர்களும், ஒருங்கு சேர்ந்து, பழ. வெ. ராம. ராம சாமி செட்டியாரிடம் போய் " தேவி கோட்டையி லிருந்து கடி தம் வந்திருக்கின்றமையின் யாங்க ளெல்லோருக்கும் நீங்கள் பிரதிநிதியாக விருந்து, அறு பத்து மூவர் மடத்தில் நடைபெறுவதா யிருக்கும் உபந்நியா சத்தை, நடை பெறாது நிறுத்தி வைக்கும்படி, கோவிலூர் மடாலயம் ஸ்ரீலஸ்ரீ அண்ணமலை ஞான தேசிக சுவாமிக ளவர்க ளிடத்தில் ஸ்ரீ சுப் பைய சுவாமிகள் முதலிய சந்நியாசிகளை உபந்நியாசஞ் செய்யா திருக்கு மாறு ஆக்ஞாபிக்க வேண்டும் என்று பிரார்த்தித்துக் கொள்ளல் தகுதியாம். இனி, ராம. சொ. சொக்கலிங்கச் செட்டியாரை, வேத நிந்தை, விஷ்ணு நிந்தை, விப்பிரர் நிந்தை, பெரியார் நிந்தை, சிவ நிந்தை, சிவ னடியார் நிந்தை முதலிய நிந்தைகளைச் செய்யா திருக்கு மாறு அடக்கி விடுகின் றோம் " என்று கேட்டுக் கொண்டார்கள். அதன்மீது, அவர்கள் வாக்கி யத்தைக் கடக்கொணாதவராய் ஸ்ரீ சுவாமிக ளவர்க ளிடத்தில் பிரார்த்தித்து நிறுத்தி வைக்கும்படியான ஏற்பாடுகள் செய்தார்.

இவ் விஷயத்தை, நன் மதி கூறல் என்னும் நோட்டீஸில் வெளியிட் டிருக்க, அதனை யுணராது பின்னிட்டதாகப் பிரசரித்தீர். நுமது பாட் டைப் பல புத்தகங்களாலும், பல துண்டுப் பத்திரிகைகளாலும், நகரத்தார்க ளும், ஏனையோர்களும், உணர்ந்திருக்கின்றமையின், எம்மைப் பின்னிட் டவ ரென் றுணராது நும்மையே பாட்டுப் பத்திரிகை யச்சிடும் பாட்ட ரென் றுணர்வாராக.

" சிற்றறிவின் சிலு சிலுப்பாலும், அடங்காமையாகிய அந்தகார மறை ப்பாலும் " என்று எழுதி யிருக்கின்றீர். காளி கோயில் முன் பலி கொடுக் கும் கார்நிறக் கடாக்கள் போன்று சிலு சிலுத்துக் கொண்டு, பலியாவதற்கு முன் வரும் சிற்றறிவினை யுடையவர் நீவிரே யென்றும், அடங்காமையா கிய அந்தகார மறைப்பு நும் மகத்தே குல தெய்வமாகக் குடிகொண் டிருக் கின்ற தென்றும், சின்னாளாக நும்மவர் பிரசரிக்கும் புத்தகம் பத்திரிகை முதலியவற்றாலும், நீவிர் பிரசரித்து நடைபெற விருக்கும் வாதப் போரி னாலும் யாவரும் உணர்வர்.

" அடக்க முடைமையே யாபரணமாகப் பாவிய முதற் பூண்டொழு கும் " என்று செட்டியாரை வியந்தீர். முடைமை 'யென்பது தாழ்ந்தார்

தன்மை யென்றுகி ' அடக்கத்தின் தரித்திரத் தன்மை ' எனப் பொரு டந்து, பாலிய முதல் அடக்கம் இன்மையினையே யாபரணமாகப் பூண் டொழுகும் செட்டியா ரென்று, நகர வைசியப் பிரபுக்களும், யாமும், அவர் வெளியிடும் நிந்தாப் புத்தகம் பத்திரிகை மூதலியவற்றை சாகூியாகக் கொண்டு ஒப்பியவாறே நீவிரும் பத்திரிகை வாயிலாகச் செட்டியாரின் அடக்க மின்மைக் குணத்தினைப் பிரசுரித்தீர். அதனல், நீவிர் சாலச் சிறந் தவரே யாவீர்.

" நீழே விழுந்தவன் மீசையில் மண்பட்டதா பார் " என்னும் உலக வழக்குப் போன்று ஓடி யொளிந்ததை யொப்புக் கொண்டு " நுங்களது தீய வாசனை யடையா வண்ணம் செட்டியார் விலகி யிருந்தாரே யன்றி அரங்கு இன்றி வட்டாடும் நுமது கல்வி யாற்றலுக்கு அஞ்சியன்று என்ற தைத் திண்ணமா யெண்ணும் " என்று காரணம் கரைந்தீர். வேதத்திற் கூறும் மார்க்கத்தினைக் கொண்டவரது உபதேச வாசனை, தீய வாசனையா மாயின், வேத வுரையாய் ஆகமத்திற்குத் தப்பருத்தங் கொண்டவர்களது உபதேச வாசனை நல் வாசனை போலும். அறு பத்து மூவர் மடத்து முன் னிருக்கும் திருக் குளத் தீர்த்த வாசனையையும், மடத்தின் முப்புரமுமுள்ள மும்மல வாசனையையும். சதா முகந்து கொண்டிருக்குஞ் சொக்க லிங்கச் செட்டியாருக்கு, வேதாந்தத்தின் உபதேச வாசனையாய நல்ல வாசனையை முகரும் நற் புண்ணிபம் யாண்டுளதாம். இலதாகவே, வேத நிந்தை செய்த பாவம், அழகாபுரி முதற் புண்ணிய கூேத்திரங்களில் விலகி யிருக்கச் செய்தது. அஃது அவர் செய்த புண்ணிய விசேடமும் நும் மறமுமே யாம்.

" நீவிர் செட்டியா ரவர்களையும் அவரைச் சார்ந்த சைவ சித்தாந்தப் பெரியோர்களையும், சாமானியராகக் கருதினமையாலும் " என்கின்றீர். சாமானியம் பொதுவாம். அஃது யாண்டும் இருப்பதாம். அதனை யுடை யோர் யாண்டு மிருப்பவராவர். அவ்வாறு நுமது செட்டியாரும் எனைச் சைவ சித்தாந்திகளும் வியாபகரா யிராமல், பரிச்சிங்கர்களாய் ஒவ்வொரு தீ நாற்றக் கிரகங்களில் வசித்து வருகின்றார்கள். நீவிர் அவர்களை வியா பகராகக் கொள்ளினும், யாம் அவர்களை மும்மலச் சரீரிகளாய், சிறப்பு அதாவது ஓரிடத்தது என்னும் விசேடண முடையவர்களாய், சர்வக்ஞத் தன்மை யின்மையால் அற்ப அறிவினர் என்றே அங்கிகரிக்கின்றோம்.

" நும்மாற் குறி யிட்ட உபய பாஷா வேதாந்த பிரவர்த்தகாசாரியர் என்னும் வெரும் பட்டம் தாங்கி வெளி வேஷங் காட்டி பொருள் பறித் திந்நாட்டி லுலாவும் காசிகாநந்த சுவாமியின் " என்றீர். வேதாந்தியாகிய பெரியாரைக் குறியிடுதல் எமக்கும் எம்மவருக்கும் தகுதியே யன்றி, நுமக்கும் நும்மவருக்கும் தகுதி யின்மையி னின்றும். தென் மொழி வட மொழி யென்னும் இரு மொழியிலும் வேதாந்த சாஸ்திரங்களைப் பிர வர்த்திக்கும் ஆற்றல் அவர்கட்கு உண்டென்பதை, அவர்களியற்றிய நூல்

களே சாகுபி சாற்றும். அதனுல், அவர்களது இயற் பெயரும் பட்டமும் காரணத்தால் வந்தனவே யாம். நும் மதத்தினரோ நா வன்மை யின்றி நாவல ரென்றும், சூத்திரா யிருந்து ஆரிய மொழி யற்பங் கற்றவராய், இரு மொழிக் கடலையும் நிலை கண்டுணர்ந்த தெய்வப் புலவர் என்றும், பஞ்ச நிந்தனைகளையும் பஞ்சத் துரோகங்களையும் உடையவர் புண்ணிய சீல ரென்றும், பிறராற் கொடுக்கப் பெறுது தாங்கி வரும் பட்டங்கள், காரணங் கருதியவழி நில்லாவாம். வெரும் பட்டம் பிறர் அஞ்சும்படியான பட்ட மாம். தம்மிற் ருழ்ந்தோர் தம்மைக் கண் டஞ்சித் தம் ஆஞ்ஞையின்படி நடத்தற்கே பட்டம் தாங்குவதாம். " சகலாகம பண்டிதர், முத்தமிழ் ரத்நா கரம், பண்டிதர், புலவர், கவி, நிமிஷ கவி, வா கவி, சாஸ்திரி, கபாடி, பிரபு, பி-ஏ; எம்-ஏ " முதலிய பட்டங்களைத் தாங்குதல், அவ ரவரிற் ருழ்ந் தோர் கண் டஞ்சி அவரவர் ஆஞ்ஞையின்படி யேவற் ருழிலைச் செய்தற் கேயாம் என்று இனியேனும் நல்லோர் பல்லோர்வாய்க் கேட் டுணர்வீராக!

கோ டின்றிக் காயாடுவது போன்று, நூ லின்றிச் சபை யேறும் நுங் கள் கல்விக் கஞ்சி யல்ல வென்று எழுதுகிறீர். எங்கள் சபையில் ராஜ கிங்க (போலீஸ்கா) ர்கள் வந்து பந்தோபஸ்தோ டிருக்க வேண்டிய அவ சிக மின்ருரும். நுஞ் செட்டியார் எதி, காரைக்குடி ரீடிங் ரூமிலும், தேவி கோட்டை வைசிய சிவாகந்த சபை " ஒற்றுமை " யென்னும் உபந்நியாசத் திலும், விஷ்ணு கோயில் கட்டின் நாகம் வருமென்று சொல்லிய விஷயத் திலும், நூலோடு கோட்டி கொண்ட தன்மையும், வைசிய பிரபுக்கள் வாயி லாக மன்னிப்புக் கேட்டுக்கொண்ட தன்மையும், நுமது ஈழத் துறவிகள் மதுரை திரு ஞான சம்பந்த மூர்த்தி மடாலயத்தில் நடந்த உபந்நியாசத்தில், கலெக்டர் முதலியோர் வந்து நும்மவர் தடக்க மின்மையை யடக்கும்படி யாக வந்த தன்மையும், நகரத்தார்கள் பலரு மூணர்வர். " அரங் கின்றி வட்டாடுந் தன்மையும், நூலின்றிக் கோட்டி கொளுந் தன்மையும் நும் மவர்க்கியற்கைக் குணமேயன்றி, எம்மவர்க்கு அரங்கோடு வட்டாடுந் தன் மையும், நூலோடு கோட்டிகொளுந் தன்மையும் இயற்கைக் குணமாம்.

பிறர் எளனஞ் செய்தற்கு உரித்தாய் நும்மவர் தாங்கும் பட்டம்போ லன்றி, பிறர் வெருவும் பட்டத்தினை நமது சுவாமிகள் பெற்று விளங்கு கின்றமையினை னன்ரே, சுவாமிக ளெழுதிய சூட்டுக் கோலாற் சூடுண்டு நீவிரும் நும் மதத்தினரும் அலறுகின்றீர்கள்.

நுமது மதத்தினரும், நுமது செட்டியாரும் பிறரை யேமாற்றுவதற் குக் கொண்ட வெளி வேடம்போலன்றி, உண்மை வேடம் தாங்கி உலகத் தாருக்கு உபகாரஞ் செய்கின்றமையா னன்ரே, நகரத்தார்கள் யாவரும் நமது சுவாமிகளைப் புகழ்ந்து கொண்டாடுகின்ரூர்கள்.

" துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கு, மில்வாழ்வா னென்பான் றுணை " " ஏற்ப திகழ்ச்சி, யெய மிட் டெண் " என்பன வாதி பிரமா

ணங்கட்கு மாறாய், இல்லற வைசிய விதராச்சிரமத்தி லிருக்கும் நமது செட்டியார், நகர வைசியப் பிரபுக்களிடத்துப் பொய் கூறிக் காலாகப் பொருளைக் கவர்ந்து நிந்தாப் புத்தகங்களை யச்சிடுதல் முதல் குடும்ப சம்ரக்ஷணை பரியந்தமான காரியங்களைப் பலரு மூணரப் பத்திரிகையில் நீவிர் வெளியிடாது " பாத்துல கேழும் படைத்த பிரானே, யிரந்துணி யென் பார்க ளெற்றுக் கிரக்கும், நிரந்தரமாக நினையு மடியார், இரந்துண்டு தன் னடி யெட்டச் செய்தானே " என்னும் ஸ்ரீ மூலநாதர் வாக்கியத்தினைச் சிரமேற் கொண்டு, பிக்ஷை யேற் றுண்டும், பெரியோர்கள் மகிமை விளக் குதற்கு அநேக நூல்களச்சிட்டு வெளியிட்டும், வருகின்ற சுவாமிகளை, " பொருள் பறித்து " என்று வீணக வசைமொழி புகன்ற நமது புரட் டுப் புத்தியினை யாவரும் நன்குணர்ந்தவராகலின் மயங்கா னென் றுணர்வீ ராக ! நமது செட்டியாருக்கும், நமது மதத்தினருக்கும், ஹிந்தி மகா ராஷ்ட்ரம் முதலிய பாஷா ஞான மின்றித் தென் மொழி கற்றவராகலின், இந்நாட்டி லுலாவுதல் தகுதியா மன்றி, எனைத் தேச பாஷா ஞானம் உடைய சுவாமிகட்கு, இந்நாட்டினும் எந்நாட்டினும் சென்று உபதேசித்தல் இயற் கையும் செயற்கையுமாம்.

" ஞண்டா னடிமைத் திறங் கொண்டொழுகும் அறு பத்து மூன்று நாயன் மார்களது அடித்துணையையும் துணையாகக் கொண்டு " என்றீர். சுந்தர மூர்த்திகள் சிவப் பிரதி விம்பர்களாகலின், சிவனே யாண்டா னென் றும் தன்னை யடியா னென்றும் எங்ஙனம் கொள்வர். நமது கருத்துப் படியாயின், அடிமையாய சுந்தரர் இதகாறும் கைலாயத்தில் சிவ திருவடி யில் வேறு யிருப்பார். ஆகவே அவர் சிவ னென்றுகி, சிவப் பிரதிபிம்ப மொன்னும் நமது கோள் கோளாம். சிவப் பிரதிபிம்பராய சுந்தாருக்குக் கரும மின்மையால், காமாதி யிச்சை கைலாயத்தி லுண்டாக வேண்டுவ தில்லை. இவ்வாறாய குழறுபடை நும்மதத்தி லனேக மூள. அவை யாவும் " அசுத்த சைவர்கள் மேற் கேள்வி " என்னும் நூலா லுணர்க.

நும்மால், " மூ வீழத்தாரும், சேற்றாராரும், காலையாரு மாயைவ ராய், ஒன்று கூடி சபை கூட்டுவதாகவும், அத்வைதிகளாகிய சங்கியாசிகள் காசி முதலிய விடத்திற்குக் கம்பி நீட்டி விடாமல் அவர்களைத் தடுத்து வைத்தல் நமது சிரமேற்கொண்ட கடனும் " என்று அறிவிக்கப்பட்டது. நும்மாற் சபை கூட்டுவதாக அறிவிக்கப்பட்ட அஞ்சுவர், எம்மவராகிய சங் கியாசப் பெரியாரைக் கண்டு, அஞ்சுவ தியற்கைக் குணமாக யாங்கள் யாண் டுங் கண்கூடாகக் கண்டமையின், அவர் அஞ்சுபவராய அஞ்சுவரோ யாவர்.

சங்கியாசப் பெரியார் காசி முதலிய விடங்களில், " ஒன்று புலனைத்து மாலையென் றப்பாலுங், பொன்று மொழியாற் புகன்றிருக்கக்—குன்றுத, முத்தியிலு மும்முதலு முண்டென் றுரைத்தலென், பித்தமுறுஞ் சைவா நீ பேசு. " என்னுஞ் செய்யுட்படி பித்துப் பிடித்திருக்கும் நும் செட்டியார் போன்ற பேத வாதிகளின் காலைக் கம்பியாகிய சூட்டுக் கோலால் நீட்டி விடுத லியற்கை யாகலின், கம்பி நீட்டுதல் அவர்கட்குத் தகுதியே யாம்.

யாண்டு ஆவசிகமோ ஆண்டுச் சென்று உலகோபகாரஞ் செய்பவர்களாக வின், எண்டு நுமது செட்டியாருக்கு ஆவசிகமா யிருந்தமையின், காசி மூத லிய புண்ணிய கேஷத்திரங்களி லிருந்து எம்மால் வாவணைக்கப்பட்டு வந்து சூட்டுக்கோல் மூதலிய கம்பி நீட்டுதலைச் செய்தார்கள். நுஞ் செட்டியார் கண் டஞ்சி யோடுதலாகிய கம்பி நீட்டுதலைச் செய்தார். கம்பி நீட்டுத லிரண் டிடத் திருப்பினும் ஓரிடத்துச் சுடுதல் என்றும், ஓரிடத்து " ஓடு தல் " என்றும் பொருள் பயந்ததனை யுணர்வீராக !

' விரட்டு ' என்னுஞ் சொல்லுக்குச் சகல இலக்கியக் களஞ்சியம் போலத் தம்மை மதித்து, இலக்கிய வழக்கின் றென்று கர்த்தபம் போன்று கனைந்த நீவிர், ' கம்பி நீட்டுதல் ' என்னும் செந்தமிழ் மொழியைப் பன்னி ரண்டு திருமுறையில் எம்முறையாற் கண்டீர். காண நிருக்க அம்மொழி யைப் பதி வாக்காகக் கொண்டு கனைத்தீரே. " மறந்தும் பிறன்கேடு சூழற்க சூழின், அறஞ்சூழும் சூழ்ந்தவன் கேடு" என்னும் பொய்யாமொழி யைப் பொறுத்தீரே.

" அவர்களைத் தடுத்து வைத்தல் " என்று நும்மவர் சுபாவத்தை வரைந்தீர். பயந்தோடுபவர்களைத் தடுத்துப் பிடித் தடைக்க வேண்டுமே யன்றி, நிந்தித்த வொருவருக்குச் சூட்டுக் கோற் போட இரண்டாயிரம் மையிலுக் கப்பால், காசி மூதலிய புண்ணிய கேஷத்திரங்களி லிருந்து நான்கு திசத்தில் வந்தவர்கள், நுமது அஞ்சுவோர் கூட்டம் சபையின்கண் வந்து, நும்மவரை யஞ்சும்படி செய்து அலை கடலுக் கப்பா லநுப்புவதற்கு அழிவுறுங் கைலாயத் திருப்பினும், எம்மவரது (Telegraph) அறிவிப் புப் பெற்றவுடன் வருவார்களென் றுணர்வீர்களாக !

சுவாமிகள் நுமது செட்டியாரை " சபை யேற்படுத்திக் கொண் டறி விப்பின் வாதப் போர் புரிய வாத் தயாரா யிருக்கின்றோம் " என்று எழுதி யிருக்க, நுஞ் செட்டியார் சபை யேற்படுத்தாது, ஓடினமையின், சூட்டுக் கோலாற் சூடுண்டனர் என்பது யாவருக்கும் வெள்ளிடை மலை போல் வெளியாயிற்று.

இரு மேஷங்கள் தம்மில் மாறுபட்டு மற்போர் புரியுங்கால் ஒன்றன் மண்டை சற்றுடைந்து, அதனின்றும் ரத்தங் கால, அதனை யோர் காரி சென்று குடிக்குங்கால், ஏனை மேஷம் கோபாவேசத்தால் மற்ற மேஷத் தோடு பொருத இடையி லிரத்தங் குடித்த காரி யெமபுரஞ் சென்ற தெவ் வாறோ, அவ்வாறே நுஞ் சொக்க லிங்கச் செட்டியாருக்கும், வேதாந்திகட் கும் வாதப் போர் நடக்குங்கால், சூட்டுக் கோலால் நுஞ் செட்டியார் சூடு ண்டு கலாப்புற் றிருக்குங் காலம் பார்த்து, நீவிர் அஞ்சுவரைக் கொணர்ந்து அவர்க்கு மூன் நாமான நாட்ட நினைக்கின்றீர். அவ்வாறு நாட்டினீராயின் நாயோ டொப்பாவ ரென் றுணர்வீராக !

நீவிர் குறிப்பிட்ட வாதத்திற்குரிய விதியை " அத்வைதிகளை வாதத் திற்கு வா வழைத்த அசுத்த சைவ சிந்தாந்திகோர் வாது வரை பறை" என்னும் பத்திரிகையா லுணர்ந் தங்ஙல நிற்பீராக !

அத்வைதி.

சிவ மயம்.

அத்வைதிகளே வாதத்திற்கு வர வழைத்த,

அசுத்த சைவ சித்தாந்திக் கோர்

வாத வரை யறை.

அசுத்த சைவ சித்தாந்தியாரே !

நீவிர் அறிவித்த வாதத்திற்கு வரை யறை யிஃதாம்,

பிரமாண நூல்கள்:—

1. ருக், யசுர், சாமம், அதர்வணம் என்னும் நான்கு வேதமும், சங்கற்பம், வியாகரணம், ஜோதிஷம், சிக்ஷை, நிருத்தம் என்னும் ஆறங்கமும், கௌதமர், கணாதர் இயற்றிய நியாய வைசேஷிகமும், பூர்வ மீமாம்சை, உத்தர மீமாம்சையும், ஸ்மிருதிகளும், கற்கத்தா ஜீவானந்த வித்தியாசாகராலும், புலு ஆனந்தாசிரமக் காராலும் அச்சிட்ட பதினெண் புராணங்களும் ஆகிய பதினென்கு வித்தையாகிய சாஸ்திரங்களும், ஆரம்ப முதல் அந்த பரியந்தம் சோபான முறையால் விரோத மின்றிப் பிரமாணமாம். எம்மிடத்துள்ள தேவார, திருவாசக, திருமந்திர, பழய எட்டுப் பிரதிகளே பிரமாணமாம். ஏனைய நுமது நூல்களும் எமது நூல்களும் பிரமாணமன்று.

2. வாதிக்கும் அத்வைதிகள்:—கும்ப கோணம் அத்வைத சபா பண்டிதர் பிரஹ்ம ஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரிகளவர்கள், சேற்றூர் சமஸ்தான பண்டிதர் சங்கர நாராயண கோவில் பிரஹ்ம ஸ்ரீ திருமலை சாஸ்திரிகளவர்கள், சிருங்க கிரி மடத்து பண்டிதர் பிரஹ்ம ஸ்ரீ விஸ்வ நாத சாஸ்திரிகளவர்கள், சிருங்க கிரி மடம் பிரஹ்ம ஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரிகளவர்கள், நியாய சந்திரரும், வேதாந்த பாஸ்கரருமாகிய கோவிலூர் மடாலயம் ஸ்ரீ சுப்பைய சுவாமிகளவர்கள், உபய பாஷா வேதாந்த பிரவர்த்தகாசாரியராகிய கோவிலூர் மடாலயம் ஸ்ரீ காசிகானந்த சுவாமிகளவர்கள், சிவ ஞான பாஷியத்தினை எழுதத் தெண்ணிக் கண்டித்து, சிவானந்த பாஷிய மியற்றிய கோவிலூர் மடாலயம் ஸ்ரீ சிவானந்த சுவாமிகளவர்கள், தமிழ், சமஸ்கிருதம், இங்கிலீஷ் என்னும் மூப்பாஷையிலும் வல்லுனராகிய வல்ல நாடு ஸ்ரீ சிவ ராம லிங்க சுவாமிகளவர்கள், சிவ ஞான போதத்திற்கு சிற்றுரை யியற்றிய சென்னை தியாஸபிகல் ஸொஸைடீ பண்டிட் ஸ்ரீ கோ. வடிவேலு செட்டியாரவர்கள் ஆவார்கள்.

3. வாதிக்கும் சைவ சித்தாந்திகள் இன்னவர், இவ்வளவின சென்பதை வெளியிடுவீராக.

4. அந்வைதிகளுக்கு மத்தியஸ்தர்கள்:—சதுர்த் தசவித்தியா கூடாப்தி ரூபமாக விளங்கும் பிரஹ்மஸ்ரீ யோகானந்த தேந்திர யதீந்திர சுவாமிகளவர்கள், உபய பாஷா வல்லுனராய் விளங்கும் பிரஹ்மஸ்ரீ சிவானந்த சுவாமிகளவர்கள், சாந்தமே சொரூபமாக விளங்கும் கோவிலூர் மடாலயாதிபதியாகிய ஸ்ரீலஸ்ரீ அண்ணுமலை ஞான தேசிக ஸ்வாமிகளவர்கள், தேவி கோட்டை ஜமீன்தார் ஸ்ரீமான் அள. அரு அருணாசலஞ் செட்டியாரவர்கள், மேற்படியூர் ஸ்ரீமான் சித. முரு. முருகப்ப செட்டியாரவர்கள், சென்னை, தைலும்பேட்டை, ஹைகோர்ட் வக்கீல் பிரஹ்மஸ்ரீ டி. ஆர். ராமச்சந்திர அய்ய ரவர்கள் பி.எ.பி.எல்; சென்னை மயிலாப்பூர் ஹைகோர்ட் வக்கீல் பிரஹ்மஸ்ரீ ஆர். குப்புசாமி சாஸ்திரியா ரவர்கள் பி.ஏ.பி.எல், ஸ்ரீரங்கம் வாணீ விலாசம் பிரஸ் புரோபிரைட்டர் பிரஹ்மஸ்ரீ பால சுப்பிரமணிய அய்ய ரவர்கள் பி-எ. முதலியவர்களாவார்கள்.

5. வாதிக்கும் சைவ சித்தாந்தி கட்கு மத்தியஸ்தர்கள் இன்னவர் இவ்வளவின ரென்பதை நீவி ரறிவிப்பீராக!

6. ஸ்ரீலஸ்ரீ ஜகத் குரு சங்காராசாரிய சுவாமிகளோடு வாதம் புரியுங்கால் மண்டன மிச்ரர் பிரஷ்டை செய்வித்தாங்கு வாதிக்கும் அத்வைதிகட்கும், அவர்களது மத்தியஸ்தர்கட்கும், அவற்றிற் குபபலமாக வரும் 250 வித்வ சிகாமணிகட்கும் வாதம் முடியும் வரை, அவரவர் யோக்கியதைக்குத் தக்க வாறு, உண்டி செய்வித் துறையுள் ஈதவல் நமது சபையார் கடனும்.

7. வாதிக்கும் எம்மவர்களும், மத்தியஸ்தர்களும், உபபல வித்வ சிகாமணிகளும், அவரவர்கட்குத் தகுதியான ஆசனங்களில் சபையில் வீற்றிருப் பார்கள்.

8. வாதத்திற்காக, காரைக்குடி மகார் நோன்புப் பொட்டலில் பெருங் கொட்டகை ஏற்படுத்தி, 30 நாள் வரை காலை 8 மணி முதல் 10 மணி வரையும், மாலை 3 மணி முதல் 5 மணி வரையும், நாடோறும் தவங்கா துரை பெற வேண்டும்.

9. நம்மவர் அஞ்சுவரும் கலகப் பிரியராய், தேவி கோட்டை மதுரை முதலிய விடங்களிற் கலகம் விளைவித்தவராகலின், இச் சபையிற் கலாம் விளையாது செய்தற்கு, கலெக்டர், இன்ஸ் பெக்டர், கான்ஸ்டபிள் முதலிய சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் இரு பக்கத்தார்க்கும் அவசியம் வேண்டும்.

10. ஈழ தேயத்து அகம்படியார், சான்றார், ஈழுவர், ஆயர் முதலியோர்கள் இங்கு வந்து பிள்ளை யென்றும் நாவலனென்றும் புதுப்பெயர் தாங்கி, பாண்டி தேயத்தும் ஏனைய விடங்களிலுள்ள வேளாளர் என்னும் சைவர்களோடு, பந்தியி லொருங் கிருந்துண்டு, அவர்கள் குலங்களைத் தீண்டா வண்ணம் கெடுத்தது போல், செய்யாமல், இச் சபைக்கு வரும் வித்வ சிகாமணிகட்கு அவரவர் வருணாசிரமங்கட்குத் தக்கவாறு போஜனஞ் செய்வித்தல் நமது சபையோர் கடனுமென்பதை மூக்காலு மூணர்வீராக!

11. சபை நடை பெறுவதற்கு மூன்று மாதத்திற்கு முன்னரே, இவ் வாத விதியை ஒப்புக் கொண்டீர் என்பது தோன்றப் பத்திரிகை வாயிலாக வெளியிடுவீராக !

இவ்விதிகட் குடன்பட்டீராயின் தேவி கோட்டை ஜமீன்தார் ஸ்ரீ மான் அள. அரு. அருணாசலஞ் செட்டியா ரவர்கள், ஷை யூர் ஸ்ரீ மான் சித. முரு. முருகப்ப செட்டியா ரவர்கள் என்னும் இருவரையும், நமது சபையோ ராய அஞ்சுவர் நேரிற் கண்டு, இவ் விதிகட்கு யாம் உடன்படு கின்றோம் என்று கூறுவாராயின், அவர்கள் எம்மவர் யாவருக்கும் அறிவிப் பார்கள். அதனை யுணர்ந்து யாங்கள் யாவரும் வாத சபைக்கு வருவோம்.

13. பதி ஞன்கு வித்தையின் வாயிலாக, அத்வைதமே உள தென்று, அத்வைதிக ளாகிய யாங்கள் நிலை நாட்டுகின்றோம். அதனிடத்து நீவிர் தோஷங் கூறின், யாங்கள் அத் தோஷத்தைப் பரிகரிக்கின்றோம். அல் லது, பதி ஞன்கு வித்தையின் வாயிலாகத் துவைதமே யுள தென்று நிலை நிறுத்துவீ ராக. யாங்கள் அதனிடத்துத் தோஷாரோபணஞ் செய்கின் றோம் அதனைப் பரிகரித்தற்கு நும்மவர்க் காற்ற லின்றாயின், நும்மவர் தோல்வி யுற்றார் என்று யாவரு முணர்தற்குத் தந்துவ மசி மகா வாக் கியம் அக் கழகத்துத் தோல்வி யுற்றார்க்கு உபதேசிக்கப் பெறும்.

மேற்கூறிய விதியோடு நும்மவராய அஞ்சுவர் " எண்ணித் துணிக கருமம் துணிந்தபின், எண்ணுவ மென்ப திழுக்கு " என்னும் பெய்யா மொழிக் கிலக்காகாது, நீவி ரெழுதிய வாறே, பின்னிடாது சபை கூட்டி வார்க ளென்று தகுதி மூர்த்தியைப் பிரார்த்திக்கின்றேன்.

☞ அத்வைதி.

உ

சிவமயம்.

மாயா வாத துவைத மலத் திடிப் பேறிய

அசுத்த சைவ

சித்தாந்திக் கோர் கூற்று.

அசுத்த சைவ சித்தாந்தியாகிய அன்பரே !

நீர் " அப்புண்ணிய சீலர் வசிக்குந் திருமடத்தில் " என்று சொக்க லிங்கச் செட்டியாரை வியக்கின்றீர்.

" திருநாம மஞ்செழுத்துஞ் செப்பா ராகிற் றீவண்ணர் திறமொரு காற் பேசா ராகில், ஒருகாலுந் திருக்கோயில் குழா ராகி லுண்பதன்மூன்

மலர்பறித்திட் டுண்ணு ரர்கில், அருநோய்கள் விடவெண்ணீ றணியா ராகி லளியற்ரூர் பிறந்தவா றேசா வென்னிற், பெருநோய்கண் மிகவலி யப் பெயர்த்துஞ் செத்துப் பிறப்பதற்கே தொழிலாகி யிறக்கின் ரூரே " என்று பெரியார் கூறியிருக்கச் சிவாலயத்திற்குச் சென்று தரிசியாதவரா யும் காரைக்குடி முத்துப் பட்டணத்தில் இருக்கும் இரு வைசிய மணிகளைப் பெண் விஷயமாய்த் தர்ம சாஸ்திரத்திற்கு மாறுபட்டு, இரு பதி னாயிரத் துக்கு மேற்பட்ட திரவியத்தை வாங்குங்க ளென்று எவ்வளவாயும் உள்ள சொக்கலிங்கச் செட்டியார் புண்ணிய சீல ராவாரேல், உலகத்தில் இவ் வாரூய செய்கை யுடையா ரியாவரையும் புண்ணிய சீலரென்றே கொள் ளல் வேண்டும் அவ்வா றுலகம் ஒப்ப வில்லை.

பூட்டாகிய நீவிர் " வெரும் " என்றும், " ஆண்டா ணடிமைத் திறங் கொண் டொழுகும் அறு பத்து மூன்று நாயன் மார்கள் " என்றும், உள்ள வாக்கியங்க ளமைந்த பத்திரிகையை வெளியிட்ட பின் யுற்று, " வெறும் " என்றும், " ஆண்டா ணடிமைத் திறங் கொண் டொழுகிய அறு பத்து மூன்று நாயன் மார்கள் " என்றும் நிரித்துப் பூட்டி வெளி யிட்டீர். இவ்வாரூய பூட்டுத் தொழில் நும்மவர்க்கும் நமக்கும் தொ ன்று தொட்ட வழக்கமேயாம்.

நுமது செட்டியாருக்குச் " சின்னச் செட்டியார் " என்னும் பெய ருண்மையின், அப்பெயருக் கிணையச் சிறு தன்மையாகிய நிந்தைகளைப் பல புத்தகங்களி லெழுதி வெளியிடுகின் றமையினாலும், அக ரச் சாரியை பெற்று, சோதிக்கும்படியான குறி யுடைமையினாலும், அப் பெய ரவர்க்குக் காரணக்கம் பெற்ற தென்றறிக !

" பகட் டுரை காட்டிப் பதுங்கலானீர் " என்கின்றீர். பகட்டுரை காட்டுதலாகிய வஞ்சகத் தன்மையும், பதுங்குதற் கிடமாயுள்ள அழகாபுரி முதலிய விடங்களுக்குச் சென்று ஒளியுந் தன்மையும், நுமது செட்டியா ரிடத்துள தென்பதை யாவரு மூணர்வர். அவ்விரு குணங்களு மெங்க ளிடத் தற்பமேனு மில்லை யென்பதை யெம்மவாது புத்தகங்களும் பத்திரி கைகளும் அறிவிக்கும்.

" அவர்களைத் தடுத்து வைத்தல் நுமது சரமேற் கொண்ட கடனும் " என்கின்றீர். பிறர் பாகத்திற்குரிய சொத்துக்களை கவரும்படி காவலைடக் கல்வி கற்று முயற்சிக்கும் நுஞ் செட்டியாரிடத்துப் பொரு ளின்மையின் ஆச்சாபுரம் முதலிய விடங்கட்குச்சென்று பதுங்கிவிடாது தடுத்து வைத் தல் நுமது சிரமேற் கொண்ட கடனும். அங்ஙன மின்றிச் சகத் குருவாக விளங்கும் வேதாந்திக ளாகிய சந்தியாசப் பெரியாரை, அவர்கள் பக்தர்கள் யாண்டிருப்பினும் அழைத்து வருவார்க ளாகலின், அவர்களைத் தடுத்து வைத்த லெவர் கடனு மன்றும்.

நம்மவர் வெளியிட்ட பத்திரிகையில் " வாடைடர், நாடுனென், ஆடு இயம், தேடுடும் " என்று நான்கடியு மிருக்க, இரண்டா மடியில் " நாம் பிரமம் " என்று பாட்டி, எதுகை முதலியன விளங்க வில்லை யென்றும், ஆண்டவ ரிருக்கின் " நாடு னென்று " திரித்தற்குத் தண்டனை கிடைக்கு மென்றும் கலைந்தார். அவர் எவ்வீழக் குருவினிடத்து இலக்கிய இலக்கணங் கற்றனரோ? " வாடைடர் " என்பதற்கு " நாம் பிரமம் " என்பது எதுகைத் தொடையாமோ? அப்புத்தகத்தினைப் பெற்று முழுக் கவியினையு மறிந்து முறையிட்டனரா? " பொருளில் லார்க்குப் புத்தக மீங்கில்லை. அருளிலார்க் கவ்வுலக மாங் கில்லை. " என்றுயினரோ! செய்யு ளிலக்கணம் கற்க வேணடு மாயின், இவரிடத்திற்றான் செல்லல் வேண்டும். நமது செட்டியாரை நீர் வெவ்வேறு கைச் சாத்திட்டு, பல பத்திரிகையில் வியக்கின்றமையின், அவ் வியயப்பினைத் தகர்க்கும் " சொக்க லிங்கச் செட்டியார் துராசார நூற்றெட்டு " என்னும் நூலைக் கண்டு அடங்குவீராக!

எம் மவரைக் காரைக்குடிக்கு வருங்கால் நமது செட்டியார், ராம சாமிச் செட்டியாரைக் கொண்டு, பஞ்சமா பாதகங்களி லொன்றாய், பிரமஹத்தியாய கொலைத் தொழிலைச் செய்யும்படி யேவுகின்றனராம். இவ்வாறு, கொலை செய்யக் கருதும், சொக்க லிங்கச் செட்டியார், இராம சாமிச் செட்டியாரொன்னு மிருவரையும், காரைக் குடியில் இரா வண்ணம், வேறு தேயத்துக் கனுப்புதல் நகரத்தார்களது முக்கியக் கடமையு ளொன்றும். இவ்விருவரும் ருத்திர மூர்த்தியி னிடத்தி லிருந்து சம்மாரத் தொழிலைப் பெற்றனரோ? வாத சபையில் இவ்வாறுய கொலை செய்யக் கருதுவ தொன்று கருதியே, கலெக்டர் முதலிய வுத்தியோகஸ்தர்கள் விரும்பப் படுபவராகின்றனர். விரிப்பிற் பெருகும். அமைக!

☞ அசுத்த சைவ சித்தாந்திக் கோர் கூற்றுவன்.

உ

சற் குருப்யோ நம:

நகரத்தார்கட் கோர் விஞ்ஞாபநம்.

காரைக்குடி அறு பத்து மூவர் மடச் சொக்க லிங்கச் செட்டியார்
சூட்டுக் கோலோடு தெகூஷணபுரம் சென்றதும் ஆண்டிருக்கும்
தர்ம ராஜ சபைக் காரிய தரிசி சித்திர குப்தன்

அறிவித்தது.

நகரத்தார்களே!

காரைக்குடி அறு பத்து மூவர் மடத்துச் சொக்க லிங்கச் செட்டியாருக்கு ஸ்ரீ காசிகாநந்த சுவாமிகள் சூட்டுக் கோல் போட்டிருக் கிறார்க ளென்

பது யாவரு முணர்வர். அச்சூட்டுக் கோலை கைக் கொண்டு மேற் குறித்த சொக்க லிங்கச் செட்டியார் தெகூணை புரம் சென்றனராம். அங்குச் சென்று, தர்ம ராஜ சபையில் கணக்குத் தொழிற் செய்யும் சித்ர குப்தனிடம், சூட்டுக்கோலைக் கொடாது விடையத்தை மாத்திரம் கொடுத்தனராம். அதனைச் சித்ர குப்தன் பெற்றுப் பார்க்குங்கால், முதலி லுள்ள மைடிஸ் பேஜில் அவனுக்கு எண்ணைய முண்டாயினவாம். அவ்வையங்களை நிவர்த்தித்துக் கொள்ள தெகூணை புரத் திருந்து, கோலிலூர் ஸ்ரீ காளிகாம்பாள் சுவாமிகளிடம் வருதற்குக் காலம் பெருமையின், அச்சுப் பத்திர வாயிலாகச் சுவாமிகளிடத்து வினவிச் சமாதான முறுவே னென்று கருதினனும். அதற்குத் தெகூணை புரத்து அச்சுவாகண மின்மையின், நேரனாக தருமராஜாவிடம் அநுமதி கேட்க, அவன் வேண்டுகோட் டிசைந்து, தருமராஜா அநுமதி கொடுத்தனராம். அதனைப் பெற்றுத் துவாதசாந்த புரமாகிய மதுரையை யடைந்து எண்ணையத்தை யறிவிக்கும் பிரகங்கப் பத்திரிகை யச்சிட்டனனும். அச்சிட்டவன் மேற்படி சுவாமிகட் கனுப்பத் தன்னிடத் தேவை மின்மையின், மோட்டார்கார் வாயிலாகச் சொக்கலிங்கச் செட்டியார் மாளிக்க னிருக்கும் காளைக்குடிக்கு அனுப்பினனும். அதனை மாளிகைக்கன் பெற்று போஸ்டு வாயிலாக அனுப்பின் சுவாமிகளிடம் எத்தனை திகத்தில் சேருமென்னும் அறிவின்மையின், அறிவியாகிய மாளிகைக்கன் போஸ்டின் வாயிலாகச் சுவாமிகட் கனுப்பினனும். அது, தம்மகத்திற் கொண்ட காலவளவையின் வாப் பெருமையின், சுவாமிகளால் விடை யிறுக்கப் பெறாது போயிற்று நிற்க, அதனைக் கண்டா யாம் ஈகபத்தார்கட்கு இவ்விடையத்தை யறிவிப்பான் எழுதத் துணிந்தனம்.

சொக்க லிங்கச் செட்டியார் சிவ பத்த ரென் றறிவிக்கின்றமையின், சூட்டுக் கோலைக் கொண்டு கைலாயஞ் சென்று சிவனிடத்து முறையிட்டிருக்கலாம். அங்ஙனமின்றி தெகூணை புரஞ் சென்றமையின், இவர் செய்த திருப் புத்தூர்ப் புராணப் புரட்டு, ஆண்டவர் சுவாமூபவத் திருவாக்குப் புரட்டு முதலிய புரட்டுகளையும், சிவ நிஷ்டை, சிவாவதார நிஷ்டை, சிவ னடியார் நிஷ்டை, சிவ குரு நிஷ்டை, சிவ குரு குல நிஷ்டை, சிவப் பிராமணர் நிஷ்டை, வேத நிஷ்டை, வேதாந்த நிஷ்டை, விபூதி நிஷ்டை, முதலிய நிஷ்டைகளையும், செய்தவனைச் சித்ர குப்த னறிந்தவ ணுதலின், தம துயர மானனது தூதர்களை யனுப்பி, இவனைப் பிடித்துவரச் செய் திருக்கலா மென்று தோற்றுகின்றது. அங்கு அவர்கள் பிடித்துச் சென்றதும், இவருடைய குற்றக் கணக்குக ளங்கிருந்தமையின், அதனைத் தப்பிக்க முடியா தெனக் கருதி, சூட்டுக் கோலைக் காண்பித்தனர் போலும். அச் சூட்டுக் கோல் விஷயங்களின் கணக்கு, சித்ரகுப்தனிட மின்றிப் பிரமலோகத் திருக்கின்றமையின் பிரம லோகத்திற்குச் செல்லத் தனக் காற்ற லின்மையால், சுவாமிகட்கே யெழுதி, மாளைக்கனுப், பொருள் தெரிந்துகொள்வே னெனக் கருதினன் போலும்.

பது யாவரு முணர்வர். அச்சூட்டுக் கோலை கைக் கொண்டு மேற் குறித்த சொக்க லிங்கச் செட்டியார் தெகூணை புரம் சென்றனராம். அங்குச் சென்று, தர்ம ராஜ சபையில் கணக்குத் தொழிற் செய்யும் சித்ர குப்தனிடம், சூட்டுக்கோலைக் கொடாது விடையத்தை மாத்திரம் கொடுத்தனராம். அதனைச் சித்ர குப்தன் பெற்றுப் பார்க்குங்கால், முதலி லுள்ள மைடிஸ் பேஜில் அவனுக்கு எண்ணைய முண்டாயினவாம். அவ்வையங்களை நிவர்த்தித்துக் கொள்ள தெகூணை புரத் திருந்து, கோலிலூர் ஸ்ரீ காளிகாம்பாள் சுவாமிகளிடம் வருதற்குக் காலம் பெருமையின், அச்சுப் பத்திர வாயிலாகச் சுவாமிகளிடத்து வினவிச் சமாதான முறுவே னென்று கருதினனும். அதற்குத் தெகூணை புரத்து அச்சுவாகண மின்மையின், நேரனாக தருமராஜாவிடம் அநுமதி கேட்க, அவன் வேண்டுகோட் டிசைந்து, தருமராஜா அநுமதி கொடுத்தனராம். அதனைப் பெற்றுத் துவாதசாந்த புரமாகிய மதுரையை யடைந்து எண்ணையத்தை யறிவிக்கும் பிரகங்கப் பத்திரிகை யச்சிட்டனனும். அச்சிட்டவன் மேற்படி சுவாமிகட் கனுப்பத் தன்னிடத் தேவை மின்மையின், மோட்டார்கார் வாயிலாகச் சொக்கலிங்கச் செட்டியார் மாளிக்க னிருக்கும் காளைக்குடிக்கு அனுப்பினனும். அதனை மாளிகைக்கன் பெற்று போஸ்டு வாயிலாக அனுப்பின் சுவாமிகளிடம் எத்தனை திகத்தில் சேருமென்னும் அறிவின்மையின், அறிவியாகிய மாளிகைக்கன் போஸ்டின் வாயிலாகச் சுவாமிகட் கனுப்பினனும். அது, தம்மகத்திற் கொண்ட காலவளவையின் வாப் பெருமையின், சுவாமிகளால் விடை யிறுக்கப் பெறாது போயிற்று நிற்க, அதனைக் கண்டா யாம் ஈகபத்தார்கட்கு இவ்விடையத்தை யறிவிப்பான் எழுதத் துணிந்தனம்.

சொக்க லிங்கச் செட்டியார் சிவ பத்த ரென் றறிவிக்கின்றமையின், சூட்டுக் கோலைக் கொண்டு கைலாயஞ் சென்று சிவனிடத்து முறையிட்டிருக்கலாம். அங்ஙனமின்றி தெகூணை புரஞ் சென்றமையின், இவர் செய்த திருப் புத்தூர்ப் புராணப் புரட்டு, ஆண்டவர் சுவாமூபவத் திருவாக்குப் புரட்டு முதலிய புரட்டுகளையும், சிவ நிஷ்டை, சிவாவதார நிஷ்டை, சிவ னடியார் நிஷ்டை, சிவ குரு நிஷ்டை, சிவ குரு குல நிஷ்டை, சிவப் பிராமணர் நிஷ்டை, வேத நிஷ்டை, வேதாந்த நிஷ்டை, விபூதி நிஷ்டை, முதலிய நிஷ்டைகளையும், செய்தவனைச் சித்ர குப்த னறிந்தவ ணுதலின், தம துயர மானனது தூதர்களை யனுப்பி, இவனைப் பிடித்துவரச் செய் திருக்கலா மென்று தோற்றுகின்றது. அங்கு அவர்கள் பிடித்துச் சென்றதும், இவருடைய குற்றக் கணக்குக ளங்கிருந்தமையின், அதனைத் தப்பிக்க முடியா தெனக் கருதி, சூட்டுக் கோலைக் காண்பித்தனர் போலும். அச் சூட்டுக் கோல் விஷயங்களின் கணக்கு, சித்ரகுப்தனிட மின்றிப் பிரமலோகத் திருக்கின்றமையின் பிரம லோகத்திற்குச் செல்லத் தனக் காற்ற லின்மையால், சுவாமிகட்கே யெழுதி, மாளிகைக்கனுப், பொருள் தெரிந்துகொள்வே னெனக் கருதினன் போலும்.

யும், ருத்திர ரூப மாயும், பிரஹ்ம ரூபமாயும், இருக்கின்ற பிரம லோக வாசிகளாகிய எம்மவரான், மார்க்கண்டேய ரிடத்து வந்து யமன் பட்டது போன்று, தர்ம ராஜனும், அவன் கணக்கருகிய சித்ர குப்தரும், தண்டிக்கப்பட்டுச், சிறைச் சாலை யடைவார்க ளென் றுணர்வார்க ளாக.

☞ பிரஹ்ம லோக வாசி.

உ

சிவமயம்.

சுத்தாத்துவித சைவ சித்தாந்தியாகிய
பல் லைறையர் முகத் தினை.

திரு மூல நாயனர் கூறிய அசுத்த சைவத்தைப் பட்ட காந்திரிக வாருவர் "சுத்தாத்துவித சைவ சித்தாந்தி" என்று அடியில் ஒட்டி "அத்வைதி" என்பவருக்கு எழுதிய "பல் அறை" என்ற நிந்தைப் பத்திரிகை கண்டனம்.

இன்றளவும் வேதாந்திகளோடு வாது செய்து வென்றவர் உலகத்திலொருவரு மிலர் என்பதற்கு, என் றென்றைக்கும் வேதாந்த சாஸ்திரங்கள் ஆதித்தன் போ லலங்கரித்து விளங்குவதே தக்க சான்று ம். ஸ்ரீ ஞான சம்பந்த ஸ்வாமிகள், ஸ்ரீ மாணிக்க வாசக ஸ்வாமிகள், ஸ்ரீ மூல நாதர், ஸ்ரீ உமாபதி சிவாசாரிய ஸ்வாமிகள் முதலியோர்கள், புற மதங்களை வென்றும், கண்டித்தும், "வேதத்தின் ஞான காண்டப் பொருளை விளக்குவது" என்னும் வேதாந்தத்தினைப் புகழ்ந்து தமது நூல்களிற் கூறியிருப்பார்க ளாயின், இவ ரென்ன "சைவ சித்தாந்தி" "சுத்தாத்துவித சைவ சித்தாந்தி" "அசுத்த சைவ சித்தாந்தி" என்பவரால், வாதிட்டு வெல்லும் தீர்மைத்தோ? தூர்வை யாசகப் படலக்காரர் தம்மின் மிக்கா ரிலரெனக் கருதி, ஆணவ மூனைப்பா லாமா வன்ன ஆரவாரித்தனை யென்றுணரா தாரவாரிக் கின்றனர்.

"அவர் தத்வைத நிலை—சைவ வைணவ மாத்வ நிலைகளும் போந்து வியபிசரிக்கின்றது" என்றார். "சாத்திய அபாவ மூடைய தன்கண் இருக்கும் எது வியபிசாரமாம்" என்பது வியபிசாரத்தின் இலக்கணம். அநுமானத்தின்கண் தூளி பொருட் பெறுதியில்லா விடத்து, எது இருக்குமாயின் "வியபிசாரம்" என்னும் தோட முண்டாம். சண்டு "அத்வைதி" என்பதன்கண் அநுமான மெவ்வாறு? "பிரதிஞ்ஞை, எது, உதாஹரணம், உபநயம், நிகமனம்" என் றைந் தவயவங்களின்றி யநுமான முண்டாமோ? அன்றியும், அநிஷ்டாத்தி (சேறல்) தோஷமும் கூறுதற்

கிடனின்று. "கோடுவால் முதலியன வுடையது பசு" என்னின், அதிவி யாத்தி தோடமா மதனை நீக்குதற் கெவ்வாறு "அலைதாடி கோடு முதலியன வுடையது பசு" என் றறையப் படுகின்றதோ, அவ்வாறே, சைவர், வைண வர், மாத்துவர், (சிவ) அத்வைதர் முதலியோர்கள், வேதாந்திகள் முன்னர்க் கொண்ட "அத்வைதம்" என்னுஞ் சொல்லி லுள்ள அதிவியாத்தியினை நீக்குதற்கு "அத்வைதம்" என்னுஞ் சொல்லுக்கு முன் "சுத்த" என்றும், "விசிஷ்ட" என்றும், "சிவ" என்றும் உள்ள சொற்களை மிகைப்படுத்திக் கொண்டார்கள். இதனை யுணராது "அத்வைதியை வழுவியவர்" என்று எழுதிய இவர் தாமா, தர்க்க ஞானத்தோடு வாதத்திற்கு வந்த வேதாந்திகளை வெல்லுஞ் சைவ சித்தாந்திகளைத் தேர்ந் தெடுப்பவராய்ச் சபை கூட்டுவாரு ளொருவ ராவர்? அத்வைதி யென்பதனை லிங்கமாகக் கருதி, வழுவியதாக அத்வைதி லிங்கத்தில் வாய்போடக் கருதுகின்றனர் போலும்.

"அசைவராய இவர்" என்கின்றார். லக்ஷியமாய சிவ சொரூபமா யிருக்கும் வேதாந்திகள் சைவரே யாவர். மூர்த்தியாய சிவ சொரூபத் தின் றிருவடி யடையும் சிவ ஞானபோத வுள்ளிட்டாரும் சைவரே யாவர். அங்ஙன மாயினும், திரு மந்திரம், "நான் சிவன், நான் பிரஹ்மம்" என் னுங் கொள்கை யுடையோர் "சுத்த சைவர்" என்றும், பொன் கடிக்கன், குண்டலம், பொன் வடம் முதலியவற்றைத் தரிக்கும் மதக் கோட்பாட் டுள்ளிட்டார் "அசுத்த சைவர்" என்றும் கூறுகின்றது. அதனால், சுத்த சைவத்தி னின்றும் விலக்குதற்கு அகார வடை கொடுத்து 'அசுத்த சைவர்' என விளித்தனர். இதனால், ஈண்டைக் குபயோக மின்றி, வேதாந்திகளை "அசைவர்" என்றும், "அகார வினம் பற்றிப் பின்ன வரையே விளித்தன" என்றும், "அசுத்த சுத்தாத்துவிதம் என்னும் வழக்கா றின்மையின்" என் றும் மிகைப் பொருள் கூறி, "ஈண்டைக் குபயோக மின்றிய பொருளைக் கூறுதல்" என்னும் அர்த்தாந்தரமாகிய தோல்வித்தான அறையைப் பெறு தற் கிலக்காயினர்.

"சபை கூட்டுவோரை யறிவித்தவர் சைவ சித்தாந்தி, சபை கூட்டு வோர் சுத்தாத்துவித சைவ சித்தாந்தி, சபைக்கு வாதத்திற்கு வருவோர் அசுத்தாத்துவித சைவ சித்தாந்தி" என்று இவர் வாக்கியமே வெளியாக்கு கின்றது. எனெனின், மூவருள் முன்னவருக்குப் பின்னவர்கள் வி சே டண முடையவ ராகலின். இதனை யன்றே, திரு மந்திரம், (ஐந்தாந் தந்தி ரம் 2-வது அசுத்த சைவம்-1423) "இணையார் திருவடி யேத்துஞ் சிங்கத், தினையா ரினைக்குழை யீரணை மூத்திரை, குணமா ரினைக்கண்ட மாலையுங் குன்று, தணைவாஞ் சரியை கிரியையி னர்க்கே" 1424. "காதுபொன் னர்ந்த கடுக்க னிரண்டுசேர்த், தோதுந் திருமேனி யுட்கட் டிரண்டென், சோதனை செய்து வுபதேச மார்க்காய், ஓதி யிருப்பா ரொருசைவ ராகுமே" என்று கூறியது. நிற்க, திரு மந்திரம் எட்டாந் தந்திரம் 2-வது மத்திய சாக்கிராவத்தை 2179 "ஆகின்ற தொண்ணூறே டாறும் பொதுவென்பர்,

ஆகின்ற வாரு றருஞ்சைவர் தத்துவம், ஆகின்ற காலேழ் வேதாந்தி யைணைவர்க், காகின்ற காலாறை யைந்துமாயா வாதிக்கே" என்று கூறிய படியே, "சங்குடக மிருபத்து நான்காவ தாகு, மிருபத்தைந் தாவதுதான் மூலவகங் காரம்; ஆங்கதனை யடைதலுறுஞ் சிதாபாச சீவ, னைறையுமிரு பத்தாரு மவன்மாயை மருவும்; ஓக்காளியா மீசனிரு பத்தேழுமா மவ னவ்,வுபிர்மூதலாந் தூரியனிரு பத்தெட்டா மவன்" என்று வேதாந்த கூடா மணியிலும், "தூல சரீரம் - 6 ஞாதேந்திரியம் - 5, கர்மேந்திரியம்—5, பிராணாதிவாயு-5, மனம்-1, புத்தி-1", ஆகச் சூக்கும சரீர தத்துவம் 17; காரண சரீரம் - மாயை-1, அவித்தை-1, ஜீவன் சதாசிவன் பிரம்மம் 3; என்று ஸ்ரீ சங்காராசாரிய ஸ்வாமிகள் "தத்துவ போதம்" என்னும் நூலி னுங் கூறியாங்கு, இருபத்தெட்டுத் தத்துவங் கொள்ளும் வேதாந்தியாய எம்மவனை "மாயாவாதி யொருவர்" என்றும், "மாயாவாதிகளது" என் றும், "மாயா வாதிகள்" என்றும், "அம்மாயாவதியர்" என்றும், "கூடஸ் தாய மாயாவாதிகளும்" என்றும், "இம்மாயாவாதியார்" என்றும், "கணா பவர் இம்மாயா வாதியார்" என்றும், ஒரு சிறு துண்டுப் பத்திரிகையில், எழிடங்களி லெழுதி, "அபசித்தாந்தம்" என்னும் தோல்வித்தாகக் கூற் றிற் கிலக்காயின ரிவர். எங்ஙன மெனின்:-28-தத்துவங் கொள்ளும் வேதாந்திகளாய எம்மவரோடு சைவ சித்தாந்திகட்கு வாதம் நடந்துங்கால் 25-தத்துவங் கொள்ளும் மாயாவாதி யென்ற யுத்தரங் கொடுத்துக் கொண்டே வந்தமையாலாம்.

"அத்வைதி" என்பவர் வாத வகை யறையில் "வேத நூலை நூல் களும், எமது நூல்களும் பிரமாண மன்றும்" என்று அறைந் திருப்பவும், அதனை யுணராது, "சிவாகமம், பாஞ்சராத்திரம், வைகாநசம், உலகாயத நூல், பிடகநூல், யோகநூல், சாங்கியநூல், வாசிஷ்டம், ஜைத, பெரிய புராணம், காலாயிரப் பிரபந்தம், முதலிய நூல்களையும், பிரமாண நூலாக வாத சபையிற் கொண்டுவர வேண்டும்" என்றும் "அவற்றைப் பிரமாண நூல்களிற் சேர்க்காது அத்வைதி யெழுதியது வழுவாம்" என்றும், கணா கின்றனர். இதனால், அத்வைதி அறைந்ததனை, வேளையர்கள் பத்திரிகை வாயிலாக வறிந்திருந்தும், இவ ரறியாமையின் "வந்தாரை" என்னும் தோல்வித்தாகத்தை யடைந்தனர். "அத்வைதி" யென்பார் பொதுவாகப் பிரமாண நூலை வகுக்காது, தமக் குடன்பாடான நூல்களை வகுத்தன ராக வின், இவர் நியதியோஜ்யாநுமேயாகும் (உடன்பாட்டு பால தல்ல தனை யுடன் படுதல்) அஃதாவது:—"தோல் வித்தா மின்றிய விடத்துத்தோல் வித் தாகத்தை யறிவித்தல்" என்னும் தோல்வித் தாகத்தை யடைந் தனர்.

"இங்கே, யிவர் வேதாந்தமாகிய உபநிடதங்களை யெடுத்துக் காட்ட வில்லை" யென்றீர். உந்தர மீமாஞ்சை வேறு, வேதாந்தமாகிய உபநிட தம் வேறு என்று கருதுகின்றனர் போலும். வேதாந்தமாகிய உபநிடதத்

தின் பொருளையே உத்தர மீமாஞ்சை விசாரிக்கின்ற தென்று உணர்வா
ராக!

"இவர் பிரமாணமாகக் கொண்ட பூர்வ மீமாஞ்சை மதத்தர் உபநிடதங்
களை யங்கீகரியார்" என்றும், "உத்தர மீமாஞ்சை மதத்தர் கர்ம காண்டத்
தை யொதுக்குவர்" என்றும், எழுதி யிருக்கின்றார். இவர் கல்வி யின்
றினே நிறன்! பூர்வ மீமாஞ்சை மதத்தர் வேதாந்தமாகிய வுபநிஷதங்க
ளைத் தேவதையினை விளக்குவதாய்ச் சாதனமாகவும், உத்தர மீமாஞ்சை
மதத்தர் கன்ம காண்டத்தை அந்தக்காணை சுத்திக்குச் காரணமாய்ச் சாதன
மாகவும், அங்கீகரிக் கின்றன ரென்று, இனியேனு மூணர்வாராக!

"ஆகமம் பிரமாண மன்றுயின் யாங்களும் ஆலயத் திருப்பணி செய்
கின்றோம். ஆலய வழிபாடு செய்கின்றோம் என்று பெருமை பாராட்டுவ
தென்னை?" என்கின்றார். ஆகம மின்றுயின் ஆலயங்களும் வழிபாடுக
ளும் இன்றெனக் கருதுகின்றார். பரமேச்வரன் ஆகமமாகிய வுரை
யெழுதுவதற்கு முன், மூலமாய வேதத்தின் பொருளை யுணர்ந்து, அதன்
வழித்தாய் ஆலயங்களும் ஆலய வழிபாடுகளும் உலகத்தி லிருந்த துண்
டோ? இல்லையோ? வேதத்திற் கூறிய பொருளை ஆகமம் விரித் துரை
செய்வதே யன்றி வேறின்றும். ஆகமத்தை மூக்கியமாகக் கொள்ளா
தார்க்கு வைதிகாலயமும், வைதிக வழிபாடு மூண்டென் றுணர்வாராக!

சிதம்பரத்தில் பூரீ தீக்ஷிதர்களும், ஆளுடையார் கோவிலில் நம்பியார்
களும், இராமேச்வரத்தில் ஆரியர்களும், திருச் செந்தூரில் போத்திமார்
களும், திருவானைக்கா அகிலாண்டேச்வரிக்கு வைதிகரும், காசியில் பண்
டாக்களும், ஸ்மார்த்தர்களா யிருந்து வைதிக பூஜை செய்து கொடுக்கும்
விபூதியை, ஆதிசைவர் முதலா யுள்ள எவ்வகைச் சைவரும், அவர்கட்குக்
கீழ்ப்படிந்து வாங்கித் தரித்துக் கொண்டு, அந்த ஸ்மார்த்தர்களையும் ஈச்வர
ரைப் பாவித்துக் கும்பிட்டு விடை பெற்றுச் செல்வதை யுணராதார் யாவர்?

"அத்வைதி" என்பார் வாதத்திற்கு, பிராஹ்மண, க்ஷத்திரிய வைசிய
வருணங்களில், கிரகஸ்தர்களும் சந்நியாசிகளும் வருவார்க ளென் றறிவித்த
னர். வாதம் பதினெண்கு வித்தைக்கு அதிகாரியாரால் நடத்தப்
படல் வேண்டும். பல் லறையரோ "அந்த விப்ர சிரேஷ்டர் இவர்களோடு
ஒருங்கிருந்து, இவர் சொல்லும் வேத மந்திரங்களைக் காதினாற் கேட்பார்
களா? பிரதி யுத்தரமாக வேத மந்திரங்களைச் சொல்வார்களா? உயர்
குலத்தா ரான அவர் இழி குலத்தா ரென் நிகழ்ந்து ஒதுக்குப வராகலான்
ஸ்மிருதிகள் மிகத் தாழ்த்திப் பேசுகின்றன. சூத்திரர் வேதஞ் சொல்லப்
பிராமணர் கேட்கலாகா தென்றும், பிராமணர் சூத்திரர்க்கு வேத மந்திரங்
களைச் சொல்லலாகா தென்றும், கண்டிக்கின்றன. கடுந் தண்டனை கூறு
கின்றன" என்று எழுதி யிருக்கின் றமையின், சைவ சித்தாந்திகள் யாவ
ரும் நாலாம் வருணத்தா ரென விளக்கமாகின்றது. பிராமண க்ஷத்திரிய

வைசியர்களா யிருந்து, பதினென்கு வித்தைக் கதிகாரிகளா யிருப்பின், வைதிகர்களாய வேதாந்திகள் சைவ சித்தாந்திகளோடு வாதத்திற்கு வருவார் களே யன்றி, சூத்திராராய சைவ சித்தாந்திகளோடு வாதத்திற்கு வாமாட் டார்க ளென் றுணர்வாராக.

பூரீ கோவிலூர் மடாலயாதிபதிகள், தமது வேதாந்தத்தைத் தூஷிக் கும் சைவ சித்தாந்திகளோடு வாதஞ் செய்யும் வேதாந்திகட்கு மத்தியஸ்த ராக நன்கு வருவார்கள். இதுவரைச் சைவர்கள் வேதாந்திகளை நிந்திக்க மையாலும், இப்பொழுது கலியின் மிகுதியால், ஆஸ்திக நாஸ்திகர்களாய்ப், வேதாந்தத்தினைச் சைவர்கள் தூஷிக்கின்றமையின், அதனை யடக்குவதற் கும், தமது மதத்தைப் பாதுகாத்தற்கும் உடன்படுகின்றார்க ளென் றுணர்க. "மத்தியஸ்தர்" என் றெழுதி யிருக்க, அதனை யுணர்ந் தவ்வளவில் வினவாது, "வாதிப்பவராய் உபகாரஞ் செய்பவராய்" என்று எழுதி யிருக்கின்றமையின், "அதிகமே" என்னுந் தோல்வித் தானத்தை யடைந்தனர்.

தேவி கோட்டை ஜமீன்தார் பூரீமான் அளகப்ப செட்டியா ரவர்கள், பூரீ செல்லப்ப சுவாமிகளை ஞான குருவாக அடைந்து, வேதாந்த சூடாமணி, கைவல்ய நவநீதம், ஞான வாசிட்டம் முதலிய நூல் களை முறையாகப் பாடங் கேட்டு, அதிற் கூறியபடி, ஜீவப் பிரம்ம வைக் கியத்தினைக் கைக்கொண்டு, நாடோறும் வேதாந்தியா யொழுகுபவ ராயிற் றே! அவர்கள் தாம் கைக்கொண்ட வேதாந்தத்தினைத் தூஷிக்கும் சைவ சித்தாந்திகளை யடக்குதற்கு மத்தியஸ்தராக அவசியம் வருவார்கள். "வர மாட்டார்கள். நாம் நம்பமாட்டோம்" என்கின்றீர். ஆயின், இவரையும், இவரைச் சார்ந்தாரையும், வேதாந்திகளை மாயாவாதிக ளென்றும், வேதாந் தத்தைப் பௌத்த நூ லென்றும், வேதாந்திகளுக்குச் சபையில் சமணர் போல் இருக்கும்படி யிடங் கொடுங்க ளென்றும், இன்னும் பல வாறு தூஷிக்கும்படியும் ஆஞ்ஞை செய்வார்களோ? அவர்கள் சைவர்கள் முன் னிலையில், "வேதாந்திக ளாய எங்களை, மாயா வாதிக ளென்று சொல்லல் தகா" தென் றறைபவர்க ளாயிற்றே! அவர்கள் அறையைப் பெற்று மௌ னமா யிருக்கின்றனர் அளவிறந்தனர்.

கோவிலூர் மடாலய அபிமானியாய பூரீமான். சித. முரு. முருகப்ப செட்டியா ரவர்கள் பூரீ வீர சேகர ஞான தேசிகப் பெருந்தகையா ரிடத்து அன்பு பூண் டொழுகிச், கோவிலூர் மடாலயத்தினைச் சாராதவர்கட்கு வருந் தீமையினைத் திருப் பாதிரிப் புலியூரில் மூடி புரை கூறிய காலத்துக் கூறியிருக்கின்றார்கள். அங்ஙன மிருக்க, அவர்கள் வேதாந்தத்தினை, ஆஸ்திக நாஸ்திகராய்த் தூஷிக்குஞ் சைவ சித்தாந்திகட் கிடங் கொடுப்பார் களா? எவரிடத்துச் சிவ தீக்ஷை பெற்றார்கள்? வைதிகர்க ளிடத்தா? அவைதிகர்க ளிடத்தா? 'நம்ப முடியாது" என்றீர். 'அத்வைதி' யென் பார் சாக்கை மடாலயத்தில், அவர்களைச் சந்தித்து, அவர்கள் சம்மதத்தின்

மீது, வாத வலை யறைப் பத்திரிகை வெளியிட் டிருக்க, அதனை யிவர் என் நம்புவர்? நம்பார், நம்பார்.

"பசு மலை, யானை மலை போல் மடங்களு மிருக்கின்றனவே" என் கின்றனர். இதனால், மடத்திற்கும் புகழுக்கும் தீவத்திக்கும், ஆசைப் பட்டா ரொருவர், வயிற் றெரிச்சலால், கோவிலூர், காளையார் கோவில் முதலிய மடங்களைக் குறிப்பா யெழுதிய தாம். வேதாந்திகளது மடாலயங் களும், பாசமாகிய சைவ சித்தாந்திகளது மடாலயங்களும், நிரகஸ்தர்க ளுடைய நிரகங்களும், யானை மலை போலும், பசு மலை போலும், உந்த மாய்த் தான் இருக்கின்றன. இன்னுங் கிறித்துவர் கோவிலும், பள்ளிக் கூடங்களும், அவ்வாறேதா மிருக்கின்றன. ஆகலின், சடப் பொருளுக் கும் வாதத்திற்கும் யாது சம்பந்த முளது?

"பாண்டியனது அவைக் களத்திலே சமணர்க்கும் இருக்கைகள் கொடுத்தாங்கு, இவர்க்கும் இருக்கைகள் கொடுக்கப்படும்" என்கின்றார். இது சுவ பசு விகடக பர பசு ஸ்தாபநத்திற் குரிய நல்லுதாரணமாம். எங் ஙன மெனின்:—பாண்டியனது அவைக் களத்தில் ஸ்ரீ சம்பந்த மூர்த்தி ஸ்வாமிகள், த்விஜ வருணத்திற் பிறந் திருந்தமையின், உயர்ந்த ஆசர மும், சமணர்கள் தாழ்ந்த வருணத்திற் பிறந்தவர்க ளாகலின், தாழ்வுடைய ஆசரமும் கிடைத்தாங்கு என்ற திருஷ்டாந்தம் போன்றே, இவர் கூறிய படி யுயர்ந்த வருணத்தா ராகிய வேதாந்திகட்கு உயர்ந்த ஆசரமும், தாழ்ந்த வருணத்தாராகிய சைவ சித்தாந்திகட்குச் சமணர் போல் நிற்குந் தன்மையும், பெறவேண்டிய தவசியமே. அதனை லன்றே இத் திருஷ்டாந் தம் வகுத்தனர். இன்றியின், விரோத திருஷ்டாந்தத்தை வகுப்பரா? இவர் மதிமா றுயிற்றே! அவர் என் செய்வார்? நினைப்பின் வண்ணமே யெழுதினர். இவர் சாலச் சிறந்தவர்.

"அவர்களோ நாம் சந்தித்து வேண்டு நிர்ணயங்கள் செய்து கொள் வோம்" என்று இவர் எழுதுகின்றமையின் "காசி வாசி ஸ்ரீமத் செந்தி நாதையர், ஸ்ரீ அம்பலவாண நாவல ஸ்வாமி, ஸ்ரீ ஸ்வாமி வேதாசலம், யாழ் ப்பாணத்து ஸ்ரீ சுவாமி நாத பண்டிதர், மதுரைத் தமிழ்ச் சங்கத்துச் சைவ நூற் பரிசோதகர் - ஸ்ரீ சுப்பிரமணியக் கவிராயர் என்பவராற் சபை கூட் டப்பெறும்" என்று "சைவசித்தாந்தி" என்பவர் அறிவித்த இவர்களுள் ஒருவ ரிவர் என்பதும், தற்காலம் தேவி கோட்டையில் வசிக்கின்ற ரென்பதும், விளக்கமாகின்றது. அவர் எவராயினு மாகுக.

மூத்தியிற் சிவாத்மாவும், சிவனும், அயுத சித்த சம்யோக சம்பந்த மென வ்டமொழிப் பெய ருடைத்தாய், ஒரு குழூஉக் குறியார் தென்மொழி யில் வழங்கும் அத்துவித சம்பந்த மென்னும் சம்பந்த மூடையதா யிருக்கும் என்னும் இவர், துவைத நிலை கொள்பவ ரன்றி வேறு யாவர்? சிவன், சிவம், பாசமாய சம்பந்தம், சிவாந்தக் காரணம், சிவ திருவடி, இச்சையாதி

யுடையமையின், மூத்தியின் மூப்பொரு னங்கீகரிப்பவ ராயிற்றே? ஒன் றுக்கு மேற்பட்ட மூப்பொருவை யங்கீகரிப்பவரைத் நாவாதி யென்று சொல்வதா? எகான்மவாதி யென்று சொல்வதா? கூறுக.

"மூத்தி நிலை யத்துவிதமா யிருப்பதோ? எகமாக யிருப்பதோ? என்று நூல்களா லாராய்ந்து தெளிவு பெறல் வேண்டு" மென்கின்றார். மூதலில் நூலால் மூத்தி நிலை நிர்ணயஞ் செய்யப்பட்ட பின், வாதத்திற்குப் போக வேண்டுவ தின்றே! நூலால் நிச்சயம் பெறுமையா னன்றே வாதித்து நிச்சயிப்பதற்கு வாத சபை ஏற்படுத்தலது. வாதத்திற்கு முன்னே நிச்சயம் பிறந்து விட்டால் வாதஞ் செய்வானேன்? இம்மாறு சொல்லி விடுவோமாயின் வேதாந்திகள் சாமாதத்தை யடைந்து அறைவார்கள். அவ் வறையைப் பெற்றுச் சுகமாகக் காலங் கழிப்போ மென்று கருதினார் போலும்.

"வேதாகம முதலிய மெய்நூல்களின் கொள்கை சைவ சமயமோ? மாயா வாதமோ? என்பதும்" என்கின்றார் 25 சூத்திரவாதியை யங்கீகரிக்கும் மாயா வாதக் கொள்கை யுடையாரோடு வாதஞ் செய்யக் கருதின், சாங்கிய மதத்தருடன் கூறிப் பதி லறை பெறுவ தாக.

"ஆரியன்".

சிவமயம்.

மாயா வாதத்தை மலத் தடிப் பேறிய
சைவ சித்தாந்தி அங்குசத்தைத் தகர்த்தறுத்
தவிடி பொடியாக்குஞ் சண்டீசர்.

சைவ சித்தாந்தியாரே!

சிவ. சண்டியாருக்குப் பரிந்து, "உள்ளபடி யறைதல். மெய்யுரை மறுப்பு" என்ற இரு பத்திரிகைகளை, "கல்லாழுக்க மயங்கோதான். உண்மை யுரைப்போன்" என் றிருபெயர் பூணைந்து, எழுதியவர், "சைவசமயக்குச் சிலகூ" என்று, 'சுலைத சைவ துர்வாத கோளரி' யென்பவரால், எழுதப்பட்ட பத்திரிகையால், ஒழுக்கம் பலருக்கும் வெளிப்பட்டு விடு மென்கின்ற தில கறியுமே!

"எம்மவர் பிரயோகத்தையே கீவி சேற்று வந்ததால்" என்றீர். இம்மே புத்தி வியக்கற் பாலதே! கீவி நிற்றை வரை யிங்கிருந்தீர் போலும்.

நும்மவர் " அறைதல் " என்று பெயர் புனைந்தார். ' அத்வைதி ' யென் பார் " அறை" யென்று பெயர் கொடுத்தனர். விகுதி குறைந்த முதனிலைத் தொழிற் பெயரும், விகுதியோடு கூடிய முதனிலைத் தொழிற் பெயரும், ஒன்று என்னும் அபேத மென்பீரேல், நுமக்குப் பேதந் தோற்றுவது யாண்டு ? இவ்வாறு கூறும் நீவிர் தமிழ் நெடுங் கணக்கி லுள்ள வரிவடிவ வெழுத்துக்களைச் சைவ சித்தாந்திகள் முதலி லெடுத் தாண்டமையின், பின் சமாதானப் பத்திரிகையில் 'அத்வைதி' யென்பார், அவ் வெழுத்துக்களையே, யெடுத் தாண்டன வென்றும், அவற்றை யெடுத்தே யாமும் ஆண்டோ மென்றுங் கூறினுங் கூறுவீர். நுமது கல்வியின் றிறனைக் கற்றோர் காண் பாராக !

நீவி யெழுதிய அங்குசப் பத்திரிகைக்குப் பிரமாணங் காட்டுதற்கு, நீவி யெழுதிய " அத்வைதிக்கு அறிவிப்பு " என்ற பத்திரிகையையே, வேதம் போன்று மேற்கோளாக ஒப்பியதனை, நல் லுணர்வோ ருணரின் நகையாடுவ ரென்று றுணர்க !

" சைவ மடாலயத்தில் நிரீச்சுர வாதிகளாய மாயா வாதிகளைக் கொண்டு " என்றும் " நாஸ்திகர் " என்றுங் கரைந்தீர். உமா சகிதராய சுத்திரருக்கும் மல முண்டென்றும், அவரை யீசுர ரென்று ஒப்பாது சிவ னென்றும், ஈஸ்வரன் கூறிய வேதத்தினை முழு மனதோடு கொள் ளாது இகழ்ந்து கொள்ளும் நீவிரும் நும் மதத்தினரும், நிரீச்சுர வாதிக ளும் மாயா வாதிகளும் நாஸ்திகரும் ஆவீ ரன்றி, வேதாந்திகள் ஒரு போ தும் நிரீச்சுர வாதிகளும், மாயா வாதிகளும், நாஸ்திகர்களும் ஆகார் ! ஆகார் !!

அசுத்த சைவ ரென்றுற் பய னுறுகின்றீர். திரு மந்திரம், 1423 - 1424-வது செய்யுட்களில், காதின்கண் பொன் கடுக்கனும், திரு மேனியி லிரண்டு பொன் வடங்களும், இரண்டு குண்டலங்களும், இன்னும் ஏனைய வற்றையுந் தரித்து, அத்துவா சோதனை செய்பவர், " அசுத்த சைவர் " என்று கூறி யிருக்கின்றமையின் பூநீ மூல நாதரை வெகுளுவீராக !

" ஒவ் வொரு நகரத்தாரும் நுங்களை யடக்கத் தக்க முயற்சி புரிந்து கொண்டிருப்பதை நீவி றியீ ராதலின் " என்றீர். இதனால், ஒவ்வொரு நகரத்தார்க ளிடத்தும், நீவிரும் நம்மைச் சார்ந்தாரும் சென்று, "வேதாந் திகளைப் பத்திரிகை யச்சிடா திருக்கும்படி, செய்யுங்கள் " என்று இரக் கின்றீர்க ளென்பது விகவித மாகின்றது. நும்மவரது செய்கை, திருப் புத்தூர்ப் புராணப் புரட்டு, சுவாநுபவத் திரு வாக்குப் புரட்டு, விநாயக புராணப் புரட்டு, முதலிய புரட்டுக்களேயா மென்று, வேதாந்திக ளச் சிட்ட, பல பத்திரிகைகளால் நகரத்தார்கள் யாவரு முணர்ந்து கொண்ட மையின், இன்னும் மறைவா யுள்ள புரட்டுக்களையும், அச்சிட்டு வெளியி டின் அவமானமாம் என்று கருதி நாடோறும் நகரத்தார்களைப் பத்திரிகை

யச்சிடா திருக்கும்படி ஏற்பாடு செய்யுங்க ளென்று இரந்து முயற்சிக்கின் றீர் போலும்.

'அத்வைதி' யென்பார் அறிவித்தாங்கே, சபை கூட்டுவோராய அஞ் சுவரும் வேதாந்தப் பெரியாரைக் கண்டு அஞ்சுவ ரென்றே யங்கீகரித்து, அதற்குச் சில காரணங்கள் கரைந்தீர். அஃதறிஞர் அறியற்பாலதே.

'ஆசாரி' என்னும் பதமும், 'ஆசாரியர்' என்னும் பதமும், ஒரு பொருளை யுடையன என்பதை ஆரியங் கற்றிருப்பின் அறிய வல்லீராவீர். ஆசாரியத் தன்மை யுடையோன் 'ஆசாரி' யென்பது, "அலரி" என் னும் பதம் போன்றதாம். அதனால் நீவிர் பதப் பொருளுணராது, நீவிர் கருமான் ஒழிலைக் கைக் கொண்ட ஆசாரியா யிருந்தமையா னன்றே, நும தநுபவத்தைப் பிறர்மீ தேற்றி 'ஆசாரி' யென்று கூறினீர். அது நுமக்கே சாலும்.

"திரு வாவடு துறை யாதீனத்துச் சைவப் பிரசாரகர் பொ. முத்தைய பிள்ளை யவர்கள் கடாவிய கடாவைக் கண்டீராயின்" என்றீர். "சூட்டுக் கோலாற் சூடுண்டு, துள்ளி யெழுந்த தூத்துக்குடி முத்தைய பிள்ளை, கடாவை யடக்குங் கட்டாரி" என்னும் நூலைக் கண்டீராயின் நீவிர் புகழா தடங்குவீர். அவரை நுமது சார்பினரென்று கருதுகின்றீர். அவர் வேதாந் தத்திற் கூறும் ஒரு பொருளும், நீவிர் கூறும் மூப்பொருளும், ஒக்குங்கொள் ளாது, இரண்டினையுஞ் சமரசப் படுத்துவதற்காக, கடாவின் 12-ம் பக்கத் தில் "முத்தியி லுயி ருண்டு மல மில்லை" என்றும், "பாசம் நில்லாமை பற்றியே பாசம் அநித்திய மெனப்படும்" என்றும், "இவ்வாறே சிவ ஞான போத முதலிய சித்தாந்த சாஸ்திரங்கள் போதிக்கின்றன" என்றும், பொறித்து, "முத்தியில் முத்தாத்மாக்களுக்குப் பதியும் பசுவு முண்டே யன்றிப், பாசம் இல் பொருளா யிருக்கின்றது" என்றும், "சைவ சித் தாந்த சாஸ்திரங்கள் இரு பொருள் நித்திய வாதங்கள்" என்றும், பலவா றும் கூறுபவ ராகலின், அவர் நும்மைச் சார்ந்தவ ரன்று, இனி யேனு முணர்வீராக!

ஸ்ரீ காசிகாநந்த சுவாமிக ளெழுதிய சூட்டுக் கோலில், சொ. செட் டியா ரெழுதிய வாக்கியங்கட்குச் சமாதாந மெழுதி யிருக்க, அதனை யுணரா தது பொய்க் கதைகளைப் பலவாகப் புனைந்து, வசை மொழி புகன்றீர். செட்டியார் இராமநாத புரம் சப் கோர்ட்டு 1908ஆம் 140-ஆம் டிகிரிப்படி, கடனுக்காக, காரைக்குடி மெ. செ. அ. பழநியப்ப செட்டியாரால் வரண்ட டில் பிடிக்கப்பட்டு, பின் சொற்பத் தொகை கொடுத்து, ரசிதாமா செய்து கொண்டார் என்று சூட்டுக் கோலில் யாண்டேனு மெழுதி யிருக்கின் றார்களா?

"ஆகமத்தினைப் பிரமாணமாகக் கோடல் வேண்டும். அது பாம சிவன் வாக் கன்றே" என்கின்றீர். அங்ஙனமாயின் வாமாகமம் பாமேய்

வரன் வாக்கானமையின் அதனையுங் கொள்ளல் வேண்டும். ஈஸ்வரனைக் கொள்ளுபவர்களுள் ஒருவராய நீவிர், அவர் கூறிய வாமாகமத்தையுங் கொண்டு, அவ்வா றநுட்டிப்பீ ராக !

" மற்றைய பதிப்புக்களும், எட்டி லுள்ளனவும், புரட்டப் பட்டன " என்று அடங்கன் முறை முகவுரை, பரிபாடல் முகவுரை முதலியன கூறுகின்றன. தேவார திரு வாசகங்களில், ஜீவர்களையே பிரஹ்மம் என்னுஞ் சிவ ரூபமாகக் கூறி யிருப்பதனு லன்றே, நீவிரும் நும் மதத்தினரும் ' வேதத்தின் ஞாந காண்டப் பொருளை விளக்குகின்றன ' என்று கூறுகின்றீர்கள். இன்றுயின், " ஆகமத்தின் ஞாந காண்டப் பொருளை விளக்குகின்றன " என்று கூறுவீ ரன்றே ? திரு வாசகத்திற் குரிய வீர சைவ பரம்பரை, புதுச்சேரி அம்பலத்தாடி சுவாமிக ளர்தீ[illegible] திரு வாவடு துறை யுண்டானதற்குப் பின்னே ? திரு வாவடு இடம் ஸ்ரீ அம்பலத் தாடி ஸ்வாமிக ளாதீநத்திற் பெற்ற பெருந் துறை தேவஸ்தாநம் ஷெ யாதீநத்திருந்து, சி திரு வாவடுதுறை யாதீநத்தாற் பெற்ற தாயிற்றே. தி, யில் திரு வாசக ஏட்டைப் பெட்டியுள் வைத்து விடுங்க வாது, அம்பலத்தாடி ஸ்வாமிகளிடத்து வந்த தென்வ அவர்கட்கு கட ராஜாவின் பெயராகிய 'அம்பலத் தாடி' எ கிடைத்தது. அவர்கள் சிற் சபைக்குட் செல்வது போல் செல்ல லேலுமோ ? இக் காரணம் பற்றி யன்றே, சமஸ்கிரு சரித்திரமும், ஸ்ரீ மாணிக்க வாசக ஸ்வாமிகளை வீர் சைவ கின்றது. திரு வாவடுதுறையிற்றுன் மதுப் பிரிய ரிஷி வேதாந்திகளாய சந்நியாசிகள் வசிக்க வேண்டுமென்று வரம் சிவ ஞாந பாஷ்ய முற்றும் திரு வாவடுதுறையி லன்றி, பே விராமை போல, சிவாகந்த பாஷ்யமும் உரியாரிடத் திரு றுணர்க ! நீவிர் கூறிய வசை மொழி யாவும், நும் மதத் ளிடத்து மில்லறத்தா ரிடத்துமே புண்டென் றுணர்க !

" நும்மது சந்நியாசிகளது பெருஞ் செயல்களைத் தெவ் நீவிர் குறிப்பிட்ட தந வைசிய சிகா மணிக ளிடம் யா கொள்ளல் வேண்டுமோ " என்றீர். இதனால், வாதத்தை ளிடத் தில்லாத செயலைக் கற்பித்து, அதனைத் தெரிவிக் என்று கூறுகின்றமையின், " அரித்தாந்தம், அதிகம் " வித் தாநங்களை யடைந்தீர்.

" இத்தகைய சந்நியாசிகளோடு வாதிட யாங்கள் தாம் " என்று எழுதிய வாக்கியமும், அத் தோல்வித் ந ராக !

" முற் காலத்தில் சைவ சமய கோளரி யாகிய தி மூர்த்தி நாயனாரால் " என்கின்றீர். முற் காலத்தில்

யச்சிடா திருக்குமிடமு காட்டாலே செய்யுங்க வென்று இரக்கு முயற்சிக்கின்றீர் போலும்.

'அத்வைதி' யென்பார் அறிவித்தாங்கே, சுடை கூட்டுவோராய அந்சுவரும் வேதாந்தப் பொரியாரைக் கண்டு அந்சுவ வென்றே யங்கரிக்கு, அதற்குச் சில காரணஞ்சு கணக்கீர். அஃதறிஞர் அறியற்பாலதே.

'ஆசாரி' வென்னும் பதமும், 'ஆசாரியர்' வென்னும் பதமும், ஒரு பொருளே யுடையன வென்பதை ஆரியம் கற்றிருப்பின் அறிய வல்லீராவீர். ஆசாரியத் தன்மை யுடையோரை 'ஆசாரி' யென்பதூ, "அலி" வென்னும் பதம் போன்றதாகும். அதனால் நீவிர் பதப் பொருள் தெரியாமலிருந்து, நீவிர் குருவான் ஒருவரிலக் கைக் கொண்ட ஆசாரியர யிருக்கலாமென வென்றே, நாம் குறுபவத்தைப் பிரார்தீ தேதற்றி 'ஆசாரி' யென்று கூறினோம். அது நமக்கே சாலும்.

"திரு வாலவி துறை யாதீனத்துப் மைவப் பிரகாசர் பொ. முத்தைய பின்னை யவர்கள் கடாவிய கடாவைலக் கண்டோமாயின்" வென்றீர். "ஆட்டுக் கோலாற் சூடுண்டு, தான்னி யெழுந்த சுடுக்குமிழ் முத்தைய பின்னை, கடாவை யடக்கும் கட்டாரி" வென்னும் நூலைக் கண்டிமாயின் நீவிர் பதறி நடுங்குவீர். அவரை நாமது சார்பினை யென்று கருதுகின்றீர். அவர் கோதாத்திற் கூறும் ஒரு பொருளும், நீவிர் கூறும் மூப்பொருளும், மைக்கொள்ளாது, இரண்டினையுந் சமரசப் படுத்துவதற்காக, கடாவின் 12-ம் பக்கத்தில் "முத்தியி லாயி நுண்ணி மலை மில்லை" வென்றும், "பாசம் நில்லாமை பற்றியே பாசம் அறுத்திய வெனைப்படும்" வென்றும், "இவ்வாறே சிவ ஞான போத முதலிய சித்தாந்த சாஸ்திரங்கள் போதிக்கின்றன" வென்றும், பொறித்து, "முத்தியில் முத்தாத்மாக்களுக்கும் பதியும் பசுவு முன்போ யன்றிப், பாசம் இல் பொருளா யிருக்கின்றது" வென்றும், "மைவ சித்தாந்த சாஸ்திரங்கள் இரு பொருள் நித்திய வாதங்கள்" வென்றும், பலவாறும் கூறுபவ ராகலின், அவர் நும்மைச் சார்ந்தவ ரன் றென்பது, நினைப் பெறை முணர்வீராக!

ஸ்ரீ காசிகாதந்த சுவாமிக ளெழுதிய சூட்சிக் கோவில், வை. சுட்டியா வெழுதிய வாக்கியங்களுட்குச் சமரசமாக வெழுதி யிருக்க, அதனை யுணராது பொய்க் கைதைகளைப் பலவாகப் புனைந்து, வைத வெழுதி புகன்றீர். சுட்டியார் இராமநாத புரம் சப் கோர்ட்டில் 1908வது 140-ஆ வழக்கிப்படி, கடனுக்காக, காலைக்குமி வை. வெ. அ. பழனியப்ப செட்டியாரால் வாரண்டில் பிடிக்கப்பட்டு, பின் சொற்படி யெதனை யெனத்து, ரசிதமா வெய்து வென்றோர் என்று சூட்சிக் கோவில் யாண்டேடுறை வெழுதி யிருக்கின்றார்களா?

"ஆகமத்தினைப் பிரமாணமாகக் கோடல் வேண்டும். அது பசுமை சிவன் வாக் கன்றே" வென்கின்றீர். அங்ஙனமாயின் வாமகமும் பசுமேம்

வரன் வாக்கானமையின் அதனையுங் கொள்ளல் வேண்டும். ஈஸ்வரனைக் கொள்ளுபவர்களுள் ஒருவராய நீவிர், அவர் கூறிய வாமாகமத்தையுங் கொண்டு, அவ்வாறு நாட்டிப்பீராக !

" மற்றைய பதிப்புக்களும், எட்டி லுள்ளனவும், புரட்டப் பட்டன " என்று அடங்கன் முறை முகவுரை, பரிபாடல் முகவுரை முதலியன கூறுகின்றன. தேவார திரு வாசகங்களில், ஜீவர்களையே பிரஹ்மம் என்னுஞ் சிவ ரூபமாகக் கூறி யிருப்பதனை லன்றே, நீவிரும் நும் மதத்தினரும் ' வேதத்தின் ஞான காண்டப் பொருளை விளக்குகின்றன ' என்று கூறுகின்றீர்கள். இன்றுயின், " ஆகமத்தின் ஞான காண்டப் பொருளை விளக்குகின்றன " என்று கூறவீரன்றே ? திரு வாசகத்திற் குரிய வீரசைவ பரம்பரை, புதுச்சேரி அம்பலத்தாடி சுவாமிகளர்தீரம், நுமது திருவாவடு துறை யுண்டானதற்குப் பின்னே ? திரு வாவடு துறை மடத்து இடம் ஸ்ரீ அம்பலத் தாடி ஸ்வாமிக ளாதீனத்திற் பெற்ற தாயிற்றே. திருப்பெருந் துறை தேவஸ்தானம் ஷை யாதீனத்திருந்து, சின்னண் முன்னார் திரு வாவடுதுறை யாதீனத்தாற் பெற்ற தாயிற்றே. சிதம்பரம் சிவ கங்கை யில் திரு வாசக வட்டைப் பெட்டியுள் வைத்து விடுங்கால், நும்மவரிடத்து வராது, அம்பலத்தாடி ஸ்வாமிகளிடத்து வந்த தென்னை? அதனை லன்றே, அவர்கட்கு மட ராஜாவின் பெயராகிய 'அம்பலத் தாடி' என்னும் பெயர் கிடைத்தது. அவர்கள் சிற் சபைக்குட் செல்வது போன்று, நும்மவர் செல்ல லேலுமோ ? இக் காரணம் பற்றி யன்றே, சமஸ்கிருதத்தி லுள்ள சரித்திரமும், ஸ்ரீ மாணிக்க வாசக ஸ்வாமிகளை வீரசைவ ரென்று கூறுகின்றது. திரு வாவடுதுறையிற்றான் மதுப் பிரிய ரிஷி தவஞ் செய்து, வேதாந்திகளாய சந்நியாசிகள் வசிக்க வேண்டுமென்று வரம் பெற்றனரோ? சிவ ஞான பாஷ்ய முற்றும் திரு வாவடுதுறையி லன்றி, யேனைய விடத்தி லிராமை போல, சிவாநந்த பாஷ்யமும் உரியாரிடத் திருக்கின்ற தென்றுணர்க ! நீவிர் கூறிய வசை மொழி யாவும், நும் மதத்துத் துறவிகளிடத்து மில்லறத்தா ரிடத்துமே யுண்டென்றுணர்க !

" நுமது சந்நியாசிகளது பெருஞ் செயல்களைத் தேவி கோட்டையில் நீவிர் குறிப்பிட்ட தந வைசிய சிகா மணிக ளிடம் யாங் தெரிவித்துக் கொள்ளல் வேண்டுமோ " என்றீர். இதனால், வாதத்தை விடுத்து, அவர்களிடத் தில்லாத செயலைக் கற்பித்து, அதனைத் தெரிவிக்க வேண்டுமோ ?, என்று கூறுகின்றமையின், " அர்த்தாந்தரம், அதிகம் " என்னுந் தோல்வித் தானங்களை யடைந்தீர்.

" இத்தகைய சந்நியாசிகளோடு வாதிட யாங்கள் பின்னிடக் கூடாதாம் " என்று எழுதிய வாக்கியமும், அத் தோல்வித் தான முற்ற தறிவீராக !

" முற் காலத்தில் சைவ சமய கோளரி யாகிய திரு ஞான சம்பந்த மூர்த்தி நாயனாரால் " என்கின்றீர். முற் காலத்தில் ' அவைதிக ' சைவ

சமயத்தின் 'கொள்கை-குற்றம்' எனப் பொருடரும் கோளை, 'காசகு செய்வோன்' எனப் பொருடரும் அரியாக, ஸ்ரீ ஞாந சம்பந்த சுவாமிகள் விளங்கினர்க ளென்பது, அவர்களா லியற்றப்பட்ட தேவாரச் செய்யுட் கள், ஆகமப் பொருளை விளக்காது வேதப் பொருளை விளக்கு கின்றதனாலே போதரும். இதனை னன்றே, 'பரசமய கோளரி' யென் றெழு தாது, 'சைவ சமய கோளரி' யென் றெழுதினீர். நீவிர் மிக்க மதியுடையீ ராலீர். விரிப்பிற் பெருகும். அமைக.

"நிருவிணன்"

சற்குருப்யோ நம:

வேதாந்திகள் ஜயக் கொடி

அறிவிற் சிறந்த அன்பர்களே!

சைவ சித்தாந்திகளோடு வாதஞ் செய்வதாக "அத்வைதி" என் பார் வெளியிட்ட பத்திரிகைக்கு மறு மொழி கூறுவது போன்று வீண் வார்த்தைகள் பலவற்றைச் சைவ சித்தாந்திகள் கூறிக் காலத்தினைக் கழிக்கின்றனர். அது வாதத்திற்கு வராமுடியா தென்பதனை அறிவிக்கும் சிந்தமாம்.

ஆகலின், அதனை யுணர்ந்து தேவி கோட்டை ஜமீந்தார் அழ. அரு. அருணாசலஞ் செட்டியா ரவர்கள், காரைக்குடி மெ. செ. சோக்கலிங்கச் செட்டியா ரவர்கள், சா - லெ - செட்டியப்ப செட்டியா ரவர்கள், அழ - சித - சொ - சொக்கலிங்கச் செட்டியாரவர்கள், மு. து. சித. சிதம்பரஞ் செட்டியா ரவர்கள், பழ. வெ. ரமை. ராம சாமி செட்டியா ரவர்கள், பெரி-க - பழநியப்ப செட்டியாரவர்கள், சித - நா - நாராயணஞ் செட் டியாரவர்கள், அரு. அ. அரு. ரமை. அருணாசலஞ் செட்டியா ரவர்கள் முதலியோர்களாலும், இன்னும் பலருடைய முயற்சியினாலும், சைவ சித் தாந்திகள் தைமீ 30உக்குள் சபை கூட்டாதிருப்பா ராயின், காரைக்குடி மேல மடாலயத்தில், "வேதாந்திகள் ஜயக் கொடி" என்னும் பெய ருடன் சபை ஒன்று காளயுக்திவரு மாசிமீ 1உ முதல் 5உ வரை ஐந்து தினமும் செவ்வனே நடைபெறும். அதில் வித்வத் சிரோமணிகளாகிய வேதாந்திகள் அநேகரால், தம் மதத்தின் ஜயத்தினை அறிவிக்கும் வாயி லாய், வேதாந்த விஷயங்கள் பலவற்றையும் சபைக்கு வரும் யாவர்க்கும் விளக்கமாக வாத முறையாற் கூறப்படும்.

அச் சமயம் மத வாதிகள் வந்து தங்கள் பக்ஷத்தினை நிலை நிறுத்தும் ஆற்ற லுடையவராயின், அக்கிராசனாதி பதியின் ஆஞ்ஞையினைப் பெற்றுச் சபையில் வந்து தம் பக்ஷத்தினை நிலை நிறுத்துவாராக.

இவ்வாறு, செய்யாது முன் ஆடிமீ கோவிலூரில் சபை நடக்கும் வரை மௌன விரதம் பூண்டிருந்தும், சபை நடந்தது தெரியா தெனைக் கழ

றிக் கொண்டும், வேறு பல காரணங்களைக் கரைந்து கொண்டும், சபை முற்றுப் பெற்ற பின் மத வாதிகள் போன்று சிலர் வெளிக் கிளம்பிப் பூட்டுப் பத்திரிகைகளை அச்சிட்டது போலச் சபை முடிந்த பின் அச்சிடு வாராயின், அஃதறிஞ ரருவருக்கத் தக்கதாம் என் றுணர்வீர்களாக.

கோவிலூர், பிர்ம வித்தியாப் பிரசாரண சபைக் காரியதரிசி.

ஓர் எச்சரிக்கை.

அன்பர்காள் ! உண்மை யுணருங்கள் !

காரைக்குடி, ஸ்ரீமத் அறு பத்து மூவர் மடச் சொக்க லிங்கச் செட்டியார்க்கும், வோந்திகட்கும் நோடீஸ் வாயிலாகவும், புத்தகங்கள் வாயிலாகவும் வாதங்கள் நடந்து வந்தன. அச்சமயம், செ செட்டியார் காரைக்குடியில் சைவ சபை வைக்கின்றே மென்றும், வேதாந்திகள் வாதத்திற்கு அங்கு வரவேண்டு மென்றும், சைவ சித்தாந்தி யென்று கைச்சாத்திட்டு ஓர் அறிக்கை வெளியாக்கினர். அதற்கு வேதாந்திகள் யாங்கள் வாதத்திற்கு வருகின்றே மென்று சம்மதித்து ஓரறிக்கை வெளியாக்கினர்கள். சைவ சித்தாந்தி யென்று கைச்சாத்திட்டவர் வாத சபையை யாது காரணத்தாலோ கூட்ட வில்லை. அதன்மீது, வேதாந்திகள் காரைக் குடியில், காளயுக்திஷ்ட மாசிமீ 1உ முதல் 5 திகம் வாத சபை நடத்துகின்றே மென்றும், ஆண்டுச் சைவ சித்தாந்திகள் வாதத்திற்கு வாலா மென்றும் இரண்டு மாதங்களுக்கு முன்னரே அறிக்கை செய்திருக்கின்றார்கள். அவ்வாறே, அச் சபைக்கு வந்து தம் பக்ஷித்தை நிலைநிறுத்து மாற்ற லின்றியதற் கறிகுறியாக, மேற்படி சைவ சித்தாந்தக் கக்ஷியார் தேவி கோட்டையில் சபை வைத்து, சைமீ 21உ முதல் மூன்று திகம் நடத்துவதாக அறிக்கை செய்திருக்கின்றனர். வேதாந்திகள் சைவரை வாதத்திற் கழைத்திருப்பது போன்று, சைவர்கள் தம் சபைக்கு வேதாந்திகளை வாதத்திற் கழைத்திருத்தல் வேண்டும். அவ்வா றவர்கள் செய்யாதது அவர்கள் மத துர்ப் பலத்தைக் காட்டுவதாம் ; மேலும் அஃது அறிஞர் கடமையும், வாத வொழுங்கு மன்று. வேதாந்திக ளறை கூவி யிருக்குஞ் சபைக்குச் சென்று வாதிக்கும் ஆற்ற லின்றியவர் சபை கூடிப் பேசுவது எழைச் சைவரை யேமாற்றும் பொருட்டேயாம். மேற்படி சைவ சித்தாந்த சபைக்கு உபந்நியாசங் கேட்கச் செல்லும் யாவரும், அவ் வுபந்யாசகர்கள் யாவர்க்கும், காரைக் குடியில் கூடும் வேதாந்திகள் சபைக்குத் தாங்கள் போய் நேரில் வாதஞ் செய்வீர்களாக வென்று பிரேரிப்பாராக! மேற்படி சைவர்கள் வேதாந்த சபைக்கு வாதத்திற்குச் செல்லாது, சபை கூடிப் பேசுவது எழைத்தனமும், கோழைத்தனமுமாம்.

அ. பெரிய சாமி முதலியார், செ ன் னை.

உ. சிவமயம்.

சைவ சித்தாந்த மாயா வாதி சாமி ஐயா தேசிகரின் பரித்தியாக பத்திரிகை.

அறிவிற் சிறந்த அன்பர்களே!

தேவி கோட்டையிலும், காரைக்குடியிலும் தங்கி காலம் கழித்து வரும் அசுத்த சைவ சித்தாந்திகள் பலரும் மாறு வேடந்தரித்து சிவதத்துவ ரூபமும், சிவதாந்தத்துவமும், சிவதாந்திகளையும், அனைவரையும் தூஷித்து செய்தனர் என்பது உலகறியுமே. சிவதாந்திகள் அவர்களை மடத்திற்கு வருமாறு அழைப்புப் பத்திரம் வெளியிட்டவுடன் அவர்கள் சும்மா கோணம் முதலிய இடங்களிற் பதுங்கிக் கொண்டனர். இந்த, சாமி ஐயா தேசிகர் என்பார் மாயா வாதிகளின் தோல்வித்தாகம் என்னும் பத்திரம் அச்சிட்டுத் தேவி கோட்டையில் மாத்திரம் அறிக்கை செய்தனர். அவர் கூற்றுப் பொய்யேயாம். "சைவ சித்தாந்திகள் அங்கு வந்து சந்தேகங் தெளிந்து கொள்ளலாம் என்னும் ஓர் விளம்பரம் அச்சிட்டு இவ்விடங்களிற் காட்டாது தூரத்தில் சிற்சில விடங்களில் பகியாசாகக் கொடுத்தனர்" என்கின்றார். மார்கழி மாதம் முதற் தேதியே 3000-ம் பத்திரிகைகள் அச்சிட்டுத் தேவி கோட்டை, காரைக்குடி, கோட்டையூர், மதுரை, சென்னை முதலிய எல்லா விடங்களிலும், யாவருக்கும் தெரியுமாறு லோகோபகாரிப் பத்திரிகையிலும் கோட்டான் வைத்தெழுப்பி யிருக்கப் பொய் புகலுகின்றார்.

சைவர்கள் செய்யும் நிந்தை காதிலுற் கேட்கக் கூடாதது காயிருக்கின்ற தென்னக் கருதியே வேதாந்த சபையைப் பல விடங்களில் ஸ்தாபித்து வேதாந்தத்தின் உண்மையைப் பல விடங்களிலும் விளக்கி வருகின்றார்கள்.

சிறு தூண்டுகளிலும் - சபை நடைபெறும் முறைப் பத்திரிகையிலும் வேதாந்திகள் சைவ சித்தாந்த சபைக்கு வாதற்றிற்கு வாவா வென்று அறிவித்திருப்பதாகப் பொய் புகலுகின்றார். பூர்வ பக்ஷிகள் சங்கை செய்தால் உத்தர பக்ஷிகள் உத்தரங் கூறுமாம். அவ்வாறாய பூர்வ பக்ஷிகள் சங்கைக்கு, உபந்யாசகருக்கும் அங்கிராசனாதிபதிகட்கும் உத்தரங் கூறுக் தெரியாமையின் வேறு தெரிந்தோர் வாயிலாக உத்தரங் கூறுவிப்பார்களாம். சிவாகமத்துக் குரியவரோ பூர்வ பக்ஷிகளாம். அப்பூர்வ பக்ஷிகள் ஆகாய கைகளை மறு வாயிலாக அறையின் அதிர்ஷ்டம் பெற்றுச் சின்னாட்டினர் மறு மொழி வேற்றோரால் கொடுப்பார்களாம். என்னை அழகு பாருங்கள்!

சைவ சபைக்கு வந்த புலவர்கள் ஆங்கில சூழ்ச்சி பிரமாணத்தால் சைவத்தைச், சபைக்கு உபந்யாசஞ் செய்ய வந்த முப்பத்தைந்து பேருக்கு முன்னர் காட்டினார்கள். அதைவர்கள் சபைக்கு, வேதாந்திகள் அழைக்கா திருக்கும்போதே அச்சபைக்குச் சென்று கதவைத் தாழிட்டுக் கொ

ண்ண உபந்யாசஞ் செய்வோரைத் திறக்குப்படி செய்து உட் சென்று வாதஞ் செய்ய வேண்டுமாம். அங்ஙனஞ் செய்யா திருந்தது வேதாந்திகளின் ஆண்மைக் குணமின்மையினை அறிவிக்கின்றதா மென்று அசுத்த சைவ சித்தாந்தியாகிய சாமி ஐயா தேசிகர் பிறர்க்காகப் பறை கொட்டுகின்றார். என்ன அறியாமை பாருங்கள்! வேதாந்திகள் அழைத்த விருந்திற்குப் போகாது கும்பகோணம் முதலிய இடங்களில் சைவர்கள் பதுங்கிக் கொள்வார்களாம். சைவ சித்தாந்திகள் அழையா விருந்திற்கு வேதாந்திகள் செல்ல வேண்டுமாம். என்ன யோக்கியதை பாருங்கள்!

பூவாளூர் மாயா வாதியாகிய சாமி யையா தேசிகர் ஆண்மைக் குணமுடையவராயின் தேவி கோட்டை, காரைக் குடியில் பதுங்கி யிருக்கும் மான்களையும், கும்ப கோணம் மறைந்தாரையும் வேதாந்திகள் சபைக்கு அழைத்து வருவாராக.

வாத சபையைக் கூட்டி வேதாந்திகளை வாதத்திற்கு அழைக்காமலும், பல்லறையர் முகத்தறையாலும், சைவ சித்தாந்தி அங்குசத்தைத் தகர்த்துத் தவிடு பொடியாக்குஞ் சம்மட்டியாலும் மாண்டும் தேவி கோட்டை நச்சுஞ் சைவ மடக் கூட்டத்தை வாதக் கூட்ட மாக்காமலும் ஓடி கும்ப கோணம், ஆச்சாபுரம் முதலிய இடங்களில் மறைந்து "வேதாந்திகள் ஜயக் கொடி விச்சேதகம்" என்றொரு பத்திரிகை வெளியிட்டும், உறைத்த பல்லறை யொன்று வெளிவரு மென்றும், அறியாச் சாமி ஐயா தேசிகர் பெயர் பூனைந்து, தென் தேயத்தாரை "மாயா வாதிகளின் தோல்வித்தாகம்" என்று ஒரு துண்டு அறிக்கை அறிவிக்குமாறு பிரேரேபித்தும் நிற்றல் பேடிமைக் குணமுடைய கீழோர் குணமாம்.

கும்ப கோணம் போய் மறைந்த யாழ்ப்பாணத்தார், நம் நகர வைசியர்களிடம் பொருள் வாங்கித் தாம் சீவித்ததனையும், சீவிக்கின்றதையும் உணராது நாட்டுக் கோட்டை நகரத்தார்களாகிய நம்மை அளவு கடந்து "வேதாந்திகள் ஜயக் கொடி விச்சேதகம்" என்னும் பத்திரிகையில் நிந்தித்திருக்கின்றனர். ஆகலின், நம் நாட்டில் நம்மிட உதவியால் பிழைக்கும் சைவர்கள் நகரத்தார்களை நிந்திக்கும் விஷயத்தினைக் கண்டித்து அவர்கள் யாவரையும் எல்லைக் கப்புறப் படுத்துவதற்கு வைசிய சபை ஒன்று கூட வேண்டு மென்று நம்மவருக் கறிவிக்கின்றேன். இவ்வாறு, செய்யா திருப்போமாயின் இன்னும் சைவர்கள் நம் பொருள் கொண்டே நம்மை நிந்திக்க ஆயத்தமாய் விடுவார்கள், ஆகலின் விரைக.

14-2-1919.

ஸ்வாமி நாதன் செட்டி.

ஒ சிவமயம்.

சங்கராசார்ய குருப்யோ நம:

"வேதாந்திகள் ஐயக் கோடி" என்னும் வேதாந்த ஸ்தாபக மஹா விராட் சபைப் பிரகடநம்.

முற்பவத்தில் யான்புரிந்த தீவினைகண் முழுதகற்று முகத்தி னேனை அற்பசுகத் தெனையழுத்தா வைங்கரனைப் பிற்பவமு மகற்றுங் கோவைச் சொற்பழுது புரியாத வணிகர்குலந் திகம்பணியுந் துணைத்தா ளானைக் கற்பகத்தின் மிடியகற்றுங் கற்பகமா விநாயகனைக் கருத்தில் வைப்பாம்.

எண்ணென் கறம்வளர்த்த வெந்தாய் திருநெல்லை
கண்ணைப் பார்த்த கருணையினுற்—றண்ணருஞ்
சீரக் கடல்வளருந் திங்களைக்கண் டாங்கதுபோற்
காரைக் குடிநகரங் காண். [ஆண்டவர் வாக்கு]

என்று ஸ்ரீ முத்தி ராம லிங்க ஞான தேசிக ஸ்வாமிகளவர்களாற் புகழ்ந்து கொண்டாடப்பெறும், நக வைசியர்கள் நிறைந்த நாட்டெக்குக் கோட்டை போன்று நகநாயகமா யிலங்குங் காரை மாநகரின்கண் மக்கள் நோம்பு (விஜய தசமி) அக்கிரகாரத்தில் ஸ்ரீ சாலி வாஹன்வரி நாயக ராஜ கட்க பரமேஸ்வரர் காகஷி கொடுத்து எழுந்தருளி யிருந்து விஜய தசமி யன்று விஜயக் கொடி நாட்டுதற்கு மூல ஸ்தான மண்டபம் ஆகிய ப. ராம. விஜய தசமி மண்டபத்தில் முன்னர் அறிவித்த வாறே காளயுக்தி வரு மாசிமீ 1கூ புதன் கிழமை முதல் (12-2-1919) ஐந்து திருமும் வேதாந்தி கள் ஐயக் கொடி என்னும் வேதாந்த ஸ்தாபக மஹா விராட் சபை மாலை இரண்டு மணி முதல் நடைபெறும்.

ஸ்தாபக நியமநம்.

சங்கர நாராயணர் கோவில் பிரஹ்ம ஸ்ரீ திரு மலை சாஸ்திரிகளவர்கள்.

பிரஹ்ம சூத்திரம் ஜீவப் பிரஹ்மைக்கியப் பிரதிபாதகமே, அதற் குரியது சங்கர பாஷ்யமே, ஏனைப் பாஷ்யங்களும், ஏனை மதங்களும் சோபாநங்களே.

சிருங்க கிரி மடம் பிரஹ்ம ஸ்ரீ விசுவநாத சாஸ்திரிகளவர்கள்.

வேதத்தின் கர்ம காண்டம், பக்தி காண்டம், ஞான காண்டம் மூன் றும் ஜீவப் பிரஹ்மைக்கியப் பிரதிபாதகங்களே.

கோவிலூர் பிரஹ்ம ஸ்ரீ சுப்பிர மணிய சாஸ்திரிகளவர்கள். வேதங் கள் அத்வைதப் பிரதிபாதகங்களே. ஆகம ஸ்மிருதி புராண இதிகாஸங் களும் அத்வைதப் பிரதிபாதகங்களே.

திருங்க கிரி மடம் பிரஹ்ம ஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரிக ளவர்கள், பதி பசு (ஈஸ்வர ஜீவ) ஸ்வரூப மொன்றே நித்தியம். பாச (மாயை மாயா கார்யங்) கள் அநித்தியங்களே.

கும்ப கோணம் பிரஹ்ம ஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரிக ளவர்கள்.

சைவசித்தாந்த ஸ்தாபநாபாச பாசகம்.

காரை மாநகர், கம்ப ராமாயணப் பிரசாரகர் பிரஹ்ம ஸ்ரீ கோவிந்த ராஜய்யங்கா ரவர்கள்.

அபேத திருஷ்டியே ஆநந்தோத்பாதகம். பேத திருஷ்டி பெரும் பீத்யுத்பாதகம்.

நியாய சந்திரரும், வேதாந்த பாஸ்கரருமாகிய கோவிலூர் மடாலயம் ஸ்ரீ சுப்பைய சுவாமிக ளவர்கள்.

கூர்ம புராணப் பிரதிபாத்திய திரிவித பாவனைகளுள் மூன்றுவது பாவனை வேதாந்தமே.

தேவார, திரு வாசக, திரு மந்திரங்களின் பரம ரகஸ்யம்.

உபய பாஷா வேதாந்தப் பிரவர்த்தகாசாரியரும், பரசமய கோளரி யாரும் ஆகிய கோவிலூர் மடாலயம் ஸ்ரீ காசிகாநந்த ஸ்வாமிக ளவர்கள்.

மோக்ஷம் அத்வைதமே. அத்வைத சப்தார்த்தம் ஏகமே. (அன் மைப் பொரு ளல்ல).

வல்ல நாடு ஸ்ரீ சிவ ராம லிங்க ஸ்வாமிக ளவர்கள்.

தேவர், முனிவர், இருடியர், பிராஹ்மண, க்ஷத்திரிய, வைசிய, சூத் திரர், பிரஹ்ம சாரி, கிரகஸ்த, வாநப்பிரஸ்த, சந்நியாசியர் யாவரும் வேதா ந்திகளே.

மற்றுஞ் சில பெரியோர் சிற் சில விஷயங்களை ஸ்தாபநஞ் செய்வார்கள்.

பூர்வ பக்ஷிகள் திங்க் தோறும் அக்ரிராசநாதிபதி அவர்களின் ஆஞ் ஞையின் மீது செய்யுங்கடா வித்வம்சநம்.

காரைக்குடி மே ல மடாலயத்தில் காலையில் ஐந்து திங்களிலும் பூர்வபக்ஷிகள் கடா வித்வம்சநம்.

இச்சையில் பூர்வ பக்ஷிகள் பத்திரவாயிலாக மனுக் கொடுக்கவேண் டிய தில்லை. நேரில் வாக்குமூலமேயே கேட்கலாம்.

ஜகத் குரு ஸ்ரீ சங்கராசாரிய ஸ்வாமிகளின் விஜயப் பவர் மைபவம்.

சுபம் அஸ்து.

கோவிலூர், பிரஹ்ம வித்தியாப் பிரசாரண சபைக் காரியதரிசி.

ஓ சிவமயம்.

நாட்டுக் கோட்டை வைசிய நகரத்தார்களுக்கு வெளிப்படுத்தல்.

நம் நகரவைசிய நண்பர்காள்!

நம் வைசியப் பிரபுக்களிற் சிலர் யாழ்ப்பாணத்துச் சூத்திரத் தன்மை யை விருப்புடைய நித்ய மல ஜாதிகளின் வேண்டுகோட் டினைக்கி, வேதாந்தி

கனைத் தூவதித்தாப் பத்திரிகை புத்தகங்கள் அச்சிடம்படி சிற்சில யாழ்ப் பாணத்தாரையும், கோவிலூர் மடாலயத்தினை 1896வரு ல் தூவதித்துக் கோர்ட்டில் அபாதகம் இறுத்த யாழ்ப்பாணத்தார் ருவரையும், சிற்சில பண்டாரம் முதலியோர்களையும் எழுதினர்கள். அவர்களெலாம் அதற் கிசை ந்து பொருள் கரையால் பல பத்திரிகைகளையும், புத்தகங்களையும் அச் சிட்டனர்.

அங்ஙனம் அச்சிட்டவற்றுள் "வேதாந்தி ஜயக் கொடியை வேரோ டறுக்கும் பன்னிரு விரு." என்ற பத்திரிகையும் ஒன்றும். அதன்கண் கோயிலூர் மடாலயப் பெரியார்களாய ஸ்ரீ முத்து ாம விங்க தூர தேசிக ஸ்வாமிகள், ஸ்ரீ குறவை ஸ்வாமிகள், ஸ்ரீ சிதம்பர தூர தேசிக ஸ்வாமி கள், ஸ்ரீ வீரதேசக தூர தேசிக ஸ்வாமிகள் என்றெலும் காவ்வையும் அவர்களிடத்திற் சங்கியாசம் பெற்ற எனை நம் குலமணிகளாய் விளங்கி யும், விளங்குகின்றவராயு முள்ள பெரியோர்களையும் சூத்திரர் என்று பலவாறு நிந்தித்து எழுதியிருக்கின்றார்கள். எழுதுபவர் சூத்திரர் களிலுந் சாராத யாழ்ப்பாணிகளாதலின், அவருக்கு நம் வைசிய குலப் பெருமை யாங்ஙனம் விளங்கும்? நங் குலத்திற் பிறந்த அவர் யாவரும் சூத்திரராய் கால், வைசிய மணிகளாய நாம் யாவரும் சூத்திராக வேண்டுமோ? அற்ப தோ டமையாது நிந்திக்கப் பொருள் கொடுக்கும் நம் வைசிய மக்களும் சூத்திராக வேண்டி வருமோ? அங்ஙனம் தங்களைச் சூத்திர ரென அங்கீகரிப்பா ராயினும், எனைய வைசிய நகரத்தார்களாகிய நாம் நம்மைச் சூத் திர ரென்று அங்கீகரிப்போமா? அங்ஙனம் நாம் அங்கீகரிக்கின், 'செட்டி' என்னும் பெயரினை மாற்றித் தாசன் என் றல்லவா கை யெழுத் திடல் வேண்டும்? வைசியம், நக வைசியன் பிரஸ், வைசிய மித்திரன் பிரஸ், வைசிய சிவாநந்த சபை, சோலை சாஸ்திரங்களில் நம்மை வைசியன் என்று வருதல் முதலியன யாவும் பொய் யென் றங்கீகரிக்க வேண்டுமோ? ஸ்ரீ வேதாகம விரிதுரை பூகூணமான பஞ்சாக்ஷர உபதேசமானது தொன்று தொட்டு நம்மவர்க்கு வைதீகப் பிராஹ்மணர்களால் உபதேசிக்கப்பட்டு வந்திருக்கவும், அதனை நம்மவர்களிற் சிலர் மறந்து துறந்து உபதேச குரு கர்களான சூத்திரர்களிடத்திற் அவ்வுபதேசத்தினைக் கேட்டதை லன் றோ, 'அச்சூத்திரர்கள் நம்மைச் சூத்திரர்கள் என் றெண்ணியதோ டமை யாது நிந்திக்கவும் தலைப்படுகின்றனர். கண்டார்களோ! இன்னும் நம் வைசிய மக்களிற் சிலர் அச்சூத்திரரைக் கொண்டு மத விஷயமான பத் திரிகை எழுதவும் உதவிடின் இன்னும் என்ன தான் சொல்லுவார்கள்? என்ன தான் செய்யமாட்டார்கள்?

ஆதலால், வைசிய மக்களாகிய நாம் இனியாவது விழிப்பாயிருந்து சூத்திரச் சைவர்கள் அச்சிடும் பத்திரிகை, புத்தகம், முதலியவற்றில் நம் வைசிய குலத்தினரை யிகழ்ந்தாவது, சூத்திர ரென்றாவது, அல்லது, நம்மவர்க்கு குருவாசாரிய ஸ்தானமாகிய ஸ்ரீ கோயிலூர் மடாலயத்தினை நிந்தித்தாவது எழுதுவார்களாயின், அதனை யுணர்ந்து 1896வரு பிப்ர

வரிசை 25வ விஜயத் துவஜ பத்திரிகையில் நிந்தித்தவரை ராஜ தண்ட னைக் குட்படுத்தியாங்கு தண்டனைக் குட்படுத்துதற்கு வேண்டிய யத்நஞ் செய்ய வேண்டு மென வெளிப்படுத்திக் கொள்கின்றேன்.

அழகப்ப செட்டி.

உ சிவமயம்.

ஸ்ரீ சங்கராசார்ய குருப்யோ நம:

உ ண் ணி ட ம.

அன்பர்களே ! —— உற்று நோக்குவீர்களாக !

சித்தாந்திக ளென்று சொல்லித் திரிகின்ற சிலர் தங்களுக்குச் சிவ ஞான போத 12 சூலோகங்கள் உடன்பா டென்றும் தாந்திரிகர்கள் என் றுஞ் சொல்லிக் கொள்ளுகின்றார்கள் ; அஃ துண்மையாயின், அவர்கள் ரௌரவாகமத்தில் இருப்பதாக ரௌரவாக மத்தினைக் கொணர்ந்து இச் சபையில் அறிக்கை செய்து, தாங்கள் தாந்திரிகர்கள் என்பதனை வெளி யிட்டுக் கொள்வார்க ளாயின், அதன்பின் அவர்களைத் தாந்திரிகர்க ளென் றும் வேதபாஹ்ய மதஸ்த ரென்றும் உடன்பட்டு அவர் வார்த்தை அங்கி கரிக்கப்படும்.

அன்றியும், வைதீக சைவர், வைதீக தாந்திரிக சைவர், தாந்திரிக வைதீக சைவர், தாந்திரிக சைவர் என்னும் நால்வர்களுள் ஒருவர் என்று வது, அல்லது நால்வரையுங் கடந்த பஞ்சம சைவர் என்றுவது சபையில் தங்களை அறிக்கை செய்து கொள்வது அவர்கள் கடமையாம்.

அன்றியும், தந்திரத்திற்கூறும் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கனுள் ஒன்றை, அல்லது நான்கனையும் அனுட்டிப்பவர் என்பதனை அறிக்கை செய்துகொள்ள றகுதியாம்.

கோவிற் பட்டியில் வசிக்கும் விருதை ஸ்ரீ சிவ ஞான யோகிக ளவர் கள் தாம் எழுதிய நூலில் சிவ ஞான போதம் ரௌரவாகமத்தில் இல்லை யென்றும், சூலோகங்களும் சூத்திரங்களும் சிலரால் கற்பிக்கப்பட்டன வென்றும், அதனை அநுசரித்த சிலர் அபிமானம்பற்றி அநுஷ்டிக்கின்றன ரென்றும் வரைந்திருக்கின்றமையின், வேதாந்தத்தினைத் தூஷிக்குஞ் சைவர்கள், இன்ன ஆகமத்தினைச் சார்ந்தவர்கள் என்றும், இன்ன தேயத் தவ ரென்றும, இயற்கையில் இன்ன ஜாதியா ரென்றும், இயற்கையில் இன்ன மதத்த ரென்றும் "வேதாந்திகள் ஜயக் கொடி" என்னும் வேதாந்த ஸ்தாபந மஹா விராட் சபையில் தங்களைப் பற்றி அறிக்கை செய்து கொள்ளல் அவர்கள் கடமையாம்.

போலித் தாந்திரிக சைவர், வேதாந்திகளை மாயா வாதிகள் என்று கூறுவதற்கு வேத ஆகமப் பிரமாணத்தினைக் கையி லேந்திக் கொண்டு சபையில் வந்து விண்ணப்பித்துக் கொள்ளல் ஆண்மைக் குண முடை யோர்க் கழகாம் ; இன்றேல், கல்லாக் கைம் பெண்ணினிடத்துக் கையுங் கடைக் குண முடையோராவர்.

இவ்வாறு செய்யாது வேதாந்திகளை லெட்டர், நோட்டீஸ், புத்தகம் முதலிய வாயிலாய்த் தூஷித்தல் பஞ்சம சைவர்கட்கு தருவாற்றலும் பொருந்தாதாம்.

ஜீவன் சதசத்து (உண்மை யின்மை) ரூபன் என்றும், சுத்த மாயை அசுத்த மாயை என்னும் பாசங்கள் நித்தியங்கள் என்றும், ஜீவ ஈஸ்வரர் இருவரும் பாச மூடையோர் என்றுங் கூறும் சைவரை, எவ்வாதி யென்று கூறுவது? மாயா வாதி யென்று கூறுவதா? மாயை நித்திய வாதி யென்று கூறுவதா? பசு வாதி யென்று கூறுவதா? பாச வாதி யென்று கூறுவதா? மல வாதி யென்று கூறுவதா? பதி பரிச்சிந்த வாதி யென்று கூறுவதா? தந்திர வாதி யென்று கூறுவதா? மந்திர வாதி யென்று கூறுவதா?

உண்மை அறைவோன்.

ஓ சிவமயம்.

ஸ்ரீ சங்கராசார்ய குருப்யோ நம:

விஜயத் துவஜ விஜயம்.

நண்பர்களே! நன்றுணருங்கள்!

பாண்டி நாட்டிற் சிறப்புற் றோங்கும் காரை மாநகரின்கண் விஜயக் கொடி என்னும் வேதாந்த ஸ்தாபக மஹா விராட் சபையில் காளயுக்திவரு மாசிமீ 1உ (12-2-19) முதல் 3ந்து தினங்களிலும் அநேக அரிய பெரிய மஹா மஹோபாத்தியாய மஹா வித்துவத் சிரேஷ்டர்கள் வேதாந்த விஷயங்களை ஸ்தாபனஞ் செய்தார்கள். பூர்வ பக்ஷிகள் போற் றோன்றிய போலித் தாந்திரிக பஞ்சம சைவர்களை வேதாந்திகள் ஜயக் கொடி, ஓர் எச்சரிக்கை என்னும் பத்திரிகைகள் வாயிலாக இச் சபைக்கு வருமாறு அழைத்தும், வந்து எதிர்ப்படாது ஒதுங்கினர். அதனை யுணர்ந்த பெரியோர்கள், அன்பர் சிலரைப் போய், கீழ்ச் சைவ மடக் கூட்டத்தாரை, மேல மடத்திற்காவது பிரசங்கம் நடைபெறு மிடத்திற்காவது வாதத்திற்கு அழைத்து வரும்படி அனுப்பினர்கள்; அதற்குப் போலிச் சைவர்களும், சொக்க லிங்கச் செட்டியாரவர்களும் பீதி யுற்று வரமுடியா தெனை மறுத்துவிட்டனர். அஃதோ டமையாது நிந்தைப் பத்திரிகைகளை அச்சிட்டு மிகச் சிரம முற்று வெளியிட்டனர்.

இதனால், இன்று வரைப் பூர்வ பக்ஷிகள் வந்து எதிர்ப்படாது பயந் தொளிந்து கொண்டமையின், வேதாந்திகளுடைய சித்தாந்த பக்ஷமாகிய வேதாந்தமே ஸ்தாபிக்கப்பட்டு அதனை விளக்குவதற்கு, ஜகத் குரு ஸ்ரீ சங்கர பூஜ்ய பகவத்பாதாசார்ய ஸ்வாமிகளவர்களின் திரு வுருவ விஜயப் பவனி நடந்து வருகின்றதனால் தாந்திரிக சைவர்கள் தோல்வி யுற்றார்க ளென்பதனையும், வேதாந்திகள் விஜயத்தினை அடைந்தார்க ளென்பதனை யும் வெள் ளிடை மலை விளக்காய் உணருவீர்களாக.

இனித் தோல்வி யுற்ற சைவர்கள் பொருமையினாலே நிந்தை நோட்டீஸ்கள் அச்சிடுவார்களாயின், பொருட்படுத்தேம் மென்று அவர்கட்கும் அறைந்து, நீங்களும் உணர்வீர்களாக.

16-2-19. காரிய தரிசி.